மதராசு கவர்ன்மெண்டு

ஜி. ஓ. மிசி. நெ. 4790 L. & M

1930-ஸு டிசம்பர்மீ 11௳

ஆங்கிலத்திலுள்ள மதராசு லோகல் போர்டுகள் சட்டதிட்டங்களின் 3-வது பிரசுரத்தை மதராசு கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அதை லோகல் போர்டுகளின் உபயோகத்திற்கு சிபார்சு செய்கிறார்கள்.

இந்த தமிழ் மதராசு லோகல் போர்டு சட்டதிட்டங்கள், மதராசு கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட இங்கிலீஷ் புத்தகத்தை அனுசரித்து எழுதியிருப்பதால் இதுவும் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டதாகும். 5-வது பக்கம் பார்க.

அறிஞரின் அபிப்பிராயங்கள்

கனம் டாக்டர். பி. சுப்பராயன், பாரிஸ்டர்-அட்-லா மதராசு கவர்ன்மேண்டின் பிரதம மந்திரி எழுதுவதாவது: —

"நான் பலதடவைகளிலும் உங்களுடைய புத்தகத்தை பார்க்கும் அவகாசம் ஏற்பட்டதினால், லோகல் போர்டுகளின் பரிபாலனத்தில் அக்கரையுள்ளவர்களுக்கு இப்புத்தகம் இன்றியமையாததென தோன்றுகிறது."

மதராசு கவர்ன்மேண்டின் மாஜி பிரதம மந்திரி ராஜாஸர், பி. ராமராயநிங்கார். எம். எ., பனக்கால் அரசர் எழுதுவதாவது :—

"நன்ருய் எழுதப்பட்ட புத்தகம். இது மேன்மேலும் அபிவிர்த்தி யடையுமென எண்ணுகிறேன்."

ராவ் பகதூர் என் கோபால்சாமி அய்யங்கார். பி. ஏ. பி. எல். முனிஸிபாலிடிகள் லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் எழுதுவதாவது :—

"மதராசு லோகல் போர்டுகள் சட்ட திட்டங்களைக் குறித்து சவிஸ்தாரமாய் ஸ்ரீமான் வி. வி. நாயுடு அவர்கள் எழுதியதற்கு அவரை பாராட்டுகிறேன். மிகவும் சிரமப்பட்டு அவர் எழுதியிருக்க வேண்டும். அதில் சட்ட திட்டங்கள் அடங்கியிருப்பதுடன், அவைகளின்மேல் கோர்டார் செய்துள்ள தீர்மானங்களும் ததும்பியிருக்கின்றன. லோகல் போர்டுகளின் பிரஸிடென்டுகளுக்கும், மெம்பர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பேருதவியாயிருப்பதுடன், ஜட்ஜுகளுக்கும், வக்கீல்களுக்கும் அத்தியாவசியமானதாயிருக்குமென்பதில் ஐயமில்லை."

மாஜி அட்வகேட் ஜனரலும், மதராசு கவர்ன்மேண்ட் நிர்வாக சபை மெம்பருமான ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், பி. ஏ. பி. எல். கூறுவதாவது :—

"ஸ்ரீமான் வி. வி. நாயுடு அவர்களின் லோகல் போர்டுகள் சட்டதிட்ட புத்தகத்தைப் பார்வையிட்டேன். அது சவிஸ்தாரமாகவும், எளிய நடையிலும், அனைவரும் அறிந்து கொள்ளும்படியான முறையிலும் எழுதப்பட்டிருப்பதால் விவகார காலங்களில் அடிக்கடி புத்தகத்தைப் பார்வையிட்டு வியாக்யானம் செய்யக்கூடிய வக்கீல்களுக்கு சௌகரியமாயிருப்பதுடன், சட்ட வாசனை யறியாத சாமான்யர்கள் கூட அறிந்து கிராம நிர்வாகத்தை நடத்த உதவக்கூடியதாயிருப்பது பாராட்டத்தக்கது."

பிரதேச கவர்ன்மேண்டாரின் காரியதரிசியாகிய ஹில்டன் ப்ரௌன் Esq., எம். ஏ. ஐ. ஸி. எஸ். எழுதுவதாவது :—

"நான் பல தடவைகளில் இப் புத்தகத்தை உபயோகிக்க வேண்டி நேரிட்டது. ஒவ்வொரு தடவையும் பெரிய சகாயமாயிருந்தது. வியாக்யானங்கள் வியக்தமாயும், தக்க கேசுகளுடனும் எழுதப்பட்டிருக்கிறது. புதிய சட்டம் வந்தவுடன் இம்மாதிரியான புத்தகத்தை ஆசிரியர் நமக்கு கொடுத்துதவுவார் என நம்புகிறேன்."

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் ஸர். ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியார், பி. ஏ. பி. எல். எழுதுவதாவது :—

"நியாயாதிபதிகளுக்கும், நியாயவாதிகளுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமுள்ளது. லோகல் போர்டுகளைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் யாவும் இதில் அடங்கி யிருக்கின்றது."

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். ராமேசம் அவர்கள், பி. ஏ. பி. எல். கூறுவதாவது :—

"லோகல் போர்டுகளின் ஆக்டிற்கு வியாக்யானம் எழுதி யிருப்பதிலிருந்து ஆசிரியர் எவ்வளவு சிரமமெடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. நமது மாகாணத்து கேஸ்கள் தவிற, இதுபோன்ற சட்டத்தின்மேல் இதர மாகாண கோர்டுகளில் தீர்ப்பு கூறப்பட்ட கேசுகளும் கூறப்பட்டிருக்கின்றன. மேல்நாட்டு தீர்மானங்களும் இருக்கின்றன. செக்ஷன்கள் கீழும், தேர்தல் விதிகளின் கீழுமுள்ள சவிஸ்தாரமான குறிப்புகளும், கேசுகளும், ஜட்ஜ்களுக்கும் வக்கீல்களுக்கும் பயன்படுவதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட லோகல் போர்டு மெம்பர்களுக்கும் உபயோகமாயிருக்குமென கருதுகிறேன்."

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் ஜாக்சன், ஐ. ஸி. எஸ். கூறுவதாவது :—

"ஆக்டும், விதிகளும் ஒரே புத்தகத்திலிருப்பது வெகு சௌகரியமாயிருக்கிறது. அகராதி சவிஸ்தாரமாயிருக்கிறது."

ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். ஓ. ஈ. ஆட்ஜர்ஸ், எம். ஏ., பாரிஸ்டர்-அட்-லா எழுதுவதாவது :—

"இது பரியந்தம் இம்மாதிரி புத்தக மில்லாதிருந்தது ஓர் குறையாயிருந்தது. சட்ட திட்டங்கள் ஒருங்கே சேர்ந்திருப்பது விசேஷமானது."

ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் வாலஸ், எம். ஏ., ஐ. ஸி. எஸ் எழுதுவதாவது :—

"இப்புத்தகம் சரியானதும், சுலபமாய் கையாளக் கூடியதும், வக்கீல்களுக்கும், ஜட்ஜுகளுக்கும் மிகவும் உபயோகமானது."

மதராசு லோகல் போர்டுகள் சட்ட திட்டங்கள்

1931ஹ நவம்பர்மீ 15உ வரைக்கும்
திருத்தி அமைக்கப்பட்டது

மதராசு கவர்ன்மெண்டாருடைய தமிழ் மொழி பெயர்ப்பு ஆக்டுக்கு ஒத்தது இது ஒன்றே. இதில் விவரமான குறிப்புகளும் 600 கேசுகளும் விசிதமாய் எழுதப்பட்டுள்ளது.

5-வது பக்கம் பார்க்க.

சி. வி. நாயுடு,
அட்வொகேட், மதராசு ஹைகோர்டு.
இங்கிலீஷில் 'லா ஆப் மதராசு லோகல் போர்ட்ஸ்,' இண்டியன் எலக்ஷன் அபென்சஸ் ஆக்ட் வியாக்யானங்களுடனும், தெலுங்கில் 'மதராசு லோகலு போர்டுல சட்டதிட்டமுலு' முதலியவைகளை எழுதிய ஆசிரியர்.

தமிழில் முதற் பதிப்பு
காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

ராஜேசுவரி அண்டு கம்பெனி,
மதராசு.
1931

THE MADRAS LOCAL BOARDS ACT

BARE ACT: AMENDED BY ACT XI OF 1930.

Amendments are suitably pointed out in their proper places.

By C. V. Naidu, Advocate. Price Rs. 1-4-0 Each Copy.

THE LAW OF MADRAS LOCAL BOARDS

THE ONLY AUTHORITATIVE BOOK ON LOCAL BOARDS.

THIRD EDITION—SEE THE REVERSE OF THIS PAGE.

With a commentary (not merely notes) of more than 4,000 citations of Indian, English and American cases; Printed on 60 lbs. thick Glazed paper of 1,100 pages in Royal Octavo Size and Bound in Cloth and Gold.

BY C. V. NAIDU, ADVOCATE.

The Best and therefore the Cheapest Book at the Price.

If the purchasers are not satisfied with the Book within a week, the money will be refunded to them. This Book will be issued in 2 Volumes till all the Rules under the Madras Local Boards Act are framed by the Local Government. Single Volume of the Book will not be available till then.

1ST VOLUME: READY. 724 pages Royal Octavo Size. Contains exhaustive commentaries (not notes) on the Madras Local Boards Act with more than 3,200 citations of Indian, English and American cases. Price Rs. 10. Charges Extra.

2ND VOLUME: IN THE PRESS. This will contain Election Rules with commentaries, other rules &c. Price Rs. 3-4-0 to Purchasers of the 1st Volume only. To others Rs. 5. Charges Extra.

IN A SINGLE VOLUME Price Rs. 12-8-0. Charges Extra.

THE INDIAN ELECTIONS OFFENCES AND INQUIRIES ACT

WITH COMMENTARIES.

BY C. V. NAIDU, ADVOCATE. PRICE Rs. 2-8-0.

మదరాసు లోకలు బోర్డుల చట్ట దిట్టములు.

అడ్వొకేటు సి. వి. నాయుడుగారి వ్యాఖ్యానములతో

తెనుగున వ్రాయబడినది.

వెల రూ. 7-0-0 మాత్రము. చార్జీలు ప్రత్యేకము.

పై విలాసము ;—

సి. వి. నాయుడు.

సైదాపేట-మదరాసు లేక తిరువళ్లూరు (M. S. M. Ry.)

மதராஸ் லோகல் போர்டு சட்ட திட்டங்கள்.

அட்வொகேட் சி. வி. நாயுடு அவர்களின் வியாக்யானத் துடன் தமிழில் எழுதியது.

விலை ரூ. 7-0-0. சார்ஜுகள் பிரத்யேகம்.

மேல் விலாசம் :— சி. வி. நாயுடு, சைதாப்பேட்டை, மதராசு.

அல்லது திருவள்ளூர், M. S. M. Ry.

இப் புத்தகத்தின் சிறப்பு.

இப் புத்தகத்திலுள்ள குறிப்புகளை சில காலத்துக்கு முன்பே எழுதி தயார் செய்யப்பட்டிருந்தபோதிலும், பொது ஜனங்களுக்கும், லோகல் போர்டுகளுக்கும், அவைகளின் மெம்பர்களுக்கும், நம்பிக்கையுள்ளதும், செலாவணியாகக் கூடியதுமான மதராசு கவர்ன்மெண்டாருடைய லோகல் போர்டுகள் ஆக்டின் தமிழ் மொழிபெயர்ப்புடன் அச்சிட்டுக்கொடுக்க எதிர்பார்த்திருந்ததால், கால தாமதம் ஆனதற்கு என் நண்பர்கள் பொறுத்து இதை ஏற்றுக்கொள்வார்களென எதிர்பார்க்கிறேன். எவ்விதத்திலாகிலும் ஒரு புத்தகத்தை அச்சிட்டு அதன் மூலம் பணத்தைப் புரிக்கவேண்டுமேன்று கருதாது சரியான கவர்ன்மேண்டாருடைய தமிழ்மொழி பெயர்ப்பு யுள்ள ஆக்டேன் இப் புத்தகத்தை தமிழில் பிரசுரித்திருப்பதை கௌரவிப்பீர்களேன்று நம்புகிறேன்.

ப்ரீவி கௌன்ஸில் கேசுகள், ராஜேந்திர பிரசாத போஸ் எ. கோபால பிரசாத ஸேன், 59 M.L.J. 615=1931 M.W.N. 189=32 M.L.W. 324=127 I.C. 743=A.I.R. 1930 P.C. 242; சசிமான் சௌத்ராணி எ. ஷிப் நாராயன் சௌத்ரி, 49 I.A. 25=A.I.R. 1922 P.C. 63=66 I.C. 193 படிக்கு அதிகாரிகளுல் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டவைகள், இதரர்களால் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டவைகளைக் காட்டிலும் நம்பத் தகுந்தவையும் செலாவணியாகக் கூடியவையும் ஆகும்.

மதராசு கவர்ன்மெண்டாரின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு பொருத்தமில்லாமல் தங்கள் புத்திக்குத் தோன்றியமட்டில் எழுதி சிலர் அச்சிட்டிருக்கிறார்கள். விவஹாரகாலங்களிலும், எலெக்ஷன்களிலும், மீடிங்குகளிலும், சர்சை செய்யும் காலங்களிலும், கவர்ன்மெண்டாரின் மொழிபெயர்ப்புக்குள்ள கௌரவமும், செலாவணியாகும் தன்மையும் இதர மொழிபெயர்ப்புக்களுக்கு எப்போதும் கிடையாதென்பதை உறுத்திச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகையால் இந்த புஸ்தகத்தையும் மதராசு கவர்ன்மெண்டாரால் அச்சிடப்பட்ட மதராசு லோகல் போர்டுகள் ஆக்டையும் வாங்கவேண்டுமே ஒழிய இதர புஸ்தகங்களை வாங்குவது வியர்தமாகும்.

முகவுரை.

1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் திருத்தப்படும் முன் 1920-ம் வருஷத்திய லோகல் போர்டுகள் ஆக்டில் 240 செக்ஷன்களும், 96 விதிகளும், ஷெட்யூல்களும், கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட தேர்தல் விதிகள், இதர விதிகளுமிருந்தன. 1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டின்படி யாதொரு விசேஷ திருத்தங்களில்லாமல் 58 செக்ஷன்களும், 11 செக்ஷன்கள் விடப்பட்டும், 30 செக்ஷன்கள் சேர்க்கப்பட்டும், 51 செக்ஷன்கள் பதிலாக அமைக்கப்பட்டும், 120 செக்ஷன்கள் திருத்தப்பட்டுமிருக்கின்றன. இப் புதிய திருத்த ஆக்டினால் லோகல் போர்டுகளின் நோக்கங்களும், அமைப்புகளும், அலுவல்களும் விஸ்தாரமாக்கப்பட்டதினால் இதை ஓர் புதிய ஆக்டென்றே கூறவேண்டும். எனது ஆங்கில இரண்டாவது பதிப்பானது இந்த திருத்த சட்டத்தை ஏற்படுத்த மதராசு கவர்ன்மெண்டாருக்கும், சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் பேருதவியாயிருந்தது. 1920-ம் வருஷத்திய கிராம பஞ்சாயத்துகளாக்டின்படியுள்ள கிராம பஞ்சாயத்துகள், ஷை ஆக்டு ரத்தானதால் மதராசு லோகல் போர்டுகள் ஆக்டுக்கு உட்பட்டு வேலை செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கிறது. கிராம பஞ்சாயத்துகள் இந்த ஆக்டில் பரிச்சியமடைய வேண்டும்.

முன் பிரசுரங்களைக்காட்டிலும், விவரமாயும், விளக்கமாயும், விசேஷக் குறிப்புகள், ஏராளமான கேசுகள் அடங்கியதாயுமுள்ள எனது ஆங்கில மூன்றாம் பதிப்பு புத்தகத்தைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது. எலெக்ஷன்கள் இனி பிரத்தியேக நபர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. எலெக்ஷன் விதிகள் முக்கியமாய் கவனிக்கப்படவேண்டும்.

நியமனங்கள் அடியோடு எடுபட்டு போய்விட்டதால் நிர்வாக அதிகாரம் முழுமையும் உத்தியோகஸ்தரல்லாத மற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. சுகாதார விஷயத்திலும், கல்வி விஷயத்திலும், ஜன சௌக்கிய விஷயத்திலும் பாடுபடக்கூடியவர்கள் நமது மாகாணத்தில் முன் வந்து விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளுக்கும், செக்ஷன் 112, ஷெட்யூல் 5 விதி (1-A) யில் கூறப்பட்டவைகளுக்கும் லோகல் போர்டின் நிதியிலிருந்து செலவு செய்து தேச முன்னேற்றத்துக்கு உழைப்பார்களென எதிர்பார்க்கிறேன். பொது ஜனங்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்தும், மெம்பர்கள் தங்கள் கடமைகளை அறிந்தும் பாடுபட்டு அனைவரும் முன்னேற்றமடைந்து, சுக வாழ்வு வாழ இப்புத்தகம் ஓர் ஊன்றுகோலாயிருந்ததென்று புலப்படுமேல் நான் எனது கஷ்டத்துக்கு தக்க கைமாறு பெற்றதாகக் கருதுவேன்.

தமிழில் மொழி பெயர்த்து இப் புத்தகத்தை வெளியிட உதவிய எனது நண்பர்கள் ஸ்ரீமான் வி. ஆர். பார்த்தசாரதி பிள்ளை அவர்களுக்கும், திருவள்ளூர் பஞ்சாயத்து போர்ட் மெம்பரும், பஞ்சாயத்துகளின் கௌரவ ஆர்கனைஸருமான ஸ்ரீமான் எம். ஒ. கிருஷ்ணமாச்சாரியாருக்கும், இதை அச்சிட்டு வெளியாக்க உதவிய சென்னை மவுண்ட் ரோட், ராயல் பிரின்டிங் ஒர்க்ஸ் சொந்தக்காரர்களுக்கும் எனது வந்தனத்தை செலுத்துகிறேன்.

மதராஸ்,
1—11—'31.

சி. வி. நாயுடு,
ஆசிரியர்.

இப்புத்தகத்தை உபயோகிப்பவர்கள் கவனிக்க வேண்டிய முக்கியாம்சங்கள்.

லோகல் போர்டுகளின் சட்ட திட்டங்களை அறியாதவர்களுக்கும், அவைகளின் நடைமுறைகளிடத்தில் அனுதாபமுடையவர்களுக்கும் பயன்படுமாறு கீழ்கண்ட குறிப்புகள் கூறப்பட்டிருக்கின்றன.

1. 21-37 பக்கங்களிலடங்கியிருக்கும் லோகல் போர்ட் ஆக்டின் சுருக்கத்தை முதல் முதல் படிக்கவேண்டும்.

2. செக்ஷன் 3-யையும் அதன் கீழுள்ள குறிப்புகளையும் படிக்கவேண்டும்.

3. செக்ஷன் 5-யையும் அதன் கீழுள்ள குறிப்பையும் படிக்கவேண்டும்.

4. செக்ஷன் 6-யையும் அதன் கீழுள்ள குறிப்பையும் படிக்கவேண்டும்.

இவைகளால் லோகல் போர்டுகளைப்பற்றி சங்கிரகமாய் அறியமுடியும்.

5.	(a) எலெக்ஷன்	செக்ஷன்	47
	(b) வரி விதிப்பு	,,	74
	(c) வருமானம்	,,	112
	(d) விதிகள் செய்வது	,,	199
	(e) உபவிதிகள் செய்வது	,,	202
	(f) தண்டனைகள்	,,	207
	(g) லைசென்சுகள்	,,	212
	(h) பிராது தொடரல்	,,	223
	(i) வியாஜ்ஜியம் தொடரல்	,,	225

6. லோகல் போர்டுகளைக் குறித்து விவரமாய் தெரிந்துகொள்ளவேண்டுமானால், அகராதியில் அந்தந்த அம்சங்களின்கீழ் பார்க்கவும்.

சம்க்ஷேபம்.

All. or A.=இன்டியன் லா ரிபோர்ட், அல்காபாத்.

A. I. R.=அகில இந்தியா ரிபோர்டர்.

Bom. or B.=இண்டியன் லா ரிபோர்ட், பம்பாய்.

Cal. or C.= ,, ,, கல்கத்தா.

Cr. L. J.=க்ரிமினல் லா ஜர்னல்.

I. A.=இன்டியன் அபீல்ஸ்.

I. C.=இன்டியன் கேஸ்.

Lah. or L.=இன்டியன் லா ரிபோர்ட், லாகூர்.

Mad. or M.= ,, ,, மதராஸ்.

M. L. J.=மதராஸ் லா ஜர்னல்.

M. L. T.=மதராஸ் லா டைம்ஸ்.

L. W.=லா வீக்லி.

M. W. N.=மதராஸ் வீக்லி நோட்ஸ்.

A. I. R. 1925 Nag. or N.=அகில இந்தியா ரிபேர்டர் 1925-ம் ஸ்ரீ நாகபுரி.

A. I. R. 1925 Oudh or O.=அகில இந்தியா ரிபோர்டர் 1925-ம் ஸ்ரீ அவுட்.

A. I. R. 1925 Pat. or P.=அகில இந்தியா ரிபோர்டர் 1925-ம் ஸ்ரீ பாட்னு.

A. I. R. 1925 P. C.=அகில இந்தியா ரிபோர்டர்1925-ம் ஸ்ரீ ப்ரீவி கௌன்சல்.

Ran. or R.=இன்டியன் லா ரிபோர்ட், ரங்கூன்.

A. I. R. 1925 Ran. or R.=அகில இந்தியா ரிபோர்டர் 1925-ம் ஸ்ரீ ரங்கூன்.

A. I. R. 1925 Sindh or S.=அகில இந்தியா ரிபோர்டர் 1925-ம்ஸ்ரீ சிந்து.

Weir=வியர்ஸ் ரூலிங்.

இ. பு. ப= இங்கிலீஷ் புஸ்தகம் பக்கம்.

மதராசு லோகல் போர்டுகள் ஆக்ட்.

1931-ம் ௵ நவம்பர் ௴ 15௳ வரைக்கும் திருத்தப்பட்டது.

கவர்ன்மேண்டாருடைய தமிழ் மோழி பெயர்ப்பு ஆக்ட்படியுள்ளது

5-வது பக்கம் பார்க்க

அட்டவணை.

		பக்கம்
ஆக்டின் சுருக்கம்	... ...	21
லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள்	...	37
பீடிகை	... ...	40

1-ம் பாகம்.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

செக்ஷன்		
1.	பெயர்	40
2.	சட்டதிட்டங்களின் ரத்து	41
3.	அர்த்தம்	41
(1)	ஆதிதிராவிடர்	41
(1-A)	ஆங்கிலோ இந்தியர்	42
(1-B)	நியமிக்க	42
(2)	நேமகம்	42
(3)	கட்டடம்	42
(5-A)	தற்செயலாய் ஏற்படும் காலிஸ்தானம் தற்செயல் எலெக்ஷன் ...	43
(6)	கம்பனி	43
(7)	டிஸ்டிரிக்ட்	43
(7-A)	டிஸ்டிரிக்ட் போர்ட்	44
(7-B)	ஐரோப்பியர்	44
(7-C)	காடு	44
(8)	வீடு	44
(8-A)	இந்திய கிருஸ்துவர்	44
(9)	நிலத்துக்குடையவர்	44
(10)	மல ஜலபாதை மறைவிடம்	45
(10-A)	சட்ட நிரூபண சபை	45
(10-B)	பிரதேச அதிகாரசபை	45
(11)	லோகல் போர்ட்	45
(12)	லோகல் பண்ட்	46
(13)	அசங்கியம் அல்லது சங்கடம்	46
(13-A)	சாதாரண காலிஸ்தானம்	46
(14)	சொந்தக்காரர்	46
(15)	பல்லக்கு	47
(15-A)	பஞ்சாயத்து	47
(15-B)	பஞ்சாயத்துதாரர்	47
(16)	நிர்ணயிக்கப்பட்ட	47
(17)	சொந்தமான பாட்டை	47
(18)	பொதுவான பாட்டை	48
(19)	வாசஸ்தலம் வசிக்க	49
(19-A)	ரெவின்யு தாலூகா	49
(19-B)	ரெவின்யு கிராமம்	49
(20)	சம்புளம்	50

செக்ஷன் பக்கம்
(21) கீழ் நிலத்துக்குடையவர் 50
(21-A) தாலூகா 50
(21-B) தாலூகா போர்ட் 50
(22) பாயக்காரி 50
(23) கிராமம் 50
(25) வருஷம் 51

2-ம் பாகம்.

லோகல் போர்டுகளை ஸ்தாபிப்பதும், அமைப்பதும், பரிபாலனஞ் செய்வதும்.

2-ம் அத்தியாயம்.

டிஸ்டிரிக்ட்களும், தாலூகாக்களும், கிராமங்களும்.

4. தாலூக்காக்கள் ... 51
5. கிராமங்கள் ... 53

3-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளை அமைப்பதும், மேல்விசாரணை செய்வதும்.

6. லோகல் போர்டுகளை அமைப்பதும் அவைகள் சட்டப்படி சேர்ந்தவைகளாவதும் 56
7. லோகல் போர்டுகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியை ... 61
8. லோகல் போர்டுகளின் எல்லா மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது 62
9. சில வகுப்புகளுக்கும், ஸ்திரீகளுக்கும் லோகல் போர்டுகளில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பது 62
10. லோகல் போர்டுகளில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று நிச்சயிப்பது 64
11. எலெக்ஷனும் லோகல் போர்டுகளின் மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கும் கால அளவும் 65
11-A. யாதொரு எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை 67
12. லோகல் போர்டுகளின் பிரஸிடென்டுகளும் வைஸ் பிரசிடென்டுகளும் ... 67
12-A. யாதொரு எலெக்ஷனில் பிரஸிடென்ட் அல்லது வைஸ்-பிரசிடென்ட் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை ... 70
13. [1930-ம்வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] ... 70
14. [„ „ „] 70
15. பிரசிடென்ட்.வைஸ்பிரசிடென்ட் ஆகிய இவர்கள் உத்தியோகத்தில் காலி ... 70
16. மெம்பர்களும், வைஸ்பிரசிடென்டும், பிரசிடென்டும் ராஜினாமா செய்வது ... 71
17. காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்வது ... 71
18. [1930-ம்வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 72
19. தெரிந்தெடுக்கப்படும் விஷயங்களையும், நியமிக்கப்படும் விஷயங்களையும் குறித்து பிரசித்தம் செய்யவேண்டுமென்பது 72
20. எந்த மெம்பரும் பிரதிபலன் பெற்றுக்கொள்ளக்கூடாதென்பது ... 72
21. நிர்வாக அதிகாரம் பிரஸிடென்டினிடத்திலிருக்குமென்பது ... 72
22. அவசரமான சந்தர்ப்பங்களில் பிரசிடென்டிற்குள்ள அதிகாரங்கள் ... 73
22-A. பிரசிடென்டின் உத்தியோகம் காலியாயிருக்கும்போது பிரசிடென்டின் அலுவல்களை செய்வது 73
23. பிரசிடென்டின் அலுவல்களை வேறொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும் வேறொருவர் செய்வதும் 75
24. [1930-வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 76
25. பிரித்து கொடுக்கப்பட்ட அதிகாரங்களை பிரசிடென்டின் மேல்விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டு செலுத்தவேண்டுமென்பது ... 77
26. தனித்தனி மெம்பர்களின் பாத்தியதைகள் 77
27. ரெகார்டுகளை ஆஜர்படுத்தும்படி கேட்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்... 79

செக்ஷன் பக்கம்

28. லோகல் போர்டுகளின் கமிட்டிகளை ஏற்படுத்துவது 80
29. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 81
30. கூட்டு கமிட்டிகளை ஏற்படுத்துவது 81
31. லோகல் போர்டுகளின் நடவடிக்கைகளைப்பற்றிய விதிகளும் ரெகுலேஷன்களும். 82
32. லோகல் போர்டு சபைகளில் இன்னார் சபை தலைமை வகிக்கவேண்டுமென்பது. 83
33. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 85
34. மெம்பர் எப்போது தர்க்கத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்பதும் ஓட் கொடுக்கக் கூடாதென்பதும் 85
35. லோகல் போர்டார் முதலியவர்களின் நடவடிக்கைகளில் ஒழுங்கு பிசகு முதலியவை யிருப்பதினால் அவை செல்லாமற்போகமாட்டாவென்பது ... 86
36. வருஷவாரி ரிப்போர்டுகள் அனுப்புவது... 88
37. லோகல் போர்டுகளின் பார்வையிடும் உத்தியோகஸ்தர்களும், மேல்விசாரணை பண்ணும் உத்தியோகஸ்தர்களும் 89
37-A. பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குப் பிரவேசிப்பதற்கான அதிகாரங்கள். 89
37-B. பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் லோகல் போர்டு சொத்து முதலியவைகளைப் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்வது 89
37-C. லோகல் போர்டுகளிடமிருந்து ரிபோர்டுகள் வரவழைப்பதற்கான அதிகாரம்... 90
37-D. தாலூகா போர்டுகளையும், பஞ்சாயத்துகளையும் மேல்விசாரணை பண்ண, டிஸ்டிரிக்ட் போர்டு பிரஸிடென்டுகளுக்கும், தாலூகா போர்டு பிரஸிடென்டுகளுக்குமுள்ள அதிகாரம் 90
38. ஆக்டின்படி தீர்மானம் முதலியவைகளை சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்க அல்லது ரத்து செய்ய அதிகாரம் 90
39. டிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள விசேஷ அதிகாரம் 92
40. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 93
41. டிஸ்டிரிக்ட் போர்டாராவது அல்லது அதன் பிரஸிடென்டாவது தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்த பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் 93
42. தாலூகா போர்டுகளும், பஞ்சாயத்துகளும் அவைகளின் பிரசிடென்டுகளும் தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்த டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடென்டுக்கும் தாலூகா போர்ட் பிரசிடென்டுக்கும் உள்ள அதிகாரம் ... 94
43. லோகல் போர்டின் பிரசிடென்டையோ, வைஸ்-பிரசிடென்டையோ நீக்கி விடுவதற்கு பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ... 94
44. லோகல் போர்டின் பிரசிடென்ட் வைஸ்-பிரசிடென்டினிடத்தில் நம்பிக்கையில்லை என்னும் பிரேரேபணை 94
45. லோகல் போர்டுகளை கலைத்துவிடுவதும் மறுபடி அமைப்பதும் ... 96
45-A. பஞ்சாயத்துகள் நிராகரிக்கப்படுவது 97
45-B. லோகல் போர்டுகளை கலைக்கும்போதும், நிராகரிக்கும்போதும் அவைகளுக்குள்ள பொறுப்பு ... 98
46. லோகல் போர்டுக்காகவாவது அது தவறுவதன் மேலாவது பிரவர்த்திக்கிற உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் லோகல் பண்டின் பொறுப்பும் ... 99

4-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளின் மெம்பர்களை தெரிந்தெடுப்பது.

47. டிஸ்டிரிக்ட் போர்ட் மெம்பர்களை தெரிந்தெடுப்பது 100
48. தாலூகா போர்ட் மெம்பர்களை தெரிந்தெடுப்பது 102
49. பஞ்சாயத்து மெம்பர்களை தெரிந்தெடுப்பது 103
50. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 104
51. தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் ஜாபிதாவை பிரசுரிப்பது 104
52. ரிஜிஸ்டர் செய்துகொள்வதற்குப் பொதுவான யோக்கியதாம்சங்கள் ... 107
53. வோட் கொடுப்பவர்களின் யோக்கியதைக் குறைவு 108
54. தெரிந்தெடுக்கப்படுவதற்குரிய யோக்கியதாம்சங்கள் 108
55. தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அபேட்சகர்களின் யோக்கியதை குறைவுகள் 109

செக்ஷன் பக்கம்
56. மெம்பர்களின் யோக்கியதை குறைவுகள் 111
57. மெம்பர்களின் யோக்கியதைக் குறைவைப் பற்றிய பிரசினைகளைக் குறித்து டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்மானிப்பது 115
58. எலெக்ஷன் சம்பந்தமான ரகசியத்தை வெளியிடுவது 116
59. எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களுக்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப் பட்ட நபர்கள் வோட் கொடுப்பதற்கும் தெரிந்தெடுப்பதற்கும் தகுதியற்றவர் களாவார்களென்பது 116

5-ம் அத்தியாயம்.

சொத்து விஷயமாயும், சிப்பந்தி விஷயமாயும் லோகல் போர்டாருக்குள்ள அதிகாரங்கள்.

சொத்து.

60. பொதுவான பாட்டைகளும் அவைகளைச் சேர்ந்தவைகளும் லோகல் போர்டா ரிடத்தில் சங்கிரமிப்பது 116
61. சேர்க்கப்பட்ட சாக்கடைத் தண்ணீர் முதலியது லோகல் போர்டாருடையது ... 117
62. அசையாப் பொருளை ஒரு லோகல் போர்டாரிடமிருந்தி மற்றொரு லோகல் போர்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்வது ... 117
63. சென்னைபட்டணத்து 1817ம்-ளுத்திய 7-வது ரெகுலேஷன்படி தர்ம சம்பந்த மான மான்யங்களை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட தர்ம சம்பந்தமான இனும்களையும் லோகல் போர்டார்களுக்கு மாற்ற அதிகாரம் ... 118
64. சொத்தை டிரஸ்டில் வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளும் அதிகாரத்தைப்பற் றிய வரையறை 118
65. ஸ்தாபனங்கள், கட்டுவேலைகள் முதலியவைகளை பஞ்சாயத்துக்கு மாற்றுவது. 118
65-A. கிராம காடுகளை பஞ்சாயத்துக்கு டிரான்ஸ்பர் செய்வது... ... 119
65-B. நீர்ப்பாச்சல், கட்டுவேலை சம்பந்தமான அலுவல்களை பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்வது 119
65-C. லோகல் போர்டுகளின் அலுவல்களை அதிகப்படுத்த கவர்மெண்டாருக்குள்ள அதிகாரம் 119
66. லோகல் போர்டுகளுக்கு வேண்டியிருக்கும் அசையாப் பொருளை நிலமெடுத்துக் கொள்வதற்கான 1894-ம்ளுத்திய ஆக்டின்படி எடுத்துக்கொள்ளலாமென்பது. 119
67. லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் ... 120
68. டிஸ்டிரிக்ட் என்ஜினீரும், ஹெல்த் ஆபிஸரும், பஞ்சாயத்து ஆபிஸரும் ... 120
69. ஷை இரண்டு உத்தியோகங்களையும் பூர்த்தி செய்வது 121
70. டிஸ்டிரிக்ட் என்ஜினீயர் உத்தியோகத்தையும், ஹெல்த் ஆபிஸர் உத்தியோகத் தையும் பஞ்சாயத்து ஆபிஸர் உத்தியோகத்தையும் தவிர மற்றய உத்தியோ கங்களைப் பர்த்திசெய்வது 121
71. ஊழிய சம்பந்தமான ரெகுலேஷன்களை ஏற்படுத்த டிஸ்டிரிக்ட் போர்டாருக் குள்ள அதிகாரம் 122
72. லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை தண்டிக்க அதிகாரம் 124
73. லோகல்போர்டின் உத்யோகஸ்தர்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும்ராஜாகொடுக்க அதிகாரம் 125
74. லோகல் போர்டாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் 125
74-A. யாதொரு வகுப்பைச் சேர்ந்த லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை மாகாண ஊழியவர்க்கமாக அமைப்பது ... 126
74-B. லாண்ட் ஸெஸ் என்னும் வரி 127
75. வரிகளும், சுங்கங்களும் 127
76. யாத்திரைக்காரர்களுக்கு வரி 129
77. வரிகளும், சுங்கங்களும் விதிப்பதற்கு சம்பந்தப்பட்ட தீர்மானமும், விளம்பரமும். 130
78. லாண்ட் ஸெஸ் 130

3-ம் பாகம்.

திரவிய விஷயம்.

6-ம் அத்தியாயம்.

செக்ஷன் பக்கம்

79. நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பை இன்னபடி நிர்ணயிப்பது ... 131

80. சில நிலத்துக்குடையவர்களும் கீழ் நிலத்துக்குடையவர்களும் தங்கள் நிலங்களைக் குறித்து டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு ஜாப்தா கொடுக்கவேண்டுமென்பது ... 132

81. ஜாப்தாப்படி டிஸ்டிரிக்ட் கலெக்டர் வரி போடுவது 133

82. அப்படிப்பட்ட ஜாப்தாக்களை கொடாவிட்டால் தண்டனை 133

83. வருஷவாரி வாடகை மதிப்பை டிஸ்டிரிக்ட் கலெக்டர் நிச்சயிக்கலாமென்பது ... 134

84. நபர்களை சம்மனனுப்பி வரவழைக்க டிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள அதிகாரம். 134

85. ஜாபிதா திருப்திகரமாயிராவிட்டால் அதை டிஸ்டிரிக்ட் கலெக்டர் திருத்துவது. 134

86. ரெவின்யு போர்டாருக்கு அபீல் 134

87. ரயித்துவாரி நிலங்களின் பட்டாக்களிலே லாண்ட் ஸெஸ்ஸை பதிவு செய்வது. 134

88. நிலத்துக்குடையவர்களும், கீழ் நிலத்துக்குடையவர்களும் லாண்ட் ஸெஸ் செலுத்துவது 135

89. நிலத்துக்குடையவர்களுக்குள்ள அதிகாரங்கள் 135

90. கவர்ன்மெண்டாருக்கு செலுத்தத்தக்க நிலையாய் பைசலாதியாகிய தீர்வைத் தொகை விஷயத்தில் லாண்ட் ஸெஸ் வரியை வஜா செய்வது ... 136

91. ஸெஸ் என்னும் வரி பாக்கியை வசூல் செய்வது 136

92. [1930-ம் ஞூத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 137

93. தொழில் வரி 137

94. வர்த்தகக் கூட்டங்கள், சங்கங்கள், அவிபக்த ஹிந்து குடும்பங்கள் ஆகிய இவைகளைச் சேர்ந்தவர்கள் தொழில் வரிக்குள்ளாவது 140

94-A. உத்தியோகஸ்தர்கள் அல்லது ஏஜண்டுகள் தொழில் வரிக்குள்ளாவது ... 140

95. தொழில் வரியை கிராமத்துக்கு வரவாக வைப்பது 141

96. வரிசெலுத்த தவறிப்போவதின்மேல் நோடீஸ் சேர்ப்பிப்பது ... 141

96-A. வாக்கு மூலங்கள், ரிடர்ன்கள் முதலியவை ரகசியமாகுமென்பது ... 141

97. வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி சொந்தக்காருக்காவது அனுபோகதாருக்காவது நோடீஸ் கொடுப்பது 141

98. வீட்டு வரி 142

99. பொது நிவாரணைகள் 142

100. வீட்டு வரி எப்போது செலுத்தத்தக்கதாகுமென்பது 143

101. காலியாயிருப்பதற்காக வஜா செய்வது 143

101-A. ட்ரான்ஸ்பர் செய்கிறவரும், ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுகிறவரும், ட்ரான்ஸ்பரைப்பற்றி நோடீஸ் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பது ... 144

102. கட்டடம் கட்டப்படுவது, புதுப்பிக்கப்படுவது, அல்லது இடித்துவிடப்படுவதைக் குறித்து நோடீஸ் கொடுக்க சொந்தக்காரர் கடமை பட்டிருப்பது ... 145

102-A. அரை வருஷத்தின் நடுவில் சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட விஸ்தீரணங்களில் வரி வஜா செய்வது 146

103. வறுமை காரணமாக வரி நிவாரணை 147

104—109 வரையில் [1931-ம் ஞூத்திய மதராசு மோடார் வண்டிகளின்மேல் வரி விதிப்பு சட்டத்தால் ரத்தாகிவிட்டது] 147

110. யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிப்பது 147

111. வரிகள் அல்லது சுங்கங்கள் செலுத்துவதினின்றும் நிவாரணையும் வசூலிக்கும் உரிமையை விட்டுவிடுவதும் 149

111-A. வசூலிக்க முடியாத வரிகள் முதலியவைகளைக் கணக்கிலிருந்து அடித்துவிட அதிகாரம் 149

7-ம் அத்தியாயம்.

திரவிய விஷயத்துக்கு சம்பந்தப்பட்ட போதுவான நிபந்தனைகள்.

112. லோகல் பண்டுகளை இன்ன காரியங்களுக்கு உபயோகிக்கலாமென்பது ... 150

113. ரயில்வேக்கள், டிராம்வேக்கள் முதலியவைகளை ஏற்படுத்தி பராமரித்து வருவது 152

114. டிஸ்டிரிக்ட், தாலூகா, கிராம பண்டுகளை ஏற்படுத்துவது 153

செக்ஷன். பக்கம்

114-A. கிராம அபிவிர்த்தி நிதி 153
115. வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த லோகல் பண்டுகளின் வரவுகளும் செலவுகளும் 154
116. பட்ஜட்டுகளை தயார் செய்வதும், ஜாரி செய்வதும் 155
117. ஒன்றாய் சேர்க்கப்பட்ட பட்ஜெட்டை கவர்ன்மெண்டாருக்கு அனுப்புவதும், அவர்களுடைய மேல்விசாரணை அதிகாரமும் 155
118. பட்ஜெட்டுகளுக்கு தேதிகளை நிஷ்கரிஷை செய்வது 155
119. திருத்தப்பட்ட அல்லது உடன் சேர்க்கையான பட்ஜெட் 156
120. கணக்குகளுக்காக ஆடிடர்களை (தணிக்கை உத்தியோகஸ்தர்களை) நியமிப்பது ... 156
121. இதர பிரதேச அதிகார சபையார் செய்யும் செலவுக்காக தொகைகள் செலுத்துவது 156
121-A. பிரதேச கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட கடன்களையும், முன் பணங்களையும் வசூலிப்பது 156

4-ம் பாகம்.

போதுஜன தேகாரோக்கியமும், க்ஷேமமும், வசதியும்.

8-ம் அத்தியாயம்.

போதுஜன தேகாரோக்கியம்.

122. கிணறு முதலியவற்றை மூடிவிடுவதும், சுத்திபண்ணுவதும் ... 157
123. அசங்கியம் அல்லது சங்கடத்தையாவது, பொதுஜன சுகத்துக்கு அபாயத்தையாவது உண்டாக்கத்தக்க சிறு குட்டைகள் முதலியவைகளை தூர்த்துவிடுவது. 158
124. லோகல் போர்டார் பொதுவான குளங்கள் முதலியவைகளை சில காரியங்களுக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைக்கலாமென்பது 160
125. அந்தப்படி பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கிற இடங்களை பிரசித்தஞ் செய்யப்பட்ட காரியங்களல்லாத வேறே காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது 161
126. கிணறுகள், குளங்கள் முதலியவைகளைப் பஞ்சாயத்துகள் பராமரித்துவருவது... 163
127. சொந்த மலஜலபாதை மறை விடங்கள் முதலியவைகளை சுத்தி செய்வது ... 163
128. யாத்திரை ஸ்தலங்கள் முதலியவைகளின்மேல் விசாரணை வகிக்கும் நபர்கள் திரவிய சகாயம் செய்வது 163
129. அசுத்தங்கள் வெளியில் வந்து விழவொட்டாமல் தடுப்பது 164
129-A. சொந்த சாக்கடைக் கால்களை கட்டும்படியோ அவைகளை எடுத்துவிடும்படியோ உத்திரவு செய்ய அதிகாரம் 164
130. அபாயகரமான வியாதி என்பதின் அர்த்தம் 165
131. சந்தேகத்துக்கிடமான இடங்களில் பிரவேசிக்க அதிகாரமும், கட்டிடங்களினின்றும் வஸ்துக்களினின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதும் ... 165
132. இன்ன இடங்களில் சுத்தி செய்ய வேண்டுமென்றும், தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்றும் பிரஸிடெண்ட் விளம்பரம் பிரசுரிக்க வேண்டுமென்பது 166
133. தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர் தொழில் நடத்தக்கூடாதென்று தடுப்பது 167
134. அபாயகரமான வியாதிகள் கண்டிருக்கிறவர்களும் பொதுவான வண்டி முதலியவைகளும் 167
135. பொது ஜனங்கள் வேடிக்கைக்காக கூடும் இடங்களை மூடிவிடும்படி உத்திரவு செய்ய அதிகாரம் 169
136. அபாயகரமான வியாதி கண்டிருக்கும் மைனர் பாடசாலைக்குப் போகக்கூடாதென்பது 169
137. அம்மை குத்திக் கொள்ளவேண்டுமென்று நிர்பந்திப்பது 169
138. வைசூரியைக் குறித்து சங்கதி தெரிவிக்க கடமைபட்டிருப்பது ... 170
139. வைசூரிக்காக மருந்து குத்திக்கொள்ளக்கூடாதென்று தடுப்பது ... 170
140. புதைப்பதற்கும், தகனஞ் செய்வதற்குமான இடங்களை ரிஜிஸ்டர் செய்வது ... 170
141. பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது... 171
142. புதைப்பதற்கும் தகனஞ் செய்வதற்குமான இடங்களையும், பிரேதங்களைத் தகிப்பதற்கான உலைக்கூடங்களையும் ஏற்படுத்துவது 172

செக்‌ஷன். பக்கம்
143. அந்தப்படி ரிஜஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவது இருக்கிற இடங்களை குறித்து ஒரு புத்தகம் வைக்கவேண்டுமென்பது 172
144. அனுமதிகொடுக்கப்பட்டிராத இடங்களில் (பிரேதத்தை) புதைக்ககூடாதென்றாவது தகனஞ் செய்யக்கூடாதென்றாவது தடுப்பது 173
145. பிரேதங்களை புதைப்பது முதலியவைகளைப்பற்றி லோகல் போர்டாருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பது 173
146. தேகாரோக்கியத்திற்கு அபாயகரமான அல்லது அமிதமாய் பிரேதக் குழிகள் நிறைந்துள்ள புதைக்கும் இடங்களையும், தகனஞ் செய்யும் இடங்களையும் உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பது 173

9-ம் அத்தியாயம்.

147. அபாயகரமான கட்டுக்கோப்புகளின் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் 174
148. அபாயகரமான மரங்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் ... 175
149. கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு அடைப்படைத்துவைப்பதும், வேலிகளையும், மரங்களையும் தரிப்பதும் 176
150. அபாயகரமான குளங்கள், கிணறுகள், குழிகள் முதலியவை விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் 176
151. பொதுவான பாட்டைக்குச் சமீபமாய் கல்வெட்டி எடுப்பது முதலியவைகளுக்காக லைஸென்ஸ் பெறவேண்டுமென்பது 177
152. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 178
153. பஞ்சாயத்து விஸ்தீரணங்களிலுள்ள நிலங்களிலிருந்தும், கட்டிடங்களிலிருந்தும் அசுத்தங்களை அல்லது தீங்குண்டாக்கத்தக்க புல், பூண்டுகளை அப்புறப்படுத்துவது 178
154. திரிந்துகொண்டிருக்கும் பன்றிகளையும் நாய்களையும் கொன்றுவிடுவதற்கு அதிகாரம் 179
155. அழித்துவிடப்பட்ட அபாயகரமான கட்டுச் கோப்பு முதலியவைகளின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க பிரசிடென்டுக்குள்ள அதிகாரம் ... 180
156. பிரதிபலன் விஷயமான வரையறை 180

10-ம் அத்தியாயம்.

பொதுவான பாட்டைகள்.

157. பொதுவான பாட்டைகளிலாவது பாட்டைகளின்மேலாவது தடங்கல் உண்டாக்கக் கூடாதென்று தடுப்பது 180
157-A. பொதுவான பாட்டை யாவருக்கும் உரியது 181
158. கதவுகள், அடித்தரை ஜன்னல்கள் கிராதி கதவுகள் முதலியவைகள் வெளிப்புறமாய் திறக்கக்கூடாதென்று தடுப்பதும், அவைகளைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதும் 181
159. ஆக்கிரமிப்புகளை எடுத்துவிடுவது 182
160. சில பிதுக்கங்களுக்கும் கட்டுக்கோப்புகளுக்கும் உத்திரவு கொடுக்கலாம் ... 184
161. ஜலதாரை, சாக்கடைக்கால்களின்மேல் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டக்கூடாதென்று தடுப்பது 185
162. தீங்கு உண்டாக்கத்தக்க புல்பூண்டு முதலியவைகளை அப்புறப்படுத்துவது சம்பந்தமாய் நோட்டீஸ் கொடுப்பது 186
163. பொதுவான பாட்டைகளில் குழி தோண்டுவதும், தடங்கல் ஏற்படுத்துவதும் கூடாதென்று தடுப்பது 186
163-A. அனுமதியில்லாமல் பொதுவான பாட்டைகள் முதலியவைகளின்மேல் மரங்கள் நடக் கூடாதென்றும், அவைகளின் மேலுள்ள மரங்களை வெட்டக்கூடாதென்றும் தடுப்பது 187
164. நிலத்தை அனுமதி யில்லாமல் அனுபவித்து வரும் விஷயத்திலே, தண்டத்தொகை விதிப்பதும் நஷ்ட ஈடு வசூலிப்பதும் 188
165. விசேஷ போக்குவரத்தினால் விளையும் செலவுகளை வசூலிக்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம் 188

செக்ஷன் பக்கம்
166. வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகளுக்கும், மோட்டார் லாரிகளுக்கும் லைசென்ஸு கொடுப்பது 189

11-ம் அத்தியாயம்.

மார்க்கெட்டுகளும், ஆடு மாடு அடிக்கும் தொட்டிகள் முதலியவைகளும்

பொது மார்க்கெட்டுகள்.

167. பொது மார்க்கெட்டுகள் 190
168. பொதுமார்க்கெட்டுகள் விஷயமாயுள்ள அதிகாரங்கள் 190
169. பொதுமார்க்கெட்டின்மேல் பிரஸிடென்டுக்குள்ள விசாரணை அதிகாரம் ... 191
170. [1930-ம்.வருஷத்திய ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 191
171. சொந்தமார்க்கெட்டுக்கு லைசென்ஸ் 191
172. 1884-ம் வருஷத்திற்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட சொந்தமார்க்கெட்டுகளில் கட்டணங்கள் விதித்துவாங்க சுதந்தரம் கொண்டாடும் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை 193
173. கட்டணங்கள் விதித்து வசூல் செய்வதற்கான சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ளுவதற்காக வியாஜ்ஜியம் கொண்டு வர பாத்தியதை 193
174. லைசென்ஸுக்கு கட்டணம் 194
175. லைசென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யக்கூடாதென்று தடுப்பது 194
176. சொந்த மார்க்கெட்டுகளைப்பற்றி பஞ்சாயத்து போர்டுக்குள்ள அதிகாரம் ... 194
177. 176-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோட்டீஸின் பிரகாரம் நடந்துகொள்ளத் தவறினால் லைசென்ஸை சிறிது காலத்திற்கு நிறுத்திவைப்பது அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிப்பது 195
178. சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்கக்கூடாதென்று தடுப்பது 195
179. சொந்த மார்க்கெட்டுகளை மூடிவிட அதிகாரம் 195
180. சொந்த மார்க்கெட்டுகள் வைத்துக்கொள்ள சர்க்காரைச் சேராத தனி நபர்களுக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக்கொள்ளுவது 196
181. 171-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்திரவுகளின்மேல் அபீல் ... 196
182. குஷ்டரோகிகள் முதலியவர்களை மார்க்கெட்டுகளிலிருந்து துரத்திவிட கடமைப்பட்டிருப்பதும், சச்சரவு உண்டாக்குகிறவர்களை துறத்திவிட அதிகாரமும். 196
183. பொதுவான பாட்டைகளில் வஸ்துக்களை விற்கக்கூடாதென்று தடுப்பது 197
183-A. தாலூகா மார்க்கெட்டுகள் விஷயமாயுள்ள அதிகாரங்களை செலுத்துவது ... 197
183-B. இடங்கள் மார்க்கெட்டுகளாகுமா என்னும் விஷயமாய் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பது 197

பாரவண்டி நிற்கும் இடங்கள்.

184. பொதுவான பார வண்டி நிற்கும் இடங்களை ஏற்படுத்துவது ... 197
185. பொதுவான இடத்தையாவது பாட்டையின் பக்கங்களையாவது பார வண்டி நிற்கும் இடம் முதலியவைகளாக உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பது ... 198
186. பாரவண்டி நிற்கும் இடம் முதலியவைகளுக்காக கட்டணம் வசூலிப்பது ... 198
187. பாரவண்டி நிற்கும் சொந்த இடத்திற்கு லைசென்ஸ் 199
188. [1930-ம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 200
189. ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை ஏற்படுத்துவது ... 200
190. ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளல்லாத வேறே இடங்களில் கால் நடைகளை கொல்வது முதலியது கூடாதென்று லோகல் போர்டார் தடுக்கலாமென்பது 200
191. உற்சவகாலங்களிலும் பண்டிகை காலங்களிலும் பிராணிகளை கொல்வது ... 201
192. கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படும் இடங்கள் நிவாரணையாவது ... 201

தொழில்களும் தொழிற்சாலைகளும்.

193. இன்ன காரியங்களுக்கு லைசென்ஸ் இல்லாமல் இடங்களை உபயோகிக்கலாகாதென்பது 202

செக்ஷன் பக்கம்

194. நீராவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கிற தொழிற்சாலை, வேலைச் சாலை, அல்லது வேலை செய்யும் இடத்தை கட்டுவதற்காவது ஸ்தாபிப்பதற்காவது அதில் எந்திர உபகரணங்களை ஏற்படுத்துவதற்காவது செய்துகொள்ள வேண்டிய விண்ணப்பம் 203

195. நீராவி அல்லது இதர சக்தியினால் ஏற்படும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களை குறைக்கும்படி லோகல் போர்டார் உத்திரவு பிறப்பிக்கலாமென்பது ... 205

196. லோகல் போர்டாருக்கு உத்திரவு பிறப்பிக்கவோ கட்டளையிடவோ பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் 206

197. யாதொரு தொழிற்சாலை வேலைசாலை அல்லது வேலைசெய்யும் இடத்துக்குள்ளே ப்ரஸிடென்ட் பிரவேசிக்கலாமென்பது 206

198. ஜனங்கள் வழக்கமாய்கூடும் இடங்களைக்குறித்த 1888-ம் வருஷத்து ஆக்டை பஞ்சாயத்து விஸ்தீர்ணங்களுக்கு பிரயோகப்படும்படி செய்வது ... 207

5-ம் பாகம்.

சகாயகரமான சட்ட நிபந்தனைகளும், தண்டனைகளும், விதிகளும், ஷெட்யூல்களும்.

12-ம் அத்தியாயம்

199. விதிகள் செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ... 212

200. விதிகளை செய்வதற்கான நடவடிக்கை முறைகள் 215

201. ஷெட்யூல்களைத் திருத்தவும் அவைகளுடன் யாதொன்றை சேர்க்கவும் அவைகளை ரத்து செய்யும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமும் அதற்கு நடவடிக்கை முறையும் 215

201-A. 74-A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் 201-வது பிரிவின்படியும் விதிகள் செய்வதற்கான நடவடிக்கை முறை ... 216

202. சகாய சட்டங்கள் செய்ய டிஸ்டிரிக்ட் போர்டாருக்குள்ள அதிகாரம் ... 216

203. சகாய சட்டங்களை மீறினால் தண்டனை 218

203-A. சகாய சட்டங்கள் செய்ய தாலுகா போர்ட் அல்லது பஞ்சாயத்துக்குள்ள அதிகாரம் 218

204. சகாய சட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கை 219

205. சகாய சட்டங்களை பிரதேச கவர்ன்மெண்டார் ஊர்ஜிதப்படுத்துவது ... 220

205-A. சகாய சட்டங்கள் செய்வதற்கும் அவைகளை பிரசித்தம் செய்வதற்குமான நடவடிக்கை முறை 220

206. டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளாக்டையும் அந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளையும் பஞ்சாயத்துகளுக்காவது லோகல் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட இதர விஸ்தீரணங்களுக்காவது பிரயோகப்படும்படி செய்வது. 220

13-ம் அத்தியாயம்.

தண்டனைகள்.

207. ஷெட்யூல்களில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளைக் குறித்த பொதுவான நிபந்தனைகள் 221

208. யோக்கியதையற்றிருக்கும்போது யாதொரு லோகல் போர்டின் மெம்பராகவோ பிரஸிடென்டாகவோ, வைஸ்-பிரஸிடென்டாகவோ பிரவர்த்தித்தால் தண்டனை 222

209. ஒப்பந்தம் அல்லது வேலையில் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது சுயப்பிரயோஜனம் அடைந்தால் தண்டனை 223

210. பிரஸிடென்டையாவது, அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றவரையாவது அக்கிரமமாய் தடுப்பது 224

211. சங்கதி தெறிவிக்காவிட்டாலும் பொய்யான சங்கதி தெறிவித்தாலும் அதற்கு தண்டனை 224

6-ம் பாகம்.

14-ம் அத்தியாயம்.

212. லைஸென்ஸுகளையும் அனுமதிகளையும் குறித்த பொதுவான நிபந்தனைகள் ... 225

213. அபீலுக்கு காலநிர்ணயம் 229

214. லைசென்ஸுகள், நோடீஸ்கள், அனுமதிகள் ஆகிய இவைகளின் நமூனா ... 229

செக்ஷன் பக்கம்
215. இந்த ஆக்டின்படிக்கான விளம்பரங்களை பிரசித்தம் செய்வது ... 229
215-A. தடைகள் ஏற்படுத்துவதைக் குறித்து அல்லது இடங்களை பிரத்தியேகமாய் விட்டு வைப்பதைக் குறித்து நோடீஸ் 230
216. தஸ்தாவேஜுகளை சேர்பிக்கும் விதம் 230
217. வேலையைப் பார்வையிடவோ, சர்வேசெய்யவோ, அல்லது செய்து முடிக்கவோ பிரவேசிக்க அதிகாரம் 231
218. எடுத்தலளவை கருவிகளையும் முகத்தலளவை கருவிகளையும் பார்வையிடுவதும், அவைகளுக்கு முத்திரைபோடுவதும் 232

லைசென்ஸ் கோடுப்பதற்கான நிபந்தனைகள் உத்திரவு முதலியவைகளை அமுலுக்கு கோண்டுவருவதற்கான அதிகாரம்.

219. லைசென்ஸ் முதலானவைகளை பெற்றுக்கொள்ளத்தவறினாலும் அவைகளுக்கு விரோதமாய் நடந்தாலும், இன்னது விளையுமென்பது ... 232
220. நோடீஸ் உத்தரவு முதலியவைகளின்படி நடப்பதற்கு வாய்தாவும் அந்தப்படி நடந்துகொள்ளாவிட்டால் அவைகளை அமுலுக்குக் கொண்டுவர அதிகாரமும் 233
221. சேரவேண்டிய தொகைகளை வரிகளைப்போல் வசூல் செய்வது ... 234
222. சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதற்கு கால நிர்ணயம் ... 234
223. பிராது தொடர அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் நபர்கள் ... 235
224. அபராதங்கள், செலவுகள் முதலியவைகளை வசூலிப்பது 236
225. லோகல் போர்டார்மேல் வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்கு நோடீஸ் ... 236
226. குற்றங்களின் விஷயமாய் ராஜி செய்துகொள்வது 240
227. மெம்பர்கள் சொத்தை இழந்துவிட்டாலும், பாழ்பண்ணினாலும் துர்வினியோகம் செய்தாலும் அவர்கள் உத்திரவாதிகளாவது 240
227-A. யாதொரு லோகல் போர்ட் பிரசிடென்ட் மேலாவது பிராது தொடருவதற்காக அனுமதி பெறுவது 241
228. வரி விதிப்பு முதலானவைகளைக் குறித்து தோஷம் சொல்லக்கூடாது ... 241
229. லோகல் போர்டுகளின் ஊழியக்காரர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் தடுப்பது கூடாதென்பது 243
230. நோடீஸை எடுத்துவிடுவது அல்லது கலைத்துவிடுவதைத் தடுப்பது ... 243
231. ஸ்டேட்மெண்டுகள் அல்லது விபர கணக்குகள் சவதரிக்கவேண்டுமென்று கர்ணங்களையும், பெரியதனக்காரர்களையும் கேட்க பிரசிடென்டுக்குள்ள அதிகாரம் 243
232. கக்ஷிக்காரர்களுக்கு சம்மன் அனுப்ப அதிகாரம் 243

தங்களுடைய அதிகாரங்களை வேறோருவருக்குக் கோடுக்கவும், மத்தியஸ்தம் செய்யவும் பிரதேச கவர்ன்மேண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

233. கவர்ன்மென்டார் தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்கு கொடுப்பது. 244
234. பிரதேச அதிகார சபைகளுக்குள் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பது ... 244
235. புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுக்கு சொத்தும் உரிமைகளும் மாறுவது 245
236. ரெயில்வே ஸெஸ் என்னும் வரியிலிருந்து சேரும் தொகைகளை உபயோகப்படுத்திக் கொள்வது 245
237. இந்த ஆக்ட் வியாபகமும் அது வழங்கத் தொடங்குவதும் 246
238. [1930-ம் ௵ 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] 246
239. [ஷை ஷை] 246
240. புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுகளின் விஷயத்திலும் மீண்டும் அமைக்கப்பட்ட லோகல் போர்டுகளின் விஷயத்திலும் பிரத்தியேகமான நிபந்தனை 246

1-வது ஷெட்யூல்.

ரத்து செய்யப்பட்டசட்ட திட்டங்கள்.

ரத்து செய்யப்பட்ட சட்ட திட்டங்கள் 248

2-வது ஷெட்யூல்.

லோகல் போர்டுகளின் நடவடிக்கை சம்பந்தமான விதிகள்.

1. லோகல் போர்ட் ஆபீஸ் 249
2. மீடிங் கூட்டவேண்டிய காலம் 249

செக்ஷன்		பக்கம்
3.	நோடீஸ் இல்லாமல் சபைகூட்டக் கூடாது	252
4.	பிரத்தியேக சபை	254
5.	சபைகள் பொதுவானது	256
6.	பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்படவேண்டும்	256
7.	சபை எப்போது செல்லத்தக்கியது	258
8.	க்வோரம் எதற்குள் சேரவேண்டும்	259
9.	தீர்மானத்தை எப்போது திருத்தலாமென்பது	259
10.	குறிப்பு புத்தகங்கள் பொதுவானது	260
11.	குறிப்பு பிரசுரிக்கப்படவேண்டும்	260
12.	ரெகார்டுகளும், குறிப்புகளும் பிரஸிடெண்டிடமிருக்க வேண்டும் ...	261
13.	கமிட்டியின் நடவடிக்கை குறிப்பு எழுதி போர்டுக்கு அனுப்பவேண்டும். ...	262

3-வது ஷெட்யூல்.

தேரிந்தெடுப்பவர்களுக்குரிய யோக்கியதாம்சங்கள்.

1.	வோட்டர்களின் யோக்கியதாம்சங்கள்	262
2.	[1930-ம் ஞு த்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது] ...	263
3.	கூட்டுபட்டாதார்கள் எப்படி வோட் செய்யவேண்டுமென்பது ...	264
4.	வோட்டில் பிரதிநிதித்துவம்	264
5.	சொந்த யோக்கியதாம்சம்	264

4-வது ஷெட்யூல்.

வரி விதிப்பைக் குறித்த விதிகள்.

1.	லாண்ட் ஸெஸ்ஸை டிஸ்டிரிக்ட் கலெக்டர் வசூலிக்கவேண்டும் ...	265
2.	[1930-ம் ஞு த்திய 11-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது]	265
3.	லாண்ட் ஸெஸ் லோகல் பண்டுக்கு சேரும்	265
4.	லாண்ட் ஸெஸ்ஸினால் வரவும் அதை வசூலிக்க செலவும்	265
5.	வரி விதிப்பு புத்தகங்களை பார்வையிடுவதும், திருத்துவதும்... ...	265
6.	பிரஸிடெண்ட் வரியை நிச்சயிக்கவேண்டும்	267
7.	வரிசெலுத்துவோருக்கு ரசீது	267
8.	[1930-ம் ஞு த்திய 11 வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது]	268
9	தொழில் வரி விதிப்பது	268
10.	தொழில் அல்லது வியாபாரம் செய்வது...	269
11.	தொழில் வரி விதிக்க வருமானம் கண்டு பிடிப்பது	269
11-A.	ரிடர்ன் சவதரித்து அனுப்பும்படி கேட்டுக்கொள்வது	270
12.	வீட்டுவரி விதிப்பது எப்படி என்பது	272
13.	பஞ்சாயத்து அனுசரிக்க வேண்டிய முறை	272
14.	வரி விதிக்கும் விதம்	272
15.	சங்கியா பிரமாணத்தை அனுசரிக்க வேண்டும்	273
16.	வீட்டுவரியினின்றும் நிவாரணை	273
17.	வாடகை மதிப்பிடுவது	274
18.	கவர்ன்மெண்ட் அல்லது ரயில்வே கட்டடத்தின் மேல்வரி விதிப்பது ...	274
19.	ஜலசர்பாரா, ஜலதாரை வரி	275
20.	வீடுகளின் ஜாப்தாவை கர்ணம் தயார் செய்யவேண்டும்	275
21.	கர்ணம் பிரதிபலன் பெறக் கடவர்	275
22.	வீட்டுவரி புத்தகத்தை பிரஸிடெண்ட் தயாரிக்கவேண்டும்	275
23.	வரி புத்தகத்தைப் பற்றி பகிரங்கப்படுத்தல்	276
24.	வரி புத்தகத்தை திருத்துவது	276
24-A.	வரியை குறைப்பது	277
25.	அரை வருஷத்திற்கு விதிக்கப்படுவதும், பொதுவாய் விதிப்பதுவும் ...	277
26.	[1931-ம் ஞு த்திய மதராசு மோட்டார் வண்டிகளின்மேல் வரிவிதிக்கும் சட்டத்தால் ரத்தாகிவிட்டது]	277
27.	வரிகளின்மேல் அபீல்	277
28.	அபீல் இந்த விதமாயிருக்க வேண்டுமென்பது	278

செக்ஷன் பக்கம்

29. பஞ்சாயத்து வரியை வஜா அல்லது திருத்தும் செய்யலாம்... ... 279
30. வரிபுத்தகங்கள் திருத்தப்படவேண்டும் 279
31. பஞ்சாயத்தின் தீர்மானம் முடிவானதாகும் 279
32. பில் அல்லது நோடீஸ் சேர்ப்பிக்கப்படவேண்டும் 279
33. வரி வசூலிக்கப்படவேண்டிய விதம் 280
34. ஜப்தி செய்யவேண்டிய முறை 281
35. ஜப்தி செய்த சொத்தின்மேல் ஆக்ஷேபனையின் பரிசீலனையும் ஏலம் போடுவதும். 282
36. ஜப்தி கட்டணம் 283
37. எங்கு ஜப்தி செய்யவேண்டுமென்பது 283
38. கட்டடத்தில் காணப்படும் அசையும் பொருள் ஜப்தி 283
39. வரி செலுத்தத் தவறியவர்மேல் பிராது தொடரல் 284
39-A. பிரசிடென்ட் அல்லது வேறு உத்தியோகஸ்தர் ஏலத்தில் எடுக்கக்கூடாது ... 285
40. கட்டடங்களை குத்தகைக்கு விடுதல் 285
A அனுபந்தம்—ஜப்தி வாரண்டு 285
B அனுபந்தம்—சாமான் ஜாபிதாவுக்கும் நோடீஸுக்கும் நமூனா ... 286
C அனுபந்தம்—ஜப்தி செய்யப்படுவதன்மேல் செலுத்தவேண்டிய உச்ச கட்டண ஜாபிதா 287

5-வது ஷெட்யூல்.

திரவ்விய சம்பந்தமான விதிகள்.

1. லோகல் போர்டுகளின் செலவுகள் 287
1-A. பஞ்சாயத்தின் செலவுகள் 288
1-B. தாலூகா போர்டின் செலவுகள் 290
1-C. ஜில்லா போர்டின் செலவுகள் 291
1-D. லோகல் கவர்ன்மெண்டின் செலவுகள் 292
2. செலவு எழுதப்படுவது 293
3 ரோட்டுகளை இனம்பிரிப்பது 293
4 கொண்டாட்டத்திற்கு பொருள் உதவி செய்வது 293
5. லோகல் பண்டுகளின் வருமானம் 294
6. லோகல் போர்டுகளுக்கு வரவு வைக்கவேண்டும் 298
7. வருமானத்தைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டார் 298
8. லோகல் பண்டை வைப்பது 298
9. லோகல் பண்டை வாங்குவது 299

6-வது ஷெட்யூல்.

அபாயகரமான வியாதிகளின் ஜாபிதா 299

7-வது ஷெட்யூல்.

எந்த காரியங்களுக்காக வளவை லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கக் கூடாதோ அந்த காரியங்கள் 300

8-வது ஷெட்யூல்.

சாதாரண அபராதங்கள் 302

9-வது ஷெட்யூல்.

தொடர்ச்சியாக குற்றம் நடந்து கொண்டே வந்தால் அபராதம் ... 307

10-வது ஷெட்யூல்.

1930-ம் ஷுத்திய மதராசு ஆக்டினால் ரத்தாகிவிட்டது.

ஷெட்யூல்.

மாறுதல் சம்பந்தமான நிபந்தனைகள் 310

ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக்குறித்து 1888-ம் ஷுத்து, 2-வது ஆக்ட் 208
1931-ம் ஷுத்து 8-வது மசோதா ஆக்ட் 315
ராஜவிஸ்வாச பிரமாண சட்டம் 318

மதராஸ் லோகல் போர்ட் ஆக்டின் சுருக்கம்.

ஆக்ட் அபிவிருத்தி செய்யப்பட்டது.

1. இந்த 1920ஸ்லத்து XIV ஆக்ட்—1925ஸ்லத்து V, 1927ஸ்லத்து I, 1930ஸ்லத்து XI ஆக்ட்களினால் திருத்தப்பட்டது. தீர்மானமாக பழைய ஆக்ட் 1884ஸ்லத்து V-யின் பேரில் அபிவிருத்தி செய்யப்பட்டது, ஆனாலும் ஜில்லா கலெக்டர்களும் ஜில்லா எட்யூகேஷனல் கௌன்சில்களும் மதராஸ் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட இதர சில உத்தியோகஸ்தர்களும் ஸ்தாபனங்களும் லோகல் போர்டுகளுடைய இஷ்டங்களை மேற்பார்வையிட அதிகார முடையவர்களா யிருப்பதால் லோகல் செல்ப் கவர்ன்மெண்டினுடைய எல்லா அதிகாரங்களையும் ஜன ப்ரதிநிதிகளுக்கு பூர்த்தியாக மாற்றிவிட்டதாக இன்னும் சொல்லமுடியாது.

லோகல் போர்டுகள் கீழடங்கிய ஸ்தாபனங்கள்.

2. மெட்ராஸ் லோகல் போர்ட்ஸ் எனும் பிரதேச ஸ்தாபனங்கள் மெட்ராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்டினால் உற்பத்தி செய்யப்பட்டவை. லோகல் போர்ட்ஸ் என்பவை டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், தாலுக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகும். இந்த ஆக்ட் இருப்பதினாலேயே மேற்படி ஸ்தாபனங்களும் நிலைபெற்றிருக்கின்றன. இந்த ஆக்ட் இருக்கிற கால பரியந்தம் இந்த ஸ்தாபனங்கள் நீடித்திருக்கும். ஒருக்கால் இந்த சட்டம் ரத்து செய்யப்பட்டால் மொத்த லோகல் போர்டுகளும் இல்லாமல் போய்விடும். இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டினால் மாகாணத்தின் நன்மையான ஆளுகைக்கு ஏற்ற சட்டங்களை செய்ய அதிகாரம் பெற்ற மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த ஆக்டை செய்ததன் மூலமாக அவைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மாத்திரம் அவைகள் ஆளமுடியும். ஆகையால் லோகல் போர்டுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அசல் அரசியல் அதிகாரங்களாகும்.

லோகல் போர்ட் அலுவல்கள்.

3. வசிப்பவர்களின் க்ஷேமம், சௌக்கியம், சௌகர்யம், கல்வி ஆகியவைகளுக்காகவும் பிரதேசங்களை மனோகரபடுத்துவதற்காகவும் லோகல் போர்டுகள் ஆதியில் ஏற்படுத்தப்பட்டன (செ.112). லோகல் போர்டுகளின் இந்த உத்தேசங்களை நிறைவேற்றுவதற்காக, பிரஜைகளின் செய்கைகளை ஓரளவு அடக்கியாள அவைகள் சில அதிகாரங்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. ஆதலால் இந்த ஆக்டிலுள்ள 259 செக்‌ஷன்களில், பிரதேசவாசிகளின் சுமார் 70 நடக்கைகள் தண்டிக்கத் தகுந்தவையென விதிக்கப்பட்டிருக்கின்றன. மதராஸ் கவர்ன்மெண்டாராலும் லோகல் போர்ட்களாலும் இயற்றப்பட்ட விதிகளாலும் உப சட்டங்களாலும் இன்னும் பல பிரதேசவாசிகளின் நடக்கைகள் தண்டிக்கத் தகுந்தவைகளெனப்பட்டிருக்கின்றன. லோகல் போர்டுகள் தம் மனப்போக்கின்படி காரியங்களைச் செய்ய முடியாது; அவர்களது பிரதேசங்களது பரிபாலனம் எப்போதும் இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்கு அடங்கியே இருக்கின்றது (செ. 6 (2)). அதிகாரத்தை மீறி அவைகள் நடப்பது நியாய விரோதமாகும். அத்தகைய செயல்கள் போர்டாரால் ஆதரிக்கப்படாது. புதிதாக ஆரம்பிப்பவர்கள் இந்த ஆக்டில் 6-வது செக்‌ஷனை முதலில் பார்த்துவிட்டு பின் அதைச் சார்ந்த வியாக்யானத்தை வாசிக்க வேண்டும். இந்த 6-வது செக்‌ஷன் மெட்ராஸ் லோகல் போர்டுகளின் மூலாதார கொள்கைகளை சுருக்கமாக விஸ்தரிப்பதாகும்.

பொதுவான நடவடிக்கைகள்.

4. இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு லோகல் போர்டும் எந்த பிரதேச விஸ்தீரணத்திற்காக ஏற்பட்டிருக்கிறதோ அதன் பெயராலேயே அறியப்படும், ஒருவருக்குப் பின் ஒருவராய் இடைவிடாமல் வந்துக்கொண்டிருக்கும் மெம்பர்களையுடையதாயும் பொது முத்திரையுடையதாயும், தம் சமுதாயப் பெயரினால் வியாஜ்யம் தொடரவும் தொடரப்பெறவும் சக்தியுடையதாகவும் இருக்கிறது. ஸ்தாவர-ஜங்கம பொருள்களை வசப்படுத்திக்கொள்ளவும் நிர்வகிக்கவும் மாற்றிவிடவும் அதற்கு அதிகாரமுண்டு. அன்னியர்களுடன் ஒப்பந்தம் (கான்டிராக்ட்) செய்துக்கொள்ளவும், எந்த உத்தேசங்களுக்காக அது ஏற்பட்டிருக்கிறதோ அவைகளுக்கு அவசியமான, பொருத்தமான, யுக்தமான எல்லாவற்றையும் செய்துக்கொள்ளவும் கூடும். (செ. 6).

நடவடிக்கைகள் விவரமாக.

5. லோகல் பண்டு (நிதி) களை முக்கியமாக கல்வியை பரப்புதற்காகவும், இந்த உத்தேசத்தோடு, புஸ்தகசாலைகள், வாசகசாலைகள், பாடசாலைகள் (பாடசாலைக் கல்வி, தொழிலாளர் கல்வி, பிரதம—இரண்டாமுறை (எலிமெண்டரி-செக்ண்டரி) கல்வி, இராப்படிப்பு முதலிய ஓய்வுகாலபோதனைகள்) ஆகியவைகளை ஆரம்பித்து நடத்துவதற்காகவும், பாடசாலை கட்டிடங்களை கட்டுவதற்காகவும், மராமத்து செய்வதற்காகவும், பாடசாலைகளை பரீட்சிக்கவும், பாடசாலைகள், ஏழைகளின் விடுதிகள், அனாதை சாலைகள், ஆஸ்பத்திரிகள், டிஸ்பன்செரிகள், கால்நடை சிகித்சா சாலைகள், சத்திரங்கள், பிரயாணிகளின் மாளிகைகள், ஓய்வு விடுதிகள், மார்கெட்டுகள், ஆடுமாடு அடிக்கும் தொட்டிகள், வண்டி தொட்டிகள், ஜலதாரைகள், சாக்கடைக்கால்கள், கக்கூஸ்கள், ஜலசூத்திரங்கள், கிணர்கள் முதலியவைகளைக் கட்டுவதற்காகவும், மராமத்து செய்வதற்காகவும் உபயோகிக்கலாகும். அம்மை குத்துகிறவர்களையும் நர்ஸ்களையும் மருத்துவச்சிகளையும் தயார் செய்யவும் அமர்த்திக் கொள்ளவும் கூடும். ஜன நெருக்கத்தை நீக்கல், வீடுகட்ட இடம் கொடுத்தல், கிராமங்களிலும் நகரங்களிலும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தல் ஆகியவைகளைச் செய்யலாம். சுகாதார சங்கங்கள், ஏழைகளுக்கு உதவும் சபைகள், வியாதியஸ்தர்களுக்கும் அங்கயீனர்களுக்கும் பலயீனர்களுக்கும் சிகிச்சை செய்யும் சங்கங்கள், அவர்களை வைத்து ஆதரிக்கும் சபைகள் ஆகியவைகளின் நிதிகளுக்கு உதவி செய்யலாம். ஆகவே ஆராய்ச்சி சாலைகள், ஆயுர்வேத யூனனி தர்ம வைத்திய சாலைகள், குஷ்டர் விடுதிகள், இளைஞர்களை திருத்தும் சாலை முதலியவைகளுக்கும் லோகல் பண்டிலிருந்து உதவி செய்யலாம். பாதைகள், வாராவதிகள், கல்வெட்டுகள், ரோட் அணைகள், (causeways) வரம்புகள் முதலிய போக்குவரத்துக்கான வசதிகளை உண்டுபண்ணுதல், மராமத்து செய்தல், காப்பாற்றுதல்; பொதுப் பாதைகளின் பக்கங்களிலும் இதர பொது ஸ்தலங்களிலும் மரங்களை நடுதலும், லோகல் போர்டுகளுக்கு சொந்தமான எல்லா மரங்களையும் காப்பாற்றுதலும் அவைகளுக்கவஸ்யமான கட்டிடங்கள், தொழிற்களங்கள் முதலியவைகளை காப்பாற்றுதலும் நேரிடும் செலவுகளைச் செய்தல்; பாதைகள், ஜலதாரைகள், சாக்கடைக் கால்கள், கக்கூஸ்கள், குளங்கள், கிணர்கள் மற்றும் இதுபோன்றவைகளை சுத்தம் செய்தல்; பாக்கியாயிருக்கும் டிக்ரி தொகைகளையும் கடன்களையும் லோகல் போர்ட் சிப்பந்திகளுக்குரிய சம்பளம், அலவென்ஸ், பென்ஷன், கிராட்சுயிடி எனும் உபகார கொடை முதலியவைகளைக் கொடுத்தல்; ஆகியவைகள் லோகல் போர்டுகளின் பிரதான அலுவல்களாகும். ஜனங்களுடைய க்ஷேமம், செல்வம், சுகம், சௌகர்யம் ஆகியவைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய ஊருக்குரிய பொதுப் பிரயோஜனங்களுக்கடுத்த உபாயங்கள் (விவசாய உற்பத்தி தொழில், வியாபார சம்பந்தமானவைகள் உள்பட) ஆகியவைகளுக்காகவும் லோகல் பண்டுகளை செலவழிக்கலாம். ஆதலால் ரயில் பாதைகள், பஸ்கள், கயிர் பாதைகள் ஆகியவைகளைக் காப்பாற்றுதல், செவிடர் ஊமைகள் பாடசாலைகள், (இலவச) புஸ்தகசாலை, (புது

பொது) வாசகசாலைகளுக்கு உதவி செய்தலும் கூடும். பஞ்சாயத்துகளில் சாக்கடைக் கால்களையும் நீர்க்குழாய்களையும் முக்கியமாக ஏற்படுத்தலாம். (செ. 112).

அவைகளின் தொழில் பொறுப்பு ஆகியவைகளின் அளவு.

6. மதராஸ் நகரமும் சென்னை டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகளும் நீங்கலாக சென்னை மாகாண முழுமைக்கும் மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட் செலாவணியாகும் (ஷெட்யூல் டிஸ்ட்ரிக்ட்கள் விஷயங்களில் பிரதேச கவர்ன்மெண்டார் இஷ்டப்படுகிறபடி சில மாறுதல்களோடு செலாவணியாகும்). லோகல் போர்டுகள் (1) டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், (2) தாலூக்கா போர்டுகள், (3) பஞ்சாயத்துகள் என மூன்று வகையாக இருக்கின்றன. மதராஸ் கவர்ன்மெண்டாரால் விதிக்கப்பட்டபடி ஒவ்வொரு ரெவின்யூ டிஸ்ட்ரிக்டுக்கும் ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் இருக்கவேண்டும். அதன் விஸ்தீரணத்திற்கு "டிஸ்ட்ரிக்ட்" எனப் பெயர். ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவுக்கும் சாதாரணமாய் ஒரு தாலூக்கா போர்டிருக்கவேண்டும். ஆனாலும் ஒரு ரெவின்யூ தாலூக்காவுக்கு குறைந்த விஸ்தீரணத்திற்கு அல்லது அதிக விஸ்தீரணத்திற்கு ஒரு தாலூக்கா போர்டு இருக்கலாம். இதன் விஸ்தீரணத்திற்கு "தாலூக்கா" வென்று பெயர். ஒரு ரெவின்யூ கிராமம் அல்லது அதற்கு குறைந்த அல்லது மேற்பட்ட விஸ்தீரணத்திற்கு ஒரு பஞ்சாயத்திருக்கலாம். அதன் விஸ்தீரணத்திற்கு "கிராமம்" என்று பெயர். தம்முடைய பரிபாலனத்தைக் குறித்து பஞ்சாயத்து—தாலூக்கா டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும் பிரதேச கவர்ன்மெண்டுக்கும்; தாலூக்கா போர்ட்—டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் பிரதேச கவர்ன்மெண்டுக்கும்; டிஸ்ட்ரிக்ட் போர்ட்—பிரதேச கவர்ன்மெண்டுக்கு மாத்திரமும் உத்திரவாதமாகும். (செ. 36).

பஞ்சாயத்து, தாலுக்கா, டிஸ்ட்ரிக்ட் போர்டுகளால் பரிபாலனம்.

7. பஞ்சாயத்து கிராம பரிபாலனத்தை கவனிக்கிறது; பஞ்சாயத்து இல்லாத இடங்களில் பஞ்சாயத்தாகவும் தாலூக்கா போர்டாகவும் தாலூக்கா போர்டு பரிபாலனம் செய்கிறது; பஞ்சாயத்தும், தாலூக்கா போர்டும் இல்லாத டிஸ்ட்ரிக்டில் டிஸ்ட்ரிக்ட் போர்டே பஞ்சாயத்தாகவும் தாலூக்கா போர்டாகவும் டிஸ்ட்ரிக்ட் போர்டாகவும் பரிபாலிக்கிறது. இந்த லோகல் போர்டுகள் தமது மெம்பர்கள் அடங்கிய கிரமமாக கூட்டப்பட்ட கூட்டங்களில் தமது சமுதாய பரிபாலனத்தை நடத்துகின்றன; வேறு விதமாக அதை நடத்தக்கூடாது. நிர்வாக காரியங்களும் கடமைகளும் அவைகளின் பிரசிடெண்டுகள், வைஸ்-பிரசிடெண்டுகள், கமிட்டிகள், தனிப்பட்ட மெம்பர்கள் ஆகியவர்களால் நடத்தப்படும். இம்மெம்பர்கள் ஓடர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள் (செ. 6, 21, 26, 28, 30). பரிபாலன ரிபோர்டுகள் பஞ்சாயத்தாரால் தாலூக்கா போர்டுகளுக்கும், தாலூக்கா போர்டுகளால் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும், டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் பிரதேச கவர்ன்மெண்டுக்கும் அனுப்பப்படும். (செ. 36).

பஞ்சாயத்துகளையும் கிராமங்களையும் பற்றிய சில வார்த்தைகள்.

8. 1930ஷ்த்து XI-வது அமெண்டிங் ஆக்டிற்குப் பின்னால்—1920ஷ்த்து XIVவது மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்டின்படி ஏற்பட்ட யூனியன் போர்டுகள் தற்காலம் பஞ்சாயத்துகள் எனவும், யூனியன் பிரதேசங்கள் கிராமங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்ட் ரத்து செய்யப்பட்டுவிட்டது. அந்த ஆக்டின் கீழ் ஏற்படுத்தப்பட்ட எல்லா பஞ்சாயத்துகளும் இந்த ஆக்டின்படி பஞ்சாயத்துகளாக கொண்டுவரப்பட்டிருக்கின்றன. (ரூல் 3, ஷெட்யூல்).

எல்லாம் தேர்தல் தான். நேமக மில்லே. எக்ஸ்-அபிஷியோ யில்லே.

9. 1930ஞுத்து XI-வது அமெண்டிங் ஆக்டின்படி டிஸ்ட்ரிக்ட்-தாலூக்கா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் மெம்பர்களை நியமிப்பது எடுத்துவிடப்பட்டது. தாலூக்கா போர்ட் பிரசிடெண்டுகள் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு உத்தியோக தோரணையில் (எக்ஸ்-அபிஷியோ) மெம்பர்களாவது இனி முடியாது. தாலூக்கா போர்ட் மெம்பர்களிலிருந்து டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு மெம்பர்களை தெரிந்தெடுக்கும் வடிகட்டு முறை விடப்பட்டது. டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு வேண்டிய எல்லா மெம்பர்களும் டிஸ்ட்ரிக்ட் ஓட்டர்களாலும், தாலுக்கா போர்டுகளுக்கு வேண்டிய எல்லா மெம்பர்களும் தாலுக்கா ஓடர்களாலும், பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய எல்லா மெம்பர்களும் கிராம ஓடர்களாலும் முறையே நேராக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (செ. 8).

சர்க்கில்கள், வார்டுகள், மெம்பர்களின் அதிகமும் குறைந்தது மான எண்ணிக்கை.

10. டிஸ்ட்ரிக்ட்—தாலுக்கா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் மெம்பர்களை தேர்ந்தெடுப்பதற்காக, டிஸ்ட்ரிக்ட் எனவும் தாலூக்கா வெனவும் அழைக்கப்படும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூக்கா போர்ட் ஸ்தல விஸ்தீரணங்கள் "சர்க்கில்கள்" எனவும் பஞ்சாயத்து ஸ்தல விஸ்தீரணங்கள் "வார்ட்கள்" எனவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு 52—24, தாலூக்கா போர்டுகளுக்கு 24—12, பஞ்சாயத்துகளுக்கு 18—8 என்பவை முறையே அவைகளில் இருக்கவேண்டிய மெம்பர்களின் அதிக சங்கியையும் குறைந்த எண்ணிக்கையுமாகும். (செ. 7, 47, 48, 49).

தேர்தல் கொள்கைகள், பிரத்தியேக ஸ்தானங்கள்.

11. லோகல் போர்டுகளில் ஒவ்வொரு சர்க்கில் அல்லது வார்டுக்கு ஒவ்வொரு மெம்பரை தேர்ந்து எடுப்பது பொதுவான தேர்தல் கொள்கையாகும். டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில் (1) ஆதி திராவிடர், (2) மகம்மதியர், (3) இந்திய கிருஸ்துவர், (4) பெண்கள், (5) ஐரோப்பியர், (6) ஆங்கிலோ-இந்தியர் ஆகிய குறைந்த ஜன சங்கியை யுடையவர்களுக்கும், தாலூக்கா போர்டுகளில் (1) ஆதி திராவிடர், (2) மகம்மதியர், (3) இந்திய கிருஸ்துவர், (4) பெண்கள் ஆகிய குறைந்த ஜன சங்கியை யுடையவர்களுக்கும், பஞ்சாயத்தில் குறைந்த ஜன சங்கியையுடைய ஆதி திராவிடர்களுக்கும் ஸ்தானங்களை பிரத்தியேகப் படுத்த வேண்டும். அவை, சம்பந்தப்பட்ட லோகல் போர்டுகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது. அவர்கள் எவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது "பிரத்தியேகப்படுத்தப்பட்ட பிரத்தியேகப்படுத்தப்படாத ஸ்தானங்களுக்கு தேர்தல்" எனும் தலைப்பின்கீழ் பூர்த்தியாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. (செ. 47, 48, 49).

ஓடர்ஸ் அல்லது தெரிந்தெடுப்பவர்கள்.

12. 21 வயதிற்கு மேற்பட்ட எல்லா புருஷர்களும் பெண்களும் குறித்த ஸ்தல விஸ்தீரணத்தில் குறைந்தது 120 நாள்கள் வாசம் செய்திருப்பதோடு பின்னால் வருகிறபடி யோக்யதாம்சம் பெற்றிருந்தால் ஓடர்களாயிருப்பதற்கு அருகராவார்கள்: இந்தியா கவர்ன்மெண்டாரால், மதராஸ் கவர்ன்மெண்டாரால், யாதொரு லோகல் போர்ட் முனிசிபாலிடி அல்லது சென்னை மாகாணத்திலுள்ள கண்டோன்மெண்டாரால் வரி விதிக்கப் பெற்றவர்கள்; வீட்டு வரி, தொழில் வரி முதலியவைகளை சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு செலுத்துகிறவர்கள்; ரயத்வாரி பட்டாதாரர்கள் அல்லது இனாம்தாரர்கள்; அவர்களிடமிருந்து குத்தகையின் பேரில் நிலம் வைத்திருப்பவர்கள்; மெட்ராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின்படி நிலத்துக்குரியவர்கள் பயிரிடுபவர்கள்; 1895ஞுத்து மலபார் வாண்ட் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் கீழ் ஒன்றாக ரெஜிஸ்டர் செய்துகொண்டவர்கள்; சைன்யத்திலிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டவர்கள் முதலியவர்கள். இவர்கள் யாவரும் ஓடர்ஸ் அல்லது தெரிந்தெடுப்பவர்களாயிருக்க அருகராவார்கள்.

தமது பெயர்கள் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா அல்லது ஓடர்களின் ஜாபிதாவில் இருக்கிறபரியந்தம் தேர்தலில் ஓட் கொடுக்க இவர்கள் அருகராவார்கள். மேற் கண்ட யோக்யதாம்சம் பெற்றிருப்பதால் ஓடர்களாயிருக்க தகுதியானவர்களாயி னும் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் அவர்களது பெயர்கள் காணப்படா திருந்தால் ஓட்கொடுக்க அவர்கள் அருகராகார்கள். (செ. 52, 53, ஷெ. III).

ஓடர்களாயிருக்க யோக்யதாம்சங்கள்.

13. ஓடர்களாயிருக்கும் விசேஷ உரிமையை பெறுதற்கு அவஸ்யமான யோக்யதாம்சங்கள் மேற்கண்ட பாராவில் பூர்த்தியாக விவ ரிக்கப்பட்டிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் போர்ட், தாலூக்கா போர்ட், பஞ்சாயத்து ஆகியவைகளுக்கு எலெக்டர்களா யிருப்பவர்களின் யோக்யதாம்சங்களில் இப்போது யாதொரு வித்தியாசமுமில்லை. 1930-ம் வருஷத்து அமெண்டிங் ஆக்டுக்கு முன்னிருந்த ஆக்டின்படி ஏற்பட்டிருந்த ஓடர்களின் யோக்யதாம்சங்களிலுள்ள வித்தியாசங்களும், ஓடர்களின் ஜாபிதா வில் பெயர்களை பதிவு செய்வதன் முன்னர் வரிகளை செலுத்தும்படி கட்டாயப் படுத்தலும் விட்டுவிடப்பட்டன. ஓட்டுரிமைகள் இப்போது முன்னைக்காட்டி லும் அநேகருக்கு பரவச் செய்யப்பட்டிருக்கின்றன. நெடுநாள் முன்னுகவே கிராமங்களில் வந்திருக்க வேண்டிய வயது வந்தவர்களின் ஓட்டுரிமையை (ஒவ் வொரு யுக்த வயதடைந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு ஓட் இருக்கவேண்டு மென்பதை) சட்ட சபை இன்னும் கவனிக்காதிருப்பது வருந்தத் தக்கதாகும்; லோகல் போர்டுக்கு ஓட்டராவதற்கு யோக்யதாம்சங்களில் படிப்பையும் சேர்த்துக் கொள்ளாமலுமிருக்கிறது.

அபேட்சகர்கள்.

14. கிராம முனிசிப்புகள் நீங்கலாக எல்லா கவர்ன்மெண்ட் உத்தியோ கஸ்தர்களும் செ. 55-ன்படி அருகதையற்றவரெனப்பட்ட மற்றவர்களும் தவிர மற்ற எல்லா ஓடர்களும் அல்லது எலக்டர்களும் ஓடர்கள் மூலமாக லோகல் போர்டுகளுக்கு மெம்பர்களாக தேர்ந் தெடுப்பதற்கு அபேட்சகர்களாக நிற்க அருகராவார்கள். பெண்களும் அபேட்ச கர்களாக நிற்க அருகராவார்கள்,

ஆக்டின்படி உத்தி யோகஸ்தர்கள்.

15. பழைய ஆக்டின்படி உத்தியோகஸ்தர்கள் லோகல் போர்டுகளைக் குறித்த விஷயங்களைத் தீர்மானிப்பதில் சகல அதிகாரங்க ளுடையவர்களாயிருந்தார்கள். எப்படி யோசித்த போதிலும் அவர்களை ஜனங்களுக்கு பிரதிநிதியாயிருக்கத் தகுந்தவர் களென்று சொல்ல முடியாது. இந்த ஆக்டின்படி அவர்கள் எந்த லோகல் போர்டுகளிலும், அதாவது பஞ்சாயத்து, தாலூக்கா அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டு களில், எலக்டர்களின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட இனிமேல் முடியாது.

கிராம பெருதனக் காரர்.

16. கிராம முனிசிப்புகள் அல்லது பெருதனக்காரர்கள் மற்ற உத்தி யோகஸ்தர்களுக்குள்ள யோக்யதாம்சமின்மையி லிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறுர்கள். அவர்கள் கௌரவ உத்தியோ கஸ்தர்களென வேடிக்கையாக சொல்லப்படுவதால் எல்லா லோகல் போர்டுகளுக்கும் தெரிந்தெடுக்கப்பட அபேட்சகர்களாக நிற்கலாம். பழைய ஆக்டின்படி அவர்களின் உத்தியோக நோத்தியால் யூனியன் போர்டு (தற்போது பஞ்சாயத்தெனப்படுவது) களில் உத்தியோக தோரணை (எக்ஸ் அபிஷியோ) மெம்பராக விருந்தனர். ஆனல் இப்போது அவர்கள் தேர்தலால் வந்தாலல்லாமல் அப்படி இருக்க முடியாது.

பிரத்தியேகப்படுத் தப்பட்டதும் பொது வானதுமான ஸ்தா னங்களுக்கு தேர்தல்.

17. குறிப்பிட்ட சில ஜாதியார்களுக்காக பிரத்தியேகப்படுத்தப்பட்ட ஸ்தானங்களை அந்த ஜாதியிலுள்ள அங்கத்தினர்களே அடைய வேண்டும். மற்ற ஜாதியினரால் அல்ல. சில சர்க்கில்கள் அல்லது வார்டுகள் பிரத்தியேகப்படுத்தப் பட்ட ஸ்தானங்களின் மெம்பர்களுடைய தேர்தலுக்காக வேறுபடுத்திவைக்கப்பட்டு இருக்கின்றன. ஜாதியின் உள் பிரிவு, மதம், ஆண் பெண் ஆகிய பேதங்களை கவனிக்காமல் எல்லா ஓடர்களும்

பிரத்தியேகப்படுத்தப்பட்ட ஸ்தானங்களின் மெம்பர்களை தேர்ந்தெடுப்பதற்கு ஓட்கொடுக்க அருகராவார்கள். அம்மாதிரி வேறுபடுத்தப்பட்ட சர்கில்கள் அல்லது வார்டுகள் அந்தந்த லோகல் போர்டுகளுக்கு ஒன்று அல்லது அதிகமான சாதாரண மெம்பர்களை தேர்ந்தெடுக்கலாம். வேறுபடுத்தப்படாத மற்ற சர்கில்கள் அல்லது வார்டுகள் ஒவ்வொன்றும் பிரத்தியேகப்படுத்தப்படாத ஸ்தானங்களுக்கு ஒரு மெம்பரை தேர்ந்தெடுக்கவேண்டும். பிரத்தியேகப்படுத்தப்பட்ட ஸ்தானங்களுக்குரிய ஜனசமூகத்தின் மெம்பர்கள் பிரத்தியேகப்படுத்தப்படாத ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாக நிற்கலாம்.

மெம்பர்கள்.

18. தேர்தலை நடத்த ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரிட்டர்னிங் ஆபீசர்களிடம் தமது நேமக (நாமிநேஷன்) காகிதங்களை கொடுத்திருக்கும் அபேட்சகர்களிலிருந்தே எல்லா மெம்பர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டும். பிரத்தியேகப்படுத்தப்பட்டதும் பொதுவானதுமான இருவித ஸ்தானங்களிலிருக்கும் மெம்பர்கள் எல்லா ஜாதியினர்க்கும் மதத்தினர்க்கும் ஜன சமூகத்தினர்க்கும் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். ஆதலால் எல்லா மெம்பர்களும், பிரத்தியேகப்படுத்தப்பட்ட ஸ்தானங்களின் மூலமாக வந்தவராயினும் பொதுவான ஸ்தானங்கள் மூலமாக வந்தவராயினும், தமது ஸ்தல விஸ்தீரணத்தில் வசிப்பவர்களின் பொது க்ஷேமத்திற்காக வேலை செய்பவராகவேண்டும்.

மெம்பர்களின் பாத்யதைகள்.

19. மெம்பர்கள் சமயம் வாய்ந்தபோது பிரசிடெண்டுகளையும் வைஸ்-பிரசிடெண்டுகளையும் அதற்காக ஏற்பட்ட மீட்டிங்கில் தம்மிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். லோகல் போர்டுகளின் பரிபாலனத்தைக் குறித்து பிரசிடெண்டுகளின் கவனத்தைச் செலுத்தக் கேட்கவும், பிரசிடெண்டுகளை கேள்வி கேட்கவும், தீர்மானங்களை பிரேரேபிக்கவும் மெம்பர்களுக்கு பாத்யதையுண்டு. பிரசிடெண்டுகள் வைஸ்-பிரசிடெண்டுகள் மீது நம்பிக்கை இல்லை எனும் தீர்மானங்கள் கொண்டு வரவும் அவர்களுக்குக் கூடும்; அப்படிப்பட்ட தீர்மானங்கள் செ. 42-ல் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நிறைவேற்றப்படும்போது அவர்கள் தமது உத்தியோகங்களை காலி செய்யவேண்டும். ஒரு மெம்பர் லோகல் போர்டால் குறிப்பிட்ட ஏதாவது விஷயங்களைக் குறித்து விசாரிக்கவும், ரிபோர்ட் செய்யவும், யோசனை சொல்லவும் லோகல் போர்டால் நியமிக்கப்படலாம். [செ. 28 (1)]. பிரசிடெண்டுகளின் சில அலுவல்களை தனிப்பட்ட மெம்பர்களுக்கு நிர்வகிக்கக் கொடுக்கலாம். (செ. 23).

பிரசிடெண்டுகளும் வைஸ்-பிரசிடெண்டுகளும்.

20. இந்த அமெண்ட்மெண்டுக்கு முன்னிருந்த யூனியன் போர்டுகளுக்கு (அமெண்ட்மெண்டுக்குப் பின்னால் இப்போது பஞ்சாயத்துகள் என்றழைக்கப்படுபவைகளுக்கு) வைஸ்-பிரசிடெண்டுகள் இல்லை. இப்போது எல்லா லோகல் போர்டுகளுக்கும், பஞ்சாயத்துகள் உள்பட, பிரசிடெண்டுகளும் வைஸ்-பிரசிடெண்டுகளும் இருக்க வேண்டும். இவர்களை எப்போதும் மெம்பர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். பிரசிடெண்டுகள் லோகல் போர்டுகளின் கார்ய நிர்வாக அலுவல்களை நடத்திவரவேண்டும். அவர்கள் வராத பொழுது வைஸ்-பிரசிடெண்டுகள் பிரசிடெண்டுகளுக்கு பதிலாக கார்யம் பார்ப்பார்கள். லோகல் போர்டுகள் "நம்பிக்கையில்லா" தீர்மானத்தை நிறைவேற்றுவதாலும், மதராஸ் கவர்ன்மெண்டாலும் உத்யோகத்திலிருந்து விலக்கிவிடப்படுவார்கள்.

மெம்பர்கள், பிரசிடெண்டுகள், வைஸ்-பிரசிடெண்டுகள்

21. இடையில் ஸ்தானங்கள் காலி செய்யப்படுவதும், லோகல் போர்டுகள் கலைக்கப்படுவதும், புதியவைகள் நியமிக்கப்பெறுவதும் நீங்கலாக சாதாரணமாய் நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று வருஷகாலம் மெம்பர்கள் அலுவலில் இருப்பார்கள். சாதாரண தேர்தல்கள் (எலக்ஷன்கள்) மூன்று

இவ்வளவு காலத்திற்கு அலுவல் பார்க்க வேண்டுமென்பது (டெர்ம்.)

வருஷங்களுக்கு ஒரு முறை ஆகஸ்டு—செப்டம்பர் மாதங்களில் நடைபெறும். பஞ்சாயத்துகள் உள்பட்ட இந்த லோகல் போர்டுகள் ஒவ்வொன்றும் ஒரு பிரசிடெண்டையும் ஒரு வைஸ்-பிரசிடெண்டையும் பெற்றிருக்கும்; இவர்கள் முறையே மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இவர்கள் மெம்பர்களாயிருந்து நீங்குகிறவரையில் அல்லது தாமாக தமது உத்தியோகங்களை ராஜிநாமா செய்கிறவரையில் அல்லது தமக்கு விரோதமாக நம்பிக்கை இல்லை எனும் தீர்மானம் நிறைவேறுகிற பரியந்தம் உத்தியோகத்தில் இருப்பார்கள்.

கமிட்டிகள்.

22. லோகல் போர்டுகளால் கொடுக்கப்படும் அதிகாரங்களை நிர்வகிப்பதற்காக கமிட்டிகள் ஏற்படுத்தப்படலாம். பிரசிடெண்ட் அந்தக் கமிட்டியில் ஒரு மெம்பராகவும் அதன் தலைவராக (சேர்மனாக)வும் இருப்பார். விசேஷ யோக்யதாம்சங்களையும் விசேஷ பாத்தியங்களையும் உடைய மெம்பர்களல்லாத இதரர்களையும் கமிட்டிகளுக்கு நியமிக்கலாம். அப்படி அன்னியர்களோடு நியமிக்கப்பட்டவர்களின் சங்கியை கமிட்டியின் மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒன்றுக்கு மேற்படாமலிருக்க வேண்டும். (செ. 28, 30).

கூட்டங்கள் (மீட்டிங்குகள்).

23. லோகல் போர்டுகளின் கூட்டங்கள் கூடியவரையில் அடிக்கடி நடக்கவேண்டும்; அல்லது ஒவ்வொரு மாதத்திற்கும் குறைந்தது ஒரு தடவை பஞ்சாயத்துகளும், இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை தாலூக்கா டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் கூட்டத்தை நடத்தவேண்டும். லோகல் போர்டின் கூட்டத்தை நடத்த அதன் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையில் குறைந்தது மூன்றில் ஒரு பாகத்தினராவது அக்கூட்டத்தில் ஆஜராயிருக்க வேண்டும். இந்த சங்கியை கோரம் எனப்படும். கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள்ளாக கோரம் ஏற்படாவிட்டால் கூட்டத்தை ஒத்தி வைக்கலாம். பஞ்சாயத்து கூட்டங்களைப்பற்றியும் இதர லோகல் போர்ட் கூட்டங்களைப் பற்றியும் முறையே குறைந்தது 3, 7 நாட்கள் முன்னதாகவே நோடீஸ்கள் அனுப்பவேண்டும். கூட்டங்களில் பிரசிடெண்டை கேள்வி கேட்கலாம், தீர்மானங்களை நிறைவேற்றலாம். பிரசிடெண்ட் வைஸ்-பிரசிடெண்ட் உள்பட யாதாவதொரு மெம்பர் தொடர்ச்சியாக மூன்று மாத கால பரியந்தம் அல்லது செ. 56(1) (h)ல் விவரிக்கப்பட்ட காலத்திற்காவது கூட்டங்களுக்கு வராமல் போனால் அவர் மெம்பர் ஸ்தானத்தை காலி செய்தவராவார். ஆனால் அவர் மீண்டும் மெம்பராக நியமிக்கப்படலாம். எலக்ஷன் தேதியிலிருந்து அவருக்கு ஏற்பட்ட காலம் இதனால் அதிகப்படாது. தான் மெம்பராயிருக்கக்கூடிய மொத்த காலத்தில் இவ்விதம் இரண்டு தடவையே மீண்டும் நியமிக்கப்படலாம். (செ. 31, ஷெ. II).

மதராஸ் கவர்ன்மெண்டு.

24. லோகல் போர்டுகளின் சம்பந்தமாக ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றாமல் போவது காரணமாக பிரசிடெண்டுகளை நீக்கிவிட மதராஸ் கவர்ன்மெண்டுக்கு அதிகாரமுண்டு; குழப்பம் முதலியவைகளை உண்டுபண்ணக்கூடிய லோகல் போர்டுகளின் தீர்மானங்களை அவர்கள் ரத்து செய்யலாம். அவசரமான விஷயங்களில் லோகல் போர்டுகளின் காரியங்களை அவர்கள் நிர்வகிக்கலாம். (செ. 38).

டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.

25. கலகம் அல்லது குழப்பம் முதலியவைகளை யுண்டாக்கக்கூடிய தீர்மானங்கள் முதலியவைகளை ரத்து செய்வதில் மதராஸ் கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரங்கள் யாவும் ஒரு டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் உண்டு; ஆனால் அவர் அது விஷயத்தை உடனே மதராஸ் கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டும். பிரசிடெண்ட்,

வைஸ்-பிரசிடெண்ட் முதலியவர்களை, அவர் அலுவலிலிருந்து நீக்கமுடியாது. நிலத்தீர்வையை வசூல் செய்ய அவர் உத்திரவாதியாயிருக்கிறார்; டிஸ்ட்ரிக்ட் போர்டு கூட்டத்தின் நடவடிக்கையைக் குறித்த ரிப்போர்ட்டை கூட்டம் நடந்த தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் பெற்றுக்கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

சொத்துகள்.

26. தாலூக்கா டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் பொதுப் பாதைகள் நீங்கலாக, கிராம எல்லைக்குள் அடங்கிய பொதுப் பாதைகள், கல் கட்டுதளங்கள் (பேவ்மெண்ட்ஸ்), சேகரிக்கப்பட்ட வஸ்துக்கள் நிறைந்த இடங்கள் (ஸ்டோர்ஸ்), பாதைகளுக்குரிய இதர வஸ்துகள் யாவும் பஞ்சாயத்துகளுக்கு உரியன; டிஸ்ட்ரிக்ட் ரோட்டுகளின் இனத்தில் சேராத கிராமத்திற்கு வெளியேயுள்ள பொதுப்பாதைகள் தாலூக்கா போர்டுகளைச் சார்ந்தவை. மற்ற பாதைகள் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்குரியவை. யாதொரு லோகல் போர்டால் சேகரிக்கப்படும் குப்பைகள், சாக்கடைக் கழிவுகள், மலம் முதலியவைகள் அந்த லோகல் போர்டுகளுக்கே உரியன. லோகல் போர்ட்டுகளுக்குரிய கட்டிடங்கள் முதலியன லோகல் போர்டுகளுக்கே உரியவை. தனது எல்லைக்குள்ளிருக்கும் ஒரு லோகல் போர்டின் சொத்துக்களை மற்றொரு லோகல் போர்டுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்ட் மாற்றலாம். தான சம்பந்தமான மான்யங்களை மேற்பார்வைக்காகவும் காப்பாற்றுதற்காகவும் ரெவின்யு போர்டார் லோகல் போர்டுகளுக்கு கொடுத்துவிடலாம். தான சம்பந்தமான இனாம்களினால் வரும் வரும்படியை அந்த தானத்திற்குரிய காரியங்களுக்கே செலவிடவேண்டும் எனும் நிபந்தனை பேரில் அத்தகைய இனாம்களை மதராஸ் கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகளுக்கு மாற்றலாம். லோகல் போர்டுகள் தர்ம பரிபாலனங்களையும் (டிரஸ்டிகளையும்) ஒப்புக்கொள்ளலாம். ஆக்டினால் தமக்கென விதிக்கப்பெறாத ஸ்தாபனங்களையும் தொழில்களையும் மதராஸ் கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகளுக்கு மாற்றுவார்களானால் அவைகளுக்காக ஏற்படும் செலவுகளை மதராஸ் கவர்ன்மெண்டாரே கொடுக்கவேண்டும்.

பொது காரியங்களுக்காக சொத்து சம்பாதிப்பது.

27. லாண்ட் அகுவிஷன் ஆக்டின்படி பொது காரியங்களுக்கு தேவையாயிருக்கும் நிலம், கட்டிடங்கள் முதலியவைகளை அவைகளின் சொந்தக்காரர்களுக்கு உரிய பிரதிபலனைக் கொடுத்துவிட்டு லோகல் போர்டுகள் சம்பாதிக்கலாம்.

சிப்பந்திகள்.

28. பிரசிடெண்ட் புதிதாக உத்தியோகஸ்தர்களையும் சிப்பந்திகளையும் நியமிப்பதன் முன்னாக லோகல் போர்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அவசரமானபோது தானே நியமிக்கலாம். ஆனால் லோகல் போர்டுக்கு அத்தகைய நியமனத்தைப்பற்றி ரிபோர்ட் செய்யவேண்டும். சிப்பந்திகளுக்கு வேண்டிய லீவ் (ரஜாவை) கொடுத்தல், அவர்களை வேலையிலிருந்து நீக்குதல், அபராதம் விதித்தல் முதலியவைகளைச் செய்ய பிரசிடெண்டுக்கு அதிகாரமுண்டு; சிப்பந்திகள் அபீல் செய்துக் கொள்ளவும் கூடும்.

டிஸ்ட்ரிக்ட் இஞ்சினீயர், ஹெல்த் ஆபீசர், பஞ்சாயத்து ஆபீசர்.

29. ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டும் ஒரு டிஸ்ட்ரிக்ட் இஞ்சினீயரையும், ஒரு டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசரையும், ஒரு டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத் ஆபீசரையும் அமர்த்திக்கொள்ளலாம். அவர்களது சம்பளம் டிஸ்ட்ரிக்ட் போர்டால் நிர்ணயிக்கப்பட்டு மதராஸ் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படவேண்டும். டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பாகத்தினரால் ஆதரிக்கப்பெற்ற தீர்மானங்களின் பேரிலும் மதராஸ் கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தின் பேரிலுமே யல்லாமல் மற்றபடி சாதாரணமாக அவர்களை வேலையிலிருந்து நீக்க டிஸ்ட்ரிக்ட் போர்டால் கூடாது.

பண வருமானமும் பட்ஜெட்களும்.

30. லோகல் போர்டுகளுடைய உத்தேசங்களையும் அலுவல்களையும் நிறைவேற்றி வைப்பதற்கு ஒவ்வொரு லோகல் போர்டும் தன் வசத்தில் நிதி (பண்ட்) வைத்திருக்கவேண்டும். இந்த நிதிகளை ஏற்படுத்துதற்காக ஸ்தல வாசிகளுக்கு வரி விதிக்கவும் லைசென்ஸ் கட்டணங்களை ஏற்படுத்தவும் லோகல் போர்டுகளுக்கு அதிகாரமுண்டு. ஒரு லோகல் போர்டு தனக்கு வேண்டிய பண்டை சம்பாதிப்பதற்கேற்ற பல வழிகளும் லோகல் போர்டு தன் பணத்தை செலவிடக்கூடிய பல அலுவல்களும் உத்தேசங்களும் ஷெட்யூல் V-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக லோகல் போர்டுகள் முன்னதாக பட்ஜெட் (வரவு—செலவு திட்டம்) களை தயார் செய்து அவைகளின்படி வசூல் செய்தும் வந்த பணத்தை செலவு செய்தும் வரவேண்டும் (செ. 115 முதல் 119 வரை). பொது ஜனங்களிடமிருந்து கடன் வாங்குவது முடியாது. வேண்டுமானால் மதராஸ் கவர்ன்மெண்டாரிடம் அப்படிப்பட்ட கடனுக்கு மனு செய்துக் கொள்ளலாம்.

லோகல் பண்டு.

31. லோகல் போர்டாரால் வசூல் செய்யப்பட்டு ஏற்படுத்தப்படும் தொகையும் செலவழிக்கப்படுவதும் லோகல் பண்டு எனப்படும். டிஸ்டிரிக்ட் போர்டுகள் தாலூக்கா போர்டுகள் பஞ்சாயத்துகள் ஆகியவைகளின் வசத்திலுள்ள தொகைகள் முறையே டிஸ்ட்ரிக்ட் பண்டு, தாலூக்கா பண்டு, (கிராம) வில்லேஜ் பண்ட் என்றழைக்கப்படும். இவைகள் பூர்த்தியாய் ஷெட்யூல் V-ல் சொல்லப்பட்டிருக்கின்றன.

வரி விதித்தல்.

32. லோகல் போர்டுகளால் விதிக்கக்கூடிய நேர் வரிகள் ஐந்து வகையாகவும் நேரிலாத வரிகள் மூன்று வகையாகவும் இருக்கின்றன. நில வரி, வீட்டு வரி, தொழில் வரி, நீர் வரி, சாக்கடை வரி ஆகிய ஐந்தும் நேர் வரிகளாகும்; க்ஷேத்திர யாத்திரை வரி, பாட்டைகளில் நடக்கும் வண்டிகளுக்காக சுங்கம், எண்டர்டைன்மெண்ட் (பொழுது போக்கு ஸாதனங்களின்மேல்) வரி ஆகிய மூன்றும் நேரிலாத வரிகளாகும்.

நில வரி.

33. 1930௵த்து XI-வது அமெண்டிங் ஆக்டுக்குப் பின்னால், நிலத்தையுடையவர்கள், குடித்தனக்காரர்கள், பயிரிடுபவர் முதலியவர்களிடமிருந்து ஒரே விதமான லாண்ட் செஸ் ரூபாய்க்கு ஒன்றரை அணா வீதம் விதிக்கப்பெற்று லோகல் போர்டுகளுக்காக டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்களால் வசூல் செய்யப்பட்டு லோகல் போர்டுகளின் கணக்குகளில் செல்லு வைக்கப்படுகின்றது. இவ்விதம் ஒரு டிஸ்ட்ரிக்டில் வசூலாகும் வரி விகிதத்தில் டிஸ்ட்ரிக்டு போர்டுக்காக அரையணாவும், தாலூக்கா போர்டுக்காக அரையணாவும், பஞ்சாயத்துக்காக காலணாவும், கிராமாபிவிருத்தி (ரூரல்டெவலப்மெண்ட்) பண்டுக்காக காலணாவும் பங்கிட்டுக்கொடுக்கப்படுகின்றன.

வீட்டு வரி.

34. 1930௵ எப்ரல்௴ 1௳க்கு முன்னால் வீட்டு வரி விதிக்கப் பெற்றிருந்த (1) யூனியன் போர்டுகளாயிருந்த பஞ்சாயத்துகளிலும் (2) மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ஏற்பட்ட பஞ்சாயத்துகளிலும் மாத்திரம் வீட்டு வரி விதிக்கப்பெறும். 1930௵ எப்ரல்௴ 1௳க்கு முன்னால் வீட்டு வரி விதிக்கப் பெறாத புதிதாக வேற்படும் பஞ்சாயத்துகளில் அதை விதிக்கவேண்டுமாயின் பஞ்சாயத்தின் சம்மதத்தையும் மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதியையும் பெறவேண்டும். வீட்டு வரி இப்போது அரை வருஷத்திற்கொருமுறை வசூலிக்கப்படுவதாயிருக்கிறது; வீட்டின் மதிப்பு அல்லது வீட்டில் வரும் குடிக்கூலியின் மதிப்பின் பேரில் கணக்கிட்டு அது விதிக்கப்படுகின்றது. மனித வாசத்திற்கு யோக்கியமான வீடுகளின் பேரிலேயே அது விதிக்கப்பெறும்.

35. 1930ஆம் வருஷத்து ஆக்டின்படி கம்பெனி வரி நீக்கப்பட்டிருக்கிறது; எல்லா கம்பெனிகளின் மீதும் தொழில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதால் வருமான முடையவர்கள், பென்ஷன் பெறுகிறவர்கள், தொழில் செய்பவர்கள், உற்பத்தி தொழில் நடத்துகிறவர்கள் முதலியவர்களோடு கூட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், இதர உத்தியோகம் செய்பவர்களுக்குக்கூட இப்போது தொழில் வரி விதிக்கப்பெறுகிறது. (செ. 93, ஷெ. IV, வி. 9 முதல் 11 வரை).

தொழில் வரி—கம்பெனி வரி.

36. தண்ணீர் குழாய் தொகுதியையும் ஜலதாரைகளேயும் ஏற்படுத்துதற்காக வீட்டு வரியோடு அபிவிருத்தி (இம்ப்ரூவ்மெண்ட்) வரி எனும் ஒரு அதிக வரியையும் கிராமங்களில் மாத்திரம் விதிக்கக்கூடும். கடைசியில் கண்ட இந்த இரண்டு வரிகளும், சுமக்க முடியாதனவாக தோன்றினுலும், ஜாக்ரதையாக விதிக்கப் பெறுமாயின், அதிக செலவோடுங்கூடிய முனிசிபாலிடி எனும் ஏற்பாட்டை தாங்கமுடியாத கிராமங்களின் சுகாதாரம் நூறு மடங்கு அதிகமாக அபிவிருத்தியடையும். (ஷெ. IV, வி. 19).

ஜல வரி, ஜலதாரை வரி.

37. இது நாகரீகமான தேசங்களில் தள்ளப்பட்டு வரும் ஒரு பழைமையான வரியாகும். தற்சமயம் சுங்கமாக செலுத்தும் தொகையைக் காட்டிலும் அதிகமான தொகையை நேர் வரி ரூபமாக லோகல் போர்டுகளுக்கு செலுத்த முடியாதபடி அதிக தளவந்தராக ஜனங்கள் இல்லாததால் இந்த சட்டம் இருப்பது நியாயமேயாகும். சுங்கம் என்பது சூர்யோதய முதல் மறு சூர்யோதயம் வரைக்கும் உள்ள 24 மணி நேரத்திற்கொருமுறை பாதைகளே உபயோகித்துக் கொள்ளுபவர்களுக்கு விதிக்கப்படும் ஒரு விதமான நேரிலாத (இன்டைரக்ட்) வரியாகும். ஒவ்வொரு வண்டி முதலியவைகளுக்கும் ஜந்துக்களுக்கும் செலுத்தவேண்டிய சுங்க கட்டண விகிதத்தைக் காட்டக்கூடிய ஒரு ஜாபிதாவை ஒவ்வொரு டோல் கேட் அல்லது சுங்கவாயில் பெற்றிருக்க வேண்டும். (செ. 104).

சுங்கம்.

38. ஆள் வரியை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதாக பிரசித்தப்படுத்தும்போது சில வாராவதிகளின் மீது பிரயாணம் செய்யும் ஆள்கள் ஒவ்வொருவரின் மீதும் வரி விதிப்பது தகுதியென மதராஸ் கவர்ன்மெண்டார் தீர்மானித்தது துரதிருஷ்டமானதாகும். தேவையான வரித்தொகையை குறிப்பிட்ட அந்த இடத்தில் செலுத்தமுடியாத பிச்சைக்காரர்களும், சன்னியாசிகளும், ஏழைகளும், பணமில்லாது நடந்து செல்பவர்களும், வாராவதிகளின் மீது போகிறவர்களாக இருக்கலாம். சுங்க வாயில்களில் ஜன சஞ்சாரத்தை தடுப்பது இல்லாதது போலல்லாமல் ஆள் வரி அனுஷ்டானத்திலிருக்கும்போது காசு செலுத்த முடியாதது காரணமாக ஜனங்களே மேல் நடக்கமுடியாதபடி தடுக்கலாம்.

வாராவதிகளண்டை ஆள் வரி.

39. மதராஸ் கவர்ன்மெண்ட் இந்தியா கவர்ன்மெண்ட் ஆகியவைகளின் அனுமதியை பெற்றுக்கொண்டு காலங்தோறும் அல்லது வருஷ முழுமையிலும் இந்த வரியை விதிக்கக்கூடும். ஒரு குறித்த தூரத்திற்கப்புரம் செல்லும் ரயில்வே பிரயாணிகளிடமிருந்து மாத்திரம் யாத்திரைக் குரிய ஸ்தலமிருக்கும் இடத்தில் இந்த வரி வசூலிக்கப்படும். (செ. 76, 110).

யாத்திரைக்காரர்களுக்கு வரி.

40. மதராஸ் லோகல் அதாரடீஸ் என்டர்டெயின்மெண்டு டாக்ஸ் ஆக்டின்படி மதராஸ் கவர்ன்மெண்டாரால் இந்த ஆக்டை அமுலுக்கு கொண்டுவந்த ஸ்தலவிஸ்தீரணங்களில் பொழுதுபோக்கிற்காக நடைபெறும் நாடகங்கள், சினிமா காட்சிகள், காலட்சேபங்கள், பாட்டுக் கச்சேரிகள் முதலியவைகளுக்கு ஜனங்கள் கட்டணப் பணம் செலுத்திச் செல்லுவார்களானல்

என்டர்டெயின்மெண்ட் (பொழுதுபோக்கு சாதனங்களின் மீது) வரி.

அத்தகைய சாதனங்களின்மீது லோகல் போர்டுகள் அந்த ஆக்டின்படி தமது கூட்டங்களில் தீர்மானித்ததன்பின் இந்த வரி விதிக்கத்தகும்.

திரவியச் சகாயங்கள்.

41. லோகல் போர்டுகளுக்கு பரிபாலன காரியங்களுக்காக மதராஸ் கவர்ன்மெண்டார் உதவும் தொகையானது ஸப்சிடீஸ் (திரவிய சகாயங்கள்) எனப்படும். அவை தொடர்ந்து வருபவை (ரிகரிங்) அம்மாதிரி ஸ்திரமில்லாதவை (நான்-ரிகரிங்) யாக இருக்கலாம். ஆக்டில் லோகல் போர்டுகளுக்கு உதவக்கூடிய ரிகரிங் சப்சிடீஸ் அவர்களுக்கு வரும் இதர தொகையில் இவ்வளவுக்கு இவ்வளவென குறிக்கப்பட்டிருக்கலாம். அப்போது இவ்வளவு தொகை சகாயமாக கிடைக்குமென நிச்சயம் கொண்டிருக்க முடியும். நான்-ரிகரிங் ஸப்சிடீஸ் சம்பந்தப்பட்டவரையில் அவைகள் உதவப்படுவது மதராஸ் கவர்ன்மெண்டின் இஷ்டத்தைப் பொருத்தது.

கலால் (கள்ளு-சாராய வகையாரவில்) வருமானம்.

42. சாராயம்-கள்ளுக்கடைகளின் விற்பனையால் மதராஸ் கவர்மெண்டுக்கு வரும் வரும்படி கலால் வருமானம் எனப்படும். மதராஸ் கவர்ன்மெண்ட் இதில் ஒரு பாகத்தை லோகல் போர்டுகளுக்கு கொடுக்கலாம். தற்காலம் உலக முழுமையிலும் குடிப்பழக்கத்தை ஒழித்துவிட முயற்சி யிருந்து வருகிறது. சில நாகரீக தேசங்கள் அதை ஒழித்துவிட்டன. ஸ்தல ஜனங்களின் மனப்போக்கின்படி இந்த வருமானம் அதிகப்படுவதும் குறைவதுமா யிருக்குமாதலால் லோகல் போர்டுகள் இந்த வருமானத்தை நம்பியிருக்க வேண்டாம். லோகல் போர்டுகள் இதுமாதிரி வருமானங்களை நம்பியிருக்க வேண்டுமானால் கள் முதலியவைகள் செலவாகும் அளவு குறையாதிருக்கவும் அல்லது அதிகப்படவும் பார்க்க வேண்டி வரும், ஒருபோதும் அதைக் குறைக்க மனம் வராது. இவைகள் புகழத் தகுந்த கார்யங்கள் அல்லவாகையால் லோகல் போர்டுகள் இவைகளை துணிந்து செய்யா.

இதர வருமானங்கள்.

43. வரிகள், சுங்கங்கள், திரவிய சகாயங்கள், கலால் வருமானம் ஆகிய வருமானங்கள் தவிர லோகல் போர்டுகளுக்கு பின் வரும் வருமானங்களுமுண்டு: லைசென்ஸ் பீஸ், பிரயாணிகளின் பங்களாக்களின் கட்டணங்கள் (ஏதாவது இருந்தால்), பாடசாலைகளில் மாணவர் கட்டணங்கள், பாடசாலைகளுக்காக வரும் சகாயத்தொகைகள், தான பொருளால் வருமானம், கவர்ன்மெண்டு, இதர லோகல் போர்டுகள், முனிசிபாலிடிகள், இதர ஸ்தல அதிகாரிகள், இதர பொது மனிதர்கள் முதலியவர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடைகள், ஆக்டின்படி விதிக்கப்படும் அபராதங்களும் தண்டனைத் தொகைகளும், பெருக்கிச் சேர்க்கும் குப்பைகள், கருவிகளும் தளவாடங்களும் பழைய சாமான்களும் வஸ்துக்களும், மரங்கள் சாலை மரங்கள் ஆகியவைகளின் உற்பத்தி இவைகளின் விற்றுமுதல், கட்டிடங்கள், நிலங்கள், இதர சொத்துகள் ஆகியவைகளிலிருந்தும் இவைகளை விற்பனை செய்வதாலும் வரும் வருமானங்கள், மீன்களின் மூலமான வருமானம், ஓடத்துறை வருமானம், ரயில்வேக்கள் டிராம்வேக்கள் கயிர்ப்பாதைகள் மோடார் பஸ்கள் மனிதர்களையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு போகும் இதர சாதனங்கள், கடன்களின் பத்திரங்களின் மீது கிடைக்கும் வட்டி, தீர்வை பாக்கிக்கு வட்டி, லோகல் போர்டு பென்ஷன்களுக்காக வரும் சகாயத்தொகை, உரியவர்களால் கேட்கப்படாத டிபாசிட் தொகைகளும் பறிமுதல் தொகைகளும், லோகல் போர்டுகள் பொது ஜன நன்மைக்கான முக்கியமான வேலைகளை ஊர் ஜனங்களில் தாராள நோக்கங்களை யுடையவர்களுக்கு இதமாக எடுத்தோதி அவர்களைக் கொண்டு அத்தகைய கார்யங்களை சாதித்துக் கொள்ளலாம். இவையல்லாமல் மார்க்கெட்டுகள், வண்டி தொட்டிகள், ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகள் ஆகியவைகளிலிருந்து கட்டணங்களும், கிராம நத்தங்கள், பாட்டை

கள், புதைக்கும் காடுகள், சுடுகாடுகள் முதலியவைகளில் தாற்காலிகமாக அனுபவிப்பதற்கு கட்டணங்கள் ஆகியவைகளையும் லோகல் போர்டுகள் பெறலாம்.

செலவுகள்.

44. லோகல் போர்டுகள் தமக்கென ஏற்பட்டிருக்கும் அலுவலுக்காக பொதுவாகவும் மேல் சொல்லப்பட்ட காரியங்களுக்காக முக்கியமாகவும் பணத்தை செலவழிக்கலாம். தொத்து வியாதிகளை தடுப்பதற்காகவும் அது சம்பந்தமான சிகிச்சைகள் செய்யவும் பணச்செலவு செய்யலாம், தேவையானபோது முனிசிபல் முதலிய ஸ்தாபனங்களுக்கும் திரவிய சகாயம் செய்யலாம். இன்னும் செய்யக்கூடிய இதர செலவுகளைப்பற்றி V-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

உபசார பத்திரங்களும் (அட்ரெசஸ்) சடங்குகளும்.

45. பொது நன்மைக்காக பாடுபடுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபசார பத்திரம் படித்துக்கொடுக்கலாம். ஆனல் அது சம்பந்தமான செலவுகள் மதராஸ் கவர்ன்மெண்டால் அனுமதிக்கபடவேண்டும். அல்லாவிடில் லோகல் போர்டுகளின் மெம்பர்களே அந்த செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தாலூக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளும், அவைகளின் தொழில்களும்.

46. பழைய ஆக்டின்படி தாலூக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளும் அனுபவித்து வந்ததைவிட இந்த ஆக்டின் கீழ் அவைகள் அதிக சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றன. இப்போது அவைகள் தமக்குச் சொந்தமான பண்டு (நிதி) களைப் பெற்றிருக்கின்றன; அதற்கேற்றாப்போல் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் ஆலோசனை ரூபமான உதவியில்லாமல் அநேக விதத்தில் இந்த போர்டுகளின் பரிபாலனத்தை நடத்தற்கேற்ற பொறுப்புகளையும் பெற்றிருக்கிறார்கள். லாண்ட் செஸ்ஸிலிருந்து ஒரு பாகம் தாலூக்கா போர்டுகளுக்கும் ஒரு பாகம் பஞ்சாயத்துகளுக்கும் பிரத்தியேகப்பட்டிருக்கின்றன. முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது அவைகள் மிக ஸ்திரப்பாடுடையனவா யிருக்கின்றன. தாலூக்கா பண்டு கிராம பண்டு எனும் சொந்த நிதிகளை அவைகள் பெற்றிருக்கின்றமையால் செல்வாக்கில் சக்தியுடையவைகளாய் அபிவிருத்தி யடைகின்றன.

கவர்ன்மெண்ட் டிரெஷரிகளும் பாங்கிகளும்.

47. சாதாரணமாய் லோகல் பண்டுகளை (நிதிகளை) கவர்ன்மெண்ட் டிரெஷரிகளிலேயே சேர்த்துவைக்க வேண்டும். லோகல் போர்டுகள் தமது பணத்தை பாங்கியில் சேர்த்து வைக்க இஷ்டப்பட்டால் தமக்கு மேலான அதிகாரியாயிருக்கும் போர்டு முதலியவைகளின் உத்திரவின் பேரில் அவ்விதம் செய்யலாம். அதாவது யூனியன் போர்டுகள் தாலூக்கா போர்டின் அனுமதியின் பேரிலும், தாலூக்கா போர்டுகளும் டிஸ்டிரிக்ட் போர்டுகளும் மதறாஸ் கவர்ன்மெண்டின் அனுமதியின்பேரிலும் பாங்கியில் பணத்தை சேர்த்து வைக்கலாம். பிரத்தியேகமாய் அனுமதிக்கப்பட்டிருந்தாலல்லாமல் சாதாரணமாக டிரெஷரியிலிருந்தும் பாங்கியிலிருந்தும் உத்திரவில்லாமலும் பிரசிடெண்டின் செக்கில்லாமலும் மதராஸ் கவர்ன்மெண்டுக்குக்கூட பணம் கொடுக்கக்கூடாது. ஆனல் மதராஸ் கவர்ன்மெண்டும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரும் சில விஷயங்களில் லோகல் போர்டுகளை அடக்கியாள்வதில் விசேஷ அதிகாரங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

பொது ஜன சௌக்யம்.

48. கிணர்களை குளங்களை தோண்டலாம் (வெட்டலாம்), பிரத்தியேகப்படுத்திவைக்கலாம், சுத்தி செய்யலாம். சௌக்கியத்திற்குப் பாதகமாயிருந்தால் கிணர்கள், குளங்கள், குட்டைகள், சிறு குட்டைகள், வடிகால்கள், சகதிகள், சதுப்பு நிலங்கள், கல் வெட்டுக் குழிகள், ஜலதாரைகள், சாக்கடைக் குழிகள், குழிகள், நீர்க்கால்கள், நீர் நிலைகள் முதலியவைகளை நிறப்பலாம், அவைகளை மராமத்து செய்யலாம். குப்பை வாருவது (எடுப்பது) மலத்தை அப்புறப்படுத்துவது முதலிய

காரியங்களைச் செய்யலாம். அபாயகரமான வியாதியஸ்தர்களை நடமாட்டத்திலிருந்து தடுக்கலாம், பெரிய அம்மை கண்டிருந்தால் அதை உடனே கிராம தலைவருக்கு அல்லது பிரசிடெண்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டும். ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளை யனுசரித்து அம்மை குத்துதலை கட்டாயப்படுத்தலாம். தனிப்பட்ட நபர்களுக்குரியதும் பொது ஜனங்களுக்குரியதுமான எல்லா சுடுகாடுகளும் புதைக்குமிடங்களும் பதிவு (ரெஜிஸ்டர்) செய்யப்படவேண்டும். இந்த ஒவ்வொரு இடத்திலும் எச்சரிக்கை செய்யக்கூடிய போர்டு (பலகை)கள் வைக்கவேண்டும். வேறு இடங்களில் சவங்களை அடக்கம் செய்வதாவது தகனம் செய்வதாவது கூடாது.

அபாயகரமான கட்டுக்கோப்புகள் முதலியன.

49. மிகப் பழமையாயிருப்பது காரணமாக அபாயகரமானதென கருதப்படும் கட்டுக்கோப்புகளை எடுத்துவிடும்படியாவது மராமத்து செய்யவாவது பிரசிடெண்ட் உத்திரவிடலாம், அப்படி நடவாத பட்சத்தில் பிரசிடெண்டே அந்த காரியங்களைச் செய்யலாம். பொது ஜன க்ஷேமத்திற்கு பாதகமாயிருப்பதும் பொது பாட்டைகளின்மீது சாய்ந்து அல்லது தொங்கிக்கொண்டிருக்கும் கட்டிடங்களுக்கு வேலி போடுதல், வேலிகளின் அல்லது மரங்களின் கிளைகளை வெட்டி விடுவது முதலியவைகளைச் செய்யலாம். மலத்தை, தீமையுண்டாக்கக் கூடிய காகதாளி (சப்பாத்தி) முதலிய சிற்சில செடிகளை அப்புறப்படுத்தலாம். குளம், கிணறு முதலியவைகளில் ஏதாவதொன்றுக்கு மராமத்து, சுற்றுச்சுவர், வேலி முதலியது தேவையிருந்தால் அதனால் நேரும் ஆபத்தை விலக்குவதற்காக பிரசிடெண்டு அவைகளை நிறப்புவது, அப்புறப்படுத்துவது, வேலி முதலியவைகளால் காப்பாற்றுவது முதலியவைகளைச் செய்ய சொந்தக்காரருக்கு உத்திரவிடலாம். இந்த அதிகாரங்களை கிராமங்களில் பஞ்சாயத்து பிரசிடெண்டுகளும் கிராம பஞ்சாயத்திற்கு புறம்பான பிரதேசத்தில் தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளும் கையாளலாம். ஆதரவில்லாத நாய்களையும் பன்றிகளையும் அடித்துவிடலாம். (செ. 147 முதல் 152 வரை, 154).

பொதுப் பாட்டைகளும் சொந்த பாட்டைகளும்.

50. சொந்த பாட்டைகள் பொதுப்பாட்டைகள் என இருவித பாட்டைகள் இருக்கின்றன. [செ. 3 (17), (18)]. இந்த ஆக்ட் பொதுப்பாட்டைகளைப்பற்றியே பிரஸ்தாபிக்கிறது; தனி நபர்களின் சொந்த பாட்டைகளில் என்ன நேரிட்டாலும் லோகல் போர்டுகள் எந்த முகாந்தரத்தைக்கொண்டும் தலையிட (சம்பந்தப்பட) அதிகாரமில்லை. தனி நபர்களுக்கு தங்கள் சொந்த பாட்டைகளில் இருக்கும் அதிகாரத்தைவிட லோகல் போர்டுகளுக்கு பொதுப் பாட்டைகளில் விசேஷ அதிகாரமுண்டு. பொதுப்பாட்டைகள் தமக்கே உரியதென்று எதிரிடையாக வாதிக்க முடியாது. (செ. 159.)

கல் வெட்டி யெடுப்பது முதலியவை.

51. பொதுப்பாட்டைகளிலிருந்து 20 கஜ தூரத்திற்குள்ளடங்கிய நிலத்திலிருந்து மண் கல் முதலிய வஸ்துக்களை லோகல் போர்டின் லைசென்ஸ் இல்லாமல் அப்புறப்படுத்தக்கூடாது. கல் மண் முதலியவைகளை வெட்டியெடுப்பதனால் அண்டையிலிருக்கும் ஜனங்களுக்கு அபாயம் உண்டாவதாக இருந்தால் அந்த வேலையை நிறுத்திவிடும்படி சொந்தக்காரருக்கு லோகல் போர்டார் உத்திரவிடலாம். (செ. 151).

தடங்கல்களும் ஆக்ரமிப்புகளும்.

52. பொதுப் பாதையில் அடைப்புகள் எதையும் வைக்கக்கூடாது. பொதுப் பாட்டையில் கதவு, கிராதிக்கதவு முதலியவைகள் திறக்கக்கூடாது. பிரசிடெண்டிடமிருந்து முன்னதாக உத்திரவு பெற்றுக்கொள்ளலாம். பொதுப் பாட்டையில் குழி தோண்டுதல் பந்தல் போடுதல் கட்டிடம் கட்டுதல் முதலியவை கூடாது. ஆக்ரமிப்பு

களை எடுத்துவிடும்படி உத்திரவிடலாம். ஆனாலும் லோகல் போர்டுகள் சில விஷயங்களில் தாழ்வாரங்கள், பால்கனிகள் (சந்திரிகா மேடைகள்), வெயில் மறைப்புகள் (சன்ஷேட்ஸ்), காத்து, மழை, பனி, வெய்யில் முதலியவைகளுக்கு வேண்டிய பந்தல்கள் முதலியவைகள் போட்டுக்கொள்ளும்படி சிலருக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்ட குத்தகையி (லீசு)ன் பேரிலும் அனுமதிக்கலாம். அனுமதியில்லாத ஆக்ரமிப்புகளுக்கு நஷ்டங்கட்டி வாங்கலாம், அபராதம் போடலாம். தடங்கல் அல்லது ஆக்ரமிப்பு மூன்று மாதங்களுக்குள்ளாக ஏற்பட்டிருந்தால் அக்குற்றம் செய்தவருக்கு நோட்டீஸ் கொடுக்காமலே அவர்மீது வியாஜ்யம் தொடரலாம். அது மூன்று மாதங்களுக்கு முன்பாகவே ஏற்பட்டிருந்தால் (1930ஞூ த்து ஆக்டின்படி தேவையாயிருந்த லோகல் போர்டின் அங்கீகாரம் இல்லாமலே) பிரசிடெண்ட் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அதை விலக்கிவிடும்படி நோட்டீஸ் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் அதை அப்புறப்படுத்தாவிட்டால் அந்தக் கால முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக வியாஜ்யம் தொடர்தல் ஆரம்பிக்கவேண்டும். அப்படி அந்த மூன்று மாத காலத்திற்குள் வியாஜ்யம் தொடர்தலில் தவறிவிட்டால் அதன் பின் வியாஜ்யம் தொடர்தல் நியாய விரோதமாகும். இந்த கஷ்டத்திலிருந்து மீள்வதற்காக குற்றம் செய்தவருக்கு புதியதாக ஒரு நோட்டீஸ் கொடுத்து அதில் கண்ட காலத்திற்குள் அது அப்புறப்படுத்தாவிட்டால் பின் நோட்டீஸில் கண்ட காலமுடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வியாஜ்யம் தொடரலாம். பொதுப்பாட்டைகள் லோகல் போர்டுகளுக்கு சொந்தமானதென எதிர்வாதம் புரிவது அனுகூலப்படாது. (செ. 157 முதல் 164 வரை).

விசேஷப் போக்குவாத்துகள்.

53. ஓரளவுக்கு மிஞ்சி பொதுப் பாட்டைகளை உபயோகிக்கக்கூடாது. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்ட் எக்ஸக்யூடிவ் இஞ்சினியர் அவைகள் அவ்விதம் உபயோகிக்கப்பட்டதாக உறுதி கூறினால், உபயோகித்தவர் சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு நஷ்ட ஈடுத்தொகை கொடுக்கவேண்டும்.

பொதுப்பாட்டைகளில் மோடார் பஸ்கள் முதலியவைகளை நடத்துவது.

54. 1930ஞூ த்து XI-வது அமெண்டிங் ஆக்டிற்கு முன்னால் இருந்ததைவிட இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் பிரசிடெண்டுகளுக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமெண்ட்மெண்டுக்கு முன்னால் மோடார் பஸ்கள் முதலியவைகளை அவைகளின் சொந்தக்காரர்கள் வாடகைக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிக்கும் மற்றொரு டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிக்கும் இடையில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் பாதைகளில் எவ்வித லைசென்ஸும் பெறாமல் ஓட்டிக்கொண்டிருந்தனர். இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரசிடெண்டுகளிடமிருந்து லைசென்ஸ் பெற்றே தீரவேண்டும். (செ. 166). மற்ற விவரங்களுக்கு கீழ்வரும் "லைசென்ஸுகள்" என்பதைப் பார்க்க. (பாரா. 61).

மார்கெட்டுகளும் வண்டி தொட்டிகளும்.

55. அவஸ்யமான நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பதில் திருப்தி ஏற்படாத பட்சத்தில் மார்கெட்டுகளுக்கும் வண்டி தொட்டிகளுக்கும் லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. இவ்விரண்டும் சுத்தமாக வைக்கப்படவேண்டும். தரைகள் எளிதாக உளரக்கூடாததாக இருக்கவேண்டும். நுழை வாயில்கள் (பிரவேசிக்கும் வழிகள்) அகண்டிருக்கவேண்டும்; இதர விவரங்கள் லோகல் போர்டுகளின் விஷய அகராதி (Analysis)ல் "மார்கெட்டுகள், வண்டி தொட்டிகள்" எனும் தலைப்புகளின் கீழ் காணலாகும். தனிப்பட்ட நபர்களின் மார்கெட்டுகளுக்கும் வண்டி தொட்டிகளுக்கும் கொடுக்கப்படும் லைசென்ஸுகளுக்காக விதிக்கப்படும் கட்டணம் அவைகளின் வருமானத்தில் 100க்கு 15 வீதத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். லைசென்ஸ் பெறாதவைகள் உபயோகிக்கப்படக்கூடாது.

ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகள்.

56. லோகல் போர்டுகள் ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகளைக் கட்டலாம், அவைகளுக்கு வெளியே ஜந்துக்களை அடிக்கக் கூடாதென உத்திரவிடலாம். கவர்ன்மெண்டாரின் உபயோகத்திலிருக்கும் இடங்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது. விற்பனைக்காகவல்லாமல் மத சம்பந்தமான உபயோகத்திற்காவது சொந்த உபயோகத்திற்காவது ஜந்துக்களை அடிப்பதற்கு லைசென்ஸ் வேண்டியதில்லை. திருவிழாக் காலங்களில் ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகளுக்கு வெளியே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு பிரசித்தப்படுத்தி அந்த இடத்திலே ஜந்துக்களை அடிக்கும்படி பிரசிடெண்ட் செய்யலாம்.

தொழில்களும் தொழிற்சாலைகளும்.

57. ஷெட்யூல் VII-ல் குறிப்பிட்டிருக்கும் தொழிற்சாலைகளை அல்லது மின்சார சக்தி அல்லது இதர யந்திர சக்தி (மெஷின்-பவர்)யைக் கொண்டு நடைபெறும் தொழிற்சாலைகளை கிராம பஞ்சாயத்துகளிலாவது கிராம பஞ்சாயத்துகளல்லாதவைகளிலாவது ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் பிரசிடெண்டுகளின் அனுமதிகள் அல்லது லைசென்சுகள் அவசியம் வேண்டும். மற்றபடி அவைகளை ஏற்படுத்தக்கூடாது. லைசென்ஸ் அல்லது அனுமதியில்லாமல் அவைகளை ஏற்படுத்துகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள். லைசென்சுக்காகவாவது உத்திரவுக்காகவாவது மனு செய்துகொண்ட நாள் முதல் மூன்று மாதங்களுக்குள்ளாக லோகல் போர்டுகள் அனுமதி யல்லது லைசென்ஸை கொடுக்காவிட்டால் அவைகளை கொடுக்கப்பட்டதாகவே பாவித்துக் கொள்ளலாம். கிராமவாசிகளுக்கு பழக்க வழக்கத்திலிராத லைசென்சுகளுக்கு மனு செய்துக்கொண்டிருப்பது சந்தேகமில்லாமல் ஒரு கஷ்டமான காரியமே. பெரிய உற்பத்தித் தொழில் முதலியவைகளுக்கும் வருஷப் பிரதி வருஷம் லைசென்சுகளைப் பெறுவது அத்யாவசியமாகும். (செ. 193, 194). மற்ற விவரங்களுக்கு கீழ்வரும் "லைசென்சுகள்" என்பதைப் பார்க்க. (பாரா. 61).

சோதனை.

58. பிரசிடெண்டுகள், அவர்களால் நியமிக்கப்பெற்றவர்கள், அவர்களுக்கு உதவிகள், அவர்களின் சிப்பந்திகள் முதலியவர்கள் லைசென்ஸ் பெற்ற எந்த கட்டிடம் அல்லது தொழிற்சாலையில் தொழில் நடைபெறும் எந்த சமயத்திலும் பிரவேசிக்கலாம்; லைசென்சு பெறாமல் தொழில் நடைபெறும் அத்தகைய இடங்களிலும் பிரவேசிக்கலாம். ஆறு மணி நேர நோடீஸ் கொடுத்து சாதாரண வீடுகளிலும் பிரசிடெண்டுகள் பிரவேசிக்கலாம். அவர்களை தடுப்பது குற்றமாகும்.

நிறுத்தல் முகத்தல் அளவு கருவிகள்.

59. இந்தியன் பெனல் கோட்டில் கண்டுள்ள குற்றங்கள் நேரிடாதபடி தடுப்பதற்காக பிரசிடெண்ட் நிறுத்தல் அளவு கருவிகளையும் முகத்தல் அளவு கருவிகளையும் பரீட்சிக்கலாம். மேற்கண்ட குற்றம் செய்தவர்களை மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு கொண்டுபோகலாம்.

பப்ளிக் ரிசார்ட்ஸ் ஆக்ட்.

60. இந்த ஆக்டை அனுசரித்த நாடகம் கச்சேரி முதலியவைகள் எந்த யூனியன் பிரதேசத்திலாவது நடக்கவேண்டுமானால் அதற்கு யூனியன் போர்ட் பிரசிடெண்டின் உத்திரவே போதும், போலீசார் முதலியவர்களின் அனுமதியை பெற வேண்டியதில்லை.

லைசென்சும் அனுமதியும்—பொதுவாக.

61. லைசென்சுகளும் அனுமதிகளும் எழுதப்பெற்று பிரசிடெண்டுகளின் கையெழுத்தைப் பெற்றிருக்கவேண்டும். லைசென்சுகளை அல்லது அனுமதிகளைப் பெறவேண்டிய செய்கைகள் அல்லது விஷயங்கள் அவைகள் இல்லாமல் நடக்கக்கூடாது. அப்படி நடந்தால் அது குற்றமாகும். லோகல் போர்டுகளால் லைசென்ஸ் கட்ட

ணங்கள் ஏற்றுக்கொள்ளப் பெற்றதனாலேயே அதை செலுத்தியவர் லைசென்ஸ் அல்லது அனுமதியைப் பெற உரியவராகமாட்டார். லைசென்ஸ் அல்லது அனுமதியை புதுப்பித்துக்கொள்ள மனு செய்துகொண்டவர்கள் முன் லைசென்சுக்குரிய காலம் முடிவாவதற்கு முன்னாக அதற்குரிய லைசென்ஸ் கட்டணங்களை செலுத்துவதே போதுமானது, செலுத்திய பின் லைசென்ஸ் அல்லது அனுமதியைப் பெறுகிறவரையில் தமது தொழிலை நடத்திக்கொண்டு போகலாம். லைசென்ஸ் அல்லது அனுமதி மறுக்கப்பட்டால் அவர்கள் தமது வியாபாரத்தை அல்லது தொழிலை தொடர்ந்து நடத்தக்கூடாது. புதிதாக தொழிலை ஆரம்பிப்பவர்கள் லைசென்ஸை பெற்றுக்கொண்ட பிறகே தொழிலை யாரம்பிக்கவேண்டும். லைசென்சுகளை இஷ்டப்படி கொடுக்க மறுக்கக்கூடாது. இந்த ஆக்டில் குறிப்பிட்ட காரணங்களுக்காக வல்லாமல் இதர காரணங்களுக்காக நியாயமில்லாமல் அவைகள் மறுக்கப்பட்டால் சிவில் கோர்டுகள் அவைகளில் சம்பந்தப்படலாம். லைசென்ஸ் கட்டணங்கள் வரியல்ல; அது நேரிட்ட செலவுகளுக்கு ஏற்றபடி இருக்கவேண்டும். (செ. 212).

62. அபீல்கள். பிரசிடெண்டு லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிட்டாலும், விதிக்கப்பட்ட வீட்டு வரி மிக அதிகமாக இருந்தாலும், இன்னும் அனேக இதர விஷயங்களிலும், உத்திரவு முதலியவை பிறந்த 30 நாட்களுக்குள் அபீல் செய்துகொள்ளலாம். லைசென்சுகளுக்கும் இதர சில தஸ்தாவேஜ்களுக்கும் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் காலம் மேற்படி 30 நாட்களில் கணக்கிடப்படமாட்டாது.

63. விதிகளும் உப-சட்டங்களும். விதிகள் மதராஸ் கவர்ன்மெண்டாலும் உப-சட்டங்கள் லோகல் போர்டுகளாலும் ஏற்படுத்தப்படுகின்றன. விதிகள் லோகல் போர்டுகளை அனுசரித்தவை; உப-சட்டங்கள் லோகல் போர்டுகளின் அதிகார எல்லைக்குள்ளடங்கிய குறிப்பிட்ட ஸ்தல விஸ்தீரணங்களை அனுசரித்திருக்கும். விதிகளும் உப-சட்டங்களும் லாவைப்போல செல்லுபடியாகக் கூடியது, அவைகளை மீறி நடப்பது குற்றமாகும்.

64. தண்டனைகளும் வியாஜ்யம் தொடர்தலும். "தண்டனை" களுக்காக செ. 207யும், "வியாஜ்யம் தொடர்த" லுக்காக செ. 223யும் பார்க்க. இவ்விஷயங்களைக் குறித்த எல்லாவற்றையும் அவைகள் முறையே விவரிக்கின்றன. இந்த ஆக்டின்படி குற்றங்களைப்பற்றிய தீர்ந்த ஞானம் இருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. இந்த ஸ்வஸ்தல அல்லது முனிசிபல் குற்றங்கள் தீமையுண்டாக்கும் (கிரிமினல்) குற்றங்கள் ஆகமாட்டா. வியாஜ்யம் தொடரும்போது சம்மன்ஸ் விஷயமான முறையே அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆக்டின்படி வியாஜ்யம் தொடர்தல் யாவும் குற்றம் நடந்த அல்லது கிரமம் தவறிய தேதிமுதல் மூன்று மாதங்களுக்குள்ளாகவே ஆரம்பிக்கவேண்டும். ஒரு லைசென்ஸை எடுத்துவிடுகிற விஷயமாக தவறிய குற்றங்கள் விஷயத்தில் ஒரு வருஷத்திற்குள் வியாஜ்யம் தொடரலாம். குறித்த காலத்திற்குள் வியாஜ்யங்கள் தொடரப் பெறுவிடில் அவைகளை ஆரம்பத்திலேயே தள்ளிவிடலாம்.

65. லோகல் போர்டுகளின் மீது வியாஜ்யம். லோகல் போர்டுகள், அவைகளின் பிரசிடெண்டுகள், மெம்பர்கள் ஆகியவர்களால் நடத்தப்படும் ஏதாவது காரியங்கள் விஷயமாக மான நஷ்ட தாவா செய்ய வியாஜ்யம் தொடரப் பெறுமாயின் அப்படி செய்வதற்குமுன் லோகல் போர்டுகள் தகுந்த திருத்தங்களை செய்துகொள்வதற்காக இரண்டு மாதங்களுக்கு முன்னாக நோட்டீஸ் கொடுக்கவேண்டும். நோட்டீஸ் கொடுத்தபின் ஆறு மாத காலவரை பொருத்த பின் வியாஜ்யம் தொடரப்பட

கூடாது. செக்ஷன் 225 பார்க்க. மானநஷ்டம், அல்லது நஷ்ட ஈடு இவைகளுக்காகவல்லாத வியாஜ்யங்களுக்கு, இரண்டு மாத தவணை நோடீஸ் அல்லது காலவரை கிடையாது.

66. இங்கிலாந்து தேசத்து அரசனும், இந்திய சக்ரவர்த்தியுமாகிய அரசர் பெருமான்பேரில் இராஜ விஸ்வாஸ பிரமாணம், ஒவ்வொரு லோகல் போர்ட் மெம்பரும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் சட்டம் 1922-ம் வருஷம் நிறைவேற்றப்பட்டது. இதில் கெடுதலானது ஒன்றுமில்லை. பிரஜைகள் அரசர்பெருமானுக்கு விஸ்வாஸம் காட்டவேண்டுமென்பது தவிர, சீர்திருத்தத்திற்காகிலும், தற்காலத்திய ஆட்சிமுறை திருத்துவதற்காகிலும் பிரஜைகள் போராடக் கூடாதென்பதல்ல.

இராஜ விஸ்வாஸ பிரமாணம்.

67. மொத்தத்தில் இச்சட்டம் திருப்திகரமானது. பப்ளிக் ரிஸார்ட் ஆக்ட் முதலிய இதர சட்டங்களின் கீழ் லைசன்ஸ்கள் கொடுக்கும் அதிகாரம் பிரஸிடெண்டுகளுக்கு கொடுக்கப்பட்டதினால் அவர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இதுவரையில் மின்சார சக்தியைக்கொண்டு வேலைசெய்யும் தொழிற்சாலைக்கு பிரஸிடெண்டிடமிருநது லைசன்ஸ் பெறவேண்டிய அவசியமில்லாமலிருந்ததுபோல் இனி முடியாது; இப்போது லைசன்ஸ் பெற்று ஆகவேண்டும். லோகல் போர்டுகள், முனிஸிபாலிடிகள்போல் அவ்வளவு சுதந்தர முடையவைகளல்ல. நிலவரி வசூல் செய்ய லோகல் போர்டுகளுக்கு கவர்மெண்ட் சிப்பந்திகளின் சகாயம் வேண்டும். முனிஸிபாலிடிகளுக்கு அப்படியல்ல. லோகல் போர்டுகளின் பராமரிப்பின் கீழுள்ள விஸ்தீரணம் அதிகமாகையால், நில ஸெஸ் வசூல் செய்ய அதிக பணச் செலவில் சிப்பந்திகளை அமர்த்தவேண்டிவரும். போதுமான தொகை லோகல் போர்டுகளுக்கு இல்லாவிட்டால் பொதுஜன சௌகரியத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் இடையூறு உண்டாகும். லோகல் போர்டுகள் சரிவர பரிபாலிக்கப்பட வேண்டுமானால் கவர்ன்மெண்டின் உதவியில்லாமல் முடியாது. தேக ஆரோக்கியமும், சுகமும் குறையுமானால், பலஹீனமும், அயர்வும் உண்டாகி பொதுஜனக் கஷ்டம் அதிகரிக்கும். தற்கால ஆட்சிமுறையினிடம் பொதுஜன அபிப்பிராயம் எவ்வாறு இருப்பினும் லோகல் போர்டுகளுக்கு தாங்கள் செலுத்தவேண்டிய ஸெஸ்ஸை கட்டி அவைகள் சரிவர நடைபெறுகிறதா என்று கவனித்து வரவேண்டும்.

முடிவு.

லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள்.

நெ. 1763 :—1930 ஞு த்திய 11-வது ஆக்ட்படி திருத்தப்பட்ட 1920ஞுத்திய மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட் 233-வது செக்ஷன்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு லோகல் கவர்ன்மெண்டார் முனிஸிபல் கௌன்ஸில்கள் லோகல் போர்டுகளுடைய இன்ஸ்பெக்டருக்கு கீழ்கண்ட அதிகாரங்களை ஒப்படைத்திருக்கிறார்கள் :—

மதராஸ் கெஜட்—பாகம் 4, 809 பக்கம்—1930ஞு செப்டம்பர்ீ 30உ.

செ. **27** (2)—ரிகார்டுகளை ஆஜர்படுத்தும்படி லோகல் போர்ட் கேட்டால், அதைப் பற்றி பிரஸிடெண்டிற்கும் லோகல் போர்டுக்கும் தகராறு ஏற்பட்டால், மேற்படி தகராறை முடிவு செய்யும் அதிகாரம்.

செ. **30—30** (3) (4)—செக்ஷன்களில் கூறியுள்ள விஷயங்களுக்காக கூட்டுக் கமிட்டி கூட்டும் விஷயமாயும், அப்படி கமிட்டி ஏற்படுத்திய ஸ்தல ஸ்தாபனங்களுக்குள் வித்தியாச அபிப்பிராயம் ஏற்பட்டால் அதை முடிவு செய்யவும்.

செ. **37** (A)—யாதொரு லோகல் போர்டாரின் அசையாப்பொருள், பாடசாலை, ஆஸ்பத்திரி, ஆபிஸிலும் அதில் வைக்கப்பட்டிருக்கும் ரிகார்டுகள், ரிஜிஸ்டர்கள், இதர தஸ்தாவேஜுகள் இவைகளை பிரவேசித்து பார்வையிட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது நபரை நியமிக்கவும்.

செ. **75** (2)—ஒரு கிராமத்தில் பஞ்சாயத்தால் விதிக்கப்படும் வரியை சாங்கிஷன் செய்யவும்.

செ. **121** (1)—ஜில்லா நிதியிலிருந்து கன்ட்ரிபூஷன் சாங்கிஷன் செய்யவும்.

செ. **121** (2) (3)—கவர்ன்மெண்டுக்கு அல்லது ஒரு ஸ்தல ஸ்தாபனத்திற்கு லோகல் போர்டை கன்ட்ரிபூஷன் செய்யும்படி உத்திரவிடவும்.

செ. **205**—லோகல் போர்டுகளால் செய்யப்படும் உபவிதிகள் அல்லது மாற்றப்படும் உபவிதிகளை அங்கிகாரம் செய்ய அல்லது நிராகரிக்கவும்.

செ. **227** (1)—ஒரு லோகல் போர்டின் சொத்து அல்லது பணத்திற்கு உண்டாகும் நஷ்டத்தை அதன் மெம்பர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு வியாஜ்ஜியம் தொடர லோகல் போர்டு அனுமதிகொடுக்கவும்.

செ. **234**—இந்த சட்டத்தின் கீழாகிலும், அல்லது வேறு சட்டத்தின் படியாகிலும் பிரதேச அதிகாரிகளுக்குள் உண்டாகும் சச்சரவுகளை தீர்த்து வைக்கவும்.

செ. **240** (8) (a) (b)—வேலைசெய்யாமல் போன போர்டுகளின் சொத்துக்களின் விஷயமாய் உத்திரவிடவும்.

2-வது ஷெட்—1 விதி :—ஒவ்வொரு லோகல் போர்ட்டிற்கும் ஆபீஸ் வைத்துக் கொள்ளும் இடத்தை நிர்தாரணம் செய்யவும்.

செ. **93** (4)—தொழில் வரியை பங்கிட்டு கொடுக்கும் விஷயமாய் வெவ்வேறு ஜில்லாக்களுக்குள்ள சச்சரவுகளை தீர்க்கவும்.

5-வது ஷெட்—விதி 4 (1) (2) (3)—இந்த விதியின்படி, கீழே குறிப்பிட்டவைகள் தவிர, மற்றைய செலவுகளை சாங்ஷன் செய்யவும்.

(a) பஞ்சாயத்து விஷயத்தில் ஜில்லா போர்ட் பிரஸிடெண்டால் சாங்ஷன் செய்யப்படும் செலவுகளும்.

(b) தாலூக்கா போர்ட் விஷயத்தில், ஜில்லா போர்ட் பிரஸிடெண்டார் சாங்ஷன் செய்யப்படும் செலவுகளும்.

மதராஸ் கெஜட்—1931ஞ பிப்ரவரிமீ 16-உ (ஜி. ஓ. பி. நெ. 498 எ.ல். அண்ட் எம்.) கெஜட் பக்கம் 198—24.2-1931 :—

நெ- 404 :—1920ஞத்திய மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட் 233 செக்ஷன்படி மந்திரிகளுடன் கூடிய கவர்னர், 1930ஞ ஆகஸ்ட் மாதம் 25-ந்தேதிக்கு முன் யூனியன் போர்டுகளாயிருந்த பஞ்சாயத்துகள் தவிர மற்றைய பஞ்சாயத்து விஷயங்களில், முனிஸிபல், லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டருக்கு கீழ்கண்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன :—

செ. **5** (1)—ரெவின்யூ தாலூக்காவின் யாதொரு பாகத்தை இந்த ஆக்டின் காரியங்களுக்காக "கிராம" மென்று நிர்ணயிக்கவும்.

செ. **5**(2)—(a)யாதொரு கிராமத்தில் அடங்கிய யாதொரு விஸ்தீர்ணத்தை விலக்கவும்.

(b) யாதொரு கிராமத்திற்கு சமீபத்திலுள்ளதும், அதே ரெவின்யூ தாலூக்காவிலுள்ளதுமான யாதொரு பிரதேச விஸ்தீரணத்தை அந்த கிராமத்தில் சேர்க்கவும்.

(c) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யவும்.

(d) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அறிக்கையிட்டபடியுள்ள அந்த கிராமத்தின் பெயரை மாற்றவும்.

செ. **9** (3)—ஆதிதிராவிடர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கவும், அப்படிப்பட்ட ஸ்தானங்களின் சங்கியை நிஷ்கரிஷை செய்யவும்.

செ. **10** (1)—ஒரு பஞ்சாயத்து மெம்பர்களின் மொத்த சங்கியை நிஷ்கரிஷைசெய்யவும்.

செ. **10** (2)—மெம்பர்களின் சங்கியை மாற்றும் விஷயமாய் பஞ்சாயத்து செய்யும் தீர்மானத்தை அங்கிகரிக்கவும்.

செ. **45**—ஒரு பஞ்சாயத்தை கலைத்து மறுபடியும் அமைக்கவும். இந்த செக்ஷன்படி லோகல் கவர்ன்மெண்டுக்கு கொடுத்திருக்கும் சகல அதிகாரங்களும்.

செ. **45**(A)—ஒரு பஞ்சாயத்தை கிராகரித்து அதை அமைக்கும் விஷயமாய் இந்த செக்ஷன்கீழ் லோகல் கவர்ன்மெண்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களும்.

செ. **49** (1)—(a) ஒரு கிராமத்தை வார்டுகளாக பிரிக்கவும்.

(b) செ. 9 (3) படிஆதித்திராவிடர்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்கள் யாதேனு மிருந்தால், அதை எற்ற வார்டில் ஒதுக்கிவைப்பதென நிஷ்கரிஷை செய்யவும்.

செ. **49** (2)—49 (1) (b) செக்ஷன்படி பஞ்சாயத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்களுடன் எத்தனை மெம்பர்கள் தேர்தெடுக்கப்பட வேண்டுமென்று பிரசுரம் செய்யவும்.

செ. **49** (5)—(a) பஞ்சாயத்தில் அப்போதிருக்கும் மெம்பர் எந்த வார்டின் பிரதிநிதி என்பதையும்,

(b) பஞ்சாயத்தில் எற்படும் காலி ஸ்தானத்தை பூர்த்தி செய்ய தேர்தல்கள் எந்தெந்த வார்டுகளுக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்னும் விஷயமாயும் மெம்பர்களின் சங்கியை மாற்றும் விஷயமாயும், அல்லது புதிய வார்டு பிரிக்கும் விஷயமாயும், தற்போதிருக்கும் வார்ட் எடுத்துவிடும் விஷயமாயும் எற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரி (Prescribed authority)யின் ஆலோசனையை அங்கீகரிக்கும் அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

THE MADRAS LOCAL BOARDS ACT, 1920.

MADRAS ACT NO. XIV OF 1920.

Amended by Acts Nos. I of 1927, XI of 1930 and III of 1931.

1920௵த்திய மதராசு லோகல் போர்டுகள் ஆக்ட்.

1920௵த்திய 14-வது ஆக்ட்.

1927௵த்திய I-வது ஆக்டினாலும் 1930௵த்திய XI-வது ஆக்டினாலும் 1931௵த்திய III-வது ஆக்டினாலும் திருத்தப்பட்டது.

AN ACT TO CONSOLIDATE AND AMEND THE LAW RELATING TO LOCAL BOARDS.

லோகல் போர்டுகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

இந்த தமிழ் மொழிபெயர்ப்பு கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட தமிழ் ஆக்டின்படி சரிவரயுள்ளது.

முக்கிய கவனிப்பு.—இங்கிலீஷ் தவிர தமிழிலும் மற்ற இந்திய பாஷைகளிலும் உள்ள சட்டங்களும் விதிகளும் (ரூல்ஸ்) உபசட்டங்களும் சாசன சபையால் உறுதிபடுத்தப்படாமையால் அவைகள் அவ்வளவு நம்பிக்கையுள்ளவைகள் அல்ல [ஜெகதாபர்கா எ. ராமச்சந்திர விநோதபா, 16B. 689 (698)]. ஆகையால் லோகல் போர்டுகளை அனுசரிக்க சட்டதிட்டங்களை இங்கிலீஷில் வியாக்யானங்களுடன் என்னால் எழுதியிருப்பதை அவசியமாக பார்ப்பது நலம். இப்புத்தகத்திலும் வியாக்யானங்களில் இங்கிலீஷ புத்தகத்தினுடைய பக்கங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கவர்மெண்டின் தமிழ் மொழி பெயர்ப்பு இதர மொழி பெயர்ப்பு மாதிரி அல்லாமல், சரியானதும், செல்லத் தக்கினது மாகும். கவர்மெண்ட் மொழி பெயர்ப்பை அனுசரித்து செய்யப்படும் காரியங்கள் கவர்மெண்டாரால் அங்கீகரிக்கப்படவேண்டும். இதற மொழி பெயர்ப்புகளைக் கொண்டு செய்பவைகளை கவர்மெண்டார் அங்கீகரிக்கவேண்டு மென்பதில்லை.

இந்த ஆக்டுக்கு சரியான தமிழ்பதம் சட்டமாயிருந்தபோதிலும் ஆக்ட் எனும் இங்கிலீஷ்பதம் உபயோகப்படுத்தி யிருக்கிறது. இந்த ஆக்டின் பிரிவுகளை செக்ஷன் என எழுதியிருக்கிறது. அவைகளை கனத்த எண்களில் அச்சிட்டிருக்கிறது. இந்த செக்ஷன்களின் உள் பிரிவுகளை சப்-செக்ஷன்களென்றும், சப்-செக்ஷன்களின் உள் பிரிவுகளை கிளாஸ்களென்றும் கூறியிருக்கிறது. ஒவ்வொரு செக்ஷனின் பின் தொடர்ந்து வரும் பூர்த்தியான வாக்கியங்கள் மாத்திரம் சட்டமும் சலாவணியாகுமேயல்லாது அந்த சட்டத்தில் ஆங்காங்கு காணப்படும் தலைப்புகளும் ஒவ்வொரு செக்ஷனில் வரும் பக்கவெளிக்குறிப்புகளும் திருஷ்டாந்தங்களும் சட்டமாக மூட்டாது.

பீடிகை. சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள லோகல் போர்டுகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்கு இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட 1915-ம் வருஷத்து ஆக்ட், 79-வது பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகவே பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்—

குறிப்பு.

மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட்—செ. 1 பார்க்க. லோகல் போர்ட்ஸ்—செ. 3 (11) பார்க்க.

போது.—லோகல் போர்டுகளைக் குறித்த எல்லா சட்டதிட்டங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து திரட்டியிருப்பதாக பீடிகையில் எழுதப் பெற்றிருந்தாலும், இன்னும் அநேக சட்டதிட்டங்களையும் அனுசரித்து லோகல் போர்டுகளின் பரிபாலனம் நடைபெற்று வருவதால், இந்த ஆக்ட் எல்லா அம்சங்களையும் பூர்த்தியாகப் பெற்றிருப்பதாகக் கொள்ளக்கூடாது. (1) மதராஸ் ராஜவிஸ்வாச ஆக்ட், (2) மதராஸ் பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிக்கும் ஆக்ட், (3) மதராஸ் டௌன் ப்ளானிங் ஆக்ட், (4) மதராஸ் கலப்பு நீக்குதல் ஆக்ட், பிரதேச அதிகார சபைகள் கடன்பெறும் ஆக்ட் முதலியவை—அந்த அநேக சட்டதிட்டங்களில் சில வாகும்.

ஒன்றாய் சேர்ப்பது.—பீடிகையில் லோகல் போர்டு சட்டதிட்டங்களை ஒன்றாய்ச் சேர்ப்பதென்று இருந்தபோதிலும், லோகல் போர்டுகளை அனுசரித்து இன்னும் வேறு சில சட்டங்கள்—அதாவது (1) மதராஸ் லோகல் Authorities Entertainment Tax-act, (3) மதராஸ் Oath of allegiance act, முதலியவை—

1-ம் பாகம்.

1-ம் அத்தியாயம் பீடிகா விதிகள்.

பெயர். **1**. இந்த ஆக்டை "1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட்" என்று சொல்லலாம்.

குறிப்பு.

(1) ஆக்டின் வியாபகமும் ஆரம்பமும்—செ. 237 பார்க்க. (2) ரத்து செய்ய சட்டம் செய்தது—செ. 2 பார்க்க. (3) ஆக்டின் சுருக்கம் 22 பக்கங்கள் முதல் 37 வரை பார்க்க. (4) மதராஸ் லோகல் போர்டுகளின் ஆக்டின் விஷய அகராதி-கடைசியில் பார்க்க. (5) விதிகள், உபசட்டங்கள், ரெகுலேஷன்கள்—செ. 31, 199 முதல் 205 வரை பார்க்க. (6) முன்னிருந்த லோகல் போர்டுகளிலிருந்து புதிதாக ஏற்பட்டிருக்கும் லோகல் போர்டுகளுக்கு சொத்துகள், வரி பாக்கிகள், வியாஜ்யம் தொடரப் பெறுதல் ஆகியவை சம்பந்தமான சுதந்திரங்கள் பொறுப்புகள் மாற்றப்பட்டது—செ. 235 பார்க்க.

சட்டங்களின் பயன்.

ஆக்டும் விதிகளும்.—சட்ட ரீதியான விதிகளுக்கு கோர்டார் சொல்லும் வியாக்யானம் சட்ட சபை உபயோகித்த பதங்களுக்கு கோர்டார் கொடுக்கும் அர்த்தத்தைப் பொறுத்ததாயிருக்கவேண்டும். சட்ட சபையார் ஏற்படுத்திய ஒரு ஆக்டின் அர்த்தத்தை நிதானிக்கும் பொருட்டு அந்த ஆக்டின்படி ஏற்பட்ட ஒரு விதியின் பொருளை அநுசரித்து அர்த்தம் கூறுவதென்பது கூடாது. (ஷேய்க் இம்டாஸ் எ. தீன் நாத் டி. சர்க்கார், 53 Cal. 615=A.I.R. 1926 Cal. 856).

பொது இயற்கை அறிவும் லாவும்.—ஒரு லாவின் அர்த்தம் கஷ்டமாயிருக்கும் போது எல்லா சட்டங்களுக்கும் அஸ்திவாரமான இயற்கை யறிவையே ஒரு பெரிய ஆதாரவாகக் கொண்டு ஒரு நியாயாதிபதி (ஜட்ஜ்) முடிவுக்கு வரவேண்டும். (பப்ளிக் ப்ராஸிக்யூடர் எ. ரங்கநாயகலு செட்டியார், 50 Mad. 845=A.I.R. 1927 M. 602). ஒரே சட்டத்திற்கு இரு வித வியாக்யானம் சாத்தியமாக விருக்கும்போது பொது அறிவிற்கு அனுகூலமாயிருக்கும் வியாக்யானத்தை ஆதரிக்க வேண்டியது கோர்டாரின் கடமையாகும். (மன்சா சிங் எ. எம்பரர், 119 I.C. 570=30 Cr. L.J. 1085=A.I.R. 1929 A. 750 (1)).

பிரஜைகளின் உரிமைகள்.—பிரஜைகளின் உரிமைகளை நிபந்தனைக்குட்படுத்தும் சட்டங்களை சரியான பொருள் விளங்கும்படி செய்யவேண்டும்; உபயோகிக்கப்பட்ட பதங்கள் எவ்வளவு தூரம் அர்த்தத்தை கொடுக்கக் கூடுமோ அதற்கு மீறி அர்த்தம் கொடுக்கும்படி வியாக்யானம் செய்யக்கூடாது. (முத்தம்மாள் எ. செக்ரிடெரி ஆப் ஸ்டேட் முதலியவை, 24 M.L.J. 405). தனி நபர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கும் அல்லது உரிமையை நிர்ப்பந்திக்கும் ஆக்டின் செக்ஷன்கள் சரியாய் அர்த்தம் செய்யப்படவேண்டும். (ருத்ரப்பாசாரி எ. மதராஸ் கார்பரேஷன் (1916) 1 M.W.N. 394=34 I.C. 735). ஒவ்வொரு முனிசிபல் போர்டும் தன் வசத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் எல்லா சொத்துகள் சம்பந்தப்பட்ட வரையில் பொது ஜனங்களின் பிரதிநிதிகளாவர். ஆனால், அவ்வித உரிமை தமக்குரியதென பாராட்டிக் கொள்ளவோ அல்லது காப்பாற்றிக் கொள்ளவோ தவறி விடுவதால் அல்லது நிராகரிப்பதால் அவ்வுரிமைகள் பாதிக்கப்படமாட்டா; பொது ஜனங்கள், சிவில் ப்ரோஸிஜர் கோடில் கண்டபடி தமது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வியாஜ்யம் தொடரலாம். (ராம் சந்த் எ. மௌலா பக்ஷ், 21 A.L.J. 882=I.L.R. 4 A. 583). பொது ஜனங்களைக் காப்பாற்றுதற்காகவும் தகுதியான சுகாதார முறைகளை வற்புறுத்துதற்காகவும் சட்ட ரீதியாக கார்போரேஷன் பெற்றுக்கொண்ட அளவுக்குட்பட்ட அதிகாரத்தை எவ்விதத்திலாகிலும் அத்துமீறி பொது ஜனங்களின் சொந்த உரிமைகளை பாதிக்கும்படி செலுத்துதற்காக முனிசிபல் ஆக்டை உபயோகிப்பதை கோர்டார் பலமாகத் தடுக்கவேண்டும். (அலி மகமத் சாலா மகமத் எ. பம்பாய் முனிசிபல் கமிஷனர், A.I.R. 1925 B. 458=87 I.C. 771).

சங்கிரமித்த பாத்யதைக்கு உட்பட்ட உரிமைகள்.—லோகல்போர்டுகளைக் குறித்த சட்டங்களை திரட்டுதற்காக ஏற்பட்ட ஒரு ஆக்ட் அக்குகளை பறிமுதல் செய்யும் சட்டமாக இருக்க முடியாது. பொது ஜனங்களின் சொந்த உரிமைகளை பறிமுதல் செய்யவேண்டுமென சட்ட சபை ஒருபோதும் உத்தேசித்திருக்க முடியாது. (எல்லம்மாளைக் குறித்த, 53 M.L.J. 810=A.I.R. 1928 M. 164).

சட்டதிட்டங்களின் ரத்து.

2. 1-வது ஷெட்யூலிற்கண்ட சட்டதிட்டங்கள் அதன் நாலாவது கலத்தில் குறித்திருக்கிற அளவுக்கு ரத்துசெய்யப்படுகின்றன.

குறிப்பு.

திருத்து—பீடிகையைப் பார்க்க. இயற்கை உரிமைகள்—செ. 1-கீழ் பார்க்க. முன்னிருந்த லோகல் போர்டுகளின் சொத்து சுதந்திரங்களை மாற்றிக்கொள்ளுதல்—செ 235 பார்க்க.

ஒரு ரத்து செய்யும் சட்டம் இயற்கையாக உள்ள உரிமையை பறிமுதல் செய்வதுரூபமான அசாத்ய நிபந்தனையை சுமத்துவதாக அர்த்தம் செய்யக்கூடாது, அல்லது கீழ்ப்படிந்து நடக்க முடியாத அதன் நிபந்தனைகளைக் குறித்த விஷயங்களுக்கும் அதை உபயோகிக்கக்கூடாது. (திருமலைசாமி நாயுடு எ. சுப்ரமணிய செட்டியார், 40 M. 1009=45 I.C. 109).

அர்த்தம்.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்—

குறிப்பு.

ஒரு சட்டம் ஒரு பதத்திற்கு ஒருவித அர்த்தம் செய்திருக்கும்போது, அது விஷயமாக பொது ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறிவினுல் அந்த அர்த்தம் பாதிக்கப்படமாட்டாது. (அபிஷியல் அசைனி எ. பாசு தேவதாஸ், A.I.R. 1925 M. 723=48 M. 454).

"ஆதி திராவிடர்."

(1) "ஆதிதிராவிடர்" என்பது-ஹிந்து மதத்தை அவலம்பிப்பவராயும் அடியிற்கண்ட வகுப்புக்களையோ நிர்ணயிக்கப்படக்கூடிய வேறேயாதொரு வகுப்பையோ சேர்ந்தவராயுமுள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; அவையாவன—பறையர், பள்ளர், வள்ளுவர், மாலர், மாதிகர், சக்கிலியர், தோட்டியர், செருமர், ஹொலேயர்;

குறிப்பு.

ஆதி-திராவிடர்.—இந்தப் பதம் 10 வருஷங்களுக்குள் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. ஆதி-ஆந்திரர் எனும் பதத்தையும் இதன் அர்த்த வியாபகத்தினுள் சேர்க்க சில மெம்பர்கள் செய்த முயற்சியை சாமர்த்தியமாய் சட்டசபை நிராகரித்துவிட்டது. ஆதித் திராவிடர் எனும் பதத்தை உபயோகத்திற்கு கொண்டுவந்ததே, ஆதி-ஆந்திரர் எனும் பதத்தை கொண்டுவருவதற்கு காரணமாயிருந்தது. ஆதி-ஆந்திரர்கள் எனப்படும் "மாலர்" "மாதிகர்கள்" முதலியவர்கள் இப்போது ஆதித்-திராவிடர்கள் என்பதில் அடங்கியவர்களாவார்கள். தாழ்ந்தவர்கள் எனும் ஒரு இழிவுபாட்டை இந்த ஆதிதிராவிடர் எனும் பெயர் தன்னுடன் பெற்றிருப்பதால் முடிவில் இது அடியில்கண்ட வகுப்பினருக்கு வெறுக்கத்தக்கதாக இருக்கும். இவ்வகையில் சேர்ந்த வகுப்பினர்கள் கிருஸ்துவர்களாக நேர்ந்தால் அவர்கள் இந்திய கிருஸ்துவர்கள் எனப்படுவார்கள். (செ. 3) (8-A) பார்க்க. ஒரு ஆதித்திராவிடர், கிருஸ்துவர் அல்லது மகம்மதியராகிவிட்டால் அவர் இந்துவாயிருந்தது நீங்கியவராவர். தேசத்திலும் ஜனசமூகத்திலும் ஆதித்திராவிடர்களுக்குரிய சம உரிமைகளை குறைக்காமல் தம் இனத்தில் இருக்கவிட்டு நலனுறுதல் அல்லது அவர்களை அடிமைத்தனத்தில் இருக்க முயற்சித்து அதற்கு பதிலாக அவர்கள் செய்யும் தெய்வத்திற்கும் மதத்திற்கும் ஒவ்வாத காரியங்களால் துன்ப மடைதல் ஆகிய இரண்டிலொன்றை தீர்மானித்துக்கொள்ளுதல் மற்ற இந்துக்களைப் பொறுத்த விஷயமாகும்.

வேறே யாதோரு வகுப்பையோ.—இந்த வகையின்கீழ் அடியில் கண்ட ஜாதியார்கள் "ஆதித் திராவிடர்" எனும் அர்த்தத்தில் சேர்க்கப்படலாம்; கஞ்சம், விசாகப்பட்டணம் டிஸ்ட்ரிக்டுகளைச் சார்ந்த செம்மர்கள், ஹட்டிகள், பவுரிகள், தண்டாசிகள், மதாரிகள்; தென் கன்னடம் ஜில்லாவைச் சார்ந்த கொரசர்கள்; நீலகிரி டிஸ்ரிக்டின் கோடர்கள்; மலையாளத்தைச் சார்ந்த நாயடிகள் முதலியவர்கள். "இதர சிறு தொகையினர்கள்" எனும் தொடர் மொழி முன்னிருந்த "இதர வேறு ஜாதிகள்" எனும் தொடர் மொழிக்குப் பதிலாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் சிறிது மேலான அந்தஸ்துள்ளவர்களாக கொள்ளப்படும் ஜாதியினர் பிரத்தியேக ஸ்தானங்கள் தமக்கு வேண்டுமெனக் கோரமாட்டார்கள். இந்த அடக்கப்பெற்று ஒடுக்கப்பெற்று கெடுக்கப்பெற்ற ஜாதியார்களும் நமதுதேசத்தில் ஜனசமூகத்தில் கோயில் குளங்களில் தமக்குரிய சம உரிமைகளைப் பெறுவார்களானால் உடனே இந்த பிரத்யேக ஸ்தானங்கள் (ரிசர்வட் சீட்ஸ்) எடுபட்டுப்போகத் தக்கவையாகும்.

"ஆங்கிலோ இந்தியர்."

(1-A) "ஆங்கிலோ இந்தியர்" என்பது—ஐரோப்பியரா யிராமல்—

(i) ஆண்வழியில் ஐரோப்பிய வம்சத்தில் பிறந்திருக்கும், அல்லது

(ii) ஆசியாக்காரரும் ஆசியாக்காரரல்லாதவரும் சேர்ந்த கலப்பு வம்சத்தில் உற்பவித்து, தகப்பனுரோ, பாட்டனுரோ அல்லது ஆண்வழியில் இன்னும் தூர பூர்வபிதாவோ ஐரோப்பா கண்டத்திலாகிலும், கானடா, ந்யூ பவுண்ட்லண்ட், ஆஸ்ட்ரேலியா, ந்யூஜீலண்ட், தென் ஆப்பிரிக்கா யூனியன் அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலாகிலும் பிறந்திருக்கும்

யாதொரு நபரென்று அர்த்தமாகும்.

"நியமிக்க."

(1-B) "நியமிக்க" என்பதில், அங்காமியாகவோ அல்லது இன்னொருவருக்கு பதிலாய் வேலைபார்க்கும் ஹோதாவிலோ நியமிக்க என்பதும் அடங்கும்.

"நேமகம்."

(2) "நேமகம்" என்பதில், அங்காமியாகவும் இன்னொருவருக்கு பதிலாய் வேலைபார்க்கும்படியாகவும் செய்யப்படும் நேமகங்கள் என்பதும் அடங்கும்.

"கட்டிடம்."

(3) "கட்டிடம்" என்பதில், யாதொரு வீடு, வெளிபுறத்து வீடு, லாயம், மலஜலபாதை மறைவிடம், கொட்டகை, குடிசை (எட்டடி உயரத்துக்கு மேற்படாத எல்லைச் சுவரைத் தவிர வேறே), சுவர் என்பவைகளும், கல்கட்டிடமாகவாவது, செங்கல், மரம், சேறு, உலோகம் அல்லது வேறே எந்த வகையையாகிலும் சேர்ந்த சாமானைக்கொண்டு கட்டப்பட்டாவது இருக்கும். அப்படிப்பட்ட வேறே யாதொரு கட்டுக்கோப்பு என்பதும் அடங்கும்:

குறிப்பு.

கட்டிடம்.—மனுதாரர் தன்னுடைய நிலத்தின்மேல் ஒரு மர கொட்டகையை அமைத்தார். அது பூமியினுள் புதைக்கப் பெறுமல் சக்கரங்களின்மேல் தொகுக்கப் பெற்றிருந்தது. பஞ்சாப் முனிசிபல் ஆக்டின் செ. 189ன்படி முனிசிபாலிடிக்கு தான் கட்டக் கருதியிருப்பதை நோடீஸ் மூலம் தெரிவிக்கவில்லை. ஆக்டின் செ. 195ன்படி கமிட்டியார் அக்கொட்டகையை அழித்துவிடும்படி கொடுத்த நோடீசை அசட்டை செய்ததால் மனுதாரர் மீது வியாஜ்ஜியம் தொடரப்பெற்றது. (1) பிரஸ்தாப கொட்டகை தன் மனையில் நீடித்திருக்கக்கூடிய அமைப்பாக இருக்கவேண்டுமென கருதப்பட்டிருப்பதால் இந்த ஆக்டின் செ. 3 (2)ன் படி "கட்டிடம்" எனும் பறந்த அர்த்தத்தில் அடங்கும்; அந்தக் கட்டிடம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு போகக்கூடியதாயிருப்பதால் குடிசை அல்லது கொட்டகை வகையில் சேராதெனக் கொள்வது கூடாது; (2) கட்டிடங்களுடைய கால்கள் அல்லது அஸ்திவாரங்கள் பூமிக்குள் நாட்டப்பெற்றிராவிட்டாலும் அவைகள் ஆக்டின்படி கட்டிடங்கள் எனவே கொள்ளப்படும், என ரெவிஷனில் ஆதரிக்கப்பெற்றது. (ஸ்டீவென்ஸ் எ. கன்லே, நன்தமால் எ. முனிசிபல் கமிட்டி, சிம்லா, 5 Lah 543=A.I.R. 1925 L. 252).

(4) [மதராஸ் 1931ஹு த்திய 3-வது ஆக்டினால் ரத்துசெய்யப்பட்டது.]

(5) [மதராஸ் 1931ஹு த்திய 3-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

"தற்செயலாய் ஏற்படும் காலிஸ்தானம்."

"தற்செயல் (காஷுவல்) எலெக்ஷன்."

(5-A) "தற்செயலாய் ஏற்படும் காலிஸ்தானம்" என்பது - காலம் முடிந்து போவதனாலல்லாமல் மற்றப்படி ஏற்படும் யாதொரு காலிஸ்தானமென்று அர்த்தமாகும்; மேலும், "தற்செயல் (காஷுவல்) எலெக்ஷன்" என்பது - தற்செயலாய் யாதொரு காலிஸ்தானம் ஏற்படுவதன்மேல் நடத்தப்படும் யாதொரு எலெக்ஷன் (தெரிந்தெடுக்கும் நடவடிக்கை) என்று அர்த்தமாகும்.

"கம்பெனி."

(6) "கம்பெனி" என்பது - 1913-ம் ஹு த்திய இந்துதேசத்து கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லியுள்ளபடியிருக்கிற, அல்லது பார்லிமென்ட் சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் ராயல் சார்ட்டர் என்னும் ராஜ சாஸனத்தையாகிலும் லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்தையாகிலும் யாதொரு பிரிடிஷ் ராஜ்ஜியத்திலுள்ள சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் அனுசரித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற யாதொரு கம்பெனியென்று அர்த்தமாவது மல்லாமல், சட்டப்படி சேர்ந்ததாயிருந்தாலுஞ் சரி இராவிட்டாலுஞ்சரி, அதன் பிரதான தொழிலிடம் சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியில் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி ஷை ப்ரெஸிடென்ஸியில் தொழில் நடத்துகிற யாதொரு பரம் என்னும் வர்த்தகக் கூட்டம் அல்லது சங்கம் என்பதும் அதில் அடங்கும்.

"டிஸ்ட்ரிக்ட்."

(7) "டிஸ்ட்ரிக்ட்" என்பது - ரெவினியு பரிபாலனத்தின் காரியங்களுக்காக யாதொரு டிஸ்ட்ரிக்ட் கலெக்டரின் மேல் விசாரணையிலிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீரணமென்று அர்த்தமாகும் ஆனால், அதிலிருந்து—

(a) 1920-ம் ஹு த்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிகட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் மியுனிஸிபாலிடிகளிலும்,

(b) 1924 ம் ஹு த்துக் கன்டோன்மென்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் கன்டோன்மென்டுகளிலும்,

(c) 1874-ம் ஹு த்து ஷெட்யூலில் கண்ட டிஸ்ட்ரிக்டுகளாக்ட்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள ஷெட்யூலில் கண்ட டிஸ்ட்ரிக்டுகளிலும் அடங்கியுள்ள சகல விஸ்தீர்ணங்களையும் விலக்கிவிடவேண்டும்.

(7-A) "டிஸ்ட்ரிக்ட் போர்ட்" என்பது-யாதொரு டிஸ்ட்ரிக்டின் பிரதேச பரிபாலனத்துக்காக 6-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட சபை என்று அர்த்தமாகும்;

"டிஸ்ட்ரிக்ட் போர்ட்."

(7-B) "ஐரோப்பியர்" என்பது ஐரோப்பிய வம்சத்தைச் சேர்ந்த யாதொரு நபர் ஐக்கிய ராஜ்ஜியத்திலோ யாதொரு ப்ரிட்டிஷ் ராஜ்ஜியத்திலோ அல்லது இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்திலோ பிறந்திருந்தாலும், நிலையான வாசஸ்தலம் உடையவராயிருந்தாலும் அல்லது அவருடைய தகப்பனார் அந்தப்படி பிறந்திருந்தாலும், பிரஸ்தாப நபர் பிறந்த தேதி வரையில் அப்படி நிலையான வாசஸ்தலம் உடையவராயிருந்தாலும் இருந்திருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு நபரென்று அர்த்தமாகும்;'

"ஐரோப்பியர்."

(7-C) "காடு" என்பதில் கவர்மென்டாருடைய ஆதீனத்திலிருக்கிற ரிஸெர்வ் செய்யப்படாத (காப்பாற்றி வைக்கப்படாத) நிலமென்பதும், 1882-ம் ஞூத்திய சென்னப்பட்டணத்து காட்டைக் குறித்த ஆக்டின்படி ரிஸெர்வ் செய்யப்பட்ட காடென்பதும் அடங்கும்;

"காடு."

(8) "வீடு" என்பது வாசஸ்தலமாகவோ மற்றபடியோ மனிதர்கள் இருப்பதற்குத் தகுதியானதாய், பொது பாதையிலிருந்து முக்கியமான பிரவேச வாயிலைப் பிரத்தியேகமாக உடையதாயிருக்கும் யாதொரு கட்டிடம் என்று அர்த்தமாவதுமல்லாமல், அதில் யாதொரு (கடை) ஷாப், வேலைச்சாலை அல்லது கிடங்கு என்பதும் அடங்கும்.

"வீடு."

குறிப்பு.

வாசஸ்தலமாகவோ மற்றப்படியோ.—அது வசிக்கும் இடமாக உபயோகிக்கப்படுகிறதோ அல்லவோ அது அவ்வளவு முக்கியமானதல்ல. ஆதலால் நாடகக் கொட்டகைகள் முதலியவை இதன் கீழ் வரும்.

மனிதர்கள் இருப்பதற்குத் தகுதியானதாய்.—ஆடு மாடுகளை அடைக்கும் பட்டி (பௌண்ட்) மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்றதாய் இல்லாமையால் இந்த சப் செக்ஷனின் வியாக்யானத்திற்குள் வராது. பசுக்களின் கொட்டகை மனித வாசத்திற்கு ஏற்றதாயில்லாமையால், இந்த செக்ஷனில் விவரிக்கப்பட்டபடி கட்டிடமாகாது.

(8-A) "இந்திய கிறிஸ்தவர்" என்பது இந்தியா தேசத்தில் பிறந்து, ஆசியா கண்டத்தைச் சேர்ந்த கலப்பிடமில்லாத வம்சத்தவராக இருந்தாவது அப்படிப்பட்ட வம்சத்தவரென்று நல்ல எண்ணத்துடன் சொல்லிக்கொண்டாவது கிறிஸ்தவ மதத்தின் எந்த முறையையாகிலும் அனுஷ்டிக்கிற யாதொரு நபரென்று அர்த்தமாகும்;

"இந்திய கிறிஸ்தவர்."

(9) "நிலத்துக்குடையவர்" என்பதிலே-மில்கியத் இஸ்திமிரார் சன்னதின்மேல் நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கிற சகலமானவர்களும், மற்ற சகல ஜமீன்தார்களும் பாளையக்காரர்களும் சுரோத்தியதாரர்களும் ஜாகிர்தாரர்களும் இனாம்தாரர்களும், வரையறுக்கப்பட்ட பாத்தியதையுள்ள பூஸ்திதிக்குடையவர்களைப்பற்றிய 1911-ம் ஞூத்திய சென்னப்பட்டணத்து ஆக்ட் 5-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவர்களாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் சகலமானவர்களும், கவர்ன்மென்டாரிடத்திலே நிலவருமானம் குத்தகை செய்துகொள்ளுகிற சகலமானவர்களும், எந்த ஷரத்தின் மேலாவது மலையாள ஜில்லாவிலே நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கிற சகலமானவர்களும், ரயத்வாரி பைசலைற்பாட்டின்படியாவது கவர்ன்மென்டாருக்கு நேராய் நிலத்தீர்வை செலுத்த எவ்விதத்திலாகிலும் உட்பட்டாவது நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கிற சகலமானவர்களும், உரிமைச் சுதந்தரத்தில் அனுபவிக்கும்படி ரெஜிஸ்டராயிருக்கிற நிலத்துக்குடைய சகலமானவர்களும் அடங்குவார்கள்.

"நிலத்துக்குடையவர்."

"மலஜலபாதை மறைவிடம்." (10) "மலஜலபாதை மறைவிடம்" என்பதிலே-கக்குசு என்பதும், வாடர் க்ளாஸெட் என்னும் தண்ணீர் வேகமாய் விழுவதனால் மலம் அடித்துக்கொண்டுபோகும் கக்குசு என்பதும், மூத்திரம் பெய்வதர்கான இடம் என்பதும் அடங்கும்.

"சட்ட நிரூபண சபை." (10-A) "சட்ட நிரூபண சபை" என்பது-சென்னப் பட்டணம் கவர்னரவர்களின் சட்ட நிரூபண சபையென்று அர்த்தமாகும்.

"பிரதேச அதிகார சபை." (10-B) "பிரதேச அதிகார சபை" என்பதில் யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபை என்பதும் அடங்கும்.

"லோகல் போர்ட்." (11) "லோகல் போர்ட்" என்பது-யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்றாவது தாலூகா போர்ட் என்றாவது பஞ்சாயத்து என்றாவது அர்த்தமாவதுமல்லாமல், அந்த சொற்றொடரில் இம்மூன்று சொற்றொடர்களும் அடங்கும்.

குறிப்பு.

லோகல் போர்டு.—லோகல் போர்டுகள் சட்டத்தால் உற்பத்தி செய்யப்பட்டவை (திம்மரெட்டி எ. செக்ரிடேரி ஆப்ஸ்டேட், 41 M. 325=A.I.R. 1924 M. 523). லோகல் போர்ட் ஆக்டும் மதருஸ் கவர்ன்மெண்டின் விளம்பரங்களும் லோகல் போர்டுகளை ஏற்படுத்தியவை, செ. 10-ன்படி மதருஸ் கவர்ன்மெண்டால் ஏற்படுத்தப்பட்ட மெம்பர்களின் மொத்த சங்கியை அல்ல. (வெங்கடராம ஐயர் எ. ஹமீத் சுல்தான் மரகாயர், 44 M.L.J. 161=A.I.R. 1923 M. 360). ஒரு லோகல் போர்ட் என்பது அதன் தனிப்பட்ட மெம்பர்களின் மொத்த சங்கியைக் காட்டிலும் விசேஷமானதும் வேரானதுமான அமைப்பாகும். ஆக்டின் 6 (3)-வது செக்ஷன் அதை இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரை யுடையவராய் யிருக்கும் சபையாகுமென கூறுவது மல்லாமல் சட்டப்படிக்கான தங்களுடைய பெயரால் வியாஜ்யம் தொடரவும் பிறரால் தொடரப்பெரவும் வல்லமை (யோக்கியதை) யுடையவரெனவும் விதிக்கிறது. பொது முறைகளை யனுசரித்தும் இத்தகைய இதர சபைகள் தமது காரியங்களை நடத்தும் கிரமங்களை யனுசரித்தும் லோகல் போர்டுகள் நடத்தக்கூடும்; இம் முறை சரியென்பது ஆக்டின் நியமங்களினாலும் அதன்படி தமது அலுவல்களை கிரமமாக நடைபெறும் தமது கூட்டம் மீட்டிங்குகளில் மாத்திரமே ஏற்பட்ட விதிகளினாலும் நிரூபிக்கப்படுகிறது. (சிவசங்கரம் பிள்ளை எ. எம்பார், 52 M. 446=56 M.L.J. 157=A.I.R. 1928 M. page 8.) கூட்டம் கூடி காரியங்களை நடத்துவதற்கு பதிலாக பேபர்களை ஒவ்வொரு மெம்பருக்கும் அனுப்பி அதன் மூலம் காரியங்களை தீர்தப்படுத்துவதாகக் கருதி செய்வது கிரமத்திற்கு விரோதகரமான முறையாகும்,—இதில் ஏற்படும் தவறுகள் பரிகாரம் செய்யக் கூடியதாகாது. (மரத் ராவ் எ. நாகபூர் முனிசிபல் கமிட்டி, A.I.R. 1926 N. 281=92 I.C. 796). சபையாரால் நடைபெறவேண்டிய விஷயங்களைக் குறித்த நோடீசை மெம்பர்களுக்கு அனுப்பியதினாலேயே அது லோகல் போர்ட்டால் நடத்தப்பெற்ற அலுவலாக கொள்ளப்படாது; இந்த ஆக்டின்படியும் அதன் விதிகளுக்கிணங்கியும் நடத்தப்படும் கூட்டத்தில் அவ்விஷயங்கள் கொண்டுவரப்பட்டு ஆலோசிக்கப்பட்டு அலுவல்களாக நடைபெற வேண்டும். (சிவசங்கரம் பிள்ளை எ. எம்பார், 52 M. 446=56 M.L.J. 157). "ஷெ. II. விதி 2, கூட்டம்" எனும் தலைப்பைப் பார்க்க, டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்பது சொத்துக்களை உரியதாக்கிக் கொள்ளவும், ஒருவருக்குப்பின் ஒருவராய் தொடர்ந்துவரும் மெம்பர்களைப் பெற்றதாய் தன் சொந்தப் பெயரையுடைய பொது முத்திரை யுடையதாய் தன் கூட்டுப் பெயரினால் வியாஜ்ஜியம் தொடரவும் தொடரப்பெறவும் கூடியதாயும் உள்ள ஒரு கூட்டுறவு பெற்ற சபையாகும். இத்தகைய கூட்டுறவு பெற்ற சபையாக இருப்பதால் அதன் பிரசிடெண்ட் அல்லது அதன் தனி மெம்பர்களைக் காட்டிலும் அது பிரத்தியேக ஸ்தாபனமாகும். பிரசிடெண்ட் போர்டின் காரியஸ்தர் (ஏஜெண்ட்) ஆகமாட்டார் பிரசிடெண்டில்லாமல் போர்ட் தன் பெயரால் தன் முயற்சியால் வியாஜ்யம் தொடர முடியாதென கூறுவது பொருந்தாது. (செக்ரிடெரி ஆப்ஸ் டேட் எ. தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர்ட், 31 L.W. 508=1920 M.W.N. 328).

"லோகல் பண்ட்."

(12) "லோகல் பண்ட் (பிரதேச நிதி)" என்பது-டிஸ்டிரிக்ட் பண்ட் என்றாவது தாலுகா பண்ட் என்றாவது, கிராம பண்ட் என்றாவது அர்த்த மாவது மல்லாமல், அந்த சொற்றொடரில் இம் மூன்று சொற்றொடர்களும் அடங்கும்.

"அசங்கியம் அல்லது சங்கடம்"

(13) "அசங்கியம் அல்லது சங்கடம்" என்பதில் - கட்புலன், நாசிப் புலன் அல்லது செவிபுலனுக்கு, தீங்காவது, அபாயமாவது இடைஞ்சலாவது, தோஷமாவது உண்டுபண்ணுகிறதாகவோ அல்லது வெகுசாய் உண்டுபண்ணக்கூடியதாகவோ இருக்கும் அல்லது பிராணனுக்கு அபாயகரமாகவோ தேகாரோக்கியத்துக்கு அல்லது சொத்துக்குத் தீங்கு செய்வதாகவோ இருக்கும் அல்லது இருக்கக்கூடிய யாதொரு செய்கை அல்லது செய்யாதொழிகை அல்லது இடம் அல்லது பொருள் என்பதும் அடங்கும்.

குறிப்பு.

போது.—இந்தியன் பெனல் கோடின் செக்ஷன்கள் 268, 290-ல் கண்ட குற்றங்களை அடக்கிக்கொள்ள இந்த வியாக்யானம் போதுமானபடி அகண்டிருக்கிறது.

அபாயம்.—அது உடனே நேர்வதாகவோ அல்லது நாள் பொறுத்து வருவதாகவோ இருக்கலாம். அது எப்படியாயினும் அபாயமே அது நாள் பொறுத்து வருவதாயிருப்பதால் அதை வாாமல் தடுத்துக்கொள்வதற்கு போதுமான கால சௌகர்ய மிருக்கிறது. (பசால் தீன் எ. எம்பரர், 13 P.R. 1906 Cr.=5 Cr. L.J. 81=59 P.L.R. 1907).

அசங்கியம்.—கார்பரேஷன் ஒரு இடத்தை தகுந்ததென தேர்ந்தெடுத்து அங்கே ஒரு கக்கூசைக் கட்டுவதற்காக உத்தேசித்தால் சொத்துகளுக்குள்ள மனோகரத் தன்மை அல்லது சொத்துக்கள் தமக்குள்ள மனோகரத்தன்மையை இழந்துவிடுவது காரணமாக ஏற்பட்ட மதிப்பு குறைவு ஆகியவை. உத்தேசத்தை தடுப்பதற்கான உத்திரவை பெற்றுக்கொள்ளும் உரிமையை ஆதரிக்கமாட்டாது. (சூரந்தி பாரா பஸார் கம்பெனி லிமிடெட் எ. முனிசிபல் கார்ப்ரேஷன், ரங்கோன், 5 R. 722=107 I.C. 849=A.I.R. 1928 Rang. 87). பொது வீதிகளைச் சுத்தம் செய்வதற்கு குப்பை வண்டிகள் அவஸ்யம். வாசம் செய்யும் வீடுகளுக்கு அடுத்தாப்போல் குப்பை வண்டிகளை நிறுத்திவைக்கும் இடம் இருப்பது அசங்கியம் ஆகாது. (ஹன்ஸ்ராஜ் ஹிராஜீ எ. கராச்சி முனிசிபாலிடி, 4 S.L R. 65=8 I.C. 208).

"சாதாரண காலிஸ்தானம்." "சாதாரண எலெக்ஷன்."

(13 A) "சாதாரண காலிஸ்தானம்" என்பது—காலம் முடிந்து போவதன்மேல் ஏற்படும் யாதொரு காலிஸ்தானமென்று அர்த்தமாகும்; மேலும், "சாதாரண எலெக்ஷன்" என்பது - சாதாரண காலிஸ்தானம் ஏற்படுவதன்மேல் நடத்தப்படும் யாதொரு எலெக்ஷனென்று அர்த்தமாகும்.

"சொந்தக்காரர்."

(14) "சொந்தக்காரர்" என்பதிலே - (a) அந்தந்த காலத்தில் சொந்தத்துக்காகவாவது, வேறொருவருக்காக ஏஜென்ட், ட்ரஸ்டி, கார்டியன் (சம்ரட்சகர்), மானேஜர் (நிர்வாக கர்த்தர்) அல்லது ரிஸீவராகவாவது, மதசம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான யாதொரு காரியத்துக்காகவாவது எந்த சொத்தின் விஷயமாக ஷை பதம் உபயோகிக்கப் படுகிறதோ அந்த சொத்தின் வாடகையையாகிலும் வரும்படியையாகிலும் பெற்றுக்கொள்ளுகிற அல்லது பெற்றுக்கொள்வதற்கு அர்ஹராயிருக்கிற நபரென்பதும், (b) எந்தப் பிராணி அல்லது வாகனத்தின் விஷயமாக ஷை பதம் உப்யோகிக்கப்படுகிறதோ அந்தப் பிராணி அல்லது வாகனத்தை அந்தந்த காலத்தில் தம் விசாரணையில் வைத்திருக்கிற நபரென்பதும் அடங்கும்.

குறிப்பு.

போது.—இந்த சப்செக்ஷன் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல் பாகம் சொத்தின் குடிக்கூலி அல்லது லாபங்களைப் பெற்றுக்கொள்ளுபவர்களைக் குறித்தது. இரண்டாவது பாகத்தின் கீழ் வரும் ஒரு பிராணி அல்லது வண்டியைச் சார்ந்தவைகளைத் தவி

மற்ற அசையும் பொருள் அசையாப் பொருள்களின் வகையைச் சார்ந்த எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டிருக்கிற விதமாக இங்கே சொத்து என்பதை அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். முதல் பாகத்தில் கண்டபடி சொந்தக்காரராயிருப்பதற்கு அவர் குடிக்கூலி அல்லது லாபங்களை பெற்றுக்கொள்பவராய் அல்லது பெற்றுக்கொள்ள உரிமை பெற்றவராய் இருக்க வேண்டும். அவர் தன் பெயரால் பெற்றுக்கொள்ளுகிருரோ அல்லவோ அது அவ்வளவு முக்கியமல்ல.

"பல்லக்கு."

(15) "பல்லக்கு" என்பதிலே-கழிகளைக்கொண்டு ஆட்களால் சுமக்கப்படும் டான்ஜன், மாஞ்சில், நாற்காலி என்பவைகளும் அடங்கும்; ஆனால், குழந்தைகள் அல்லது வயதானவர்கள அல்லது வியாதியஸ்தர்களைக் கொண்டுபோவதற்காக உபயோகிக்கப் படும் தொட்டில்கள் அல்லது கட்டில்கள் அதில் அடங்கமாட்டா.

"பஞ்சாயத்து."

(15-A) "பஞ்சாயத்து" என்பது-யாதொரு கிராமத்தின் பிரதேச பரிபாலனத்துக்காக 6-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட அதிகார சபை என்று அர்த்தமாகும்.

"பஞ்சாயத்து தாரர்."

(15-B) "பஞ்சாயத்துதாரார்" என்பது-யாதொரு பஞ்சாயத்தின் மெம்பரென்று அர்த்தமாகும்.

குறிப்பு.

பஞ்சாயத்து.—திருத்தத்திற்கு (அமெண்ட்மெண்ட்) முன் பஞ்சாயத்தென்பது யூனியன் போர்ட் என வழங்கப்பெற்றிருந்தது. உபயோகிக்கப்பட்டிருக்கும் பெயர்களைக் கொண்டு நன்மை தீமை சொல்வது ஒருவருக்கு கூடாது எனினும், யூனியன் போர்ட் எனும் நாமதேயத்தைப் பெற்றிருந்தபோது மறைவாய் தேர்ந்தெடுத்தல் (எலக்ஷன் செய்தல்) முறையிலுள்ள அதே குடியாட்சிக் கொள்கையை பஞ்சாயத்தென்பது தன்னுடன் பெற்றில்லை. கிராம பஞ்சாயத்துகளின் ஆக்டை ரத்து செய்துவிட்டதினுலும், அதன்படி ஏற்பட்டிருந்த கிராம பஞ்சாயத்துகள் எனும் கூட்டுறவு பெற்றிருந்த சபைகளை இந்த ஆக்டின் கீழ் கொண்டு வந்து விட்டதனுலும், அவைகளை யூனியன் போர்டுகள் என்றழைப்பதற்கு பதிலாக கிராம பஞ்சாயத்துகளென்றழைப்பதற்கு அதுவே தக்க நியாயமாகி விட்டது. அந்த ஆக்டின்படி யூனியன் போர்டாயிருந்தது இந்த திருத்தப்பட்ட ஆக்டின்படி பஞ்சாயத்தாக மாற்றப்பட்டிருக்கிறது இந்த திருத்தப்பட்ட ஆக்டினுல் மதராஸ் கிராம பஞ்சாயத்துகளின் ஆக்ட் ரத்து செய்யப்பட்டிருப்பதால், மதராஸ்கிராம பஞ்சாயத்துகளின் ஆக்டின்படி ஏற்பட்டு இதுவரை யிருந்துவந்த கிராம பஞ்சாயத்துகள் கூட இந்த ஆக்டின்படி பஞ்சாயத்துகளாக்கப்பட்டிருக்கின்றன. செ. 3 (23) கிராமம், செ. 5 ம் 6 (1) ம் "ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து" எனும் வியாக்யானங்களைப் பார்க்க.

"நிர்ணயிக்கப்பட்ட."

(16) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது-இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினுல் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்.

"சொந்தமான பாட்டை."

(17) "சொந்தமான (ப்ரைவேட்) பாட்டை" என்பது-"பொதுவான பாட்டை" யாயிராத யாதொரு தெரு-பாட்டை-சதுக்கம்-வெளியிடம்-முடுக்குச்சந்து-வழி அல்லது குதிரையேரிச் செல்லும் பாதை என்று அர்த்தமாகும்; ஆனுல் அதில், ஒரு வளவின் சொந்தக்காரர் அந்த வளவுக்குப் போவதற்காவது அதன் சௌகரியமான உபயோகத்திற்காவது தம்முடைய சொந்த நிலத்தில் ஏற்படுத்திககொண்ட வழி என்பது அடங்காது.

குறிப்பு.

திருவிழாக்காலத்தில் ஒரு பாதையில் ஒரு பந்தலின்கிழ் நிறுத்தப்பட்டிருக்கும் ரதத்தைப் பார்க்கவும் சேவிக்கவும் செல்லும் ஜனங்கள் நடப்பதற்கும் அநுகூலமாயிருக்கும்படி ஒரு நிலம் விடப்பட்டிருக்கிறது. தர்மகர்த்தாவின் அநுமதியின்பேரில் ஜனங்கள் அந்த நிலத்தின் மீது செல்கிருர்கள், வருஷத்தின் சில காலத்தில் நிலத்தின் வழியாக ஜனங்கள் செல்லுவது தடுக்கப்படுகிறது, அந்நிலமுழுதும் கடைக்காரர்கள் தம் கடைக் கொட்டகைகளை போட்டுக்

கொள்ள அவர்களிடமிருந்து வேஷபெய்த்துகள் சுங்கம் வசூலிக்கிறார்கள்; இத்தகைய ஒரு விஷயத்தில், பொது ஜனங்கள் அந்த நிலத்தின் மீது உரிமையுடன் நடந்து செல்வதற்கு உரிமை கிடையாது. ஆனபடியால் அது முனிசிபாலிடியின் பாதையாகாது. முனிசிபாலிடிக்கு உரியதுமாகாது. (குமுத் பந்து தாஸ் குப்தா எ. கிஷோரி லால் கோஸ்வாமி, 9 I.C 562). பொது ஜனங்களிற் சிலருக்கு ஒரு நிலத்தின்மீது செல்ல நிபந்தனையோடு ஏற்பட்ட ஒரு சௌகர்யத்தை முன்னிட்டு அந்த நிலம் பொது ஜனங்களுக்குரியதென பாவித்து முனிசிபாலிடி சொந்தம் பாராட்டக் கூடாது. பொது ஜனங்களில் சிலர் சொற்பமாக ஒரு நிலத்தில் நடமாடுவதைக் கொண்டு ஒரு முனிசிபாலிடி அந்த நிலம் பொது உடமையாகுமென சொந்தம் பாராட்ட முன்வருமானால் ஒருவருடைய சொத்தின் உரிமையும் பத்திரமாய் காப்பாற்றிக் கொள்ள முடியாததாகிவிடும். (அலகாபாத் முனிசிபாலிடி எ. மணிலால் உதேநாத், 20 A. 146).

"பொதுவான பாட்டை."

(18) "பொதுவான பாட்டை" என்பது ஜனங்கள் போக்கு வரத்தாயிருந்தாலும் இராவிட்டாலும், அவர்களுக்கு வழிநடை பாத்தியதை உண்டாயிருக்கிற யாதொரு தெரு - பாட்டை - சதுக்கம் - வெளியிடம் - முடுக்குச் சந்து - வழி அல்லது குதிரையேறிச் செல்லும் பாதை என்று அர்த்தமாகும்; மேலும் அதில்—

(a) "பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற யாதொரு வாராவதியின்மேல் போகிற வழி அல்லது மேடான பாதை என்பதும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்த ஒற்றடிப் பாதை என்பதும்,

(c) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை, பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்திருக்கிற சாக்கடைக் கால்கள் என்பதும். வழிக்குப் பக்கத்திலிருக்கிற சொத்தானது ஒரு வருக்கே உரிய சொத்தாயிருந்தாலுஞ்சரி, கவர்ன்மென்டாருக்குச் சொந்தமான சொத்தாயிருந்தாலுஞ்சரி, அதன் எல்லைகள் வரையிலே வழியின் இருபக்கத்திலும் யாதொரு தளவரிசை, தாழ்வாரம் அல்லது வேறே கட்டுக் கோப்பு கவிந்தாகிலும் கவியாமலாகிலும் இருக்கிற நிலமென்பதும் அடங்கும்.

குறிப்பு.

"மத சம்பந்தமானதும் அல்லாததுமான ஊர்வலங்களை நடத்துதற்காக வியாஜ்ஜியம் தொடர்தல்" ஆகியவைகளையும் பார்க்க. பொதுப்பாட்டைகளில் அடைப்புகள் ஏற்படுத்தல்—செ. 163-ன் வியாக்யானத்தைப் பார்க்க வீதிகளை நியாயவிரோதமாக ஆண்டுக் கொள்வது—செ. 158-ன் கீழுள்ள வியாக்யானத்தைப் பார்க்க. பாதைகள் சங்கிரமிப்பது—செ. 60 பார்க்க.

வசதி.—1882ஆ௵த்து V வது ஈஸ்மெண்ட் ஆக்ட், செ. 4-ல் வசதி (ஈஸ்மெண்ட்) என்பதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் வித்யானத்திற்குள் பொது ஜனங்கள் பாதையின் வழியாய் செல்லுவதற்குள்ள உரிமை வரவில்லை, ஏனெனில், நில சொத்தின் உரிமை அது பொருத்ததாயிருக்கவில்லை. (பஞரிஸ் முனிசிபல் போர்ட் எ. பாரிலால், A. 560 =A.I.R. 1926 A. 538).

வீதி.—ஒரு வீதி ஒரு முனிசிபல் கமிட்டியில் சங்கிரமித்திருக்கும்போது அதை ஒரு வீதியாகவே பராமரித்து வருவதற்காக அதற்கேற்பட்டுள்ள பொறுப்பை நடத்திக்கொண்டு வருகிறதற்கு மாத்திரம் அது அதிகாரம் பெற்றிருக்கிறது. பொது வீதியை வீதியாக வல்லாது வேறுவிதமாக உபயோகிக்கக்கூடாது. அதன் ஒரு பாகத்தை தனி நபர்களுக்கு வாடகைக்கு விடுத்து பொது ஜனங்கள் நடப்பதற்குள்ள உரிமையை அனுபவிக்கும் விஷயத்தில் பாதகம் உண்டாகும்படி அது நடக்கக்கூடாது. (சுந்தரம் ஐயர் எ. முனிசிபல் கௌன்சில், மதுரை, சில், 25 M. 635; தொடர்ந்து முனிசிபல் கமிட்டி, முல்டான் எ. தஹலியா ராம், 73 I.C. 292=A.I.R. 1923 L. 272).

அவர்களுக்கு வழி நடை பாத்தியதை உண்டாயிருக்கிற யாதோரு.—இப்பதங்கள் முழு செக்ஷனையும் கவர்ந்துகொண்டிருக்கின்றன. ஆதலால், ஒரு பாதை நெடுக பக்கத்தில் ஒருவருக்கும் சொந்தமாகாத ஒரு துண்டு நிலம் நீண்டிருக்குமானால், அந்த நிலத்தின்மீது நடந்து செல்ல ஜனங்களுக்கு உரிமையுண்டு யென நிரூபிக்கப்பட்டாலொழிய அந்தப் பதை

யின் ஒரு பாகமாக அந்த நிலத்தைக் கொள்ளக்கூடாது. (யூனியன் போர்ட், பட்டுக்கோட்டை எ. ஆத்மநாத ஐயர், 51 M.L.J. 474=A.I.R. 1926 M. 1159 (1)=98 I.C. 21). ஒரு நிலம் "ரோட் பொறம்போக்" என ரெஜிஸ்டர் செய்யப்பட்டு லோகல் போர்டில் சங்கிரமித்திருந்தால், பாதை முழுமையும் ஜனங்களால் உபயோகித்துக் கொள்ளாவிட்டாலும் அதன் பக்கங்கள் பாதைகளின் பாதுகாப்பு காரியங்களுக்காக உபயோகிக்கப்பட்டு வந்தாலும், பாதையின் பாகமாகவிருக்கும் அந்த நிலத்தில் எந்த பாகத்திலும் நடந்து செல்ல ஜனங்களுக்கு உரிமையுண்டு. (பப்ளிக் ப்ராசிக்யூடர் எ. பழனியாண்டி நாய்க்கன், 51 M. 519=A.I.R. 1928 Mad. 160).

போக்கு வரத்தாயிருந்தாலும் இராவிட்டாலும்.—டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சார்ந்த பாதைகளில் ஜனங்கள் நடப்பதற்கு பாதைகளிலும் பாதைகளைச் சார்ந்த பக்க நிலங்களிலும் நடமாடுவதற்கும் எல்லாவித பழக்க வழக்கமான போக்கு வரத்து சாதனங்களுக்கும் உபயோகிப்பவருக்குள்ள விசேஷமான உரிமையுண்டு. (ஹிர்ஜி பால் தேவ் எ. மாபூம் டிஸ்ட்ரிக்ட் போர்ட், 22 I.C. 763=15 Cr L.J. 187).

"வாசஸ்தலம்"— "வசிக்க."

(19) யாதொரு நபர் வீட்டின் எந்த பாகத்தையாகிலும் தூங்குவதற்கான அறையாக சில காலங்களில் உபயோகித்தால், அவர் அப்படிப்பட்ட வீட்டில் தம்முடைய "வாசஸ்தலத்தை" உடையவராக அல்லது அதில் "வசிப்பவ" ராக எண்ணப்படுவார்; மேலும்,

யாதொரு நபர் எப்போதாகிலும் அப்படிப்பட்ட யாதொரு வீட்டுக்கு இஷ்டப்பட்டால் திரும்பிவரக்கூடியவராயிருந்து அப்படி திரும்பிவரும் உத்தேசத்தை விட்டுவிடாதிருந்தால், அவர் அந்த வீட்டில் இராத காரணத்தினாலே யாவது வேறே இடத்திலுள்ள இன்னொரு குடியிருப்பு வீட்டில் அவர் வசிப்பதனாலேயாவது அவர் முதலில் சொன்ன வீட்டில் வாசஞ்செய்வது நின்று போய்விட்டதாக எண்ணக்கூடாது.

குறிப்பு.

ஒரு வீட்டை தூங்குவதற்காக உபயோகிப்பது மாத்திரமே அதில் வசிப்பவர் வசிப்பதற்காக உபயோகித்துக் கொண்டாரென தீர்மானிப்பதற்கு போதுமானது. தூங்கும் இடத்தை ராத்திரி யில்மாத்திரமே உபயோகிக்க வேண்டுமெனும் அவசியமில்லை. தூங்குவதற்காக உபயோகிக்கத் தகுந்ததாக அந்த வீடு இருக்கவேண்டும். (ப்ராஸ்ட் எ. காஸ்டன், (1929) 2 K.B. 138). "வசித்தல்" எனும் பதம் சாதாரண ஜனங்களைக் குறிப்பதாய் கொள்ளவேண்டும், நியாய வாயிலாய் இருக்கும் லிமிடெட் கம்பெனிகளையாவது கவர்ன்மெண்டையாவது குறிக்காது. "அலுவல்களை நடத்துதல்" என்பது ஒரு கூட்டுறவு சபையையும் லிமிடெட் கம்பெனிகளையும், "சுயலாபத்திற்காக வேலை செய்வதென்பது" ஒரு தனி நபர் அல்லது நபர்களைக் குறிப்பதுபோல, "வசித்தல்" எனும் பதம் ஒரு தனி நபரின் சொந்த விஷயமெனும் கருத்தையே குறிக்கும், நியாய வாயிலாக ஏற்பட்டிருப்பவர்களைக் குறிக்காது. (கோவிந்தராஜுலு நாயுடு எ. செக்ரிடெரி ஆப் ஸ்டேட், 50 Mad. 449=A.I.R. 1927 Mad. 689=53 M.L.J. 355.)

"ரெவினியு தாலூகா."

(19-A) "ரெவினியு தாலூகா" என்பது - ரெவினியு பரிபாலனத்தின் காரியங்களுக்காக யாதொரு தாசில்தாரரின் அல்லது சுயேச்சையான அதிகாரம் வகிக்கும் டெப்யுடி தாசில்தாரரின் மேல் விசாரணையில் இருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்; ஆனால், (7) குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த (*a*) முதல் (*c*) வரையிலுள்ள உட்பகுதிகளில் சொல்லியிருக்கும் விஸ்தீர்ணங்கள் எவையேனும் இருந்தால் அவைகளை அதிலிருந்து விலக்கி விடவேண்டும்.

"ரெவினியு கிராமம்."

(19-B) "ரெவினியு கிராமம்" என்பது - கவர்ன்மெண்டாரின் ரெவினியு கணக்குகளில் கிரமமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்; ஆனால், (7) குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த (*a*) முதல் (*c*) வரையிலுள்ள உட்பகுதிகளில் சொல்லியிருக்கும் விஸ்தீர்ணங்கள் எவையேனும் இருந்தால் அவைகளை அதிலிருந்து விலக்கி விடவேண்டும்.

"சம்பளம்."

(20) "சம்பளம்" என்பது - சம்பளமும் பதில் உத்தியோக சம்பளமு மென்றுவது, கம்மிஷனுகக் கொடுக்கப்படும் தொகையென்று வது அர்த்தமாகும். மேலும், அதில் (எக்ஸ்சேஞ்ச் காம்பென் ஸேஷன்) பரிவர்த்தன பிரதிபலன் வர்த்தனை என்பது அடங்குமேயல்லாமல், வீட்டுக் குடிக்கூலி, வண்டி வாடகை அல்லது பிரயாணச் செலவுக்காகக் கொடுக்கப்படும் வர்த்தனை யென்பது அடங்காது.

"கீழ் நிலத்துக் குடையவர்"

(21) "கீழ் நிலத்துக்குடையவர்" என்பது-நிலத் துக்குடையவராயிராமல்—

(*a*) (i) ஒரு ரெவினியு கிராமமோ அல்லது பல ரெவினியு கிராமங்களோ அடங்கிய யாதொரு பூஸ்திதியின் ஒரு பாகத்தை அப்படிப்பட்ட பூஸ்திதியின் சொந்தக்காரரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது பின்னும் அனுசரித்துக்கொண்டு வரப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட கீழ்க் காணியாட்சியாக வைத்துக்கொண் டும், அல்லது

(ii) நிலத்துக்குடையவரின் ஏஜெண்டாகவோ அல்லது ஊழியக்கார ராகவோ அல்லாமல் மற்றப்படி அப்படிப்பட்ட யாதொரு கிராமம் அல்லது கிராமங் களின் குத்தகைத் தொகைகளை வசூல் செய்ய பாத்தியதை உடையவராயும்,

(*b*) நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி கலெக்டருடைய ஆபீஸில் கீழ் நிலத்துக்குடையவராக ரெஜிஸ்டர் செய்யப்பட்டும் உள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாகும்.

விவரணம்.—இந்தப் பகுதியில், 'பூஸ்திதி' என்பது - சென்னப்பட்ட ணத்து 1894-ம் வருஷத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக் டில் 'பூஸ்திதி' என்பதன் அர்த்தத்தைச் சேர்ந்த (*a*), (*b*) அல்லது (*c*) குறிப் பிட்ட பகுதியின்படி இருக்கும் யாதொரு பூஸ்திதி என்று அர்த்தமாகும்; மேலும், 'பூஸ்திதிக்குடையவர்' என்பது - ஷை ஆக்டில் அர்த்தம் சொல்லி யிருக்கிறபடியுள்ள யாதொரு பூஸ்திதிக்குடையவரென்று அர்த்தமாகும்.

"தாலூகா."

(21-A) "தாலூகா" என்பது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி 4-வது பிரி வைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியுள்ள ரெவி னியு தாலூகா என்றுவது, ஷை பிரிவைச் சேர்ந்த (2) குறிப் பிட்ட உட்பிரிவின்படியாவது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாவது யாதொரு தாலூகாவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரெவினியு தாலூகாக் கள் அல்லது விஸ்தீர்ணம் என்றுவது அர்த்தமாகும்.

"தாலூகா போர்ட்."

(21-B) "தாலூகா போர்ட்" என்பது-யாதொரு தாலு காவின் பிரதேச பரிபாலனத்துக்காக 6-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட சபை என்று அர்த்தமாகும்.

"பாயக்காரி."

(22) "பாயக்காரி" என்பதிலே-சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலத்துக்குடைய வருக்காவது இடையிலுள்ள நிலத்துக்குடையவருக்காவது குத்தகைத் தொகை செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் நேராகவாகிலும் ஏஜெண்ட் மூலமாகவாகிலும் அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் அல்லது இடையிலுள்ள நிலத்துக்குடையவரின்கீழ் பூமியை அனுபவிக்கிற சகலமானவர்களும் என்பதும் அடங்கும்.

"கிராமம்."

(23) "கிராமம்" என்பது - 5-வது பிரிவின்படி கிராமம் என்று நிர்ணயிக்கப்படும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்.

"வருஷம்." (24) "வருஷம்" என்பது - பைனென்ஷியல் (அரசிறை) வருஷமென்று அர்த்தமாகும்.

2-ம் பாகம்—லோகல் போர்டுகளை ஸ்தாபிப்பதும் அமைப்பதும் பரிபாலனஞ்செய்வதும்.

2-ம் அத்தியாயம்.

டிஸ்ரிட்க்டுகளும் தாலூகாக்களும் கிராமங்களும்.

தாலூகாக்களும் கிராமங்களும்.

தாலூகாக்கள். **4**. (1) (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒவ்வொரு ரெவினியு தாலூகாவும் ஒரு தாலூக்காவாகக் கருதப்படும்.

(2) (*a*) பிரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஒரே டிஸ்ட்ரிக்டில் அடுத்தாற்போலுள்ள இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ரெவினியு தாலுகாக்கள் சேர்ந்து இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு தாலூகாவாகுமென்று நிர்ணயித்து, அந்தத் தாலூகாவின் பெயரைக் குறிப்பிடலாம்.

(*b*) பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய்,—

(i) (a) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு தாலூகாவில் அடங்கிய யாதொரு ரெவினியு தாலூகாவை அதிலிருந்து விலக்கலாம்; அல்லது

(ii) அப்படிப்பட்ட யாதொரு தாலூகாவுக்குச் சமீபத்திலுள்ள யாதொரு ரெவினியு தாலூகாவை அதில் சேர்க்கலாம்; அல்லது

(iii) (a) குறிப்பிட்ட பகுதியின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம்; அல்லது

(iv) (a) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் அறிக்கையிட்டபடியுள்ள அந்தத் தாலூகாவின் பெயரை மாற்றலாம்.

(*c*) (a) குறிப்பிட்ட பகுதியின்படியாவது (b) குறிப்பிட்ட பகுதியின்படியாவது விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னே, பிரதேச கவர்ன்மெண்டார்—அப்படிப்பட்ட விளம்பரம் வெளியிடுவதனால் பாதிக்கப்படும் தாலூகா போர்ட் அல்லது தாலூகா போர்டுகள் பிரஸ்தாப உத்தேசத்துக்கு விரோதமாய்க் காரணம் காட்டுவதற்காக அப்படிப்பட்ட போர்ட் அல்லது போர்டுகளுக்கு நியாயமான அவகாசம் கொடுத்து, அந்தத் தாலூகா போர்டாவது தாலூகா போர்டுகளாவது சொல்லிக்கொள்ளும் எவையேனும் சமாதானங்களையும் ஆட்சேபனைகளையும் பற்றி ஆலோசிக்கவேண்டும்.

(3) (a) (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் விசேஷ சந்தர்ப்பங்களில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக டிஸ்ட்ரிக்டின் யாதொரு பாகத்தை இந்த ஆக்டின் காரியங்களுக்காக தாலூகாவென்று நிர்ணயித்து, அந்தத் தாலூகாவின் பெயரைக் குறிப்பிடலாம்.

(b) பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய்,—

(i) (a) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு தாலூகாவில் அடங்கிய யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதிலிருந்து விலக்கலாம்; அல்லது

(ii) அப்படிப்பட்ட யாதொரு தாலூகாவுக்கு சமீபத்திலுள்ள யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதில் சேர்க்கலாம் ; அல்லது

(iii) (a) குறிப்பிட்ட பகுதியின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம் ; அல்லது

(iv) (a) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் அறிக்கையிட்டபடியுள்ள அந்தத் தாலுக்காவின் பெயரை மாற்றலாம்.

c. (a) குறிப்பிட்ட பகுதியின்படியாவது (b) குறிப்பிட்ட பகுதியின் படியாவது விளம்பரம் வெளிவிடுவதற்கு முன்னே, (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் நடவடிக்கை முறையை அனுசரிக்கவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட விளம்பரம் வெளிவிடுவதற்குச் சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூகா போர்ட் ஆகிய இவை எவையேனுமிருந்தால் அவைகளின் சம்மதத்தைப் பெறவும் வேண்டும்.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படியாவது (b) அடையாளமிட்ட பகுதியில்கண்ட (ii) குறிப்பிட்ட உட்பகுதியின்படியாவது, (3) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படியாவது (b) அடையாளமிட்ட பகுதியில் கண்ட (ii) குறிப்பிட்ட உட்பகுதின்படியாவது வெளிவிடப்படும் ஒவ்வொரு விளம்பரத்திலும் அது பிறப்பதற்குண்டான காரணங்களைப்பற்றிய குறிப்பு ஒன்று அடங்கியிருக்க வேண்டும் ; மேலும், ஷை விளம்பரம் சட்டநிரூபண சபையாருக்குமுன் வைக்கப்படவேண்டும்."

குறிப்பு.

தாலூகா.—செ. 3 (21-A) பார்க்க. ரெவின்யூ தாலூகா—செ. 3 (19-A) பார்க்க. பிரதேச (மதராஸ்) கவர்ன்மெண்ட்—செ. 38 பார்க்க. விளம்பரம்—செ. 215 பார்க்க. தாலூகா போர்ட்—செ. 3 (21-B) பார்க்க.

போது.—ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவுக்கும் ஒரு தாலூகா போர்ட் இருக்க வேண்டும். இந்தப் பொதுவான கொள்கை இருந்தும் மதராஸ் கவர்ன்மெண்டார் தமக்கு யுக்தமாகத் தோன்றும் வழியில் தாலூகா போர்டின் விஸ்தீரணத்தை மாற்றலாம். ஆனால் ஒவ்வொரு விஸ்தீரணமாறுதலுக்கும் ரத்தாதலுக்கும் விளம்பரமிருக்கவேண்டும். ரத்து செய்யப்படும் லோகல் போர்டு தாலூகா போர்டாகவோ பஞ்சாயத்தாகவோ இருந்தால் அதன் சொத்துகள் டிஸ்ட்ரிக்ட் போர்டின் வசத்தில் இருக்கவேண்டும். செ. 62 பார்க்க). ரத்து செய்யப்பட்ட லோகல் போர்டுகளுக்கு பதிலாக புதிய லோகல் போர்டுகள் ஏற்படுத்தப்பெறு விட்டால் மதராஸ் கவர்ன்மெண்டாவது டிஸ்ட்ரிக்ட் போர்டாவது யுக்தப்படி வியாஜ்யம் தொடர்தல் அல்லது தொடரப்பெறுதல் கூடும். ஒரு லோகல் போர்ட் விஸ்தீரணத்தில் குறைக்கப்பெற்றால் அந்த அளவுக்கேற்றபடி வியாஜ்யம் தொடர்தல் தொடரப் பெறுதல் கூடும். (செ. 235 பார்க்க.)

விளம்பரம்.—சப் செக்ஷன்கள் (1) (2) ன் கீழுள்ள தாலூகா போர்டுகளின் விஸ்தீரணத்தை மாற்றும்போது சம்பந்தப்பட்ட தாலூகா போர்டு அல்லது போர்டுகளுக்கும், சப்-செக்ஷன் (3)ன்படி சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூகா போர்டுகளுக்கும் விஸ்தீரணமாறுதல் கூடாதென்பதற்கு காரணமிருந்தால் எடுத்துக்காட்டும்படி அவகாசம் கொடுத்து அவர்கள் சமர்ப்பிக்கும் காரணங்களை மாறுதலை நடத்திவைப்பதற்குமுன் கவனித்து யோசனை செய்யவேண்டும். கூடாதென்பதற்குரிய காரணங்காட்டும்படி கேட்காமல் பிரசுரிக்கும் விளம்பரம் நியாய விரோதமாகும். சப் செக்ஷன் (3) ன்படி மாறுதல் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூகா போர்டுகளின் சம்மதத்தையும் பெற வேண்டும். கீழ்வரும் கேஸ் இதை நிரூபித்துக்காட்டும், மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடீஸ் ஆக்ட், 1884, ஒரு கௌன்சிலர் தன் உத்தியோகத்தில் தொடர்ந்திருப்பதால் முனிசிபல் பரிபாலனம் வெறுக்கத்தக்கதாவதாயிருந்தால் அவரை விலக்கிவிடுவதற்கு கவுன்சிலில் உள்ள கவர்னருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது, ஆனால் கவர்ன்மெண்ட் கௌன்சிலரை நீக்காதிருப்பதற்கு ஏதாவது காரணமிருந்தால் தெரிவித்துக்கொள்ளும்படி அவருக்கு அவகாசம் கொடாமல் உத்திரவை பிறப்பிக்கக்கூடாது. தனக்குள்ள குறையை சொல்லிக்கொள்ள சந்தர்ப்பங்கொடாமல் ஒரு கௌன்சிலரை நீக்கிவிட்டது நியா விரோதமென தீர்மானிக்கப்பட்டி

ருக்கிறது. (செல்வபெருமாள் செட்டியார் எ. இந்தியா செக்ரிடெரி ஆப் ஸ்டேட், 6 I.C. 604=1910 M.W.N. 271.) விளம்பரத்தில் மாறுதலுக்குள்ள காரணங்கள் சொல்லப்பட்டிருக்கவேண்டும்; சட்டசபை தெரிந்து கொள்வதற்காகவும் ஏதாவது குற்றம் இருந்தால் கூறுதற்காகவும் சபையில் வைக்கவேண்டும். (செ. 215 பார்க்க.)

"கிராமங்கள்."

5. (1) பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, ரெவினியு தாலூகாவின் யாதொரு பாகத்தை இந்த ஆக்டின் காரியங்களுக்காக கிராமமென்று நிர்ணயித்து, அந்த கிராமத்தின் பெயரைக் குறிப்பிடலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக,—

(a) யாதொரு கிராமத்தில் அடங்கிய யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதிலிருந்து விலக்கலாம்; அல்லது

(b) யாதொரு கிராமத்துக்குக் சமீபத்திலுள்ளதும் அதே ரெவினியு தாலூகாவிலுள்ளதுமான யாதொரு பிரதேச விஸ்தீரணத்தை அந்த கிராமத்தில் சேர்க்கலாம்; அல்லது,

(c) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம்; அல்லது

(d) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்பிரகாரம் அறிக்கையிட்டபடியுள்ள அந்த கிராமத்தின் பெயரை மாற்றலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் வெளிவிடுவதற்கு முன்னே பிரதேச கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட விளம்பரம் வெளிவிடுவதால் பாதிக்கப்படும் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகள் பிரஸ்தாப உத்தேசத்துக்கு விரோதமாய்க் காரணம் காட்டுவதற்காக அப்படிப்பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகளுக்கு நியாயமான அவகாசம் கொடுத்து, அந்த பஞ்சாயத்தாவது பஞ்சாயத்துகளாவது சொல்லிக்கொள்ளும் எவையேனும் சமாதானங்களையும் ஆட்சேபனைகளையும்பற்றி ஆலோசிக்கவேண்டும்."

குறிப்பு—பஞ்சாயத்துகள் (பொதுவாக).

சரித்ரம்.—இந்தியாவிலுள்ள பஞ்சாயத்துகள், முக்கியமாக இந்த மாகாணத்திலுள்ளவைகள், தன்னுடைய கீர்த்திக்கு பாத்திரமாக வெகு நீளமான சரித்ரத்தை பெற்றிருக்கிறது; இங்கிலாந்தின் பாரிஷ் கௌன்சிலையும் மேற்றிசையிலுள்ள பொதுஜன சபைகளைக் காட்டிலும் அது இங்கே கிராமாந்தரங்களில் வசிக்கும் ஜனங்களின் பிரதிதின வாழ்வில் அதிக ஆழமாக வேரூன்றிக் கிடக்கின்றது. அப்படியிருந்தும் சட்டரீதியாக மதிக்கப்படுவதற்கு பஞ்சாயத்துகள் நீண்ட காலம் சிரமத்தோடு பாடுபடவேண்டியிருந்தது. இந்த மாகாணத்தில் சீர்திருத்தம் ஆரம்பிக்கிற காலமுடிவில் அதற்குரிய மதிப்பை வழங்கிய பெருமை தூரதிருஷ்டியுடைய ஒரு இந்திய ராஜ தந்திரியின் சிறந்த மனோசக்திக்கும் தெளிந்தவைகளை வேகத்துடன் எடுத்து செலுத்தக்கூடிய சுபாவத்திற்குமே உரியது. 1920ஞூத்து 15-வது மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்ட் இதனால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆக்டின் முடிவில் "மாறுதல் நியமங்களை" குறிக்கும் ஷெட்யூலின் விதி 3யை யூனியன், போர்டுகள் பஞ்சாயத்துகள் மாறுதலைக் குறித்து பார்க்க. இப்போது யூனியன் போர்டுகளும் பஞ்சாயத்துகளும் ஒன்ருகி இந்த மதராஸ் லோகல் போர்டுகளின் ஆக்டின் கீழ் பஞ்சாயத்துகள் என்றழைக்கப் படுகின்றன.

புதிய உரிமைகள்.—திருத்தத்திற்கு முன் யூனியன் போர்டுகள் கிராமக் காடுகளையும் கிராம நீர் பாய்ச்சும் வேலைகளையும் மேற்பார்வையிடுதல், அழியாதபடி காப்பாற்றி வருதல், சரியாய் நடைபெறும்படி பார்த்து வருதல் ஆகியவைகளை மேற்கொள்ளும் உரிமையில்லாதிருந்தது. ரத்து செய்யப்பட்ட மதராஸ் பஞ்சாயத்து ஆக்டில் இருந்த முக்கியாம்சங்களான இவை செ. 65-A, 65-B களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மாற்றப்பட்ட காடு நீர் பாசன வேலைகளோடு கூட மதராஸ் கவர்ன்மெண்டும் மற்ற ஸ்தாபனங்களும் செ. 65, 65-C யில் கண்டபடி இந்த ஆக்டில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் அல்லாவிட்டாலும் இதர ஒரு ஸ்தா

பனத்தின் பரிபாலனத்தை அல்லது இதர ஒரு தொழிலை நடத்துவது அல்லது பரிபாலிப்பதை அல்லது இதர ஒரு அதிகாரத்தை மேற்கொள்ளுவதை அல்லது வேறு ஒரு கடமையைச் செய்வதை இந்தப் பஞ்சாயத்துகளுக்கு மாற்றலாம். மதராஸ் கவர்ன்மெண்டினுடைய நினைவுக்கு வரக்கூடிய எல்லா அதிகாரங்களையும் பஞ்சாயத்து கவனித்துவரும்படி விட இந்த செக்ஷன்களின் சூரத்துகள் போதுமான அளவு எல்லாவற்றையும் தழுவியதாக விருக்கிறது, அதாவது நில கிஸ்தி, பேஷ் கிஸ்தி முதலியவைகளை வசூல் செய்தல், பொரமபோக்கு நிலங்களை கிராமபுரங்களை குடிமராமத்துகளை சமுதாய நிலங்களை ஆறுதல், பயிர்களை மேற்பார்வையிடுதல், தன்னிடம் உத்தியோகத்திலிருக்கும் சிப்பந்திகளை அடக்கியாளுதல், கோயில், மசூதி முதலியவைகளில் பூஜை முதலியவைகளை நடத்தி வருதல், திருவிழாக்களை நடத்துதல், புராண பிரசங்கம், ஜாதி விவாதம் ஊர் விவாதங்களை தீர்த்துவைத்தல், பூனும்களையும் மிராசுகளையும் மேல் பார்த்து வருதல், மழை நீரை அளவிடுதல், மான்யங்களில் விழும் ஆடுமாடுகளின் எருவுக்கான கழிவுகளை குத்தகைக்கு விடுதல். குளம் ஏரி ஓரங்களில் சேறு பாசை முதலியவை, மரங்களிலிருந்து கழியும் தோல் செத்தை முதலியன, வயல்களிலும் நீர்க்கால்களிலுமுள்ள புல் வரப்புகள், முதலியவைகளை குத்தகைக்கு விடுதல், அறுவடையான வயல்களில் வாத்துகளை மேயவிடுதலுக்கு கட்டணம் வசூலிப்பது, தான்யங்களை அறுத்தல் அல்லது நிறுத்தல் முதலியவைகளுக்கு கட்டணம் வசூலிப்பது—இவைகள் மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ருசும்கள் என்றழைக்கப்பட்டவை. (மதராஸ் பஞ்சாயத்து புல்லெடின், வால்யம் I, நம்பர் 1, பக்கங்கள் 35, 36 பார்க்க.) பஞ்சாயத்துகள் பின் கண்டபடி கோவாபரேடிவ் சொசைடிகளின் (கூட்டுறவு சபைகளின்) வேலைகளையும் மேற்கொளலாம்: உயர்ந்த எரு, விதைகள், புதுமையான விவசாய கருவிகள் ஆகியவைகளை விவசாய இலாகாவுடன் ஒத்துழைத்து சவதரித்துக் கொடுப்பது, விவசாய மாதிரி பண்ணைகளும் ஆடுமாடுகளை அடைத்துவைக்கும் பட்டிகளும் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கப் பெறலாம். இந்த பஞ்சாயத்துகள் விவசாய கால் நடை வைத்ய, கூட்டுறவு, பொது சுகாதார இலாக்காக்களுடன் ஆலோசனை செய்து அலுவல்கள் நடத்தலாம். பஞ்சாயத்துகள் பொலி எருதுகளை தருவித்து, அவைகளை சரியாய் ஆதரித்து, ஆடுமாடுகளை அபிவிருத்தி செய்யலாம். (மதராஸ் பஞ்சாயத்து புல்லெடின், வால்யம் I, பாகம் I,—பக்கங்கள் 16, 17, பாகம் IV—பக்கம் 12. இதர விவரங்களுக்கு செ. V, விதி 1-A பார்க்க).

வரி விதிப்பது.—வரி விதிப்பது சம்பந்தப்பட்ட வரைக்கும் செ. 75 (1) ஷரா செ. 75 (2) ன் கீழ் வியாக்யானத்தில் பூர்த்தியாக விவகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த செக்ஷன்படி பழைமையான யூனியன் போர்டுகளின்மீது மாத்ரம் வீட்டு வரி விதிக்கலாம், பழையதும் புதிதாயேர்படுவதுமான பஞ்சாயத்துகளின்மீது, அவைகள் சம்மதப்பட்டாலல்லது விதிக்கக்கூடாது. இப்போது பஞ்சாயத்துகளா யிருக்கிற பழைய யூனியன் போர்டுகள் செ. 75-ல் குறிப்பிட்டிருக்கிற நிலவரி, வீட்டுவரி, தொழில்வரி முதலியவைகள் தவிர எந்த வரியையும் அவர்களுக்கு சௌகர்யமாயும் தகுதியாயுமிருக்குமானால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விதிக்கும் உரிமை பெற்றிருக்கின்றன. ஆதலால் பழைய பஞ்சாயத்துகளும் பழைய யூனியன் போர்டுகளும் இந்த அமெண்ட்மெண்டுக்கு முன்பெற்றிருத புதிய உரிமைகளையும் சௌகர்யங்களையும் வரி விதிக்கிற விஷயத்தில் பெற்றிருக்கின்றன வென்பது இந்த அமெண்டிங் ஆக்டின் பெருமைக் குரியதெனச் சொல்லவேண்டும்.

எலெக்ஷன்ஸ் (தேர்ந்தெடுத்தல்)—ரத்து செய்யப்பட்ட மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி கிராமத்திலுள்ள வயதுவந்த புருஷர்கள், அதாவது ஒரு எல்லையிலாத நிதானிக்க முடியாத வகுப்பு, கைகளை உயரத்தூக்கிக் காண்பிப்பதால் மெம்பர்களைத் தேர்ந்தெடுத்தற்குரியராயிருந்தனர், ஆனல் இப்போது திருத்தப்பெற்ற ஆக்டின்படி பழைய பஞ்சாயத்துகள் லோகல் போர்டுகளுடன் சம அந்தஸ்துகளை வகித்து, ஓட்டர்களும் பழைய பஞ்சாயத்துகளும் மறைவிடமாய் சீட்டுபோடுவதன் மூலமாக தெரிந்தெடுக்கும் மேலான உரிமையை பெற்றிருப்பது மல்லாமல் தமக்குள்ள விவாதங்களை சட்ட ரீதியாகத் தீர்த்துக்கொள்ளவும் கூடும். பெண்களும் தெரிந்தெடுக்கும் சம்மதச் சீட்டுபோட உரிமைபெற்றிருக்கிறார்கள். (செ. 52 யும் ஷெ. III யும் பார்க்க).

பணவருமானம்.—பழைய ஆக்ட் ரத்துசெய்யப்பட்ட ஆக்டுகளின் கீழ் இருந்ததைவிட திருத்தப்பட்ட ஆக்டின்கீழ் பஞ்சாயத்துகளின் வருமான சம்பந்தமான நிலைமை மேலாகவும் ஸ்திரமாகவும் இருக்கிறது. செ. 78-ன் படி கைப்பற்றிலிருக்கும் சகல நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் விதிக்கப்படும் லாண்ட் செஸ் என்னும் நிலங்களின் வருஷ கிஸ்தியின்மேல் போடும் வரி ஒரு-அணு ஆறுபைகளில், செக், 114-A ன்படி ஆறில் ஒரு பாகத்தை (மூன்று தம்பிடியை) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டிலும் கிராம அபிவிருத்தி பண்டுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும், அங்கே விவரிக்கப்பட்டிருக்கிறபடி ஒரு கமிட்டியால் கிராம பாதைகள், நீர்பாசனம், சுகாதாரம், பொது சௌக்யம் ஆகியவைகளுக்கு அது உப

யோகிக்கப்பட வேண்டும், செ. 78ல் கண்டல ாண்ட் செஸ்ஸிலும், இதர வரிகளிலும், ஷெ. V விதி 5-Aல் விவரிக்கப்பட்ட சகாயத்தொகையிலும் ஆறில் ஒருபாகத்தை ஒவ்வொரு கிராமமும் மீண்டும் பெறுகின்றது.

செலவுகள்.—பழைய பஞ்சாயத்துகள் முன்னம் இருந்ததுபோலல்லாமல் இப்போது ஒரு ஆபீசையும் அதற்குரிய சிப்பந்திகளை வைத்திருக்கவேண்டியதால் அதற்குரிய செலவுகளும் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆக்டின் ஷெ. II, வி. Iன்படி ஒவ்வொரு பஞ்சாயத்திற்கு ஒரு ஆபீஸ் இருக்கவேண்டியதவசியமானதால் அது இருக்கும் இடத்திற்கு வாடகையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதுபோல பழைய யூனியன் போர்டுகளும் பழைய பஞ்சாயத்துகளும் செ. 36ன் படி பரிபாலன ரிபோர்டுகளும் செ. 116ன் படி வரவு-செலவு திட்டங்களும் தயார் செய்வதோடு பழைய யூனியன் போர்டுகளைப்போல இதர காரியங்களும் செய்ய வேண்டி யிருப்பதால் ஒரு க்ளார்க் (குமாஸ்தா) அல்லது க்ளார்க்குகளும் தேவையிருக்கிறது. ஒரு ஆபீசையும் அதற்கேற்ற சிப்பந்திகளையும் வைத்து பராமரித்தலும், எலக்டரல் ரோல்களை தயார்செய்தலும், எலக்ஷன் (தேர்தல்களை) நடத்தலும் ஏழைகளான கிராமவாசிகளின் வரி செலுத்தும் சக்திக்கும் மீறியதாகும். சென்னை சட்ட சபையில் நமது பிரதிநிதிகளால் இது எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இதர முக்கியாம்சங்கள்.—லோகல் போர்ட் பஞ்சாயத்து மெம்பர்கள் அல்லது பஞ்சாயத்துகாரர்களை தேர்ந்தெடுக்கும் ஓடர்களாலேயே கிராம நியாயாதிபதிகளும் ஏன் தேர்ந்தெடுக்கப்படக் கூடாதென்கிற விஷயம் இப்போது மதராஸ் கவர்ன்மெண்டால் யோசிக்கப்படலாம். ஆனால் லோகல்போர்ட் பஞ்சாயத்தார்களே கிராம நியாயாதிபதிகளாக விடுப்பது விரும்பத்தகுந்ததல்ல. அவ்விதம் நேருமாயின் வியாஜ்ஜியம் தொடர்வதற்கும் வியாஜ்யத்தில் தீர்மானம் சொல்வதற்கும் உள்ள அதிகாரங்களை ஒரே நபர்களுக்கு கொடுத்தமாதிரியாகும். அது கூடாதென நீண்டகாலமாக கண்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. தலையாரிகள் வெட்டிகளாகிய கிராம போலீஸை மேற்பார்வையிடும் அதிகாரத்தை மதராஸ் கவர்ன்மெண்டார் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கலாம்.

பஞ்சாயத்துகளை ஆள்வது.—பழைய பஞ்சாயத்துகளிலும் லோகல் போர்டுகளிலும் அநேகம் ஆதலால் தற்போதைய பஞ்சாயத்துகள், தம்மை தாலூகா போர்டுகள் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் ஆதிக்கத்திலிருக்கும்படி மதராஸ் கவர்ன்மெண்டார் விட்டிருப்பதை விரோதித்துப் பேசி யிருக்கிறார்கள். பழைய பஞ்சாயத்துகள் நேராக கிராம பஞ்சாயத்து ரெஜிஸ்ட்ரார்-ஜெனரலுக்கு உத்திரவாதமாக விருந்தார்கள். அதன் பின்னரும் அவைகளில் சில டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்களின் மேற்பார்வைக்கு ஒப்படைக்கப்பட்டபோதும் அவைகள் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் ரெஜிஸ்ட்ரார் ஜனரல் ஆகிய இருவகை அதிகாரிகளுக்கே உத்திரவாதமாக விருந்தார்கள். இப்போது அவைகள் தாலூகா போர்டுகள், டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் மதராஸ் கவர்ன்மெண்ட் ஆகிய மூன்றுவகை எஜமானர்களைப் பெற்றிருக்கிறார்கள். தாலூகா போர்டுகளின் ஆதிக்கத்தை எடுத்துவிடவேண்டும். செ. 67(1)ல் கண்டபடி எல்லா பஞ்சாயத்துகளையும் ஒரு டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபீசரே மேற்பார்வையிட்டு டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு உத்திரவாதமாக விருக்கலாம். அப்படி யிருக்கும்போது பஞ்சாயத்துகளை மேற்பார்வையிடும் வேலையை தாலூகா போர்டுகளுக்கு கொடுக்க யாதொரு அவசியமும் இல்லை, அனாவஸ்யமானதும் அதிக செலவுள்ளதும் கஷ்டமானதுமான பஞ்சாயத்துகளை மேற்பார்வையிடும் அலுவலிருந்து தாலூகா போர்டுகளை விடுவிக்கலாம். செலக்ட் கமிட்டி ரிபோர்டில் பின் வருமாறு சொல்லப்பட்டிருந்தது : "ஒரு தாலூகா போர்டின்மீது டிஸ்ட்ரிக்ட் போர்டும் பஞ்சாயத்தின்மீது தாலூகா போர்டும் டிஸ்ட்ரிக்ட் போர்டும் செலுத்திவரும் ஆதிக்கத்தை குறைந்த அளவுக்கு கொண்டு வருகிறவிதமாக கமிட்டியார் இந்த பில்லை திருத்தியிருக்கிறார்கள். ஸ்தல ஸதாபனங்கள் ஜயத்தோடும் கிரமமையாகவும் தமது அலுவல்களை செய்து வருவது வெளியிலிருந்து தம்மை அதிகாரம் செய்பவர்களிடமிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கக்கூடிய அளவுக்கேற்றபடியே யிருக்கும் எனும் கொள்கையை அனுசரித்தே அவர்கள் அவ்விதம் செய்திருக்கிறார்கள்." செலக்ட் கமிட்டி ரிபோர்ட், பக்கம் 2, 1929 ஞுக்கு பில் நம்பர் 13, ஸ்ரீமான் நாகன் கௌடா எடுத்துக்காட்டியபடி பஞ்சாயத்துகளின்மீதுள்ள தாலூகா போர்டுகளின் ஆதிக்கத்தை அடியோடு விலக்கி விட்டிருக்கலாம். அப்படிச் செய்யாததனால் மேற் கண்டபடி கமிட்டியார் தெரிவித்துக்கொண்ட எண்ணம் காரியத்தில் பலனற்றதாய்ப் போய் விட்டது.

இந்த ஆக்டின்படி ஏற்பட்ட கேடு.—பழைய யூனியன் போர்டுகளை தள்ளிவிட முடியாது. அதாவது யூனியன் போர்டுகளை சட்டத்தின்படி ஏற்பட்ட ஒரு சபையில்லாமல் வைத்திருக்கமுடியாது, ஆனால் தற்போது செ. 45-A ன்படி சட்டப்படி ஏற்படும் சபையில்லாமல் ஒரு தனி ஆபீசரின் கீழ் பஞ்சாயத்துகளை வைத்திருக்கக்கூடும்.

பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதில் மதராஸ் கவர்ன்மேண்டுக்குள்ள உற்சாகக் குறைவு.—1000 ஜன சங்கியையுள்ள கிராமங்கள்தோறும் ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் கொள்கையை நிறைவேற்றுதிருப்பதில் மதராஸ் கவர்ன் மெண்டுக்குள்ள உற்சாகக் குறைவு மெச்சத் தகுந்ததல்ல. செலக்ட் கமிட்டி பில்லின் செ. 5 (1) பின்வருமாறு இருந்தது : "மதராஸ் கவர்ன்மெண்ட் இந்த ஆக்டின் காரியங்களுக்காக விதிக்கப்பட்டிருக்கிற கிரமத்தின்படி விளம்பரப்படுத்தல் மூலமாக ரெவின்யு தாலூகாவின் எந்த பாகத்தையும் கிராமமாக இருக்கவேண்டுமென தெரிவிக்கலாம். அந்த கிராமத்தின் பெயரையும் சொல்லலாம். சென்ற சென்சஸ் கணக்கின்படி 1000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜன சங்கியை யுடைய ஒவ்வொரு ரெவின்யு கிராமமும் இந்த ஆக்டின் கீழ் கிராமமாக விருக்கவோ அல்லது அதனுள்பட்டதாகவோ கூறலாம்.

இங்கிலீஷ் ஏற்பாடு—பாரிஷ் கௌன்சில்.—இங்கிலாந்திலும் கிராமங்கள் உண்டு. இங்கிலாந்தில் பஞ்சாயத்து மாதிரி பாரிஷ் என்பது குறைந்த விஸ்தீரணத்திற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்தலஸ்தாபனமாகும். இங்கிலாந்து, வேல்ஸ் என்னும் தேசங்களின் ஒவ்வொரு பாகமும் ஏதோ ஒரு பாரிஷில் அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு பாரிஷும் ஒரு கௌன்டி கௌன்சிலால் பரிபாலிக்கப்படுகிறது. நமது பழைய யூனியன்போர்ட் அல்லது தற்காலத்தியபஞ்சாயத்து வார்டுகளைப்போல இங்கிலாந்தில் பாரிஷ் கௌன்சிலர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கௌன்டி கௌன்சில்கள் (அதாவது நமது டிஸ்ட்ரிக்ட் போர்டுகளைப் போன்றவை) பாரிஷ்களை வார்டுகளாகப் பிரிக்கலாம். கிராம சுகாதார டிஸ்ட்ரிக்டில் உள்ள ஒவ்வொரு பாரிஷும் கிராம பாரிஷாகும். ஒரு பாரிஷ் கூட்டத்தைப் பெற்றதாயிருக்கும், அதில் வசிக்கும் ஜனங்களின் சங்கியை 300 அல்லது அதற்கு மேற்பட்டதாயின் அது ஒரு பாரிஷ் கௌன்சிலையும் பெற்றிருக்கும். இப்படியிருக்க நமது மாகாணத்தில் மதராஸ் கவர்ன்மெண்ட் 1000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனசங்கியையுடைய கிராமத்தில்கூட ஒரு பஞ்சயத்தை ஸ்தாபிக்க அக்கரையிலாதிருக்கின்றது. கௌன்சிலின் ஆதினத்திலிருக்கும் ஒரு பொது அறையில் கூட்டங்கள் சாதாரணமாக நடைபெறும். அப்படி சௌகர்யமில்லாவிட்டால் பாடசாலைகள் முதலியவைகளின் கட்டிடங்களை உபயோகித்துக்கொள்ளும். இதனால் ஒவ்வொரு பாரிஷும் கூட்டம் கூடுவதற்காக ஒரு பிரத்யேக அறையை வைத்திருக்கத் தேவையில்லையெனத் தெரிகிறது. ஆனால் இங்கே மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட் ஷெட்யூல் II விதி 1-ன் படி ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு ஆபீஸ் இருக்கவேண்டும். பாரிஷ் அல்லது பாரிஷ் கௌன்சிலும் கௌண்டி கௌன்சிலும் மந்திரிகள் முதலியவர்களாலான லோகல் கவர்ன்மெண்ட் போர்டினால் ஆளப்படுகின்றன. ஆகவே இங்கிலீஷ் முறையின்படியும் தாலூகா போர்டுகளைப் போன்ற மத்திய ஸ்தாபனங்கள் இந்த பஞ்சாயத்துகளை மேற்பார்வையிடுதல் அனுவஸ்யமாகும். (ஹால்ஸ்பரீஸ் லாஸ் ஆப் இங்கிலாண்ட், வால்யம் 19, பக்கம் 236).

3-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளை அமைப்பதும் மேல்விசாரணை செய்வதும்.

லோகல்போர்டுகளை அமைப்பதும் அவைகள் சட்டப்படி சேர்ந்தவைகளாவதும்.

6. (1) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டுக்காகவும் ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்டையும், ஒவ்வொரு தாலூகாவுக்காகவும் ஒரு தாலூகா போர்டையும், ஒவ்வொரு கிராமத்துக்காகவும் ஒரு பஞ்சாயத்தையும் அமைத்து கொள்ளவேண்டும்.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, எந்தப் பிரதேச விஸ்தீர்ணத்துக்காக லோகல் போர்டு ஏற்படுத்தப்படுகிறதோ அந்த பிரதேச விஸ்தீர்ணத்தின் பரிபாலனமானது அந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கும்; ஆனால், அந்த லோகல் போர்டார்-இந்த ஆக்டினலாவது வேறே யாதொரு சட்டத்தினலாவது அதன்படியாவது அதன் ப்ரெஸிடெண்டுக்காகிலும் இதர லோகல் போர்டுகளுக்காகிலும் இதர அதிகார சபைகளுக்காகிலும் வெளிப்படையாய் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட அலுவல்களைச்செய்ய அர்ஹராகமாட்டார்கள்.

ஆனால், யாதொரு டிஸ்ட்ரிக்டின் எந்த பாகத்திலாவது தாலூகா போர்ட் இராவிட்டால், டிஸ்ட்ரிக்ட் போர்டார் - அந்த டிஸ்ட்ரிக்டிலுள்ள அப்படிப்பட்ட பாகத்தில் தாலூகா போர்டாருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தி அவர்களுடைய கடமைகளை நிறைவேற்றி அவர்களுடைய அலுவல்களைச் செய்யவேண்டியதுமல்லாமல், ஷை தாலுகா போர்டாரின் வரவுகளும் செலவுகளும் அவர்கள் கணக்கில் முறையே வரவாகவும் செலவாகவும் எழுதப்படவும் வேண்டும்; மேலும்

ஷை டிஸ்ட்ரிக்ட் போர்ட்டுப் ரெஸிடென்ட் அந்த டிஸ்ட்ரிக்டிலுள்ள அப்படிப்பட்ட பாகத்தில் தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டின் அதிகாரங்களைச் செலுத்தவேண்டியதுமல்லாமல் அவருடைய கடமைகளை நிறைவேற்றி அவருடைய அலுவல்களைச் செய்யவும் வேண்டும்.

மேலும், யாதொரு தாலூகாவின் எந்த பாகத்திலாவது பஞ்சாயத்து இராவிட்டால், தாலூகா போர்டார்—அந்த தாலூகாவிலுள்ள அப்படிப்பட்ட பாகத்தில் பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தி அதன் கடமைகளை நிறைவேற்றி அதன் அலுவல்களைச் செய்யவேண்டியதுமல்லாமல், மேற்படி பஞ்சாயத்தின் வரவுகளும் செலவுகளும் அவர்கள் கணக்கில் முறையே வரவாகவும் செலவாகவும் எழுதப்படவும் வேண்டும்; மேலும், ஷை தாலுகா போர்ட் ப்ரஸிடென்ட்—அந்த தாலூகாவிலுள்ள அப்படிப்பட்ட பாகத்தில் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் அதிகாரங்களைச் செலுத்தவேண்டியதுமல்லாமல் அவருடைய கடமைகளை நிறைவேற்றி அவருடைய அலுவல்களைச் செய்யவும் வேண்டும்.

(3) ஒவ்வொரு லோகல் போர்டும் சந்தர்ப்பத்துக் கேற்றபடி 4-வது பிரிவின்படியாவது, 5-வது பிரிவின்படியாவது வெளியிடப்படும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற டிஸ்டிரிக்ட அல்லது ரெவினியு தாலூக்காவின் பெயராலாகிலும், தாலுகா அல்லது கிராமத்தின் பெயராகிலாலும் சட்டப்படிக்குண்டான ஒரு சபையாயிருக்க வேண்டும்; மேலும், அந்தத் தாலூகா போர்டார்—இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரையுடையவர்களாயும் இருக்கவேண்டும்; அல்லாமலும், இந்த சட்டத்தின்படியாவது வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியாவது அதனுலாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிர்பந்தம் அல்லது வரைபறைக்குட்பட்டு அவர்கள் சட்டப்படிக்கான தங்களுடைய பெயரால் வியாஜ்ஜியம் தொடரவும் அல்லது பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்படவும் அசையும் அல்லது அசையாப்பொருளை அடையவும் வைத்திருக்கவும் மாற்றவும், ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும், தாங்கள் என்ன காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறுர்களோ அந்தக் காரியங்களுக்கு அவசியமாகவாகிலும் தகுதியாகவாகிலும் யுக்தமாகவாகிலும் இருக்கும் சகல விஷயங்களையும் செய்யவும் யோக்கியதையுடையவர்களாவார்கள்.

போது.—புதுப்பிக்கப்பட்ட லோகல் போர்டுகளுக்கு சொத்து-சுதந்திரங்களை மாற்றுதலைக் குறித்து விவகரிக்கும் செ. 235டன் இந்த செக்ஷனைப் படிக்கவேண்டும்.

சே. 6 (2)—இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைக்குட்பட்டு—போது.—இந்த ஆக்டின் நிபந்தனைகளினுல் சட்டசபை லோகல் போர்டுகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரங்கள் இந்த சொற்றொடரினுல் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைக்குட்பட்டு நடத்தவேண்டுமென்பதை வெளிப்படையாய் மட்டுபடுத்திக் கூறுகிறது. கொடுக்கப்பட்ட அதிகாரங்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகள் லோகல் போர்டுகளின் அதிகாரங்கள் அவைகளின் சட்டங்களிலேயே காணப்படும். இச்சட்டமே எல்லா அதிகாரங்களுக்கும் மூலதாரமாகும், லோகல்போர்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் அளவை தெரிந்துக்கொள்ள அந்த சட்டங்களையும் விதிகளையும் கவனித்துப்பார்க்கவேண்டும். லோகல் போர்டு சட்டங்கள் என்ன அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறதென்பதை தீர்மானிப்பதே லோகல் போர்டு நடவடிக்கைகளில் எப்பொழுதும் இருந்துவரும் கவலையாயிருக்கிறது. சரியென ஒத்துக்கொள்ளப்பட்ட சட்டங்களின் பரிசீலனைப்படி நியாயவாதிகள் கொடுக்கும் அர்த்தத்தையே அது பொறுத்திருக்கும். சட்டத்தினின்றும் வெளியாகும் சட்டசபையின் கருத்தை அனுசரித்தே அர்த்தம் செய்ய வேண்டும். அது கொடுத்திருக்கும் அதிகாரங்களின் இயல்பையும் அளவையும், ஏற்படுத்திய கடமையையும், சிருஷ்டித்திருக்கும் உத்திரவாதத்தையும் தெரிந்துகொள்ள, ஆதாரமாக எடுத்துக்கொள்வதற்கேற்றதென கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு கேஸை கூர்ந்து படித்து உணர்வது மிக அவஸ்யமாகும். அதன் பலவிதமான ஷரத்துகளின் அமைப்பும், ராஜாங்கத்தின் பொதுச்சட்டங்களுக்கும் இவைகளுக்கும் உள்ள சம்மந்தத்தை நிதானித்து தெரிந்துகொள்வதும், சார்டர் எனும் சாசனம் எவ்வளவு தூரம் ஆளுகிறதென்பதும், அது எவ்வளவு தூரம் இதர சட்டங்களால் ஆளப்படுகிறதென்பதும் லாயர்களுக்கும் ஜட்ஜுகளுக்கும் கலகத்தை

யுண்டாக்கக்கூடிய விஷயங்களைச் சார்ந்ததாம். லோகல் போர்டு சட்ட சம்பந்தமான பிரஸ்னையை கற்பது அதன் சட்டத்தோடு ஆரம்பிக்கிறது; அதற்காக அதன் அமைப்பையும் பொதுச் சட்டங்களையும் ராஜாங்கத்தின் கட்டமுறைகளையும் அறியவேண்டியதாயிருக்கிறது. அதன்பின் பொதுப்படையான சட்டதிட்டங்களை அனுசரிக்க வேண்டியதாக இருக்கிறது. சட்டத்தினால் லோகல் போர்ட் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதால், அச்சட்டத்தினால் அதன் அதிகாரங்கள் அளவுக்குட்படுத்தப்பட்டும் வரையறுக்கப்பட்டும் இருக்கின்றன. லோகல் போர்டின் அதிகாரங்கள் அச்சட்டத்தில் வெளிப்படையாய் சொல்லியிருப்பதற்கு மீறிப்போக முடியாது. அது எதற்காக ஸ்தாபிக்கப்பெற்றதோ அதை அவஸ்யமாகவும் சரியாகவும் அனுபவத்தில் நிறைவேற்றிவைப்பதைத் தவிர மீறிப்போக முடியாது. எதை வெளிப்படையாகவோ சட்டம் குறிப்பிட்டு அல்லது சூசனையாகவோ கூறவில்லையோ அந்த லோகல் போர்டின் அதிகாரம் தடுக்கப்பட்டதாகவே கொள்ளவேண்டும். (முனிசிபல் கௌன்சில், கும்பகோணம் எ. அப்பாஸ் சாஹிப், (1913) 36 M. 113=21 M L.J. 790.

கொடுக்கப்பட்ட அதிகாரங்கள்.—லோகல் போர்டுகள் சட்டத்தினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகள், கவர்ன்மெண்டார் இந்த சட்டத்தை இயற்றியதனால் முன்னர் ஜனங்களுக்கு இருந்த உரிமைகளில் எதையும் எடுத்து விடவில்லை. (திம்மரெட்டி எ. செக்ரிடெரி ஆப் ஸ்டேட், 47 M. 325=A.I.R. 1924 M. 523=46 M.L J. 60) லோகல் போர்டுகள் சம்பந்தமான சட்டங்களை திரட்டுவதற்காக ஏற்பட்ட இந்த ஆக்டைப் போன்ற ஒரு ஆக்ட் உரிமைகளை பறித்துவிடும் சட்டமாக இருக்கமுடியாது; அதாவது ஜனங்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளை அது எடுத்துவிடாது. (எல்லம்மாள் எ. எம்பார், 53 M.L.J. 810 =A.I.R. 1928 M. 164.)

பரிபாலனம் ஒரு லோகல் போர்டில் சங்க்ரமிக்கும்.—பரிபாலனம் என்பது இந்த ஆக்டின் ஷரத்துகளால் விதிக்கப்பட்ட அலுவல்கள் சரியாய் நடைபெறும்படி மேற்பார்வையிடுவதென அர்த்தமாகும். போர்டுக்கு ஒரு வக்கீலின் ஊழியத்தைப் பெறும்படியான அனுகூலம் ஏற்பட்டிருந்து, அந்த வகீல் அந்த போர்டுக்காக ஒரு தாவா சம்பந்தத்தில் ஏற்பட்ட வெளிக் கட்டணத்தை தானே கொடுத்திருந்தால், வியாஜ்ய சம்பந்தமாக அந்த வக்கீலுக்கு கொடுக்கவேண்டிய பீசையும் அந்த வக்கீல் தன்கையிலிருந்து செலுத்திய வெளிக்கட்டணத்தையும் செலுத்தவேண்டிய அவசியமில்லையென்று அந்த போர்டார் சொல்லுவது கூடாது. இந்த போர்டை போன்ற ஒரு பொது ஸ்தாபனம் தன் பிரசிடெண்ட் மூலமாக ஒரு வகீலை அமர்த்திக்கொள்ள விட்டு விட்டு வியாஜ்யம் முடிந்தபின் வகீல் தன் பீஸ் அல்லது ஜாபிதா யனுப்பும் போது போர்டுக்கு விரோதமாக தொடரப்பெற்ற வியாஜ்யத்தில் தமது கட்சியை ஆதரித்து வாதிடுவதற்காக ஒரு வகீலை தம் அனுமதியில்லாமல் அமர்த்துவதற்கு ஒரு பிரசிடெண்டுக்கு அதிகாரமில்லை யென்று சொல்லுவது சரியல்ல. ஒரு வகீல் தன்னை கேஸ்களை நடத்த அமர்த்திக் கொள்வதற்கும் அதற்காக தனக்குரிய கட்டணத்தை செலுத்துவதற்கும் பிரசிடெண்டுக்கு அதிகாரம் உண்டென வக்கீல் நம்பியதற்கு விரோதமாக ஒன்றும் சொல்ல முடியாதிருக்கும்போது மேற்கண்டபடி சொல்லுவது அநியாயமாத்திரமல்ல பெருத்த மோசமுமாகும். (வெங்கடசுப்பா ராவ் எ. பிரசிடெண்ட், தாலூகா போர்ட், ரேபல்லி, 56 M.L.J. 110= A I.R. 1928 M. 981 (2)).

இந்த ஆக்ட் அல்லது இதர சட்டங்களின்படி பிரசிடேண்டுக்காக குறிப்பிட்ட அலுவல்களை லோகல் போர்ட் செய்ய அருகாரகார்.—அதாவது பிரசிடெண்டின் அலுவல்களை லோகல் போர்ட் செய்யக்கூடாது. போர்டின் எல்லா கார்ய நிர்வாக அதிகாரங்களும் பிரசிடெண்டால் வகிக்கத்தகுந்தது, அவர் லோகல் போர்டின் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்கவேண்டும், செ. 21 ன்படி இந்த ஆக்ட் லோகல் போர்டாருக்கு வெளிப்படையாய் கொடுத்திருக்கும் எந்த அதிகாரத்தையும் பிரசிடெண்ட் கையாளுதல் சட்ட சம்மதமாகாது. லோகல் போர்ட் எதை செய்யக்கூடுமென்பதை தனி மெம்பர்களின் உரிமைகளை தெரிந்துக் கொள்வதால் அறியக்கூடும். செ. 26 பார்க்க. லோகல் போர்டாரின் அனுமதியின்பேரில் நடக்கக்கூடிய ஏதாவது ஒரு வேலையை அவசரமானபோது பிரசிடெண்ட் செய்யும்படி உத்திரவிடலாம் எனக் கூறும் செ. 22 ஏதாவது ஒரு குறித்த தொழிலையோ அல்லது ஒரு குறித்த கார்யத்தையோ கூடாதென லோகல் போர்ட் தடுத்திருக்க அதற்கு விரோதமாக பிரசிடெண்ட் இந்த செக்ஷன்படி நடக்கக்கூடாதென விதிக்கிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் பிரசிடெண்ட் தலைமை வகிக்கவேண்டும். செ 32 பார்க்க. லோகல் போர்டுகள் நடத்தக்கூடிய அலுவல்கள் பொதுவாக செ. 112-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பணம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும், பிரசிடெண்ட் தன் கார்ய நிர்வாக ஹோதாவில் செய்யக்கூடியவைகள் தவிர மற்ற இதர விஷயங்களிலும் லோகல் போர்டாரின் அனுமதி கட்டாயம் இருக்கவேண்டும். எல்லா தீர்மானங்களும் லோகல் போர்டாரால் நிறைவேற்றப்பட வேண்டும், பிரசி

டெண்ட், அதன் பிரதிநிதியாக, தீர்மானங்களில் கண்ட விஷயங்களை நடத்திவைக்க வேண்டும். அப்படி நடக்காவிடில் அவரை நீக்கிவிடலாம். செ. 43 பார்க்க. இந்த செக்ஷன் அபிமானத்துடன் லோகல் போர்டுகளின் உரிமைகளை காக்கின்றது, அதோடு பிரசிடெண்டின் கார்ய நிர்வாக அதிகாரத்தில் லோகல் போர்டுகள் தலையிடாதிருக்கவும் செய்கிறது. பிரசிடெண்டுகள் வைஸ்-பிரசிடெண்டுகளுக்கு விரோதமாக அவர்களின் மீது நம்பிக்கையில்லையென தீர்மானங்கள் கொண்டுவருவதைப்பற்றி செ. 44 பார்க்க.

முதல் நிபந்தனை.—ஒரு டிஸ்ட்ரிக்டில் தாலூகா போர்டுகள் இல்லாவிட்டாலும் அவைகளில் ஏதாவது செ. 45-ன்படி கலைத்துவிடப்பட்டாலும், அவைகளின் அலுவல்களை டிஸ்ட்ரிக்ட் போடுகள் நடத்தக்கூடுமென இக்குறிப்பு விதிக்கிறது. அத்தகைய நிலைமைகளில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரசிடெண்ட் தாலூகா போர்ட் பிரசிடெண்டாகவும் நடந்து கொள்ளலாம்.

இரண்டாவது நிபந்தனை.—பஞ்சாயத்துகள் ஏற்படாத விடங்களில் தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துகளாக அலுவல் பார்க்கக்கூடும்படி இக்குறிப்பு செய்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் தாலூகா போர்டின் பிரசிடெண்ட் பஞ்சாயத்தின் பிரசிடெண்டாகவும் அலுவல் பார்க்கலாம். பஞ்சாயத்து இல்லாத பிரதேசங்களில் தாலூகா போர்டும் அதன் பிரசிடெண்டும் பஞ்சாயத்துள்ள பிரதேசங்களில் பஞ்சாயத்தும் அதன் பிரசிடெண்டும் நடந்து கொள்வதைப் போலவே நடந்துகொள்வது கிரமம் என்பது இதனால் வெளியாகிறது.

செ. 6 (3) சட்டப்படிக்குண்டான சபை.—ஒரு லோகல் போர்டென்பது அதன் தனி மெம்பர்களைக் காட்டிலும் வேறுபட்டதும் அவைகளின் வெறும் எண்ணிக்கையைக் காட்டிலும் விசேஷப்பட்டதும் ஆகும். இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்து கொண்டிருக்கும் பொதுவான முத்திரையுடைய சட்டப்படிக்குண்டான சபை அதுவென்றும் சட்டப்படிக்குண்டான அதன் பெயரால் வியாஜ்யம் தொடரவும் தொடரப் பெறவும் அதற்கு உரிமை யுண்டெனவும் இந்த ஆக்டின் செ. 6 (3) கூறுகிறது. அத்தகைய சபை கிரமமாக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்திலேயே தனது அலுவல்களை நடத்தக்கூடுமென்பது பொது நியமங்களினாலும் சட்ட சம்மதமான இதர சபைகளின் நடவடிக்கைகளை ஒத்திட்டுப் பார்ப்பதாலும் தெளிவாகும், அது அப்படித்தான் என்பது இந்த ஆக்டின் ஷரத்துக்களினாலும் அதன்படி யுண்டான விதிகளாலும் வெளியாகின்றது. (சிவசங்கரம் பிள்ளை எ. எம்பரர் (சக்கரவர்த்தி), 52 M. 446=A.I.R. 1929 M. 8 (10)=56 M.L.J. 157.) டிஸ்ட்ரிக்ட் போர்டென்பது சொத்துகளை சொந்தமாக வைத்துக்கொள்ளக்கூடியதும், இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டிருக்கும் மெம்பர்களை யுடையதாய், தனக்கு சொந்தமான பொது முத்திரை யுடையதாய், தனது சட்டப்படிக்குண்டான பெயரால் வியாஜ்யம் தொடரவும் தொடரப் பெறவும் கூடியதாயும் உள்ள சட்டப்படிக்குண்டான ஒரு ஸ்தாபனமாகும். அது சட்டப்படிக்குண்டான அத்தகைய ஸ்தாபனமாய் இருப்பதால், அதன் பிரசிடெண்ட் அல்லது தனி மெம்பர்களைக் காட்டிலும் வேறுபட்டதாகும். போர்டின் ஏஜெண்ட் உண்மையில் பிரசிடெண்டல்ல, போர்ட் தன் பெயராலும் பிரசிடெண்ட் இல்லாமல் தன் முயற்சியாலும் வியாஜ்யம் தொடரமுடியாதென சொல்லமுடியாது. (செக்ரிடெரி ஆப் ஸ்டேட் எ. டிஸ்ட்ரிக்ட்போர்ட், தஞ்சாவூர், 31 L.W. 508=1930 M.W.N. 328) ஒவ்வொரு லோகல் போர்டும் சட்டப்படிக்குண்டான ஒரு ஸ்தாபனமாகும்.

இந்த சட்டத்தின்படியாவது வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிர்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டு.—இதில் கண்டுள்ள நிர்ப்பந்தம் இந்த ஆக்டினால் மாத்திரமல்ல இதர சட்டதிட்டங்களால்கூட ஏற்படுத்தக்கூடும். (a) வியாஜ்யம் தொடர்தல் அல்லது தொடரப் பெறுதல். (b) சொத்துகளைப் பெறுதல் வைத்திருத்தல் மாற்றிவிடுதல், (c) ஒப்பந்தத்தில் பிரவேசித்தல், (d) அவஸ்யமானதும் தக்கதும் பலன்தருவதுமான எல்லா கார்யத்தையும் செய்தல், ஆகிய சக்தியை இந்ததொடர் மொழிகள் கட்டுப்படுத்த, செ. 6 (2) ல் உள்ள "இந்த ஆக்டின் நிபந்தனைக்குட்பட்டு" எனும் தொடர் மொழி பிரதேச விஸ்தீரணத்தில் பரிபாலிக்கும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறது செ. 222 223ன் படி ஒரு சிவில் கோர்ட்டில் பாக்கியை வசூலிப்பதற்சாகவும் கிரிமினல் கோர்ட்டில் வியாஜ்யம் தொடர்வதற்காகவும் லோகல் போர்டுகளுக்கு பிரத்யேக காலவரையறை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. சாதாரண சட்டங்களின்படி துஷ்கிருத்தியக்களுக்காக ஒருவர்மீது வியாஜ்யம் தொடர காலவரை யில்லாதிருக்க, இந்த ஆக்டின் செ. 223 ன் படி அக்குற்றங்களுக்காக வியாஜ்யம் தொடரவேண்டிய காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆக்டின் செ. 225-ன் படி சில விஷயங்களில் லோகல் போர்டின் மீது வியாஜ்யம் தொடர்வதற்காக நோடீஸ் கொடுப்பது அவஸ்யமென்று தனி நபர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்களுக்கு அந்த செக்ஷன்களைப் பாக்கவும்.

வியாஜ்யம் தொடர்தல் அல்லது தொடரப் பெறுதல்—போது.—இந்தத் தொடர்மொழிகள் லோகல் போர்டுகளால் பிறர் மீதும், பிறரால் லோகல் போர்டுகளின்மீதும் சிவில் கோர்டில் தாவா செய்வதைக் குறித்தவை. இந்த அல்லது இதர சட்டதிட்டங்களால் ஏற்படுத்தப்பட்ட நிர்ப்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டது இதுவாகும். மேற்கண்ட வியாக்யானத்தைப் பார்க்கவும். பிரசிடெண்டில்லாமல் லோகல் போர்ட் தானாக தன் பெயராலும் தன் முயற்சியாலும் வியாஜ்யம் தொடர முடியாதென சொல்ல முடியாது. (செக்ரிடெரி ஆப் ஸ்டேட் எ. டிஸ்ட்ரிக்ட் போர்டு, தஞ்சாவூர், 31 L.W. 508). இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட எந்த காரியத்திற்காகிலும், அந்த கார்யம் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டிருந்தால், செ. 225ன் படி பிரசிடெண்ட், இதர மெம்பர்கள் முதலியவர்களின் மீது வியாஜ்யம் அல்லது இதர நியாய சம்பந்தமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால், அத்தகைய நடவடிக்கை கோர்ட்டினால் ஆதரிக்கக்கூடியதாயின் லோகல் போர்டின்மீது எடுத்துக்கொள்ளலாம். ஒரு காரியம் லோகல் போர்ட் சட்டத்தின் விதிகளுக்கிணங்கியும் அந்த சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை வகிப்பதின் மூலமாகவும் செய்யப்பட்டிருக்கையில், அது ஒரு ராஜ்யாதிகாரியினால் செய்யப்பட்டதென்றும் ஒரு தனி நபரினால் செய்யத்தக்கது அக் கார்யமாகாதென்றும் எண்ணி சிவில் கோர்டுகளின் நியாயாதிகார எல்லைக்குட்பட்டது அல்லவென தள்ளிவிட முடியாது. (செக்ரிடெரி ஆப் ஸ்டேட் எ. ஹரி பாஞ்சி, 5 M. 273). போர்டுகளும் முனிசிபாலிடிகளும் உத்திரவாதமாயிருப்பதிலிருந்து விலகியிருக்கும் அளவு அவைகளை ஏற்படுத்திய ஆக்டில் அவைகளுக்கு எவ்வளவு தூரம் அதிகாரமுள்ளது என கூறியிருப்பதற் கேற்றபடியே யிருக்கும். (செக்ரிடெரி ஆப் ஸ்டேட் எ. காக்ராப்ட், 39 M. 351).

சிவில் கோர்டின் நியாயாதிகாரம்—போது.—கோர்டுகள் (இங்கேயிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு) வெளிப்படையாக அல்லது சூசனையாக தடுக்கப்பட்ட நியாய விசாரணைக்குரிய சூட்டுகள் (வியாஜ்யங்கள்) நீங்கலாக தேசாசார (சிவில்) வியாஜ்யங்கள் எல்லாவற்றையும் விசாரிக்க அதிகாரமுண்டு. விளக்க உரை: சொத்து அல்லது உத்தியோகம் சம்பந்தமான உரிமையைப்பற்றிய விவாதத்தைக் குறித்த வியாஜ்யம். (அத்தகைய உரிமை மதாசார சடங்குகளைக் குறித்த விஷயங்களைத் தீர்மானிப்பதை பொறுத்ததாகிலும் சிவில் (தேசாசார) வியாஜ்யமாகும். (செ 9, சிவில் ப்ரோஸீஜர் கோட், 1908ளுத்து V வது ஆக்ட்). ஆனால் சிவில் ப்ரோஸீஜர் கோர்ட் 9-வது செக்ஷன் கோர்டுகளைப் பற்றி விவரிக்கின்றதே யன்றி கட்சிக்காரரின் உரிமையைப்பற்றி அன்று என்பதைக் கவனிக்கவேண்டும். (பூபேந்திரநாத் பாசு எ. ரஞ்சித் சிங், 41 C. 384). பரிகாரமிலாது உரிமையில்லை என்பது பொது நீதியாகும் அதாவது லோகல் போர்டுகளுக்கும் பொதுஜனங்களுக்கும் உரிமைகளிருந்தும் அவைகளை அனுபவிக்க அல்லது உபயோகிக்க சக்தியில்லாதிருக்கும்போது அல்லது தடுக்கப்படும்போது அவ்வுரிமைகளை லோகல்போர்டுகளுக்கும் பொதுஜனங்களுக்கும் அனுபவிக்கும்படி செய்வது சிவில் கோர்டுகளின் கடமையாகும்.

சிவில் கோர்டுகளும் மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்டும்.—ஒரு முனிசிபல் கமிட்டியின் காரியம் ஆக்டினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறியதாயிருக்கிறதென முறையிடப்படும் பொழுதே சிவில் கோர்டுகள் சம்பந்தப்படக்கூடு மென்பது நன்றாய் அங்கிகரிக்கப்பட்ட விதியாகும். முனிஸிபல் ஆக்டினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க முனிசிபல் கமிட்டி காரியங்களைச் செய்திருக்கும்பொழுதே சிவில் கோர்டுகள் தம் அதிகாரத்தை செலுத்தமுடியாதென தடுக்கபபட்டிருக்கிறது. செய்யவேண்டிய காரியம் இன்னவிதமாக இருக்கவேண்டுமென அவர்கள் இஷ்டப்படுவதை சிவில் கோர்டார் சோதிக் வேண்டியதில்லை, ஆனால் அந்த காரியத்தை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் அதிகாரம் அவர்களுக்குண்டாவென்பதை அந்த கோர்டுகள் சோதிக்கலாம். (மோடிஜான் எ முனிசிபல் கமிட்டி, டெல்லி, A.I.R. 1926 L 461). லோகல் போர்டுகளால் செய்யப்படும் காரியங்கள் சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறியதாயும் அனியாயமாயும் இருக்கும்போது ஓடர்கள் அல்லது வரிசெலுத்துவோர்தம் தனிப்பட்ட ஹோதாவில் லோகல் போர்டுகளின்மீது வியாஜ்யம் தொடுக்கலாம். (வாமன் தத்யாஜி எ. முனிசிபாலிடி, ஹோலாபூர், 22 Bom. 646.)

சிவில் கோர்ட்டின் அதிகாரமும் முடிவான எனும் பதமும்.—இந்த ஆக்டில் அநேக இடங்களில் வரும் முடிவான எனும் பதம் சட்டத்தினால் ஏற்பட்ட ஸ்தபனங்களின் நடவடிக்கைகளைக் குறித்தே யன்றி, சிவில் கோர்டுகளின் அதிகாரத்தை அடக்கிவிடுவதற்காக வல்ல. (வள்ளியம்மாள் எ. கார்பரேஷராஸ், மதராஸ் 34 M. 413--23 M.L.J. 531).

கார்பரேஷன்களும் அவைகளின் மீது வியாஜ்யம் தொடுத்தலும்.—ஒரு கார்பரேஷன் சில விஷயத்தில் பழி சுமத்தக்கூடியதாயும், வேறு இதர விஷயங்களில் சுமத்தக் கூடாததாயும் இருக்கிறது. (ஹாரிஸ் கிரிமினல் லா, பக்கம் 21, (1926). கடமையை செய்யத் தவறியதற்காக ஒவ்வொரு கார்போரேஷனும் அதன் சட்ட நீல்யான

பெயரால் குற்றம் சுமத்தத்தகுந்தாம். கடமை செய்ய தவறுதல் பொதுப்பாதைகளை அடைத்து விடுதல் போன்ற குற்றமுள்ள காரியங்களாகவாவது, வராவதிகளை மராமத்து செய்யாதிருத்தல் போன்ற குற்றமுள்ள செயலின்மை அதாவது கடமையை செய்யா திருத்தலாகவாவது இருக்கலாம். (R. எ. டெய்லர், (1891) 2 Q.B. 588.) ஒரு நபர் என்பது ஒரு கார்பரேஷன் உள்பட்டதாகும் செ. 11, இந்தியன் பெனல் கோட், ராஜநிந்தை துரோகம், தகாதநடை ஆகிய தனி நபர்களின் தகாத நடைகளைக் குறித்த விஷயத்தில் கார்ப ரேஷனை தண்டிக்க முடியாது. (பர்மாசூடிகல் சொசைடி எ. லண்டன் அண்ட் புரோவின் ஷியல் சப்ளை அசோசியேஷன், 5 App. Cas. 857 at 869.) விதிக்கத்தகுந்த தண்டனை சிறையிலிடுதல் அல்லது உடம்பில் அடித்தலை விதித்தலாயிருக்குமாயின் ஒரு கார்ப்ரேஷனை அதில் ஈடுபடுத்தி தண்டிக்கக்கூடாது. (பீர்க்ஸ் கன்ஸ்டன் டீ. எ. வார்ட், (1902) 2 K.B. 1.)

ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை வசப்படுதல் வைத்திருத்தல் மாற்றிவிடுதல்.— ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை வாங்குதல் முதலிய காரியங்களை லோகல் போர்டுகள் லாண்ட அகுசிஷன் ஆக்ட்டோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் யாதொரு தனி நபர்கள் மூலமாக ஒரு ஏற்பாடு செய்துகொள்ளலாம், ஆனால், பொதுக் காரியங்களுக்கவசியமான யாதொரு பெரிய உபாயங்களை நிறைவேற்றுதற்காக அநேக நபர்களின் சொத்துக்களை வாங்க வேண்டி யிருக்கும்போது சொத்துக்குரியவர்கள் வேறு நபர்கள் மூலமாக காரியங்களை நடத் திக்கொள்ள இஷ்டப்படாத பட்சத்தில் லோகல் போர்டுகள் தாங்களாகவே நேரில் அந்தக் காரி யங்களை நடத்தலாம். செ. 66-ன் கீழுள்ள வியாக்யானத்தைப் பார்க்க. பொது ஜனங்களின் நிலங்களை அதற்குரிய கிரயத்தைச் கொடாமல் கமிஷனர்கள் (தப்பிதமாகக்கூட) வசப்படுத்தி கொள்ளுதல் கூடும் என சட்டசபை கருதி யிருக்காது. (சாண்டர் சிக்கூர் பண்டோ பாத்யாய எ. ஒபாய் சரன் பாக்சி, 6 Cal. 8) ஸ்தாவர ஜங்கம் சொத்துகளை வாங்குதல் நிர்வகித்தல் மாற்றுதல் ஆகியவைகளுக்குறிய சக்தி நிலங்களையும் பாட்டைகளையும் வாங்குவதற்கும் விற்பதற்கும் உள்ள உரிமை யுள்பட்டதாகும். (நத்தியா மில்ஸ் கம்பெனி லிமிடெட் எ. சித்தேஸ்வர் சடர்ஜி, 56 C. 280=A.I.R. 1929 M. 33).

இந்த ஆக்டின்கீழ் ஒப்பந்தம்.—நேரில் கையெழுத்திடாமல் ரப்பர் முதலியவை களினால் செய்யப்பட்ட கையெழுத்தின் பிரதிரூபம் ஒரு ஒப்பந்த சம்பந்தமான தஸ்தா வேஜுகளுக்குப் போதுமான ஒரு கையெழுத்தாகாது. செ. 214 (3) யைப் பார்க்க. லோகல் போர்டுகளினாலாவது அல்லது அவைகளின் சார்பாகவாவது ஏற்படும் ஒப்பந்தம் இன்ன நிபந் தனைகளின் பேரில் அல்லது இன்ன விதத்தில்தான் செய்யப்படவேண்டும் என்பதைக் குறித்து மதராஸ் கவர்ன்மெண்டார் செ. 199 (2) (n) ன்படி விதிகளை ஏற்படுத்த அதிகார முடையவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் ஒரு ஒப்பந்தத்திற்குள்ள மதிப்பை நிதானிப்பதற்கு செ. 214 (3)-யும் மேல்கண்டபடி ஏற்படும் விதிகளையும் பார்த்து தீர்மானிக்கவேண்டும். ஒப்பந்தங்களும் செக்குகளும் கையெழுத்தாவதற்கு முன்னுக பிரசிடெண்டால் பார்வையிடப் படவேண்டும் என செ. 214 (3) குறித்துக் காட்டுகிறது.

ஒப்பந்த சம்பந்தமான வியாஜ்யமும் நோடீசும்.—இந்த ஆக்டின் செ. 225-ன்படி நோடீஸ் கொடுப்பது அனுவஸ்யமாகும். செ. 225-ன கீழ் நோடீஸ் எனும் தலைப்பிலுள்ள குறிப்பைப் பார்க்க. முனிசிபல் கமிஷ்ணர்களிடமிருந்து மரப் பலகைகள் வகைகளை கொடுப் பதற்காக செய்துக்கொண்ட ஒப்பந்த சம்பந்தமாக ஏற்பட்ட பாக்கியை வசூலிப்பதற்காக ஒரு வியாஜ்யம் தொடரப் பெற்றது. ஒப்பந்தத்தின்படி நடந்துகொள்ளாதது ஆக்டின்படி நடந்த கார்யமல்லவாதலால் வாதி நோடீஸ் கொடுக்காமலே வியாஜ்யம் தொடர உரியவராவார் என தீர்மானிக்கப்பட்டது. (மாயாண்டி எ. மதுரா முனிசிபாலிடி, 2 M. 124).

லோகல் போர்டுகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியை.

7. யாதொரு லோகல் போர்டிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையானது— அடியிற்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டிருக்கவேண்டும் :—

		மெம்பர்களின் உச்ச சங்கியை.	மெம்பர்களின் அதம சங்கியை.
டிஸ்ட்ரிக்ட் போர்டுகள்	....	52	24
தாலூகா போர்டுகள்	....	24	12
பஞ்சாயத்துகள்	....	16	8

குறிப்பு.

மெம்பர்கள்.—செ. 26 "லோகல் போர்டு" பார்க்க. செ. 3 (11) பஞ்சாயத்துகள் பார்க்க. செ. 3 (15-A) செ. 5 ஒவ்வொரு லோகல் போர்டிலும் இருக்கவேண்டிய மெம்பர்களின் எண்ணிக்கையை நிச்சயித்தல் பார்க்க. செ. 10 பார்க்க.

"யூனியன் போர்டுகள்" எனும் பதங்களுக்கு பதிலாக "பஞ்சாயத்துகள்" எனும் பதமும், எண்கள் 15, 7க்கு பதிலாக 16-ம் 8-ம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த திருத்தப்பட்ட ஆக்ட் அமுலுக்கு வரும்பொழுது ஒரு பஞ்சாயத்தில் 7 அல்லது குறைந்த அங்கத்தினர்கள் இருக்கிற விடங்களில் மாதுதலைக் குறிக்கும் ஷெட்யூல் விதி 4-ன் படி மதராஸ் கவர்ன்மெண்டார் 8-வது மெம்பரை நியமிக்க வேண்டும்.

லோகல் போர்டுகளின் எல்லா மெம்பர்களும் தெரிந் தெடுக்கப்பட வேண்டுமென்பது.

8. ஒவ்வொரு லோகல் போர்டின் எல்லா மெம்பர்களும் இந்த ஆக்டில் சொல்லி யிருக்கிற விதமாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு.

எல்லா மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். உத்தியோக தோரணையிலாவது நியமனத்தாலாவது யாரும் மெம்பராக மாட்டார்கள். தேசிய அபிவிருத்திக்கு ஒவ்வாத இந்த நியமனங்களை விலக்கிவிட்டதற்காக மதராஸ் கவர்மெண்ட் நமது நன்றியுள்ள வந்தனத்திற்குரியராகின்றனர். என்னுடைய முன் பதிப்பில் பக்கங்கள் 53, 54-ல் இவைகளை விலக்கி விடும்படி கூறிய யோசனைகள் பூர்த்தியாய் நிறைவேற்றப்பட்டன. ஆதலால் ஆசிரியரால் உபயோகிக்கப்பட்ட வலிவான சொற்கள் பலனிலாது போகவில்லை யென நினைக்கப்படுகிறது.

சில வகுப்புகளுக்கும் ஸ்திரீகளுக்கும் லோகல் போர்டுகளில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பது.

9. (1) யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டில், பிரதேச கவர்ன்மெண்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, அப்போதைக்கப்போது விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய்—

(a) முஸ்லிம்களுக்கோ,
(b) இந்திய கிறிஸ்தவர்களுக்கோ,
(c) ஆதிதிராவிடர்களுக்கோ,
(d) ஐரோப்பியர்களுக்கோ,
(e) ஆங்கிலோ இந்தியர்களுக்கோ,
(f) ஸ்திரீகளுக்கோ

ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்து, அப்படிப்பட்ட ஸ்தானங்களின் சங்கியையை நிஷ்கரிஷை செய்யலாம்.

(2) யாதொரு தாலுகா போர்டில், பிரதேச கவர்ன்மெண்டார்—தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, அப்போதைக்கப்போது விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய்—

(a) முஸ்லிம்களுக்கோ,
(b) இந்திய கிறிஸ்தவர்களுக்கோ,
(c) ஆதிதிராவிடர்களுக்கோ,
(d) ஸ்திரீகளுக்கோ

ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்து, அப்படிப்பட்ட ஸ்தானங்களின் சங்கியையை நிஷ்கரிஷை செய்யலாம்.

(3) யாதொரு பஞ்சாயத்தில், பிரதேச கவர்ண்மெண்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, நிர்ணயிக்கப்பட்ட விதமாக அப்போதைக்கப்போது விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் ஆதிதிராவிடர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்து, அப்படிப்பட்ட ஸ்தானங்களின் சங்கியையை நிஷ்கரிஷை செய்யலாம்.

(4) யாதொரு லோகல் போர்டில் (1) அல்லது (2) அல்லது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களின் மொத்த சங்கியையானது - 10-வது பிரிவின்படி லோகல் போர்டுக்கு நிஷ்கரிஷை செய்திருக்கும் (மொத்த) சங்கியையில் நாலிலொரு பங்குக்கு மேற்படக்கூடாது.

(5) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (*a*) முதல் (*e*) வரையிலுள்ள பகுதிகளில் கண்ட வகுப்புகளிலாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (*a*) முதல் (*c*) வரையிலுள்ள பகுதிகளில் கண்ட வகுப்புகளிலாவது எந்த வகுப்பாராகிலும் கடைசியாக ஸென்ஸஸ் (கானிஷ்மாரிக் கணக்கு) எடுக்கப்பட்டபோது சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்டின் அல்லது தாலூகாவின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாயிருந்தால், அந்த வகுப்பாருக்காக முறையே யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டிலும் யாதொரு தாலூகா போர்டிலும் ஸ்தானம் எதுவும் ஒதுக்கிவைக்கக்கூடாது.

(6) யாதொரு லோகல் போர்டில் எந்த வகுப்பாருக்காவது ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கும்போது, பிரதேச கவர்ன்மெண்டார் அந்த வகுப்பாரின் சங்கியையையும் முக்கியதையையும் தக்கபடி கவனிக்கவேண்டும்.

(7) எந்த வகுப்பாருக்காக அல்லது ஸ்திரீகளுக்காக யாதொரு லோகல் போர்டில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த வகுப்பாராகிலும் ஸ்திரீகளாகிலும் ஷை லோகல் போர்டில் ஒதுக்கிவைக்கப் படாமலிருக்கும் ஸ்தானங்களுக்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்காக அபேட்சகர்களாய் நிற்பதற்கு (1) முதல் (3) வரையிலுள்ள உட்பிரிவுகளில் கண்டதெதனுலும் தடை ஏற்படுவதாக எண்ணக்கூடாது.

குறிப்பு.

பிரத்யேக ஸ்தானங்கள்—பொது.—ஒரு பிரத்யேக ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கு ஒருவர் ஒரு விசேஷ உரிமை காரணமாக உரியராயிருப்பதால் அவருடைய பெயர் ஓடர் ஜாபிதாவில் பதிவு செய்யப்பட்டிருக்க, எலக்ஷன் (தேர்தல்) நடப்பதற்கு முன் அவருடைய அந்த விசேஷ உரிமை நீங்கிவிடுமாயின் அவர் அந்த ஸ்தானத்திற்கு போட்டிபோட அருகாவாரா? உதாரணமாக, ஒருவர் மகம்மதியராயிருப்பதால் அவருடைய பெயர் எலக்டரல் ரோலில் இருக்கிறது. தேர்தலுக்கு முன் அவர் இந்துவாகி விடுகிறார். மகம்மதியராயிருந்த விசேஷ உரிமை நீங்கிவிட்டிருந்தும் ஓடர் ஜாபிதாவில் தன் பெயர் பதிவாகியிருப்பது காரணமாக அந்த பிரத்யேக ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட உரியராவார்களா?

செ. **9 (1)** டிஸ்ட்ரிக்ட் போர்டுகள்—பிரத்யேக ஸ்தானங்கள்.—இந்த ஸ்தானங்கள் எவ்விதம் இந்த சர்க்கில்களின் தேர்தலினுல் நிறப்பப்படுகின்றன வென்பது செ. 47-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஜாதி வீத தேர்தல் தொகுதிகள் கைவிடப்பட்டது நன்மைக்கேயாகும். பிரத்யேக ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதுகூட பொது தேர்தல் தொகுதிகளாலேயே ஆகவேண்டியிருக்கிறது. செ. 47, செ. 52 பார்க்க. உதாரணம்: 48 மெம்பர்களையுடைய ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்டை எடுத்துக் கொள்வோம். அதில் குறைந்தது 36 பொது ஸ்தானங்கள் இருக்கவேண்டும். 36 ஸ்தானங்களைவிட அதிக ஸ்தானங்கள் இருக்கலாம், ஒருபோதும் குறைந்திருக்கக்கூடாது. 12-க்கு மேற்படக்கூடாததும் 12-க்கு குறைந்திருக்கக் கூடியதுமான இதர ஸ்தானங்களை கிளாஸ்கள் (a) முதல் (b) வரையில் குறிக்கப்பட்டுள்ள ஜாதிகளுக்கும் நபர்களுக்கும் பிரத்யேகப்படுத்தி வைக்கவேண்டும். பெண்கள் ஒன்று அல்லது இரண்டு ஸ்தானங்களை எப்போதும் பெறவேண்டும். செ. 47, செ. 52 பார்க்க.

செ. **9 (2)** தாலூகா போர்டுகள்—பிரத்யேக ஸ்தானங்கள்.—தாலூகா போர்டுகள் சர்க்கில்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பொதுஸ்தானங்களுக்கும் பிரத்யேக ஸ்தானங்களுக்கும் மெம்பர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த ஸ்தானங்கள் இந்த சர்க்கில்களின் தேர்தலினுல் எவ்விதம் நிறப்பப்படவேண்டுமென்பது செ. 48-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஜாதி வீத தேர்தல் தொகுதிகள் கைவிடப்பட்டது நன்மைக்கேயாகும். பிரத்யேக ஸ்தானங்களுக்கு மெம்பர்கள் பொதுத்தொகுதிகளாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும். செ. 48 செ. 52 பார்க்க.

செ. **9 (3)** **பஞ்சாயத்துக்கள்—பிரத்யேக ஸ்தானங்கள்.**—பஞ்சாயத்துக்கள் வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பொதுஸ்தானங்களுக்கும் பிரத்தேக ஸ்தானங்களுக்கும் மெம்பர்கள் அல்லது பஞ்சாயத்தார்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த ஸ்தானங்கள் எவ்விதம் இந்த வார்டுகளின் தேர்தலினால் நிறப்பப்படுகின்றன வென்பது செ. 49-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஜாதி வீத தேர்தல் தொகுதிகள் கைவிடப்பட்டது நன்மைக்கேயாகும். பிரத்யேக ஸ்தான மெம்பர்களும் பொதுத் தொகுதியினாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். செ. 49, செ. 52 பார்க்க.

செ. **9 (6)** **எண்ணிக்கையும் அதன் அவஸ்யமும்.**—இது சங்கியையும் வரிசெலுத்தும் சக்தியும் என அர்த்தமாகும். வாயினால் தெரிவித்தல் அல்லது தன் மனோ உணர்ச்சியை செயலில் சாதித்தல் எனவும் அர்த்தமாகும், அல்லது மதராஸ் கவர்ன்மெண்டில் அதிகாரத்தில் இருக்கும் கட்சிக்கு உள்ள ஆதரவு காண்பித்தல் எனவும் அர்த்தமாகும்படியும் பொருள் விரித்துக் கூறவும் முடியும் மதராஸ் கவர்ன்மெண்டின் அதிகாரத்திலுள்ளவர்களின் தோரணைக் கேற்றபடி இச்சொற்றொடருக்கு வியாக்யானம் கூறுதல் இருக்கும்.

லோகல் போர்டுகளில் இத்தனை மெம்பர்கள் இருக்க வேண்டுமென்று நிச்சயிப்பது.

10 (1) பிரதேச கவர்ன்மென்டார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஒவ்வொரு லோகல் போர்டிலும் மொத்தத்தில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கவெண்டும்.

(2) பிரதேச கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்துக்குட்பட்டு, இதற்கென்று பிரத்தியோகமாய்க் கூட்டப்பட்ட ஒரு சபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் முக்கால் பங்கு பேருக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானத்தின் மூலமாய் யாதொரு லோகல் போர்டார் (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் பிரசித்தம் செய்யப்பட்டபடியுள்ள அதன் மெம்பர்களின் மொத்த சங்கியையை மாற்றலாம்.

(3) (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விளம்பரத்தையும், (2) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள தீர்மானத்தையும் நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யவேண்டும்.

குறிப்பு.

செ. **10 (1)** **மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையைத் தேர்வித்தல்.**—டிஸ்ட்ரிக்ட போர்டுகள், தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகியவைகளின் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையை மதராஸ் கவர்ன்மெண்டார் நிர்ணயப்பதற்கு முன் இந்த போர்டுகளின் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையை எதற்காக நிர்ணயிக்கிறார்கள் என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டும். மெம்பர்கள் பொது ஜனங்களின் பிரதிநிதிகளாக லோகல் போர்டுகளிலிருப்பார்கள். செ. 47, 48, 49ன்படி மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த லோகல் போர்டுகளோடு முதலில் ஆலோசித்து டிஸ்ட்ரிக்ட் தாலூகா போர்டுகளை சர்க்கில்களாகவும் பஞ்சாயத்துகளை வார்டுகளாகவும் வகுக்க வேண்டும், அந்த செக்ஷன்களில் குறிப்பிட்ட இதர காரியங்களை முறைப்படி செய்து, ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் தேவையான மெம்பர்களின் எண்ணிக்கையைக் கண்டுபிடித்து, ஒவ்வொரு லோக்கல் போர்டுக்கும் இத்தனை மெம்பர்கள் இருக்க வேண்டுமென்று முடிவாக நிச்சயிக்கவேண்டும். அதற்கு முன்னால் அவ்விதம் ஒரு லோகல் போர்டின் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையை நிச்சயிப்பது கூடாதென மதராஸ் கவர்ன்மெண்டார் நன்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறார்கள்.

செ. **10 (2)** ஒரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்ட் அல்லது ஒரு பஞ்சாயத்து தன் மெம்பர்களின் எண்ணிக்கையை மாற்றிக்கொள்ள நினைத்தால், தன் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையை மாற்றிக் கொள்வதள்கென அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தில் கூடி, கூட்டத்தில் வந்திருக்கும் மெம்பர்களின் எண்ணிக்கையில் முக்கால் பாகத்தினரால் ஆதரிக்கப் பெறறுத் தனது மெம்பர்களின் எண்ணிக்கையில் மாறுதல் வேண்டுமென தீர்மானிக்கவேண்டும். அதன் பின் கிரம வழியாக மதராஸ் கவர்ன்மெண்டுக்கு நேராக அந்த தீர்மானத்தை அனுப்ப வேண்டும்; அந்த கவர்ன்மென்டு அந்த தீர்மானத்தை அங்கீகரித்துக்கொண்டால் மெம்பர்களின் எண்ணிக்கையில் மாறுதல் எளிதாகிவிடும். இப்போது ஒரு தாலூகா போர்டு தனக்குரிய டிஸ்ட்ரிக்ட் போர்டின் சம்மதத்தை, பஞ்சாயத்து தனக்குறிய தாலூகா அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்

டின் சம்மதத்தைப் பெறவேண்டிய அவசியமில்லை. இந்த விஷயத்தில் தாலூகா போர்டுகளும் பஞ்சாயத்துகளும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றிருக்கின்றன. 12 மெம்பர்கள் அல்லது பஞ்சாயத்தார்களையுடைய ஒரு பஞ்சாயத்திருப்பதாக வைத்துக்கொள்ளுவோம், ஷெட்யூல் II விதி ன்படி, மூன்றில் ஒரு பாகத்தினர் அதாவது 4 மெம்பர்கள் பிரத்தியேகமாய் அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தில் ஆஜராகியிருக்கின்றனர் எனக் கொள்ளுவோம், அவர்களில், முக்கால் பாகத்தினர் அதாவது மூன்று பேர்கள், மெம்பர்களின் எண்ணிக்கையில் மாறுதலை ஆதரிக்கிறார்கள். மற்ற ஒரு கால் பாகத்தினர் அதாவது ஒரு மெம்பர் மாறுதலை வேண்டாதவராகவோ அல்லது அது விஷயமாக யாதொரு அபிப்ராயமும் கொள்ள முடியாதவராகவோ இருக்கிறார். அப்போது தீர்மானம் நிறைவேறியதாகக் கொள்ளப்பட்டு மதராஸ் கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை அங்கீகரித்துக் கொண்டால் எண்ணிக்கையில் மாறுதல் ஏற்பட்டுவிடும்.

எலெக்ஷனும் லோகல் போர்டுகளின் மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கும் கால அளவும்.

11. (1) இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றபடி, யாதொரு லோகல் போர்டின் மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கும் கால அளவானது நவம்பர் மாதம் முதல் தேதி நடுப்பகலில் ஆரம்பித்து முடிவாகிற மூன்று வருஷமாகும்.

(2) யாதொரு லோகல் போர்டின் மெம்பர் உத்தியோகத்தில் நேரிடும் சாதாரண காலி ஸ்தானங்களை சாதாரண எலெக்ஷன்களில் பூர்த்தி செய்யவேண்டும்; அந்த காலி ஸ்தானங்கள் நேரிடுவதற்கு அடுத்து முந்திய ஆகஸ்ட், ஸெப்டெம்பர் மாதங்களில் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற தினம் அல்லது தினங்களிலே ஷை எலெக்ஷன்கள் நடக்கும்படி நிர்ணயிக்கப் பட்ட அதிகாரி அவைகளை நிச்சயிக்கவேண்டும்.

ஆனால், போதுமான காரணத்தைக்கொண்டு பிரதேச கவர்ன்மென்டார் ஸெப்டெம்பர் மாதம் முடிந்துபோன பிறகு யாதொரு சாதாரண எலெக்ஷன் நடத்தும்படி கட்டளையிடலாம், அல்லது அப்படிப்பட்ட எலெக்ஷன் நடத்த அனுமதி கொடுக்கலாம்.

(3) யாதொரு காலி நேரிட்ட பிறகு நடத்தப்படும் சதாரண எலெக்ஷனில் தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு லோகல் போர்ட்டின் மெம்பரானவர் உடனே உத்தியோகம் வகிக்கத் தொடங்கவேண்டும்; ஆனால், அவர் ஷை காலி நேரிடுவதற்குமுன் தாம் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு காலம் உத்தியோகம் வகிக்க அர்ஹதையுள்ளவரா யிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் மாத்திரமே உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(4) யாதொரு லோகல் போர்டின் மெம்பர் உத்தியோகத்தில் தற்செயலாய் நேரிடும் காலியைத் தற்செயல் எலெக்ஷனில் பூர்த்தி செய்யவேண்டும்; அந்த காலி நேரிட்ட பிறகு கூடிய சீக்கிரத்திலே ஷை எலெக்ஷன் நடக்கும்படியாய் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி அதை நிச்சயிக்கவேண்டும்:

ஆனால், சாதாரணமாய் (மெம்பர்) ஸ்தானத்தைவிட்டு நீங்கவேண்டிய தேதிக்குமுன் மூன்று மாத காலத்துக்குள் நேரிடும் யாதொரு காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக தற்செயல் எலெக்ஷன் எதையும் நடத்தக்கூடாது; மேலும், அடுத்தாற்போல் நடக்கும் சதாரண எலெக்ஷனில் அந்த காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(5) தற்செயலாய் யாதொரு காலி நேரிடுவதன்மேல் தெரிந்தெடுக்கப்படும் யாதொரு லோகல் போர்டின் மெம்பரானவர் உடனே உத்தியோகம் வகிக்கத் தொடக்கவேண்டும்; ஆனால், அவர் எந்த மெம்பருடைய ஸ்தானத்தில் தாம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த மெம்பரானவர் காலி நேரிடாமலிருந்தால் எவ்வளவு காலம் உத்தியோகம் வகிக்க அர்ஹராயிருந்திருப்பாரோ அவ்வளவு மாத்திரமே உத்தியோகம் வகிக்கவேண்டும்.

குறிப்பு.

செ. 11 (1) வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி—**உத்தியோகம் வகித்தும் காலம்.**—மெம்பர்கள் உத்யோகம் வகிக்கும் காலம் நவம்பர் மாதம் முதல் தேதியன்று பகல் 12 மணிக்கு ஆரம்பித்து அதோடு முடிவாகிற மூன்று வருஷங்கள் ஆகும். இவ்விடத்தே கூறப்பட்டிருக்கும் விதி விலக்குகள் பின் வருவனவாம்: (1) செ. 16-ன் படி ஒரு மெம்பர் தன் ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிடலாம், (2) ஒரு லோகல்போர்டின் மெம்பர் தன் உத்யோக காலம் ஆரம்பிக்கிற தேதிமுதல் மூன்று மாதங்களுக்குள்ளாக அல்லது 1922 ஞூத்து ராஜ விசுவாச பிரமாணிக்க ஆக்ட் II, செ. 4-ல் குறிப்பிட்ட தேதிக்குப்பின் கூடும் முதல் மூன்று கூட்டங்களில் ஒன்றில் தன் விசுவாசப் பிரமாணிக்கத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால் அவர் மெம்பராயிருப்பது முடிவாகிவிடும், (3) செ. 56-ல் விவரிக்கப்பட்ட யோக்கியதைக் குறைவுகள் ஒரு மெம்பருக்கு ஏற்பட்டால் அவரது உத்யோக காலம் முடிவாகி விடும். மற்ற விவரங்களுக்கு செ. 56-ன் குறிப்பைப் பார்க்க. (4) செ. 45-ன் படி மதராஸ் கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்தாபனங்களை கலைத்து விடவும் அவைகளைப் புதுப்பிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். செ. 45, செ 240-யும் அதன் குறிப்புகளையும் பார்க்க. (5) பஞ்சாயத்து விஷயங்களில் முக்கியமாக அவைகளை ஒரு குறித்த காலவரையில் தள்ளிவைக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். விலக்குகள் (4), (5) விஷயத்தில் ஒரு மெம்பர் அல்லது பஞ்சாயத்தார் மெம்பராயிருப்பது முடிவாவதால் உத்யோக காலம் மூன்று வருஷமாயிருக்க முடியாது. இந்த ஐந்து விலக்குகளிலும் ஒரு மெம்பரின் காலம் மூன்று வருஷங்களுக்கு முன்னே முடிவாகக்கூடும். ஒரு மெம்பரின் காலம் முடிவாவதற்கு வேறு வழி கிடையாது.

செ. 11 (2) **நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி.**—தேர்தல்களை நடத்துவதற்காக ஆக்டிலுள்ள விதிகளின்படி மதராஸ் கவர்ன்மெண்டாரால் அதிகாரமுற்ற அதிகாரி. செ. 3 (16) பார்க்க. கட்சிக்கொள்கைகள் அல்லது இதர புறம்பான கருத்துகளால் பாதிக்கப்படாதவர்களான லோகல் போர்டுகளுக்கு—அதிகாரிகளுக்கு—தேர்தல் சம்பந்தமான அலுவல்கள் யாவற்றையும் ஒப்புவித்தல் விரும்பத்தகுந்ததென கருதப்படுகிறது. மதராஸ் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிகளின் வசம் ஓடர் ஜாபிதா (எலக்டரல் ரோல்ஸ்)வை தயார் செய்தல், தேர்தல் நடக்கும் தேதியை நிர்ணயித்தல் ஆகியவைகள் சம்பந்தமான எல்லா அலுவல்களும் இந்த சட்டத்தின்படி ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. (1929 ஞூத்து திருத்தப்பட்ட பில் (சட்டம்) நம்பர் 13, பக்கம் 230, நோக்கங்களையும் காரணங்களையும் வெளியிடும் குறிப்பு).

ஆகஸ்டும் செப்டம்பரும்—அதன் கீழுள்ள நிபந்தனையும்.—இம்மாதங்களை ஏற்படுத்தியிருப்பது ஏதோ ஒரு ஒழுங்குக்காகவே யன்றி நிர்ப்பந்திக்க வேண்டுமென்றல்ல. இந்த நிபந்தனையை சேர்த்திருப்பதனால், ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் சாதாரண தேர்தலை நடத்துவது தீர்மானத்தின்படி ஒரு ஒழுங்கை யனுசரித்தே யன்றி நிபந்தனைக்குட்பட்டல்லவென்பது ஸ்பஷ்டமாகிவிட்டது. இருந்தாலும், தேர்தலை நடத்தக்கூடிய ஒரு அதிகாரி ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களிலன்றி இதர மாதங்களில் நடத்தவேண்டுமாயின் தேர்தலுக்கு முன்னதாக மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதியை பெற்றுக்கொள்வது தனது செயலை நியாயமுள்ளதாக்குவதும் தனது நிலைமையை பலப்படுத்திக் கொள்வதுமாகும்.

செ. 11 (4) **சாதாரணமாய் மெம்பர்ஸ்தானத்தை விட்டு நீக்கவேண்டிய தேதிக்கு முன் மூன்று மாதகாலத்திற்குள்.**—சாதாரணமாக ஒரு மெமபர் தனது பதவியை வகிக்கவேண்டியகாலம் நவம்பர் முதல் தேதி நடுப்பகலோடு முடிவாகிறது. இது சாதாரணமாக மெம்பர் தன் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டிய காலமாகும். தேர்தல் என்பது தேர்தல் நடக்கப்போவதாக பிரசித்தப்படுத்துதல் முதல் தேர்தல் முடிவை வெளிப்படுத்துதல் வரை, அதாவது தேர்தல் அபிப்பிராயங்களை பதிவு செய்துகொள்ளவோ அல்லது அதில்லாமலோ ஒரு மெம்பரை தேர்ந்தெடுத்தல் வரை நடைபெறும் எல்லாக் காரியங்களின் போக்கையும் பொருள் தருவதும் அடக்கிக் கொள்வதுமாகும். (ஸ்ரீநிவாசலு எ. குப்புசாமி, 1928, M.W.N. 876=A.I.R. 1928 M. 253.) ஆகையால் தேர்தல் முடிவை வெளியிடவேண்டிய கடைசி தினம் நவம்பர் முதல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக விழ நேருமாயின், அதாவது ஆகஸ்ட் முதல் தேதி நடுப்பகலுக்குப் பின்னால் விழுமாயின் தேர்தல் நடத்தக்கூடாது, நடுப்பகலுக்கு முன்னால் விழுமாயின் தேர்தலை நடத்தக்கூடும். தேர்தல் பொதுவாக. செ. 47க்கு மேல் பார்க்க.

யாதோரு எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.

11-A. (1) யாதொரு லோகல் போர்டுக்காக 11-வது பிரிவின்படி நடத்தப்படும் யாதொரு சாதாரண அல்லது தற்செயல் எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், நிர்ணயிக்கப் பட்ட அதிகாரி நிஷ்கரிஷை செய்யக்கூடிய தினத்தில் புதிதாய் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(2) அப்படிப்பட்ட புதிய எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், லோகல் போர்டார் - யோக்கியதைப் பெற்ற யாதொரு நபரை அந்த காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக நிர்ணயிக்கப் பட்ட விதமாய்த் தெரிந்தெடுக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு லோகல் போர்டின் மெம்பர் உத்தியோகம் வகிக்கும் கால அளவானது - சந்தர்ப்பத்துக் கேற்றபடி அவர் சதாரண எலக்ஷனிலாகிலும் தற்செயல் எலெக்ஷனிலாகிலும் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தால் என்ன காலத்தில் அது முடிவாயிருந்திருக்குமோ அதே காலத்தில் முடிவாகும்.

குறிப்பு.

செ. 11-A (1) பொது.—சாதாரண தேர்தல் ஆகஸ்ட் செப்டெம்பர் மாதங்களுக்குள்ளாக நடக்கவேண்டியதாயின் மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதி தேவையில்லை. அப்படியில்லையாயின் அது தேவை. செ. 11 (2) தலைப்பு "ஆகஸ்ட்-செப்டம்பர்" குறிப்பு பார்க்க. இடைக்காலத்தில் ஏற்படும் தேர்தலுக்கும் மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதி தேவையில்லை, ஏனெனின், மெம்பரின் ஸ்தானம் காலியான உடனே எந்த மாதத்திலும் அத்தகைய தேர்தல் நடைபெறக்கூடும்.

அருகரான நபர்.—மெம்பராகக் கோருவதற்கும் மெம்பர் ஸ்தானத்தை வகிப்பதற்கும் அருகரான ஒருவரே லோகல் போர்டில் மெம்பர் ஸ்தானத்தை வகிக்க அருகராவார். செ. 55, செ. 56 பார்க்க. ஆதலால், லோகல் போர்டில் காலியாகும் மெம்பர் ஸ்தானத்தை நிரப்ப லோகல் போர்ட் அத்தகைய நபரையே தேடி எடுக்கவேண்டும். பிரத்தியேக ஸ்தானங்கள் சம்பந்தப்பட்டவரை அவைகளுக்குறிய சாதியினர்களையே விதிமுறையின்படி தேர்ந்தெடுக்க வேண்டும். செ. 9 பார்க்க.

லோகல் போர்டுகளின் ப்ரெஸிடென்டுகளும் வைஸ்-ப்ரெஸிடென்டுகளும்.

12. ஒவ்வொரு லோகல் போர்டும் அதன் மெம்பர்களில் ஒருவரை அதன் ப்ரெஸிடென்டாயிருக்கும் படியும் இன்னொரு மெம்பரை அதன் வைஸ்ப்ரெஸிடென்டாயிருக்கும் படியும் தெரிந்தெடுக்க வேண்டும்.

குறிப்பு.

பொது.—தற்போது, பஞ்சாயத்தெனப்படும் பழைய யூனியன் போர்டு உள்பட ஒவ்வொரு லோகல் போர்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ப்ரெசிடெண்டையும் ஒரு வைஸ்-ப்ரெசிடெண்டையும் பெற்றிருக்கவேண்டும். இதுவரை. யூனியன் போர்டுகளுக்கு வைஸ்-ப்ரெசிடெண்டுகள் கிடையாது, டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் எல்லா ப்ரெசிடெண்டுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்ல. 45 வருஷகாலமாக தொந்திரவு செய்ததன் பலனாக மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த உத்யோகங்களை தேர்தலுக்கு விட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் ஒரு மெம்பரைக் குறித்தெடுப்பதிலிருந்த தீமைகளைப்போன்றவை ஒரு ப்ரசிடெண்டை நியமிப்பதிலும் இருந்தன. இந்த உத்தியோகங்களை குடியாட்சிக் கொள்கைகளுக்கிணங்க தேர்தலுக்குட்படுத்தியிருப்பதால் மதராஸ் கவர்ன்மெண்டுக்கல்லாமல் பொது ஜனங்களுக்கு தாங்கள் உத்திரவாதமாக விருப்பதை பிரசிடெண்டுகளும் வைஸ்-பிரசிடெண்டுகளும் உணர்ந்து பொது ஜன நன்மைக்கு எப்போதும் பாடுபடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. செ. 43-ல் கண்டிருக்கும் காரணங்களுக்காக மதராஸ் கவர்ன்மெண்டார் எந்த பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்டையும் விலக்கிவிடலாம். செ. 43 பார்க்க. ஒரு டிஸ்ட்ரிக்ட்

போர்ட் பிரசிடெண்ட் ஒரு யூனியன் போர்டின் ப்ரெசிடெண்டையாவது, வைஸ்-ப்ரெசி டெண்டையாவது விலக்கிவிட அதிகாரமில்லை. செ. 44-ல் கண்டிருக்கிறபடி ஒரு லோகல் போர்டின் பிரசிடெண்ட் அல்லது வைஸ் பிரசிடெண்டுக்கு விரோதமாக அவர்மீது நம்பிக்கை யில்லை என்ற ஒரு தீர்மானத்தை பிரேரேபிக்கலாம், அது நிறைவேறிவிடுமாயின் அந்த பிரசி டெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்ட் சில சந்தர்ப்பங்களில் தனது உத்யோகத்தை காலி செய்தவராக கொள்ளப்படுவார். செ. 44 பார்க்க. பெண்களும் லோகல்போர்டுகளின் பிரசி டெண்டாக அல்லது வைஸ்-பிரசிடெண்டாக விருக்கலாம்.

ஒவ்வொரு லோகல் போர்டும் தனது மெம்பர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க லாம்.—ஒரு லோகல் போர்ட் தன் மெம்பர்களையே பிரசிடெண்டாகவும் வைஸ்-பிரசிடெண் டாகவும் தேர்ந்தெடுக்கவேண்டும்; மெம்பர்களல்லாதவர்களையும் மெம்பர்களாயிருந்து நீங்கிய வர்களையும் எடுக்கக்கூடாது. மெம்பர்களின் அருகதை யல்லாமை செ. 56-ன் கீழ் விவகரிக் கப்பட்டிருக்கின்றது, அதை சில விஷயங்களில் தீர்மானிக்கக்கூடிய அதிகாரி இன்னுரென் பதை செ. 57-ன் கீழ் விவகரிக்கப்பட்டிருக்கின்றது.

பிரசிடெண்டும் வைஸ்-பிரசிடேண்டும்.—லோகல் போர்டின் அலுவல்களை பிரசி டெண்ட் செய்யக்கூடாததுபோல, கூட்டத்தை கூட்டும் உரிமையுள்பட்ட எல்லா கார்ய நிர் வாக அதிகாரமும், அதாவது செ. 112-ல் விவரிக்கப்பட்டிருக்கிறபடி பரிபாலனத்தை நடத்து தல், பிரசிடெண்டுக்கு உரியது. பிரசிடெண்ட் நிர்வகிக்கவேண்டிய காரியங்களை லோகல் போர்ட் செய்யக்கூடாது. செ. 6 பார்க்க. பிரசிடெண்ட் நேரிலிருக்கும்போது கூட்டங்களில் தலைமையை அவரே வகிக்கவேண்டும். செ. 32 பார்க்க. டிஸ்ட்ரிக்ட் போர்ட் சொத்துகளை சொந்தமாக பெற்றிருக்கக் கூடியதும், இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராக வந்து கொண்டிருக்கக் கூடியதும், தனக்குச் சொந்தமான ஒரு முத்திரையுடையதுமான சட்டத்தினு லாகிய ஒரு ஸ்தாபனமாகும், அது தன் சட்டத்தினுலாகிய பெயரினுல் வியாஜ்யம் தொடரவும் தொடரப் பெறவும் கூடும். அது அத்தகைய சட்டத்தினுலாகிய ஸ்தாபன மாதலால் பிரசிடெண்டை அல்லது தனி மெம்பர்களைக் காட்டிலும் வேருனது. பிரசிடெண்ட் உண்மையில் போர்டின் காரியஸ்தர் அல்ல, போர்ட் பிரசிடெண்டில்லா மல், தானுக தனது சொந்தப் பெயராலும் தன் சொந்த முயற்சியாலும் வியாஜ்யம் தொடர முடியாதென சொல்லக்கூடாது. (செக்ரிடெரி ஆப் ஸ்டேட் எ. டிஸ்ட்ரிக்ட் போர்ட், தஞ்சாவூர், 31 L.W. 508). 1922ஸ்த்து II-வது மதராஸ் ஆக்டின்படி பிரமாணிக்கம் எடுத்துக் கொள்ளாத மெம்பர்கள் பிரசிடெண்ட்டை தேர்ந்தெடுப்பதில் கலந்துகொள்வது செல்லுபடி யாகாது (ராஜாபாதர் முதலியார் எ. விஸ்வநாத ரெட்டி, 45 M L J. 543 (1) = A.I.R. 1924 M. 515) பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்ட் என்பது செல்லும்படியாகக் கூடிய விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்டென அர்த்தமாவ தாகும். (தெய்வசிகாமணி எ. சேதுரத்ன ஐயர், A.I.R. 1925 M. 1084.) ஒரு பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்ட் கூட ஒரு மெம்பராயிருப்பதால் பிரதிபலனுக யாதொருபொருளை யும் எதிர்பார்க்கக்கூடாது செ 20 பார்க்க. யாதொரு லோகல்போர்டின் பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்ட் தன் உத்தியோக தோரணையில் செய்யப்பட்ட காரியங்களில் குற்றம் சாற்றப்பெற்ருல், முன்னுடியே மதராஸ் கவர்ன்மெண்டின் அநுமதி பெற்ருலல்லாமல் அத்த கைய குற்றங்களுக்காக எந்த கோர்டும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. செ. 227-A பாக்க. கிரிமினல் ப்ரோஸிஜர் கோட் செ. 197-ன்படி வியாஜ்யம் தொடர அனுமதி தேவையா இல்லையா என்பது சந்தேகமாயினும், செ. 227-A கிரிமினல் ப்ரோஸிஜர் கோர்டின் செ. 197-ஐ விட விசாலமுற்றதாயிருப்பதால் அநேக விஷயத்தில் அனுமதி அவஸ்யமேயாகும். செ. 227-A. சிவில் தாவா விஷயத்தில் பிரயோகிக்கக் கூடியதல்ல. நன்னேக்கத்தோடு செய்யப் பட்ட எந்த காரியத்திற்காகவும் ஒரு மெம்பர் பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்டின்மீது எவ்வித நியயாதிகார வியாஜ்யமும் தொடர்தல் கூடாது. செ. 226 (4) பார்க்க. "இந்த ஆக்டை அனுசரித்தாயினும் நிறைவேற்றவாயினும் நிறைவேற்ற உத்தேசித்தாயினும் செய்யப்பட்ட தாகவாவது செய்யப்பட்டதாக பொருள்படுகிறதாகவுள்ள யாதொரு செய்கை" எனும் தலைப் புள்ள செ. 225 (1)-ன் கீழுள்ள குறிப்பையும் பார்க்க. முனிசிபாலிட்டியால் செய்யப்பட்ட ஒரு காரியம் பொது ஜனங்களால் அறுவறுக்கத்தக்கதாக சொல்லப்படக்கூடியதாயிருப்பதற்காக ஒரு முனிசிபாலிடியின் சேர்மன்மீது இந்தியன் பெனல் கோட் செ. 290-ன்படி வியாஜ்யம் தொடரக்கூடாது. எதாவதொரு வியாஜ்ஜியம் தொடரவேண்டியதாயிருந்தால் அது முனிசிபல் கார்பரேஷன் மீதேயாயிருக்கவேண்டும். (சேர்மன், முனிசிபல் கௌன்சில், Inre 1 Weir 248.)

[இ. பு. ப. 182]

பிரசிடேண்ட் அல்லது வைஸ்-பிரசிடேண்டின் உத்யோக காலம்.—ஒரு மெம்பர்தான் பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ இருக்கமுடியும். பிரசிடெண்

டுகளோ வைஸ்-பிரசிடெண்டுகளோ மெம்பர்களாயிருப்பது முடிந்து விடுமாயின் அவர்கள் அப்போதே பிரசிடெண்டுகளாகவோ வைஸ்-பிரசிடெண்டுகளாகவோ இருப்பதும் தீர்ந்து விடுகின்றது. செ. 16-படி பிரசிடெண்டுகளின் அல்லது வைஸ்-பிரசிடெண்டுகளின் உத்யோக காலும் சாதாரணமாக அவர்கள் மெம்பர்களாக இருந்து வருகிற காலவரையுமே நீடித்துவருகிறது அல்லது அவர்கள் தம் பிரசிடெண்டு அல்லது வைஸ்-பிரசிடெண்ட் உத்தியோகங்களை ராஜிஞமா செய்கிறவரையிலுமே தொடர்ந்து வருகிறது. சாதாரணமாக ஒரு மெம்பர் ஒரு சாதாரண தேர்தலில் வந்தவராயிருந்து அதே சமயத்தில் அவர் பிரசிடெண்டாகவோ அல்லது வைஸ்-பிரசிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் அவரது உத்யோக காலம் மூன்று வருஷங்களாகும். இடைக்கால் தேர்தலினுல் அவர் வந்தவராயிருந்தாலும் அல்லது அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபின் சிலகாலம் பொறுத்து பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ வந்தவராயிருந்தாலும் அவர் பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ இருக்கவேண்டிய காலம் அவர் மெம்பராக விருக்கவேண்டிய காலத்தின் அளவே யாதலால் அது மூன்று வருஷங்களுக்கு குறைந்தே யிருக்கும். செ. 11-யும் 15-யும் பார்க்க.

[இ. பு. ப. 182]

பிரசிடேண்டுகளின்மீது வியாஜ்யம் தோடர எப்போது அனுமதி வேண்டும், எப்போது அனுமதி வேண்டாம்?—ஒரு அபேட்சகருக்கு ஓட்டு கொடுக்கவோ அல்லது யாருக்கும் ஓட்டு கொடுக்காமலிருக்கவோ ஒரு ஓட்டரை தூண்டும் பொருட்டு அவரது சொத்துக்கு நஷ்டம் உண்டாக்குவதாக பயப்படுத்தியதால் ஒரு முனிசிபல் கௌன்சிலின் சேர்மனின் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்விஷயத்தில் அனுமதி தேவையில்லையென தீர்மானிக்கப்பட்டது. ஒரு ஓட்டருக்கு நஷ்டம் விளைவிப்பதாக பயப்படுத்துவது ஒரு பொது ஜன ஊழியராலேயே செய்யக்கூடிய குற்றமாகவாவது அல்லது செய்யப்பட்ட குற்றத்தினுடைய இந்த அம்சம் ஒரு முனிசிபாலிடியினுடைய சேர்மனுலேயே செய்யக்கூடியதெனவாவது தீர்மானிக்கமுடியாது. (ராஜாராவ் எ. ராமசாமி, 50 Mad. 754=A.I.R. 1927 Mad. 566=52 M.L.J. 647). தன்னுல் ஒரு பொதுப்பாட்டையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு தடையை விலக்கும்போது தற்போதை பஞ்சாயத்தின் பிரசிடெண்டழைக்கப்படும் ஒரு யூனியன் சேர்மன் அவரைத் திட்டியதாக ஒருவர் பிராது கொடுத்து அவர்மீது வியாஜ்யம் தொடுத்தார். அவர் தடையை விலக்கியது ஒரு பொது ஜன ஊழியராகவே யாயினும் அவர் துர்ப்பாஷையை பிரயோகித்தது அந்த ஹோதாவிலல்ல. ஆதலால் கிரிமினல் ப்ரோசிஜர் கோட், செ. 197-ன்படி துர்ப்பாஷையை உபயோகித்தற்காக வியாஜ்யம் தொடர அனுமதி தேவையில்லையென தீர்மானிக்கப்பட்டது. (அப்துல் ரஹிமான் கான் சாஹிப் எ. க்ரௌன், 8 Cr. L.R. 283=17 Cr. L.J. 462=36 I.C. 142). ஓட்கொடுப்பதிலிருந்து சிலரை துராக்ருதமாக தடுக்கும் பொருட்டு அவர்கள் பொதுப்பாட்டைகளில் அக்ரமமாக ஆக்ரமிப்புகளை ஏற்படுத்தியிருப்பதாக நினைத்துக்கொண்டு அவர்கள் மீது வியாஜ்யம் தொடர்வதாக ஒரு முனிசிபல் சேர்மன் பயப்படுத்தியதற்காக அவர்மீது வியாஜ்யம் தொடர்வதாயின் அதற்கு மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதி தேவையில்லை. கவர்மெண்டாரால் அல்லாமல் மற்றபடி அவரை உத்யோகத்திலிருந்து விலக்கிவிட முடியாதென்பது சந்தேகமில்லாத விஷயம். (1 Weir 234). [இ. பு. ப. 182-184]

ஒரு பிரசிடேண்டின் பேரில் சிவில் பரிகாரம்.—கிரிமினல் சட்டத்தின்படி தன் மீது ஒரு யூனியன் பஞ்சாயத்து சேர்மன் வியாஜ்ம் தொடர்ந்ததனுல் மனஸ்தாபமுற்ற ஒருவர், அதற்கு பரிகாரம் தேடிக்கொள்ளக்கூடாதென நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கவில்லை, அவர் தன்னை இம்சித்ததற்காக சேர்மனின்மீது வியாஜ்யம் தொடரலாம். குற்றம் சொல்லப்பெற்ற ஒரு காரியம் ஒரு தாலூகா போர்டின் சிப்பந்திகளால் தம் அதிகார தோரணைக்குட்பட்டு ஆக்டின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது செய்ய உத்தேசித்ததாகவோ நிரூபிக்கப்பட்டாலொழிய லோகல் போர்டின் ஆக்ட்டை இவ்விஷயத்தில் அனுசரிப்பது கூடாது. (அண்ணுஜி எ. சுப்ரமண்யம், 13 M. 442). [இ. பு. ப. 184]

ஒரு பிரசிடேண்டுக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்கள்.—சமயோசித சாமர்த்தியம், எளிதில் கலக்கமுறாத நெஞ்சம், சுலபமாக பிறர் வசப்படாத தன்மை, இவைகளோடு தன் உத்தியோகத்தின் மதிப்பை தகுந்தபடி உணரக்கூடிய சக்தி, இவ்வளவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு இருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. பலரை ஆளக்கூடிய சக்தியுடையவரும் தன் உத்திரவாதங்களை உணரக்கூடியவருமான ஒருவரே அந்த ஸ்தானத்திற்கு சாதாரணமாக தகுந்தவர். மேற்கூறப்பட்ட குணங்களோடு பொது அறிவும் விவாதிக்கப்படவேண்டிய விஷயங்களில் முக்யமான பழக்கமும் அவருக்கு இருக்குமாயின் அவரைத் தேர்ந்தெடுப்பதற்கு இவைகளே போதுமான காரணங்களாகிவிடும். இயற்கையான உலகத்தில் இருப்பதுபோல, சில சமயத்தில் கூட்டங்களில் குழப்பம் ஏற்படும்போது ஒரு பெரும்

புயல் வீசாமல் சமநிலை ஏற்படுவதில்லை. திரட்டப்பெற்ற மின்சார சக்தியை ஒரு கெடுதலுமில்லாமல் பூமிக்குள் செலுத்தக்கூடிய மின்னலை நடத்தும் கருவியைப்போல அத்தகைய சமயங்களில் ஒரு சேர்மென் நடந்துகொள்ளவேண்டும். சேர்மனுக்கு சமயோசித சாமர்த்தியம் ஒரு நேர்த்தியான குணமேயாகும். கூட்டத்தில் வந்திருப்பவர்களால் நன்மதிக்கப்பட்டிருப்பது அதை செவ்வையாய் நடத்துவதேயாகும். நிதானமான புத்தி, சமயோசித சாமர்த்தியம், விநயமான நடக்கை, பிசகாத உறுதி இவை அக்கிராஸனம் வகிப்பவருக்கு அவசியமானவை யென்பது இங்கே குறிப்பிடத்தகுந்தது. செ. 32-ன் முடிவிலும் செ 11-ன் ஆரம்பத்திலும் பார்க்க.

[இ. பு. ப. 184]

யாதொரு எலெக்ஷனில் ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ் - ப்ரெஸிடெண்ட் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.

12-A. 12-வது பிரிவின்படி நடத்தப்படும் யாதொரு எலெக்ஷனில் ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்ட் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், புதியதாய் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.''

13. [மதராசு 1930-வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

14. [மதராசு 1930-வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

ப்ரெஸிடெண்ட் வைஸ் - பிரஸிடெண்ட் ஆகிய இவர்கள் உத்தியோகத்தில் காலி.

15. (1) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர்—

(a) அந்த லோகல் போர்டின் மெம்பராக அவருடைய உத்தியோககாலம் முடிந்துபோவதன் மேலாவது, அவர் அப்படிப்பட்ட மெம்பராயிருப்பது மற்றப்படி நின்றுபோவதன்மேலாவது,

(b) அவர் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டிலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டின் ப்ரஸிடென்டாகவோ வைஸ்-ப்ரெஸிடென்டாகவோ தெரிந்தெடுக்கப்படுவதன்மேலாவது தம்முடைய உத்தியோகத்தைக் காலிசெய்துவிட்டதாகக் கருதப்படுவார்.

(2) யாதொரு லோகல் போர்டின் வைஸ்-ப்ரெஸிடென்டானவர்—

(a) அந்த போர்டின் மெம்பராக அவருடைய உத்தியோககாலம் முடிந்துபோவதன்மேலாவது, அவர் அப்படிப்பட்ட மெம்பராயிருப்பது மற்றப்படி நின்றுபோவதன்மேலாவது,

(b) அவர் ஷை போர்டின் ப்ரெஸிடெண்டாகவோ அல்லது பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டிலுள்ள வெறே யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டாகவோ வைஸ்-ப்ரெஸிடெண்டாகவோ தெரிந்தெடுக்கப்படுவதன்மேலாவது தம்முடைய உத்தியோகத்தைக் காலிசெய்துவிட்டதாகக் கருதப்படுவார்.''

(3) யாதொரு லோகல் போர்டிலே ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ்-ப்ரெஸிடெண்ட் உத்தியோகத்தை விட்டுபோகிறவர்—மற்றப்படி யோக்கியதையுள்ளவராயிருக்கிற பக்ஷத்தில், மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டவராவார்.

குறிப்பு.

செ. 15 (1). பிரசிடேண்ட்.—அவர் பின்வரும் 3 சந்தர்ப்பங்களில் பிரசிடெண்டாயிருப்பது நின்றுவிடுகிறது: (1) மெம்பராயிருக்கும் காலம் முடிந்து விடும்போது, (2) செ. 56-ல் கண்ட காரணங்களுக்காக அவர் மெம்பராயிருக்க அருகரல்லாதவராகும்போது, அல்லது செ. 16-ன்படி மெம்பர் ஸ்தானத்திற்கு ராஜிநாமா கொடுத்துவிடும்போது, (3) டிஸ்ட்ரிக்டிலுள்ள லோகல் பொர்டுகள் மற்ற ஏதாவதொன்றின் பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்படும்போது. இந்த மூன்று சந்தர்ப்பங்களும் பின்வருபவைகளை பாதிக்காது. ஒரு டிஸ்ட்ரிக்டிலுள்ள ஒரு லோகல் போர்டின் பிரசிடெண்ட் மற்றொரு டிஸ்ட்ரிக்டிலுள்ள ஒரு லோகல் போர்டின் பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்பெற்றால் முதல் கண்ட லோகல் போர்டிலாவது பின்னதிலாவது பிரசிடெண்டாகவிருப்பது தீர்ந்துவிடாது, ஆதலால் ஒருவர் இரண்டு டிஸ்ட்ரிக் போர்டுகளுக்கோ அல்லது ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் மற்றொரு டிஸ்ட்ரிக்டின் ஒரு தாலூகா போர்டுக்கும் அல்லது பஞ்சாயத்திற்கும் பிரசிடெண்டாக இருக்கக்கூடுமென நினைக்க இடமிருக்கிறது. ஆதலால் ஒரு லோகல் போர்டின் பிரசிடெண்டோ வைஸ்-பிரசிடெண்டோ மற்றொரு லோகல் போர்டின் பிரசிடெண்டாகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ இந்த மாகாணத்தில் இருக்கக் கூடாதென்பது கருத்தாயின் இந்த க்ளாஸ் (b) யின் கடைசியில் "அல்லது அதற்கு வெளியில்" எனும் பதங்களை மதராஸ் கவர்ன்மெண்டார் சேர்ப்பது அவசியமாகும். [இ. பு. ப. 186]

மெம்பர்களும் வைஸ்-ப்ரெஸிடெண்டும் ப்ரஸிடெண்டும் ராஜிநாமா செய்வது.

16. ப்ரெஸிடெண்டும் யாதொரு வைஸ்-ப்ரெஸிடெண்டும் தவிர லோகல் போர்டைச் சேர்ந்த வேறே எந்த மெம்பராவது-ப்ரெஸிடெண்டுக்கு நோடீஸ் கொடுத்துத் தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்; ப்ரெஸிடெண்டானவர்-லோகல் போர்டுக்கு நோடீஸ் கொடுத்து ராஜிநாமா செய்யலாம்.

அந்த ராஜிநாமாவானது-யாதொரு மெம்பரின் அல்லது வைஸ்-ப்ரெஸிடெண்டின் விஷயத்தில் அது ப்ரெஸிடெண்டால் வரப்பெற்றுக்கொள்ளப்படுகிற தேதியிலிருந்தும், யாதொரு ப்ரெஸிடெண்டின் விஷயத்தில் அது லோகல் போர்டின் ஒரு சபைக்குமுன் வைக்கப்படுகிற தேதியிலிருந்தும் செலாவணியாக வேண்டும்.

குறிப்பு.

செ. 16. ராஜிநாமா செய்தல்.—ஒரு மெம்பர் அல்லது வைஸ்-பிரசிடெண்டின் ராஜினாமா பிரசிடெண்டினிடம் போய் சேர்ந்ததும் அவர் மெம்பராகவோ வைஸ்-பிரசிடெண்டாகவோ விருப்பது நீங்கிவிடுகிறது, ஆனால் ஒரு பிரசிடெண்டு ராஜிநாமா செய்துவிட்டாலும் அவர் அடுத்துவரும் லோகல் போர்டின் கூட்டத்துவரையும் உத்தியோகத்தில் இருக்க வேண்டும். [இ. பு. ப. 186]

அது கூட்டத்தில் வைக்கப்படவேண்டும்.—செ. 16ன்படி ராஜிநாமாவைப்பற்றி நோட்டிஸ் கொடுப்பது லோகல் போர்டின் அலுவல்களில் ஒன்றாகும், போர்டின் கூட்டங்களில் ஒன்றில் அது ஆலோசிக்கப்படவும் கூடும். செ. 16ன்படி ராஜிநாமாவை அங்கீகரிக்க வேண்டுவது அவஸ்யமில்லையாயினும், ராஜிநாமாவைப் பற்றி நோடீசை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சுற்றி யனுப்புவதாலும், ஒவ்வொரு மெம்பரும் அனுப்பப்பட்ட ராஜிநாமாவை பெற்றுக்கொண்டதாலும், ராஜிநாமா பலித்துவிட்டதாகக் கருதக்கூடாது. [இ. பு. ப. 186]

காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்வது

17. யாதொரு போர்டிலுள்ள ப்ரெஸிடெண்ட், வைஸ்-ப்ரெஸிடெண்ட் அல்லது மெம்பருடைய உத்தியோகம் காலியானல் அல்லது காலியாகப்போவதாயிருந்தால், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி உத்தரவு பிறப்பிக்க அதிகாரமுள்ள அதிகாரிகளால் இதற்கு விரோதமாக யாதொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிராத பட்சத்திலே, நூதனமாய் ஒரு ப்ரெஸிடெண்டை, வைஸ்-ப்ரெஸிடெண்டை அல்லது மெம்பரை இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாக தெரிந்தெடுக்கவேண்டும்.

18. [மதராசு 1930-ஞூ்த்திய 11-வது ஆக்டினுல் ரத்து செய்யப்பட்டது.]

தெரிந்தெடுக்கப்படும் விஷயங்களேயும் நியமிக்கப்படும் விஷயங்களேயும் குறித்துப் பிரசித்தஞ் செய்ய வேண்டுமென்பது.

19. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டை யாகிலும் வைஸ் ப்ரெஸிடெண்டையாகிலும் அங்காமியான ப்ரெஸிடெண்டையாகிலும் மெம்பரையாகிலும் தெரிந்தெடுப்பதையாவது நியமிப்பதையாவது நிர்ணயிக்கப்பட்ட விதமாய் பிரசித்தம் செய்யவேண்டும்.

குறிப்பு.

பிரசித்தம் செய்யவேண்டும்.—'வேண்டும்" எனும் பதம் தேர்தல் முடிவு தெரிந்தவுடனே அதை விளம்பர மூலமாக பிரசித்தப்படுத்தவேண்டும் எனும் அவசியத்தை உணர்த்துகிறது. இது ஒரு கடமை அதாவது கட்டாயம் செய்யவேண்டியதாகும், இஷ்டத்தைப் பொருந்தியதல்ல. விளம்பரப்படுத்தாவிடில், சட்டப்படி, விளம்பரப்படுத்த வேண்டியவர்கள் தம் கடமையைச் செய்யத் தவறியதற்காகவோ தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகரது பெயரை வேண்டுமெனவே பிரசித்தப்படுத்தாததற்காகவோ நஷ்டயீடு செய்து தருவதற்குறிய ராவார்கள். [இ. பு. ப. 187.]

எந்த மெம்பரும் பிரதிபலன் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பது.

20. லோகல் போர்டிலுள்ள எந்த மெம்பரும் எந்த ஹோதாவிலாகிலுஞ் சரி தாம் செய்திருக்கும் ஊழியத்துக்காக அப்படிப்பட்ட போர்டாரின் வசத்திலிருக்கும் அல்லது மேல்விசாரணையிலிருக்கும் நிதியிலிருந்து யாதொரு சம்பளமோ அல்லது வேறே பிரதிபலனே பெறவுங்கூடாது கொடுக்கப்படவுங் கூடாது.

குறிப்பு.

பிரதிபலன்.—ஒரு மெம்பர் சம்பளத்தையாவது இதர பிரதிபலனையாவது பெறக் கூடாதெனும்போது பிரசிடெண்டாகவோ வைஸ் பிரசிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பரும் சம்பளத்தையாவது வேறு பிரதிபலனையாவது பெற்றுக்கொள்ள அருகராகார். [இ. பு. ப. 188]

நிர்வாக அதிகாரம் ப்ரெஸிடெண்டினிடத்தில் இருக்குமென்பது.

21. (1) லோகல் போர்டாருடைய தீர்மானங்களை ப்ரெஸிடெண்ட் நிறைவேற்றவேண்டும்; போர்டாருடைய நிர்வாக அதிகாரம் முழுவதும் அந்த ப்ரெஸிடெண்டுக்குண்டு.

(2) லோகல் போர்டார் செலுத்தவேண்டுமென்று இந்த ஆக்டில் வெளிப்படையாய்க் கண்டிருக்கிற யாதொரு அதிகாரத்தை ப்ரெஸிடெண்ட் செலுத்துவது சட்ட சம்மதமாகமாட்டாது.

குறிப்பு.

செ. 21 (1). போர்டாருடைய நிர்வாக அதிகாரம் முழுவதும் அந்த பிரசிடேண்டுக்கு உண்டு.—ஆக்டின்படி லோகல் போர்டாரால் நிர்வகிக்கப்படவேண்டிய காரிய நிர்வாக அதிகாரங்கள் நீங்கலாக லோகல் போர்டுக்குரிய மற்ற எல்லா காரிய நிர்வாக அதிகாரங்களும் பிரசிடெண்டால் நிர்வகிக்கத்தகுந்தவை. காரிய நிர்வாக செயல்களை அவர் லோகல் போர்டின் சார்பாகவே செய்து வருகிறுர். [இ. பு. ப. 189]

செ. 21 (2).—செ. 22-ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அவசரம் நேரிட்டாலொழிய லோகல் போர்டாரால் நிர்வகிக்கத் தகுந்தவையென ஆக்டினுல் வெளிப்படையாய் சொல்லப்பட்டுள்ள (காரிய நிர்வாக அதிகாரங்கள் உள்பட) எந்த அதிகாரத்தையும் பிரசிடெண்டுகள் நிர்வகிக்கக்கூடாதென இந்த சப்-செக்ஷன் வெளிப்படையாகக் கூறுகிறது. அவசர சமயங்களிலும் அவர் லோகல் போர்டுக்கு பதிலாக அதன் அதிகாரங்களை வகிக்கக் கூடாதென லோகல் போர்டார் திட்டமாக சொல்லியிருப்பின் அவர் அதை மீறி நடக்கக் கூடாது. சாதாரண விஷயங்களில் அனுமதியை பின்னுல் பெற்றுக்கொள்வோமென்று

அவர் ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது. அவைகள் அவசரமான காரியங்களாயில்லாவிடில் மெம்பர்களை அவை சம்பந்தமான செலவுகளை நிராகரித்துவிட வேண்டும். இந்த சப்-செக்ஷனுக்கு எதிர்பாகத்தை செ. 6 (2)-ல் பார்க்க, அது வருமாறு: "இந்த ஆக்டின்படியாகிலும் இதா லாக்களின்படியாகிலும் வெளிப்படையாய் குறிப்பிட்டிருக்கிற அலுவல்களை அது (லோகல் போர்டு) நிர்வகிக்கக்கூடாது." [இ. பு. ப. 190]

அவசரமான சந்தர்ப்பங்கள் ப்ரெசிடெண்டுக்குள்ள அதிகாரங்கள்.

22. எந்த வேலையை நிறைவேற்றுவதற்கு அல்லது எந்த காரியத்தைச் செய்வதற்கு லோகல் போர்டாருடைய அனுமதி வேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட வேலையை உடனே நிறைவேற்றுவது அல்லது அப்படிப்பட்ட காரியத்தை உடனே செய்வது பொது ஜனங்களுடைய நன்மைக்கோ அல்லது பந்தோபஸ்துக்கோ அவசியமென்று லோகல் போர்டின் ப்ரெஸிடெண்ட் அபிப்பிராயப்பட்டால், அவசரமான விஷயங்களில் அவர் அந்தப்படி நிறைவேற்ற அல்லது செய்ய உத்தரவு கொடுக்கலாம்; மேலும், அவர் அப்படிப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்காக அல்லது காரியத்தைச் செய்வதற்காகப் பிடிக்கும் செலவை லோகல் பண்டிலிருந்து கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம்

ஆனால்,—

(a) அவர்—குறித்த யாதொரு வேலையை நிறைவேற்றக்கூடாதென்றோ அல்லது குறித்த யாதொரு காரியத்தைச் செய்யக்கூடாதென்றோ தடுத்து லோகல் போர்டாரால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் எந்த உத்தரவுக்கும் விரோதமாய் இந்தப் பிரிவின்படி நடவடிக்கை நடத்தக்கூடாது; மேலும்,

(b) அவர்—இந்தப் பிரிவின்படி தான் நடத்தியிருக்கும் நடவடிக்கையைக் குறித்தும் அதற்குள்ள நியாயங்களைக் குறித்தும் லோகல் போர்டாரின் அடுத்து வருகிற சபையிலே அவர்களுக்கு-ரிபோர்ட் செய்யவேண்டும்.

ப்ரெஸிடென்டின் உத்தியோகம் காலியாயிருக்கும் போது ப்ரெஸிடெண்டின் அலுவல்களைச் செய்வது.

22-A (1) யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டின் உத்தியோகம் காலியாயிருக்கும்போது, வைஸ் ப்ரெஸிடெண்டானவர் - புதிய ப்ரெஸிடெண்ட் ஒருவர் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளுகிற வரையில் ப்ரெஸிடெண்டின் அலுவல்களைச் செய்யவேண்டும்.

(2) (a) யாதொரு டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டின் உத்தியோகம் காலியாயிருந்து, வைஸ் ப்ரெஸிடெண்டின் உத்தியோகம் காலியாயிருந்தாலும், அல்லது வைஸ்-ப்ரெஸிடெண்ட் பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற்போய்விட்டாலும், அல்லது அவர் (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராய்விட்டாலும், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு சபை கூட்டவேண்டும்; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி புதிய ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடெண்ட் தெரிந்தெடுக்கப்பட்டு உத்தியோகம் ஏற்றுக் கொள்ளுகிற வரையிலாகிலும், வைஸ் ப்ரெஸிடெண்ட் விசாரணை அதிகாரப் பிரதேசத்துக்குப் திரும்பி வருகிறவரையிலாகிலும், தம்முடைய அசமர்த்ததையினின்றும் குணமடைகிற வரையிலாகிலும், டிஸ்ட்ரிக் கலெக்டரானவர் - இந்த ஆக்டிலாவது அதன்படி பிறப்பிக்கப்பட்ட விதிகளிலாவது விளம்பரங்களிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, உத்தியோக முறைமையில் ஷை டிஸ்ட்ரிக்ட் போர்டின் மெம்பராகவும் ப்ரெஸிடெண்டாகவும் இருக்கவேண்டும்.

(b) யாதொரு தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் உத்தியோகம் காலியாயிருந்து, வைஸ்-ப்ரெஸிடெண்டின் உத்தியோகம்காலி

யாயிருந்தாலும், அல்லது வைஸ் ப்ரெஸிடெண்ட் பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற்போய்விட்டாலும், அல்லது அவர் (வேலை செய்வதற்குச்) சக்தியற்ற வராய்விட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டால் நியமிக்கப்பட்ட யாதொரு தாலுகா போர்ட் மெம்பராவது, தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டால் நியமிக்கப்பட்ட யாதொரு பஞ்சாயத்து மெம்பராவது தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு சபை கூட்டவேண்டும்; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி புதிய ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடெண்ட் தெரிந்தெடுக்கப்பட்டு உத்தியோகம் ஏற்றுக்கொள்ளுகிற வரையிலாகிலும், வைஸ் ப்ரெஸிடெண்ட் விசாரணை அதிகாரப் பிரதேசத்துக்குத் திரும்பிவருகிறவரையிலாகிலும், தம்முடைய அசமர்த்தையினின்றும் குணமடைகிற வரையிலாகிலும், அப்படி நியமிக்கப்பட்ட மெம்பரானவர் - ஷை தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் அலுவல்களைச் செய்ய வேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியுள்ள ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுப்பதற்காக கூட்டப்படும் சபையை, மெம்பர்களுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விஷயத்திலும் தாலூகா போர்டுகளின் விஷயத்திலும் பரிஷ்காரமாய் பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் முன்னதாகவும், பஞ்சாயத்துகளின் விஷயத்தில் பரிஷ்காரமாய் ஐந்து தினங்களுக்குக் குறையாமல் முன்னதாகவும் நோடிஸ் கொடுத்த பிறகே கூட்டவேண்டும்.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியின்படி யாதொரு தாலுகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் அலுவல்களைச் செயயும்படி நியமிக்கப்பட்ட நபர் - அப்படிப்பட்ட அலுவல்களைச் செய்துகொண்டிருக்கும் காலத்தில், அவர் சந்தர்ப்பத்துக் கேற்றபடி தாலூகா போர்டின் அல்லது பஞ்சாயத்தின் 'அங்காமியான ப்ரெஸிடெண்ட்' என்று அழைக்கப்படுவார்.

விவரணம்—யாதொரு புதிய ப்ரெஸிடெண்டாவது வைஸ்-ப்ரெஸிடெண்டாவது - அந்தப்படி தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தம் செய்யப்பட்ட தன்மேல் உத்தியோகம் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கருதப்படுவார்.

குறிப்பு.

போது.—இந்த செக்ஷனில் செ. 21 விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. செ. 6 (3)-ல் விவரிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் லோகல் போர்டில் சங்கிரமித்திருக்கிறது. பொது ஜன சேவை அல்லது க்ஷேமத்தை யடுத்ததாயில்லாத பட்சத்தில் அத்தகைய அலுவல்களை அல்லது அதிகாரங்களை பிரசிடெண்டு நிர்வகிக்கக்கூடாது. பிரசிடெண்ட் இந்த செக்ஷனின் கீழ் தகுதியின்மையாக நடந்துகொள்ளும் பட்சத்தில் பிரசிடெண்டின் கார்ய நிர்வாக அலுவல்களுக்குத் தேவையான தொகையை அனுமதிக்கும் உரிமை பெற்றுள்ள லோகல் போர்டார் அந்த தொகையை சர்வ சுதந்திரமாய் அனுமதிக்க மறுத்துவிடலாம், அப்போது பிரசிடெண்டு அந்த தொகையை தானே கொடுக்க வேண்டியிருக்கும். [இ. பு. ப. 190]

ஒரு பஞ்சாயத்து பிரசிடேண்டின் காலம் காலியாயிருக்கும்போது—பிரசிடேண்டின் தேர்தல்.—வைஸ்-பிரசிடெண்ட் உத்யோகத்தில் தொடர்ந்து இருக்கும்பொழுதும், கிராமத்திலிருந்து தொடர்ந்தாப்போல் 15 நாட்களுக்கு மேற்படாமல் இல்லாதிருக்கும் பொழுதும், தனது அலுவல்களைப் பார்க்க சக்தியற்றவராக இல்லாதிருக்கும்போதும், தாலூக்கா போர்ட் பிரசிடெண்டால் நியமிக்கப்பட்ட மெம்பர் பிரசிடெண்டை தேர்ந்தெடுப்பதற்காக கூட்டம் கூட்ட அதிகாரமில்லை. இப்படியல்லாமல், வைஸ்-பிரசிடெண்டின் உத்யோகம (ஸ்தானம்) காலியாயிருக்கும்போதும், தொடர்ந்தாப்போல் 15 நாட்களுக்குமேல் அவர்

கிராமத்திலில்லாதிருந்தாலும், தனது அலுவல்களைப் பார்க்க அவர் அசக்தராகிவிட்டாலும் அவ்விதம் நியமிக்கப்பட்டிருக்கும் மெம்பர் பிரசிடெண்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்ட அதிகாரமுண்டு. பின் கூறப்பட்ட விஷயத்தில், (1) ஒரு புதிய பிரசிடெண்டோ வைஸ்-பிரசிடெண்டோ தேர்ந்தெடுக்கப்பட்டு தன் உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளுகிறவரையிலும், அல்லது (2) வைஸ்-பிரசிடெண்ட் கிராமத்திற்கு திரும்பிவருகிறவரையிலும், அல்லது (3) வைஸ்-பிரசிடெண்ட் தன் அசக்தியிலிருந்து மீள்கிறவரையிலும், சமயத்திற் கேற்றபடி நியமிக்கப்பட்ட மெம்பர் ஒரு பிரசிடெண்டின் அலுவல்களைத் தானே பார்த்துவரலாம். அழைக்கப்பட்ட கூட்டம் நடைபெறுதற்காக மெம்பர்கள் ஆஜராகியபின் மேல்கண்ட மூன்று சந்தர்ப்பங்களில் ஏதாவதொன்று ஏற்படுமாயின் அப்போது வைஸ்-பிரசிடெண்டே பிரசிடெண்டின் அலுவல்களை நிர்வகிப்பவராகவேண்டும், செ.32-ன்படி அவரே அந்தக் கூட்டத்தின் தலைமையை வகிக்கவேண்டியவராவார். அத்தகைய நிலைமையில் வைஸ்-பிரசிடெண்டின் ஆதரவிலும் அவர் கூறும் கிரமத்திலும் பிரசிடெண்டின் தேர்தல் நடைபெறவேண்டும், அப்படி நியமிக்கப்பட்ட மெம்பரின் ஆதரவிலல்ல. மேல் கூறப்பட்டிருக்கும் மூன்று நிபந்தனைகளில் ஏதாவதொன்றின் கீழ் வந்தாலல்லது வைஸ்-பிரசிடெண்டுகள் பிரசிடெண்டுகளின் அலுவல்களை சரியாய் பார்ப்பதில்லை என்கிற விஷயத்தில்கூட இந்த சப்-செக்ஷன் உபயோகமுள்ளதாயிராது. தாலூகாபோர்டின் பிரசிடெண்டால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்து மெம்பர் "பஞ்சாயத்தின் தாற்காலிக பிரசிடெண்ட்" என அழைக்கப்படுவார். [இ. பு. ப. 194]

முழு தினங்கள்.—"முழு தினங்கள்" எனும் இப்பதத் தொடரின் முழு விவரங்களை ஷெ. II, வி. 3-ல் காணலாம். [இ. பு. ப. 194]

ப்ரெஸிடெண்டின் அலுவல்களை வேறொருவருக்குப் பிரித்துக்கொடுப்பதும் வேறொருவர் செய்வதும்.

23. (1) யாதொரு லோகல்போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - தம்முடைய அலுவல்களில் எதையாகிலும் எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு வைஸ் - ப்ரெஸிடெண்டுக்குப் பிரித்துக்கொடுக்கலாம் :

ஆனால், அவர் - எவைகளைப் பிரித்துக் கொடுக்கக்கூடாதென்று போர்டார் வெளிப்படையாய்த் தடுக்கிறார்களோ அப்படிப்பட்ட எந்த அலுவல்களையும் பிரித்துக் கொடுக்கக்கூடாது.

(2) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற்போய்விட்டாலும், அவர் (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராய் விட்டாலும், ஷை போர்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரை மேலுத்தியோகத்துக்கு உயர்த்துவது, மேலுத்தியோகத்துக்கு உயர்த்துவதை நிறுத்திவைப்பது, கீழுத்யோகத்துக்குத் தாழ்த்துவது, நீக்குவது அல்லது தள்ளிவிடுவது சம்பந்தமானவைகளைத் தவிர அவருடைய மற்ற அலுவல்களை மேலேகண்டபடி அவர் இராமற்போய்விட்ட அல்லது சக்தியற்றவராய்விட்ட காலத்தில் வைஸ்-ப்ரெஸிடெண்ட் செய்யவேண்டும் :

ஆனால், ப்ரெஸிடெண்டானவர் விசாரணை அதிகாரப் பிரதேசத்தை விட்டுப் போயிருப்பது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குள்ளிருந்து, போர்டுக்குச் சம்பந்தப்பட்ட வேலையைப் பற்றினதாக இருக்கும் பட்சத்தில், ப்ரெஸிடெண்டின் அலுவல்களை, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அலுவல்கள் எந்த அளவுக்காகிலும் அவரால் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த அளவுக்கன்றி மற்றபடி வைஸ்-ப்ரெஸிடெண்ட் செய்யவேண்டியவராகமாட்டார்.

(3) வைஸ்-ப்ரெஸிடெண்டும் பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற்போய்விட்டாலும், (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராய்விட்டாலும், வைஸ்-ப்ரெஸிடென்டின்

உத்தியோகம் காலியாயிருந்தாலும், ப்ரெஸிடெண்டானவர் - தம்முடைய அலுவல்களில் எதையேனும் எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு போர்டின் யாதொரு மெம்பருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்; இந்த மெம்பர்—அப்படி (அலுவல்கள்) இருத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் காலத்தில் ப்ரெஸிடெண்ட்—டெலிகேட் என்று அழைக்கப்படுவார்;

ஆனல்—

(i) இந்த உட்பிரிவின்படி செய்யப்பட்ட அலுவல்களைப் பிரித்துக் கொடுப்பதற்கான யாதொரு உத்தரவு அமுலிலிருக்கும்போது, எவருக்கு அனுகூலமாய் அப்படி அமுலிலிருக்கும் உத்தரவு செய்யப்பட்டதோ அந்த மெம்பரைத் தவிர வேறே எவருக்கு அனுகூலமாகவும் அலுவல்களில் எதையாகிலும் பின்னும் பிரித்துக் கொடுப்பதற்கான எந்த உத்தரவையும் செய்யக்கூடாது.

(ii) போர்டாரின் விசேஷ அனுமதியைப் பெருமல், மொத்தத்தில் எந்த வருஷத்திலும் தொண்ணூறு நாட்களுக்கு மேற்பட்டுள்ள யாதொரு கால அளவுக்கு இந்த உட்பிரிவின்படி அலுவல்களைப் பிரித்துக் கொடுக்கக் கூடாது; மேலும்.

(iii) இந்த உட்பிரிவின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் போர்டாரின் அடுத்த சபையில் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்; அல்லாமலும், யாதொரு தாலூக்கா போர்ட் அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டினல் செய்யப்பட்டால், அதை சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் போர்டின் அல்லது தாலூகா போர்டின் ப்ரெஸிடெண்டுக்கும் உடனே தெரிவிக்கவேண்டும்.

(iv) லோகல் போர்டார் ஏற்படுத்தக்கூடிய எவையேனும் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு, யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - தம்முடைய நிர்வாக அலுவல்களில் எதையாவது, எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டு, போர்டைச் சேர்ந்த யாதொரு மெம்பர் அல்லது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரருக்கோ யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்கோ பிரித்துக் கொடுக்கலாம்; யாதொரு தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டின் சம்மதியும் பெற்று, டிஸ்ட்ரிக்ட் போர்டின் யாதொரு உத்தியோகஸ்தருக்காவது ஊழியக்காரருக்காவது பிரித்துக் கொடுக்கலாம்.

குறிப்பு

பொது.—பஞ்சாயத்துகளும் இப்போது வைஸ்-பிரசிடெண்டுகளைப் பெற்றிருப்பதால் இந்த செக்ஷன் அவைகளுக்கும் பொருந்தியதாகும். மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களும் அலுவல்களும் பிரசிடெண்டின் மேற்பார்வைக்கும் திருத்தத்திற்கும் உள்பட்டதாகும். செ. 25 பார்க்க.
[இ. பு. ப. 195]

செ. **23 (1)**-க்கும் செ. **23 (2)**-க்கும் உள்ள **வித்தியாசம்**.—முதல் விஷயத்தில் வைஸ்-பிரசிடெண்ட் செய்யக் கடமைப்பட்டிராத பிரசிடெண்டின் அலுவல்களில் சிலதை பிரசிடெண்ட் வைஸ்-பிரசிடெண்டுக்கு கொடுக்கிறார், இரண்டாவது விஷயத்தில் வைஸ் பிரசிடெண்டுக்குரிய அலுவல்கள் இயல்பாகவே அவரிடம் சங்கிரமிக்கிறது. முதல் விஷயத்தில் பிரசிடெண்ட் வைஸ்-பிரசிடெண்டின்மீது நிர்ப்பந்தங்களை வரையறுப்புகளை நிபந்தனை ஏற்படுத்தலாம், இரண்டாவது விஷயத்தில் பிரசிடெண்டைப் போலவே தனக்குரிய அலுவல்கள் விஷயத்தில் பிறரால் நிபந்திக்கப்படாத சுதந்திரம் உடையவராயிருக்கிறார். ஆனல் வைஸ்-பிரசிடெண்டின் அலுவல்களை மேற்பார்வையிடவும் சீர்திருத்தவும் பிரசிடெண்டுக்கு அதிகாரமுண்டு. செ. 25 பார்க்க.
[இ. பு. ப. 197]

24. [மதராசு 1930-ஞூ்த்திய 11-வது **ஆக்டினல்** ரத்து செய்யப்பட்டது.]

பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை ப்ரெசிடெண்டின் மேல் விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டுச் செலுத்த வேண்டுமென்பது.

25. 23-வது பிரிவின்படி பிரித்துக்கொடுக்கப்படும் எவையேனும் அலுவல்களை ப்ரெஸிடெண்டால் ஏற்படுத்தப்படக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் வரையறைகளுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு செலுத்தவேண்டும் அல்லது நிறைவேற்றவேண்டும்; மேலும் ஷை அலுவல்களை ப்ரெஸிடெண்டின் மேல்விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டுசெலுத்தவேண்டும் அல்லது நிறைவேற்றவேண்டும். பிரசிடெண்டானவர்—23-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி—வைஸ்-பிரஸிடெண்ட் செய்யவேண்டியதாகும் எவையேனும் அலுவல்களை அவர் செய்வதையோ அல்லது நிறைவேற்றுவதையோ கூட மேல் விசாரணை புரிந்து புனர் ஆலோசனை செய்ய அதிகாரம் உடையவராவார்.

தனித்தனி மெம்பர்களின் பாத்தியதைகள்.

26. (1) யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த எந்த மெம்பராகிலும் லோகல் போர்டு வேலையை நிறைவேற்றுகையில் உண்டாகும் யாதொரு அஜாக்கிரதையைக் குறித்தாவது, லோகல் போர்டு சொத்துக்குண்டாகும் யாதொரு சேதத்தைக் குறித்தாவது, லோகல் போர்டு விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் யாதொரு இடத்துக்கு வேண்டியிருப்பவைகளைக் குறித்தாவது ப்ரெஸிடெண்டை கவனிக்கும்படிச் சொல்லலாம்; மேலும், அவர்-யுக்தமாகத் தோற்றக்கூடிய எந்த சீர்திருத்தங்களையாகிலும் எடுத்துக்காட்டலாம்.

(2) ஒவ்வொரு மெம்பரும்-டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் ஏற்படுத்தக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, லோகல் போர்டின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைக்குறித்துத் தீர்மானங்கள் கொண்டுவரவும் ப்ரெஸிடெண்டைக் கேள்விகேட்கவும் பாத்தியதையுடையவராவார்.

(3) ஒவ்வொரு மெம்பரும்-ப்ரெஸிடெண்டுக்குச் சரியானபடி நோடீஸ் கொடுத்த பிறகு, ஆபிஸ் திறந்திருக்கும் மணிநேரங்களிலே, லோகல் போர்டைச் சேர்ந்த ரெகார்டுகளைப் பார்வையிடலாகும்; ஆனால், ப்ரெஸிடெண்டானவர்-காரணங்களை எழுதிவைத்து அந்தப்படி பார்வையிடுவதைத் தடுக்கலாம்.

குறிப்பு.

போது.—எல்லா மெம்பர்களும் இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மெம்பர்களின் அதிகாரங்களும் கடமைகளும் விஷய சூசிகையில் பூர்த்தியாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் அலுவல்கள் லோகல் போர்டுகளுக்குரியவையாகும், பிரசிடெண்டின் அலுவல்களை அவர்கள் மேற்கொள்ளக்கூடாது. செ. 6, 21, 22 பார்க்க. மெம்பர்களில் அதிகமானவர்களின் ஒருங்குபட்ட அபிப்பிராயங்கள் லோகல் போர்டுகளின் அலுவல்களாகப் பாவிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். யாதாமொரு கூட்டத்தில் லோகல் போர்டின் முன் வரும் எல்லா விஷயங்களும் வந்திருக்கும் மெம்பர்களில் அதிகமானவர்களால் ஆமோதிக்கப்பட்டபடி தீர்மானிக்கப்படும். வந்திருக்கும் மெம்பர்கள் சரிபாகமாய்ப் பிரிந்து ஒருபாகம் ஆலோசனைக்கு வந்த விஷயத்தை ஆமோதிப்பவராகவும் மற்ற பாகம் அதை எதிர்ப்பவராகவும் இருந்தால் கூட்டத்தில் தலைமை வகிப்பவரால் தன் அபிப்பிராயப்படி அந்த விஷயத்தை தீர்மானிக்கலாம். செ. II, விதி 5, ஆதலால் மெம்பர்கள் தம் தனிமையான ஹோதாவில் தம் அபிப்பிராயங்கள் எவ்வளவு நேர்த்தியானதாக விருந்தாலும் தம் அபிப்பிராயங்களை ஆதரிப்பவர்கள் குறைவாக விருந்தால் அவைகளை தீர்மானமாக நிர்ப்பந்திக்க முடியாது. செ. 23 (3), (4), செ. 26 (1), (3), செ. 28 (1) (b)-ல் கண்டிருக்கிற விஷயங்களில் தவிர, லோகல் போர்ட் கூட்டங்களில் இருந்துகொண்டும் அல்லது அதன் கமிட்டிகளில் சேர்ந்தும் செய்வது தவிர தனியாக ஒரு மெம்பர் யாதொரு காரியமும் செய்யமுடியாது. பேபர்களை மெம்பர்களுக்கு சுற்றியனுப்புவதும், அவைகளின்மீது அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதும் கூடாது (மாத் ராவ் எ. முனிசிபல் கமிட்டி, நாகபூர், A.I.R. 1926 N. 281=92 I.C. 786.)　　[இ. பு. ப. 199]

மெம்பர்.—1922ஸூ த்து II-வது ஆக்டின்படி பிரமாணம் எடுத்துக்கொண்ட மெம்பர்கள் பிரசிடெண்டை தேர்ந்தெடுக்கவும் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் அருகராவார். (தேவராகா சார்லு எ. ஸ்ரீகிருஷ்ணன், A.I.R. 1925 M. 1152). பிரமாணிக்கம் செய்யாமல் ஒருவர் அலுவல்களில் சம்பந்தம்பட்டு வருவாராகில் அவர் மெம்பராயில்லாமலே அலுவல்களை கவனித்து வருபவராகவே கொள்ளப்படுவார். (ராஜாபாதர் முதலியார் எ. விஸ்வாத ரெட்டி, 45 M.L.J. 543=A.I.R. 1924 M. 515). செ. 56 (4)-ன்படி நீக்கப்பட்ட ஒரு மெம்பர் நீக்கப்பட்டது நியாயமல்லாததனாலோ மற்றெந்த காரணத்தினாலோ மீண்டும் மெம்பராயிருக்க நேரிட்டால் கழிந்துவிட்ட நாட்களுக்கு அவர் மெம்பராயிருப்பது கூடாது போய் விட்டாலும் அவர் முதலில் மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்ட கால முதல் அவர் மெம்பராக இருக்கவேண்டிய காலத்தில் கழிந்தகாலம் போக மற்ற செ. 57-ன்படி ஒரு மனுவை தாக்கல் செய்வது லோகல் போர்ட் மெம்பர் ஒருவரின் அலுவலுமல்ல கடமையுமல்ல. தனது ஸ்தானத்தை வகித்துக்கொண்ட ஒரு மெம்பர் செ. 57-ன்படி ஒரு மனுவை தாக்கல் செய்ய அருகதை யற்றவராவதுமில்லை. (ஆகுல சுதர்சன ராவ் எ. கிரிஸ்டியன் பிள்ளை, 45 M.L.J. 798=A.I.R. 1924 M. 396=33 M.L.T. 215). செ. 12, தலைப்பு 'வியாஜ்யம் தொடர அனுமதி' என்பதன் கீழுள்ள வியாக்யானத்தைப் பார்ப்பதால் ஒருவர் மெம்பராயிருக்கும் காலத்தில் அவர்மீது எப்போது வியாஜ்யம் தொடரலாமென்பதும் எப்போது வியாஜ்யம் தொடரக்கூடாது என்பதும் தெரியலாகும். ஒரு லோகல் போர்டின் மெம்பர் தன் உத்தியோக சம்பந்தமாக ஏற்பட்ட கடமையை சாதிப்பதற்காக செய்யும் காரியத்திலோ அல்லது செய்வதாக கொள்ளப்படும் காரியத்திலோ தவறு செய்துவிட்டதாக அவர் மீது குற்றம்சாட்டி தாவா செய்யும் பட்சத்தில் மதராஸ் கவர்ன்மெண்டின் முன் அனுமதியின்றி எந்த கோர்ட்டும் அதை பொருட்படுத்தக்கூடாது. செ. 227-A பார்க்க. கிரிமினல் ப்ரசிஜர் கோர்ட் செ. 197-ன்படி சில விஷயங்களில் ஒரு மெம்பர்மீது வியாஜயம் தொடுப்பதற்கு கவர்ன்மெண்டின் அனுமதி தேவையோ வென்பது சந்தேகத்திற்கிடமானதாயினும், இந்த புதிய செ. 227-A-ன்படி ஒரு மெம்பர் ஒரு கூட்டத்தில் செய்த காரியங்களுக்காக அவை பிறரை அவமதித்தல் முதலியவையாக இருந்தால்கூட அவர்மீது வியாஜ்யம் தொடுப்பதற்கு மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதி அவசியமாகும். முனிசிபல் கௌன்சில்கள் தமது மெம்பர்களின் நடைகளை கண்டிப்பதற்காகவாவது அல்லது அவைகளின் மீது தீர்ப்பு சொல்வதற்காவது அதிகாரம் கிடையாது, சட்டவாயிலாகவாவது பொதுச்சட்ட நீதியாகவாவது அவைகளுக்கு அத்தகைய அதிகாரம் இன்மையால். (வல்லியர்ஸ் எ. செயின்ட் ஹென்ரைட் லென்ஸ், 14 க்யூபெக் K.B. 16; துரைசாமி ஐயங்கார் லா ஆப் கார்பரேஷன்ஸ், பக்கம் 33). மெம்பர்கள் தம் தனிப்பட்ட முறையில் சமுதாயநீதியாக தமக்கேற்பட்ட காரியத்தை செய்வதில் ஏதாவது தவறு ஏற்பட்டால் அதற்காக யாதொரு தாவாவும் ஏற்படுவதற்கில்லை, அதிலும் யாதொரு பகை காரணமாக அது செய்யப்பட்டதாக ருசுவாகாத பட்சத்தில் அதைப்பற்றி சொல்லத் தேவையேயில்லை. (ஹர்மான் எ. டப்பென்டென் (1801) 1 East 555).

ஒரு கூட்டத்தில் அவதூறன சொற்களை உபயோகித்தல்.—வாதியும் பிரதிவாதியும் ஒரு தேர்தலில் போட்டி அபேட்சர்களா யிருந்தார்கள். வாதி பிரதிவாதியை "துஷ்டன் என்றும் சந்தேகிக்கக்கூடிய நடையை யுடையவனென்றும்" திட்டினன். பிரதிவாதிவாதியை குடிகாரன் என்று எதிர்த்துத் திட்டினன். கூட்டத்தில் பிரதிவாதி பஞ்சாயத்தார்களிலொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் தேர்தல் நடந்த பின் சில ஜனங்களால் உள்ளே நடந்ததென்ன வென பிரதிவாதி கேட்கப்பட்டு வாதி குடிகாரன் என்று அவன் சொன்னன். பிரதிவாதியால் உபயோகிக்கப்பட்ட சொல்விஷயமாக மான நஷ்டதாவாவாதி தொடுத்தார். கூட்டத்தில் நடந்த விவாதத்தின் போக்கில் உபயோகிக்கப்பட்ட அப்பதம் வாதியை அவமதிக்க வேண்டுமென்றே குறிக்கப்பட்டதல்லவாதலின் வாதியின் தாவாவை தள்ளிவிடவேண்டுமென்றும், ஆனல் கூட்டம் முடிந்தபின் கூட்டத்திற்கு வெளியே உபயோகிக்கப்பட்ட பதத்திற்காக மான நஷ்டத்திற்கு ஈடு கோர வாதிக்கு உரிமையுண்டெனவும் தீர்ப்பு கூறப்பட்டது. கூட்டத்திற்குள்ளே அத்தகைய பதத்தை உபயோகிக்க பிரதிவாதிக்கு உரிமையுண்டென்பதை அவர் கோரலாம்; கூட்டத்திற்கு வெளியிலும் அதற்குப் பின்னும் அவர் செய்த எதற்கும் அந்த உரிமை இருப்பதாக கொள்வது கூடாது. (சுப்பராயடு எ. ஸ்ரீநிவாசாசார்யுலு, 25 L.W. 770=A.I.R. 1927 Mad. 329, M.L.J. 87.) பொது ஜனங்களைக் காப்பதற்கும் தகுதியான சுகாதார முறைகளை வற்புறுத்துவதற்கும் சட்ட வாயிலாக கார்பரேஷன் பெற்றிருக்கும் அளவுக்குட்பட்ட அவசியமான அதிகாரங்களை மீறி பொது ஜனங்களின் தனிப்பட்ட சொந்த உரிமைகளில் எந்த விதத்திலாவது தலையிடும்படி முனிசிபல் ஆக்டை உபயோகிக்கக்கூடாது. ஒரு கோர்டின் முன் நடக்கும் நடை முறையில் அவதூறுமொழிகளை உபயோகிக்க முழு உரிமையுண்டென

விதிக்கும் விதியின் அர்த்தத்துள் லைசென்சுகளை கொடுப்பதற்கும் மறுப்பதற்கும் ஆட்சேபனைகளை கவனிக்கும் முனிசிபல் அதிகாரிகள் கோர்டுகள் ஆகமாட்டா. (அட்வட் எ. சாப்மேன் (1914) 3 K.B. 375). தன்னையே அவமதித்திருப்பதாக ஒரு குற்றவாளியால் கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தை வெளியிட்ட ஒரு முனிசிபல் கமிட்டியின் மெம்பரை கவர்ன்மெண்டின் அனுமதியில்லாமல் அவதூறு மொழிகள் உபயோகித்ததாக குற்றம் ரசட்டப்பட்டபோது—உத்தியோகத்திலிருந்து விலக்க முடியாத ஒரு பொது ஊழியனாக (அதாவது பப்ளிக் செர்வன்ட் குற்றவாளியிருப்பதாலும், ஒரு கமிட்டியின் மெம்பராக நடந்துகொண்ட போக்கில் அவர்மீது ஆரோபிக்கப்பட்ட செயல் அவரால் நடத்தப்பட்டதாலும் கவர்ன்மெண்டின் முன் அனுமதியில்லாமல் அவர்மீது வியாஜ்யம் தொடுக்கக்கூடாதென, தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. (பக்ஷிராம் லாபய்யா எ. திவான் கன்பத்ரே, 14 P.R. 1890 Cr.) சட்டத்திற்கு விரோதமாக முனிசிபல் போர்டின் ஒரு மெம்பர் ஒரு முனிசிபல் குத்தகையில் பிரவேசித்திருக்கிறார் என குற்றம் சாட்டப்பட்டு, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் லோகல் கவர்ன்மெண்டின் முன் அனுமதியில்லாமல் விசாரணை நடத்தும்படி உத்திரவிட்டதுமல்லாமல் அவரது வீட்டில் பரிசோதனை போடும்படியும் எற்பாடு செய்தார்—இது விஷயத்தில் சொல்லப்பட்ட தீர்ப்பாவது: இது விஷயத்தில அனுசரிக்கப்பட்ட நடைமுறை கிரிமினல் ப்ரோசிஜர் கோட் 197-வது செக்ஷனுக்கு விரோதமானதா யிருப்பதால் குற்றம் சாட்டப்பட்டது தள்ளிவிடப்படவேண்டும். மாஜீஸ்ட்ரேட்டின் செய்கை நீதிவாயிலானதாயல்லாமல் தன் அதிகார தோரணையில் செய்யப்பட்டதாயிருந்தால்கூட ஹைகோர்ட் இவ்விஷயத்தில் பிரவேசிக்கக்கூடும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (பெய்ரான் பிரசாத் எ. சக்ரவர்த்தி, 9 L.R. 140 (Cr.), 10 A.I. Cr. R. 450, A.I R. 1928 All. 756). ஆனால் இப்போது ஒரு மெம்பரின்மீது வியாஜ்யம் தொடுப்பதற்கு முன் லோகல் கவர்ன்மெண்டின் உத்திரவு அவசியம் எனத் தோன்றுகிறது செ. 227-A பார்க்க. [ப. 202]

செ. **26 (2)**. தீர்மானங்களை பிரேரேபிக்க உரிமையுண்டு.—ஒவ்வொரு மெம்பருக்கும் தீர்மானங்களைப் பிரேரேபிக்க உரிமையுண்டு. பிரேரேபிப்பதில் அவர் ஒழுங்கு தவறாதிருந்தால் அவரை தடைசெய்யமுடியாது. தீர்மானங்களைப் பிரேரேபிப்பது மோஷன் எனவும் சொல்லப்படும். அவர் தனது தீர்மானங்களை பிரேரேபிப்பதில் தடுக்கப்பட்டால் தடுத்தவரை எதிர்க்கவும் உரிமையுண்டு. செ. 32 (2) தலைப்பு "பிரசிடெண்ட் ஒழுங்கை பாதுகாக்கவேண்டும்" உபதலைப்புகள் "போலீஸ்—அவர் குறுக்கிடல்," "மாஜிஸ்ட்ரேட்—அவர் குறுக்கிடல்" ஆகியவைகளைப் பார்க்க. தீர்மானங்கள் செய்வது, பிரசிடெண்டுகள் தடைக் கேள்விகள் கேட்பது அல்லது குறுக்கிடுவது ஆகியவைகளைப் பற்றிய விதிகள் இப்புத்தகத்தின் மற்றொரு பாகத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. [இ. பு. ப. 205]

ரெகார்டுகளை ஹாஜர் படுத்தும்படி கேட்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்.

27. (1) யாதொரு லோகல் போர்டார்-ப்ரெஸிடெண்டின் வசத்திலிருக்கிற யாதொரு தஸ்தாவேஜை ஹாஜர்படுத்தும்படி அவரைக் கேட்கலாம்.

(2) ப்ரெஸிடெண்டானவர் மேலேகண்ட பிரகாரம் கேட்கப்படுகிறபடி உடனே நடந்துகொண்டால் போர்டின் அல்லது பொது ஜனங்களின் நன்மைக்குப் பிரதிகூலமாயிருக்குமென்று அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி, அவர்-அந்தப்படி கேட்கப்படுகிற ஒவ்வொன்றிற்கும் தக்கப்படி நடந்துகொள்ளவேண்டும்; மேலேகண்டபடி பிரதிகூலமாயிருக்குமென்று அபிப்பிராயப்படுகிற விஷயத்திலே, அவர்-அந்தப்படி எழுத்துமூலமாய்த் தெரிவிக்கவேண்டியதுமல்லாமல், போர்ட்டார் அப்படி செய்யச்சொல்லுகிற பட்சத்தில் பிரஸ்தாப விஷயத்தை,

(a) டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் அதன் ப்ரெஸிடெண்டுக்குமாக ஏற்பட்ட விவாதமாயிருந்தால், பிரதேச கவர்ன்மெண்டாரின் ஆலோசனைக்கும்,

(b) யாதொரு தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து அதன் பிரஸிடெண்டுக்குமாக ஏற்பட்ட விவாதங்களாயிருந்தால், டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரஸிடெண்டின் ஆலோசனைக்கும், அனுப்பவேண்டும்;

அதன்மேல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரதேச கவர்ன்மெண்டார் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்ட் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு.

செ. **27 (2)**. உடனே இணங்குதல்.—லோகல் போர்டார் வேண்டும் போதெல்லாம் சாதனங்கள், கடிதங்கள், ப்ளான்கள் அல்லது இதர தஸ்தாவேஜுகளை லோகல் போர்டின் பிரசிடெண்டு சமர்ப்பிக்க கடமைப்பட்டவர். பிரசிடெண்ட் உடனே யில்லாவிட்டாலும் மற்றொரு சமயத்திலாகிலும் சமர்ப்பிக்க கடமைப்பட்டவராவார். சப்-செக்ஷன் (2)-ல் "உடனே" என்கிற பதம் சாதனங்கள் முதலியவைகளை சிறிது காலத்துக்கு மாத்திரம், அதிலும் அப்படி அவைகளை அந்த சமயத்தில் சமர்ப்பிப்பது லோகல் போர்டு அல்லது பொதுஜன நலத்திற்கு பாதகம் விளைவிக்கக்கூடும் என எழுத்து மூலமாக பிரசிடெண்ட் தெரிவிக்கும் காரணங்களுக்காக, கொடாமல் நிறுத்திக்கொள்ளக்கூடும் என்பதைக் குறிக்கின்றது. அவர் அவைகளை அடியோடு சமர்ப்பிக்காமலிருக்க முடியாது. உடனே தஸ்தாவேஜுகளை சமர்ப்பிக்கும் விஷயத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் அதன் பிரசிடெண்டுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படின் அவ்விஷயத்தை முறையே லோகல் கவர்ன்மெண்டுக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் தீர்ப்புக்கு அனுப்பவேண்டும். இப்படிச் செய்வதால் பிரசிடெண்டு தான் கோரியபடி காலம் தள்ளிக்கொண்டு போகலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒன்றிரண்டு தடவையில் லோகல் போர்டின் தஸ்தாவேஜுகளை உடனே சமர்ப்பிக்க வேண்டுமென்கிற தீர்மானம் மேலதிகாரிகளால் ஆதரிக்கப்படுமாயின் பிரசிடெண்டின் நிலைமை பலவீனப் பட்டுவிடும். செ. **44**-ன்படி நம்பிக்கையில்லை எனும் தீர்மானத்தை நிறைவேற்றுவதால் அவரை விலக்கிவிட முயற்சிக்கக்கூடும். அந்த செக்ஷனின் கடைசியில் இருக்கும் 'முடிவான' என்னும் பதம் கூட உடனே சமர்ப்பிக்கப்படவேண்டும்! என்பதைக் குறித்ததேயல்லாமல் எக்காலும் கொடாமலே மறுத்துவிடுதலைக் குறிப்பதாகாது. [ப. 210]

28. (1) (a) யாதொரு லோகல் போர்டார் தாங்கள் பிரித்துக் கொடுக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தும் காரியத்துக்காகவாகிலும், கடமைகளை நிறைவேற்றும் காரியத்துக்காகவாகிலும், அலுவல்களைச் செய்யும் காரியத்துக்காகவாகிலும் கம்மிட்டிகளை ஏற்படுத்தலாம்.

லோகல் போர்டுகளின் கம்மிட்டிகளை ஏற்படுத்துவது.

(b) யாதொரு லோகல் போர்டார் - தனி மெம்பர்களையாவது கம்மிட்டிகளையாவது நியமித்து, அவர்களுடைய அபிப்பிராயத்துக்குத் தாங்கள் அனுப்பக்கூடிய எந்த விஷயங்களைப்பற்றியாயினும் விசாரணை பண்ணி ரிபோர்ட் செய்யும்படியோ ஆலோசனை சொல்லும்படியோகூட கேட்கலாம்.

(2) இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றபடி, லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கம்மிட்டியிலும் தம்முடைய உத்தியோக முறைமையில் மெம்பராகவும் அக்கிராசனாதிபதியாகவும் இருக்க வேண்டும்.

(3) லோகல் போர்ட் மெம்பர்களாயிராவிட்டாலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு கம்மிட்டியில் வேலை பார்ப்பதற்கு விசேஷ யோக்கிய தாம்சங்கள் உடையவர்களென்றோ விசேஷ அக்கறை உள்ளவர்களென்றோ போர்டார் அபிப்பிராயப்படக்கூடிய எந்த நபர்களையாகிலும் ஷை கம்மிட்டியின் மெம்பர்களாயிருக்கும்படி அந்த போர்டார் ஷை போர்டுக்கு ஜாரியாயிருக்கும் மெம்பர்களின் சங்கியையில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாய்த் தெரிந்தெடுப்பது சட்டசம்மதமாகும். ஆனால், அப்படிப்பட்ட நபர்களின் சங்கியையானது அந்தக் கம்மிட்டியிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படக் கூடாது.

(4) லோகல் போர்டைச் சேர்ந்த மெம்பர்களின் கடமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள், யோக்கியதைக் குறைவுகள், அசமர்த்ததைகள் ஆகிய இவைகள் சம்பந்தமாய் இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளெல்லாம் - பிரயோகப்படக்கூடிய வரையில், லோகல் போர்ட் மெம்பர்களாயிராத யாதொரு கம்மிட்டியின் மெம்பர்களுக்குப் பிரயோகப்படத்தக்கவைகளாகும்.

29. [மதராசு 1930-ஆம் வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

கூட்டுக் கம்மிட்டிகளை ஏற்படுத்துவது.

30. (1) யாதொரு லோகல் போர்டார் - எந்தக் காரியத்தில் தாங்களும் வேறே ஒரு பிரதேச அதிகார சபை அல்லது பல பிரதேச அதிகார சபைகளும் கூட்டாய் அக்கறை உடையவர்களாயிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு காரியத்துக்காகவாகிலும், அவர்கள் கூட்டாக உத்திரவாதிகளாயிருக்கும் யாதொரு விஷயத்துக்காகவாகிலும் ஒரு கூட்டுக் கம்மிட்டி ஏற்படுத்துவதில் ஷை சபை அல்லது சபைகளுடன் சேரலாம்; மேலும், பிரதேச கவர்ன்மெண்டார் அந்தப்படி உத்தரவு செய்தால், அவர்கள் அப்படியே சேரவேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களாயிராவிட்டாலும், யாதொரு கூட்டுக் கம்மிட்டியில் வேலை பார்ப்பதற்கு விசேஷ யோக்கியதாம்சம் உடையவர்களென்றாவது விசேஷ அக்கறை உள்ளவர்களென்றாவது ஷை சபையார் அபிப்பிராயப்படக்கூடிய நபர்கள் அந்தக் கம்மிட்டியில் சேர்ந்திருக்கலாம் :

ஆனால், அப்படிப்பட்ட நபர்களின் சங்கியையானது கூட்டுக் கம்மிட்டியிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாயிருக்கக்கூடாது.

(3) யாதொரு கூட்டு கம்மிட்டியானது ரெகுலேஷன்கள் மூலமாய் ஏற்படுத்தப்படவேண்டும்; அந்த ரெகுலேஷன்கள் - (6), (7) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் சொல்லியிருக்கும் விஷயங்களிலன்றி மற்றப்படி, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் ஒவ்வொன்றினாலும் அங்கீகரிக்கப்பட்டாலொழிய செலாவணியாகமாட்டா.

(4) ஷை ரெகுலேஷன்களில் அடியிற்கண்ட விஷயங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும் :—

(a) கூட்டுக் கம்மிட்டியில் மொத்தத்தில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்பது;

(b) இத்தனை பேர் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களா யிருக்கவேண்டுமென்பதும் இத்தனை பேர் வெளியாராயிருக்கலாமென்பதும்;

(c) இன்ன நபர்கள் கூட்டுக் கம்மிட்டியின் மெம்பர்களா யிருக்கவேண்டுமென்பது, அல்லது அவர்கள் இன்னவிதமாய்த் தெரிந்தெடுக்கப்படவேண்டும் அல்லது நியமிக்கப்படவேண்டுமென்பது;

(d) இன்ன நபர் கூட்டுக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியா யிருக்கவேண்டுமென்பது, அல்லது அவர் இன்ன விதமாய்த் தெரிந்தெடுக்கப்படவேண்டும் அல்லது நியமிக்கப்படவேண்டுமென்பது;

(e) மெம்பர்கள், அக்கிராசனாதிபதி ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு இன்னதென்பது;

(f) சம்பந்தப்பட்ட ஒரு பிரதேச அதிகார சபையாவது பல பிரதேச அதிகார சபைகளாவது செலுத்தக்கூடியவையாயுள்ள அதிகாரங்களில், இன்ன அதிகாரங்களைக் கூட்டுக் கம்மிட்டியார் செலுத்தலாமென்பது; மேலும்,

(g) கூட்டுக் கம்மிட்டியார் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை இன்னதென்பது.

(5) (3), (4) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்களை மாற்றவாவது ரத்து செய்யவாவது சம்பந்தப்பட்ட சகல பிரதேச அதிகார சபைகளும் சம்மதிக்கிறபட்சத்தில், அந்தப்படியே அவைகளை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(6) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மென்டார் நடவடிக்கை நடத்தினால், அவர்கள் - (3), (4) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் சொல்லியிருக்கும் சகல விஷயங்கள் சம்பந்தமாகவாவது அவைகளில் எதன் சம்பந்தமாகவாவது தங்களுக்கு அவசியமாகவாகிலும் விரும்பத்தக்கதாகவாகிலும் தோற்றும் கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

(7) இந்தப் பிரிவின் முந்திய நிபந்தனைகளில் எதன்படியாவது பிரதேச அதிகார சபைகளுக்குள் அபிப்பிராயபேதம் ஏதாவது உண்டானால், அதைப் பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

லோகல் போர்டின் நடவடிக்கைகளைப் பற்றிய விதிகளும் ரெகுலேஷன்களும்.

31. லோகல் போர்டார் 2-வது ஷெட்யூலில் கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்; மேலும், அவர்கள்-அந்த விதிகளுக்காவது இந்த ஆகடின் இதர நிபந்தனைகளுக்காவது பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட எவையேனும் விதிகளுக்காவது முரன்படாமலிருக்கும்படி அடியிற்கண்ட விஷயங்களைக் குறித்து ரெகுலேஷன்களைச் செய்யலாம் :—

(a) இன்ன காலத்தில் இன்ன இடத்திலே தங்களுடைய சபைகள் கூடவேண்டுமென்பது;

(b) அதைக்குறித்து இன்ன விதமாய் நோடீஸ் கொடுக்க வேண்டுமென்பது;

(c) சபைகளில் ஒழுங்கு தவறுதிருக்கும்படி பார்த்துக்கொள்வதும் நடவடிக்கைகள் நடத்துவதும் ஒழுங்கு சம்பந்தமான விஷயங்களைக் குறித்துத் தம்முடைய தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரும் காரியத்துக்காக பிரஸிடெண்ட் செலுத்தக்கூடிய அதிகாரங்களும்;

(d) போர்டின் மெம்பர்களுக்குள் அலுவல்களைப் பிரித்துக் கொள்வது;

(e) கம்மிட்டிகளின் அமைப்பும் கமிட்டிகள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும்,

(f) போர்டாருடைய அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவல்களை.

(1) போர்டைச் சார்ந்த பிரஸிடெண்ட், யாதொரு மெம்பர், யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரருக்காவது யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்காவது,

(2) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு கம்மிட்டி அல்லது அதன் அக்கிராசனதிபதி அல்லது அதன் மெம்பர்களில் யாதொருவர் அல்லது பலருக்காவது பிரித்து கொடுப்பதும்;

(g) போர்டுக்குச் செலுத்தப்பட்ட பணத்திற்கு இன்ன நபர்கள் ரசீது கொடுக்கலாமென்பது;

(h) இதே மாதிரியான மற்ற சகல விஷயங்கள்.

குறிப்பு.

செ. **31** **(1)**. **கிரமங்களை விதிக்கும் சட்டங்கள் (ரெகுலேஷன்கள்.)**— இந்த செக்ஷனின் க்ளாஸ்கள் (a) முதல் (h) வரையுள்ளவைகளில் கண்டிருக்கும் எல்லா விஷயங்களுக்கோ அல்லது ஏதாவதொன்றற்கோ நடைமுறை கிரமங்களை அனுசரித்த சட்டங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், தாலூகா போர்டுகள் அல்லது பஞ்சாயத்துகள் செய்யலாம், மற்ற செக்ஷன்களுடையவைகளுக்கல்ல. விதிகள் லோகல் கவர்ன்மெண்டால் மாத்ரம் செய்யப்படக்கூடும். செ. 199 பார்க்க. உபசட்டங்கள் லோகல் போர்டுகளால் மாத்ரம் செய்யப்படக்கூடும், அவைகள் சட்டத்தின் வன்மையை பெறுவதற்கு முன் லோகல் கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்படவேண்டும். செ. 202 பார்க்க. ரெகுலேஷன்கள் ஒரு முறை சரியாய் அனுமதிக்கப்பட்டபின், சில நிபந்தனைக்குட்பட்டு சட்டங்களின் சக்தியை உடையனவாகிவிடும், அதாவது கிரமந்தவறாது நடத்தப்பெற்ற ஒரு கூட்டத்தில் அவை தகுதியாக அனுமதிக்கப்பட்டால் என்பது பொருள். (சேஷ பிரபு, In re 42 M.L.J. = 149 (1922) M.W.N. 79 = 23 C.L.J. 285.) இந்த ஆக்டின் ஷரத்துகளுக்காவது, (a) முதல் (h) வரையுள்ள கிளாஸ்களில் கண்ட விஷயங்களைப்பற்றி லோகல் கவர்ன்மெண்டால் செய்யப்பட்ட விதிகளுக்கு பொருத்தமல்லாதவைகளாகவாவது அவைகள் இருக்கக்கூடாது. ரெகுலேஷன்கள் உப சட்டங்களுக்கு பொருத்தமல்லாதவைகளாக இருக்கலாம். இந்த ஆக்டின் ஷரத்துகளின் கீழ் ஏற்படும் ரெகுலேஷன்கள் இந்த ஆக்டைச் சார்ந்தவைகளாக கருதப்படவேண்டும், லாகோர்டிலும் செல்வாக்குடையவையாகவும் செய்யப்படக்கூடும். (ஜி. ஏ. நடேசன் In re (1916) 40 M. 125 = 36 M.L.J. 634.)

செ. **31** (a). **காலம்.**—ஒரு காரியத்தை செய்வதற்காக சட்டசபையால் உத்தேசிக்கப்பட்ட காலம் யாருடைய அனுகூலத்தை உத்தேசித்ததோ அந்த கட்சியார் அந்த காலத்திலிருந்தும் தவிர்ந்துகொள்ளலாமென சொல்லப்பட்டபோது—இந்த காலத்தைக் கொடுக்கும் நிபந்தனையை தன் இஷ்டப்படி வற்புறுத்தவோ அல்லது விட்டுவிடவோ உரிமையிருப்பதாக சட்டசபை கருதியதாக நினைக்கக்கூடாதென தீர்மானிக்கப்பட்டது (கார்கால் In re, 22 Cal. 717 (724)). விதி 1, எலக்ஷன் விதிகள், தலைப்பு 'காலம்' ஷெட்யூல் II, விதி 3, தலைப்புகள் "நாள்கள்," "முழுநாள்கள்" ஆகியவைகளின் கீழுள்ள வியாக்யானங்களைப் பார்க்க.

இடம்—ஷெட்யூல் II, விதி 2, தலைப்பு "கூட்டம்", உப-தலைப்பு "இடம்" இதன்கீழ் இது விவரிக்கப்பட்டிருக்கிறது.

செ. **31** (c). **கூட்டத்தின் நடவடிக்கைகளை நடத்துதல்.**—இது ஷெட்யூல் II-ல் கண்ட விதிகளுக்கும், செ. 199 (2) (b) லோகல் போர்டின் மெம்பர்களால் பிரசிடெண்டைகுறுக்கு கேள்விகள் கேட்பது, (m) லோகல்போர்டின் கூட்டத்தில் தீர்மானங்களை பிரேரேபிப்பது ஆகியவைகளின் சம்மந்தமாக லோகல் கவர்ன்மெண்டார் செய்த விதிகளுக்கும், சம்பந்தப்பட்ட லோகல் போர்டால் செய்யப்பட்ட ரெகுலேஷன்கள் ஏதாவதிருந்தால் அவைகளுக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும். செ. 32-யும் ஷெட்யுல் II-யும் பார்க்க.

செ. **31** (d). **மெம்பர்களுள் கடமைகள்.**—செ. 28லும் 30லும் கண்டுள்ளபடி கமிட்டிகளுக்கும் ஜாயிண்ட் கமிட்டிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டதும் அவைகளால் செய்தற்குரியதுமான அலுவல்களல்லாமல், லோகல் போர்டின் மெமபர்களுக்குள் கடமைகளை பகிர்ந்துகொள்வதற்காக ரெகுலேஷன்களை (அதாவது நடைமுறை சட்டங்களை) லோகல் போர்ட் ஏற்படுத்தலாம். லோகல் போர்டுகள் மிகவும் பரந்த விஸ்தீரணத்தை கவர்ந்ததாயிருப்பதால், பிரசிடெண்ட் ஒருவரே நாலாபக்கத்திற்கும் சென்று எல்லா கார்யங்களையும் சாதாரண தினசரி வேலைகளையும்கூட தானே பார்ப்பதற்கு பதிலாக தனிப்பட்ட மெம்பர்களை அவர்கள் பொறுப்பில் ஒவ்வொரு தொழிலை விடுத்து மேற்பார்வை யிடும்படி செய்யலாம் இப்படிச் செய்வதால் பொது நலக்கார்யங்களை பரிபாலிக்கிற விஷயத்தில் மெம்பர்களுக்கு பழக்கமும் ஏற்படுகிறது.
[இ. பு. ப. 214]

லோகல் போர்டு சபைகளில் இன்ஞர் சபைத் தலைமை வகிக்க வேண்டுமென்பது.

32. (1) யாதொரு லோகல் போர்டார் கூடுகிற பிரதி சபையிலும் ப்ரெஸிடெண்டாவது, அவரில்லாவிட்டால் வைஸ்-ப்ரெஸிடெண்ட் ஒருவர் இருந்தால் அவராவது அக்கிராசனம் வகிக்க வேண்டும்; வைஸ்-ப்ரெஸிடெண்ட் இராவிட்டாலும், ப்ரெஸிடெண்ட், வைஸ்-ப்ரெஸிடெண்ட் ஆகிய இருவரும் வராவிட்டாலும், அந்த சமயத்தில் சபைத்தலைவராயிருக்கும்படி அந்த சபைக்கு வந்திருக்கிறவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மெம்பர் அக்கிராசனம் வகிக்கவேண்டும்.

(2) ப்ரெஸிடெண்டானவர்-(சபையில்) ஒழுங்கு தவறுதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதுமல்லாமல், சபைகளிலாகிலும் சபைகள் சம்பந்தமாகவாகிலும் ஏற்படும் ஒழுங்கைப்பற்றிய சகல விஷயங்களையும் தீர்மானிக்கவும்வேண்டும். ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயத்தைக்குறித்து தர்க்கம் எதுவும் நடத்தக் கூடாது; மேலும், ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயமாய் ப்ரெஸிடெண்ட் செய்யும் தீர்மானமானது-இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி முடிவானதாகும்.

(3) அந்தந்த சமயத்தில் அக்கிராசனம் வகிக்கும் வைஸ்-ப்ரெஸிடெண்டாவது மெம்பராவது-அந்த சபையிலும் அவர் அதில் அக்கிராசனம் வகிக்கும் கால அளவிலும் ப்ரெஸிடெண்டுக்குள்ள சகல அதிகாரங்களையும் உடையவராயிருப்பார்.

குறிப்பு.

செ. **32 (1)**. சபை மீடிங்.—செ. 22 (உ) படி பிரசிடெண்ட் அல்லது வைஸ்-பிரசிடெண்ட்கள் எலெக்ஷனுக்காக (தேர்தலுக்கு) கூட்டப்படும் சபைகள் தவிர, மற்றைய ஒவ்வொரு சபையும் 2-வது ஷெட்யூலில் சொல்லியிருக்கும் விதிகள்படி கூட்டப்படவேண்டும்.
[இ. பு. ப. 215]

பிரதி சபையிலும் பிரஸிடேண்டாவது.........அக்கிராசனம் வகிக்கவேண்டும்.—செ. 22 (எ-2) வில் சொல்லப்பட்டிருக்கும் சபை தவிர, மற்றைய சாதாரண லோகல் போர்ட் சபைகளில் அக்கிராசனம் வகிக்கத் தகுந்தவர்களை வரிசைக் கிராமமாய் இந்த உபவிதி கூறுகிறது. முதலில் பிரஸிடெண்ட், இரண்டாவது வைஸ்-பிரஸிடெண்ட் பிரஸிடெண்ட் வராமலாவது அல்லது இருவரும் இல்லாமலாவது இருந்தால் மாத்திரம் மெஜாரடியாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்மர் அக்கிராசனம் வகிக்கலாம். [இ. பு. ப 215]

அக்கிராசனம் வகிக்கும்போது பிரஸிடேண்ட் அல்லது சேர்மனின் கடமைகள்.—சபையில் ஒழுங்கு தவறுமல் படிக்கும், நடை முறைகளை சரியாய் நடத்தவும், சபையின் முன்னிலையிலிருக்கும் விஷயத்தில் சபையின் முடிவை சரியாய் அறிந்துகொள்ளவும் வேண்டியது முக்கிய கடமை; ஆனல் அவர் இஷ்டப்பிரகாரம் சபையை ஒத்திவைக்கவோ, விஷயத்தை நிறுத்திவைக்கவோ அதிகாரமில்லை. அப்படி செய்வாதாயிருந்தால், எந்த விஷயத்திற்காக அந்த சபை கூட்டப்பட்டதோ அதை ஆலோசிக்க வேறு ஒரு அக்கிராசனரை நியமித்து அந்த விஷயத்தை ஆலோசிக்க அந்த சபை அருகதை யுடையது. (கோபால நாராயண கல்கரணி எ. ஷண்முகப்ப லிங்கப்ப அங்காடி, A.I.R. 1927 B. 603=106 I.C. 265).
[இ. பு. ப. 216]

வராவிட்டால்.—குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஆஜராயிராவிட்டால் என்பதை காட்டுகிறது. 'தற்காலம்' என்னும் பதம் காலத்தை காட்டுகிறது. "ஆஜராயிராவிட்டால்" என்னும் பதம் ஆபீஸிலாவது, அல்லது தாலூகாவிலாவது அல்லது அவரது இலாகாவிலாவது யிராவிட்டால் என்கிற பொருள் ஒருக்காலும் படாது. (செல்ல சாமி கோனர் எ. கொருசல் சங்கை காயாகார், A.I.R. 1927 Mad. 935=103 I.C. 821).
[இ. பு. ப. 217]

செ. **32 (2)**. **பிரஸிடேண்ட் (சபையில்) ஒழுங்குதவறுமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**—ஒரு லோகல் போர்ட் மெம்பர் பிரஸிடெண்ட் எச்சரிக்கைக்கு விரோதமாக ரிஜிஸ்டரில் கையெழுத்து போட எத்தனிக்கையில் பிரசிடெண்டைச் சேர்ந்தவர்கள் அவரை அவரது நாற்காலியில் தள்ளியதால் காயம் ஏற்பட்டது. அப்படி செய்தது செ. 32 படி சபையில் ஒழுங்கை நிலை நாட்ட செய்வது பிரசிடெண்டின் கடமையாகையால் அது குற்றமாகாதென்றும் அதற்காக பிரஸிடெண்டை தண்டித்தது பிசகென்றும், தண்டனை ரத்து செய்யப்பட்டது. (சிவசங்கரம் பிள்ளை எ. எம்பரர், 52 M. 446=A.I.R. 1929 Mad. 8). [இ.பு.ப. 217]

சபையில் அவதூரான வார்த்தைகள்.—ஒரு தேர்தலில் வாதி, பிரதிவாதி இருவரும் அபேக்ஷகர்களாக நின்றுர்கள். வாதி பிரதிவாதியை "போக்கிரி, சந்தேக ஆஸ்பதமுடையவன்" என்று கூறினர். பிரதிவாதி பஞ்சாத்தார்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் முடிந்த பிறகு, சிலர் பிரதிவாதியை உள்ளே என்ன நடந்ததென்று கேட்க அவர் வாதியை குடிகாரர் என்று அங்கே சொன்னதாகக் கூறினர். வாதி, பிரதிவாதி உபயோகப்படுத்தின வார்த்தைகளுக்காக, மான நஷ்ட தாவா தொடர்ந்தார். சபையில்

சொல்லிய வார்த்தைகள் அங்கு உண்டான சச்சரவின்மேல் சொல்லப்பட்டதால் வாதியை வேண்டுமென்று அவதூறு செய்யவில்லையாதலால் சபையில் நடந்த விஷயத்திற்காக வாதி மான நஷ்டத்திற்கு அருகதையல்லவென்றும், ஆனால் சபை முடிந்த உடன் வெளியில் பிரதிவாதி உபயோகப்படுத்தின வார்த்தைகளுக்கு மட்டும் வாதிக்கு மனாநஷ்டம் கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. [இ. பு. ப. 218]

சபை சம்பந்தமாக ஏற்படும் ஒழுங்கை பிரஸிடென்ட் தீர்மானிக்கவேண்டும்.— ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயமாய் பிரஸிடெண்ட் செய்யும் தீர்மானமானது முடிவானதாகஇருக்கவேண்டிய அவசியமில்லை. சேர்மனுடைய முடிவும் கடைசியானதல்ல. முக்கியமான விஷயத்தில் சேர்மன் திருத்தத்தை தவறுதலாக நிராகரித்துவிட்டால், அவரது தீர்மானத்தை பரிசீலனை செய்ய கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அவசியமானால் அந்தத தீர்மானம் சரியானதல்லவென்றும், அது பத்தப்படுத்தாதென்றும் தீர்மானிக்க அதிகாரமுண்டு. (தணிகாசலம் செட்டியார், 20 L.W. 589=A.I.R. 1924 M. 868). [இ. பு. ப. 218]

33. [மதராசு 1930-வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

மெம்பர் எப்போது தர்க்கத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்பதும் வோட் கொடுக்கக்கூடாதென்பதும்.

34. (1) யாதொரு லோகல் போர்டின் சபையிலாவது அதைச் சேர்ந்த யாதொரு கம்மிட்டியின் சபையிலாவது ஆலோசனைக்கு வரும் எந்த விஷயமாகிலும் பொது ஜனங்களுக்குப் பொதுவாய் பிரயோகப் படக்கூடியதைத் தவிர அதில் அந்த போர்ட் அல்லது கம்மிட்டியிலுள்ள யாதொரு மெம்பருக்கேயாகிலும், அவருடன் இருக்கும் பங்குக்காரருக்காகிலும் நேராகவாவது நேராகவல்லாமல் மற்றப்படியாவது திரவிய சம்பந்தமாய் எவ்வித பாத்யதையேனும் இருக்கிறபட்சத்திலே, அப்படிப் பட்ட விஷயத்தைப்பற்றி தர்க்கம் நடக்கும்போது ஷை மெம்பர் வோட் கொடுக்கவுங்கூடாது, அந்த தர்க்கத்தில் கலந்து கொள்ளவுங்கூடாது.

(2) ப்ரெஸிடெண்ட் அல்லது அக்கிராசனதிபதி எந்த விஷயத்தில் யாதொரு மெம்பருக்கு அப்படிப்பட்ட பாத்தியதை இருப்பதாகத் தாம் நம்புகிறாரோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தைப்பற்றி தர்க்கம் நடக்கும்போது, அந்த மெம்பரை வோட் கொடுக்கக்கூடாதென்றோ அல்லது அதைப்பற்றி நடக்கும் தர்க்கத்தில் கலந்துகொள்ளக்கூடாதென்றோ தடுக்கலாம்; அல்லது, இந்த தர்க்கம் நடந்துகொண்டிருக்கும்பொழுது சபையில் இருக்கக்கூடாதென்று அவர் அந்த மெம்பருக்கு உத்தரவு செய்யலாம்.

(3) அந்த மெம்பர் ப்ரெஸிடெண்ட் அல்லது அக்கிராசனதிபதி செய்த தீர்மானத்தை ஆட்சேபிக்கலாம்; அதன்பேரில் பிரசிடெண்ட் அல்லது அக்கிராசனதிபதி அவ்விஷயத்தை சபையாருக்குத் தெரிவிக்கவேண்டும். சபையார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

(4) தர்க்கம் நடந்துகொண்டிருக்கும் யாதொரு விஷயத்தில் ப்ரெஸிடெண்டுக்கு அல்லது அக்கிராசனதிபதிக்கு அப்படிப்பட்ட திரவியசம்பந்தமான பாத்தியதை எதுவாகிலும் இருப்பதாக அந்த சபைக்கு வந்திருக்கும் யாதொரு மெம்பர் நம்புகிறபஞ்சத்திலே, அந்தப்படி கண்ட ஒரு பிரேரேபணை (சபையாரால்) அங்கீகரிக்கப்பட்டால், ஷை தர்க்கம் நடந்துகொண்டிருக்கும்பொழுது அந்த சபையில் இருக்கக்கூடாதென்று ப்ரெஸிடெண்டுக்குச் அல்லது அக்கிராசனதிபதிக்கு சொல்லலாம்.

(5) "சம்பந்தப்பட்ட மெம்பர் (3) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் விஷயத்தைக் குறித்து வோட் கொடுக்க அர்ஹராகமாட்டார்; மேலும், சம்பந்தப்பட்ட ப்ரெஸிடெண்ட் அல்லது அக்கிராசனதிபதியானவர் - (4) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் பிரேரேபணையைக் குறித்து வோட்கொடுக்க அரஹராகமாட்டார்."

விவரணம்.—இந்தப் பிரிவில் 'ப்ரெஸிடெண்ட்' என்பதில் லோகல் போர்டாரின் யாதொரு சபையில் அந்தந்த காலத்தில் அக்கிராசனம் வகிக்கும் யாதொரு வைஸ்-ப்ரெஸிடெண்ட் அல்லது மெம்பர் என்பதும் அடங்கும்; மேலும், 'அக்கிராசனாதிபதி' என்பதில் கம்மிட்டியாரின் யாதொரு சபையில் அந்தந்த காலத்தில் அக்கிராசனம் வகிக்கும் யாதொரு மெம்பர் என்பதும் அடங்கும்.

குறிப்பு.

போது.—பிரஸிடெண்டுகளாவது, மெம்பர்களாவது, தங்களுக்கு த்ரவிய சம்பந்தமிருக்கும் விஷயங்களின் பரிசீலனை செய்யும்போதாவது, அவைகளின்மேல் ஓட்டு செய்யும்போதாவது அவர்கள் கலந்துகொள்ளக்கூடாதென்று இந்த செக்ஷன் ஸ்பஷ்டமாய் கூறுகிறது. அம்மாதிரியான சம்பந்த மிருப்பதாக வேறு மெம்பர் யாராவது ஆக்ஷேபித்தாலே அப்படி சம்பந்தமிருக்கப்பட்ட பிரஸிடெண்ட் அல்லது மெம்பர் மேற்படி விஷயத்தில் கலந்துகொள்ளக்கூடாது, ஓட்டும் செய்யக்கூடாது, (உப செக்ஷன் 5யை பார்க்கவும்). ஒரு மெம்பர் செ. 56 (1) (d) (dd) (e) (ee) படி திரவ்ய சம்பந்தமிருப்பாய் ஏற்பட்டால், மெம்பராயிருக்க அருகதையுடையவரல்ல. அப்படி மெம்பராயில்லாதபோது தான் மெம்பராக நிர்வகித்து நடத்தினால் செ. 208 படி இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கக் கடவர். [இ. பு. ப. 220]

செ. 34 (1). திரவ்ய சம்பந்தம்.—லோகல்போர்ட் கன்டிராக்டில் திரவ்ய சம்பந்த மிருப்பதாக ஏற்பட்டால் மேற்கூறிய திரவ்ய சம்பந்தம் எவ்வளவு அற்ப தொகையா யிருந்தாலும் அவசியமில்லை. [இ. பு. ப. 220]

செ. 34(2 (3).—மெம்பர் தானாகவே விலகிக்கொள்ளாவிட்டால், அவரை விவாதத்தில் கலந்துகொள்ளாமலிருக்கவும், அவசியமானால் சபைக்கே ஆஜராயிராமலிருக்கவும் உத்திரவிட பிரஸிடெண்டிற்கு அதிகாரமுண்டு. அப்போதும் தனக்கு திரவ்ய சம்பந்தமிருப்பதாக அந்த மெம்பர் ஒப்புக்கொள்ளாமல் பிரஸிடெண்டின் தீர்மானத்தை ஆக்ஷேபித்தால், பிரஸி டெண்டானவர் அந்த பிரசனையை சபையின் முடிவுக்கு கொண்டுவரலாம். ஆனால் அந்த மெம்பர் அதில் ஓட்டு கொடுக்கக்கூடாது. (உப செக்ஷன் 5-யை பார்க்கவும்). சபையி லுள்ள மெஜாரடி மெம்பர்களின் தீர்மானமே முடிவானதாகும். (ஷெட்யூல் II, விதி 5). [இ. பு. ப. 221]

செ. 34 (4).—சபையின் விவாதத்திலிருக்கும் விஷயத்தில் பிரஸிடெண்டிற்கு திரவ்யசம்பந்தமிருந்தால், யாராவது ஒரு மெம்பர் பிரஸிடெண்ட் இதில் கலந்து கொள்ளக் கூடாதென்றும் சபையில் ஆஜராயிருக்கக்கூடாதென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரலாம். அதை பிரஸிடெண்ட் ஒப்புக்கொள்ளா விட்டால் சபையின் ஆலோசனைக்கு கொண்டுவரலாம். பிரஸிடெண்ட் ஓட்டு கொடுக்கக்கூடாது. இந்த தீர்மானம் சபையில் பிரசன்னமாயிருக்கும் மெம்பர்களில் மெஜாரடியாரால் நிறைவேற்றப்பட்டால் பிரஸிடெண்ட் அந்த விஷயத்தில் கலந்து கொள்ளக்கூடாது. அது போலவே அக்கிராசனம் வகிக்கும் வைஸ்-பிரசிடெண்ட், மெம்பர்களும் செய்யவேண்டும். [இ. பு. ப. 221]

லோகல் போர்டார் முதலியவர்களின்நடவடிக்கைகளில் ஒழுங்கு பிசகு முதலியவை இருப்பதனால் அவை செல்லாமற் போகமாட்டாவென்பது.

35. யாதொரு லோகல் போர்டாராவது அந்த போர்டைச் சேர்ந்த யாதொரு கம்மிட்டியாராவது அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டாகவாகிலும் வைஸ்-ப்ரெஸிடென்டாக வாகிலும் அக்கிராசனாதிபதியாகவாகிலும் மெம்பராகவாகிலும் பிரவர்த்திக்கிற யாதொரு நபராவது செய்கிற எந்தக் காரியமும் - அந்த போர்ட் அல்லது கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டதில் ஒரு குறைவு இருந்ததென்னும் காரணத்தினால் மாத்திரமே யாகிலும், அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸி டெண்டாவது வைஸ்-ப்ரெஸிடெண்டாவது அக்கிராசனபதி யாவது யாதொரு மெம்பராவது யாதொரு யோக்கியதைக் குறைவு காரணமாகவோ அவரைத் தெரிந்தெடுத்ததிலோ நியமித்ததிலோ யாதொரு கிரமப்பிசகு அல்லது சட்ட விரோதமான விஷயம் ஏற்பட்டிருந்தது காரணமாகவோ அந்த உத்தியோகத்தை வகிக்கவாயினும் அதில் இன்னும் இருக்க வாயினும் அர்ஹராயில்லை என்னும் ஹேதுவின் மேலாகிலும், ஷை காரியமானது

அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடெண்ட், வைஸ்-ப்ரெஸிடெண்ட், அக்கிராசனாதிபதி அல்லது மெம்பரின் உத்தியோகத்தில் யாதொரு காலி நேரிட்டிருந்த காலத்திலே செய்யப்பட்டது காரணமாகவாகிலும் சட்ட சம்மந்தமற்றதாய்ப் போய்விடுவதாகக் கருதப்படமாட்டாது."

குறிப்பு.

செ. 35. போது.—இந்த செக்ஷனும், 57 (3)-வது செக்ஷனும் சற்றேறக்குறைய ஒரே மாதிரியானது. மெம்பராயிருக்க அருகதையில்லாதவர் சபையில் கலந்துகொள்வதால் சபையின் நடவடிக்கைகள் செல்லுபடி யாகாமல் போவதை தடுப்பதற்காக இந்த செக்ஷன் ஏற்பட்டது. (சுப்பராய கவுண்டன் எ. முத்துகுமாரசாமி கவுண்டன், 51 M.L.J. 265=A.I.R. 1926 Mad. 1001). [இ. பு. ப. 221]

வரிகள்.—லோகல் போர்டின் அமைப்பு அல்லது சபைகளில் குறைவு இவைகளைப் பற்றி இந்த செக்ஷன் கூறுகிறது. வரி விதிக்கும் பாத்தியதையுடைய முனிசிபாலிடியார் தாங்கள் விதித்திருக்கும் வரி நியாய வரம்பிற்கு மீறியதா என்பதை விசாரிக்க சிவில் கோர்டிற்கு இருக்கும் அதிகாரத்தை இந்த செக்ஷன் எடுத்துவிடவில்லை. (பக்மல் ஜின்னிங் பாக்டரி எ. முனிசிபல் கமிட்டி (அகஸ்), A.I.R. 1930 N. 153=122 I.C. 691).
[இ. பு. ப. 221]

லோகல் போர்டுகளுடைய நடவடிக்கைகள்.—பிரஸிடெண்ட் தேர்தல், லோகல் போர்டின் சாதாரண நடவடிக்கைகளில் ஒன்று அல்லவாதலால் இந்த செக்ஷன் பிரசிடெண்ட் தேர்தல் விஷயமாய் நடக்கும் சபையை சம்பந்தப்படுத்தக் கூடியதல்ல. (வைத்தியநாத தேவர் எ. முருகப்பன் செட்டியார், A.I.R. 1928 Mad. 1077=1928 M.W.N. 549). அப்படியிருக்தால் எலெஷன் மனு அனாவசியமானதாகிவிடும். (கந்தசாமி செட்டியார் எ. பௌகீஸ், A.I R. 1926 Mad. 396). [இ. பு. ப. 222]

சட்டசம்மந்த......கருதபடமாட்டாது.—செ. 15 யை பார்க்கவும் (உத்தியோகத்தை காலி செய்யப்பட்டதாக எண்ணப்படுவர்). (1) லோகல் போர்டில் குறைவு இருப்பதாலும், (2) பிரசிடெண்ட் முதலியவர்கள் அவர்கள் எலெக்ஷன் அல்லது நியமகத்தில் நியாய விரோதமாவது தவறுதலாவது இருப்பதால்ஃஉத்தியோகம் வகிக்க அருகதையில்லாம லிருப்பதாலும், (3) அல்லது மேற்கூறிய உத்தியோகம் எப்போதாவது காலியாயிருக்கும்போது அந்த காரியம் செய்யப்பட்டிருக்கின்றதென்கிற ஹேதுவினாலாகிலும் செல்லாமற் போய்விடுவதாக எண்ணப்படமாட்டாது. மேலே சொல்லப்பட்ட மூன்று குறையுமாவது அல்லது அதில் யாதொரு ஒரு குறையுமாவது இருந்தாலும், சட்டபடி செய்யப்பட்ட காரியங்கள் செல்லாமற் போகமாட்டாது. (செக்ஷன் 6 (2) பார்க்கவும்). மேற்கூடிய குறைகளுள் வாராமலும், லோகல் போர்ட்டின் அதிகாரத்திற்கு மீறியதான நடவடிக்கைகள் நியாய வரம்பிற்கு மீறியவைகள்.

பிரசிடேண்ட், மெம்பர், எலேக்ஷன் அல்லது நேமகத்தில், தவறு சட்ட விரோதமிருப்பதால் மேற்கூறிய உத்தியோகத்தை வகிக்க அருகதையுடையவர் அல்ல என்பது.—லோகல் போர்ட் ஆக்டில் சொல்லப்பட்ட மெம்பர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட் என்பது அந்த ஆக்டின் விதிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர், பிரசிடெண்ட், வைஸ் பிரஸிடெண்ட் என்பது பொருள். (தெய்வசிகாமணி எ. சேதுரத்தின ஐயர், A.I.R, 1925 Mad 1034=87 I.C. 363). சபை முதலில் பிரசிடெண்டாவது, வைஸ்-பிரசிடெண்டாவது இல்லாமலிருக்கையில் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் அவர்கள் சபையின் மத்தியில் வந்தால் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் அக்கிராசனத்தை காலி செய்யாமல் நடவடிக்கைகளை நடத்தினால் சட்ட விரோதமாக மாட்டாது. (பசய நருந்தைய்ய தண்டவதி எ. முருகய்ய சோமையா ஜான்கின், A.I.R. 1926 B. 576=98 I.C. 454). [இ. பு. ப. 222]

எலேக்ஷனில் ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதம்.—செ. 19 படி எலெக்ஷன் முடிவு கூறிய உடன் பிரசித்தம் செய்யப்பட வேண்டும். பிறகுதான் சட்டப்படி மெம்பர், வைஸ்-பிரசிடெண்ட், பிரசிடெண்ட் என்று எண்ணப்படுவார்கள். அப்படி எலெக்ஷன் செய்யப்பட்ட நியாயத்தை அதிர்ப்தி அடைந்த நபர் எலெக்ஷன் மனு மூலமாய் ஆக்ஷேபிக்கலாம். அந்த மனு முடிவடையும் வரையில் எலெக்ஷன் செய்யப்பட்ட நபரே நியாயமான மெம்பர் என்று கருதப்படுவார். அப்படிப்பட்ட மெம்பரின் உதவியோடு லோகல் போர்டில் நடந்த நடவடிக்கைகள் செல்லாமற் போகமாட்டாது. [இ. பு. ப. 223]

மெம்பர் ஸ்தானம் காலியாயிருப்பதினாலாவது.—ஒரு தாலூகா போர்ட் பிரசிடெண்ட் எலெக்ஷன் காலத்தில் அந்த சபையிலிருக்கவேண்டிய மொத்த சங்சை 20-க்கு 19 மெம்பர்கள் இருந்ததால் அந்த பிரசிடெண்ட் எலெக்ஷன் செல்லுபடியாகக் கூடியதல்ல என்று வழக்கு தொடரப்பட்டது. அதில் அந்த எலெக்ஷன் நியாயமானதென்று தீர்மானிக்கப் பட்டது. மேலும் லோகல் போர்ட் ஆக்டுகளும், பிரதேச கவர்ன்மெண்டாரின் பிரசுரங்களும் லோகல் போர்டின் அமைப்பைக் கூறுகின்றனவே யொழிய, மெம்பர்களின் உத்தியோக விஷயங்களைப்பற்றி கூறவில்லை. நியாயமாய் அமைக்கப்பட்ட லோகல் போர்ட் என்பதற்கு முதல் முதலில் அமைக்கப்பட்ட லோகல் போர்டிலுள்ள ஒவ்வொரு மெம்பர் ஸ்தானமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென்கிற அவசியமுமில்லை. மெம்பர்கள் ஸ்தானத்தில் காலியிருப்பதால் லோகல் போர்ட் தன் நிர்வாகத்தை நடத்த அருகதை அல்ல என்று கூற முடியாது. (வெங்கடாராமய்யர் எ. ஆமத் சுல்தான் மரக்காயர், A.I.R. 1923 Mad. 360= 44 M.L.J. 161).

வருஷவாரி ரிபோர்டுகள் அனுப்பவது.

36. (1) ஒவ்வொரு பஞ்சாயத்தும் - அதனுடைய பரிபாலனத்தைக் குறித்துத் தாலூகா போர்டாருக்கு ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும்.

(2) ஒவ்வொரு தாலூகா போர்டாரும் - தங்களுடைய பரிபாலனத்தைக் குறித்தும் தாலூகாவிலுள்ள சகல பஞ்சாயத்துகளின் பரிபாலனத்தைக் குறித்தும் ஒன்றாய்ச் சேர்த்து எழுதப்பட்ட ஒரு ரிபோர்ட்டை டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அனுப்பவேண்டும்.

(3) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும்-தங்களுடைய பரிபாலனத்தைக் குறித்தும் டிஸ்ட்ரிக்டிலுள்ள சகல தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் பரிபாலனத்தைக் குறித்தும் ஒன்றாய்ச் சேர்த்து எழுதப் பட்ட ஒரு ரிபோர்ட்டைப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும்.

(4) ஷை ரிபோர்ட்டுகள் (பைனன்ஷியல்) அரசிறை வருஷத்துக்குச் சம்பந்தபட்டவைகளா யிருக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட வருஷத்துக்குப் பிறகு வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு கூடுமான சீக்கிரத்திலும் பிரதேச கவர்ண்மென்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய தேதிக்கு மேற்படாமலும் அந்த ரிபோர்ட்டுகளை அனுப்பவேண்டும். அன்றியும், அவை பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய நமூனைப்படி இருக்க வேண்டியதுமல்லாமல், அவைகளில் பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய விவரங்கள் அடங்கியிருக்கவும் வேண்டும்.

(5) ஒவ்வொரு லோகல் போர்டாரும் அனுப்பவேண்டிய ரிபோர்ட்டை அந்த போர்டின் ப்ரெஸிடெண்ட் தயார்செய்யவேண்டும். லோகல் போர்டார் - அந்த ரிபோர்ட்டைக் குறித்து ஆலோசனை பண்ணி, அதன்மேல் தாங்கள் தீர் மானங்கள் எவையேனும் செய்தால் அந்த தீர்மானங்கள் சகிதமாய் அதைச் சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

(6) பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய விதமாய் அந்த ரிபோர்ட்டுகளையும் அவைகளின்மேல் தீர்மானங்கள் எவையேனும் செய்யப் பட்டிருந்தால் அவகளையும் பிரசுரம் செய்யவேண்டும்.

குறிப்பு.

செ. **36 (5)**.—இந்த செக்ஷன் படியும், 21-வது செக்ஷன்படியும் லோகல் போர்ட் பிரசிடெண்டானவர் அந்த போர்ட்டின் நிர்வாக பரிசீலனை ரிபோர்ட்டை தயார் செய்ய வேண்டுமென்று இருந்தபோதிலும், அந்த ரிபோர்ட் லோகல் போர்டின் அங்கீகாரத்திற்கு உள்பட்டது. 31-வது செக்ஷன்படி மெம்பர்களுக்கு அனுப்பப்படும் சபை நிமச்சி முறையில் இதர விஷயங்களுடன் வருஷாந்தர ரிபோர்ட்டுகள் பரிசீலனை என்கிற விஷயமும் எழுதப் படாமல், மேற்கூறிய ரிபோர்டின் நகல்கள் மெம்பர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்டால் அவர்கள் பரிசீலனை செய்ய தயாராக சபைக்கு வர அவகாசமிருக்கும். இந்த விஷயத்தில் பிரசிடெண்ட்டும், மெம்பர்களும் தங்கள் கடமைகளை செய்யத் தவறினவர்களாகிறார்கள்

பிரசிடெண்ட் லோகல் போர்ட் பரிபாலன விஷயத்தில் மெம்பர்களுக்கு ஊக்கமுண்டாக்க வெண்டும்: மெம்பர்களும் தங்கள் கடமைகளை உணர்ந்து பரிபாலன விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு உழைக்கவேண்டும். ரிபோர்ட்டை குறைக்கவோ, அதோடு சேர்க்கவோ மெம்பர்களுக்கு அதிகாரமுண்டு. ரிபோர்ட்டின்மேல் தீர்மானம் செய்து அதையும் ரிபோர்ட்டுடன் அனுப்ப அந்த போர்டுக்கு அதிகாரமுண்டு. பிரசிடெண்ட்டினால் தயாரிக்கப்பட்ட ரிபோர்ட் உண்மையான விஷயங்களை மறைத்து தயாரிக்கப்படடிருந்தால், அதை எடுத்து விட்டு உண்மையான ரிபோர்டை தயார் செய்வதுடன், தனிப்பட்ட உத்தியோகஸ்தர், அல்லது பொறுப்புள்ள நபர்களை புகழ்ந்தோ, இகழ்ந்தோ தீர்மானம் செய்ய அந்த லோகல் போர்டுக்கு அதிகாரமுண்டு. [இ. பு. ப. 225]

லோகல் போர்டுகளின் பார்வையிடும் உத்தியோகஸ்தர்களும் மேல் விசாரணை பண்ணும் உத்தியோகஸ்தர்களும்.

37. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட சகல லோகல் போர்டாருமாவது எந்த லோகல் போர்டாராவது நடத்துகிற காரியங்களைப் பார்வையிடவோ அல்லது மேல்விசாரணை பண்ணவோ வேண்டியிருக்கும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு தங்களுக்குத் தகுதியாக தோற்றக்கூடிய சம்பளத்தையும் சிப்பந்தியையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். அந்த உத்தியோகஸ்தர்களுக்காகவும் அவர்களுடைய சிப்பந்திக்காகவும் பிடிக்கும் செலவைப் பிரதேச் கவர்ன்மெண்டாரின் வருமானத்திலிருந்து கொடுக்கவேண்டும்.

பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குப்பிரவேசிப்பதற்கான அதிகாரங்கள்.

37-A. இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரின் அதிகாரம் பெறக்கூடிய யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது நபரானவர்—

(a) யாதொரு லோகல் போர்டார் அல்லது ப்ரெஸிடெண்டின் மேல் விசாரணையிலிருக்கும் யாதொரு அசையாப்பொருளிலும் அல்லது நடந்தேறி வருகிற யாதொரு வேலையிலும்.

(b) யாதோரு லோகல் போர்டாரால் பராமரித்துவரப்படும் அல்லது அவர்களின்மேல் விசாரணையிலிருக்கும் யாதொரு பாடசாலை, ஆஸ்பத்திரி, டிஸ்பென்ஸரி, அம்மைகுத்தும் ஸ்டேஷன், சத்திரம் அல்லது இதர ஸ்தாபனத்திலும், அந்த ஸ்தாபனத்தில் வைக்கப்பட்டிருக்கும் எவையேனும் ரெகார்டுகள், ரெஜிஸ்டர்கள் அல்லது இதர தஸ்தவேஜுகளிலும்,

(c) யாதொரு லோகல் போர்டாரின் ஆபிஸிலும் அதில் வைக்கப்பட்டிருக்கும் எவையேனும் ரெகார்டுகள், ரெஜிஸ்டர்கள் அல்லது இதர தஸ்தவேஜுகளிலும்.

பிரவேசித்துப் பார்வையிடலாம் அல்லது பிரவேசித்துப் பார்வையிடும்படிச் செய்யலாம்.

பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் லோகல் போர்ட் சொத்து முதலியவைகளைப் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்வது.

37-B. லோகல் பொர்டுகளும் அவைகளின் ப்ரெஸிடெண்டுகளும் உத்தியோகஸ்தர்களும் ஊழியகக்காரர்களும் 37-வது பிரிவிலும் 37-A பிரிவிலும் சொல்லியுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் நபர்களுக்கும், நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, அந்த உத்தியோகஸ்தர்கள் அல்லது நபர்கள் ஷை பிரிவுகளின் படி தங்களுக்குள்ள அலுவல்களைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதற்கு அவசியமானவையென்று அவர்கள் அபிப்பிராயப்படக்கூடியபடி லோகல் போர்ட் சொத்து அல்லது வளவையும், சகல தஸ்தவேஜுகளையும் நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்யக் கடமைபட்டவர்களாவார்கள்

லோகல் போர்டுகளிடமிருந்து ரிபோர்ட்டுகள் வரவழைப்பதற்கான அதிகாரம்.

37-C. பிரதேச கவர்ன்மெண்டாராயினும் இதற்காகப் பிரதேச கவர்ன்மென்டாரின் அதிகாரம் பெறக்கூடிய யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது நபராயினும்—

(a) யாதொரு லோகல் போர்டாரின் அல்லது ப்ரெஸிடெண்டின் ஸ்வாதீனத்திலாவது மேல்விசாரணையிலாவது இருக்கிற யாதொரு ரெகார்டையாகிலும் ரெஜிஸ்டரையாகிலும் வேறே தஸ்தவேஜையாகிலும் வரவழைக்கலாம் ;

(b) யாதொரு ரிடர்னையாவது நக்ஷாவையாவது எஸ்டிமேட்டையாவது ஸ்டேட்மென்டையாவது கணக்கையாவது ஸ்டாடிஸ்டிக்ஸ் என்னும் விவரக்கணக்குகளையாவது சவதரிக்கும்படி யாதொரு லோகல் போர்டாரையாகிலும் ப்ரெஸிடெண்டையாகிலும் கேட்கலாம் ;

(c) யாதொரு லோகல் போர்டுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விஷயத்தைக் குறித்து ஏதேனும் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்றாவது ரிபோர்ட் அனுப்பவேண்டுமென்றாவது அந்த போர்டாரையாகலும் ப்ரெஸிடெண்டையாகிலும் கேட்கலாம் ;

(d) யாதொரு லோகல் போர்டாருடைய அல்லது ப்ரெஸிடெண்டினுடைய நடவடிக்கைகளைக் குறித்தாவது அலுவல்களைக் குறித்தாவது தங்களுக்காகிலும் தமக்காகிலும் தகுதியாகத் தோற்றும் எவையேனும் அபிப்பிராயக் குறிப்புகளை அந்த போர்டார் அல்லது ப்ரெஸிடெண்ட் ஆலோசிக்கும்பொருட்டு எழுதிவைக்கலாம்.

தாலூகா போர்டுகளையும் பஞ்சாயத்துகளையும் மேல்விசாரணை பண்ண டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரசிடெண்டுகளுக்கும் தாலூகா போர்ட் ப்ரெசிடெண்டுகளுக்குமுள்ள அதிகாரங்கள்.

37-D. 37-B பிரிவில் சொல்லியுள்ள சொத்து அல்லது வளவையும் தஸ்தவேஜுகளையும் பார்ப்பதற்கான உரிமை சகிதமாக, 37-A, 37-C, பிரிவுகளின்படி பிரதேச கவர்ன்மேன்டாரால் யாதொரு உத்தியோகஸ்தருக்காவது நபருக்காவது கொடுக்கப்படக்கூடிய சகல அதிகாரங்களையும்—

(a) தாலுகா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் விஷயத்திலும் அவைகளைச் சேர்ந்த ப்ரெஸிடெண்டுகளின் விஷயத்திலும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டும்,

(b) பஞ்சாயத்துகளின் விஷயத்திலும் அவைகளைச் சேர்ந்த ப்ரெஸிடெண்டுகளின் விஷயத்திலும் தாலூகாபோர்ட்ப்ரெஸிடெண்டும் செலுத்தலாம்.

ஆக்டின்படி தீர்மானம் முதலியவைகளைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்க அல்லது ரத்து செய்ய அதிகாரம்.

38. (1) (a) இந்த ஆக்டை அனுசரித்தோ அல்லது அதைச் சாக்கிட்டுக் கொண்டோ ஜாரிசெய்யப்பட்ட யாதொரு தீர்மானமாவது பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவாவது கொடுக்கப்பட்ட யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதியாவது செய்யப்படுகிற அல்லது செய்யப்பட்டுவருகிற யாதொரு காரியமாவது சட்டப்படி ஜாரி செய்யப்படவில்லை, பிறப்பிக்கப்படவில்லை, கொடுக்கப்படவில்லை அல்லது அனுமதிக்கப்படவில்லை யென்றாகிலும்,

(b) ஷை தீர்மானம், உத்தரவு, லைசென்ஸ், அனுமதி அல்லது காரியமானது இந்த ஆக்டினுலாயினும் வேறே யாதொரு சட்டத்தினுலாயினும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை மீறியிருக்கிறதென்ருகிலும்,

(c) ஷை தீர்மானம் அல்லது உத்தரவை நிறைவேற்றுவதோ, ஷை லைஸென்ஸ் அல்லது அனுமதி செலாவணியாய்க்கொண்டிருப்பதோ, ஷை காரியத்தைச் செய்வதோ வனிதப் பிராணனுக்காவது சௌக்கியத்துக்காவது பத்திரத்துக்காவது அபாயம் உண்டுபண்ணக்கூடுமென்ருகிலும் கலகத்தையாவது சச்பரவையாவது உண்டாக்கக்கூடுமென்ருடிலும்

பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு—

(i) ஷை தீர்மானத்தையோ, உத்தரவையோ, லைஸென்ஸ் அல்லது அனுமதியையோ சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்துசெய்யலாம்; அல்லது,

(ii) ஷை காரியத்தைச் செய்யக்கூடாதென்று தடுக்கலாம்:

ஆனல், நடத்தப்பட்டிருக்கும் யாதொரு எலெக்ஷனை நிராகரித்துவிட இந்த உட்பிரிவில் கண்டதெதனுலும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் ஏற்படமாட்டாது.

(2) பிரதேச கவர்ன்மென்டார்-(1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் கண்ட ஆதாரங்களில் எதன்மேலாகிலும் நடவடிக்கை நடத்துவதற்குமுன், சமாதானம் சொல்லுவதற்காக சம்மந்தப்பட்ட அதிகார சபைக்கு அல்லது நபருக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதியில் கண்ட ஆதாரங்களில் எதன்மேலாகிலும் உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமென்று ஜில்லா கலெக்டர் அபிப்பிராயப்பட்டால், அவர்-சந்தர்ப்பத்துக்கேற்றப்படி அந்த தீர்மானம், உத்தரவு, லைஸென்ஸ் அல்லது அனுமதி செலாவணியாகதபடியோ அந்த காரியம் நடக்காதபடியோ நிறுத்திவைத்து, அந்த விஷயத்தைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கலாம்; அதன்மேல் அவர்கள்-கலெக்டரின் உத்தரவை ரத்துசெய்யலாம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகார சபை அல்லது நபருக்கு சமாதானம் கூற நியாயமான அவகாசம் கொடுத்தபிறகு, ஷை உத்தரவு மாறுதலுடனே மாறுதலில்லாமலோ நிலையாகவாவது, தாங்கள் தகுதியாக நினைக்கும் காலத்துக்காவது அமுலிலிருந்து வரவேண்டுமென்று கட்டளையிடலாம்.'

குறிப்பு.

செ. 38. போது.—லோகல் போர்டின் தீர்மானத்தினுலாவது, அல்லது உத்தரவினுலாவது அல்லது இந்த ஆக்டின்படி லைசன்ஸ் அல்லது அனுமதிபெற்று செய்யக்கூடிய காரியங்களின்மேல் செய்த முடிவைப்பற்றியாவது, லைசென்ஸ் கொடுக்கப்படுவதைப்பற்றியாவது, அதிருப்திகொண்ட நபர் சிவில் கோர்டில் பரிகாரம் தேடிக்கொள்வதுடன், பிரதேச கவர்ன்மெண்டாரிடமும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். செக்ஷன் 6 (3) வியாஜ்ஜியம் தொடரவும், தொடரப்படவும் என்ற தலைப்பில் "சிவில் கோர்டுக்கு பாத்தியம்" என்பதின்கீழ் பார்க்கவும். (இ. பு. ப. 228)

செக்ஷன்களை வியாக்கியானம் செய்தல்.—சிவில் கோர்ட்டுகளை பத்தப்படுத்தும்படியான எந்த வியாக்கியானத்தையும் செக்ஷன்களுக்குக் கொடுக்கப் பிரதேச கவர்ன்மெண்டுக்கு (மதராஸ் கவர்மெண்ட்) அதிகாரம் கிடையாது. (அய்யாதுரை முதலியார் எ. மங்கள கௌண்டர், A.I.R. 1927 Mad 971=53 M.L.J. 735). சிவில் கோர்டுகளே செக்ஷன்களுக்கு வியாக்கியானம் செய்ய அருகதையுடையது! நியாய விரோதமாகவே அதிகாரமாகவோ, அதிகாரத்திற்கு மேற்பட்டோ லோகல் போர்ட் செய்யும் காரியங்களை தற்காலிகமாப் நிறுத்

தவோ, ரத்துசெய்யவோ, பிரதேச கவர்ன்மெண்டுக்கு இருக்கும் பொது அதிகாரம், சிவில் ப்ரெசிஜர் கோட் 9-வது செக்ஷன்படி சிவில் கோர்டுகளுக்கு இருக்கும் பாத்தியதைகளை எடுத்துவிடவில்லை. (நாசருதீன் எ. அனந்து, A.I.R. 1926 Cal. 279=52 C. 913).
(இ. பு. ப. 230)

செ. **38** (1) (a). **தீர்மானம்.**—"விவாதிக்கக்கூடிய கூட்டத்தில் அல்லது சபையில் கூறப்பட்ட அபிப்பிராயத்தின் முடிவு அல்லது தீர்ப்பு" என்று அகராதியில் பொருள்படும். சபையில் எலெக்ஷன் செய்யப்படும் மெம்பர் அந்த சபையில் தீர்மானிக்கப்பட்டதாகும். அப்படிப்பட்ட தீர்மானத்தை பிரதேச கவர்ன்மெண்டார் ரத்து செய்யலாம். (இந்தியா மந்திரி எ. முருகேச முதலியார், A.I.R. 1929 M. 443=1929 M.W.N. 67). (இ. பு. ப. 230)

சபையில் பிரசிடெண்ட் அல்லது வைஸ் பிரசிடெண்ட் எலெக்ஷன் செய்யப்படுவது போர்டின் தீர்மானமாதலால் அதை ரத்து செய்ய பிரதேச கவர்ன்மெண்ட்டுக்கு அதிகாரமிருப்பதால் மேற்கூறிய எலக்ஷனை பிரதேச கவர்ன்மெண்டார் ரத்து செய்யலாமென்று இந்தியா மந்திரி எ. முருகேச முதலியார் வியாஜ்ஜியத்தில் கோர்டில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது இந்த செக்ஷனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் உபவிதிபடி மேற் குறித்த அதிகாரம் எடுக்கப்பட்டு போய்விட்டமையால், அவர்களுக்கு எவ்வளவு அதிருப்தியாயிருந்தபோதிலும் பிரதேச கவர்ன்மெண்டார், பிரசிடெண்ட்,வைஸ்ப்ரசிடெண்ட், எலக்ஷனை ரத்து செய்ய முடியாது. சந்தர்பத்துக்கு தகுந்தாப்போல் எலெக்ஷன் கோர்டிலோ அல்லது சாதாரண சிவில் கோர்டிலோ மேற்கண்ட எலெக்ஷனுக்கு பரிகாரம் இனி தேடிக்கொள்ள வேண்டும். (1) தீர்மானம் நியாயப்படி நிறைவேற்றப்படாமலிருந்தாலும், (2) ஆக்டினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு அதிகப்பட்டதாக தோன்றினாலும், (3) தீர்மானத்தை நிறைவேற்றுவதினால் மனிதப் பிராணனுக்கோ, சௌக்கியத்திற்கோ அல்லது பத்திரத்திற்கோ அபாயம் உண்டு பண்ணும் போலாகிலும், குழப்பத்தையாவது சச்சரவையாவது, சண்டையாவது உண்டு பண்ணும் போலாகிலும் இருப்பதாயின், எந்த அதிகாரி அல்லது மனிதன் மேற்கூறிய தீர்மானத்தை நிறைவேறறுவானோ அவன் தகுந்த சமாதானம் சொல்ல போதுமான சாவகாசம் கொடுத்த பிறகு பிரதேச கவர்மெண்டார் மேற்படி தீர்மானத்தை எழுத்து மூலமாய் நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ அதிகார முடையவராவர். [இ. ப. பு. 230]

செ. **38** (1).—**ஆக்டை அனுசரித்தாகிலும் சாக்கிட்டுக்கொண்டாகிலும்.**—இந்த வாங்கியம் 225 (1)-வது செக்ஷனில் கூறியுள்ள "இந்த ஆக்டை அனுசரித்தாயினும், நிறைவேற்றவாயினும், நிறைவேறற உத்தேசித்தாயினும், செய்யப்பட்டதாகவாவது செய்யப்பட்டதாகப் பொருள் படுகிறதாகவாவதுள்ள யாதொரு செய்கை" என்றும் பொருள் படும். [இ. ப. பு. 232]

டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குள்ள விசேஷ அதிகாரங்கள்.

39. (1) அவசரமான விஷயங்களிலே டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர்-யாதொரு லோகல் போர்டாராவது ப்ரெஸிடெண்டாவது நிறைவேற்ற அல்லது செய்ய அதிகாரமுடையவர்களாயிருக்கிற எந்த வேலையை அல்லது காரியத்தை உடனே நிறைவேற்றுவதாகிலும் செய்வதாகிலும் ஜனங்களுடைய பத்திரத்துக்கு அவசியமானதென்று தாம் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த வேலையை நிறைவேற்றும்படியாகிலும் அந்தக் காரியத்தைச் செய்யும்படியாகிலும் கட்டளையிடலாம், அல்லது அதற்காக ஏற்பாடு பண்ணலாம்; மேலும், அந்த வேலையை நிறைவேற்றுவதற்காவது காரியத்தைச் செய்வதற்காவது உண்டான செலவை லோகல் போர்டார் செலுத்தவெண்டுமென்று உத்தரவு பண்ணலாம்.

(2) அப்படி அந்த செலவைச் செலுத்தாத பட்சத்தில், அவர்-லோகல் பண்டின்மேல் ஏற்பட்டிருக்கிற கடன் முதலிய வேறே எந்த பொறுப்புக்கும் முன்னதாய் அப்படிப்பட்ட செலவைச் செலுத்தும்படி, மேற்படி பண்டு பணம் யார் வசத்திலிருக்கிறதோ அந்த நபருக்கு உத்தரவு பண்ணலாம். அந்த நபர்-லோகல் போர்டுக்கு வரவாக வைத்திருக்கிற பணத்திலிருந்து கொடுக்கக்கூடிய மட்டில், அந்த உத்தரவின்படி நடந்துகொள்ள வேண்டியவராவார்.

(3) டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - இந்தப் பிரிவினால் (தமக்குக்) கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் (தாம்) செலுத்துகிற ஒவ்வொரு

விஷயத்தையும், அப்படிப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கான காரணங்களைப் பூரணமாக கண்டெழுதி பிரதேச கவர்ன்மெண்டாருக்கு உடனே ரிபோர்ட் பண்ணவேண்டும்; மேலும், லோகல் போர்டுக்கும் சங்கதி தெரியும்பொருட்டு அதே காலத்தில் அந்த ரிபோர்ட்டின் ஒரு நகலை அனுப்பவேண்டும். அதன் மேல், லோகல் போர்டார் - டிஸ்ட்ரிக்ட் கலெக்டருடைய ரிபோர்ட்டில் கண்ட விஷயங்களைக்குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு எழுத அர்ஹரர்வார்கள்.

குறிப்பு.

செ. 39 (1). **ஜனங்களின் பத்திரத்திற்கு அவசியமானது.**—ஜனங்களின் பத்திரத்திற்கு அவசியமானதா என்பதை முதலில் கவனிக்கவேண்டும். பத்திரமென்பது பலவித பொருள்படும்; அபாயம் அல்லது இடையூறிலிருந்து நிவர்த்திப்பது என்றும் பொருள்படும். அத்தியாவசியம் என்ற காரணத்தினலேயேஜில்லா கலெக்டர் லோகல் போர்டின் திரவியத்தை எல்லா விஷயத்திற்கும் செலவு செய்யக்கூடாது.

40. [மதராசு 1930-ஞூத்திய 11-வது ஆக்டினல் ரத்து செய்யப்பட்டது.]

டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது அதன் ப்ரெஸிடென்டாவது தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்தப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

41. (1) இந்த ஆக்டினலாவது வேறே யாதொரு ஆக்டினலவது இந்த ஆக்டின்படியாவது வேறே யாதொரு ஆக்டின்படியாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு அலுவலை யாதொரு லோகல் போர்டாராகிலும் அதன் ப்ரெஸிடெண்டாகிலும் நிறைவேற்றத் தவறிப்போயிருக்கிருர்களென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்கு எப்போதாவது தோற்றினல், அவர்கள் - அந்த அலுவலை நிறைவேற்றுவதற்காக எழுதிய உத்தரவு மூலமாய் ஒரு கால அளவை நிச்சயிக்கலாம்.

(2) அப்படி நிச்சயிக்கப்பட்ட கால அளவுக்குள் அந்த அலுவல் நிறைவேற்றப்படாவிட்டால், அதை நிறைவேற்றும்படி பிரதேச கவர்ன்மெண்டார் ஒருவரை நியமித்து, அதை நிறைவேற்றுவதற்குண்டான செலவைத் தாங்கள் நிச்சயிக்கக்கூடிய காலத்திற்குள் லோகல் போர்டார் லோகல் பண்டிலிருந்து அப்படிப்பட்டவருக்குச் செலுத்த வேண்டுமென்று உத்தரவு பண்ணலாம்.

(3) லோகல் பண்டிலிருந்து கொடுக்கும்படி(2)குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு பண்ணிருக்கும் செலவுத்தொகை அந்தப்படி செலுத்தப்படாத பட்சத்தில், பிரதேச கவர்ன்மென்டாருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர்-வாங்கும் படி அதிகாரம் கொடுத்திருக்கும் கடன்களை வாங்கி உபயோகிப்பதற்காகப் பிடிக்கும் செலவுகள் தவிர லோகல் பண்டின்மேல் ஏற்பட்டிருக்கிற கடன் முதலிய வேறே எந்த பொறுப்புக்கும் முன்னதாய் அப்படிபட்ட செலவைச் செலுத்தும்படி மேற்படி பண்டு பணம் யார் வசத்திலிருக்கிறதோ அந்த நபருக்கு உத்தரவு பண்ணலாம்.

(4) அந்த நபர் - லோகல் போர்டுக்கு வரவாக வைத்திருக்கிற பணத்திலிருந்து கொடுக்கக்கூடிய மட்டில், அந்த உத்தரவின் படி நடந்துக்கொள்ளக் கடமைப்பட்டவராவார்.

தாலூகா போர்டுகளும் பஞ்சாயத்துகளும் அவைகளின் ப்ரெசிடெண்டுகளும் தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்த டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெசிடெண்டுக்கும் தாலூகா போர்ட் ப்ரெசிடெண்டுக்கும் உள்ள அதிகாரம்.

42. 41-வது பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டாருக்கும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை, அந்த பிரிவில்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து—

(a) தாலூகா போர்டுகளின் விஷயத்திலாவது அவைகளைச் சேர்ந்த ப்ரெஸிடெண்டுகளின் விஷயத்திலாவது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டும்,

(b) பஞ்சாயத்துகளின் விஷயத்திலாவது அவைகளைச் சேர்ந்த ப்ரெஸிடெண்டுகளின் விஷயத்திலாவது தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டும் செலுத்தலாம் :

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டாருக்கும் டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படுகிற பட்சத்திலே, பிரதேச கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயமே செலாவணியாகும்.

லோகல் போர்டின் ப்ரெசிடெண்டையோ வைஸ் ப்ரெசிடெண்டையோ நீக்கிவிடுவதற்குப் பிரதேசகவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

43. (1) எந்த லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டாவது வைஸ் ப்ரெஸிடெண்டாவது இந்த ஆக்டிலாயினும் அதன்படி பிறப்பிக்கப்பட்ட எவையேனும் விதிகள், சகாயசட்டங்கள், ரெகுலேஷன்கள் அல்லது சட்டசம்மதமான உத்தரவுகளிலாயினும் கண்ட நிபந்தனைகளை வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறாரென்றாகிலும் நிறைவேற்ற மறுக்கிறாரென்றாகிலும் அவைகளை மீறி நடக்கிறாரென்றாகிலும், அல்லது தம்மிடத்தில் சங்கிரமித்திருக்கும் அதிகாரங்களை துர்வினியோகம் செய்கிறாரென்றாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்-விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக ஷை ப்ரெஸிடெண்டையோ வைஸ்-ப்ரெஸிடெண்டையோ நீக்கி விடலாம்.

(2)(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்த பிரதேச கவர்ன்மெண்டார் உத்தேசிக்கும்போது, அவர்கள்-சமாதானம் சொல்வதற்கு சம்பந்தப்பட்ட ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ்ப்ரெஸிடெண்டுக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்; மேலும், நடத்தப்பட்ட நடவடிக்கைக்குப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள காரணங்களைப்பற்றிய ஒரு குறிப்பு ஷை உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் விளம்பரத்தில் அடங்கியிருக்கவேண்டும்.

லோகல் போர்டின் ப்ரெசிடெண்ட் அல்லது வைஸ்ப்ரெசிடென்டினிடத்தில் நம்பிக்கையில்லை என்னும் பிரேரேபனை.

44. (1) அடியிற்கண்ட நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த எந்த மெம்பராகிலும் அந்த போர்டின் ப்ரெஸிடென்டினிடத்திலோ வைஸ்-ப்ரெஸிடெண்டினிடத்திலோ நம்பிக்கையில்லை என்று கண்டு ஒரு பிரேரேபனை செய்யலாம்; அந்த நிர்பந்தங்கள் எவையென்றால் :—

(a) அன்றைய தினக்கூட்ட விஷயக்குறிப்பில் கண்ட வேலை தொடங்கப்படுவதற்குமுன் பிரஸ்தாப பிரேரேபனையைச் செய்வதற்காக போர்டாரின் அனுமதி கேட்கவேண்டும்.

(b) அனுமதி கேட்கும் மெம்பரானவர்-அனுமதி கேட்கும் காலத்தில் தாம் செய்ய உத்தேசிக்கும் பிரேரேபனையைப் பற்றி எழுத்துமூலமான ஒரு நோடீஸை அக்கிராசனம் வகிக்கும் நபரிடத்தில் கொடுக்கவேண்டும்.

(2) அதன்மேல் அக்கிராசனம் வகிக்கும் நபர்-அந்த பிரேரேபனையை போர்டாருக்குப் படித்துக்காட்டி, அனுமதி கொடுப்பதற்கு அனுகூலமாயிருக்கும் மெம்பர்களை அவர்களுடைய ஸ்தானங்களில் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்ளவேண்டும். போர்டில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்திரவாயிருக்கிறதோ அந்த சங்கியையில் மூன்றிலொரு பங்குக்குக் குறைவாயுள்ளவர்கள் அப்படி எழுந்து நின்றால், அக்கிராசனம் வகிக்கும் நபர்-போர்டார் அனுமதி கொடுக்கவில்லையென்று ஷை மெம்பருக்குத் தெரிவிக்கவேண்டும். போர்டில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அந்த சங்கியையில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாதவர்கள் எழுந்துநின்றால், அக்கிராசனம் வகிக்கும் நபர் - அனுமதி கொடுக்கப்படுவதாகவும், தாம் ஏற்படுத்தக்கூடிய தினத்திலும் காலத்திலும் பிரஸ்தாப பிரேரேபனை (விவாதத்துக்கு) எடுத்துக்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கவேண்டும். அப்படி ஏற்படுத்தப்படும் தினமானது-எந்த தினத்தில் அனுமதி கேட்கப்படுகிறதோ அதிலிருந்து—

(a) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்ட் விஷயத்தில், ஸ்பஷ்டமாய் பத்து தினங்களுக்குக் குறையாமலும் ஸ்பஷ்டமாய்ப் பதினைந்து தினங்களுக்கு மேற்படாமலும்,

(b) யாதொரு பஞ்சாயத்து விஷயத்தில், ஸ்பஷ்டமாய் ஆறு தினங்களுக்குக் குறையாமலும் ஸ்பஷ்டமாய்ப் பதினைந்து தினங்களுக்கு மேற்படாமலும்

இருக்கவேண்டும்.

(3) இந்த பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு பிரேரேபனையின்மேல் நடக்கும் எந்த விவாதத்தையும் தள்ளிவைக்கக்கூடாது. அப்படிப்பட்ட விவாதமானது - அதைத் தொடங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மணிநேரத்துக்குமுன் முடிவடையாவிட்டால், அந்த மூன்று மணிநேரம் கழிந்துபோவதன்மேல் தானாகவே முடிவடையும். சந்தர்ப்பத்துக்கேற்றபடி விவாதம் முடிவடைவதன்மேலாவது ஷை மூன்று மணி நேரம் கழிந்துபோவதன்மேலாவது, அந்தப் பிரேரேபனையை போர்டின் அபிப்பிராயத்துக்கு விடவேண்டும்.

(4) (a) போர்டில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அந்த சங்கியையில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாதவர்களின் ஆதரவுபெற்று ஷை பிரேரேபனை நிறைவேறினால், சந்தர்ப்பத்துக் கேற்றபடி ப்ரெஸிடெண்டாவது வைஸ்-ப்ரெஸிடெண்டாவது தம்முடைய உத்தியோகத்தை உடனே காலி செய்துவிட்டதாக எண்ணப்படுவார்.

(b) ஷை பிரேரேபனை நிறைவேறியிருந்தும் மேலேகண்ட அளவுக்குப் பெரும்பான்மையோர் அதற்கு ஆதரவு அளிக்காமற் போகிற பட்சத்திலும் ஒரு மாதத்துக்குக் குறையாத இடைக்காலம் கழிந்த பிறகு அதே ப்ரெஸிடெண்டினிடத்திலாவது வைஸ்-ப்ரெஸிடெண்டினிடத்திலாவது நம்பிக்கையில்லையென்று கண்டு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வேறொரு பிரேரேபனை கொண்டுவரப்பட்டு அது போர்டாரால் நிறைவேற்றப்படுகிற பட்சத்திலும், அவர் தம்முடைய உத்தியோகத்தை உடனே காலி செய்துவிட்டதாக எண்ணப்படுவார்.

குறிப்பு.

செ. **44 (புது)**—போது—செ. 12 படி ஒவ்வொரு லோகல் போர்ட் பிரசிடெண்டும், வைஸ்-பிரசிடெண்டும், அந்த லோகல் போர்ட் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

43-வது செக்ஷனில் கண்ட காரணங்களால் பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) பிரசிடெண்டையும், வைஸ்-பிரசிடெண்டையும் நீக்க அதிகாரமுடையவர். பிரசிடெண்டாவது, வைஸ் பிரசிடெண்டாவது திருப்திகரமாய் நடந்துகொள்ளாமல்போனால் அவர்களை நீக்க அந்த போர்டுக்கு அதிகாரமுண்டு. அதற்கு இந்த செக்ஷனில் கூறியுள்ளபடி லோகல் போர்ட் சபையில் "நம்பிக்கை இல்லாத" தீர்மானம் கொண்டுவரவேண்டும். பிரசிடெண்டிற்கு மெஜாரடி யில்லாத காலத்தில் பரிபாலனத்தில் உண்டாகும் முட்டுக்கட்டையை ஒழிக்க இந்த செக்ஷன் ஏற்பட்டிருக்கிறது. அந்த போர்டிக்கு ஏற்பட்டிருக்கும் சங்கியையில் $\frac{2}{3}$ மெஜாரிடியால் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறினால் அந்த பிரசிடெண்டை பிரதேச கவர்ன்மெண்டார் நீக்கிவிட கடமைபட்டிருக்கிறார். சிறிய மெஜாரிடியால் நிறைவேற்றப் பட்டால், அந்த போர்டின் நிர்வாகத்தை அனுசரித்து பிரதேச கவர்ன்மெண்டார் பிரசிடெண்டை நீக்கவும் அதிகாரமுண்டு. [இ. பு. ப. 239]

விஷய குறிப்பில் கண்டவேலை தொடங்கப்படுவதற்கு முன்.—போர்டின் அனுமதியைக்கோரும் மெம்பர் உஷாராகவும், தீர்மானத்தை தயாராகவும் வைத்துக்கொண்டிருக்க வேண்டும் தீர்மானத்தைக் கொண்டுவருபவரின் நோக்கத்தை தோர்க்கடிக்க வேண்டுமென்று, பிரசிடெண்ட் அவசர அவசரமாய் அன்றைக்கு ஆலோசனைக்கிருக்கும் விஷயங்களை எடுத்து சபையை ஆரம்பித்தால், அங்குள்ள மெம்மர்கள் அதை ஆக்ஷேபித்து இந்த ஆக்டில் சொல்லியுள்ள விதிகளுக்கு மாறுதலாகவும், அவைகளை அலக்ஷயம் செய்வதாகவும் அதற்காகசெ. 43-வது படி பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) அவரை நீக்க பிரதேச கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்வதாக கூறி ரிபோர்ட் செய்யலாம். பிரதேச கவர்ன்மெண்டாரும் (மதராஸ் கவர்ன்மெண்டாரும்) பிரசிடெண்டை நீக்கிவிடலாம். [இ. பு. ப. 240]

செ. 44 (3). **விவாதம்.**—நம்பிக்கையில்லாதத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டோ, தோற்கடிக்கப்பட்டோ போகவேண்டும். அந்த விஷயத்தை விட்டு அடுத்த விஷயத்தின் பரிசீலனைக்கு போகும்படி பிரசிடெண்டையோ அல்லது அக்கிராசனம் வகிக்கும் மெம்பரையோ கேட்கமுடியாது. சரியாய் பார்த்தால் அந்த சபையில் இந்த ஒரு விஷயம் தவிர வேறு விஷயம் விவாதத்திற்கு இருக்கக்கூடாது. அந்த சபை இந்த ஒரு விஷயத்திற்கு மட்டும் கூட்டப்பட்டிருக்கவேண்டும். அந்த தீர்மானம் திருத்தப்படவும், ஒத்திவைக்கப் படவும் கூடாது. [இ. பு. ப. 240]

லோகல் போர்டுகளை கலைத்து விடுவதும் மறுபடி அமைப்பதும்.

45 (1) யாதொரு லோகல் போர்டார் சட்டப்படி தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்யத் தகுதியற்றவர்களாயிருக்கிறார்களென்றாவது, அந்தக் கடமைகளைச் செய்வதில் பிடிவாதமாய்த் தவறிக்கொண்டிருக்கிறார்களென்றாவது தங்களுடைய அதிகாரங்களை மீறிப்போகிறார்களென்றாவது துர்விநியோகஞ் செய்கிறார்என்றாவது பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்-நிர்ணயிக்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக போர்டைக் கலைத்துவிட்டு உடனே மறுபடியும் அமைக்கும்படி கட்டளையிடலாம். எந்த காலத்துக்குள் அந்த போர்ட் மறுபடியும் அமைக்கப்படவேண்டுமோ அந்த காலத்தை ஷெ விளம்பரத்தில் குறிப்பிடவேண்டும் :

ஆனால், கலைத்துவிடப்பட்டிருக்கும் யாதொரு லோகல் போர்டுக்கு எலெக்ஷன்கள் நடத்துவதைப் பூர்த்திசெய்யும் காரியத்துக்காக, பிரதேச கவர்ன்மென்டார்-அந்த போர்டை மறுபடியும்அமைப்பதற்காக இந்த உட்பிரிவின்படி தங்களால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்தை, தங்களுக்கு யுக்கமாகத் தோற்றினால், அப்போதைக்கப்போது அதிகப்படுத்தலாம்.

(1-A) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பர பிரசுரிப்பதற்கு முன், பிரதேச கவர்ன்மென்டார- சம்மந்தப்பட்ட லோகல் போர்ட்டுக்கும், யாதொரு தாலூகா போர்ட் விஷயத்தில் டிஸ்ரிக்ட் போர்டுக்கும், யாதொரு பஞ்சாயத்து விஷயத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் தாலூகா போர்டுக்கும் தாங்கள் என்ன காரணங்களைக் கொண்டு அப்படி செய்ய உத்தேசிக்கிருக்கிறார்களென்பதைத் தெரிவித்து, உத்தேசிக்கப்பட்டபடி ஏன் செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்காக போர்ட் அல்லது போர்டுகளுக்கு நியாயமான ஒரு காலம் நிஷ்கரிஷை செய்து, அந்த போர்ட் அல்லது போர்டுகள் சொல்லும்

எவையேனும் சமாதானங்களையும் ஆட்சேபனைகளையும் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

(2) இப்படிப்பட்ட யாதொரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதன் மேல், ஷை லோகல் போர்டின் பிரஸிடென்டும், வைஸ்பிரஸிடெண்டும் உட்பட அதை சேர்ந்த மெம்பர்களெல்லாம் - அப்படிப்பட்ட மெம்பர்களாக தங்களுடைய ஸ்தானங்களை உடனே காலிசெய்து விட்டதாக எண்ணப்படுவார்கள்; மேலும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி புதிய எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(2-A) மறுபடியும் அமைக்கப்பட்ட லோகல் போர்டுக்குத் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களின் அல்லது தற்செயலாய் நேரிட்ட காலி ஸ்தானங்களில் அவர்களுக்குப் பர்த்தியாகத் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களின் உத்தியோக காலமானது - யாதொரு வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் ஷை போர்ட் மறுபடியும் அமைக்கப்படும் பட்சத்தில் மூன்று வருஷ முடிவிலும், மற்ற விஷயங்களில் அது மறுபடியும் அமைக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முந்தியுள்ள நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று வருஷ முடிவிலும் முடிவாகும் மேலும்,

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் உத்தரவு செய்யப் பட்டபடி யாதொரு லோகல் போர்டைக் கலைத்துவிடுவதற்கும் மறுபடியும் அமைப்பதற்கும் இடையிலுள்ள யாதொரு காலத்தில், லோகல் போர்டுக்கும் அதன் ப்ரெஸிடெண்டுக்கும் உள்ள அதிகாரங்கள் அலுவல்கள் ஆகிய இவைகள் எல்லாவற்றையுமாவது இவைகளில் எதையாவது கூடுமானமட்டிலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிச்சயிக்கப்படக்கூடிய அளவுக்கும் இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் நபர் அல்லது நபர்கள் செலுத்தலாம், நிறைவேற்றலாம்; மேலும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டராகவோ ரெவின்யூ டிவிஷன் ஆபீஸராகவோ இராத அப்படிப்பட்ட யாதொரு நபர் - பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற பட்சத்திலே, தாம் செய்யும் வேலைக்காக லோகல் பண்டிலிருந்து தொகை பெற்றுக்கொள்ளலாம்.

45-A. பஞ்சாயத்துகள் நிராகரிக்கப் படுவது.

(1) 45-வது பிரிவைச் சேர்ந்த (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள சகல காரணங்களுக்குமாவது அவைகளில் யாதொன்றுக் காவது பிரதேச கவர்ன்மெண்டார் - யாதொரு பஞ்சாயத்தைக் கலைத்து விட்டு மறுபடியும் அமைப்பதற்குப் பர்த்தியாக, நிர்ணயிக்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஒரு வருஷத்துக்கு மேற்படாமல் குறிப்பிடப்பட்ட ஒரு கால அளவுக்கு அதை நிராகரித்துத் தாங்களே காரியம் நடத்தலாம்:

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் பஞ்சாயத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் நிராகரிக்கக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பரம் பிரசுரிப்பதற்கு முன், பிரதேச கவர்ன்மெண்டார் - 45-வது பிரிவைச் சேர்ந்த (1A) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட நடவடிக்கை முறையை அனுசரிக்கவேண்டும்.

(3) யாதொரு பஞ்சாயத்தை நிராகரிப்பதானது - ஷை விளம்பரத்தில் வேறே எந்த தேதியும் காலமும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராதபட்சத்திலே, அந்த விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்ட தேதியன்று மத்தியானம் முதல் செலாவணியாகத் தொடங்கவேண்டும்; அதன்மேல் பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டும் வைஸ்-ப்ரெஸிடெண்டும் உட்பட அதைச் சேர்ந்த சகல மெம்பர்களும் தங்களுடைய உத்தியோகங்களை உடனே காலி செய்துவிட்டதாக எண்ணப்படுவார்கள்.

(4) எவ்வளவு காலத்துக்கு (பஞ்சாயத்தை) நிராகரித்துப் பிரவர்த்திக்கப்போவதாக (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதோ அந்த காலம் கழிந்துபோவதன்மேலாகிலும் அதற்கு முன்பாகிலும், பிரதேச கவர்ன்மென்டார் - நிர்ணயிக்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, பஞ்சாயத்தை மறுபடியும் அமைப்பதை இன்னும் ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துத் தள்ளிவைக்கலாம், அல்லது இந்த ஆக்டில் என்ன சொல்லிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பஞ்சாயத்தின் விஸ்தீர்ணத்தை இந்த ஆக்டின் பிரயோகத்தினின்றும் விலக்கிவிடலாம், அல்லது ஷை விஸ்தீர்ணத்தை கிராமமென்று நிர்ணயித்து 5-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தை ரத்துசெய்யலாம்; அப்படி செய்வதற்கான காரணங்களை ஷை விளம்பரத்தில் காணவேண்டும்

(5) 45-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - சாத்தியமானவரையில், (1) அல்லது (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்தை நிராகரித்துப் பிரவர்த்திக்கும் காலத்திலே, பஞ்சாயத்து, அதன் ப்ரெஸிடெண்ட் ஆகிய இவர்களின் சகல அதிகாரங்களையும் கடமைகளையுமாவது அவைகளில் யாதொன்றையாவது செலுத்துவது விஷயமாகவும் நிறைவேற்றுவது விஷயமாகவும் பிரயோகப்படும்.

(6) பிரதேச கவர்ன்மென்டார் - (1) அல்லது (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அறிக்கையிடப்பட்ட காலம் கழிவதற்குமுன் பஞ்சாயத்தை மறுபடியும் அமைக்கலாம்.

(7) மறுபடியும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் அல்லது தற்செயலாய் நேரிட்ட காலி ஸ்தானங்களில் அவர்களுக்குப் பர்தியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உத்தியோக காலமானது - யாதொரு வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் ஷை பஞ்சாயதது மறுபடியும் அமைக்கப்படும் பட்சத்தில் மூன்று வருஷ முடிவிலும், மற்ற விஷயங்களில் அது மறுபடியும் அமைக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முந்தியுள்ள நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று வருஷ முடிவிலும் முடிவாகும்.

45-B. 45-வது பிரவின்படி யாதொரு லோகல் போர்ட் கலைத்துவிடப்படும்போதாவது 45-A பிரவின்படி யாதொரு பஞ்சாயத்து நிராகரித்துவிடப்படும்போதாவது, அது மறுபடியும் அமைககபபடும் தேதிவரையில் பிரதேச கவர்ன்மெண்டாரும் அதற்குப் பிறகு மறுபடியும் அமைக்கப்பட்ட போர்ட் அல்லது பஞ்சாயித்தும் - முறையே அந்த போர்ட அல்லது பஞ்சாயத்து கலைத்துவிடப்பட்ட அல்லது நிராகரித்துவிடப்பட்ட தேதியிலும் மறுபடியும் அமைக்கப்பட்ட தேதியிலும் இருந்தபடி அதன் சகல ஆஸ்திக்கும் பாத்தியதை உடையவர்களாகி அதன் சகல பொறுப்புகளுக்கும் உள்ளாகவேண்டும்.''

குறிப்பு.

சே. **45**. போது—கலைத்துவிட.—ஒரு அமைப்பை, மறுபடி திருத்தி அமைக்க ஏதுவில்லாமல் கலைத்துவிடுவதாவது அந்த அமைப்பை அடியோடு ஒழித்துவிட எத்தனித்ததாகும். அதற்கு கொடுத்திருக்கும் ஓட்டு உரிமையை எடுத்து, அதன் அதிகாரத்தை ஒழித்து அதற்கு ஏற்பட்டிருக்கும் அலுவல்களை குலைத்து, அதை நடைபெற விடாமல் செய்ததுபோலாகும். அதிலுள்ள உத்தியோக முறைமையைப் போக்கி அதன் சொத்துக்களை, ராஜாங்க சொத்துக்களாக பாவிக்கப்படும். அவைகள் கலைக்கப்படுவதினுலோ அல்லது திருத்தி அமைக்கப்படுவதினுலோ, அதன் கடன்காரர்களையும் அல்லது நிபந்தனைகளின்பேரில் கன்டிராக்ட் ஒப்பந்தம் செய்துகொண்டவர்களையும் பாதிக்காது. பழைய அமைப்பைப் பின்பற்றிய புதிய அமைப்பு அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். (துரைசாமி அய்யங்காரின் கார்பொரேஷன் சட்டம். 19-வது பக்கம்) (செக் 45 பி பார்க்கவும்) [இ. பு. ப. 242]

"**கலைத்துவிடப் படுதலுக்கும், எடுத்துக்கோள்ள படுதலுக்கும் உள்ள வித்தியாசம்.**"—லோகல் போர்டுகளை பரிபாலிப்பதற்காக பிரதேச கவர்ன்மெண்டாரால் (மதராஸ் கவர்ன்மெண்டார்) ஏற்படுத்தப்படும் உத்தியோகஸ்தர், பரிபாலிக்கும் கால அளவில் வித்தி

யாசமே ஒழிய வேறுவித வித்தியாசவில்லை. (1) கலைத்துவிடப்படும் விஷயத்தில், அது மறுபடி அமைக்கப்படும் காலத்தை பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) குறிப்பிட்டாக வேண்டும்; எடுத்துக் கொள்ளப்படும் விஷயத்தில், எப்போது ஏற்றுக்கொள்ளப் படும் என்னும் காலத்தைக் குறிக்கவேண்டுமே ஒழிய, அவ்வளவு காலம் ஏற்றுக்கொள்ளப்படு மென்பதுவும், எப்போது திருத்தி அமைக்கப்படுமென்பதுவும் குறிப்பிடவேண்டிய அவசிய மில்லை. (2) கலைக்கப்படும் விஷயத்தில் திருத்தி அமைக்கப்படவேண்டிய காலம் 6 மாதத் திற்கு மேற்படக்கூடாது (செ. 240 பார்க்கவும்). "எடுத்துக் கொள்ளப்படும்" விஷயத்தில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றகாம் 1½ வருஷகாலம் வரையில் தள்ளி வைக்கலாம் [இ· பு· ப. 243]

செ. **45-A (1), (3 and 4)**.—கலைத்துவிடப் படுதலில் பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) அதை சீக்கிரத்தில் திருத்தி அமைப்பதை கருதுவார்கள், கிரகரிக் கப் படுதலில், வேலை சரிவர நடக்க பக்குவமான காலம் வரும்வரையில் பொறுத்து அமைக்கவேண்டும். [இ· பு· ப· 243]

செ. **45 (1-A)**. போது.—லோகல் போர்டை, பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) கலைக்க எத்தனிக்கு முன் (1) அது சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு முதலில் அறிவிக்கவேண்டும், தாலூகா போர்ட் விஷயத்தில், ஜில்லா போர்டும், பஞ்சாயத்து விஷயத்தில் தாலூகா போர்ட், ஜில்லா போர்ட்டுகளும், குறிப்பிட்டிருக்கும் ஒன்று அல்லது பல காரணங்களால் கலைக்கப்படவேண்டுமானுல் அந்த காரணங்களை குறிப்பிடவேண்டும்; (2) தக்க சமாதானம் ஆலோசனைகளை சொல்லிக்கொள்ள போதுமான அவகாசம் கொடுக்கப் படவேண்டும். [இ· பு· ப. 243]

செ· **45 (2-A)**· **இந்த சேக்ஷன்கீழ் மெம்பர்களின் உத்தியோக காலம்**.—திருத்தி அமைக்கப்படும் லோகல் போர்டுகளின் தேர்தல்கள் நவம்பர்மீ முதல் தேதி முதல் அமுலுக்கு வரவேண்டியிருந்தால் மெம்மர்களின் ஸ்தானம் 3 வருஷம் வரை இருக்கும். நவம்பர் 1வக்குப் பிறகு தேர்தல் நடந்தால் அதற்குமுன் வந்த நவம்பர் மாதம் முதற்கொண்டு தேர்ந்தெடுக்கபபட்டதாக கருதப்படும். அக்டோபர்மீ 31௳ தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர் ஸ்தானம் முன் நவம்பரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படும். [இ· பு· ப· 244]

செ· **45 (A)**· போது.—பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) ஒரு முனிசிபாலிடியின் பரிபாலனத்தைஏற்றுக் கொண்டால் அக்காலத்திலிருக்கும் கௌன்சிலர்கள் தங்கள் பதவியை இழந்தவராவார்கள். ஆனுலும் முனிசிபாலிடியின் பரிபாலனம் மட்டும் நடை பெற்றுவரும் கலைக்கப்பட்டது போலில்லாமல் குறிப்பிட்டிருக்கும் காலம் வரையில் பரிபால னம் பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) ஏற்றுக்கொள்ளப்படும். திருத்தி அமைக்கப்பட்ட கௌன்சல் ஏற்றுக் கொள்ளப்படும் முன் அதற்கு இருந்த லாபலோபங்கள் புதிதாக அமைக்கப்பட்ட கௌன்சலுக்குச் சேரும். பிரதேச கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் அதன் வரவுகளையும், கடன்களையும் செ. 45 பி, 235 படி பரி பாலிக்கவேண்டும். அக்காலத்தில் அப்போர்டின் பரிபாலனத்தை நடத்த பிரதேச கவர்ன் மெண்டாரில் (மதராஸ் கவர்ன்மெண்டார்) நியமிக்கப்பட்டவர் வியாஜ்ஜியம் தொடரவோ, தொடரப்படவோ பாத்தியதை யுள்ளவர் ஆவர். நோடீஸ் கொடுக்கவேண்டி யிருந்தால் இந்த ஆக்ட் செ. 225படி கொடுக்கப்பட வேண்டுமே யொழிய சிவில் ப்ரொசீஜர் கோர்ட் 80.வது விதிப்படி, லோகல் போர்டில் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் பிரதேச கவர்ன்மெண் டுக்கு கொடுக்கப்பட வேண்டியதில்லை. [இ· பு· ப· 245]

லோகல் போர்டுக்காவது அது தவறுவதன் மேலாவது பிரவர்த்திக்கிற உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் லோகல் பண்டின் பொறுப்பும்.

46· (1) டிஸ்ட்ரிக்ட் கலெக்டராவது பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட நபராவது இந்த ஆக்டின்படி யாதொரு லோகல் போர்டின் சார்பிலாகிலும் அது தவறுதன் மேலாகிலும் சட்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்தும்பொழுது, அந்தக் காரியத்துக்கு - அவசியமாயிருக்கும் சகல அதிகாரங்களும் அவ ருக்குண்டு; மேலும், எந்த லோகல் போர்டாரின் அல்லது அதன் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களின் அதிகாரங்களை அவர் செலுத்துகிறாரோ அந்த லோகல் போர் டாருக்காவது உத்தியோகஸ்தர்களுக்காவது ஊழியக்காரர் களுக்காவது இந்த ஆக்டின்படி என்ன பாதுகாப்பு உண்டோ அதே பாதுகாப்பைப் பெற அவரும் பாத்தியத்தையுடையவராவார்; அல்லாம லும், அப்படிப்பட்ட அதிகாரங்களை செலுத்துவதனுல் சேதம் அடையும் யாதொரு

நபர் ஷை லோகல் போர்டாராலாவது அதன் உத்தியோகஸ்தர்களாலாவது ஊழியக்காரர்களாலாவது அந்த நடவடிக்கை நடத்தப்பட்டிருந்தால் எவ்வளவு பிரதிபலன் பெறக்கூடுமோ அவ்வளவு லோகல் பண்டிலிருந்து வசூலிக்கத்தக்கவராவார்.

(2) 42-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்துகிற யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டாவது அவரால் நியமிக்கப்படும் யாதொரு நபராவது - (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட அதிகாரங்களை செலுத்தவும் அதிற்கண்ட பாதுகாப்பு பெறவேண்டுமென்று கேட்கவும் அர்ஹராவார்.

4-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளின் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதும்.

டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பது.

47. (1) யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்காக, பிரதேச கவர்ன்மெண்டார்-டிஸ்ட்ரிக்ட் போர்டோடு கலந்து ஆலோசித்த பிறகு, விள்ம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

(a) அந்த டிஸ்ட்ரிக்ட்டை ஸர்க்கில்களாக (வட்டங்களாக) ப் பிரிக்க வேண்டும்;

(b) 9-வது பிரிவைச் சார்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஸ்தானங்கள் எவையேனும் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தால் இன்ன ஸர்க்கில்களில் அந்த ஸ்தானங்களைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்று நிச்சயிக்க வேண்டும்; மேலும்,

(c) இன்னாருக்கு அந்த ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனவென்று பிரசித்தம் செய்யவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்ட ஸர்க்கில்களில் இருப்பவர்கள் - மேலேகண்ட ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதுடன்கூட, ஒதுக்கிவைக்கப்பட்டிராத ஸ்தானங்களுக்கு ஒரு மெம்பரையோ பல மெம்பர்களையோ தெரிந்தெடுக்கவும் வேண்டும். அப்படிப்பட்ட மெம்பர்களின் சங்கியையைப் பிரதேச கவர்ன்மெண்டார் அறிக்கையிடவேண்டும். மற்ற சகல ஸர்க்கில்களும் ஒரே ஒரு மெம்பரைத் தெரிந்தெடுக்க அர்ஹதை உள்ளவைகளாகும்.

(3) யாதொரு ஸர்க்கிலுள்ள தெரிந்தெடுப்பவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி, புருஷர்களாயிருந்தாலுஞ்சரி ஸ்திரீகளாயிருந்தாலுஞ்சரி, அவர்கள் எல்லோரும் - அந்த ஸர்க்கில் ஒதுக்கிவைக்கப்பட்டோ ஒதுக்கிவைக்கப்படாமலோ இருக்கும் யாதொரு ஸ்தானத்துக்கு நடத்தப்படும் எலெக்ஷனில் வோட் கொடுக்க அர்ஹதை உள்ளவர்களாவார்கள்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக யாதொரு டிஸ்ட்ரிக்ட் எற்கனவே ஸர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டிருப்பது முக்கியாம்சத்தில் மாற்றப்பட்டால், அந்தப்படி மாற்றியிருப்பது அடுத்த சாதாரண எலெக்ஷன்கள் நடக்கும் தேதியிலிருந்து செலாவணியாகத் தொடங்க வேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடவேண்டும்.

(5) யாதொரு ஸர்கிலினால் தெரிந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும், புதிதாய் ஒரு ஸர்க்கில் எற்படுத்தப்பட்டாலும், ஏற்கனவே உள்ள ஒரு ஸர்க்கில் எடுத்துவிடப்பட்டாலும், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர்-பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கிகாரத்தைப் பெற்று,—

(a) டிஸ்ட்ரிக்ட் போர்டில் அப்போதிருக்கும் ஒவ்வொரு மெம்பரும் இன்ன ஸர்க்கிலின் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்றும்,

(b) டிஸ்ட்ரிக்ட் போர்டில் காலி ஸ்தானங்கள் எவையேனும் இருந்தால் அவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இன்ன ஸர்க்கில் அல்லது ஸர்க்கில்களில் எலெக்ஷன்கள் நடத்தப்படவேண்டுமென்றும் நிச்சயிக்கவேண்டும்.

குறிப்பு.

செ. 47. எலெக்ஷன் பொது விதிகள் கவர்ன்மெண்டின் நோக்கம்.—ஓட்டு உரிமையை அதிகப்படுத்தி, எவ்வளவு பெயர்களை ஓட்டர்களாகச் சேர்க்கலாமோ அத்தனை மனிதர்களை ஓட்டர்களாக்குவது புதிய கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஆக்டின் நோக்கம். எல்லா வகுப்பினர்களுக்கும் தொழிலுள்ளவர்களுக்கும் போதுமான ஸ்தானம் சட்ட சபையில் இருக்கவேண்டுமென்பது சீர்திருத்த மசோதாவின் முக்கிய கருத்து. [இ. பு. ப. 248]

எலெக்ஷன் முறை.—ஓட்டு உரிமை அளிக்கப் பெற்றவர்கள், யார், நிற்கும் அபேக்ஷகர்களுள் ஓட்டு உரிமையை அடைய அருகதையுடையவர் என்று ஆய்ந்து அறிந்து தக்கவருக்கே ஓட்டை கொடுக்கவேண்டுமென்பது எலெக்ஷன் சட்டத்தின் தாத்பரியம்.

அதன் நியாயதத்துவம்.—சட்ட சபைகளுக்கோ, முனிசிபாலிடிகளுக்கோ அல்லது பொதுஸ்தாபனங்களுக்கோ, எலெக்ஷன் சட்டப்படி மெம்பர்களை தேர்ந்து எடுப்பதென்பது 'எலெக்ஷண' என்னும் வார்த்தைக்கு இ.பி.கோ. (இன்டியன் பினல் கோட்) செ. 21 (3) யைப் பார்க்கவும். இந்த பொருளே, சரியான அர்த்தமாகும். இம்மாதிரியான சரியான எலெக்ஷனே அந்த பதவியை அளிக்கும். எலெக்ஷன், நேமகம், ஓட்டு எடுப்பது இரண்டையும் குறிக்கும். ஓட்டு எடுத்த பிறகோ அதற்கு முன்னோ ஒரு மெம்பர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக முடிவு கூறினால், நேமகச் சீட்டு வாங்கும் முதல் முடிவு கூறும் வரையிலுள்ள எல்லா விஷயங்களையும் குறிக்கும். (ஸ்ரீனிவாசலு எ. குப்புசாமி, A.I.R. 1928 Mad. 253 = 1927 M.W.N. 876.) [இ. பு. ப. 249]

ஓட்டு உரிமை.—அரசர் பெருமானால் குடிமக்களுக்கு அளிக்கப்படும் ஓர் பாத்தியதை என்று பிராக்ஸ்டன் என்பவர் ஓட்டு உரிமையைப்பற்றி கூறியிருக்கிறார். சில சமயங்களில் 'சுயேச்சை' என்னும் பொருளும்படும். தேர்தல் சம்பந்தமாக ஓட்டு உரிமை என்பது தேர்தல்களில் ஓட்டு கொடுக்கும் பாத்தியதையும், அப்பாத்தியதைக்கு உண்டான யோக்கியதைகளையும் குறிக்கும். [இ. பு. ப. 250]

வாக்குசீட்டினால் தேர்ந்தெடுத்தல்.—வாக்கு சீட்டில்லாமல் ஒரு தொகுதியுள்ளவர்கள் ஏகோபித்து கூட்டம் கூடியோ, கைகளை உயர்த்தியோ, சுற்று கடிதங்கள் மூலமாகவோ அபேக்ஷகர்களை தேர்ந்தெடுக்கலாம். அம்மாதிரி தேர்ந்தெடுப்பதானது அந்த தொகுதியாருடைய பூர்ண சம்மதமிருந்தபோதிலும் உண்மையான தேர்தலாகமாட்டாது. உட்வர்ட் எ. சர்க்கஸ்வலில் கூறியபடி தேர்தல் சட்டத்தில் கூறியுள்ளபடி தேர்தல்கள் நடைபெறவேண்டும். [இ. பு. ப. 251]

எலெக்ஷன் வியாஜ்ஜியங்களும்—சிவில் கோர்ட் அதிகாரமும்.—செக்ஷன் 6 (3) வியாஜ்ஜியம் தொடரவோ அல்லது தொடரப்படவோ என்னும் தலைப்பின் கீழ் பார்க்கவும். [இ. பு. ப. 252]

எலெக்ஷன் விசாரணைகள்.—ஒருவருக்கொருவருள்ள மனக்கசப்புகளினால் ஒவ்வொரு முறையிலும் தேர்தலில் தடங்கல் உண்டாகா வண்ணம் தேர்தல்கள் நடக்கும்படி ஏற்படுத்தவேண்டும். தேர்தல் காலங்களில் உண்டாகும் கலவரங்களினால் சாதாரண சிவில் கோர்டுகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும். சாதாரண கோர்டுகளுக்குள்ள அதிகாரங்களை எடுத்து பிரத்தியேக அதிகாரிகளை ஏற்படுத்தியதற்கு முக்கிய காரணம் அவைகளில் மேற்கூறிய கலவரங்களில் பாதிக்கப்படாமலிருப்பதற்காகவே, (சிதம்பரம் முனிசிபாலிடி எ. ஞானசம்பந்தம் பிள்ளை A.I.R. 1926 Mad 798). [இ. பு. ப. 253]

எலெக்ஷன் என்பது எப்போது ஆரம்பிக்கப்பட்டதாக கருதுவது.—குறித்த காரணத்திற்கு எலெக்ஷன் வெகு சீக்கிரத்தில் நடைபெறப் போகிறதென்று குறிப்பிடும் நோட்டிஸ் முதல் முதல் பிரசுரிப்பது சாமான்னியமாகும். எலெக்ஷன் எப்போது ஆரம்பிக்கிறதென்பது முக்கியமான விஷயம் அதுமுதல்தான் கக்ஷிகள் எலெக்ஷன் சட்டங்களை மீறி நடப்பதால் உண்டாகும் பயன்களுக்கு உள்ளாவதும், போட்டி, கக்ஷிகளுக்குள் வலுப்பதுவும் புகட்டும், [இ. பு. ப. 254]

ஓட்டு விஷயங்களில் ஏஜண்டுகள்.—ஏஜண்டுகள் கட்டாயம் இருக்கவேண்டும் என்று கூறும் எலெக்ஷன்கள் தவிர மற்றைய எலெக்ஷனிகள் அவரவருடைய சொந்த பிரத்தியேக வாக்கு உரிமைகளாகையால் அவைகளை ஜாக்கிறதையாக உபயோகப்படுத்தவேண்டியதுடன் ஏஜெண்டுகள் உபயோகப்படுத்தும் வழக்கத்தை விடவேண்டும். [இ. பு. ப. 256]

சே. **47** (**1**). **ஸ்தானங்கள்.**—ஒதுக்கி வைக்கப்பட்டவைகள் ஜில்லா போர்ட்டிலுள்ள ஸ்தானங்களில் யாதொன்றையும் ஒதுக்கிவைக்க வேண்டிய கட்டாயமில்லை. அப்படி ஒதுக்கிவைக்கப் பட்டாலும் மகம்மதியர், கிருஸ்துவர், ஆதித்திராவிடர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், ஸ்ரீகள் முதலிய ஆறு வகுப்பாருக்கும் தனித்தனியாக ஒதுக்கி வைக்கப்படவேண்டியதில்லை. பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) தங்கள் இஷ்டப்படி ஒரு வகுப்பாருக்கோ, பல வகுப்பாருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கலாம். ஜில்லாவை வட்டங்களாக பிரித்த பிறகு ஸ்தானங்களை பிரதேச கவர்ன்மெண்டார் (மதராஸ் கவர்ன்மெண்டார்) ஒதுக்கி வைத்தால் அதுவே முடிவானதாகும். வட்டங்களாக பிரித்த உடன் லோகல் போர்டின் சங்கியை எவ்வளவு என்று நிர்ணயித்து அதன் பிறகு எத்தனை ஸ்தானங்களை ஒதுக்கி வைக்க வேண்டுமென்பதை யோசிக்கவேண்டும்; ஆனால் லோகல் போர்டுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கியையின் ¼ பாகத்திற்கு மேல் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களின் சங்கியை இருக்கக்கூடாது. (செ. 48, (16) ; 49 (16) பார்க்கவும்). [இ. பு. ப. 260]

ஒதுக்கப்பட்ட ஸ்தானத்தில் பொது ஸ்தானத்திற்கும் மெம்பரை தேர்ந்தெடுக்கலாம்.—12 மெம்பர்கள் கொண்ட பஞ்சாயத்தில் மூன்று ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு மற்றைய 9 ஸ்தானங்கள் பொது ஸ்தானங்களாக இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒதுக்கப்பட்ட மூன்று ஸ்தானத்தையும் பூர்த்திசெய்ய மூன்று வார்டுகள் ஏற்படுத்தி ஒவ்வொருவார்டில் ஒவ்வொரு வகுப்பார் தேர்த்தெடுக்கப்பட்டாலும் படலாம், அல்லது மூன்றுக்கு குறைவாக வார்டுகள் குறிப்பிட்டு ஒரு வார்டில் ஒரு மெம்பருக்குமேல் தேர்ந்தெடுக்கும்படி செய்தாலும் செய்யலாம். அம்மாதிரி ஏற்படுத்தப்பட்டிருக்கும் வார்டில் ஒதுக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்குறிய மெம்பருடன் பொது ஸ்தாபன மெம்பர்களையும் தேர்ந்தெடுக்கலாம். மூன்று வார்டுகள் ஒதுக்கிவைக்கப்பட்டால் பொது ஸ்தானங்களுக்கு வார்டு ஒன்றுக்கு ஒரு மெம்பர் வீதம் 3 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் ஒரு வார்டில் ஒரு மெம்பருக்குமேல் தேர்ந்தெடுக்கப்பட்டால் போர்டில் மெம்பர்களின் சங்கியை அதிகமாகும். உதாரணமாக ஒதுக்கிவைக்கப்பட்ட மூன்று வார்டுகளில் பிரத்தியேகமான வகுப்பார்கள் 3 மெம்பர்களும், பொதுவாக மற்றைய 3 மெம்பர்களும், ஆக 6 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், மற்றும் 6 வார்டுகளில் ஒவ்வொரு வார்டுக்கு ஒரு மெம்பர் வீதம் 6 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஜில்லா, தாலூகா, கிராமம் இவைகளை தேர்தல் தொகுதிகளாய்ப் பிரித்து சில தொகுதிகளில் ஒரு மெம்பருக்குமேல் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று ஏற்படுத்தி அப்படிப்பட்ட தொகுதியில் ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களை அமைக்கவேண்டுமென்பதும், மற்றைய இடங்களில் ஒரு தொகுதிக்கு ஒரு மெம்பர் என்ற நிர்ணயமும், அனுஷ்டிக்கவேண்டுமென்பது தனிக் கமிடியாருடைய அபிப்பிராயம். யாதொரு வகுப்பு அல்லது இனத்திற்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதோ அந்த வகுப்பு அல்லது இனம் ஒதுக்கிவைக்கப்படாத ஸ்தானங்களுக்கும் அபேக்ஷகர்களாக நிற்கலாம். ஒதுக்கிவைக்கப்பட்ட தொகுதியில் உள்ள ஓட்டர்கள் கலப்பு ஓட்டர்களாக இருக்கலாம். (தனி கமிட்டி ரிபோர்ட் 1929-வது ஜூலை 13-வது பில் 3-வது பக்கம் பார்க்கவும்).
[இ. பு.ப. 265 & 266]

இதர எல்லா வார்டுகளும் ஒரு வார்ட் ஒரு மெம்பரை தேர்ந்தெடுக்கவேண்டும்.—இந்த உப செக்ஷன் முதலில் ஒதுக்கிவைக்கட்பட்ட ஸ்தானங்களைப்பற்றி கூறுகிறது. "இதர வார்டுகள்" என்று கூறுவதால் பொது அல்லது ஒதுக்கிவைக்கப்படாத வார்டுகளை குறிக்கிறது. மொத்த சங்கியையில் ஒதுக்கிவைக்கப்படும்வார்டுகளிலிருந்துதேர்தெடுக்கப்படும்மெம்பர்களின் சங்கியை கால் பாகத்திற்குமேல் இருக்கக்கூடாதென்கிற விதி யிருக்கையில் ஒதுக்கப்படாத மொத்த வார்டுகளும் சேர்ந்து ஒரு மெம்பரை தேர்ந்தெடுக்கவேண்டு மென்பது அசம்பாவிதமாயிருக்கிறது.
[இ. பு. ப. 266]

தாலூகா போர்ட் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பது.

48. (1) யாதொரு தாலூகா போர்டுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்காக, பிரதேச கவர்ன்மெண்டார்-தாலூகா போர்டோடு கலந்து ஆலோசித்த பிறகு, விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

(a) அந்த தாலூகாவை ஸர்க்கில்களாகப் பிரிக்கவேண்டும் ;

(b) 9-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஸ்தானங்கள் எவையேனும் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தால் இன்ன ஸர்க்கில்களில் அந்த ஸ்தானங்களைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்று நிச்சயிக்க வேண்டும்; மேலும்,

(c) இன்னாருக்கு அந்த ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனவென்று பிரசித்தம் செய்யவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (*b*) அடையாளமிட்ட பகுதி குறிப்பிடப்பட்ட ஸர்க்கில்களில் இருப்பவர்கள் - மேலேகண்ட ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதுடன்கூட, ஒதுக்கிவைக்கப்பட்டிராத ஸ்தானங்களுக்கு ஒரு மெம்பரையோ பல மெம்பர்களையோ தெரிந்தெடுக்கவும்வேண்டும், அப்படிப்பட்ட மெம்பர்களின் சங்கியையைப் பிரதேச கவர்ண்மென்டார் அறிக்கையிடவேண்டும். மற்ற சகல ஸர்க்கில்களும் ஒரே ஒரு மெம்பரைத் தெரிந்தெடுக்க அர்ஹதை உள்ளவைகளாகும்.

(3) யாதொரு ஸர்க்கிலிலுள்ள தெரிந்தெடுப்பவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி புருஷர்களாயிருந்தாலுஞ்சரி ஸ்திரிகளாயிருந்தாலுஞ்சரி, அவர்கள் எல்லோரும் - அந்த ஸர்க்கிலில் ஒதுக்கிவைக்கப்பட்டோ ஒதுக்கிவைக்கப்படாமலோ இருக்கும் யாதொரு ஸ்தானத்துக்கு நடத்தப்படும் எலெக்ஷனில் வோட் கொடுக்க அர்ஹதை உள்ளவர்களாவார்கள்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக யாதொரு தாலூகா ஏற்கனவே ஸர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டிருப்பது முக்கியாம்சத்தில் மாற்றப்பட்டால், அந்தப்படி மாற்றியிருப்பது அடுத்த சாதாரண எலெக்ஷன்கள் நடக்கும் தேதியிலிருந்து செலாவணியாகத் தொடங்க வேண்டுமென்று பிரதேச கவர்ண்மென்டார் கட்டளை வேண்டும்.

(5) யாதொரு ஸர்க்கிலினால் தெரிந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும், புதிதாய் ஒரு ஸர்க்கில் ஏற்படுத்தப்பட்டாலும், ஏற்கனவே உள்ள ஒரு ஸர்க்கில் எடுத்துவிடப்பட்டாலும், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர் - பிரதேச கர்வண்மென்டாரின் அங்கீகாரத்தைப் பெற்று,—

(a) தாலூகா போர்டில் அப்போதிருக்கும் ஒவ்வொரு மெம்பரும் இன்ன ஸர்க்கிலின் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்றும்,

(b) தாலூகா போர்டில் காலி ஸ்தானங்கள் எவையேனும் இருந்தால் அவைகளைப் பூர்த்திசெய்வதற்காக இன்ன ஸர்க்கில் அல்லது ஸர்க்கில்களில் எலக்ஷன்கள் நடத்தப்படவேண்டுமென்று நிச்சயிக்கவேண்டும்.

49. (1) யாதொரு பஞ்சாயத்துக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்காக, பிரதேச கவர்ண்மென்டார் - பஞ்சாயத்தோடு கலந்து ஆலோசித்த பிறகு, நிர்ணயிக்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுப்பது.

(a) அந்த கிராமத்தை வார்டுகளாகப் பிரிக்கலாம்; மேலும்,

(b) 9-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஆதிதிராவிடர்களுக்காக ஸ்தானங்கள் எவையேனும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் இன்ன வார்டுகளில் அந்த ஸ்தானங்களைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்று நிச்சயிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்டபகுதியில் குறிப்பிடப்பட்ட வார்டுகளில் இருப்பவர்கள் - மேலேகண்ட ஒதுக்கிவைக்கப் பட்ட ஸ்தானங்களுக்கு மெம்பர்களை தெரிந்தெடுப்பதுடன்கூட, ஒதுக்கிவைக்கப் பட்டிராத ஸ்தானங்களுககு ஒரு மெம்பரையோ பல மெம்பர்களையோ தெரிந் தெடுக்கவும் வேண்டும், அப்படிப்பட்ட மெம்பர்களின் சங்கியையைப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் அறிக்கையிடவேண்டும். மற்ற சகல வார்டுகளும் ஒரே ஒரு மெம்பரைத் தெரிந்தெடுக்க அர்ஹதை உள்ளவை களாகும்.

(3) யாதொரு வார்டிலுள்ள தெரிந்தெடுப்பவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி, புருஷர்களாயிருந்தாலுஞ்சரி, ஸ்திரீகளாயிருந் தாலுஞ்சரி, அவர்கள் எல்லோரும் - அந்த வார்டில் ஒதுக்கி வைக்கப்பட்டோ ஒதுக்கி வைக்கப்படாமலோ இருக்கும் யாதொரு ஸ்தானத்துக்கு நடத்தப்படும் எலக்ஷனில் வோட் கொடுக்க அர்ஹதை உள்ளவர்களாவார்கள்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக யாதொரு கிராமம் ஏற்கனவே வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது முக் கியாம்சத்தில் மாற்றப்பட்டால், அந்தப்படி மாற்றியிருப்பது அடுத்த சாதாரண எலெக்ஷன்கள் நடக்கும் தேதியிலிருந்து செலாவணியாகத் தொடங்கவேண்டு மென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடவேண்டும்.

(5) யாதொரு வார்டினால் தெரிந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும், புதிதாய் ஒரு வார்ட் ஏற்படுத்தப் பட்டாலும், ஏற்கனவே உள்ள ஒரு வார்ட் எடுத்துவிடப்பட்டாலும், நிர்ணயிக்கப் பட்ட அதிகாரியானவர் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தைப் பெற்று,—

(a) பஞ்சாயத்தில் அப்போதிருக்கும் ஒவ்வொரு மெம்பரும் இன்ன வார்டின் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்றும்,

(b) பஞ்சாயத்தில் காலி ஸ்தானங்கள் எவையேனும் இருந்தால் அவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இன்ன வார்ட் அல்லது வார்டுகளில் எலெக் ஷன்கள் நடத்தவேண்டு மென்றும் நிச்சயிக்கவேண்டும்.

குறிப்பு.

செ. **49** (4). ஒரு கிராமத்தை வார்டுகளாக பிரிக்கையில் முக்கியாம்சத்தில் மாற்றப்பட்டால்.—10-வது செக்ஷன்படி லோகல் போர்டுக்கு மெம்பர்களின் சங்கியை நிர்ணயிக்கவேண்டியவர்கள் பிரதேச கவர்ன்மெண்டாராகையால் (மதராஸ் கவர்ன்மெண்டாரா கையால்,) ஒரு கிராமத்தை வார்டுகளாகப் பிரிப்பதால் அடிப்படையான மாறுதல்கள் ஏற்படக் கூடுமா என முடிவு செய்யவேண்டியவர்கள் பிரதேச கவர்ன்மெண்டாராகையால் தற்போதிருக் கும் வார்டுகளை மாற்றவோ, குறைக்கவோ, அதிகப்படுத்தவோ, மெம்பர்களின் சங்கியை நிர்ணயிக்கவோ அதிகாரமிருந்தபோதிலும் அவை உப-செக்ஷன். 5 படி உடனே அமுலுக்கு வரவேண்டியதில்லை. அடுத்த பொது எலெக்ஷனிலிருந்து அமுலுக்கு வரலாம்.

50. [மதராசு 1930-ஹுத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

51. (1) ஒவ்வொரு லோகல் போர்டுக்காகவும் அதில் வோட் கொடுக்க யோக்கியதையை பெற்றுள்ள நபர்களின் பெயர்களைக் காட்டும் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்றை நிர்ணயிக் கப்பட்ட அதிகாரியானவர் - சாதாரண காலி ஸ்தானங்கள் ஏற்படப்போகும் வருஷத்தில் ஜூன் மாத முடிவிக்குள் நிர்ண யிக்கப்பட்ட மாதிரியாய் தயார் செய்து பிரசுரிக்கவேண்டும்.

தெரிந்தெடுக்கப் பட்ட வர்களின் ஜாபித்தாவைப் பிர சுரிப்பது.

(2) நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர் - அந்தப்படி தயார் செய்து பிரசுரிக்கப்பட்ட (தெரிந்தெடுப்பவர்களின்) ஜாபித்தாக்களை ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதம் முடிவதற்குமுன் திருத்தி யெழுதுவதுமல்லாமல், அவைகளில் செய்யப்பட்ட மாறுதல்களுக்கும் திருத்தங்களுக்கும் ஜாபிதா ஒன்றை அதே மாதிரியாய்த் தயார் செய்து பிரசுரிக்கவும் வேண்டும்.

(3) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டுக்குச் சம்பந்தப்பட்டதெரிந்தெடுப்பவர்ளின் ஜபிதாவை, ஒவ்வொரு ஸர்க்கிலுக்கும் தனித்தனியான பாகங்களாகப் பிரிக்கவேண்டும்; மேலும், யாதொரு கிராமமானது வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தால், பஞ்சாயத்துக்குச் சம்பந்தப்பட்ட - தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவை ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனியான பாகங்களாகப் பிரிக்க வேண்டும்.

(4) யாதொரு வருஷத்தில் செய்யப்பட்ட எவையேனும் மாறுதல்களும், திருத்தங்களும் அடங்கிய ஜாபிதாவில் திருத்தி எழுத்தப்பட்டபடி பிரசித்தஞ்செய்யப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது - தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா புதிதாய் பிரசுரிக்கப்படுகிறவரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

(5) அந்தப்படி திருத்தப்பட்டுள்ள தெரிந்தெடுப்பவர்களின் ஜாப்தாவில் யாருடைய பெயர் வருகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - அந்த ஜாபிதா செலாவணியாய்க் கொண்டிருக்கிறவரையில் எலெக்ஷன் நடக்கும்போது வோட் கொடுக்க அர்ஹராவார்; மேலும், ஷை ஜாபிதாவில் யாருடைய பெயர் வரவில்லையோ அந்த நபர் எலெக்ஷன் நடக்கும்போது வோட் கொடுக்கக் கூடாது.

குறிப்பு.

செ. 51. பொது.—இங்கிலாந்தில் ஓட்டர்கள் ஜாப்தா வருஷத்தில் இருமுறை பரிசீலனை செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படுகிறது; இந்தியாவிலோ அப்படியில்லை. அபேக்ஷகர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் யோக்கியதாம்சங்களில் குறைவோ அல்லது தங்கள் பெயர்கள் பதிவு செய்யப்படாமலோ அல்லது தகுதியற்றவர்களும், இறந்தவர்களும் பதிவு செய்யப்பட்டோ இருக்குமானால் அவைகளை திருத்தி சரியாய் பதிவு செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். [இ. பு. ப. 267]

ஓட்டர்கள் ஜாப்தாவில் தவறுதல்களும் அல்லது தப்பான பதிவுகளும்.—தவறுதலாக ஒரு நபரின் பெயர் ஒரு சர்கிலுக்கு மேற்பட்ட இடத்தில் காணப்பட்டால் அந்த நபர் ஒரு சர்கிலுக்கு மேல் எந்த சர்கிலிலும் ஓட்டு கொடுக்கக்கூடாது. ஓட்டர் ஜாப்தாவில் ஒருவர் பெயர் இரண்டு இடத்தில் பதிவு செய்யப்பட்டதால் அந்த ஜாப்தா சரியானதானதல்லவென்று கூறமுடியாது (ரஹிம்பாஸ்ரியோ எ. வாலிமகமத் லதிபாலி=49 I.C. 394.) அறியாமையால் அவர் இரண்டு இடத்திலும் ஓட்செய்தால், கடைசியாக செய்த ஓட் செலாவணியாகமாட்டாது பிரதம ஓட்டர் ஜாப்தாவில் ஒருவருடைய பெயர் இரண்டு இடத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக காட்டப்பட்டவுடன் தவறுதலாக அந்த பெயர் இரண்டு இடத்திலிருந்தும் எடுக்கப்பட்டது. அப்படி செய்தது திருத்ததால் எற்பட்ட தவறு என்று கருதி அவரைக் கிரமப்படி எந்த இடத்தில் சேர்க்க அருகரோ அந்த இடத்தில அவருடைய பெயர் பதிவு செய்யப்பட்டது. அம்மாதிரி செய்தது நியாயமென்றும் இந்த விஷயத்தில் சிவில் கோர்ட் தலையிடக்கூடாதென்றும் தீர்ப்புக் கூறப்பட்டது. (அப்பாசாமி படையாச்சி எ. எதிராஜலு நாயுடு, A.I.R. 1926 Mad. 1043 (F.B.)) ரிஜிஸ்டரில் தவறுதலான அம்சம் குறிப்பிட்டிருந்தாலும், அந்த நபரை சந்தேகமற குறிப்பிட முடியுமானல் அந்த பதிவு அவரை ஓட்டுக்கு யோக்கியதை அற்றவராக்காது. ரிஜிஸ்டரில் முனிசாகுவின் குமாரன் மோடு சாகு என்று குறிப்பிட்ட நபர் நேமகச் சீட்டில் முனிலால் சாகுவின் குமாரன் மோடு சாகு என்று கையொப்பமிட்டார். அந்த நேமகச் சீட்டு சரியானதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. (Purnea) பூர்னியா (1921) I.E.P. 178 பக்கம்.) ஓட்டர் ஜாப்தா ஒவ்வொரு ஓட்டரையும் இன்னர் என்று நிருபிக்கக் கூடிய பதிவுகள்கொண்டிருக்க வேண்டும். (துரைசாமி அய்யங்காரின் கார்ப்பரேஷன் சட்டம், பக்கம் 41.) [இ. பு. ப. 268]

நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி.—நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியான சேர்மன் சுய நன்மையைக் கருதியும் பழைய மனகசப்பைக் கொண்டும் ஓட்டர் ஜாப்தாவில் அவருடைய பெயரை சேர்க்கும் விஷயத்தில் முடிவுகூற அருகதையுடையவரல்ல. அவருடைய நடவடிக்கையை உணர்ந்த ஒருவர், சேர்மன் தனக்கு அநுகுணமாக அவருடைய பெயர் சேர்க்கும்போது சும்மாயிருந்துவிட்டு பிறகு அவருடைய பெயரை எடுக்கும்போது ஆக்ஷேபிக்க அருகதையுடையவராக மாட்டார். (ஸ்ரீரங்கம் முனிசிபல் கௌன்சில் எ. அனந்த சுப்பிரமணிய அய்யர், A.I.R. 1930 Mad. 258). [இ. பு. ப. 269]

நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் உரிமைகள்.—ஓட்டர் ஜாப்தாவை தயாரிக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் நபர்கள் (இ. பி. கோ. இந்தியன் பீனல் கோர்ட்) 21-வது செக்ஷன் 11-வது விதிப்படி கவர்ன்மெண்ட் ஊழியர்களாக கருதப்படுவார்கள். ஓட்டர் ஜாப்தாவை தயாரிக்கும் நபர்கள் எப்படி தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அவைகளுக்கு மாருக நடப்பதால் இதாருக்கு கெடுதல் சம்பவிக்கும்படி நடந்து கொண்டதாக ஏற்பட்டால் இ. பி. கோ. 166-வது விதிப்படி ஒரு வருஷத்திற்கு அதிகப்படாமல் வெறும் காவல் தண்டனைக்கு உள்ளாவார். ஓட்டர் ஜாப்தா தயாரிக்கும்படி அநுமதிக்கப்பட்டவர் அந்த ஜாப்தாவை தவறுதலாக தயாரிப்பதால் அவருக்கு கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும்படி ஏற்பட்டால் இ. பி. கோ. 167-வது செக்ஷன்படி மூன்று வருஷத்திற்கு மேற்படாமல் இருவித தண்டனையில் ஒன்றையாவது, அபாரதமாவது அல்லது இரண்டையுமாவது அடையத் தகுந்தவராவர். [இ. பு. ப. 269]

ஓட்டர் ஜாப்தாவில் பதிவு செய்யும் அதிகாரி, தவரான பதிவு செய்வதால் தப்பு பதிவு செய்வதற்காக இன்டியன் பினல் கோட் 463, 464-வது செக்ஷன்படி தண்டனைகளுக்கு உள்ளாவார். கெட்ட எண்ணத்தைக்கொண்டு ஒரு ஓட்டரின் பெயரை அனுவசியமாக சேர்த்தாலும் எடுத்து விட்டாலும் இ. பி. கோ. வின்படி தண்டனைக்கு உள்ளாவார். ஒரு நபருக்குள்ள நியாயமான அக்கை எடுத்துவிடுவதால் அவருடைய சொத்துக்கு குறையேற்படா விட்டாலும் அம்மாதிரி அவருடைய பாத்தியதையை எடுத்து விட்ட அதிகாரி சட்டப்படிக்கு தண்டனைக்கு உள்ளாவார். (சுரேந்தாநாத்-எ-அரசர், 38 Cal. 75.) [இ. பு. ப. 269]

நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின்மேல் சிவில் பரிகாரங்கள்.—ஓட்டர்கள் ஜாப்தா தயார் செய்யும் அதிகார நியாயவிரோதமாய் ஒருவர் பெயரை எடுத்துவிட்டாலோ அல்லது பாத்தியதை இல்லாதவரை சேர்த்தாலோ அவர் பேரில் சிவில் பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம். (அப்துல் ரஹிம். எ-கோயில் முனிசிபல் போர்ட், 22 All. 143.) [இ. பு. ப. 269]

நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி ஓட்டர் ஜாப்தாவைஅவரிஷ்டப்பிரகாரம் திருத்தக்கூடாது. (கார்க்ஹில், 22 Cal 717, 724). [இ. பு. ப. 271]

ஸ்தானங்களில் சாதாரணமாய் காலி ஏற்படும் வருஷத்தில் ஜூன் மாதத்திற்கு முன்.—47-வது செக்ஷன் "அடுத்த சாதாரண எலெக்ஷன்" என்னும் தலைப்பின் கீழ்பார்க்கவும். நவம்பர்மாதம் முதல்தேதி முதல் ஏற்படும் காலி ஸ்தானங்களுக்கு 11-வது செக்ஷன் (2)-வது விதிப்படி ஆகஸ்ட், செப்டம்பர்மாதங்களில் தேர்தல்கள் நடைபெறவேண்டும். ஜூன் மாத முடிவிற்குள் ஓட்டர் ஜாப்தா தயாரிக்கவேண்டுமென்றிருப்பதால் தேர்தலுக்கு நிற்கும் அபேக்ஷகர்கள் வேலைசெய்ய போதுமான அவகாசமில்லை. குறைந்தது இரண்டு மாத அவகாசமாவது இருந்தால் நன்ருயிருக்கும். மார்ச்சு மாதம் கடைசிக்குள் 21 வயதை பூர்த்தி செய்யும் நபர்கள் ஓட்டு உரிமையை அடையக் கூடியவர்களாகையால் ஓட்டர் ஜாப்தா தயாரிக்கும் அதிகாரி ஏப்ரல் மாதம் முதல் வேலையை ஆரம்பிக்க வேண்டியிருப்பதால் மூன்று மாத அவகாசம் அந்த அதிகாரிக்கு இருக்கவேண்டியது அவசியம். இந்த ஜாப்தாக்கள் மூன்று வருஷத்திற்கு ஒருமுறை கட்டாயம் தயாரிக்கவேண்டும்; கலைத்துவிடப்படும் காலத்திலும், பரிபாலனத்தை ஏற்றுக்கொள்ளும் காலத்திலும், மூன்று வருஷத்திற்குள் ஜாப்தா தயார் செய்யவேண்டும். [இ. பு. ப. 272]

செ. **51** (**2**).—இந்த உப செக்ஷன்படி பூரா ஓட்டர் ஜாப்தாவையும் தயார் செய்ய வேண்டிய தென்பதில்லை. 1-வது உப செக்ஷன்படி சாதாரணமாய் ஸ்தானங்கள் காலியாகும் வருஷத்திற்கு அடுத்த இரண்டு வருஷங்களில் ஓட்டர் ஜாப்தா திருத்தப்பட்டால் போதுமானது. [இ. பு. ப. 274]

திருத்தப்பட்ட ஓட்டர் ஜாப்தா.—இதனல் பிரதம ஜாப்தா ஒன்று இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. பிரதம ஜாப்தாவில் இருந்த ஒரு பெயர், திருத்தப்பட்ட முடிவான ஜாப்தாவில் காணப்படாவிட்டால், அந்த நபர் எலெக்ஷனில் ஓட்டு கொடுக்க அருகரல்லர். 52-வது செக்ஷன்படி ஒரு நபருக்கு ஓட்டருக்குறிய யோக்கியதாம்சங்களெல்லாம் இருந்தும்,

53-வது செக்ஷன்படி யாதொரு யோக்கியதாம்ச குறைவில்லாமலிருந்தும், அவரது பெயர் முடிவான ஒட்டர் ஜாப்தாவில் காணப்படாமலிருந்தால் அவர் ஒட்டு கொடுக்க அருகரல்லர். ஒட்டு எடுக்கும் காலத்தில் வந்து ஒட் எடுக்கும் உத்தியோகஸ்தரை தொந்தரவு செய்ய நியாயமில்லை. அவருக்கு ஏதாவது பரிகாரமிருப்பதாக தோன்றினால் அவர் சிவில் கோர்டில் தக்க பரிகாரங்கள் தேடிக் கொள்ளலாம். [இ. பு. ப. 275]

ஒட்டர் ஜாப்தாவில் பெயர் விடுபட்டு போனவருக்கு பரிகாரம்.—ஒரு நபரின் பெயர் ஒட்டர் ஜாப்தாவில் காணப்படாவிட்டால் அந்த நபர் தனக்கு 52, 53-வது செக்ஷன்களில் குறிப்பிட்டிருக்கும் யோக்கியதாம்சங்கள் இருக்கின்றனவா, என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அப்படி குறைவில்லாமிலிருந்து அவருடைய பெயர் விடப்பட்டு போயிருந்தால் அவர் அந்த ஜாப்தாவை தயார் செய்யும் பொருட்டு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின்மேல் ஸிவில் கோர்டில் தக்க பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம். [இ. பு. ப. 277]

வரிகளை முன்னடியாக செலுத்தவேண்டிய அவசியமில்லை.—ஒட்டரா யிருக்க அவரால் செலுத்தப்படவேண்டிய வரிகள் பாக்கியில்லாமல் செலுத்தப்பட்டிருக்கவேண்டுமென்கிற விதி, இந்த திருத்தப்பட்ட ஆக்டினால் எடுபட்டுபோய்விட்டது. இத்தனை வருஷங்களாக அந்த விதி கஷ்ட சாதனமாகவே இருந்தது. இதன் காரணமாக ஒட்டர் ஜாப்தாவை தயார்செய்வதில் எத்தனையோ சூழ்ச்சிகள் கையாளப்பட்டுவந்தன. எமது முன் இங்கிலீஷ் பதிப்பில் இதைப்பற்றி உறைத்ததை அனுசரித்து இந்த திருத்தம் செய்யப்பட்டது.
[இ. பு. ப. 278]

யோக்கியதாம்சங்களில் கல்வியை பொருட்படுத்தவில்லை.—ஒட்டர்களாயிருக்க உரிமையுடையவர்கள் சிறிதளவாகிலும் கல்வி கற்றவர்களாயிருக்க வேண்டுமென்று சட்டசபை மெம்பர்கள் விதி செய்திருப்பார்களே யானால் மிகவும் நன்றாயிருக்கும். [இ. பு. ப. 278]

ஸ்திரீகள்.—ஸ்திரீகளைப்பற்றி இந்த செக்ஷனில் ஒன்றும் கூறாததினால், ஸ்திரீகள் என்பதற்குள்ள யோக்கியதைக் குறைவை இந்த ஆக்ட் எடுத்துவிட்டதாக கருதவேண்டும். அவர்கள் ஒட்டர்களாகவும், அபேக்ஷகர்களாகவுமிருந்து 56-வது செக்ஷன்படி மெம்பர்களாகவும் வரலாம். ஒட்டருக்குறிய எல்லா யோக்கியதாம்சங்களும் இருக்கவேண்டும். யோக்கியதாம்சங்களில் எதாவது ஒன்று குறைவாயிருந்தாலும் அப்படி குறைவாக இருப்பவர் ஒட்டராயிருக்க அருகதை உடையவரல்லர். [இ. பு. ப. 278]

ரெஜிஸ்டர் செய்துக் கொள்வதற்குப் பொதுவான யோக்கிய தாம்ஸங்கள்.

52. யாதொரு நபர் அடியிற்கண்டபடி யிருந்தாலன்றி மற்றப்படி, வோட் கொடுப்பதற்கு யோக்கியதை பெற்றிருப்பதாக யாதொரு லோகல் போர்டுக்குச் சம்பந்தப்பட்ட தெரிந்தடுப்பவர்களின் ஜாபிதாவில் அவருடைய பெயரைச் சேர்க்கக் கூடாது :—

(a) அவர் ஒரு ப்ரிடிஷ் குடியாகவாவது இந்தியாவிலுள்ள ஒரு சமஸ்தானத்தின் குடியாகவாவது இருக்கவேண்டும் :

ஆனால் பிரதேச கவர்ன்மெண்டார்-எந்த அந்நியாருக்காவது எந்த வகுப்பைச் சேர்ந்த அந்நியர்களுக்காவது இந்த நிர்பந்தம் பிரயோகப்படாதபடி அவர்களை விலக்கலாம் ;

(b) தெரிந்தடுப்பவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்பட்ட வருஷத்துக்கு முந்திய வருஷத்தில் அவர் இருபத்தொரு வயதானவராயிருக்கவேண்டும் ;

(c) அவர் 3-வது ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு யோக்கியதாம்சமாவது பல யோக்கியதாம்சங்களாவது உள்ளவராயிருக்கவேண்டும் ;

(d) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டின் விஷயத்தில், ஷை முந்திய வருஷத்திலே மொத்தத்தில் அவர் நூற்றிருபது தினம் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகாவிலாவது அந்த டிஸ்ட்ரிக் அல்லது தாலூகாவிலிருந்து மூன்று மைலுக்குள்ளிருக்கும் (சென்னை ராஜதானி பட்டணம் உள்பட) யாதொரு மியுனிஸிபாலிடி அல்லது கன்டோன்மெண்டிலாவது வாசம் செய்திருக்கவேண்டும் :

ஆனால், மேலேகண்ட யாதொரு மியுனிஸிபாலிடி அல்லது கன்டோன்மெண்டில் வசிப்பதனாலேயே வாசம் செய்வது சம்பந்தமாய் ஏற்படும் யோக்கியதை பெற்றுள்ள நபர்களின் விஷயத்தில், யாதொரு மியுனிஸிபல் அல்லது கன்டோன்மெண்ட் அதிகார சபைக்குச் செலுத்தத்தக்கதாகும் ஏதேனும் வரி அவர்களுக்கு விதிப்பதை இந்தப் பகுதியின் தாற்பரியப்படி ஒரு யோக்கியதாம்சமாகக் கருதக் கூடாது; மேலும்,

(e) யாதொரு பஞ்சாயத்தின் விஷயத்தில், ஷை முந்திய வருஷத்திலே மொத்தத்தில் அவர் நூற்றிருபது தினம் பிரஸ்தாப கிராமத்தில் வாசம் செய்திருக்கவேண்டும்.

குறிப்பு.

செ. **52 (b). இருபத்தோரு வருஷங்கள்.**—'வருஷம்' என்பது ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் மார்ச் மாதம் 31-ந்தேதி முடிவடையும் வரையிலுள்ள ஒரு வருஷத்தை குறிக்கும். ஓட்டர் ஜாப்தாவில் ஒரு நபருடைய பெயரை பதிவு செய்யப்படு முன் அவர் அவ்வருஷம் மார்ச் மாதம் 31-ந்தேதி யன்று 21 வயது பூர்த்தியாய் அடைந்திருக்க வேண்டும். அவ்வருஷம் மார்ச்சு மாதம் 31-ந்தேதி யன்று 21 வயது முடிவடையும் ஒரு நபரின் பெயரை அந்த வருஷம் ஜூன் மாதம் 30 யன்று தயாரிக்கப்படும் முடிவான ஜாப்தாவில் சேகரித்து கொள்ளலாம்; ஆனால் ஏப்ரல் மாதத்திய 21-வயது அடையும் நபரை அந்த வருஷத்திய ஜாப்தாவில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. இந்தியாவில் பிறந்த வருஷம், மாதம், தேதியை கிராமவாசிகள் அக்கறையுடன் குறித்துவைப்பதில்லை. ஆகையால் ஓட்டருடைய வார்த்தையை நம்பி அவர் 21 வயதடைந்தவர் என்று சொன்னால் அதை நம்பி ஓட்டர் ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளலாம்.

[இ. பு. ப. 278]

மொத்தத்தில் 120 நாட்கள்.—சில சமயங்களில் 120 நாட்கள் குடியிருப்பு இல்லாதவர்களின் பெயர்களும் ஜாப்தாவில் காணப்படுகின்றன. தங்கள் சுயநலனைக்கருதி அவர்கள் அபேக்ஷகர்களாக நின்று நியாயமாய் அந்த ஸ்தானத்திற்கு அருகாதையுள்ளவர்களை நீக்கி தாங்கள் மெம்பர்களாக ஆகிறார்கள். மொத்தத்தில் 120 நாட்கள் என்பது தொடர்ச்சியாயிருக்க வேண்டுமென்பதில்லை. 3-வது செக்ஷன்படி 19-வது உப செக்ஷன் ஸ்திரவாசமாய் 24 மணியும் இருக்கவேண்டியதில்லை. அப்போதைக்கப்போது வந்து போய் கொண்டிருந்தாலும் போதுமானது.

[இ. பு. ப. 278 & 279]

வோட் கொடுப்பவர்களின் யோக்கியதைக் குறைவுகள்.

53. 51-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொலலியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, புத்தி ஸ்வாதீனமில்லாதவராகவோ செவிட்டு ஊமையாகவோ குஷ்டரோகியாகவோ உள்ள எந்த நபரும் யாதொரு லோகல் போர்டுக்காக நடக்கும் எந்த எலெக்ஷனிலும் வோட் கொடுக்க அர்ஹராகமாட்டார்."

தெரிந்தெடுக்கப்படுவதற்குரிய யோக்கியதாம்சங்கள்.

54. (1) யாதொரு நபரின் பெயர் யாதொரு லோகல் போர்டுக்குச் சம்பந்தப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் இருந்தாலன்றி மற்றப்படி, அந்த நபர் ஷை போர்டிலுள்ள எந்த ஸ்தானத்துக்கும் தெரிந்தெடுப்பதற்கு யோக்கியதையுள்ளவராகமாட்டார்.

(2) கிராமப் பெரிய தனக்காரரல்லாத எந்த கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரும் யாதொரு லோகல் போர்ட் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கோ உத்தியோகம் வகிப்பதற்கோ யோக்கியதையுள்ளவராகமாட்டார்:

ஆனால், பின்கண்ட இரண்டு தன்மைகளும் பொருந்தியிராத யாதொரு உத்தியோகத்தை வகிக்கும் எந்த நபருக்கும் இந்தத் தடை பிரயோகப்பட மாட்டாது; அவையாவன:—அந்த உத்தியோகத்தை வகிப்பவர்

(a) கவர்ன்மெண்ட் ஊழியராக தமது முழுகாலத்தையும் செலவழிப்பராயிருப்பது;

(b) சம்பளமாகவாவது வர்த்தனைகளாகவாவது பிரதிபலன் பெறுவது:

அல்லாமலும், யாதொரு எலெக்ஷனுக்கு முன்பாவது அதற்குப் பிறகாவது யாதொரு நபர் இந்த உட்பிரிவின்படி யோக்கியதை யற்றவரா யிருக்கிறாரா இல்லையா என்னும் விஷயமாய் ஏதேனும் பிரசினை ஏற்பட்டால், அந்த பிரசினையைக் குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்; அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு.

செ. **54 (2).** **கவர்ன்மேண்ட் உத்தியோகஸ்தர்.**—இந்த செக்ஷன்படி கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் என்றால் நிரந்தரமாய் பூராநாளும் கவர்ன்மெண்ட் ஊழியம் செய்பவர், அவரது ஊழியத்திற்கு சம்பளம் பெறுபவர் என்பது பொருள். [இ. பு. 281]

கிராம பேரியதனக்காரர்.—கிராம உத்தியோகஸ்தர் அல்லது பெரியதனக்கார் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராக கருதப்படுமானாலும் அவர் அபேக்ஷகராக நிற்கவும், மெம்பராக வரவும் அருகதையுடையவராவர். இந்த விதி மாறுதல் அடையவேண்டும், அல்லது கிராம உத்தியோகஸ்தர் கௌரவ உத்தியோகஸ்தராகவாவது இருக்கவேண்டும். கிராமத்தில் கிராம பெரியதனக்காரர் கிராம மணியக்காரர், கிராம கர்ணம் என்று மூன்று பெயர்கள் தனித் தனியாக இருப்பார்களானால் அதில் கிராம பெரியதனக்காரர்மட்டும் மெம்பராக நிற்க அருகதையுடையவர். சில கிராமங்களில் இரண்டு அதிகாரங்களோ அல்லது மூன்று அதிகாரங்களோ ஒருவருக்கே கொடுக்கப்பட்டு அவர் மூன்று அதிகாரங்களையும் உடையவர் அல்லது "ட்ரையூன் ஆபீஸர்" என்று கூறப்படுகிறார். அப்படிப்பட்டவர் அபேக்ஷகராக நிற்கலாமா? அவர் நிற்க அருகரல்லர் என்பது எமது அபிப்பிராயம். [இ. பு. 281]

தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அபேட்சகர்களின் யோக்யதைக் குறைவுகள்.

55. (1) யாதொரு நபருக்கு ராஜாங்க சம்பந்தமான குற்றமோ அல்லது ஒழுக்கத்தவறு காரணமாக ஏற்பட்டிராத குற்றமோ அல்லாத வேறே யாதொரு குற்றத்துக்காக எந்தக் க்ரிமினல் கோர்ட்டாராலாவது தீவாந்தர சிட்சையாகிலும் ஆறுமாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்குக் காவல் தண்டனையாகிலும் விதிக்கப்பட்டிருந்து (அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும் குற்றம் மன்னிக்கப்படாமலிருந்தாலும்), அவர் எந்த தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும்போதும் அந்த தண்டனை முடிவான தேதிமுதல் ஐந்து வருஷகாலம் வரையிலும் லோகல் போர்டு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதையற்றவராவார்.

(2) யாதொரு நபர் நேமகஞ் செய்யப்படும் அல்லது தெரிந்தெடுக்கப்படும் தினத்திலே—

(a) புத்தி ஸ்வாதீனமில்லாதவராயிருந்தாலும், செவிட்டு ஊமையாகவாவது குஷ்டரோகியாகவாவது இருந்தாலும்,

(b) கடன்தீர்க்க வகையில்லாதவரென்றாவது கடனிறுக்க சக்தியற்றவரென்றாவது தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டவரா யிருந்தாலும் கடன் தீர்க்க வகையில்லாதவராயிருந்து அப்படி வகையில்லாதவரென்பதற்கு ஸெர்டிபிகேட் பெறாமலிருந்தாலும், கடனிருக்கச் சக்தியற்றவரா யிருந்து அப்படிச் சக்தியற்றவரென்று விடுதலைபெறாமலிருந்தாலும்,

(c) யாதொரு கம்பெனியில் (டைரெக்டரைத்தவிர வேரே) யாதொரு பங்குக்காரராகவல்லாமல் மற்றப்படி, லோகல் போர்டாரோடு செய்யப்பட்டு இன்னும் அமுலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்பட்டு வரும் யாதொரு வேலையிலாகிலும் பற்றுள்ளவராயிருந்தாலும்,

(cc) லோகல் போர்டின் சார்பாக சம்பளம் பெறும் நியாயவாதியாய் அமர்த்திக் கொள்ளப்பட்டோ லோகல் போர்டுக்கு விரோதமாய் நியாயவாதியாக அமர்த்திக் கொள்ளப்பட்டோ இருந்தாலும்,

(d) இந்த ஆக்டின்படி உத்தியோகம் வகிக்கும் உத்தியோகஸ்தராக வாவது ஊழியக்காரராகவாவது இருந்தாலும், லோகல் போர்ட் விஸ்தீரணத்தை சேர்ந்த எந்த பாகத்தின் விஷயமாகவாகிலும் விசாரணை அதிகார முள்ள அந்தப் பிரதேச விஸ்தீரணத்துக்கு கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தாலும்,

(e) ஏற்கனவே லோகல் போர்ட் மெம்பராயிருந்து, அவருடைய உத்தியோக காலமானது அவரை மறுபடியும் தெரிந்தெடுப்பது செலாவணியா வதற்கு முன்னே முடிவாகாமலிருந்தாலும், ஏற்கனவே லோகல் போர்ட் மெம்ப ராக தெரிந்தெடுக்கப்பட்டிருந்து அவருடைய உத்தியோக காலம் இன்னும் ஆரம்பிக்காமலிருந்தாலும்,

(f) ஷை தேதியில் உத்தியோகம் வகிக்கும் ஒரு மெப்பரின் வேலைக் காரராகவோ, அவரை வேலைக்கு வைத்துக் கொண்டவராகவோ, அவருக்குக் கீழ் உத்தியோகம் வகிப்பவராகவோ உத்தியோகத்தில் அவருக்கு மேற்பட்ட அதி காரியாகவோ இருந்தாலும் அவர்-லோகல் போர்டு மெம்பராகத் தெரிந்தெடுக்கப் படுவதற்கு யோக்கியதையற்றவராவார் :

ஆனால் யாதொரு நபருக்கு—

(i) அசையாப்பொருளை குத்தகைக்குவிடும், விற்பனை செய்யும் அல்லது கிரயத்துக்கு வாங்கும் யாதொரு விஷயத்திலாவது அப்படி செய்வதற் கான யாதொரு உடன்படிக்கையிலாவது,

(ii) பணம் கடன் வாங்கும் விஷயமாய்ச் செய்துக்கொள்ளப்படும் யாதொரு உடன்படிக்கையிலாவது பணம் செலுத்துவதற்காக மாத்திரம் கொடுக் கப்படும் யாதொரு ஜாமீனிலாவது,

(iii) லோகல் போர்டின் விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விளம்பரம் பிரசுரிக்கப்படும் எந்த சமாசார பத்திரிகையிலாவது,

(iv) ஒப்பந்தம் அல்லது வேலையின் கால அளவுக்குள் யாதொரு வருஷத்திலே அடியிற்கண்ட இரண்டு விஷயங்களிலும் மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் மதிப்புள்ளவையாய் அவர் கிரமமாய் வியாபாரம் செய்கிற எவையேனும் சாமான்களை லோகல் போர்டுக்கு விற்பனை செய்வதிலா வது லோகல் போர்டினிடமிருந்து எவையேனும் சாமான்களை கிரயத்துக்கு வாங்கு வதிலாவது, பங்கு அல்லது பற்று இருக்கிறதென்னும் காரணத்திலேயே அப்படிப்பட்ட ஒப்பந்தம் அல்லது வேலையில் மேலேகண்டபடி அவருக்கு யாதொரு பற்று இருப்பதாக எண்ணக்கூடாது.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார்-அப்படிப்பட்ட தண்டனையினால் ஒருவர் அபேட்சகாரயிருப்பதற்கு யோக்கிதை யற்றவராகாரென்று கட்டளை யிடலாம்.

குறிப்பு.

செ. **55** (**1**). **யோக்கியதாம்சக் குறைவுகள்.**—எந்த விஸ்தீரணத்தில் அபேக்ஷகராக நிற்க எத்தனிக்கிறாரோ அந்த நபர் அந்த விஸ்தீரணத்தின் வாஸஸ்தரா யிருக்கவேண்டிய யோக்கியதையை குறிக்கப்படாமற் போனாலும், மெம்பராயிருப்பவருக்குமட்டும் 56 (1) (g) யின்படி அவர் அந்த விஸ்தீரணத்தில் வஸிக்காமல்போனால் யோக்கியதைக் குறைவு ஏற்பட்டு விட்டதாக கருதப்படும். ஓட்டு கொடுக்கும் பாத்தியதையை ஓட்டர் ஜாப்தா குறிக்குமே

யொழிய அபேக்ஷகர்களுடைய யோக்கியாம்சங்களை குறிப்பிடுவதாகக் கருதக்கூடாது. (அடுஹக் எ. மணிக்டோல முனிசிபாலிடி, 57 I C. 960 = 48 C. 378). தகுந்த விசாரணையின்றி குறிப்பிடப்படும் யோக்கியதைக் குறைவு சரியானதாக மாட்டாது. (இந்தியா மந்திரி எ. வெங்கடாசலு நாயுடு, 30 M. 113). மெம்பர்களின் எலெக்ஷன்களைப்பற்றி விதிகள் செய்யமட்டும். பிரதேச கவர்மெண்டாருககு (மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு) அதிகாரமிருக்கிறதே யொழிய செக்ஷன்களை வியாக்யானம் செய்ய அவர்கள் தகுதியற்றவர்களாகையால், இந்த செக்ஷனுக்கு தக்க வியாக்கியானம் செய்ய சிவில் கோர்ட்டுக்குத்தான் அதிகாரமுண்டு. (அய்யாதுரை முதலியார் எ. மங்கள கௌண்டர், A.I.R. 1927 Mad. 971 = 53 M.L.J. 735).
[இ. பு. 283]

ராஜீய சம்பந்தமான குற்றங்கள்.—இ. பி. கோ. 6-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கும் குற்றங்கள் (121—130) 131, 153-A ; சட்ட விரோதமான கூட்டங்களில் கலந்து கொள்ளும் குற்றங்கள், இவைகளெல்லாம் ராஜீய குற்றங்கள் என கருதப்படும். குறிப்பிட்ட குற்றம் ராஜீய குற்றமா அல்லவா என்பது அந்தந்த குற்றத்தைக் குறித்தது. சில குற்றங்கள் பாகுபாடு படுத்தக்கூடாதவைகளாக இருக்கின்றன. ஒரு அபேக்ஷகர் தனது நேமகச் சீட்டை ராஜீய குற்றத்திற்காக தள்ளிவிடப்போவதாக அறிவாரே யானால் அவர் சிவில் கோர்டில், தான் தண்டிக்கப்பட்டது ராஜீய குற்றத்திற்காக வென்றும் ஆகையால் யோக்கியதாம்ச குறைவு ஏற்படவில்லை என்றும், தன்னுடைய நேமகச் சீட்டை தள்ளாமல் அங்கீகரிக்கும்படி உத்திரவிடவேண்டுமென்றும் வியாஜ்ஜியம் தொடரலாம். [இ. பு. 284 & 285]

செ. 55 (2) (c). அழலிலிருக்கிற யாதோரு ஒப்பந்தத்தில் அல்லது வேலையில் பற்றுள்ளவராயிருந்தால்.—முனிசிபாலிடியைப்போலுள்ள சுயேச்சை ஸ்தாபனங்கள் யாதொரு கட்டுப்பாடுமின்றி நடைபெற வேண்டுமென்று இந்த உப செக்ஷன் ஏற்படுத்தப்பட்டது.
[இ. பு. 285]

'கண்டிராக்டில் சம்பந்தமென்றால்'.—அதனால் கிடைக்கும் லாபத்தில் திரவ்விய சம்பந்தமான பாத்தியதை என்று பொருள் படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிடைக்கக் கூடிய சாக்ஷியங்களைக் கொண்டு ஒருவருக்கு திரவ்விய சம்பந்தமான பாத்தியதை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். [இ. பு. 285]

கௌரவ மாஜிஸ்டிரேட்.—கௌரவ மாஜிஸ்டிரேட் அபேக்ஷகராக நிற்கக்கூடாது. (ஸ்ரீனிவாஸலு ரெட்டி எ. குப்புசாமி கௌண்டர், A.I.R. 1928 Mad. 253). கௌரவ மாஜிஸ்டிரேட் தனது பதவியை ராஜீநாமா கொடுத்துவிட்டாலும் அவரது ராஜீநாமா அங்கீகரிக்கப்படும் வரையில் அபேக்ஷகராக நிற்க அருகரல்ல. (ஏகாம்பர நாயக்கர் எ. மதராஸ் கார்பொரேஷன், A.I.R. 1927 Mad. 22). [இ. பு. 288]

செ. 55 (2) (f). வேலைக்காரர் அல்லது வேலையில் வைத்துக்கொள்பவர்.—"ஸ்தானத்திலிருக்கும் மெம்பரின் உத்தியோக முறையில் வேலைக்காரர் அல்லது அதிகாரி," என்னும் திருத்தம் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது. உத்தியோக முறைமையினால் ஏற்படும் பணியையும், அதிகாரத்தையும் ஒரு யோக்கியதாம்ச குறைவாக எண்ணவேண்டுமென்று ஏற்படுகிறது. உத்தியோகத்திலிருக்கும் வேலைக்காரர் ஏற்கனவே மெம்பராயிருந்தால் அவரது உத்தியோக அதிகாரி மெம்பராய் வர அருகரல்ல. கோவாபிரேடிவ் கம்பெனியில் கௌரவ உத்தியோகம் வகிக்கும் பிரசிடெண்ட், காரியதரிசி இவர்களை இந்த விதி பாதிக்குமா? உத்தியோகம் வகிப்பதனால் அவருக்கு ஊதியம் கிடைக்கக்கூடுமானால்தான் இவ்விதி பாதிக்குமென்று எண்ணவேண்டும். [இ. பு. 290]

மெம்பர்களின் யோக்கியதைக் குறைவுகள்.

56. (1) 57-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு லோகல் போர்டு மெம்பர்—

(a) 55-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற குற்றங்களுக்காக அதில் தண்டனையை யாதொரு கிரிமினல் கோர்ட்டாரால் விதிக்கப்பெற்றாலும்,

(b) புத்தி ஸ்வாதீனமற்றவராகவாவது செவிட்டு ஊமை அல்லது குஷ்டரோகியாகவாவது ஆய்விட்டாலும்,

(c) கடன்தீர்க்க வகையில்லாதவரென்றுவது கடனிறுக்கச் சக்தி யற்றவரென்றுவது தீர்மானிக்கும்படி விண்ணப்பஞ் செய்துகொண்டாலும், அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) 55-வது பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவை சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதியில் கண்ட விலக்கு நிபந்தனைக்குட்பட்டு, ஒரு கம்பெனியில் (டைரெக்டரைத் தவிர வேறே) யாதொரு பங்குக்காரராகவல்லாமல் மற்றபடி லோகல் போர்டாரோடு செய்யப்பட்டு இன்னும் அமுலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்பட்டு வருகிற யாதொரு வேலையிலாகிலும் எவ்வித பற்று உள்ளவராயிருந்தாலும்,

(dd) லோகல் போர்டின் சார்பாக சம்பளம் பெரும் நியாயவாதியாய் அமர்த்திக் கொள்ளப்பட்டாலும், லோகல் போர்டுக்கு விரோதமாய் நியாயவாதியாக வேலை ஏற்றுக்கொண்டாலும்,

(e) இந்த ஆக்டின்படி உத்தியோகஸ்தராகவோ அல்லது ஊழியக்காரராகவோ, அல்லது லோகல் போர்ட் விஸ்திரணத்தை சேர்ந்த எந்த பாகத்தின் விஷயமாகவாகிலும் விசாரணை அதிகாரமுள்ள கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவோ நியமிக்கப்பட்டாலும்,

(f) வேறே யாதொரு மெம்பரிடத்தில் வேலை ஏற்றுக்கொண்டாலும், அவருக்கு கீழ் உத்தியோகம் வகிப்பவராய்விட்டாலும்,

(g) (i) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்ட் மெம்பரின் விஷயத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரஸ்தாப டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகாவிலாவது அந்த டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகாவிலிருந்து மூன்று மைலுக்குள்ளிருக்கும் (சென்னை ராஜதானிப்பட்டணம் உட்பட) யாதொரு மியுனிஸிபாலிடி அல்லது கன்டோன்மென்டிலாவது

(ii) யாதொரு பஞ்சாயத்து மெம்பரின் விஷயத்திலே; பிரஸ்தாப கிராமத்தில் வாசஞ்செய்யாமற் போய்விட்டாலும்,

(h) அவர் கடைசியாய் லோகல் போர்டின் சாதாரண சபைக்கு வந்திருந்த தேதியிலிருந்து ஆரம்பித்து தொடர்ச்சியாய் மூன்று மாதங்களுக்கு அப்படிப்பட்ட சபைகளுக்கு வராமலிருந்துவிட்டாலும், அந்தக் கால அளவுக்குள் அப்படிப்பட்ட சபைகள் இரண்டுக்குக் குறைவாகக் கூட்டப்பட்டிருந்தால், அவர் கடைசியாய் வந்திருந்த சதாரண சபைக்குப் பிறகு கூட்டப்பட்ட போர்டின் அப்படிப்பட்ட இரண்டு சபைகளுச்கு வராமலிருந்துவிட்டாலும் :

ஆனால், யாதொரு சாதாரண சபையைப்பற்றி மெம்பருக்குக் கிரமமான நோடிஸ் கொடுக்கப்பட்டிராவிட்டால், அவர் வராமலிருக்கிற அப்படிப்பட்ட எந்த சபையையும் இந்தப் பகுதியின்படி அவருக்கு விரோதமாய்க் கணக்கில் சேர்க்கக் கூடாது.

விவரணம்.—இந்தப் பகுதியில், 'சாதாரணசபை' என்னும் சொற்றொடரில் 2-வது ஷெட்யூலிலுள்ள 3-வது விதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உபவிதியின் படியோ 4-வது விதியின்படியோ கூட்டப்படும் ஒரு சபை அடங்காது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் ஷை தண்டனையினால் ஒருவர் (மெம்பராயிருப்பதற்கு) யோக்கியதையற்றவராகாரென்று கட்டளையிடலாம்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாள மிட்ட பகுதியின் படியாவது 59-வது பிரிவின்படியாவது யாதொரு நபர் மெம்பராயிருப்பதினின்றும் நீங்கினவராகும்பட்சத்திலே, அந்த தண்டனை அப்பீலிலாகிலும் புனர்விசாரணையிலாகிலும் ரத்துசெய்யப்பட்டாலும், அந்தத் தண்டனையினால் ஏற்பட்ட யோக்கியதைக் குறைவானது பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவினால் நீக்கப்பட்டாலும் அந்தப்படி ரத்து செய்யப்படுகிறபோதும் அல்லது நீக்கப்படுகிறபோதும், அவரை மறுபடியும் மெம்பராகச்சேர்த்துக்கொள்ளவேண்டும்; அவர் எவ்வளவு காலத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டாரோ அந்தக் காலத்திலே மேலே சொன்னபடி மறுபடியும் சேர்த்துக்கொண்டத் தேதியில் கழிவாகாமலிருக்கும் பாகத்திக்கு அவரை அந்தப்படி சேர்த்துக்கொள்ளவேண்டும். மேலும், மத்தியக்காலத்திலே அந்த காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்வதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் யாதொரு நபர் மேலேகண்டபடி (நீங்கின நபர்) மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படுவதன்மேல் உத்தியோகத்தைக் காலிசெய்யவேண்டும்.

(4) (1) குறுப்பிட்ட உட்பிரிவில் கண்ட (h) அடையாளமிட்ட பகுதியின் படி யாதொரு நபர் மெம்பராயிருப்பதனின்றும் நீங்கினால், ப்ரெஸிடெண்டானவர்-அது விஷயத்தை அப்படிப்பட்ட நபருக்கு உடனே எழுத்து மூலமாய்த் தெரிவிப்பதுமல்லாமல், போர்டாரின் அடுத்த சபையில் அதை அவர்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டும். போர்டின் அடுத்த சபையின் தேதியன்றுவது அதற்கு முன்பாவது, அந்தப்படி தெரிவிக்கப்பட்ட சங்கதி ஷை நபருக்கு வந்து சேர்ந்ததிலிருந்து பதினைந்து தினங்களுக்குள்ளாவது அவர் தம்மை மறுபடியும் சேர்த்துக்கொள்ளும்படி தமாகவே போர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், போர்டார் - அந்த விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு அடுத்தார்போல் கூடும் சபையில் அவரை மறுபடியும் மெம்பர் உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்ளலாம்:

ஆனால், யாதொரு மெம்பரின் உத்தியோக கால அளவில் அவரை இரண்டு தடவைக்கு மேற்பட்டு அந்தப்படி மறுபடியும் சேர்த்துக்கொள்ளக் கூடாது."

குறிப்பு.

செ. **56 (1)**. **மெம்பர்களின் யோக்கியதை குறைவுகள்.**—இந்த செக்ஷனின்கீழ் மெம்பர்களின் யோக்கியதைக் குறைவுகளை விசாரித்து முடிவுசெய்யக்கூடியவர்கள் ஸிவில் கோர்டுகளே தவிர (மதராஸ் கவர்ன்மெண்டார்) பிரதேச கவர்ன்மெண்ட் அல்ல.
[இ. பு. 292]

செ. **56**. **(1) (d)**. அழலிலிருக்கிற யாதோரு ஒப்பந்தம்.—ஒரு லோகல் போர்ட் மெம்பர் சர்க்கார் உத்தியோகஸ்தராகையால் எந்த லோகல் போர்டில் இவர் மெம்பரா யிருக்கிறரோ அந்த போர்டுடன் யாதொரு ஒப்பந்தமும் செய்துக்கொள்ளக்கூடாது. தவறி அவர் அப்போது அழலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாவது பற்றுள்ளவராக இருந்தால் அவர் இ. பி. கோ. 168-வது செக்ஷன்படி ஒரு வருஷத்திற்கு மேற்படாத எவரும் காவல் தண்டனையாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டையுமாவது அடையக்குந்தவராவார் (அர்சர் ஏ நாபாத பிரசாத், A.I.R. 1930 All. 38) 55 (2) (c). (iv)-வது செக்ஷனில் கூறியிருக்கும் அம்சங்களுக்குட்பட்டு ஒரு மெம்பர் வியாபாரம் செய்தால் அது யோக்கியதாம்சக் குறைவாகாது; சட்டத்தின்படி குற்றமும் ஆகாது. ஒப்பந்தத்தினால் ஒரு வருஷத்தில் வருமானம் 1,500 ரூபாயுக்கு மேற்படுமானால் யோக்கியதை குறைவு உண்டாகிறது. அவர் மெம்பராயிருக்க அருகரல்ல. இ. பி. கோ 168-வது செக்ஷன்படி தண்டனைக்கு உள்ளாகக் கூடியவர்.
[இ. பு. 292]

லோகல் போர்டே வேறு யாருடனாவது ஒப்பந்தம் செய்துக் கொண்டால் அது ஒரு மெம்பரின் பேரில் அந்த ஒப்பந்தத்தை போடாமல் அதன் பிரசிடெண்டே யாரையாவது அல்லது மெம்பர் ஒருவரைக் கொண்டாவது வேலை செய்யலாம். அது யோக்கியதாம்ச குறைவாகாது- இ. பி. கோ. 168-வது செக்ஷன் அல்லது இந்த ஆக்ட் 208-வது செக்ஷன்படி குற்றமாகாது
[இ. பு. 293]

செ. 56 (1) (g). வாசம் செய்யாமற் போய்விட்டாலும்.—52 (d) செக்ஷன்படி ஒரு மெம்பர் வருஷ மொத்தத்தில் 120 நாளைக்கு வாசம் செய்யவேண்டு மென்பதில்லை. சில நாட்கள் வாசம் செய்தாலும் மெம்பராயிருக்க அருகராவார். அடியோடு வாசம் செய்யாமல் இருந்தால்தான் யோக்கியதைக் குறைவு ஏற்படுகிறதே யொழிய 120 நாட்களுக்கு குறைவாக வாசம் செய்வதால் ஏற்படவில்லை. எந்த சர்கில் அல்லது வார்ட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டாரோ அந்த சர்கில் அல்லது அந்த வார்டில் வசிக்கவேண்டு மென்பதில்லை. அந்த போர்டின் பிரதேச விஸ்தீரணத்திலாவது அல்லது அதற்கு மூன்று மைலுக்குள்ளாவது, ஜில்லா அல்லது தாலூகா விஷயத்தில், முனிசிபாலிடி அல்லது ராணுவ கண்டோன்மெண்டிலாவது வசித்தால் போதும். இந்த செக்ஷன் அது காணப்படுவதை காட்டிலும் ஆழ்ந்த கருத்துடையது. 3 (19)-வது செக்ஷன்படி ஒரு மெம்பருக்கு யிடமில்லாமல் போனால் அவர் மெம்பர் ஸ்தானத்தை காலி செய்தவராவார். அவருக்கு குடியிடமிருந்தால் அவர் மெம்பரா யிருக்கலாம். [இ. பு. 293]

செ. 56 (1) (h) & (4)—சப்-சேக்ஷன், நிபந்தனையின் உட்கருத்து.—ஷெட்யூல் II, 3 (1)-வது விதிப்படி கூட்டப்பட்ட சபைகளே வழக்கமான சபைகள் (மீடிங்கள்) என்று எண்ணப்படும். II-வது ஷெட்யூல் 3 (2).வது விதிப்படி நடப்பது அவசர சபைகள். II-வது ஷெட்யூல் 4-வது விதிப்படி கூட்டப்பட்டது விசேஷ சபை எனப்படும். வழக்கமான சபைகளுக்கு வரத் தவறிப்போய்விட்டால்தான் தவறினதாக எண்ணப்படுமேயொழிய, அவசர சபைக்காவது, விசேஷ சபைக்காவது தவறினால் அது கணக்காக மாட்டாது.' 'எந்த சபைக்கு வர தவறிப்போய் விட்டாரோ அந்த சபையிலிருந்து,' என்று இருந்த விதி இந்த திருத்த ஆக்டில் கடைசியாக எந்த சபைக்கு ஆஜராயிருந்தாரோ அந்த சபையிலிருந்து கணக்கிடவேண்டுமென்று ஆயிற்று. 2-வது ஷெட்யூல் 2-வது விதிப்படி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சபை வைத்துக் கொள்ளலாம். (1) ஜனவரி 10-தேதி, (2) பிப்ரவரி 3 தேதி, (3) மே 30 தேதி, (4) ஜூலை 30 தேதி, இந்த தேதிகளில் நான்கு சபைகள் நடந்ததாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு மெம்பர் ஜனவரி 10 தேதி, நடந்த சபைக்கும் பிப்ரவரி 3 தேதி, நடந்த சபைக்கும் வந்திருந்து மே மாதம் 30 தேதி நடந்த மூன்ருவது சபைக்கு வராமலிருந்து ஜூலை 30-ந் தேதி சபைக்கு வந்திருந்தார். இரண்டு, மூன்று, நாலாவது சபைகள் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை நடைபெற்றிருக்கின்றன. மே மாதம் 30-ந் தேதி, சபைக்கு வராதிருந்த மெம்பரின் காலம் கடைசியாக வந்திருந்த பிப்ரவரிமாதம் 3-ந்தேதியன்று இருந்து ஆரம்பமாகிவிட்டதாக கருதவேண்டியதால், பிப்ரவரி மாதம் 3-ந் தேதி முதல் ஜூலைமாதம் 30-ந் தேதிவரையில், 5 மாதம் 27 நாட்களாகிறபடியால், அது மூன்று மாதத்திற்குமேல் ஆகிறதினால் அவர் மெம்பராயிருக்க யோக்கியதை யுடையவரா என்கிற சந்தேகம் உண்டாகலாம். அவர் மெம்பராயிருக்க யோக்கியதை யுடையவரே. இந்த உபசெக்ஷனில் இரண்டு நிபந்தனைகள் கூறப்பட்டிருக்கிறது. ஒரு மெம்பர் கடைசியாக வந்திருந்த சபையிலிருந்து சேர்ந்தார் போல் மூன்று மாதங்களில் நடக்கும் சபைகளுக்கு வராவிட்டால் என்பது ஒரு நிபந்தனை ;—அந்த மூன்று மாதத்தில் ஒரு சபைக்கு மேல் நடக்காமல் போனால் மெம்பர் ஸ்தானத்தை காலி செய்தவராகமாட்டார்—மூன்று மாதங்களுக்குள் ஒரு சபை நடந்து அதற்கு பிறகு நடக்கும் மறுசபைக்கு, மூன்று மாதத்திற்குமேல் நடக்கும் சபையான போதிலும், வரத் தவறி விட்டால் தான் மெம்பராயிருக்க அருகதை அற்றவராகிறார். மெம்பராயிருக்கத்தக்க யோக்கியதை வேண்டுமானால் மூன்று மாதங்களுக்குள் நடக்கும் சபைகளில் ஒரு சபைக்காவது அல்லது மூன்று மாதத்திற்குமேல் நடக்கும் அடுத்த சபைக்காவது வரவேண்டும்.

[இ. பு. 293 & 294]

செ. 56 (3).—1-7-1923-ல் ஒருவர் மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார் 1-7-1924-ல் அவருக்கு எழு[illegible] தண்டனை கிடைத்தது. தண்டனை அடைந்தவர் ஸ்தானத்தில் 1-9-1924-ல் வேறு ஒருவரை தேர்ந்தெடுக்கப்பட்டது. 1-11-1924-ல் அவரது தண்டனை அப்பீலில் இரண்டு மாதமென்று குறைக்கப்பட்டது. தண்டனை அடைந்தவர் சாதாரணமாய் 1-7-1926 வரையில் அந்த ஸ்தானத்திலிருக்க அருகதையுடையவர். அவர் 1-12-1924-வில் சிறையிலிருந்து வந்த உடன் புதிதாய் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அந்த ஸ்தானத்தை காலி செய்ய வேண்டும். பழைய மெம்பர் அந்த ஸ்தானத்தில் 30-6-26 வரையிலிருக்க [illegible]மையுள்ளவராவார். [இ. பு. ப. 295]

தம்மை மறுபடி சேர்த்துக்கொள்ளும்படி தானகவே மனுசெய்துகொண்டால்.—சபைக்கு வராததினால் ஸ்தானத்தை இழந்த ஒரு மெம்பரை பழையபடி அவரை மெம்பராக சேர்த்துக்கொள்ளவேண்டுமானால் அந்த மெம்பர் போர்டுக்கு மனுசெய்துக் கொள்ள வேண்டும். அந்த மனு எழுத்து மூலமாயிருக்கவேண்டுமென்பதில்லை. சபையில் இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கும்போது அந்த மெம்பர் அங்கு இருக்கவேண்டியது அவசியமில்லை

அம்மாதிரி மனு அவரிடமிருந்து வராவிட்டால் அவரை மறுபடி சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை. அந்த மெம்பருக்காக வக்கீலாவது, ஏஜண்டாவது அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற வேறு எவராவது அவருக்காக அவரை மறுபடி மெம்பராக சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மனு செய்துகொள்ளலாமா? லோகல் போர்ட் எலெக்ஷன்களில் கம்பெனிகளுக்காக வேறொருவர் மூலமாக ஓட்டுபோடுவதென்பது இல்லை. சபையில் வந்திருக்கும் மெம்பர் ஒருவர் மேற்கூறியவருக்காக, அவரை மெம்பராக மறுபடி சேர்த்துக் கொள்ளலாமென்று மனு செய்யலாமா? [இ. பு. ப. 296]

லோகல் போர்டார் மறுபடியும் மெம்பராக அவரை சேர்த்துக்கொள்ளலாம்.—ஒரு மெம்பரை மறுபடியும் சேர்த்துகொள்வது, கொள்ளாதது அவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. ஸ்தானத்தை இழந்த மெம்பர்தான் மனு செய்துக்கொள்ளாதிருக்கையில் போர்டாரே அவரை சேர்த்துக்கொள்ளலாமா? மறுசபையில் அந்த மெம்பரை சேர்த்துக்கொள்ளாமற்போனால் அடுத்த சபையில் அவரை சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கலாமா? தவறிப்போன மெம்பரை சேர்த்துக்கொள்ளும் அதிகாரம் போர்டுக்கு இருக்கையில் அந்த அதிகாரத்தை இன்ன காலத்திற்குள் செலுத்தவேண்டுமென்று ஆக்ட் குறிப்பிடாமலிருக்கையில் அதை உபயோகப்படுத்தினால் சட்ட விரோதமாகமாட்டாது. (வைத்தியநாத தேவர் எ. முருகப்ப செட்டியார் A.I.R. 1928 Mad. 1077. [இ. பு. ப. 296]

இந்த செக்ஷனும், எலெக்ஷன் கோர்ட்களும்.—எலெக்ஷன் கோர்டுகள் யோக்கியதாம்சக்குறைவுகளைப் பற்றி ஆலோசிக்கலாமென்றும், அதனின்று அபேக்ஷகர்களுடைய யோக்கியதாம்சக் குறைவுகளைப்பற்றியும் பரிசீலனை செய்யலாமென்றும் கனம் ராமேசம் (ஜட்ஜ்) அவர்கள் தேவசிகாமணி-எ-சேதுரத்தனமய்யர் A.I.R. 1925 M. 1024 வியாஜ்ஜியத்தில் முடிவு செய்திருக்கிறார். [இ. பு. ப. 298.]

மெம்பர்களின் யோக்கியத்தைக் குறைவைப்பற்றிய பிரசினைகளைக்குறித்து டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் தீர்மானிப்பது.

57. (1) யாதொரு லோகல் போர்டு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் எந்த நபராகிலும் 54-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவு, 55-வது பிரிவு, 56-வது பிரிவு அல்லது 59-வது பிரிவின்படி யோக்கியதை யற்றவராயிருக்கிறோன்று சொல்லப்பட்டு, அந்தப்படி சொல்லப்பட்டதை அவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், யாதொரு மெம்பருக்கே தாம் 56-வது பிரிவின்படியாவது 59-வது பிரிவின்படியாவது அந்த வேலைக்கு யோக்கியதையற்றவராய்விட்டாரா இல்லையா என்பது விஷயமாய் சந்தேகம் உண்டானாலும், அந்த மெம்பராவது வேறே யாதொரு மெம்பராவது எதில் அந்த லோகல் போர்டு விஸ்தீர்ணம் இருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்டின் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; லோகல்போர்டார் கேட்டுக்கொண்டால், ப்ரெசிடெண்டானவர் அந்தப்படியே விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

(2) மேற்படி ஜெட்ஜானவர் - தமக்கு அவசியமாகத் தோற்றுகிறபடி விசாரணை செய்த பிறகு, அந்த நபர் 54-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவு, 55-வது பிரிவு, 56-வது பிரிவு அல்லது 59-வது பிரிவின்படி யோக்கியதையற்றவராயிருக்கிறாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(3) அந்தப்படி தீர்மானம் செய்யப்படுகிறவரையிலே ஷை மெம்பர் யோக்கியதை யற்றவரா யிராவிட்டால் எப்படி நடப்பாரோ அப்படியே நடக்க பாத்தியதை உடையவராவார்.

குறிப்பு.

செ. 57 (2). **முடிவானதாகும்.**—தனக்கு அதிகாரமில்லாமலிருப்பதாவது அப்படி இல்லாமலிருக்கையில் தனக்கு அதிகாரமிருப்பதாக தீர்மானம் செய்யாமல் 57-வது செக்ஷன்படி, டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் செய்யும் தீர்மானம் முடிவானதாகும். மாற்றுவதற்கு ஹைகோர்டிற்கு இருக்கும் அதிகாரத்தை இந்த செக்ஷன் எடுத்து விடாது. இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட் 107-வது செக்ஷன்படி முடிவான தீர்மானத்தின் பேரிலும், அதைமாற்ற ஹைகோர்டுக்கு அதிகாரமுண்டு. (பார்த்தசாரதி நாயுடு எ. கோடீஸ்வர ராவ் A.I.R. 1924 Mad. 561 =47 Mad. 369 (F.B.)). [இ. பு. ப. 300]

சே. **57** (**3**).—அடுத்த மூன்று சபைகளுக்கு வரத் தவறியவர் 57 (2)-வது பிரிவுபடி டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்மானம் செய்யும்வரை மெம்பராயிருக்ககூடியவர் என்பது பொருந்தாது. அப்படியாயின் 56 (4)-வது செக்ஷனுக்கு பொருள் இல்லை. மெம்பராயிருப்பவரை போர்டர் மறுபடி சேர்த்துக்கொள்வதென்பது அசம்பாவிதமாயிருக்கும். [இ. பு. ப. 300]

அந்த மெம்பரோ; வேறு மெம்பரோ மனு போடலாம்.—57-வது செக்ஷன்படி ஜில்லா கோர்டுக்கு மெம்பர்கள்தான் மனு போடக்கூடியவர்களென்றும், ஓட்டர்களும அபேக்ஷகர்களும் மனு போட முடியாதென்றும் கூறுகிறது. (செல்வரங்க ராஜு எ. துரைசாமி முதலியார், 57 M.L.J. 241). 57-வது செக்ஷன்படி மனு போடுவது ஒரு மெம்பருடைய அலுவல்களில் ஒன்றல்ல. ஸ்தானத்தை வகிக்காவிட்டாலும் தாலூகா போர்ட் மெம்பர் பெடிஷன் (மனு) போட அருகர். (ஆகுல சுதர்சன ராவ் எ. கிருஸ்துவன் பிள்ளை, A.I R. 1924 Mad. 396=45 M.L.J. 798). தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் ஒரு மெம்பர் ராஜவிஸ்வாஸப் பிரமாணம் எடுத்துக்கொள்ளாததினால் அவர் மெம்பராக இருக்க யோக்கியதை யற்றவர் என்பதை அவர் ஒப்புக்கொள்ளாவிட்டால், அவர் யோக்கியதையுடையவரா இல்லையா என்பதை தீர்மானிக்க ஜில்லா ஜட்ஜுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டியது சரியான முறையல்ல, ஏனெனில் அவர் மெம்பராயிருந்து 55, 56-வது செக்ஷன்கள் படி யோக்கியதை யற்றவராகாததால் ஜில்லா போர்டிற்கு உரிமையில்லை. அதை விசாரிக்க முன்சீப் கோர்டுக்கே உரிமையுண்டு. [இ. பு. ப. 299 & 300]

எலெக்ஷன் சம்பந்தமான ரகசியத்தை வெளிவிடுவது.

58 வோட் எடுக்கும் அறையில் ஹாஜராயிருக்கும் வோட் எடுக்கும் யாதொரு உத்தியோகஸ்தராவது யாதொரு குமஸ்தாவாவது வேறே நபராவது, சட்டப்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு விஷயத்துக்காகவல்லாமல் மற்றபடி வோட் கொடுத்த யாதொரு நபர் எந்த அபேட்சகருக்காக வோட் கொடுத்திருக்கிறரேன்று நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் காட்டும் எந்த சமாசாரத்தையேனும் யாதொரு நபருக்குத் தெரிவித்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் குமஸ்தாவுக்கும் நபருக்கும், அக்கிரமமான யாதொரு முகாந்தரமாய் அப்படிப்பட்ட யாதொரு சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகைக் காவல் தண்டனைகளில் எதுவாகிலும் அபராதமாகிலும் அவ்விரண்டுமாகிலும் விதிக்கப்படும்.

எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களுக்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நபர்கள் வோட் கொடுப்பதற்கும் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் தகுதியற்றவர்களாவார்களென்பது.

59. 58-வது பிரிவின்படியாவது இந்தியன் பினல் கோட் IX-A அதிகாரத்தின்படியாவது தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்து குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் தேதிமுதல் ஐந்து வருஷத்துக்குக் குறையாத கால அளவு வரையிலாகிலும் கோர்ட்டார் உத்திரவு மூலமாய் நிச்சயிக்கக்கூடியபின்னும் சொல்ப கால அளவுவரையிலாகிலும் இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு எலெக்ஷனில் வோட் கொடுப்பதற்கோ தெரிந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது லோகல் போர்டு மெம்பர் உத்தியோகத்தை வகிப்பதற்கோ தகுதியற்றவராவார்.

5-ம் அத்தியாயம்.

சோத்து விஷயமாயும் சிப்பந்தி விஷயமாயும் லோகல் போர்டுகளுக்குள்ள அதிகாரங்கள்.

சோத்து.

பொதுவான பாட்டைகளும் அவைகளைச் சேர்ந்தவைகளும் லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிப்பது.

60. (1) யாதொரு டிஸ்ட்ரிக்டிலுள்ள பொதுவான சகல பாட்டைகளும்—

(a) அவை டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாக தரம் பிரிக்கப்பட்டிருந்தால் டிஸ்ட்ரிக்ட் போர்டாரிடத்திலும்,

(b) அவை தாலூகா பாட்டைகளாக தரம் பிரிக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட தாலூகா போர்டாரிடத்திலும்,

(c) டிஸ்டிரிக்ட் பாட்டைகளாகவாவது தாலூகா பாட்டைகளாகவாவது தரம் பிரிக்கப்படாமலிருந்தால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத்தாரிடத்திலும் சங்கிரமிக்கவேண்டும்.

(2) பொதுவான யாதொரு பாட்டையைச் சேர்ந்த சகல தளவரிசைகளும் கல் முதலிய சாமான்களும், அப்படிப்பட்ட பாட்டைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சகல கட்டுவேலைகளும் சேகரிக்கப்பட்டிருக்கும் சாமான்களும் இதரமான சகல வஸ்துக்களும், லோகல் பண்டின் செலவில் அமைக்கப்பட்டிருந்தாலுஞ்சரி மற்றப்படியாகிலுஞ்சரி, யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் பக்கமாயாவது கீழாவது இருக்கிற சகல சாக்கடைக் கால்களும் ஜலதாரைகளும் ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகளும் டன்னல்களும் (தரைகீழ்ப்பாதைகளும்) கல்வர்ட்டுகளும் (மூடிய ஜலதாரைகளும்), அவைகளைச் சேர்ந்த சகல கட்டுவேலைகளும் சாமான்களும் வஸ்துக்களும்—ஷை-பொதுவான எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கிறதோ அவர்களிடத்தில் சங்கிரமிக்கவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு பொதுவான பாட்டை - சாக்கடைக்கால் ஜலதாரை-ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலை - டன்னல் அல்லது கல்வர்ட்டுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படாதபடி பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய் நிவர்த்தி செய்வதுடன் அந்த விளம்பரத்தைத் திருத்தலாம் அல்லது ரத்தும் பண்ணலாம்.

சேர்க்கப்பட்ட சாக்கடைத் தண்ணீர் முதலியது லோகல் போர்டாருடையதாவது.

61. இந்த ஆக்டின்படி யாதொரு லோகல் போர்டாரால் சேர்க்கப்பட்ட சகல குப்பையும் சாக்கடை தண்ணீரும் அசுத்தங்களும் இதர வஸ்துக்களும் அந்த லோகல் போர்டாருக்குச் சொந்தமானவையாகும்.

குறிப்பு.

துப்பைகள், அசுத்தங்கள்.—"குப்பை" என்பது மண் தூள், சாம்பல்கல், சிட்டப்பொடி, சுண்ணாம்பு, ஒடிந்த பீங்கான், கண்ணாடிகள், இன்னும் இதர அசுத்தமற்ற வஸ்துக்கள் என்பது. சாக்கடைமண், மலக்குப்பை, சாணம், அழுகி துர்நாற்றம் வீசும் இதர வஸ்துக்கள். குப்பை பெறுக்கிறவர்களின் உடந்தையைக் கொண்டு ஒரு முனிசிபாலிடியின் சானிடெரி இன்ஸ்பெக்டர் ரகசியமாய் மலக்குப்பையை விற்று பணத்தை தன் சொந்த பிரயோஜனம் செய்துகொண்டது, சர்கார் உத்தியோகஸ்தர் நம்பிக்கைத் துரோகம் செய்தார் என்னும் 409-வது செக்ஷன் இ. பி. கோ படி குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டார். (ஹரிலால் எ. அரசர், 45 All. 281 = A.I.R. 1923 A. 480.)

அசையாப் பொருளை ஒரு லோகல் போர்டாரிடமிருந்து மற்றொரு லோகல் போர்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

62. டிஸ்ட்ரிக்ட் போர்டார்-நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, யாதொரு லோகல் போர்டாரிடம் சங்கிரமித்துள்ள எந்த அசையாப் பொருளாவது அதே டிஸ்ட்ரிக்டிலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கவேண்டுமென்று விளம்பர மூலமாய் நிர்ணயிக்கலாம்; அதன்மேல், அப்படிப்பட்ட பொருளானது-ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து அதேமாதிரியாய்ச் சங்கிரமிக்க வேண்டும்.

சென்னப் பட்டணத்து 1817-ஞு த்திய 7-வது ரெகுலேஷன்படி தரும சம்பந்தமான மானியங்களையும் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட தரும சம்பந்தமான இனும்களையும் லோகல் போர்டுகளுக்கு மாற்ற அதிகாரம்.

63. (1) பிரதேச கவர்ன்மெண்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு ரெவினியு போர்டார் விளம்பர மூலமாக, யாதொரு லோகல் போர்டாரின் சம்மதத்துடன், தரும சம்பந்தமான எந்த மானியத்தின் விஷயமாய் சென்னப்பட்டணம் தரும சம்பந்தமான மானியங்களையும் அவைகள் ஸர்க்கார் பரமாவதையும் குறித்து 1817-ம் ஞுத்து ரெகுலேஷனில் கண்ட நிபந்தனைகளின்படி ரெவினியு போர்டாருக்கு அதிகாரங்களும் அலுவல்களும் ஏற்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட தரும சம்பந்தமான யாதொரு மானியத்தின் நிர்வாகத்தையும் மேல்விசாரணையையும் ஷை லோகல் போர்டாருக்கு மாற்றலாம்; அதன்மேல், அந்த விஷயத்தில் ரெவினியு போர்டாருக்குள்ள சகல அதிகாரங்களும் அலுவல்களும்-ஷை ரெகுலேஷனில் ஷை லோகல் போர்டைப்பற்றி பிரத்தியேகமாய்ச் சொல்லியிருந்தால் எப்படியோ அப்படியே அதற்கு ஏற்படுவதுமன்றி, ஷை லோகல் போர்ட்டு மேற்பார்வையிடவும் வேண்டும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டாராவது இது விஷயமாய் அவர்கள் அதிகாரம் கொடுக்கக்கூடிய வேறே அதிகாரியாவது-யாதொரு லோகல் போர்டாரின் சம்மதத்துடன், தாங்களாலாகிலும் வேறே யாதொரு அதிகாரியாலாகிலும் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட தரும சம்பந்தமான இனுமை ஷை லோகல் போர்டாருக்குக் கொடுக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட இனுமிலிருந்து கிடைக்கும் நிகர வரும்படியானது -ஷை லோகல் போர்டின் நிதி உபயோகிக்கப்படக் கூடிய யாதொரு காரியத்துக்கு மாத்திரமே உபயோகிக்கப்படக்கூடும்.

சொத்தை ட்ரஸ்டில் வைத்துக் கொள்ள ஒப்புக் கொள்ளும் அதிகாரத்தைப்பற்றிய வரையறை.

64. எந்த காரியத்துக்கு லோகல் போர்டின் நிதியை உபயோகிக்கலாமோ அப்படிப்பட்ட யாதொரு காரியத்தை அபிவிருத்தி செய்வதற்கு மாத்திரமே சம்பந்தப்பட்ட ட்ரஸ்டுகளை லோகல் போர்டார் ஒப்புக்கொள்ளலாம்.

ஸ்தாபனங்கள், கட்டு வேலைகள் முதலியவைகளைப் பஞ்சாயத்துக்கு மாற்றுவது.

65. பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது தாலூக்கா போர்டாராவது, யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் அல்லது தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டாவது, கலெக்டராவது, ஸர்க்காரைச் சேராத யாதொரு தனி நபராவது, யாதொரு கூட்டத்தாராவது - எந்த விஸ்தீர்ணத்தின் விஷயமாய் யாதொரு பஞ்சாயத்துக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்துக்குள்ளாவது அதற்கு வெளியேயாவது யாதொரு ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்யும் விஷயத்தையாகிலும் யாதொரு கட்டு வேலையைச் செய்து முடிக்கும் விஷயத்தையாகிலும் பராமரித்துவரும் விஷயத்தையாகிலும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்தும் விஷயத்தையாகிலும் யாதொரு அலுவலை நிறைவேற்றும் விஷயத்தையாகிலும் அந்த பஞ்சாயத்தின் சம்மதத்தைப் பெற்று (இருகிறத் தாராலும்) ஒப்புக்கொள்ளப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு அந்த பஞ்சாயத்துக்கு மாற்றலாம்.

65-A. பிரதேச கவர்ன்மெண்டார் - தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும், தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய சகாயத் தொகை ஏதேனும் இருந்தால் அதை பஞ்சாயத்தார் செலுத்து வதற்குட்பட்டும், விறகுக்காகவும் கால்நடைத் தீனிக்காகவும் ஒதுக்கிவைக்கப்பட்டோ இதர காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டோ உள்ள கிராமக் காடுகளை நிர்வாகம் செய்யும் விஷயத்தையும் பாதுகாக்கும் விஷயத்தையும் பராமரிக்கும் விஷயத்தையும் யாதொரு பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்யலாம்.

கிராமக் காடுகளைப் பஞ்சாயத்துகளுக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

65-B. பிரதேச கவர்ன்மெண்டார்-யாதொரு கிராம நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டு வேலையைப் பாதுகாப்பதையும் பராமரித்து வருவதையுமாவது, நீர்ப்பாய்ச்சும் முறைகள் விஷயமாய் மேல் விசாரணை புரிவதையாவது, குடிமராமத்து ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதையாவது, யதொரு நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டு வேலையிலிருந்து அதை நம்பி பயிரிடப்படும் புலங்களுக்குத் தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கும் விஷயத்தை ஒழுங்குபடுத்துவதையாவது தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு யாதொரு பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்யலாம்.

நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை சம்பந்தமான அலுவல்களைப் பஞ்சாயத்துகளுக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

65-C. பிரதேச கவர்ன்மெண்டார் - எதைக் குறித்து இந்த ஆக்டில் சொல்லியிருக்கவில்லையோ அப்படிப்பட்ட யதொரு ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்யும் விஷயத்தையாகிலும், யாதொரு கட்டு வேலையைச் செய்துமுடிக்கும் விஷயத்தையாகிலும் பராமரித்துவரும் விஷயத்தையாகிலும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்தும் விஷயத்தையாகிலும் யாதொரு அலுவலை நிறைவேற்றும் விஷயத்தையாகிலும், யாதொரு லோகல் போர்டின் சம்மதத்தைப் பெற்று, (இருதிறத்தாராலும்) ஒப்புக்கொள்ளப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, அந்த லோகல் போர்டுக்கு மாற்றலாம்.

லோகல் போர்டுகளின் அலுவல்களை அதிகப்படுத்த கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

66. எந்த அசையாப்பொருளை எடுத்துக்கொள்ள யாதொரு லோகல் போர்டாருக்கு இந்த ஆக்டின்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு அசையாப்பொருளை நிலமெடுத்துக்கொள்வதற்கான 1894-ம் வருஷத்து ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி எடுத்துக்கொள்ளலாம்; அப்படிப்பட்ட சொத்தின் விஷயமாய் அந்த ஆக்டின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் பிரதிபலனும் அதை எடுத்துக்கொள்வதற்காகப் பிடித்த வேறே எவையேனும் செலவுகளும் செலுத்தப்படுவதன்மேல், அந்த சொத்தானது - ஷை லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கவேண்டும்.

லோகல் போர்டுகளுக்கு வேண்டியிருக்கும் அசையாப்பொருளை நிலமெடுத்துக்கொள்வதற்கான 1894-ம் வருஷத்திய ஆக்டின்படி எடுத்துக்கொள்ளலாமென்பது.

குறிப்பு.

நிலமெடுத்துக் கொள்வதற்கான ஆக்டுபடிதான் அசையாப் பொருளை லோகல் போர்டார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிபந்தனை இல்லை.

"எடுத்துக் கொள்ளலாம்" என்னும் பதத்திலிருந்து நிர்பந்தமில்லை என்று ஏற்படுகிறது. 6 (3)-வது செக்ஷன்படி லோகல் போர்டார் அசையும், அல்லது அசையாப் பொருள் அடையவும், வைத்திருக்கவும், மாற்றவும், ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும் யோக்கியதை யுடையவர்கள் ஆவார்கள் என்பதினால் லோகல் போர்டார், நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டின்படியே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

[இ. பு. 307 & 308]

சிப்பந்தி

67. (1) லோகல் போர்டின் உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சங்கியையும் உத்தியோகப்-பெயர்களையும் தரங்களையும் அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள், கட்டணங்கள், வர்த்தனைகள் ஆகிய இவைகளையும் நிஷ்கரிஷை செய்வதற்காவது மாற்றுவதற்காவது சம்பந்தப்பட்ட சகல பிரேரேபனைகளுக்கும் லோகல் போர்டாரின் அனுமதியைப் பெறவேண்டும்.

லோகல் போர்டின் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும்.

(2) ப்ரெஸிடெண்ட் கேட்டுக்கொள்வதன்மேல் மாத்திரமே ஷை பிரேரேபனைகள் லோகல் போர்டாரால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்; மேலும், லோகல் போர்டார் திருத்தங்களுடனாவது திருத்தங்கள் இல்லாமலாவது அவைகளை ஜாரி செய்யலாம்:

ஆனால், ஐந்து வருஷத்துக்கு மேற்பட்டு லோகல் போர்டின் நிலையான ஊழியத்தில் இருந்திருக்கிறவராய் மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் வாங்கும் யாதொரு லோகல் போர்ட் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரைப் பிரதிகூலமாய்ப் பாதிக்கும் எந்தப் பிரேரேபனையையும் இது காரியத்துக்காகக் கூட்டப்பட்ட யாதொரு விசேஷ சபையிலன்றி மற்றப்படி ஆலோசிக்கக்கூடாது; மேலும், போர்டில் அப்போதுள்ள மெம்பர்களில் குறைந்தது பாதிப்பேராவது சம்மதித்தாலொழிய அப்படிப்பட்ட பிரேரேபனை எதையும் செலாவணிக்குக் கொண்டுவரக்கூடாது.

குறிப்பு.

செ. **67 (1)**. ஜாரி செய்யவேண்டும்.— 65-வது செக்ஷன்படி உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் இவர்களை வேலையில் அமர்த்தும் அதிகாரம் சேர்மனுக்கு இருந்தபோதிலும் அந்த அதிகாரம் பொதுக் கமிட்டிக்கும் இருப்பதால் அவர்கள் அந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களை ஜாரி செய்யவேண்டும். அப்படி ஜாரி செய்யப்படாத உத்தியோகங்கள் நியாய சம்பந்தமாகமாட்டா. (காதர்நாத் பந்தாரி- எ கல்கத்தா கார்போரேஷன், 34 C. 863.) லோகல் போர்டால் ஏற்படுத்தப்பட்ட சானிடெரி இன்ஸ்பெக்டர் சர்க்கார் உத்தியோகஸ்தர் (மகாராணி எ. திருவேங்கிட முதலி, 21 Mad. 428.) அம்மை குத்துபவர் சர்க்கார் உத்தியோகஸ்தர். (1881) 1 Weir 129 = (1893) 1 Weir. 128.) யூனியன் முனிசிபல் இன்ஸ்பெக்டர் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். (கோபலஸ்வாமிநாத அய்யன், 1 Weir 28; 128.) (மகாராணியார் எ. ராமசாமி, 13 M. 131.)

[இ. பு. 318]

எலெக்ஷன்கள்.—லோகல் போர்டின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இந்தியாகவர்ன்மெண்ட் ஆக்டின்படி சட்ட சபைகளுக்கு நடக்கும் எலெக்ஷன்களில் தாங்கள் பகிரங்கமாகவோ, ரகசியமாகவோ, தங்கள் உத்தியோக தோரணையிலோ, வேறு எந்த விதத்திலோ பிரவர்த்திக்கக் கூடாது. அவருக்கு ஓட்டு இருந்தால் அவர் இஷ்டமானவருக்கு ஓட்டு கொடுக்கலாம்.

[இ. பு. 319]

68. (1) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் டிஸ்ட்ரிக்ட் என்ஜினீர் உத்தியோகத்தையும், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் உத்தியோகத்தையும், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபிஸர் உத்தியோகத்தையும் ஏற்படுத்த அனுமதி கொடுக்கவேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்தால், அவர்கள் அந்தப்படியே அனுமதி கொடுக்கவேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் என்ஜினீரும், ஹெல்த் ஆபிஸரும், பஞ்சாயத்து ஆபிஸரும்.

(2) இந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்துக்குட்பட்டு டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிஷ்கரிஷை செய்ய வேண்டும்.

(3) அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் தம்முடைய முழு காலத்தையும் தம்முடைய உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்வதிலேயே செலுத்தவேண்டியதுமல்லாமல், வேறே யாதொரு தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தைச் செய்யவுங்கூடாது.

(4) அப்படிப்பட்ட எந்த உத்தியோகஸ்தரையும், பிரதேச கவர்ன்மெண்டாரின் சம்மதத்துடனன்றி மற்றப்படி, உத்தியோகத்திலிருந்து நீக்கக் கூடாது. இது காரியத்துக்காகக் கூட்டப்பட்ட யாதொரு சபையில் ஜாரி செய்யப்பட்டு, டிஸ்ட்ரிக்ட் போர்டில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அந்த மெம்பர்களின் சங்கியையில் மூன்றிலிரண்டு பாகத்துக்குக் குறையாதவர்களின் வோட்டுகளால் ஆதரிக்கப்பட்டுள்ள அந்த போர்டின் தீர்மான மூலமாக (ஷை உத்தியோகஸ்தரை) நீக்கிவிடும்படி சிபாரிசு செய்யப்பட்டால், மேலேகண்ட சம்மதி கொடுக்கப்படும்.

ஷை இரண்டு உத்தியோகங்களையும் பூர்த்தி செய்வது.

69. (1) டிஸ்ட்ரிக்ட் என்ஜினீர் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அல்லது டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபீஸரின் உத்தியோகத்தில் காலி ஏற்பட்டதன் மேலாவது அந்த உத்தியோகம் உண்டாக்கப்பட்ட பிறகாவது எந்த தேதியில் அந்த காலி நேரிட்டதோ அல்லது அந்த உத்தியோகம் உண்டாக்கப்பட்டதோ அந்த தேதியிலிருந்து நான்கு மாதங்களுக் குள்ளாகிலும், டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்டால் அப்படி செய்யப்பட்ட யாதொரு நேமகமானது பிரதேச கவர்ன்மெண்டாரால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படாவிட்டால் பிரதேச கவர்ன்மெண்டாரின் உத்தரவுகளை டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்ட் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளாகிலும் டிஸ்ட்ரிக்ட் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்திற்குட்பட்டு அதற்கு யாதொரு நேமகம் செய்யவேண்டும்.

(2) மேலேகண்டபடி டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்ட் யாதொரு நேமகம் செய்யத் தவறும் பட்சத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் - அந்த உத்தியோகத்தை வகிக்கும்படி யாதொரு நபரை நியமிக்கலாம் ; அதன்மேல், அப்படிப்பட்ட நேமகமானது - சகல காரியங்களுக்காகவும் டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்டால் செய்யப்பட்டதாகவே எண்ணப்படும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது யாதொரு நேமக விஷயம் முடிவு செய்யப்படுகிறவரையில், டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்டானவர் - அந்த உத்தியோகத்தை அங்காமியாய் வகிக்கும்படி யாதொரு நபரை நியமித்து, அப்படி நியமிக்கப்பட்ட நபருக்கு அந்த உத்தியோகத்துக்காக ஜாரி செய்யப்பட்ட சம்பளத்துக்கு மேற்படாமல் தமக்குத் தகுதியாகத் தோற்றும் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிடலாம்.

டிஸ்ட்ரிக்ட் என்ஜினீர் உத்தியோகத்தையும் ஹெல்த் ஆபிஸர் உத்தியோகத்தையும் பஞ்சாயத்து ஆபிஸர் உத்தியோகத்தையும் தவிர மற்ற உத்தியோகங்களைப் பூர்த்தி செய்வது.

70. டிஸ்ட்ரிக்ட் என்ஜினீரும், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸரும், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபிஸரும் தவிர யாதொரு லோகல் போர்டின் மற்ற சகல உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும், இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் செய்திருக்கக் கூடிய எவையேனும் விதிகளை அனுசரித்து ப்ரெஸிடெண்ட் நியமிக்கவேண்டும் :

ஆனால், அவசரமான சந்தர்ப்பத்திலே—

(a) ப்ரெஸிடெண்டானவர் - இந்த ஆக்டின் காரியங்களுக்காக அவசியமாயிருப்பதாக தாம் அபிப்பிராயப்படுகிற உத்தியோகஸ்தர்களையாவது ஊழியக்காரர்களையாவது அங்காமியாக நியமிக்கலாம்; ஆனால், குறித்த யாதொரு வேலைக்கு இவர்களை அமர்த்திக்கொள்ளக்கூடாதென்று அந்த லோகல் போர்டின் யாதொரு தீர்மானத்தினால் தடுக்கப்பட்டிருக்கக்கூடாது; மேலும்,

(b) (a) குறிப்பிட்ட பகுதியின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு நேமகத்தைப்பற்றியும் ப்ரெஸிடெண்டானவர் லோகல் போர்டாருக்கு அவர்களுடைய அடுத்த சபையில் தெரிவிக்கவேண்டும்.

குறிப்பு.

நியமிக்கப்படவேண்டும்.—வேறொரு ஸ்தாபனத்தின் அதிகாரத்திற்குள் ளிருந்த ஒரு பள்ளிக்கூடத்தை ஒரு முனிஸிபாலிடி தனது பரிபாலனத்திற்கு எடுத்துக் கொண்டது. சிலகாலம் பிறகு பள்ளிக்கூடத்து வாத்தியார்களுக்கு அவர்கள் தேவையில்லை என்று அந்த முனிஸிபாலிடி நோடீஸ் கொடுத்தது. ஒரு உபாத்தியாயர் மட்டும் இருக்க இஷ்டப்பட்டார். இரவு வாச்மென் ஒருவனை நியமிக்கும்படி முனிசிபல் சேர்மன் மேற்படி உபாத்தியாயருக்கு உத்திரவு கொடுத்தார். அம்மாதிரி அந்த உத்திரவு அளித்தது நியாயமான நியமனமல்லவென்றும் அவர் முனிசிபல் உத்தியோகஸ்தர் அல்லவென்றும், ஸ்பஷ்டமாய் எப்போது நியமிக்கப்படவில்லையோ அப்போது அவர் முனிசிபல் ஊழியராக கருதப்படமாட்டாரென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. (கள்ளிக்கோட்டை முனிசிபல் கௌன்சில் 'எ. வெட்டண்ணி கேசவ மீனன், A.I.R. 1925 Mad. 943-) டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸரின் அனுமதியின்மேல்தான் அம்மைக்குத்தும் உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டும். (கஜெட் நெ. 225 பக்கம் 72 9-3-1926). லோகல் போர்ட் ஊழியர்களை நியமிக்கவும், அவர்களை தண்டிக்கவும் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படிதான் நடக்கவேண்டும். [இ. பு. 321]

ஊழிய சம்பந்தமான ரெகுலேஷன்களை ஏற்படுத்த டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்குள்ள அதிகாரம்.

71. இந்த ஆக்டின் நிபந்தனைகளும் இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யக்கூடிய எவையேனும் விதிகளின் நிபந்தனை உட்பட்டு டிஸ்ட்ரிக்ட் போர்டார் தங்களுடைய சிப்பந்தியைச் சேர்ந்தவர்களும், டிஸ்ட்ரிக்டிலுள்ள சகல தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் சிப்பந்தியை சேர்ந்தவர்களுமான உத்தியோகஸ்தர்களின் விஷயமாயும் ஊழியக்காரர்களின் விஷயமாயும்—

(a) தரங்களையும, சம்பளங்கள், கட்டணங்கள், வர்த்தனங்கள் ஆகிய இவைகளின் வீதங்களையும் நிஷ்கரிஷை செய்வதற்காகவும்,

(b) சவதரிக்கப்படவேண்டிய ஜாமீன் தொகையையும் ஜாமீன் இன்னபடி இருக்கவேண்டுமென்பதையும் நிச்சயிப்பதற்காகவும்,

(c) வித்தியா சம்பந்தமான யோக்கியதாம்சங்களையாவது இதர யோக்கியதாம்சங்களையாவது நிர்ணயிப்பதற்காகவும்,

(d) ரஜா கொடுப்பதைக்குறித்தும், ரஜா வர்த்தனை கொடுப்பதைக் குறித்தும் பிரயாணவர்த்தனை கொடுப்பதைக் குறித்தும் பதிலாய் வேலை பார்த்து வருகிறவருக்குச் சேரவேண்டிய வர்த்தனை கொடுப்பதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(e) பென்ஷன் கொடுப்பதைக்குறித்தும், க்ராட்யூட்டி (நன்கொடை) கொடுப்பதைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(f) இன்ன வீதங்களின்படியும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் பென்ஷன் சம்பந்தமான சகாயத்தொகைகள் கொடுக்கவேண்டுமென்பதை நிச்சயிப்பதற்காகவும்.

(g) ப்ராவிடென்ட் (எதிர்கால சகாய) நிதியை ஏற்படுத்தி அதை ஆதரித்து வருவதற்காகவும், அதற்குத் தொகை செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதற்காகவும்,

(h) நடத்தையைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(i) பொதுவாய் ஊழிய சம்பந்தமான திட்டங்களை நிர்ணயிப்பதற்காகவும், ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்:

ஆனால்—

(i) ஷை ரெகுலேஷன்களில் நிபந்தனை கண்டிருக்கும் யாதொரு ரஜாவின் கால அளவும், ரஜா வர்த்தனை, பிரயாண வர்த்தனை பென்ஷன், அல்லது க்ராடியூடி (நன்கொடை) ஆகிய இவைகளின் தொகையும் எந்த விஷயத்திலும் பிரதேச கவர்ன்மெண்டாரின் பிரத்தியேக அனுமதியில்லாமல், அதே மாதிரியான அந்தஸ்திலும் நிலைமையிலுமுள்ள கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய அளவுக்கு மேற்படக்கூடாது; மேலும்,

(ii) என்ன திட்டங்களின்படி அப்படிப்பட்ட வர்த்தனை கொடுக்கப்படுகிறதோ அல்லது யாதொரு ரஜாவுக்காகிலும், வயது அல்லது வியாதி காரணமாக வேலையிலிருக்கச் சக்தியற்றவரென்றும் நிர்ணயிப்பதற்காகிலும், வேலையிலிருந்து விலகிக்கொள்வதற்காகிலும் அனுமதி கொடுக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட திட்டங்களானவை, அதே மாதிரியான அனுமதியில்லாமல்-அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் திட்டங்களைக்காட்டிலும் அதிக அனுகூலமானவைகளாயிருக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட ரெகுலேஷன்கள் டிஸ்ட்ரிக்டிலுள்ள சகல லோகல் போர்டுகளையும் கட்டுப்படுத்தக்கூடியவைகளாகும்.

குறிப்பு.

செ. **71**—லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்வதந்தரம் ஒரு சர்க்கார் அதிகாரி அல்லது ஊழியருக்கு எவ்வளவு உண்டானதோ அவ்வளவுக்கு மேற்படாது. முனிசிபல் ஊழியர்களுக்கு குடியிருக்க வசதி கொடுப்பது மிகவும் விசேஷமானது. அம்மாதிரி செய்துகொடுப்பது அவர்களின் அபிப்பிராயத்தை பொறுத்தது. இதில் கோர்ட்டார் தலையிட நியாயமில்லை. (பம்பாய் முனிசிபல் கார்போரேஷன் எ. ராஜசர்தாய் வந்தரானவன்தாஸ், A.I.R. 1925 B. 538.) ஒரு குமஸ்தாவினிடமிருக்கும் தஸ்தாவேஜுகளை எதிர் கக்ஷிக்காரருக்கு காட்டும் பொருட்டு இந்த குமஸ்தாவின் அனுமதியில்லாமல் வேறொரு குமஸ்தா எடுத்துக்கொண்டுபோனது அந்த குமஸ்தா களவு குற்றம் செய்ததாகும். (வல்லபராம் எ. அரசர், A.I.R. 1926 B. 122.) ஒரு யூனியன் சேர்மன் அந்த யூனியன் குமஸ்தா சம்பளத்தை யூனியன் பணத்திலிருந்து எடுத்துதான் வைத்துக்கொள்வது அவர் 225-வது செக்ஷன்படி செய்யும் காரியமானது அந்த பணத்திற்காக சேர்மன் மீது தாவா தொடர 6 மாதம் வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற விதியில்லை. (லக்ஷ்மி நாராயணன் எ. நரசிம்மன், A.I.R. 1925 Mad. 942.) [இ. பு. 322]

செ. **71** (g).—3 (i) (b)வது செக்ஷன் எதிர்கால சகாயநிதி (ப்ராவிடெண்ட் பண்ட்) சட்டத்தில் குறித்திருக்கும் உரிமையான என்பது ஒருவரது மரணத்திற்கு பிறகு யார் நியாயமான வார்ஸுதாரரோ அவரை குறிக்கும். கார்போரேஷன் ஊழியத்திலிருந்த ஒரு ஊழியருடைய மாமன், அந்த ஊழியன் இறந்த உடன் எதிர்கால சகாய நிதியில் இருந்த பணத்தை பெற்றுக்கொண்டுபோய்விட்டான். இறந்தவருடைய மகன் கார்போரேஷனின் மீது தனக்கு பணம் சேரவேண்டுமென்று தாவா தொடுத்தார். தாங்கள் இறந்தவருடைய வார்சுதாரருக்கு கொடுத்துவிட்டதாக கார்போரேஷனார் வாதாடினார்கள். மாமன் சரியான வார்ஸுதாரர் அல்லவென்றும், வார்ஸ் என்பது சட்டசம்மதமான வார்ஸ்தார் அல்லது இறந்தவருடைய மரண சாசனத்தின்படி அதிகாரம் பெற்றவர், எதிர்கால திரவ்விய சகாயநிதி 19-வது விதிப்படி செய்யப்பட்டவரைக் குறிக்கும்; ஆகையால் கார்போரேஷன் மாமனிடத்தில் பணம் கொடுக்க அதிகாரமற்றவர் என்று தீர்ப்பு கூறப்பட்டது. (அவேலிகுமார்டி எ. கல்கத்தா கார்போரேஷன், A.I.R. 1928 Cal. 542.) [இ. பு. 322]

லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை தண்டிக்க அதிகாரம்.

72. 74-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கும் நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரத்துக்கும் உட்பட்டு, யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர்-இலாகா சம்பந்தமான விதிகளையாவது ஒழுங்கையாவது மீறி நடந்ததற்காகவாகிலும் அஜாக்கிரதையாயிருந்ததற்காகவாகிலும் தகுதியற்றவராயிருந்ததற்காகவாகிலும் கடமையைச் செய்ய அசட்டை செய்ததற்காகவாகிலும் இதர துர்நடத்தைக்காகவாகிலும் டிஸ்ட்ரிக்ட் என்ஜினீர் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் அல்லது டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபிஸரைத் தவிர லோகல் போர்டில் வேலையாயிருக்கும் வேறே யாதொரு லோகல் போர்ட் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரை கண்டிக்கலாம், அவருக்கு அபராதம் விதிக்கலாம், அவரை வேலையில் தாழ்த்தலாம், சிறிது காலத்திற்கு வேலையினின்று நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

குறிப்பு.

போது.—லோகல் போர்ட் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்களை லோகல் போர்டார் தண்டிக்க மதராஸ் லோகல் போர்ட் ஆக்டில் பிரதேச கவர்ன்மெண்டார விதி செய்திருக்கிறார்கள். ஒருவர் ஒழுங்கு தவறி நடந்தாரா இல்லையா என்பது அந்த அந்த விஷயத்தைப் பொறுத்தது. ஒரு குற்றத்திற்காக ஒரு ஊழியரை மன்னித்த பிறகோ அல்லது நடவடிக்கை எடுத்துக்கொண்ட பிறகோ அவரை வேலையில் அமர்த்திக்கொண்ட பிறகு அதே குற்றத்திற்காக அவரைவேலையினின்றும் நீக்க அதிகாரிக்கு நியாயமில்லை; ஆனால் மறுபடியும் குற்றம் செய்தால் அவரை தண்டிக்கும் விஷயத்தில் முன் அவர் செய்த குற்றத்தைப்பற்றியும் ஆலோசித்து தக்க தண்டனை விதிக்கலாம். (மதுரை தேவஸ்தானம் எ. சுந்தர அண்ணாவி, A.I.R 1926 Mad. 57.) சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு நிலைமையான கமிட்டி, தேசிய நீதிபரிபாலன சபையாக கருதப்படும்; எஜமானனால் வேலையிலிருந்து நீக்கிவிடப்படும் ஊழியர் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்ட கோர்ட் அல்ல. (1) ஒருவித நியாயமான முடிவுக்கு வரக்கூடிய போதுமான சாக்ஷியங்களிருக்கவேண்டும். (2) நீதி தவறாத நியாயத்திற்கேற்ற விசாரணைகள் நடைபெறவேண்டும். (3) முடிவு மனம்போன போக்கால் கூறப்பட்டதாக இருக்கக்கூடாது. நீதி தவறுமலிருக்கிறதா என்பதைத் தவற நிலையான கமிட்டியின் தீர்மானத்தை மாற்ற எந்த கோர்டிற்கும் அதிகாரமில்லை 83-வது செக்ஷன்படி வேலையினின்றும் நீக்கப்பட்டதின்மேல் அப்பீல் செய்ய ஸ்பஷ்டமான அதிகாரம் கொடுக்கப்படவில்லை. (மாணிக்ஜீ நொரோஜி எ. பம்பாய் முனிஸிபல் கமிஷனர், 32 Bom. L.R. 463.)

[இ. பு. 323]

எடுத்துவிடுதல்.—ஊழியனுக்கு போதுமான அவகாசயம் கொடுத்து அவரை வேலையினின்றும் நீக்க ஒவ்வொரு எஜமானனுக்கும் ஸதா அதிகாரமிருக்கிறது. போதுமான அவகாசமென்பது அந்த அந்த ஊழியக்காரனுடைய வேலையை பொறுத்தது. நோடிஸ் கொடுக்கப்பட்ட காலத்தில் அவனுக்குண்டாகக்கூடிய நஷ்டம் இவ்வளவென்று அறியக்கூடும். (அப்ராஹாம் ரியூபின் எ. கராசி முனிசிபாலிடி A.I.R. 1929 Sindh 69.) ஒரு தொகுதியின் கல்வி இலாகாதார் சில நிபந்தனைகளுக்கு விலக்காக இருந்த கலியாணமான பெண் உபாத்தியாயர்களை நீக்கிவிடும் பொருட்டு அவரவர்களுடன் இலாகாதார் செய்துக்கொண்ட ஒப்பந்தபடி அவரவர்களுக்கு நோடீஸ் கொடுத்துவிட்டார்கள். கல்வி இலாகாதாரர் செலவில் பயிற்றப்பற்ற கலியாணமாகா பெண் பிள்ளைகளுக்கு வேலைகொடுக்கவும், கல்வி முறையை திறமையாய் நடத்தவும இம்மாதிரி செய்யப்பட்டது

அவர்கள் அனுஷ்டித்த முறை தவறுதலானதல்ல. வித்தியாசமின்றி எல்லா கலியாணமான பெண் உபாத்தினிமார்களை எல்லாம் நிறுத்திவிடவில்லை. நிறுத்துமுன் அவர்களுடைய குடும்ப கஷ்டங்களைப்பற்றியும், வீட்டில் அவர்களுடைய அலுவல்களைப்பற்றியும், அவர்களுடைய கணவன்மார்களுடைய வருமானங்களைப்பற்றியும் ஆலோசித்து பிறகுதான் முடிவுக்கு வந்தார்கள். அப்படி தள்ளப்பட்டவர்களில் மூன்று பேர்களின் நோடீஸ் சரியானதல்லவென்றும், இவர்களுக்கு நோடீஸ் கொடுக்கும் அதிகாரம் கிடையாதென்றும் தீர்ப்பு கூறவேண்டுமென்று வியாஜ்ஜியம் தொடர்ந்தார்கள். சட்ட பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட சபை சட்டத்திற்கு விரோதமாய் நடந்ததாக ருசுபடுத்தவேண்டியது வாதியின் பொருப்பென்றும் கல்வி இலாகாதாரால் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட அம்சங்கள் அசம்பாவிதமல்லவென்றும், நல்ல எண்ணத்தைக்கொண்டு அவர்கள் செய்திருக்கும் அம்சங்களில் கோர்ட்டார் பிரவர்த்திக்க அதிகாரமில்லை என்றும் தீர்ப்புக்கூறினார்கள். [இ. பு. 323 & 324]

தள்ளிவிடுதல்.—ஒரு முனிஸிபாலிடியின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் வேலையிலிருந்து தள்ளிவிட அந்த முனிஸிபல் காரியதரிசியை தள்ளிவிடுவதுவும் அந்த சட்டத்துக்குள் இருக்கும் அதிகாரமாகையால் அவரை தள்ளப்பட்ட 6 மாதத்திற்குள் நஷ்டத்திற்காக வியாஜ்ஜியம் தொடர்ந்தால் தொடரலாமே யொழிய அதன் பிறகு தொடர நியாயமில்லை. (ரத்னகிரி முனிசிபாலிடி எ. வாசுதேவ பாலகிருஷ்ண, 39 Bom. 600). மதராஸ் கார்போரேஷன் உத்தியோகஸ்தர்களின் உத்தியோகங்கள் ஒரு வரம்பிற்கு உட்பட்டவை அல்ல. அந்த பிரஸிடெண்ட் அவருக்கு கீழிருக்கும் உத்தியோகஸ்தர்களை அமர்த்தவும், தள்ளிவிடவும் பூர்ண அதிகாரமுண்டு. அம்மாதிரி தள்ளப்பட்டவருக்கு யாதொரு பரிகாரமும் இல்லை. மனோரதத்திற்கு ஏற்றுப்போல் உத்தியோகம் வகிப்பவருக்கு நோடீஸாவது அல்லது அவர்மேல் சாட்டப்பட்ட குற்ற பத்திரிகையாவது கொடுக்கவேண்டுமென்பதில்லை. (செல்லம் ஐயர் எ. மதராஸ் கார்போரேஷன், 12 I.C. 513).

லோகல் போர்டுகளின் உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜா கொடுக்க அதிகாரம்.

73. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - டிஸ்ட்ரிக்ட் என்ஜினீருக்கும், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸருக்கும், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபிஸருக்கும் ரஜா கொடுக்கலாம்; டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டானவர் - டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்த மற்ற சகல உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜா கொடுக்கலாம்.

(2) யாதொரு தாலூகா போர்டின் அல்லது பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டானவர். சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்த தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்தைச் சேர்ந்த சகல உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜா கொடுக்கலாம்.

குறிப்பு.

செ. 73.—ரஜா என்பது பொதுவாய் சொல்லப்பட்டிருக்கிறது. அகஸ்மாத்தாய் உண்டாகும் சம்பவங்களுக்காகவும், நீடித்த வேலையிலிருப்பதால் கிடைக்கும் பாத்தியதையை யொட்டியும், வைத்தியத்திற்காகவும், சம்பளமில்லாமல் நீண்ட காலத்திற்கும் சிரமத்திற்காகவும், பரிகார விடுமுறையென்றும், ரஜாக்கள் பல உண்டு. முனிசிபல், லோகல் போர்ட் ஊழியர்கள், கவர்ன்மெண்ட் ஊழியர்களுக்கு அவர்களுடைய அந்தஸ்து, உத்தியோக காலத்திற்குரிய ரஜாக்களுக்கு அருகராவார். இந்த ஆக்ட் 71 (c) படி ஸ்திரி ஊழியக்காரர்களுக்கு பிரசவ ரஜா கொடுக்கும் விஷயத்தில் லோகல் போர்டார் தாராளமாயிருக்கவேண்டும். (கஜட் 544 நெ. 1244 தேதி 10-11-1925.) லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களுக்கு ரஜா சம்பளம் கொடுக்கவேண்டிய விதி இந்த ஆக்ட் கடைசியில் கூறப்பட்டிருக்கிறது.

[இ. பு. 324]

லோகல் போர்டாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்.

74. (1) பிரதேச கவர்ன்மெண்டார்-யாதொரு லோகல் போர்டார் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், இந்த ஆக்டிலுள்ள காரியங்களின்பொருட்டு ஷை லோகல் போர்டார் வேலையில் அமர்த்திக்கொள்ளும்படி யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரை, லோகல் போர்டாரிடத்தில் விட்டு வைக்கலாம். அப்படி வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் கவர்ன்மெண்ட் அலுவலில் எந்தப் பிரிவைச் சேர்ந்திருக்கிறாரோ அந்த பிரிவுக்குரிய விதிகளின்படி பெற்றுக் கொள்ள அவர் அர்ஹராயிருக்கும் சம்பளத்தை லோகல் போர்டார் அவருக்குக் கொடுக்க வேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய பென்ஷன் விஷயமாயும் ரஜா விஷயமாயும் கொடுக்கும் வர்த்தனைகளுக்காக அந்தந்த காலத்தில் அதைக்குறித்து செலாவணியாய்க்கொண்டிருக்கிற விதிகளின்படி செலுத்தத்தக்கதான தொகையைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவும் வேண்டும்.

(2) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கையில் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தராகிலும் லோகல் போர்டாருடைய வேறே யாதொரு உத்தியோகஸ்தராகிலும் கவர்ன்மெண்டாருக்காவது யாதொரு பப்ளிக் அல்லது ப்ரைவேட் கூட்டத்தாருக்காவது யாதொரு வேலை செய்வாராகில், சந்தர்ப்பத்திற்கேற்றபடி பிரதேச கவர்ன்மெண்டாராவது சம்பந்தப்பட்ட பப்ளிக் அல்லது ப்ரைவேட் கூட்டத்தாராவது-அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய சம்பளத்தில் எவ்வளவு கொடுப்பது அந்த வேலைக்குச் சரியாயிருக்குமென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படக்கூடுமோ அவ்வளவு தொகையை லோகல் போர்டாருக்குக் கொடுக்கவேண்டும்.

(3) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரை அப்படிப்பட்ட உத்தியோகத்திலிருந்து தள்ளிவிடுவதானாலும் நீக்கி விடுவதானாலும் பிரதேச கவர்ன்மெண்டாரின் சம்மதியில்லாமலாவது கவர்ன்மெண்ட் அலுவலில் அந்த உத்தியோகஸ்தர் சேர்ந்திருக்கிற பிரிவின் பிரதான மேல்விசாரணை அதிகாரிக்கு அதைக் குறித்து மூன்று மாதத்திற்கு முன்னதாய் எழுத்துமூலமான நோடீஸ் கொடாமலாவது அப்படித் தள்ளிவிடவாகிலும் நீக்கிவிடவாகிலும் கூடாது.

(4) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரை லோகல் போர்டாருடைய வேலையிலிருந்து வரவழைத்துக்கொள்ளுகிறதானால், மிகவும் அவசரமாயிருக்கிற விஷயங்களில் தவிர மற்றப்படி, பிரதேச கவர்ன்மெண்டார் அதைக்குறித்து லோகல் போர்டாருக்கு எழுத்துமூலமாய் மூன்று மாதத்திய நோடீஸ் கொடுத்திருந்தாலொழிய அல்லது கொடுக்கிறவரையில், அல்லது வரவழைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகஸ்தருக்குப்ப திலாக வேறொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் அனுப்பப்பட்டிருந்தாலொழிய, லோகல் போர்டாருடைய சம்மதியில்லாமல் அப்படி வரவழைத்துக்கொள்ளக்கூடாது.

(5) லோகல் போர்டுகளால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்-தாங்கள் எந்த இலாகாவைச் சேர்ந்தவர்களோ அந்த இலாகாவுக்கும் பிரயோகமாகத்தகுந்த ரெகுலேஷன்களின் பிரகாரம் ரஜாவுக்கும் மற்றுமுள்ள சுதந்தரங்களுக்கும் பாத்தியதையுடையவராவார்கள்.

யாதொரு வகுப்பைச் சேர்ந்த லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை மாகாண ஊழியவர்க்கமாக அமைப்பது.

74-A. (1) இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார்-விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, லோகல் போர்டுகளின்கீழ் வேலை செய்யும் யாதொரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை ஒரு லோகல் பண்ட் ஊழியவர்க்கமாக அமைக்கலாம்:

ஆனால்,—

(i) சம்பந்தப்பட்ட சகல லோகல் போர்டுகளையும் இது விஷயமாய்க் கலந்து ஆலோசனை செய்திருந்தாலும்,

(ii) அந்தப்படி கலந்து ஆலோசிக்கப்பட்ட லோகல் போர்டுகளில் பெரும்பான்மையானவை அடியிற்கண்டபடி விளம்பரம் பிரசுரிப்பதை ஆதரித்து ஒரு தீர்மானம் செய்திருந்தாலும்

அன்றி மற்றப்படி, இந்த உட்பிரிவின்படி விளம்பரம் எதையும் பிரசுரிக்கக் கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதன்மேல், பிரதேச கவர்ன்மெண்டார் - 201-A பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஷை விளம்பர மூலமாய் அமைக்கப்பட்ட லோகல் பண்ட் ஊழியவர்க்கத்தை இனம் பிரிப்பதையும், அதற்குச் சிப்பந்திகளைத் தேர்ந்தெடுப்பதற்கான முறைகளையும், ஊழிய சம்பந்தமான திட்டங்களையும் சம்பளத்தையும் வர்த்தனைகளையும், அதைச் சேர்ந்தவர்களின் ஒழுக்க முறையையும் நடத்தையையும் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்; மேலும் அப்படிப்பட்ட விதிகளினால் ஷை ஊழியவர்க்க சம்பந்தமான விசாரணை அதிகாரம் பிரதேச கவர்ன்மெண்டாரிடமாவது அவைகளில் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறே யாதொரு அதிகாரி அல்லது அதிகாரிகளிடமாவது சங்கிரமிக்கும்படிச் செய்யலாம்.

74-B. இந்த ஆக்டில் இதில் பின்னால் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் விதிக்கப்படக்கூடிய வரியாகிய லாண்ட் ஸெஸ் என்னும் வரியை ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டிலும் விதிக்கவேண்டும்.

லாண்ட் ஸெஸ் என்னும் வரி.

குறிப்பு.

வரி விதிக்கும் சட்டங்கள்.—வரி விதிக்கும் சட்டங்களை வியாக்கியானம் செய்யும்போது யாதாவது ஒன்றோ அல்லது பல சட்டங்களோ இரண்டு பொருள் படக்கூடியவை யாவும் அவைகள் ஒன்றிற்கு ஒன்று நேர் எதிர்மறை பொருள்கள் கொண்டதாயும் இருந்தால், வரி செலுத்துவோருக்கு அனுகுணமாயிருக்கும் பொருளையே கொள்ளவேண்டும். சாதாரணமாய் சட்டங்களை எவ்வாறு வியாக்கியானம் செய்யவேண்டுமோ அம்மாதிரி செய்யவேண்டும். இந்த சட்டத்தில் பதங்கள் என்ன ஸ்பஷ்டமான பொருள் கொடுக்குமோ அதைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும், வரி விஷயத்தில் கருத்து, தருமம் அல்லது காரணம் முதலியவைகளை பாகுபாடு படுத்தக்கூடாது. அதன் உள் கருத்து என்னவென்றும், அதனுள் மறைந்திருப்பதென்னவென்றும் வியாக்கியானம் செய்யக்கூடாது. இதர ஆக்ட்களுக்கு மாறாக இந்த ஆக்டை அர்த்தம் செய்யக்கூடாது. குறிப்பிட்ட வரியானது எந்த காரியத்திற்காக சட்டத்தால் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும் பிரஸ்தாப விஷயம் சட்ட பூர்வமானதாவென்றும், கோர்டார் அறிந்துகொள்ளலாம். அதை அறிந்துகொண்ட பிறகு அதன் அனுஷ்டானத்தை குறைக்கவோ, நிரூபண சபையார் என்ன தாத்பரியம்கொண்டு செய்திருப்பார்கள் என்று தீர்ப்புக்கூற அதிகாரமில்லை. (பெஸ்ட் அண்ட் கம்பெனி எ. மதராஸ் கார்போரேஷன், 47 Mad. 262=A.I.R. 1924 Mad. 420.) [இ. பு. 326 & 327]

3-ம் பாகம்—திரவிய விஷயம்.

6-ம் அத்தியாயம்.

வரி விதிப்பது.

75. (1) அடியிற்கண்ட வரிகள் - சுங்கங்கள் ஆகிய இவைகளில் எதையாவது விதிக்கவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒரு தீர்மான மூலமாய் நிச்சயிக்கலாம்.

வரிகளும் சுங்கங்களும்.

(i) தொழில் வரி;

(ii) வீட்டு வரி;

(iii) பொதுவான பாட்டைகளின் வழியாய்ப் போகும் சவாரி வண்டிகள், பார வண்டிகள், பல்லக்குகள், ஜந்துக்கள் ஆகிய இவைகளுக்காவது, பொதுவான வாராவதிகளின்மேல் போகும் நபர்களுக்காவது சுங்கம்.

(2) (a) லாண்ட் ஸெஸ் என்னும் வரியாகவோ (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது 76-வது பிரிவின்படியாவது யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் பிரஸ்தாப கிராமத்தில் விதித்து வாங்கக்கூடிய யாதொரு வரியாகவோ இராத யாதொரு வரியானது அந்த கிராமத்துக்குச் சௌகரியமாயும் தகுந்ததாயும் இருக்குமென்று யாதொரு பஞ்சாயத்து பிரதேச கவர்ன்மெண்டாருக்கு சிபாரிசு செய்யலாம்; அந்தப்படி சிபாரிசு செய்வதன்மேல், பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் ஷை வரியை அந்த கிராமத்தில் விதித்து வாங்கும்படி அனுமதி கொடுக்கலாம்.

(b) யாதொரு வரி விதிப்பதானது இது காரியத்துக்காகவென்றே பிரத்தியேகமாய்க் கூட்டப்பட்ட ஒரு சபையில் யாதொரு பஞ்சாயத்தில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அதில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட பஞ்சாயத்தின் தீர்மானமூலமாய் அனுமதிக்கப்பட்டாலொழிய ஷை வரியை விதித்து வாங்குவதற்கான எந்த சிபாரிசையும் (a) குறிப்பிட்ட பகுதியின்படி பஞ்சாயத்து அனுப்பக்கூடாது:

ஆனால், இந்த உட்பிரிவின்படி யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் தீர்மானத்தை அனுசரித்து எந்த விஸ்தீரணத்தில் 1930-ஷ ஏப்ரல்மீ முதல் தேதிக்குமுன் வீட்டு வரி விதிக்கப்படவில்லையோ, அப்படிப்பட்ட யாதொரு விஸ்தீரணத்தில் வீட்டு வரி விதிப்பதற்கு ஷை டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு இந்த விதியில் கண்டதெதுவும் அதிகாரம் கொடுப்பதாக கருதப்படமாட்டாது.

(3) இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி,

(a) வரிகளும் சுங்கங்களும் யாதொரு டிஸ்ட்ரிக்டின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு வீதங்களின்படி விதிக்கப்படலாம்; மேலும்

(b) தற்காலத்தில் விதிக்கப்பட்டுவரும் யாதொரு வரியையாவது சுங்கத்தையாவது எடுத்துவிடுவதற்கான, அல்லது எந்த வீதத்தின்படி யாதொரு வரி அல்லது சுங்கம் விதிக்கப்படுகிறதோ அந்த வீதத்தைக் குறைப்பதற்கான டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் யாதொரு தீர்மானத்தை உடனே பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்; மேலும், கடன் வாங்கியிருந்து அந்தக் கடனை இன்னும் செலுத்தாமலிருக்கும் லோகல் போர்டுகளின் விஷயத்தில், மேலே கண்டபடி வரி அல்லது சுங்கத்தை எடுத்துவிடுவதாயிருந்தாலும் வீதத்தைக் குறைப்பதாயிருந்தாலும் அதைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியின்றி அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான யாதொரு தீர்மானமாவது, (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான யாதொரு விளம்பரமாவது குறித்த யாதொரு வருஷத்துக்கு அமுலுக்கு வந்திருக்கிறபட்சத்தில், ஷை தீர்மானம் அல்லது விளம்பரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட வீதங்களையாகிலும் தேதியையாகிலும் அந்த வருஷம் சம்பந்தப்பட்டமட்டில் மாற்றுவதற்கான எந்த பிரேரபனைகளையும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியின்றியோ கட்டளையின்றியோ சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் போர்டாயினும் பஞ்சாயத்தாயினும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

குறிப்பு.

செ. **75**. பொது.—74-(B)-வது செக்ஷனில் வரிகளைப்பற்றி பொதுவாக கூறப்பட்டிருக்கிறது. எப்பொழுது ஸிவில் கோர்ட்டிற்கு அதிகாரம் இருக்கிறதென்பதவும், 228-வது செக்ஷனில் "இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கிய அம்சத்திலும், வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில்" என்னும் தலைப்பின்கீழ் பார்க்கவும். விதிக்கப்படவேண்டிய வரிகளை இந்த செக்ஷன்படி டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிர்ணயித்து 77-வது செக்ஷன்படி பிரசு

ரித்த பிறகுதான் சட்டப்படி செல்லுபடியாகும். அப்போதுதான் அமுலுக்கு கொண்டுவர முடியும். [இ. பு. 336]

ஜில்லா போர்ட்டால் விதிக்கக்கூடிய வரிகள்.

1.	தொழில் வரி	93—97	செக்‌ஷன்கள்.
2.	வீட்டு வரி	98—103	„
3.	சுங்கம் ...	104—109	„
4.	யாத்திரைக்காரர்களுக்கு வரி.	76 & 110	„

மேலே குறிப்பிடப்பட்ட வரிகளில் எதை ஒன்றையாகிலும், பலவையாகிலும் விதிக்க ஜில்லா போர்டார் தீர்மானிக்காவிட்டால் அந்த ஒன்றை அல்லது பலவை வரியை விதிக்கமுடியாது. டிஸ்ட்ரிக்ட் போர்டார் 111-வது செக்‌ஷன்படி வரி அல்லது சுங்கம் செலுத்துவதினின்றும் யாதொரு நபரை அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களை முழுதுமாவது அல்லது சிறிதுமட்டிலாவது நிவாரணைசெய்யலாம்; அல்லது 111-A செக்‌ஷன்படி வசூலிக்க முடியாத வரி அல்லது சுங்கத்தை செல்லு வைத்துவிடலாம். [இ. பு. 336 & 337]

செ. 75 (4). வரி விகிதத்தையும் தேதியையும் மாற்றும்போது.........ஆலோசிக்க வேண்டும்ஜில்லாபோர்ட் அல்லது பஞ்சாயத்து வரி அல்லது சுங்கம் இந்த விகிதப்படி இந்தநாளிலிருந்து வசூலிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்து அமுலுக்கு வந்தபிறகு அதே வருஷத்தில் அந்த விகிதத்தையும் நாளையும் மதராஸ் கவர்ன்மெண்டார் பிரதேச கவர்ன்மெண்டார் அனுமதியின்றி மாற்றமுடியாது. வரி விதிக்கப்பட்ட அதே வருஷத்தில் வேறு இனமாக மாற்றவோ பின்னுக்காக்கவோ ஜில்லா போர்டுகளுக்கோ, பஞ்சாயத்துக்கோ அதிகாரமில்லை. [இ. பு. 338]

76. பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியையும் இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதியையும் முன்னதாகப் பெற்றுக்கொண்டு யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒரு தீர்மான மூலமாய் டிஸ்ட்ரிக்டில் யாத்திரைக்காரர்கள் போகிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திலும், அதற்கு சமீபத்திலாகிலும் உள்ளதாய் 110-வது பிரிவின்படி பிரசித்தம் செய்யப்பட்ட எந்த ஸ்டேஷனிலிருந்தாவது ரெயில் மூலமாய் பிரயாணம் செய்கிற நபர்களுக்கு வரி விதிக்கத் தீர்மானிக்கலாம்:

யாத்திரைக் காரர்களுக்கு வரி.

ஆனால், அப்படிப்பட்ட வரியிலிருந்து கிடைக்கும் தொகையில் எந்த பாகத்தையும் அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீர்ணத்திற்கு போகும் யாத்திரைக்காரர்களின் சுகாதாரத்திற்காகவும், சௌகரியத்திற்காகவும் ஏற்பாடுகள் செய்வது அல்லது அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தை சீர்படுத்துவது அல்லது விர்த்தி செய்வது ஆகிய இந்த காரியங்களை தவிர வேறே காரியங்களுக்கு செலவிடக்கூடாது.

குறிப்பு.

செ. 76. யாத்திரை வாசிகளின் சௌக்கியத்திற்காகவும், தேக ஆரோக்கியத்திற்காகவும், யாத்திரை ஸ்தலத்தை சீர்படுத்தும் அல்லது விர்த்திசெய்யும் காரியங்களுக்காக.—யாத்திரைக்காரர்கள் வரியிலிருந்து கீழ்கண்டவைகளுக்கு செலவு செய்யலாம்:

(1) யாத்திரை வாசிகளின் சௌகரியங்களுக்காகவும், (2) அவர்களின் தேக ஆரோக்கியங்களுக்காகவும், (3) யாத்திரை ஸ்தலத்தை சீர்படுத்தவும், (4) அதை விர்த்தி செய்யவும்தான் உபயோகப்படுத்தவேண்டும். பள்ளிக்கூடம் ஒன்றை நடத்துவதற்காக உபயோகப்படுத்தப்பட்டால் அது சட்ட விரோதமாகும். சௌக்கியம், சுகாதாரம் என்பது அந்தந்த சந்தர்பத்தை அனுசரித்தது. [இ. பு. 339]

வரிகளும் சுங்கங்களும் விதிப்பதற்கு சம்பந்தப்பட்ட தீர்மானமும் விளம்பரமும்.

77. (1) (a) 75-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் படியாவது 76-வது பிரிவின்படியாவது யாதொரு வரி அல்லது சுங்கத்தை விதிக்கவேண்டுமென்று நிச்சயித்து யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிறைவேற்றும் யாதொரு தீர்மானத்தில், அந்த வரி அல்லது சுங்கம் எந்த விஸ்தீர்ணத்தின் பிரதேச எல்லைகளுக்குள் விதிக்கப்படவேண்டுமோ அந்த எல்லைகளையும், எந்த வீதத்தின்படி விதிக்கப்படவேண்டுமோ அந்த வீதத்தையும், எந்தத் தேதியிலிருந்து விதிக்கப்படவேண்டுமோ அந்தத் தேதியையும், எந்தக் கால அளவுக்கு விதிக்கப்படவேண்டுமோ அந்தக் கால அளவு ஏதேனும் இருந்தால் அதையும் குறிப்பிடவேண்டும்.

(b) அப்படிப்பட்ட யாதொரு தீர்மானத்தின் மூலமாய் யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டார் எந்த வரி அல்லது சுங்கத்தையாகிலும் முதல் தடவையாகவாவது யாதொரு புதிய வீதத்தின்படியாவது விதிக்கத் தீர்மானித்தால், அந்த டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டானவர்-நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக, (a) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருப்பதும் ஷை தீர்மானத்தில் கண்டிருப்பதுமான விவரங்களைக் குறிப்பிட்டு ஒரு விளம்பரத்தை உடனே பிரசுரிக்க வேண்டும்.

(2) 75-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உபவிதியின்படி யாதொரு வரியை யாதொருகிராமத்தில் விதித்து வாங்குவதற்கு அனுமதி கொடுத்து பிரதேச கவர்ன்மெண்டார் வெளியிடும் யாதொரு விளம்பரத்தில், (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியில்சொல்லியிருக்கும் விவரங்களைக் குறிப்பிடவேண்டியதுமல்லாமல், ஷை விளம்பரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாகப் பிரசித்தம் செய்யப்படவும் வேண்டும்.

குறிப்பு.

செ. **77** (1)-(a)—வரி விதிக்கப்படவேண்டுமானால் (1) எந்த விஸ்தீரணத்தில் விதிக்கப்படுகிறதோ அந்த விஸ்தீரணத்தின் எல்லைகளை, (2) விதிக்கப்போகிற அந்த விகிதம், (3) எந்த தேதியிலிருந்து விதிக்கப்படபோகிறதோ அந்த தேதி (4) எவ்வளவு காலத்திற்கு விதிக்கப்படவேண்டுமோ அதையும் அடங்கிய டிஸ்டிரிக்ட் போர்டார் தீர்மான விளம்பரம் பிரசுரிக்கப்படவேண்டும். உப-செக்ஷன் (b)-யின் கீழும் 228-வது செக்ஷன் பார்க்கவும். [இ. பு. 339]

வரிவிதிக்க; விதிப்பதின் அநுமானம்.—வரிகளில் கட்டாமல் பாக்கியிருக்கும் வரிகளை வசூலிக்கும் வியாஜ்ஜியத்திலும் வரி விதித்திருப்பது சட்ட விரோதமானது என்று தொடரப்படும் வியாஜ்ஜியங்களிலும் வரி சட்ட சம்மதமாக விதிக்கப்பட்டதென்று அநுமானிக்கவேண்டும் அதை ஆட்சேபிப்பவர் சந்தேகமற சட்ட விரோதமானதென்று ருசுபடுத்தும் வரையில் எல்லாக்காரியமும் சட்ட சம்மதமாகவே செய்யப்பட்டதென்னும் தாத்பரியத்தின் மேல் நடக்கவேண்டும். [இ. பு. 340]

செ. **77 (1) (b). விளம்பரம் பிரசுரிக்கவேண்டும்.**—முதல் முதல் வரி அல்லது சுங்கம் விதிக்கும்போதும், பழைய விகிதம் குறைக்கப்பட்டோ அதிகப்படுத்தப்பட்டோ போகும் காலத்திலும் விளம்பரம் பிரசுரப்படுத்தவேண்டும். வரி அல்லது சுங்கத்தை குறைக்கவோ, அதிகப்படுத்தவோ சபை தீர்மானித்திருந்தாலும் அது பிரசுரப்படுத்தப்படாதவரையில் முக்கியாம் சத்திலும் வாஸ்தவமாயும் சட்டத்தின் விதியை அநுசரித்ததாக கருதப்படமாட்டாது. [இ. பு. 340]

லாண்ட் ஸெஸ் என்னும் வரி.

லாண்ட் ஸெஸ்.

78. எவ்வித காணியாட்சியின்பேரில் கைப்பற்றிலிருந்தாலுஞ்சரி, கைப்பற்றிலிருக்கும் சகல நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் லாண்ட் ஸெஸ் என்னும் வரி விதிக்கப்படும்; மேலும், அதில் டிஸ்ட்ரிக்டிலுள்ள அப்படிப்பட்ட எல்லா நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் ரூபாய்க்கு ஒன்றை அணா வீதம் விதிக்கப்படும் ஒரு வரி அடக்கும்.

நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பை இன்னபடி நிர்ணயிப்பது.

79. 78-வது பிரிவின் காரியங்களுக்காக வருஷவாரி வாடகை மதிப்பானது அடியிற்கண்டவிதமாய் கணக்கிடப் படும்.—

(i) ரயத்வாரி காணியாட்சியின்படியாவது குத்தகையாகவாவது லைஸென்ஸின்பேரிலாவது நேராய் கவர்ன்மெண்டாரிடத்தில் பெற்று கைப்பற்றி இருந்துவரும் நிலங்கள் விஷயத்திலும், எந்த ஷரத்தின்மேல் கைப்பற்றியிருப்பதாயிருந்தாலும் மலபார் டிஸ்ட்ரிக்டிலிருக்கிற நிலங்கள் விஷயத்திலுங்கூட, அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியையும் நிலங்களுக்காகக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க தீர்வை, குத்தகைத்தொகை, கப்பம் அல்லது வேறே தொகையையும் சேர்த்து, வருஷவாரி வாடகை மதிப்பாகக் கொள்ளவேண்டும்.

(ii) இனும் நிலங்கள் விஷயத்திலாவது, முழுவதுமாகிலும் கொஞ்சமட்டிலாகிலும், தீர்வையில்லாமல் கைப்பற்றியிருந்துவரும் நிலங்கள் விஷயத்திலாவது அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்கயாதொரு தண்ணீர் வரியையும் அந்த நிலங்கள் இனுமல்லாவிட்டால் அவைகளுக்குப் பூரா தீர்வை என்ன உண்டோ அந்தத் தீர்வையும் சேர்த்து வருஷவாரி வாடகை மதிப்பாகக் கொள்ளவேண்டும்; அப்படிப்பட்ட பூரா தீர்வையையும் தண்ணீர் வரியையும் ரெவின்யூ போர்டாருடைய பொதுவான உத்தரவின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் நிர்ணயிக்கவேண்டும்.

(iii) வேறே யாதொரு காணியாட்சியின்படிகைப்பற்றியிருக்கும் நிலங்கள் விஷயத்தில், அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியையும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலத்துக்குடையவருக்கு அல்லது கீழ் நிலத்துக்குடையவருக்கு அல்லது நிலத்துக்குடையவராலாவது கீழ் நிலத்துக்குடையவராலாவது உண்டாக்கப்பட்டாகிலும் முன்னிருந்ததை அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டாகிலும் ஒப்புக்கொள்ளப்பட்டாகிலுமிருக்கிற கீழ்க் காணியாட்சியின்மேல் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற வேறே யாதொரு மத்திய நிலத்துக்குடையவருக்கு அவருடைய பாயக்காரிகள்செலுத்தத்தக்க வருஷவாரி குத்தகைத் தொகையையும் சேர்த்து வருஷவாரி வாடகை மதிப்பாகக்கொள்ளவேண்டும்; அப்படிப்பட்ட நிலங்கள் சொந்தக்காரராலேயாவது குத்தகையில்லாமல் ஜாரியாகவாகிலும் அனுகூலமான குத்தகைக்காகிலும் அவரிடத்தில் நிலம் பெற்றுக்கொண்ட எவராலாவது அனுபவிக்கப்படுகிற விஷயத்திலே வருஷவாரி வாடகை மதிப்பானது-அந்தப்படி அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியும், அக்கம் பக்கத்தில் அதே வசதிகளுடன்கூடிய ரயத்தி நிலங்களுக்காக அனுபோக ரயத்துகளால் வழக்கமாகச் செலுத்தப்படும் குத்தகைத்தொகை வீதங்களும் சேர்ந்து என்ன ஆகிறதோ அதன்படி கணக்கிடப்படும்.

(iv) எந்த நிலங்களுக்குத் தீர்வை அல்லது குத்தகைத் தொகை தானியமாகச் செலுத்தப்படுகிறதோ அந்த நிலங்களின் விஷயத்தில், வருஷவாரி வாடகை மதிப்பை அக்கம்பக்கத்திலுள்ள அவ்விதமான அந்த தரவாரி நிலங்களுக்காக ஏற்படுத்தப்பட்டாவது செலுத்தப்பட்டாவதிருக்கிறகுத்தகைத்தொகை வீதங்களின் பிரகாரம் கணக்கிடவேண்டும்; முதலில் சொல்லப்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியும் மேற்படி வீதங்களுடன் சேர்க்கப்படும்; அல்லது, குறித்த யாதொரு விஷயத்தில்

அந்தப்படி கணக்கிடும் முறையானது சாத்தியமானதல்லவென்று ரெவினியு போர்டார் அபிப்பிராயப்பட்டால், அந்த விஷயத்துக்கு ரெவினியு போர்டார் அங்கீகரிக்கக்கூடிய யாதொரு முறைப்படி கணக்கிடவேண்டும்:

ஆனால், யாதொரு நிலத்துக்குடையவராவது, கீழ் நிலத்துக்குடையவராவது தண்ணீர் வரி மூலமாக இன்னும் அதிகமாய்த் தாம் கவர்ன்மெண்டாருக்கு வரிசெலுத்துவதனாலே தம்முடைய குத்தகைத் தொகையை அதிகப்படுத்திக் கொள்ள அதிகாரம் கொடுக்கும் ஒரு டிக்ரியை, அவர் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்வருஷத்து ஆக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (iii) குறிப்பிட்ட பகுதியிலும் 38-வது பிரிவிலும் கண்டிருக்கும் நிபந்தனைகளின்படி பெற்றிருக்கிற விஷயத்திலே, மேலே சொல்லியபடி நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து தண்ணீர் வரி அளவுக்கு அந்தப்படி அதிகமாக்கப்பட்ட குத்தகைத் தொகையைக் கழித்தபின் மீதியாயிருக்கும் தொகை வருஷவாரி வாடகைமதிப்பாகும்.

குறிப்பு

செ. 79 (i).—சில நிலங்கள் கவர்ன்மெண்டின் கீழ் பாயக்காரிகளால் பயிர்செய்து கவர்ன்மெண்டுக்கு, கிஸதி, அயன்பேரிஜு, குத்தகை, தொகை, ஆயம் முதலியவைகள் நேராக செலுத்தப்படுகிறது. அயன்பேரிஜு, நீர்பாய்ச்சல் வரி இரண்டும் சேர்ந்து வருஷவாரி வாடகை மதிப்பாகின்றது. மலையாளத்திலிருக்கும் எல்லா நிலங்களுக்கும் இதே விதி செல்லுபடியாகும். [இ. ப. 342]

(ii)—அயன்பேரிஜு அல்லது கிஸ்தி இவ்வளவு என்பதில்லாமல் நாமகார்த்தமாக சொல்ப தொகை கிஸ்தாக செலுத்தப்படுகிறது. அம்மாதிரி அம்சங்களில் அந்த நிலங்கள் இனும் நிலங்களாயில்லாமலிருந்தால் அதற்கு என்ன கிஸ்தி விதிக்கப்படக்கூடுமோ அதுவும், நீர்பாசனவரியும் சேர்ந்து வருஷவாரி வாடகை மதிப்பாக கருதப்படும் ரெவினியூ போர்டாரின் உத்திரவுபடி ஜில்லா கலெக்டர் வரியை நிர்ணயிக்கலாம்.

(iii).—நிலத்துக்குடையவர்களின்கீழ் அல்லது பூஸ்திதியுள்ள கிராம சொந்தக்காரர்களின் நிலம் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. குடித்தனக்காரர்கள் அவர்களுக்கு கிஸ்தி செலுத்துகிறார்கள் நில ஸ்வாதந்தரியர்கள் கவர்ன்மெண்டுக்கு பேஷ் கிஸ்தி செலுத்துகிறார்கள். பாயக்காரிகள் அல்லது குடியானவர்கள் செலுத்தும் கிஸ்தியும், நீர்பாசன வரியும் சேர்ந்து வருஷவாரி வாடகை மதிப்பு எனக் கருதப்படும். (b) சில சமயங்களில் நில ஸ்வதந்தரியக்காரர்களுக்கும், பாயக்காரிகளுக்கும், இடையில் ஒருவர் குத்தகைக்கு வருவதுண்டு (c) மற்றும் சில அம்சங்களில் நில சுவாதந்தரியக்காரர்களே பாயக்காரிகளுக்கு விடாமல் தாங்களே நாமகார்த்த தீர்வை கட்டி பயிர் செய்வதுண்டு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அக்கம்பக்கத்தில் வருஷவாரி வடகை மதிப்பு நிலங்களிருந்தால் அதன்படி மதிப்பிட வேண்டும். [இ. பு. ப. 342 & 343]

(iv).—சில நில ஸ்வாதந்தரிய கிராமங்களில், பயிராகும் தானியத்தை பங்கிட்டுக்கொள்ளும் பழக்கம் இன்னும் வழக்கத்திலிருக்கின்றது. அம்மாதிரி கிராமங்களில் அக்கம்பக்கத்து நிலத்திற்கு எம்மாதிரியான தீர்வை வசூல் செய்யப்படுகிறதோ அதுவும் நீர்ப்பாசன வரியும் சேர்ந்து வருஷவாரி வாடகை மதிப்பு ஆகும். அக்கம்பக்கம் நிலங்களின் தீர்வையை நிர்மாணம் செய்வதில் கஷ்ட அசாத்தியமாயிருந்தால் ரெவின்யூபோர்டார் வேறு முறைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரலாம் வருஷவாரி வாடகை மதிப்பு அதிகப்படும்போதும், குறையும்போதும், நிலவரி அதற்கேற்றாப்போல் அதிகரிக்கும் அல்லது குறையும். [இ. பு. ப. 343]

சில நிலத்துக்குடையவர்களும் கீழ் நிலத்துக்குடையவர்களும் தங்கள் நிலங்களைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு ஜாபிதாகொடுக்கவேண்டுமென்பது.

80. (1) டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - டிஸ்ட்ரிக்டுக்குள் சென்னபட்டணத்து 1894-ம் வருஷத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்டில் 'பூஸ்திதி' என்பதன் அர்த்தத்தைச் சேர்ந்த (a), (b) அல்லது (c) குறிப்பிட்ட பகுதியின்படி இருக்கும் யாதொரு பூஸ்திதிக்குச் சொந்தக்காரராயிருக்கும் ஒவ்வொரு நிலத்துக்குடையவரையும் கீழ் நிலத்துக்குடையவராயிருக்கும் ஒவ்வொரு நபரையும் தாம் கைப்பற்றில் வைத்திருக்கிற நிலங்களை பாயக்காரிகள் அனுபவித்தாலுஞ்சரி தாமே அனுபவித்தாலுஞ்சரி, (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விவரங்களைக் குறிப்பிட்டு அந்த நிலங்களுக்குச்

சரியான ஜாபிதா ஒன்று தயார் செய்து தமக்குக் கொடுக்கும்படி விளம்பர மூலமாகவாகிலும் மற்றப்படியாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) (a) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நிலத்துக்குடையவரால் தயார் செய்து கொடுக்கப்படும் ஜாபிதாவில்—

(i) அவருக்குக் கீழ் யாதொரு கீழ் நிலத்துக்குடையவரால் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நிலங்களின் விஷயத்திலே, அவருக்கு ஷை கீழ் நிலத்துக்குடையவரால் செலுத்தப்படத்தக்க கட்டுபடி, ஜோடி, பொறுப்பு அல்லது குவிட்ரென்டையும்,

(ii) ஷை நிலத்துக்குடையவரின் அனுபோகத்திலிருக்கும் எவையேனும் இதர நிலங்களின் விஷயத்திலே, அவருடைய பாயக்காரிகள் தண்ணீர் வரி ஏதேனும் கவர்ன்மெண்டாருக்கு நேராய்ச் செலுத்தவேண்டியிருந்தால், அப்படிப்பட்ட தண்ணீர்வரி நீங்கலாக, ஷை நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பையும் குறிப்பிடவேண்டும்.

(b) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கீழ் நிலத்துக்குடையவரால் தயார் செய்து கொடுக்கப்படும் ஜாபிதாவில், அவருடைய பாயக்காரி நேராய் தண்ணீர் வரி ஏதாவது கவர்ன்மெண்டாருக்கு நேராய்ச் செலுத்தவேண்டியிருந்தால் அப்படிப்பட்ட தண்ணீர் வரி நீங்கலாக அவருடைய அனுபோகத்திலிருக்கும் நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பைக் குறிப்பிடவேண்டும்.

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் யாதொரு ரெவினியு கிராமம் அல்லது கிராமங்களைக் கூட்டாய்க் கைப்பற்றில் வைத்திருக்கும்பட்சத்தில், (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின் காரியத்துக்காக, இதர கூட்டுக் கைப்பற்றுதாரர்களால் ஸீனியர் (மூத்த) கூட்டுக் கைப்பற்றுதாரராக ஒப்புக்கொள்ளப்படும் நபராவது அல்லது விவாதம் ஏற்படுகிற விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் அந்தப்படி ஒப்புக்கொள்ளப்படும் நபராவது நிலத்துக்குடையவராவார் அல்லது கீழ் நிலத்துக்குடையவராவார்.

ஜாபிதாப்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் வரி போடுவது.

81. 80-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின் பிரகாரம் நிலத்துக்குடையவராவது, கீழ் நிலத்துக்குடையவராவது கொடுத்த ஜாபிதா டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குத் திருப்திகரமாயிருந்தால், அவர் மேற்சொல்லியபடி நிலத்துக்குடையவர் அந்த நிலத்திற்கு உடையவருக்கு அல்லது கீழ் நிலத்துக்குடையவருக்கு அந்த ஜாபிதாவை அனுசரித்து தீர்வை விதிக்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஜாபிதாக்களைக் கொடாவிட்டால் தண்டனை.

82. யாதொரு நிலத்துக்குடையவராவது கீழ் நிலத்துக்குடையவராவது 80-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுதாம் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் அந்த உத்தரவின்படி நடந்துகொள்ளாமல் அசட்டையாயிருந்தால், அவர் - அப்படி ஜாபிதா கொடுக்கப்படுகிற வரையிலாகிலும் 83-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் அவருடைய நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பு நிச்சயிக்கப்படுகிற வரையிலாகிலும், மேலே சொன்ன ஆறு மாதம் கழிந்த பிறகு ஒவ்வொரு நாளைய ஆலசியத்துக்காகவும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவதற்கு உள்ளாவார், அந்த அபராதத் தொகை டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் நிஷ்கரிஷை செய்யப்பட்டு லாண்ட் ஸெஸ் என்னும் வரி பாக்கியைப்போல் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

83. 82-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஆறு மாத கால அளவு கழிவது முதற்கொண்டு ஒரு மாதத்திற்குள் யாதொரு நிலத்துக்குடையவராவது கீழ் நிலத்துக்குடையவராவது அப்படி ஜாபிதா கொடாவிட்டால், டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - ஷெ நிலத்துக்குடையவரின் அல்லது கீழ் நிலத்துக் குடையவரின் நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பைத் தாமே நிச்சயிக்கவேண்டும்.

வருஷ வாரி வாடகை மதிப்பை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் நிச்சயிக்கலாமென்பது.

84. 80-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின் பிரகாரம் அனுப்பப்பட்ட யாதொரு ஜாபிதா சரியானதென்று நிச்சயிப்பதற்காகவாவது, அப்படிப்பட்ட ஜாபிதா அனுப்பப்பட்டிராவிட்டால், 83-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி வருஷவாரி வாடகை மதிப்பை நிர்ணயிப்பதற்காகவாவது டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர்-கர்ணங்களைக்குறித்த சென்னபட்டணம் 1802-ம் ஷெத்து ரெகுலேஷனிலுள்ள யாதொரு நிபந்தனைக்கு விரோதமாயிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 1869-ம் ஷெத்திய சென்னபட்டணத்து ரெவுன்யூ ஸம்மன்களாக்டில் சொல்லியிருக்கிற விதமாய் நடவடிக்கைகள் நடத்தலாம்; மேலும், அவர்-அவசிமாயிருக்கும்படியான விசாரணைகளைச் செய்வதற்கு தம்முடைய உத்தியோகஸ்தர்களில் எவரையாவது நியமிக்கலாம்.

நபர்களை ஸம்மனனுப்பி வரவழைக்க டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குள்ள அதிகாரம்.

85. யாதொரு நிலத்துக்குடையவராலாவது கீழ் நிலத்துக்குடையவராலாவது டிஸ்ட்ரிக்ட கலெக்டருக்கு அனுப்பப்பட்ட யாதொரு ஜாபிதாவானது கிரமமாய் விசாரணையான பின்பு அவருக்குத் திருப்திகரமாயிராவிட்டால், அவர் அதைத் திருத்தி, அந்தப்படி திருத்தப்பட்டபடியுள்ள ஜாபிதாவுக்கு ஒரு நகலை அப்படிப்பட்ட நிலத்துக்குடையவருக்காகிலும் கீழ் நிலத்துக்குடையவருக்காகிலும் கொடுக்கவேண்டும்; அதில் அப்படிப்பட்ட நிலத்திக்குடையவரின் அல்லது கீழ் நிலத்துக்குடையவரின் நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பு அடங்கியிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ஜாபிதா திருப்திகரமாயில்லாவிட்டால் அதை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் திருத்துவது.

ரெவினியு போர்டாருக்கு அப்பீல்.

86. (1) 85-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் செய்யப்பட்ட தீர்மானத்தின்மேல் அப்பீலை ரெவினியு போர்டாருக்குச் செய்துக்கொள்ளலாகும்.

(2) திருத்தப்பட்ட ஜாபிதாவின் நகல் நிலத்துக்குடையவருக்காவது கீழ் நிலத்துக்குடையவருக்காவது சவதரிக்கப்பட்ட தேதிமுதல் ஆறு வாரத்திற்குள் அப்படி அப்பீல் செய்துக்கொள்ளவேண்டும்.

(3) அப்படிப்பட்ட அப்பீலின்மேல் ரெவின்யூ போர்டார் செய்கிற உத்தரவு முடிவானதாகும்.

ரயத்வாரி நிலங்களின் பட்டாக்களிலே லாண்ட் ஸெஸ்ஸை பதிவு செய்வது.

87. ரயத்வாரி காணியாட்சியின்படி கைப்பற்றிலிருக்கும் நிலங்கள் விஷயத்தில், நிலத்துக்குடையவர் செலுத்தத்தக்க லாண்ட் ஸெஸ் என்னும் வரித்தொகை அவருடைய பட்டாவில் பதிவு செய்யப்படும்.

நிலத்துக்குடையவர்களும் கீழ் நிலத்துக்குடையவர்களும் லாண்ட் ஸெஸ் செலுத்துவது.

88. நிலத்துக்குடையவராகிய பிரதி நபரும் கீழ் நிலத்துக்குடையவராகிய பிரதி நபரும் - தம்முடைய கைப்பற்றிலிருக்கிற நிலங்களுக்கு சந்தர்ப்பத்துக்கேற்றபடி கீழ் நிழத்துக்குடையவர் அல்லது நிலத்துக்குடையவரும் பாயக்காரியும் ஏதாவது லாண்ட் ஸெஸ் என்னும் வரித்தொகை செலுத்தும்படியானதாயிருந்தால் அப்படிப்பட்ட வரித்தொகை நீங்கலாக தாம் செலுத்தவேண்டிய லாண்ட் ஸெஸ் என்னும் வரியை எந்தெந்த தேதிகளில் எத்தனை வாயிதாக்களாய்ச் செலுத்தும்படி ரெவினியு போர்டாருடைய பொதுவான உத்தரவின் பிரகாரம் விளம்பர மூலமாய் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் நிர்ணயிக்கக் கூடுமோ அந்த தேதிகளிலாவது அவைகளுக்கு முன்னாவது அத்தனை வாயிதாக்களாய் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்திலாகிலும், அதை வாங்கிக்கொள்ள அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்ற வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலங்கள் நேராகவே கவர்ன்மெண்டாருக்குத் தண்ணீர் வரி செலுத்திக்கொண்டிருக்கிற பாயக்காரியால் அனுபவிக்கப்படுகிற பட்சத்திலே, அந்த பாயக்காரி - தண்ணீர் வரியோடு கூட அந்த தண்ணீர் வரியின்மேல் ஏற்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியையும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்தில் செலுத்தவேண்டும் :

ஆனால், ஒரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ் நிலத்துக்குடையவர் உண்டாக்கியதாகவாவது முன்னிருந்ததை அப்படியே வைத்துக்கொண்டதாகவாவது ஒப்புக்கொண்டதாகவாவதுள்ள கீழ்க்காணியாட்சியின்மேல் மத்திய நிலத்துக்குடையவராக ஒருவர் அனுபோக சுதந்தரம் பெற்றோ அல்லது பெருமலோ நிலங்களைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற சகல விஷயங்களிலும், அந்த மத்திய நிலத்துக்குடையவர் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களுக்காக நிலத்துக்குடையவர் அல்லது கீழ் நிலத்துக்குடையவர் செலுத்திய ஸெஸ் என்னும் வரியிலிருந்து, நிலத்துக்குடையவருக்கு அல்லது கீழ் நிலத்துக்குடையவருக்கு ஷை மத்திய நிலத்துக்குடையவர் செலுத்தத்தக்க யாதொரு கட்டுபடி, ஜோடி, பொறுப்பு அல்லது குவிட்ரென்டின் தொகையின்மேல் விதிக்கக்கூடிய ஸெஸ் என்னும் வரியில் பாதியைக் கழித்த பிறகு எவ்வளவு நிற்கிறதோ அவ்வளவையும் அந்த மத்திய நிலத்துக்குடையவரிடமிருந்து நிலத்துக்குடையவராகிலும் கீழ் நிலத்துக்குடையவராகிலும் வசூல் செய்வது சட்ட சம்மதமாகும் :

மேலும், பாயக்காரிகளால் அனுபவிக்கப்பட்ட நிலங்களின் விஷயத்திலே, அப்படி அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலத்துக்குடையவராவது கீழ் நிலத்துக்குடையவராவது வேறே யாதொரு மத்திய நிலத்துக்குடையவராவது செலுத்தத்தக்க தொகையில் பாதியைத் தம்முடைய பாயக்காரியிடத்திலிருந்து சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை நிலத்துக்குடையவராகிலும் கீழ் நிலத்துக்குடையவராகிலும் மத்திய நிலத்துக்குடையவராகிலும் வசூல் செய்வது சட்டசம்மதமாகும்.

நிலத்துக்குடையவர்களுக்குள்ள அதிகாரங்கள்.

89. சந்தர்ப்பத்திற்கேற்றப்படி, நிலத்துக்குடையவராகிய அல்லது கீழ் நிலத்துக்குடையவராகிய அல்லது வேறே யாதொரு மத்திய நிலத்துக்குடையவராகிய ஒவ்வொருவரும் - 88-வது பிரிவிலுள்ள விலக்கு நிபந்தனைகளின்படி தமக்குச் சேரவேண்டியதாயிருக்கும் ஏதேனும் தொகையை வசூலிப்பதில், இப்போது வழங்கிக்கொண்டாகிலும் இனி வழங்குவதாகிலும் இருக்கிற யாதொரு ஆக்ட் அல்லது ரெகுலேஷன்படி, குத்தகைத் தொகையை வசூல் செய்வதில் நிலத்துக்குடையவரெவராவது செலுத்தக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவதற்கு பாத்தியத்தை உடையவராயிருப்பதுமல்லாமல், அப்படிப்பட்ட அதிகா

ரங்களை அக்கிரமமாய் செலுத்துவதற்காக அதில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் எல்லா தண்டனைகளுக்கும் உட்படுவார்.

விவரணம்.—யாதொரு நிலத்துக்குடையவராவது கீழ் நிலத்துக்குடையவராவது - 88-வது பிரிவிலுள்ள முதலாவது விலக்கு நிபந்தனையின்படி, தமக்குச் சேரவேண்டியதாயிருக்கும் தொகையை அதில் சொல்லப்பட்டிருக்கும் மத்திய நிலத்துக்குடையவரிடமிருந்து வசூலிப்பதில், ஷை மத்திய நிலத்துக்குடையவர் பட்டா பெற்றுக்கொண்டு முச்சிலிக்கா கொடுத்திருக்கும் ரயத்தாக இருந்தால் எப்படியோ அப்படியே, இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கு பாத்தியதை உடையவராயிருப்பதுமல்லாமல் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளுக்கு உட்பட்டவருமாவார்; மேலும், பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹூத்து ஆக்டின் நிபந்தனைகள் சாத்தியமான வரையில் அது விஷயமாய்ப் பிரயோகப்படும்.

கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க நிலையாய்ப் பைச லாதியாகிய தீர்வைத் தொகை விஷயத்தில் லாண்ட்ஸெஸ் என்னும் வரியை வஜா செய்வது.

90. எவருக்கு 79-வது பிரிவு (iii) குறிப்பிட்ட பகுதி பிரயோகப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நிலத்துக்குடையவரும் - அவருடைய நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு முழுமையிலும், அப்படிப்பட்ட நிலசம்பந்தமாய் அவர் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத் தக்க நிலையாய் பைசலாதியாகிய தீர்வைத் தொகைக்குச் சமமான தொகையின் மேல் அவர் செலுத்தவேண்டிய ஸெஸ் என்னும் வரியில் பாதி வஜா பெற்றுக்கொள்ள அர்ஹராவார்:

ஆனால், 88-வது பிரிவிலுள்ள இரண்டாவது விலக்கு நிபந்தனையின்படி அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் தம்முடைய பாயக்காரிகளிடத்திலே வசூல் செய்யத்தக்க தொகையானது - அப்படி வஜா ஒத்துக் கொடுக்கப்படாதிருந்தால் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவு அவர் செலுத்தும்படியாயிருந்திருக்குமோ அந்த மொத்தத்தொகையின்மேல் கணக்கிடப்படும்.

ஸெஸ் என்னும் வரி பாக்கியை வசூல் செய்வது.

91. யாதொரு நிலத்துக்குடையவராவது கீழ் நிலத்துக்குடையவராவது தம்முடைய நிலங்களுக்காகத் தாம் செலுத்தவேண்டிய ஸெஸ் என்னும் வரி முழுவதையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது 88-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்ட எந்த தேதியிலாவது செலுத்தத் தவறிப்போயிருந்தாலும், யாதொரு பாயக்காரி தாம் அனுபவிக்கிற நிலங்களுக்காகக் கவர்ன்மெண்டாருக்கு தாம் நேரில் செலுத்தத்தக்க தண்ணீர் வரியின்மேல் தாம் செலுத்தவேண்டிய ஸெஸ் என்னும் வரி முழுவதையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது செலுத்தத் தவறிப்போயிருந்தாலும், மேற்படி ஸெஸ் என்னும் வரியாவது அதில் செலுத்தப்படாதிருக்கிற பாகமாவது - ஸர்க்கார் தீர்வையை வசூல் செய்வதற்கான 1864-ம் ஹூத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படியான தீர்வை பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூல் செய்யப்படத்தக்கதாகும்; மேலும், ஷை ஆக்ட் 42-வது பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - ஸெஸ் என்னும் வரி பாக்கிக்காக விற்பனைக்குக் கொண்டுவரப்படும் சகல நிலங்களுக்கும் பிரயோகப்படும்.

குறிப்பு.

செ. **91**.—"சர்க்கார் தீர்வையை வசூல் செய்வதற்கான 1864-ம் ஹூத்திய மதராஸ் ஆக்டின்படியான தீர்வை பாக்கியிருந்தால் எப்படியோ, அப்படியே வசூல் செய்யப்படத்தாகும்.

சென்னபட்டணத்து வரிவசூல் செய்வதற்கான 1864-ம் ஹூத்திய ஆக்ட்படி நோடீஸ் இல்லாமல் போடப்பட்ட ஏலம் சரியானதல்ல, மேற்கூறிய ஆக்ட் 59-வது செக்

ஷன்படியும்; லிமிடேஷன் ஆக்ட் 12-வது செக்ஷன்படியும் அதை ரத்துசெய்யலாம், அதில் கூறியிருக்கும் பெரும் பாகம் மதராஸ் லோகல் போர்ட்டுகள் ஆக்டின் வலத்திற்கு பொருந்தாது. (முத்துசாமி எ. ஸ்ரீ ஸ்ரீமேதிநிதி சுவாமியார், 38 Mad. 356.)

92. [மதராசு 1930-ஞூஇத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

தொழில் வரி.

93. (1) யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் தொழில் வரி விதிக்கவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒரு தீர்மானமூலமாய் நிச்சயித்தால்—

தொழில் வரி.

77-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகு, ஷை பிரதேச விஸ்தீர்ணத்திலே யாதொரு அரை வருஷத்தில் மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் வியாபாரம் நடத்தும் ஒவ்வொரு கம்பெனியும்,

ஷை தேதிக்குப் பிறகு எந்த அரை வருஷத்திலாகிலும் யாதொரு நபர்—

(a) (i) மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் ஷை பிரதேச விஸ்தீரணத்துக்குள், அல்லது

(ii) ஷை பிரதேச விஸ்தீரணத்தில் மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் வசித்துக்கொண்டிருந்து அதற்கு வெளியே யாதொரு தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்தாலும், வியாபாரம் நடத்தினாலும், ஸர்க்காரைச் சேர்ந்ததாகவோ ஸர்க்கார் சம்மதமில்லாததாகவோவுள்ள யாதொரு உத்தியோகம் வகித்தாலும், அல்லது

(b) அந்தப் பிரதேச விஸ்தீரணத்தில் மொத்தத்தில் அறுபது தினங்களுக்குத் குறைபாமல் வசித்துக்கொண்டிருந்து, யாதொரு பென்ஷனாவது ஈடுகளின்மேல் போட்டு வைத்திருக்கும் பணத்திலிருந்து யாதொரு வரும்படியாவது பெற்றுவந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் 4-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் விதிகளை அனுசரித்து விதிக்கப்பட்ட அரை வருஷ வரி செலுத்த வேண்டும்.

(2) வரிக்குட்பட்டிருப்பதாக (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல ஆதாரங்களிலிருந்தும் தமக்குக் கிடைக்கிற மொத்த வரும்படிக்குப் பொருத்தமாயுள்ள வகுப்பின்படி யாதொரு நபர் வரிக்கு உள்ளாகத்தக்கவராவார்.

(3) யாதொரு கம்பெனியார் அல்லது நபர் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள யாதொரு லோகல் போர்டுக்காவது மியுனிஸிபல் கௌன்ஸிலுக்காவது கன்டோன்மென்ட் அதிகார சபைக்காவது அதே அரை வருஷத்துக்காக இந்த ஆக்டின்படி விதிக்கப்பட்ட தொழில் வரிக்காகவாகிலும், 1919-ம் ஞூஇத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியோ 1920-ம் ஞூஇத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின் படியோ விதிக்கப்பட்ட கம்பெனி வரி அல்லது தொழில் வரிக்காகவாகிலும், 1924-ம் ஞூஇத்து கன்டோன்மென்டுகளாக்டின்படி விதிக்கப்பட்ட தொழில் வரியைப்போன்ற யாதொரு வரிக்காகவாகிலும் செலுத்தவேண்டிய தொகையைத் தாங்கள் அல்லது தாம் செலுத்தியிருப்பதாக ருஜு செய்தால், அப்படிப்பட்ட கம்பெனியார் அல்லது நபர் - வியாபார ஸ்தலத்திலாயினும், தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்வதிலாயினும், உத்தியோகத்திலாயினும் வாசஸ்தலத்தி

லாயினும் மாறுதல் ஏற்படும் காரணத்தினலேயே, ஷை தொகைக்கும் இந்த ஆக்டின்படியாவது மேலே சொல்லப்பட்ட ஆக்டுகளில் எதன்படியாவது அந்த அரை வருஷத்துக்குக் தொழில் வரி அல்லது கம்பெனி வரியாய்ச் செலுத்த அவர்கள் அல்லது அவர் மற்றபடி உட்பட்டிருக்கும் தொகைக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் அதிகமாக வேறே யாதொரு லோகல் போர்டுக்காகிலும் மியுனிஸிபல் கௌன்ஸிலுக்காகிலும் கன்டோன்மென்ட் அதிகார சபைக்காகிலும் செலுத்த உட்பட்டவராகமாட்டார்கள் அல்லது உட்பட்டவராகமாட்டார்.

(4) இந்தப் பிரிவில் கண்டதெதனுலும், யாதொரு நபர் ஒரு பிரதேச அதிகார சபையின் பிரதேச எல்லைகளுக்குள் வாசம் செய்துகொண்டிருந்து வேறே யாதொரு பிரதேச அதிகார சபை அல்லது சபைகளின் எல்லைகளுக்குள் தம்முடைய தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்தாலும், வியாபாரம் நடத்தினுலும், யாதொரு உத்தியோகத்தை வகித்தாலும், அவர் அந்தப் பிரதேச அதிகார சபைகளில் எதனுலாகிலும் விதித்து வாங்கப்படத்தக்க வரித்தொகைகளில் பெரிதாயுள்ள தொகைக்கு மேற்பட்ட தொகைக்காக தொழில் வரி செலுத்துவதற்கு உள்ளாவதாய்க் கருதப்படமாட்டாது. அப்படிப்பட்ட விஷயத்தில், பிரதேச கவர்ன்மென்டார் ஷை வரியைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி ஷை பிரதேச அதிகார சபைகளுக்குள் பங்கிடு செய்ய வேண்டும்; இது விஷயமாய் பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு.

செ. 93 போது.—பழைய ஆக்டில் தொழில் வரி, கம்பெனி வரி என இரண்டு தனித்தனி வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. கம்பெனி வரி வெளி: வியாபாரத்தின்மேல் ஐரோப்பிய கம்பெனிகளுக்கு விதிக்கப்பட்டிருந்தது. தொழில் வரியோ அந்தந்த பிரதேசத்திற்குள் நடக்கும் சிறிய வியாபாரங்கள், தொழில்கள் முதலியவைகளின்மேல் விதிக்கப்பட்டு வந்தது. நமது உள் நாட்டு கைத்தொழில்களுக்கு அரசாங்கத்தாருடைய உதவி அதிக மில்லாததால் சில லோகல் போர்டார் கைத்தொழில்களின்மேல் வரி விதிக்காமல் கம்பெனி வரி விதிக்கிருர்கள். தொழில் வரி விகிதத்தை அளவுகடந்து அதிகப்படுத்தியது உள் நாட்டு கைத்தொழில்களை தலை எடுக்கவொட்டாது நசுக்கக் கூடியதாயிருக்கிறது. இந்த செக்ஷன் திருத்தப்படும்முன் சரியாயில்லை. அதிலிருந்து அசம்பாவிதங்கள் எடுக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. கம்பெனிகளின்மேலும், நபர்களின் பேரிலும் விதிக்கப்படும் அரை வருஷத்திய வரியாகும். இந்த செக்ஷன் திருத்தப்படுமுன் (1) ஒரு பிரதேச விஸ்தீரணத்திற்குள்ளிருக்கும் நிலங்கள், வீடுகள் இவைகளினின்றும் வரும் வருமானம், (2) சர்க்கார் அல்லது இதரர்களிடம் ஊழியம் செய்வதால் கிடைக்கும் சம்பளம், (3) பென்ஷன் அல்லது வட்டியினின்றும் கிடைக்கும் வருமானம் இவைகளின்மேல் வரி விதிக்கப்படவில்லை. திருத்தப்பட்ட பிறகு மேற்கூறியவைகளும் 4-வது ஷெட்யூல்படி நியாயமாய் விதிக்கப்பட்ட வரிகளும் அமுலுக்கு வந்துவிட்டது. இப்போது தொழில் வரி (1) வியாபாரம் செய்யும் ஒவ்வொரு கம்பெனியின்பேரிலும்(2)தொழில், வியாபாரம், சர்க்கார் அல்லது இதரர்களிடம் உத்தியோகம், பென்ஷன், வட்டி வருமானம் இவைகளிலிருந்து வருமானம் கிடைக்கும் ஒவ்வொருவர்பேரிலும் போடப்பட்டிருக்கிறது. [இ. பு. ப. 355 & 356]

தொழில் வரி விதிக்கும் காலம்.—வரி விதிக்கக்கூடிய அதிகாரமுள்ள நியாயமான அதிகாரி ஒரு நபரை சரியான வகுப்பின்கீழ் சேர்த்தபிறகுதான் அந்த நபரிடமிருந்து வரி வசூலிக்கலாம்.

செ. 93 (1). பிரதேச விஸ்தீரணம்.—5-வது ஷெட்யூலில் 'வருமானம்' என்னும் தலைப்பின்கீழ் (A) (2)-படி தொழில் வரி கிராம பண்டை சேர்ந்தது. 5-வது ஷெட்யூல் 5-வது ரூல் வருமானம் (b) (c)-படி தாலூகா, அல்லது ஜில்லா பண்டின் கீழ் வருமான வரி சேர்க்கப்படவில்லை. ஆகையால் தொழில் வரி ஒரு கிராமத்தில் விதிக்கப்பட்டு வசூல் செய்து கிராம பண்டை சேருமேயொழிய கிராம பஞ்சாயத்து இல்லாத கிராமங்களில் தாலூகா அல்லது ஜில்லா போர்டார் விதித்து வசூலிக்க நியாயமில்லை. [இ. பு. ப. 357]

வியாபாரம் நடத்தும் கம்பெனிகள்.—வியாபாரம் நடத்தும் கம்பெனிகளுக்கு மட்டும் தொழில் வரி விதிக்கலாம். வியாபாரம் செய்யாமல் 1860-வது௵ கம்பெனி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்படி ஏற்படுத்தப்பட்ட சபைகளுக்கு தொழில் வரி விதிக்கக்கூடாது. நல்ல நோக்கத்துடன் ஜனங்களின் முன்னேற்றத்திற்கென ஸ்தாபித்திருக்கும் சபைகளுக்கு தொழில் வரி விதிக்கக்கூடாது. மதராஸ் மாகாணத்திலிருக்கும் அன்னிய நாட்டு கம்பெனிகளுக்கு இப்போது தொழில் வரி விதிக்கலாம். கம்பெனிக்கு ஒரு ஆபீஸ் அல்லது அரை இருந்தால் அந்த கம்பனி அந்த விஸ்தீரணத்தில் வியாபாரம் செய்வதாக எண்ணப்படும்.

[இ. பு. ப. 357]

விளம்பர பிரசுரம்.—தொழில் வரி விதிக்கும் விஷயமாய் சரியான தீர்மானம் இல்லாமலும், சட்டப்படி விளம்பர பிரசுரம் செய்யப்படாமலு மிருந்தால் அந்த தொழில்வரி கட்டவேண்டியதில்லை. 77-வது செக்ஷன்கீழ் பார்க்கவும். [இ. பு. ப. 358]

சே. 93 (1)(a). தொழில்.—தொழில் என்பது வியக்தமாய் கூறப்படவில்லை. தொழில் என்பதை பொதுவாகப் பார்க்கும் பக்ஷத்தில் சம்பளம், பென்ஷன் முதலியவைகளிலிருந்து உண்டாகும் ஊதியமும் சேர்த்துக்கொள்ளப்படும். (மதுரை ஸ்ரீ மீனாக்ஷிதேவஸ்தானம் எ. மதுரை முனிசிபல் கௌன்ஸில், 51 M. 301.) தொழில் வரி எந்த விஸ்தீரணத்தில் அதிகமாய் தொழில் நடத்தப்படுகிறதோ அந்த விஸ்தீரணத்தில்தான் போடவேண்டும். ஒரு கண்டிராக்டர் ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள டிவிஷனில் அந்த ஆபீஸில் கண்டிராக்ட் பத்திரம் எழுதிக்கொடுத்து, அந்த ஆபீஸில் அதற்குவேண்டிய போதனைகளை பெற்று, செய்தவைகளுக்கு பணம் அங்கே பெற்று வேலை மட்டும் அந்த முனிசிபாலிடிக்கு வெளியில் நடந்த போதிலும் அந்த வேலையைப்பற்றின பெரும்பான்மையான தொழில்கள் ஸ்ரீ வில்லிபுத்தூரிலேயே நடந்ததால் தொழில் வரி அந்த முனிசிபாலிடிக்கு கட்டவேண்டும். (ஸ்ரீ வில்லிபுத்தூர் முனிசிபாலிடி எ. சின்ன பூதநாயகம் பிள்ளை, 8 M.L.J. 78). ஒரு முனிசிபாலிடியிலுள்ள வக்கீல் அதற்கு வெளியிலுள்ள ஜில்லா கோர்டில் வக்கீல் தொழில்செய்து வந்தார். அவர் முனிசிபாலிடிக்குள் தொழில் செய்யப்பட்டவராய் கருதப்படுவாரென்றும், முதல் வகுப்பு வக்கீலுக்குள்ள தொழில் வரியை அந்த முனிசிபாலிடிக்கு கட்ட வேண்டுமென்றும் தீர்மானமாயிருக்கிறது. (C. ராமசாமி அய்யர் எ முனிசிபல் கௌன்சல், சேலம், 18 M. 183, வக்கீல்கள் தொழில் செய்பவர்களென்றும் அதற்கு தொழில் வரி கட்டவேண்டியவர்களென்றும் மேற்கூறிய வியாஜ்ஜியத்தில் தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. ப்ரைவேட் வக்கீல்களும் தொழில் செய்பவர்கள் அவர்களும் தொழில் வரி செலுத்தவேண்டியவர்கள். (பாளயம் கோட்டை முனிசிபாலிடி எ. அண்ணுசாமி முதலி, 6 M. 100.) பொன் யூனன் (1 Mad. 734=1 Weir. 726) கேஸில் கூறி உள்ளபடி ஒரு வண்ணான் தொழிலாளி அல்லவென்றும் ஆனால் அதிக வருமானம் வந்தால் அவனும் தொழில் வரி செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பாயிருக்கிறது. புரோகிதன், குருக்கள், அர்ச்சகன் அவர்களும் தொழிலாளிகளே. அவர்களும் தொழில் வரி கட்டவேண்டியவர்கள் (மோதிசிங் எ. ஆனந்தபூர் குறிப்பிட்ட பிரதேச கமிட்டி, A.I.R. 1923 L. 127). [இ. பு. ப. 362 & 363]

சர்க்கார் அல்லது இதரர்களிடம் உத்தியோகத்திலிருப்பது.—இந்த திருத்தப்பட்ட ஆக்ட்டுக்குமுன் சர்க்கார் அல்லது இதரர்களிடம் உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு தொழில்வரி இல்லை. ஆனால் இனி அவர்களுக்கு தொழில் வரி உண்டு. ஒருதடவை வரி போடப்பட்டால் கட்டிதான் ஆகவேண்டும் (ஹாமிக் எ. மதராஸ் முனிசிபல் கார்பொரேஷன், 22 Mad 145; பார்சிலி எ. மதராஸ் முனிசிபல் கார்போரேஷன், 23 Mad. 529 ; ஒங்கோல் முனிசிபாலிடி எ. மௌன்ஸி, 17 Mad. 453; மங்களூர் முனிசிபல் கௌன்சில் எ. இந்தியா மந்திரி, 25 Mad. 747.

வைத்திருக்கும் பொருள்மூலம் வரும் ஆதாயம் :—முதலீட்டினின்றும் கிடைக்கும் வருமானம்.—மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட் 93-வது செக்ஷன்படி வருமானம் என்றால் மொத்த வருமானமல்ல; செலவுபோக மிகுதியுள்ள மிச்ச வருமானமாகும் ஒரு யூனியன் போர்ட் ஒரு சௌகாரின் மொத்த வருமானத்தின்மேல் தொழில் வரி போட்டால் அந்த சௌகார் தனக்கு நியாயமாய் போடக்கூடிய வரிக்கு மேல் வசூலித்திருக்கும் பாக்கி தொகைக்கு 228-வது செக்ஷன்படி வியாஜ்ஜியம் தொடர அருகதையுடையவர். 'வருமானம்' என்னும் பதம் இருப்பதால் யூனியன் போர்டார் மொத்த வருமானத்தின்மேல் வரி விதித்தது நியாயமாக மாட்டாது. [இ. பு. ப. 364]

செ. **93 (2)**. **எல்லா முகாந்தரத்திலிருந்தும் கிடைக்கும் வருமானம்.**—தொழில் வரி, ஒருவர் செய்யும் தனித்தனி தொழிலிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு வருமானத்திற்கும் தனித்தனி விதிக்கக்கூடாது. ஆனல் அவருக்கு ஒவ்வொரு முகாந்தரத்தினின்றும் கிடைக்கும். வருமானங்களை ஒன்ருய் சேர்த்து மொத்த வருமானத்தின் மேல் போடவேண்டும் (1 Weir's Ruling 26 (a)). [இ. பு. ப. 366]

செ **93 (4)**. **தொழில் வரியும் சட்டசம்மதமும்—அக்கிரமாக விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டால்.**—74 (B) செக்ஷனின்கீழ் "வரிகளும் சிவில் கோர்டுகளும்" என்ற தலைப்பின் கீழும் செக்ஷன் பீடிகையின் கீழும் பார்க்கவும். ஜில்லா போர்ட்டார் வரிவிதிக்கும்படி தீர்மானிக்காவிட்டால் அந்த வரி விதிக்க நியாயமில்லை. நியாய விரோதமாய் அந்த வரி வசூல் செய்யப்பட்டால் அதை திருப்பிக் கொடுக்கும்படி சிவில் தாவா செய்யலாம். (கிருஷ்ண சணல் பருத்திசாலை எ. விஜயநகரம் முனிசிபல் கௌன்சல், A I.R. 1926 Mad. 152 (2)=91 I.C. 297). விதிக்கக்கூடிய வரி சரியாய் பிரசுரம் செய்யப்படாமல் விகிதத்தையும் குறிப்பிடாமல் 4-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிறபடி பூரா விகிதத்தை விதிக்கப்படுமென்று குறிப்பிட்டால் அந்த வரி நியாயமாய் விதிக்கப்பட்டதாகாது. அந்த வரியை வசூலிக்க தாவா தொடரவும் முடியாது. (ராஜமகேந்தரி முனிசிபல் கௌன்சல் எ. பிரசாதராயடு, A.I.R 1926 Mad 800=96 I.C. (90). ஒரு முனிசிபல் கௌன்சல் சட்ட பூர்வமாய் வசூல் செய்யக்கூடாத வரி ஒன்றை விதித்து அதை வசூல் செய்ய வியாஜ்ஜியம் செய்து அக்கிரமமாய் வசூலித்த பணத்தை சட்ட பூர்வமாய் விதிக்கப்பட்ட வரிக்கு செல்லு வைத்துக்கொண்டு அதன்மேல் வியாஜ்ஜியம் தொடரப்பட நியாயமில்லை என்று விவாதித்தார்கள். லோகல் போர்டுகள் சட்டபூர்வகமாயும் நியாயமாயும் நடப்பார்கள் என்னும் எண்ணத்தைக் கொண்டு ஏராளமான அதிகாரம் இவைகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை விட்டு தங்கள் இஷ்டப்பிரகாரம் வரி விதித்து வசூல் செய்வது மிகவும் கேவலமானது. சட்டபூர்வமாய் நடத்தவேண்டுமென்று வற்புறுத்த கோர்டுக்கு அதிகாரமுண்டு (கிருஷ்ண சனல், பருத்தி சாலை எ. முனிசிபல் கொன்சல், விஜயநகரம், A.I.R. 1926 Mad. 152 (2).

வர்த்தகக்கூட்டங்கள், சங்கங்கள், அவிபக்த ஹிந்து குடும்பங்கள் ஆகிய இவைகளைச் சேர்ந்தவர்கள் தொழில் வரிக்கு உள்ளாவது.

94. யாதொரு பர்ம் என்னும் வர்த்தகக்கூட்டத்தாரிடமிருந்தாவது சங்கத்தாரிடமிருந்தாவது அவிபக்த ஹிந்து குடும்பத்தாரிடமிருந்தாவது விதித்து வாங்கத்தக்க தொழில் வரியை, அந்த வர்த்தகக் கூட்டம், சங்கம் அல்லது குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த எந்த நபரிடமிருந்தாயினும் வாங்கலாம்.

உத்தியோகஸ்தர்கள் அல்லது ஏஜெண்டுகள் தொழில் வரிக்கு உள்ளாவது.

94-A. (1) யாதொரு கம்பெனியார் அல்லது நபர் ஒரு பிரதேச விஸ்தீரணத்தில் வியாபாரம் நடத்தும் காரியத்துக்காக தங்களுடைய அல்லது தம்முடைய பிரதிநியாயிருக்கும்படி யாதொரு உத்தியோகஸ்தரையோ ஏஜென்டையோ வேலைக்கு வைத்துக் கொண்டால், ஷை உத்தியோகஸ்தருக்காவது ஏஜெண்டுக்காவது அப்படிப்பட்ட கம்பெனியாரின் அல்லது நபரின் சார்பில் பிணைப்படுத்தும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள அதிகாரம் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி ஷை கம்பெனியார் அல்லது நபர் அந்த பிரதேச விஸ்தீரணத்தில் வியாபாரம் நடத்துவதாகக் கருதப்படுவது மல்லாமல், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஏஜென்ட் அந்தக் கம்பெனியாரின் அல்லது நபரின் வியாபாரத்தின் விஷயமாய் தொழில் வரி செலுத்துவதற்கும் உள்ளாவார்.

(2) ஒரு கம்பெனியாவது நபராவது வேருெரு கம்பெனியின் அல்லது நபரின் ஏஜென்டாயிருந்தால், முந்திய கம்பெனியாராவது நபராவது - பிரதான கம்பெனியின் அல்லது நபரின் வருமானத்தைப்போல் அதே வருமானத்தின்மேல் தனியாக தொழில் வரிக்கு உள்ளாகமாட்டார்கள்.

95. யாதொரு கிராமத்தில் விதிக்கப்படும் தொழில் வரியை அந்தக் கிராம நிதிக்கு வரவாக வைக்கவேண்டும். பஞ்சாயத்தும் அதன் ப்ரெஸிடெண்டும் - ஷெ வரியை விதிப்பது விஷயமாகவும் வசூல் செய்வது விஷயமாகவும் 4-வது ஷெட்யூலினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்தவேண்டும்.

தொழில் வரியைக் கிராமத்துக்கு வரவாக வைப்பது.

வரி செலுத்தத் தவறிப்போவதன் மேல் நோடிஸ் சேர்ப்பிப்பது.

96. யாதொரு கம்பெனி அல்லது நபரிடமிருந்து சேரவேண்டியதாகும் தொழில் வரி செலுத்தப்படாவிட்டால், பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர் - அந்த கம்பெனிக்காகிலும் ஒரு நோடிஸ் சேர்ப்பிக்கச் செய்து, அந்தப்படி சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அந்த வரியைச் செலுத்த வேண்டுமென்று அதில் காணவேண்டும்.

குறிப்பு.

செ. **96**. **நோடீஸ் தயார் செய்து அது அந்த நபருக்கு சேர்பிக்க வேண்டும்.**—வரி விதிக்கப்பட்டவர் நோடீஸ் இல்லாமலே வரி செலுத்துவது அவரது இஷ்டத்தைப் பொறுத்தது. அதைக்கொண்டு 4-வது ஷெட்யூல்படி வரியை நோடீஸ் இல்லாமல் வசூல் செய்ய அந்த பஞ்சாயத்து அல்லது லோகல் போர்ட்டுக்கு நியாயமில்லை. அந்த நோடீஸ் பிரசிடெண்டால் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். 4-வது ஷெட்யூல் 33-வது விதியைப் பார்க்கவும். நோடீஸ் இல்லாமல் ஜப்தி செய்வது வரி வசூல் செய்யும் மூலதத்துவத்திற்கு மாறுபாடானது. (சுப்பிரமணிய செட்டி எ. குடியாத்தம் முனிசிபல் கௌன்சல், A.I.R. 1926 Mad. 204=93 I.C. 658.) [இ. பு. ப. 370]

வரி வசூல் செய்யும் வழிகள்.—நோடீஸ் சேர்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் வரி செலுத்த தவறிய நபர்களின் ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து பணத்தை வசூல் செய்யலாம். 4-வது ஷெட்யூல் 33-வது விதியைப் பார்க்கவும். அது முடியாத காரியமாயிருந்தால் அந்த நபரை 33-வது விதிப்படி மாஜிஸ்ட்ரேட் முன் வியாஜ்ஜியம் தொடரப்பட்டு 4-வது ஷெட்யூல் 39-வது விதிப்படி தண்டிக்கப்படலாம். 6 (3)-வது செக்ஷன் பார்க்கவும். [இ. பு. ப. 370]

96-A. தொழில் வரி விதிப்பு சம்பந்தமாய் யாதொரு கம்பெனியாராலாவது நபராலாவது கொடுக்கப்பட்ட சகல வாக்குமூலங்களும், அல்லது அனுப்பப்பட்ட சகல ரிடர்ன்களும், அல்லது ஹாஜர்ப்படுத்தப்பட்ட சகல கணக்குகள் அல்லது தஸ்தவேஜுகளும் ரகஸியமானவையாக பாவிக்கப்படவேண்டியது மல்லாமல், அவைகளுக்கு நகல்களைப் பொதுஜனங்களுக்குக் கொடுக்கவுங்கூடாது.

வாக்குமூலங்கள், ரிடர்ன்கள் முதலியவை ரகஸியமாகுமென்பது.

குறிப்பு.

செ. **96-A**. **ரகஸியமானவையாக பாவிக்கப்பட வேண்டியது பொது ஜனங்களுக்கு கொடுக்கப்படக்கூடாது.**—தொழில்வரி ரிஜிஸ்டர்களை ஆஜர் செய்யும்படி கோர்ட்டுகள்கூட கட்டாயப்படுத்தமுடியாது. இந்த ரிஜிஸ்டரிலுள்ள பதிவுகளின் நகல்கள் பொது ஜனங்களுக்கு கொடுக்கப்படக்கூடாது. இந்த விதிக்கு மாறாக பஞ்சாயத்து பிரஸிடெண்ட் சிப்பந்திகள் அந்தரங்கமான தஸ்தாவேஜாகிய தொழில் வரி, ரிஜிஸ்டர் நகல்களை கொடுத்தாலும் இதரர்களுக்கு உரைத்தாலும் அவர்கள் இ. பி. கோ. 166-வது செக்ஷன்படி குற்றம் செய்தவர்களாக கருதப்பட்டு ஒரு வருஷத்திற்கு மேற்படாத சாதாரண தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டையுமோ அடையத்தக்கவர்கள் ஆவார்கள். [இ. பு. ப. 370]

97. பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர்-யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருக்கும் யாதொரு ஹொடேல் (போர்டிங் ஹௌஸ்) போஜன விடுதி அல்லது (லாட்ஜிங் ஹௌஸ்) தங்குவதற்கான இடம், க்ளப் அல்லது வாசஞ் செய்வதற்கான அறைகளின் ஒவ்வொரு ஸெக்ரெடரி அல்லது மானேஜருக்கும் நோடீஸ் கொடுத்து ஷெ கட்டடம், நிலம், ஹோட்டல், போஜன விடுதி அல்லது தங்குவதற்கான இடம், க்ளப் அல்லது வாசஞ் செய்வதற்கான அறைகளை அனுபவிக்கிற சகலமானவர்களுடைய பெயரையும் அப்படிப்பட்ட

வரிக்குள்ளானவர்களைக்குறித்து ஜாபிதா அனுப்பும்படி சொந்தக்காரருக்காவது அனுபோகதாருக்காவது நோடீஸ் கொடுப்பது.

ஒவ்வொருவருக்குமுரிய தொழில்-கைவினை-வேலையையும், அவர் வாடகை ஏதேனும் செலுத்தியிருந்தால் அந்த வாடகையையும் அவர் அந்தப்படி அனுபவித்துவரும் கால அளவையும் கண்டெழுதியுள்ள ஒரு ஜாபிதாவைக் குறித்த காலத்துக்குள்ளாக அனுப்பும்படி மேலேகண்ட சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரையும் ஸெக்ரெடரி அல்லது மானேஜரையும் கேட்கலாம்.

வீட்டு வரி.

வீட்டு வரி. **98.** யாதொரு கிராமத்தில் வீட்டு வரி விதிக்கப்படவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒரு தீர்மான மூலமாய் நிச்சயித்தால் அல்லது பிரதேச கவர்ன்மெண்டார் பிரசித்தஞ் செய்தால், அந்த வரியானது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி 77-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி யாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் கண்டிருக்கிற வீதப்படியும், தேதி முதற்கொண்டும், 4-வது ஷெட்யூலிலுள்ள விதிகளில் கண்டிருக்கும் திட்டங்களுக்குட்பட்டு, அந்த கிராமத்துக்குள் இருக்கும் எல்லா வீடுகளின்மேலும் விதிக்கப்படும்.

குறிப்பு.

செ. **98.**—இந்த சட்டம் திருத்தப்படுமுன் யூனியன் போர்டுகளே இருந்தன். யூனியனிலிருக்கும் வீடுகள் 75, 77-வது செக்ஷன்படி வரிகள் விதிக்கப்பட்டுவந்தன. திருத்தப்பட்ட பிறகு யூனியன் போர்டுகள் பஞ்சாயத்துகளாகவும், யூனியன்கள் கிராமங்களாகவும் மாறிப்போயின. முன் கிராம பஞ்சாயத்துகள் என்று இருந்தவைகள் இந்த சட்டத்தால் எடுபட்டுபோயின. அந்த பஞ்சாயத்துகள் இந்த சட்டப்படி இணைக்கப்பட்டு போயின. பழைய கிராம பஞ்சாயத்து ஆக்டுபடி பஞ்சாயித்திருக்கும் கிராமங்களில் வீட்டு வரி விதிக்கப்படவில்லை. 1930ஞு ஏப்ரல்மீ 1வ்க்கு முன் வீட்டு வரி விதிக்கப்படாத கிராம பஞ்சாயத்துகளில் புதிதாக வீட்டுவரி விதிக்கவேண்டுமென்று ஜில்லா போர்டார் நிர்ணயிக்க 75 (1)-வது செக்ஷன்படி அதிகாரமில்லை. இம்மாதிரி விஷயங்களில் பஞ்சாயத்துகள் தங்கள் மொத்த சங்கியையில் பாதிக்குக் குறையாத நபர்கள் கொண்ட மெஜாரிடியால் வீட்டு வரி விதிக்கவேண்டுமென்று தீர்மானித்து அந்த தீர்மானத்தை மதராஸ் கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்து 75 (2) செக்ஷன்படி விளம்பரப் பிரசுரம் செய்யும்படி சிபார்சு செய்யலாம். 99-வது செக்ஷனில் எந்த எந்த வீடுகளின் வரிகளை நிவாரணை செய்யலாமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றையவற்றிக்கு 100 முதல் 103-வது செக்ஷன்கள் வரை பார்க்கவும். யூனியன் எல்லையைத் தாண்டியிருக்கும் வீடுகளுக்கு வீட்டு வரி போட நியாயமில்லை யாதலால் அம்மாதிரி வீடு கட்டிக்கொண்டிருக்கும் ஒரு நபருக்கு 232-வது செக்ஷன்படி வீட்டுவரி விதிக்கும் விஷயமாய் சில விசாரணைகள் செய்ய ஆஜராகும்படி நோடீஸ் யூனியன் பிரசிடெண்ட் பிறப்பிக்க அந்த நோடீஸிற்கு அவர் ஆஜராகாதிருந்தால் அவர்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது. (யூனியன் போர்ட் பிரசிடெண்ட், திருக்குறங்குடி எ. நாராயண நாடார், A.I.R. 1928 Mad. 1261=55 M.L.J. 718.)

[இ. பு. ப. 371—372]

எல்லா வீடுகளின் மேலும் விதிக்கப்படும்.—3 (8)-வது செக்ஷன்படி ஆமொடு பட்டி வீடு அல்லாதலால் வீட்டு வரி விதிக்கக்கூடாது. முனிசிபல் எல்லைக்குள் நிலங்கள் இருந்தபோதிலும் கவர்ன்மெண்டார் முனிசிபாலிடிக்கு நில வரியை ஒப்படைத்தாலொழிய அது கவர்ன்மெண்டை சேர்ந்ததாகும். மேய்கால் விடுதிட்டுவது, நிலத்தை சீர்படுத்துவதற்காக செய்யப்படும் காரியமாதலால் நிலவரி கட்டும் வரையில் வேறுவித வரிகட்டவேண்டியதில்லை. பயிர் செய்யப்படும் நிலங்களில் கட்டப்பட்ட மேய்கால் விடுதிகளுக்கு முனிசிபாலிடியார் வரி விதிக்க நியாயமில்லை: முனிசிபாலிடியாருக்கு கவர்ன்மெண்டார் ஒப்படைக்காதவரையில் அது கவர்ன்மெண்டை சேர்ந்தது. முனிசிபாலிடியாருக்கு அதிகாரம் கிடையாது. (ஸ்ரீ கண்டய்யா எ. மைசூர் கவர்ன்மெண்ட், 6 Mys. L.J. 295). [இ. பு. ப. 372]

பொது நிவாரணைகள். **99.** அடியிற்கண்ட கட்டிடங்களுக்கு வீடுகளின்மேல் விதிக்கப்படும் வரி விதிக்கப்படமாட்டாது:—

(a) ஜனங்கள் தேவாராதனை செய்வதற்கென்று ஏற்படுத்தி வாஸ்தவத்தில் அப்படியே உபயோகப்படுத்தப்பட்டாவது வேறெந்த காரியத்திற்கும் உபயோகப்படுத்தப்படாமலாவதிருக்கிற கட்டிடங்களும், சத்திரங்களும், ஹாஸ்டல் உள்பட கல்வி சம்பந்தமான காரியங்களுக்காகவும் பொது ஜனங்கள் போய் வாசிக்கக்கூடிய லைப்ரெரிகள் என்னும் புத்தகசாலைகளுக்காகவும் உபயோகிக்கப்படும் கட்டிடங்களும்; திக்கற்றவர்களாவது, பிராணிகளாவது ஒதுங்குவதற்கு இடம் ஏற்படுத்தி கொடுக்கும் தர்ம காரியத்துக்காக உபயோகிக்கப்படும் பொதுவான கட்டிடங்களும், 1904-ஸூத்திய புராதன ஞாபக சின்னங்களின் ரக்ஷக ஆக்டின்படி பாதுகாக்கப்பட்டு வாசம் செய்வதற்கான இருப்பிடங்களாகவோ ஸர்கார் ஆபீஸுகளாகவோ உபயோகிக்கப்படாத புராதன ஞாபகச் சின்னங்கள் அல்லது அவைகளின் பாகங்களும்,

(b) தரும ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளும், தரும சம்பந்தமான காரியங்களுக்காக வென்றே பிரத்தியேகமாய் உபயோகப்படுகிற இதர கட்டிடங்களும்; ரயில்வே பரிபாலகர்களால் பராமரிக்கப்பட்டுப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது அறிக்கையிடப்படக்கூடிய ஆஸ்பத்திரிகளும், டிஸ்பென்ஸரிகளும்,

(c) லோகல் போர்டுகளுக்குச் சொந்தமான கட்டிடங்கள்;

(d) லைட் ஹௌஸ் என்னும் விளக்குக்கூண்டுகள்.

குறிப்பு.

செ. **99 (a). சத்திரங்கள்.**—சில வீடுகள் பெயருக்குமட்டும் சத்திரங்கள் என்று சொல்லப்பட்டு பொதுவாக எல்லோரும் வந்து தங்க இடம் தராமல் வீட்டு சொந்தக்காரர்களும் அவர்கள் சிநேகிதர்களும் வந்து தங்க ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டிடங்களுக்கு வரி விதிப்பது நியாயம். சில ஜாதியார்களுக்கு என்று ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் விடுதிகளுக்கு வரி விதிக்கப்பட வேண்டியதில்லை. வீட்டு வரி விதிக்கும் விஷயத்தில் தனித்தனி நபர்களின் விஷயத்தை ஆலோசித்து எவை எவைகளை நிவாரணை செய்வது யுக்தமோ அவைகளை நிவாரணை செய்யலாம். [இ. பு. ப. 374]

100. வீட்டு வரி ஒவ்வொரு அரை வருஷத்திலும் விதித்து வாங்கப்படவேண்டும்; மேலும், 4-வது ஷெட்யூலில் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி ஏற்றப்படி, வீட்டின் சொந்தக்காரர் - அந்த வரியை அரை வருஷம் ஆரம்பித்த பிறகு முப்பது தினங்களுக்குள் செலுத்திவிட வேண்டும்.

வீட்டு வரி எப்போது செலுத்தத்தக்கதாகுமென்பது.

குறிப்பு.

செ. **100**. பிரதி அரை வருஷத்திற்கு விதிக்கப்படவேண்டும்.—இந்த திருத்தத்திற்கு பிறகு இந்த வரி பிரதி அரை வருஷத்திற்கு விதிக்கப்படவேண்டும். [இ. பு. ப. 375]

101. (1) யாதொரு வீடு எந்த அரை வருஷத்திலாகிலும் தொடர்ச்சியாய் முப்பது தினங்களுக்காவது அதற்கு மேற்பட்டாவது காலியாயிருந்தால், பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர் - வரித்தொகையில் பாதிக்கு மேற்படாமல், அந்த அரை வருஷத்தில் எத்தனை தினங்களுக்கு அந்த வீடு காலியாயிருந்ததோ அதற்குத் தக்கபடி வஜா செய்யவேண்டும்.

காலியாயிருப்பதற்காக வஜா செய்வது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வரி வஜா செய்யும்படி கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எந்த அரை வருஷத்தில் வஜா செய்யவேண்டுமென்று கோரப்படுகிறதோ அந்த அரை வருஷத்திலாவது அதற்கு அடுத்த அரை வருஷத்திலாவது கேட்கவேண்டுமேயொழிய அதற்குப் பிறகு கேட்கக்கூடாது.

(3) (a) அப்படி வரி வஜா செய்யும்படி கேட்கப்பட்டால், அந்த வீட்டின் சொந்தக்காரராகிலும் அவருடைய ஏஜென்டாகிலும் அப்படி கேட்பதற்கு முன் ஷை வீடு காலியாயிருப்பதைப்பற்றி ப்ரெஸிடெண்டுக்கு நோடிஸ் கொடுத்திருந்தாலொழிய அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளக்கூடாது; மேலும், வரி வஜா செய்யப்படும் கால அளவை ஷை நோடிஸ் ஒப்புவிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடவேண்டும்.

(b) அப்படிப்பட்ட ஒவ்வொரு நோடிஸும் - எதில் அது ஒப்புவிக்கப்படுகிறதோ அந்த அரை வருஷம் முடிவாகும்போது செலாவணியற்றுப் போகும்; அதன் பிறகு அது செலாவணியாகாது.

குறிப்பு.

செ 101 (1). **காலியாயிருக்கிற வீடுகள்.**—எந்த நோக்கத்தைக் கொண்டு கட்டப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு விரோதமாயிருக்கும் வீடுகளைப்பற்றி இந்த செக்ஷன் சொல்லவில்லை. அந்த கட்டடம் பூமியின்மேலிருக்கும் வரையில் வரி கட்டியாகவேண்டும். காலியாயிருக்கும் வருஷத்தில் வரியில் பாதி கட்ட அந்த வீட்டுக்காரர் கடமைப்பட்டிருக்கிறார். (தஞ்சாவூர் முனிசிபல் கௌன்சல் எ. கிருஷ்ண பிள்ளை, 44 Mad. 354=40 M.L.J. 306). சில ராஜாக்களின் பங்களாக்கள் குடியிருப்புக்கு தயாராக வைக்கப்பட்டிருந்து அவர்களாவது அவர்களது நண்பர்களாவது அல்லது அவர்களது சிப்பந்திகள் வந்து தங்காவிட்டாலும் அந்த வருஷத்திய வரியை கட்ட கடமைபட்டிருக்கிறார்கள் (மதராஸ் இன்கம்டாக்ஸ் கமிஷனர் எ. நாராயண தேவ், A.I.R. 1926 Mad. 287=49 Mad. 22). கட்டி பூர்த்தியாகாத வீடு காலியாயிருக்கும் வீடாகுமா? (வாட்லமுடை பிரம்மய்யா எ. குண்டூர் முனிசிபாலிடி, A.I.R. 1926 Mad. 1007=96 I.C. 1054.) [இ. பு. ப. 376]

ட்ரான்ஸ்பர் செய்கிறவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுகிறவரும் ட்ரான்ஸ்பரைப் பற்றி நோடீஸ் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பது.

101-A. (1) யாதொரு வீட்டுக்கு விதித்திருக்கும் வீட்டு வரியைச் செலுத்த பிரதமத்தில் உட்பட்டவராயிருக்கும் யாதொரு நபருக்கு அந்த வீட்டிலாகிலும் அந்த வீட்டின்பேரிலாகிலும் ஏற்பட்டுள்ள உரிமையானது (இன்னொருவருக்கு) ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டால், யாருடைய உரிமை ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறதோ அந்த நபரும் யாருக்கு அது ட்ரான்ஸ்பர் செய்யப்படுமோ அந்த நபரும் - ட்ரான்ஸ்பர் பத்திரம் எழுதி முடிக்கப்பட்ட பிறகாவது, அந்த பத்திரம் ரெஜிஸ்டர் செய்யப்படுகிற பட்சத்திலே அந்தப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பிறகாவது, பத்திரம் எதுவும் எழுதி முடிக்கப்படாத பட்சத்தில் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட பிறகாவது மூன்று மாதங்களுக்குள்ளாக, அந்தப்படி ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதைக் குறித்து பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்கு நோடீஸ் கொடுக்கவேண்டும்.

(2) மேலேகண்டபடி பிரதமத்தில் உத்தரவாதியாயிருக்கிற யாதொரு நபர் இறந்துபோகிறபட்சத்திலே, இறந்துபோனவரின் உரிமை வாரிஸாகவோ மற்றப்படியோ யாருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படுமோ அந்த நபர் - இறந்துபோனவருடைய மரணத்திலிருந்து ஒரு வருஷத்துக்குள்ளாக அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பரைக் குறித்து ப்ரெஸிடெண்டுக்கு எழுத்து மூலமாய் நோடீஸ் கொடுக்கவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் நோடீஸானது ப்ரெஸிடெண்ட் கட்டளையிடக்கூடிய நமூனாப்படி இருக்கவேண்டும்; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவராகிலும் உரிமை யாருக்குப் போகிறதோ அந்த நபராகிலும் - அந்தப்படி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றதையோ உரிமை வழியாய் அடைந்ததையோ எண்பிப்பதற்கான எந்த தஸ்தவேஜுகளையாகிலும் ப்ரெஸிடெண்டுக்குமுன் ஹாஜர்ப்படுத்தும்படி உத்தரவு செய்யப்பட்டால், அந்தப்படியே ஹாஜர்ப்படுத்தக் கடமைப்பட்டவராவார்.

(4) ப்ரெஸிடெண்டுக்கு அப்படிப்பட்ட நோடிஸ் கொடுக்காமல் மேலே கண்டபடி ட்ரான்ஸ்பர் செய்கிற ஒவ்வொரு நபரும் - அப்படிப்பட்ட அசட்டையினால் அவருக்கு ஏற்படும் வேறே யாதொரு பொறுப்புடன்கூட, தாம் நோடீஸ் கொடுக்கிறவரையிலாகிலும் பிரஸ்தாப ட்ரான்ஸ்பரானது கிராம ரெஜிஸ்டார்களில் பதியப்பட்டாகிறவரையிலாகிலும், ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட வீட்டுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வீட்டு வரியைச் செலுத்துவதற்கு இதுவரையில் இருந்தது போலவே உட்பட்டவராயிருப்பார்; ஆனால், இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் ஷை வரியைச் செலுத்த உட்பட்டிருப்பதற்குப் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

குறிப்பு.

செ. **101 (A)**. போது.—வீட்டின் உரிமையை மாற்றும் விகிதம் எப்படி என்பதை இந்த செக்ஷன் கூறுகிறது. இந்த செக்ஷனில் எவ்வளவு காலத்திற்குள் மாற்றப்பட வேண்டுமென்றும் கூறுகிறது. [இ. பு. ப. 377]

கட்டிடம் கட்டப்படுவது, புதுப்பிக்கப்படுவது அல்லது இடித்துவிடப்படுவதைக் குறித்து நோடிஸ்கொடுக்கச் சொந்தக்காரர் கடமைப்பட்டிருப்பது.

102. (1) (a) கிராமத்திலுள்ள யாதொரு வீடு கட்டப்பட்டாலும் புதுப்பிக்கப்பட்டாலும், அந்த வீட்டைக் கட்டி முடிக்கிற தேதியோ அதை அனுபவிக்கத் தொடங்குகிற தேதியோ இவைகளில் எது முந்தியிருக்கிறதோ அந்தத் தேதி முதற்கொண்டு பதினைந்து தினங்களுக்குள் சொந்தக்காரர் அதைக்குறித்து பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்கு நோடீஸ் கொடுக்க வேண்டும்.

(b) அப்படிப்பட்ட தேதி யாதொரு அரை வருஷத்தின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், (a) குறிப்பிட்ட பகுதியின்படி நோடீஸ் கொடுப்பதற்குட்பட்டு, சொந்தக்காரர் - ஷை அரை வருஷத்துக்காக பிரஸ்தாப வீட்டின் விஷயமாய் சந்தர்ப்பத்துக்கேற்றபடி செலுத்தப்படத்தக்கதாயிருக்கும் வரி முழுவதையுமாவது உயர்த்தப்பட்ட வரி முழுவதையுமாவது வஜா செய்யப் பெறுவதற்குப் பாத்தியதை உடையவராவார்.

(c) ஷை தேதியானது யாதொரு அரை வருஷத்தின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருந்தால், (a) குறிப்பிட்ட பகுதியின்படி நோடீஸ் கொடுப்பதற்குட்பட்டு, சொந்தக்காரர்—ஷை அரை வருஷத்துக்காக பிரஸ்தாப வீட்டின் விஷயமாய் சந்தர்ப்பத்துக்கேற்றபடி செலுத்தபடத்தக்கதாயிருக்கும் வரியிலாவது உயர்த்தப்பட்ட வரியிலாவது பாதிக்கு மேற்படாமல், அந்த அரை வருஷத்தில் ஷை தேதிக்கு முற்பட்டுள்ள தினங்களின் சங்கியைக்கு வீதாசாரப்படியுள்ள பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உடையவராவார்.

(2) (a) கிராமத்திலுள்ள யாதொரு வீடு இடித்துவிடப்பட்டாலும் அழித்துவிடப்பட்டாலும், சொந்தக்காரர் - அதைக் குறித்து ப்ரெஸிடெண்டுக்கு நோடீஸ் கொடுக்கிறவரையில், அவருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி, அந்த வீடு இடித்துவிடப்படாமலிருந்தாலும் அழித்துவிடப்படாமலிருந்தாலும் செலுத்தத் தக்கதாயிருந்திருக்கும் வரி செலுத்துவதற்கு உட்பட்டவராவார்.

(b) ஷை நோடிஸ் யாதொரு அரை வருஷத்தின் முதல் இரண்டு மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டால், சொந்தக்காரர்-அந்த அரை வருஷத்துக்காக அந்த வீட்டின் விஷயமாய் செலுத்தப்படத்தக்கதாயிருக்கும் வரி முழுவதையும் வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உடையவராவார்.

(c) ஷை நோடீஸ் யாதொரு அரை வருஷத்தின் கடைசி நான்கு மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டால், சொந்தக்காரர்-ஷை அரை வருஷத்துக்காக பிரஸ்தாப வீட்டின் விஷயமாய் செலுத்தப்படத்தக்கதாயிருக்கும் வரியில்

பாதிக்கு மேற்படாமல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி இடித்துவிடப்பட்டதற்கோ அழித்துவிடப்பட்டதற்கோ முற்பட்டு அந்த அரை வருஷத்திலுள்ள தினங்களின் சங்கியைக்கு விதாசாரப்படியுள்ள பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உடையவராவார்.

குறிப்பு.

செ. 102. போது.—இந்த செக்ஷன் தண்ட விஷயமானது. கட்டடம் கட்டப்பட்ட 15 தினங்களுக்குள் பிரசிடெண்ட்டுக்கு நோடீஸ் மூலமாய் தெறிவிக்கவேண்டு மென்று கிராமத்திலிருக்கும் கிராமவாசிகளுக்கு தெறியாது. ஆகையால் பிரஸிடெண்ட்கள் அவர்களே ஜில்லா முனிசிபாலிடி ஆக்டில் சொல்லியபடி கட்டுமுன் பிரஸிடெண்ட்டின் அனுமதி பெற்று கட்டவேண்டு மென்று இருக்கிற விதிக்கு விரோதமாய் கட்டடங்கள் கட்டுபவர்களே அவர்கள் தண்டனைக்கு உள் ஆக்குவதுபோல் கிராம பஞ்சாயத்துதார்கள் செய்யக்கூடாது. பழைய வீடு இடிக்கப்பட்டு போனாலும், காலியா யிருந்தாலும் வரியைக் குறைக்கவும், புதிதாய் சேர்க்கப் பட்டாலும், கட்டப்பட்டாலும் வரியை அதிகப்படுத்தவும் பிரஸிடெண்டுக்கு அவகாசம் கொடுக் கும்பொருட்டு இந்த உப செக்ஷன் ஏற்படுத்தப்பட்டது. எந்த அரை வருஷத்தில் வரி ஏற்படுத்தப்படுகிறதோ அப்போது அந்த வீட்டை கட்டி முடிந்த தேதி யாதொரு அரை வருஷத் தின் கடைசி இரண்டுமாத காலத்துக்குட்பட்டிருந்தால், அந்த அரை வருஷத்திற்காக அந்த வீட்டின் பொருட்டு சந்தர்பத்திற்கேற்றபடி யாதொரு வரியையாவது உயர்த்தப்பட்ட வரியையாவது விதித்து வாங்கக்கூடாது. சொந்தக்காரர் பிரசிடெண்டுக்கு நோடீஸ் கொடுத்தவுடன் பிரசிடெண்ட் பில் தயாரிக்கவேண்டும். [இ. பு. ப. 379]

அரை வருஷத்தின் நடுவில் சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட விஸ்தீர்ணங்களில் வரி வஜா செய்வது.

102-A. (1) யாதொரு விஸ்தீரணம் ஒரு கிராமத்துக் குள் சேர்க்கப்பட்டால், அப்படிப்பட்ட விஸ்தீரணத்திலுள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(a) அப்படி சேர்க்கப்பட்ட தேதியானது யாதொரு அரை வருஷத் தின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், அது விஷயமாய் அந்த அரை வருஷத்துக்கு வீட்டு வரி எதுவும் செலுத்துவதற்கு உள்ளாக மாட்டார்; மேலும்,

(b) அப்படிப்பட்ட தேதியானது யாதொரு அரை வருஷத்தின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருந்தால், ஷை அரை வருஷத்துக்காக அது விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வீட்டு வரியில் பாதிக்கு மேற்படாமல் ஷை தேதிக்கு முற்பட்டு அந்த அரை வருஷத்திலுள்ள தினங்களின் சங்கியைக்கு விதாசாரப்படியுள்ள பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உடையவராவார்.

(2) யாதொரு விஸ்தீர்ணம் ஒரு கிராமத்திலிருந்து விலக்கப்பட்டால், அப்படிப்பட்ட விஸ்தீரணத்திலுள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(a) அப்படி விலக்கப்பட்ட தேதியானது யாதொரு அரை வருஷத் தின் முதல் இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், அது விஷயமாய் அந்த அரை வருஷத்துக்குச் செலுத்தப்படத்தக்க வீட்டு வரி முழுவதும் வஜா செய்யப் பெறுவதற்கும்,

(b) ஷை தேதியானது யாதொரு அரை வருஷத்தின் கடைசி நான்கு மாதங்களுக்குள் இருந்தால், அந்த அரை வருஷத்துக்காக அது விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வீட்டு வரியில் பாதிக்கு மேற்படாமல் ஷை தேதிக்கு முற் பட்டு அந்த அரை வருஷத்திலுள்ள தினங்களின் சங்கியைக்கு விதாசாரப்படி யுள்ள பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்கும் பாத்தியதை உடையவராவார்.

(3) யாதொரு வீட்டின் விஷயமாய் வரி வஜா செய்யவேண்டுமென்று அந்த வீடு உள்ள விஸ்திரணம் விலக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ப்ரெஸிடெண்டுக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்டாலொழிய, ஷை வீட்டு விஷயமாய் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வரி வஜா எதுவும் செய்யப்படமாட்டாது.

குறிப்பு.

செ. **102-A**. போது.—வருஷத்தின் நடுவில் ஒரு கிராமத்தில் சில வீடுக்களை சேர்க்கும் அல்லது விலக்கும் விஷயத்தைக் குறித்தது. 101-வது செக்ஷனில் வரி விதிக்கும் அல்லது எடுக்கும் விஷயத்தில் கூறப்பட்டவைகள் இங்கு பொருந்தும்.
[இ. பு. ப. 380]

வறுமை காரணமாக வரி நிவாரணை.

103. பஞ்சாயத்தானது—கிராமத்திலிருக்கிற யாதொரு வீட்டின் சொந்தக்காரரை வறுமை காரணமாக வரி முழுவதையுமாகிலும் அதில் யாதொரு பாகத்தையாகிலும் செலுத்துவதினின்றும் நிவாரணை செய்யலாம். அந்தப் பிரகாரமே டிஸ்டிரிக்ட் போர்டார் - எந்த வகுப்புகளைச் சேர்ந்த வீடுகளின் சொந்தக்காரர்களையும் நிவாரணை செய்பலாம்.

குறிப்பு.

செ. **103**.—பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்ட் ஒருவர் கட்டவேண்டிய பூரா வரியையோ அல்லது கொஞ்ச தொகையோ எழ்மை தனத்தை முன்னிட்டு வஜா செய்து கொடுக்கலாம். 111-வது செக்ஷன்படி ஜில்லா போர்ட் ஒரு நபரை அல்லது ஒரு வகுப்பைச் சேர்ந்த பல நபர்களை 75-வது செக்ஷனில் சொல்லியிருக்கும் வரிகளில் ஒன்றையோ அல்லது யாவற்றையும் குறைக்கவோ வஜா செய்துகொடுக்க அதிகாரமுணடு. எழ்மைத்தனம் காரணமாக யூனியன் போர்டார் குறிப்பிட்ட நபர்களுக்கு வஜா செய்யலாமேயொழிய ஒரு சேரியிலுள்ள எல்லா வீடுகளுக்கும் வருஷத்தில் வாடகை 20 ரூபாய்க்கு வரக்கூடிய வீடுகளுக்கும் வஜா கொடுத்தது 4-வது ஷெட்யூல் 15-வது விதிப்படி அவர்களுக்கிருக்கும் அதிகாரத்தை மீறியதாகுமென்றும் அம்மாதிரி அவர்கள் செய்தது பிசகென்றும் கணக்கு பரிசோதகர் சொல்வது சரி. (கஜெட் பக்கம் 75 தேதி 10-2-25 ; Feb. 3 ; 1925 G. O. Mis. No. 380, L. & M.) [இ. பு. ப. 380]

[செ. **104—109** வரையில் 1931-வருஷத்திய மதராசு மோட்டார் வண்டிகளின் மேல் வரி விதிப்பு சட்டத்தால் ரத்தாகி விட்டது.]

யாத்திரைக்காரர்களுக்கு வரி.

யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிப்பது.

110. (1) யாதொரு பிரதேச விஸ்தீரணம் யாத்திரைக்காரர்கள் போகும் இடமாய் இருந்து யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் சில வருஷங்களுக்கு ஒரு முறையாகவாவது ஒரே வருஷத்தில் ஒரு முறை அல்லது இரண்டு முறைமாத்திரமேயாவது ஏற்படுகிற பட்சத்தில், அந்தப் பிரதேச விஸ்திரணத்தையாகிலும் அதன் சமீபத்திலுள்ள இடத்தையாகிலும் விட்டு ரெயில் மூலமாய் வெளியே போகும் நபர்களுக்கு மேலேகண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் விஷயமாகவும் குறித்த ஒரு கால அளவுக்கு மாத்திரமே வரி விதிக்கவேண்டும். யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் இதைவிட அடிக்கடி ஏற்படுவதாயிருந்தாலும், யாதொரு இடமானது ஜனங்கள் வருஷ முழுவதும் யாத்திரை போகக்கூடிய ஸ்தலமாயிருந்தாலும், வருஷமுழுவதும் ஷை வரி விதிக்கலாம்.

(2) இன்ன சந்தர்ப்பத்திலும் இன்ன கால அளவுக்கும் டெர்மினல் வரி விதிக்கவேண்டுமென்பதை டிஸ்ட்ரிக்ட் போர்டார் - சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களுடன் கலந்து ஆலோசித்தும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றும் நிச்சயிக்கவேண்டும்.

(3) டிஸ்ட்ரிக்ட் போர்டார் டெர்மினல் வரி விதிக்கவேண்டுமென்று ஒரு தீர்மான மூலமாய் நிச்சயித்தால், அந்த வரியை - மேற்படி தீர்மானத்தை அனுசரித்து 77-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்தும் கால அளவிலும், அந்தப் பிரதேச விஸ்தீரணத்திலாவது அதன் சமீபத்திலாவது இருப்பவைகளும் மேற்படி விளம்பரத்தில் பெயர் குறிப்பிட்டவைகளுமான ரெயில்வே ஸ்டேஷன்களில் ஏதாவது ஒரு ஸ்டேஷனை விட்டு அதிலிருந்து குறிப்பிடப்பட்டதற்கு அதிகமான தூரத்தில் இருக்கிற வேறே யாதொரு ரெயில்வே ஸ்டேஷனுக்கு ரெயில் மூலமாய்ப் பிரயாணம் செய்யும் சகல பிரயாணிகளின் டிக்கெட்டுகளின்மேலும் அதிகப்படியான கட்டணமாக வசூலிக்கவேண்டும்.

(4) ஒவ்வொரு வகுப்பு டிக்கெட்டுகளின்மேலும் விதிக்கப்படவேண்டிய இந்த வரியின் வீதங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிச்சயிக்கவேண்டும்; ஆனால், அவை பின்வரும் அட்டவணையில் கண்டிருக்கும் வீதங்களுக்கு மேற்படக் கூடாது :—

		வரி.	
		வரையறுக்கப்பட்ட கால அளவுகளுக்கு.	வருஷ முழுவதும்.
(1)		(2)	(3)
		ரூ. அ. பை.	ரூ. அ. பை.
முதல் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	....	0 8 0	0 4 0
இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	....	0 4 0	0 2 0
மத்திய வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	....	0 3 0	0 1 6
மூன்றாம் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	....	0 2 0	0 1 0

ஆனால், ஸீஸன் டிக்கெட் என்னும் குறித்த கால அளவுகளுக்கு ஒரே டிக்கெட்டாகக் கொடுக்கப்படும் டிக்கெட்டுகள் எவையேனும் இருந்தால், அவைகளின் விஷயத்தில் விதிக்கவேண்டிய வீதங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டார் சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களோடு கலந்து ஆலோசித்து நிச்சயிக்கவேண்டும்; ஆனால், ஒரு மாதம் அல்லது அதற்குக் குறைந்த யாதொரு கால அளவுக்கு அந்த வீதங்கள் மேலேகண்ட அட்டவணையின் (2) குறிப்பிட்ட காலத்தில் கண்டிருக்கும் வீதங்களுக்கு ஆறு மடங்குக்கு அதிகப்படக்கூடாது.

(5) பிரதேச கவர்ன்மெண்டார்—

(i) டெர்மினல் வரி வசூலிப்பதையும்,

(ii) அதைச் சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்குக் கொடுப்பதையும்,

(iii) அதை வசூலிப்பதில் ரெயில்வே பரிபாலகர்களால் செய்யப்பட்ட எவையேனும் செலவுகளைக் கழித்துக்கொள்வதையும்,

(iv) டெர்மினல் வரி விதிப்பது, வசூலிப்பது அல்லது அதைப் பங்கிடு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில்

(a) லோகல் போர்டுகளுக்கு இடையிலும் லோகல் போர்டுகளுக்கும் இதர பிரதேச அதிகார சபைகளுக்கும் இடையிலும்,

(b) இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு லோகல் போர்டுகளுக்கும் ரெயில்வே பரிபாலகர்களுக்கும் இடையிலும்,

ஏற்படும் விவாதங்களைத் தீர்மானம் செய்வதையும் குறித்து ஒழுங் கேற்படுத்துவதற்காக இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்.

வரிகள் அல்லது சுங்கங்கள் செலுத்துவதினின்றும் நிவாரணையும், வசூலிக்கும் உரிமையை விட்டுவிடுவதும்.

111. 103-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட் பட்டு, டிஸ்ட்ரிக்ட் போர்டார்-யாதொரு வரி அல்லது சுங்கம் செலுத்துவதினின்றும் யாதொரு நபரை அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களை முழுவதுமாவது சிறிது மட்டிலாவது நிவாரணை செய்யலாம்.

ஆனால், இந்த பிரிவிலுள்ள எததனுலும் யாதொரு நபர் லோகல் போர்டில் மெம்பராயிருக்கிறுரென்னும் காரணத்தைக்கொண்டே-அவருக்கு நிவாரணை செய்து கொடுக்க அதிகாரம் ஏற்படுவதாக கருதக்கூடாது.

வசூலிக்க முடியாத வரிகள் முதலியவைகளைக் கணக்கிலிருந்து அடித்துவிட அதிகாரம்.

111-A. லோகல் போர்டார் யாதொரு ஒப்பந்தத்தின் படியாகிலுஞ் சரி மற்றப்படியாகிலுஞ்சரி, தங்களுக்குச் சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு வரி, கட்டணம் அல்லது வேறே எந்தப் பணமாவது, அது சம்பந்தமாய்ச் செலுத்தத்தக்கதாகும் யாதொரு தொகையாவது வசூலிக்க முடியாததென்று அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - நிர்ணயிக்கப்படக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டு அப்படிப் பட்ட வரி, கட்டணம், பணம் அல்லது தொகையைக் கணக் கிலிருந்து அடித்துவிடலாம்.

குறிப்பு.

செ. **111**. டிஸ்டிரிக்ட் போர்டார் நிவாரணை செய்யலாம்.—யாதொரு வரி அல்லது சுங்கம் செலுத்துவதினின்றும் யாதொரு நபரை அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களை முழுதுமாவது, சிறிதுமட்டிலாவது நிவாரணை செய்ய டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அதிகாரமேயொழிய மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு கிடையாது. மதராஸ் கவர்ன்மெண்டால் சிப்பாய்களுக்கு நிலவரி தள்ளப்பட்டபோதிலும் அது ஜில்லா போர்டின் அங்கீகாரம் பெறவேண்டும். அதன் பிறகு அதை வசூலிப்பதை நிறுத்தலாம். (கெஜட், பக்கம் 184, தேதி 20-5-1924). ஆகையால் எந்த வரியையாவது நிவாரணை செய்ய ஜில்லா போர்டார்தான் நியாயமான அதிகாரிகள்.

ஒரு மெம்பர் என்ற ஹோதாவினுல் அவருக்கு நிவாரணை செய்யகூடாது.—இந்த புது வாக்கியம் திருத்தப்பட்ட ஆக்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சில ஜில்லா போர்டுகளில் மெம்பர்கள் சுங்கம் கட்டவேண்டியதில்லை என்று தீர்மானித்திருக்கிறுர்கள். அது இதனுல் எடுபட்டுப் போய்விட்டது. பிரஸிடெண்டும் நிர்வாக அதிகாரிகளாகையால் அவர்களுக்கு மட்டும் சுங்கம் கிடையாது. [இ. பு. ப. 390]

கலம்பகம்.—கால் நடை ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகச் செல்லும் பளுவில்லா கால் நடைகள் லோகல் போர்டுகளில் செல்லும்கால் சுங்கம் வாங்கக்கூடாது என்று மதராஸ் கவர்ன்மெண்ட் உத்திரவு பிறபித்திருக்கிறுர்கள். (G. O. No. 1474; 10th Oct., 1923, கஜட், 512, பக்கம் 20 நவம்பர், 1923, No. 925.) [இ. பு. ப. 390]

7-ம் அத்தியாயம்.

திரவிய விஷயத்துக்கு சம்பந்தப்பட்ட பொதுவான நிபந்தனைகள்.

லோகல் பண்டுகளை இன்ன காரியங்களுக்கு உபயோகிக்கலாமென்பது.

112. (1) இந்த ஆக்டின்படி வரபெற்றுக்கொள்ளப்படும் பணத்தை உபயோகிக்கக்கூடிய காரியங்கள் எவையென்றால், பொதுவாய் அது சம்பந்தப்பட்ட பிரதேச விஸ்தீர்ணத்தில் குடியிருப்பவர்களின் க்ஷேமம்-தேகாரோக்கியம் - சௌகரியம் அல்லது கல்வியின் விஷயமாகவாகிலும் அந்த விஸ்தீர்ணத்தை மனோகரப்படுத்துவதற்காக வாகிலும் அவசியமாயிருக்கிற அல்லது அனுகுணமாயிருக்கிற ஒவ்வொரு காரியமும், பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காரியமுமாகும்; மேலும், அந்தக் காரியங்களில் முக்கியமாய் அடிற்கண்டவைகளும் அடங்கும்:—

(i) பாட்டைகளையும், வாராவதிகளையும், போக்குவரவுக்கான இதர வசதிகளையும் உண்டுபண்ணி மராமத்துசெய்து பராமரித்துவருவது;

(ii) பொது பாட்டைகளின் பக்கங்களிலும் மற்றப் பொது இடங்களிலும் மரங்களை நடுவதும் லோகல் போர்டாரால் நடப்பட்ட அல்லது அவர்களுக்குச் சொந்தமாயிருக்கிற மரங்களைக் காப்பாற்றிவருவது;

(iii) ஆஸ்பத்திரிகளையும், டிஸ்பென்ஸரிகளையும், ஏழைகளை ஆதரிப்பதற்கான சாலைகளையும், அனாதை குழந்தைகளுக்கான இடங்களையும், சத்திரங்களையும், மார்க்கெட்டுகளையும், கடைகளையும், கொட்டில்களையும் (Plinth), அடிப்பரப்புகளையும், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும், பாரவண்டி நிற்கும் இடங்களையும், ஜலதாரைகளையும், சாக்கடைக்கால்களையும் மலஜலபாதை மறைவிடங்களையும், ஜலசூத்திரங்களையும், குளங்களையும், கிணறுகளையும் கட்டி பராமரித்து வருவது, அப்படிப்பட்ட கட்டிடங்கள் அல்லது கட்டுவேலைகள் எதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றனவோ அந்த விஷயங்களைச் சேர்ந்த சகல செலவுகளையும் செலுத்துவது, அம்மைகுத்துகிறவர்களைப் பயிற்றி உத்தியோகத்தில் வைத்துக்கொள்வது, பட்டணங்கள் கிராமங்கள் இவற்றின் ஆரோக்கியத்தைக்குறித்து ஏற்பாடுபண்ணுவது, ஜனநெருக்கத்தை அகற்றுவது, வீடுகள் கட்டிக்கொள்வதற்கான மனைகளை ஏற்படுத்துவது, பாட்டைகளையும் ஜலதாரைகளையும் சாக்கடைக்கால்களையும் மலஜலபாதை மறைவிடங்களையும் குளங்களையும் கிணறுகளையும் சுத்திபண்ணுவது, அதுபோன்ற மற்ற வேலைகள் செய்வது;

(iv) தேகாரோக்கியம், க்ஷேமம் இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சங்கங்களின் அல்லது ஏழைகளை ஆதரித்து சகாயம் செய்வதற்காகவாவது, வியாதி அல்லது பலஹீனத்துக்குச் சிகிச்சை செய்வதற்காகவாவது, வியாதிஸ்தர்களையோ பலஹீனர்களையோ வரவேற்று ஆதரிப்பதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் நிதிக்கு பொருளுதவி செய்வது;

(v) கல்வியைப் பரவச்செய்வது, இந்தநோக்கத்தோடு பாடசாலைகளைக் கட்டி மராமத்து செய்வது, பாடசாலைகளை ஏற்படுத்தி பராமரித்து வருவது, பாடசாலைகளைப் பார்வையிடுவது, லைப்ரெரிகளையும் (புஸ்தகசாலைகளையும்) வாசகசாலைகளையும் ஏற்படுத்தி பராமரித்து வருவது;

(vi) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட ஊழியக்காரர்களுக்குச் சம்பளமும் ரஜா வர்த்தனையும் பென்ஷனும் க்ராட்யூட்டியும் (நன்கொடையும்) தயா விஷயமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனையும் கொடுப்பது;

(vii) லோகல் போர்டாரால் சட்டப்படி வாங்கப்பட்ட எவையேனும் கடன்களின்மேல் பாக்கியாக ஏற்படுகிற தொகைகளைச் செலுத்துவது;

(viii) கோர்ட்டின் யாதொரு டிக்ரியின்படி செலுத்தவேண்டியதாகிற தொகைகளையும், லோகல் போர்டாரால் ஜாரி செய்யப்பட்ட வஜா தொகைகளையும் கொடுப்பது;

(ix) (விவசாய ஸ்தாபனங்கள் அல்லது கைத்தொழில் ஸ்தாபனங்கள் அல்லது வியாபார ஸ்தாபனங்கள் உள்பட) ஜனங்களுடைய பத்திரத்தையாவது சுகத்தையாவது சௌக்கியத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனுகுணமான பொதுஜன உபயோகத்துக்கடுத்த மற்றப்பிரதேச வேலைகள்;

(2) யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த பணமானது-அந்த லோகல் போர்ட் விஸ்தீர்ணத்துக்குள் 5-வது ஷெட்யூலிற் கண்ட விதிகளுக்கும் நிர்ணயிக்கப்படக்கூடிய பின்னும் எவையேனும் விதிகளுக்கும் உட்பட்டு (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் காரியங்களுக்கு உபயோகிக்கப்படத்தக்கதாகும்; மேலும் ஷை பணத்தை லோகல் போர்ட் விஸ்தீர்ணத்துக்கு வெளியே அப்படிப்பட்ட காரியங்களுக்குச் செலவழிக்க இந்த ஆக்டினால் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும் பிரத்தியேகமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும், அது மேற்சொன்ன விதிகளுக்கு உட்பட்டு அந்தக் காரியங்களுக்கு உபயோகிக்கப்படத்தக்கதாகும்.

குறிப்பு.

செ. **112** (1) (**ii**). மரங்கள்—ஒரு லோகல் போர்ட் தன் பிரதேச விஸ்தீரணத்திலுள்ள ரோட்டுகளின் இருபக்கத்திலும் மரங்களை சாலைகளாக வைத்தது. அந்த மரங்களின் கிளைகள் தழைத்து அக்கம்பக்கத்திலிருக்கும் நிலங்களில் நிழல் தந்து பயிர்களை பாழ்படுத்தியது. வாதி அந்த கிளைகளை வெட்டும்படி உத்திரவிடவும் அதனால் உண்டான நஷ்டத்தை கட்டிக் கொடுக்குமாறு தீர்ப்பு கூறவும் தாவா தொடர்ந்தார். ரோட்டின் பக்கத்தில் செடிகளை வேண்டுமென்றாவது அஜாக்கிறதையுடனிருந்தார் என்றாவது கூறவுமில்லை, ருசுபடுத்தவுமில்லை. லோகல் போர்டாருடைய காரியங்களினாலாவது, செய்யத் தவறினதனாலாவது உண்டாகும் நஷ்டங்களை லோகல் போர்ட்டார் கட்டிக்கொடுக்கவேண்டியவர்களென்று வாதி வாதாடினார். 112 செக்ஷன்படி தங்கள் காரியங்களின் நடைமுறையாக லோகல் போர்டார் செடிகளை நட்டார்கள். அவர்கள் முதல் முதல் நடும்போது கெட்ட எண்ணத்தைக் கொண்டாகிலும், அவர்களுக்கு சட்ட பூர்வமாய் ஏற்படுத்தப்பட்டவைகளுக்கு விரோதமாகவும் நடந்ததாக வாதி ருசுசெய்யவில்லை. ஆகையால் (1) அதன் பயனாக ஏற்பட்ட நஷ்டத்திற்கு லோகல் போர்டார் ஜவாப்தாரி அல்ல என்றும், (2) கிளைகளை வெட்டுவது லோகல் போர்டார் செய்யக்கூடியதை செய்யவில்லை என்று மூன்றாவது நபர் தாவா தொடர முடியாதென்றும், தனிப்பட்ட நபர் அதற்காக பரிகாரம் தேட அருகதை அற்றவரென்றும், (3) வாதியின் தாவா ஆகையால் நிற்கக்கூடியதல்லவென்றும் தீர்ப்பு கூறி தாவாவை தள்ளிவிட்டார். (கிருஷ்ணமூர்த்தி அய்யர் எ மாயவரம் முனிசிபாலிடி, 42 Mad. 331). ஒரு முனிசிபாலிடியார் செடிகளை நடவும், எடுக்கவும் அதிகாரமுடையவர். முனிசிபல் விஸ்தீரணத்திற்குள் சுகாதார விஷயத்திலும் பொது பரிபாலத்திலும் அக்கரையுடையவர்களாகையால் அவர்களுக்கு பூரண அதிகாரமுண்டு. ஆனால் அவர்களுக்கு சொந்தமில்லாத மரங்களை திரவ்விய லாபத்திற்கு விடக்கூடாது. (பசல்கரீம்கான் எ. ஊர்மூர் முனிசிபல் கமிட்டி, 38 I.C. 93). இதரர்களுடைய நிலங்களின்மேல் நிழல் படும் கிளைகளுக்கு லோகல் போர்டார் ஸ்வதந்தர பாத்தியதை கொண்டாட முடியாது. ஒருவருடைய நிலத்தின்மேல் நிழல்விழும்படி மற்றொருவருடைய மரத்தை விட்டு வைப்பதினால்மட்டும் அவருக்கு ஸ்வதந்தரபாத்தியதை உண்டாகாது. அதை ஒருவருக்காக கொண்டாடவும் முடியாது. தென்னைமரத்து மட்டைகள் மற்றவருடைய நிலங்களின்மேல் நிழல் தருவதை ஒரு ஊரார்தடுக்கும் வழக்கமில்லை என்று சொல்லுவது பொருந்தாது. வருஷாவருஷம் உயரும் செடிகள் நிழல்தரும் விஷயம் ஒரு முடிவான மாமூலின் கீழ்வரக்கூடியதல்ல. அம்மாதிரி நிழலைத்தரும் கிளைகளை எடுத்துவிடும்படி கோர்டுகள் கட்டளை இடலாமேயொழிய அதற்காக நஷ்டஈடு கொடுக்கக்கூடாது. (குருசாமி ராஜு எ.

பெருமாள்ராஜு, A.I.R. 1929 Mad. 815). லோகல் போர்டாரின் மேல்பார்வையிலிருக்கும் மரங்களின் கிளைகள் அக்கம்பக்கம் நிலங்களுக்கு நிழல் தந்து அதனால் நஷ்டம் ஏற்படுகிறதென்கிற சங்கதியை மேற்படி லோகல் போர்டாருக்கு தெறுவித்தும், அவர்கள் அதை பொருட்படுத்தாமலிருந்தால் அவர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற தவறிவிட்டார்களாகையால் அவர்களின்பேரில் நஷ்ட ஈடு தாவா தொடரலாம். நஷ்டமடைபவர் அந்த கிளைகளை வெட்டி விடவும் அதிகாரமுண்டு (மெ எ. வெப், (1895) A.C. 1). அண்டை வீட்டிலுள்ள மரத்தின் கிளைகள் வாதியின் புழக்கடையில் நிழல் தந்து மாகுலை கெடுத்துவிடுகிறதென்றும் அவைகளை வெட்டி விடும்படிக்கு உத்தரவிடவேண்டு மென்றும் இதுவரையில் மாகுலுக்கு உண்டான நஷ்டத்தை கட்டிக் கொடுக்கும்படியும் வாதி தாவா செய்து அது புல் பென்ச் (full bench) முன் வந்தது. (Full Bench) புல் பென்ச் மெஜாரிடியால், நஷ்டம் உண்டாக்கிவரும் கிளைகளையும் வெட்டிவிடும்படி உத்திரவு கேட்க வாதிக்கு அதிகாரமுண்டென்றும், ஸ்பெஸிபிக் ரிலிப் ஆக்ட் (Specific Relief Act) படி பரிகாரம் கொடுக்க கோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறதா இல்லையா என்று பார்க்கக் கூடாதென்றும் தீர்ப்பு கூறினார்கள் (கெம்பய்ய எ. பட்டய்ய, 3 Mys. L.J. 143). (மதராஸ் கவர்ன்மெண்டார் G.O. Mis. No. 1854 dated 21—12—1923). கஜெட் 12-வது பக்கம் (8—1—1923 No. 35). குளம் குட்டைகள், கிணறுகள் பக்கத்திலிருக்கும் மரம், தலை, வகைராக்களின் வருமானத்தை லோகல் போர்ட் பண்டில் சேர்த்துக் கொள்ளலாம் என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். [இ. பு. ப. 398]

செ. 112 (1) (iii). ரோட்டுகளை சுத்தம் செய்தல்.—பொது ரஸ்தாக்களை சுத்தம் செய்வதற்காக குப்பை வண்டிகள் வைத்து சுத்தம் செய்யவேண்டியது ஒவ்வொரு லோகல் போர்டின் கடமை. சட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நிறைவேற்றுவதினால் உண்டாகும் சேதத்திற்கு தாவா தொடரமுடியாது. (ஹென்ஸ்ராஜ ஹிர்ஜி எ. காரச்சி முனிசிபாலிடி, 8 I.C. 202). [இ. பு. ப. 398].

ரெயில்வேக்கள் ட்ராம்வேக்கள் முதலியவைகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவது.

113. (1) இந்தியா கவர்ன்மெண்டாரின் அநுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, யாதொரு டிஸ்ட்க்ரிட் போர்டார்—

(a) டிஸ்டிரிக்ட்டுக்குள்ளாவது, சிறிதுமட்டில் அதற்குள்ளும் சிறிது மட்டில் அதற்கு வெளியிலுமாவது, ரெயில்வேக்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் அமுலில் இருக்கும் யாதொரு சட்டத்திற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு ரெயில்வேயை ஏற்படுத்திப் பராமரித்து வரலாம்;

(b) டிஸ்ட்ரிக்டுக்கு வெகுசாய்ப் பிரயோசனகரமாயிருக்குமென்று போர்டார் அபிப்பிராயப்படுகிற யாதொரு ரெயில்வேயை ஏற்படுத்துவதற்காகவாவது பராமரித்து வருவதற்காகவாவது இந்தியா கவர்ன்மெண்டாராகிலும், யாதொரு பிரதேச அதிகார சபையாராலாகிலும், 1913-ம் வருஷத்திய இந்திய தேசத்து கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு கம்பெனியாராலாகிலும் வாங்கப்படும் யாதொரு டிபென்சர் லோன் என்னும் கடனுக்குத் தொகை கொடுக்கலாம்;

(c) அப்படிப்பட்ட யாதொரு ரெயில்வேக்குச் செலவு செய்யப்பட்ட மூலதனத்தின்மேல் வட்டியாக, டிஸ்ட்ரிக்ட் பண்டிலிருந்து தங்களுக்குத் தகுதியென்று தோற்றும் தொகைகளைச் செலுத்துவதாய் உத்தரவாதஞ் செய்யலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டாரின் அநுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, டிஸ்ட்ரிக்டு போர்டார்—டிஸ்டிரிக்ட்டுக்குள்ளாவது, சிறிதுமட்டில் அதற்குள்ளும் சிறிதுமட்டில் அதற்கு வெளியிலுமாவது, யாதொரு ட்ராம்வே, கனத்த கம்பி முதலியதால் அமைக்கப்பட்ட ரோப்வே என்னும் பாதை, மோடார் ஆம்னிபஸ் என்னும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் மோடார் வண்டி அல்லது போக்குவரத்துக்கான இதர சாதனத்தை மேலே சொல்லப்பட்ட சகல உபாயங்

களையும் கைக்கொண்டாகிலும் அவைகளில் எதைக் கைக்கொண்டாகிலும் ஏற்படுத்தலாம் அல்லது பராமரித்துவரலாம், அல்லது ஏற்படுத்துவதற்காயினும் பராமரித்து வருவதற்காயினும் உதவிசெய்யலாம்; ஆனால், ட்ராம்வேக்களின் விஷயத்தில், ட்ராம்வேக்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் அமுலில் இருக்கும் யாதொரு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்தப்படி செய்யவேண்டும்.

(3) (1) அடையாளமிட்ட உட்பிரிவிலாவது, (2) அடையாளமிட்ட உட்பிரிவிலாவது குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் எது சம்பந்தமாகவாகிலும உத்தரவு வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வதற்கு, இது விஷயமாய் பிரத்தியேகமாகக் கூட்டப்பட்ட யாதொரு சபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட டிஸ்டிரிக்ட் போர்டாரின் தீர்மானத்தின் மூலமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருந்து, ஷை தீர்மானமானது மூன்று மாத காலத்துக்குப் பிறகு அதேமாதிரியான சபையில் அதேமாதிரி பெரும்பான்மையோரால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட விண்ணப்பம் எதையும் செய்துகொள்ளக்கூடாது.

டிஸ்ட்ரிக்ட், தாலூகா, கிராம பண்டுகளை ஏற்படுத்துவது.

114. ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டுக்கும் டிஸ்ட்ரிக்ட் பண்டு (நிதி) ஒன்றும் ஒவ்வொரு தாலூக்காவுக்கும் தாலூகா பண்டு ஒன்றும், ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம பண்டு ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

கிராம அபிவிருத்தி நிதி.

114-A. (1) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் கிராம அபிவிருத்தி நிதி என்று சொல்லப்படும் ஒரு நிதியை வைத்துவரவேண்டும். இந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி ஷை நிதியை ஏற்படுத்தி, அது விஷயமாய் மேல்விசாரணை செய்து, அதைப் பரிபாலிக்க வேண்டும்.

(2) ஷை நிதியில்—

(a) 78-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்டில் விதித்து வாங்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியில் ஆறிலொரு பாகமும்,

(b) அதற்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் சகல சகாயத் தொகைகளும்,

(c) அதன் காரியங்களுக்காக வரப்பெற்றுக்கொள்ளப்படக்கூடிய இதர சகல தொகைகளும் அடங்கும்.

(3) (2) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கும் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் சலக பணத்தையும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் கணக்கில் செலுத்த வேண்டும்; ஆனால் அதை டிஸ்ட்ரிக்ட் போர்டின் கிராம அபிவிருத்து நிதிக்கு வரவாக வைக்கவேண்டும்.

(4) ஷை நிதியை அடியிற்கண்ட காரியங்களுக்கு மாத்திரமே உபயோகிக்கவேண்டும் :—

(a) கிராமப் போக்கு வரவு சாதனங்களை அபிவிருத்தி செய்வது,

(b) ஜல சர்ப்பராவுக்கு ஏற்பாடு செய்வது,

(c) சுகாதாரத்தையும் பொதுஜன தேகாரோக்கியத்தையும் விருத்தி செய்வது.

(5) அந்தந்த காலத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டின் அலுவல்களையும் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டிலுள்ள தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டுகளின் அலுவல்களையும் செலுத்திவரும் நபர்கள் அடங்கிய ஒரு கம்மிட்டியார் ஷை நிதியைப் பரிபாலனம் செய்துவரவேண்டும். டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டின் அலுவல்களைச் செலுத்திவரும் நபர் ஷை கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டாக இருப்பார்.

(6) ஷை நிதியிலிருந்து பணம் வாங்குவதற்கான சகல உத்தரவுகளிலும் அல்லது செக்குகளிலும் கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டாவது அவரால் அது விஷயத்தில் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது கையெழுத்து பண்ணவேண்டும்.

(7) ஷை கம்மிட்டியார் - ஒவ்வொரு வருஷத்திலும், எந்தத் தேதியில் டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒன்றுயச் சேர்க்கப்பட்ட பட்ஜெடை அனுப்பவேண்டுமென்று 117-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யக்கூடுமோ அந்தத் தேதிக்கு மேற்படாமல், அடுத்த வருஷத்தில ஷை நிதிக்கு வெகுசாய்க் கிடைக்கக்கூடிய வரவுகள் இவ்வளவென்றும் பிடிக்கக்கூடிய செலவு இவ்வளவென்றும் கண்டுள்ள ஸ்டேட்மென்ட் ஒன்றைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்.

(8) டிஸ்ட்ரிக்ட் போர்டின் கணக்குகளைத் தணிக்கை செய்யும்போதும் அவைகளைத் தணிக்கை செய்கிற மாதிரியாகவும் ஷை நிதியின் கணக்குகளையும் தணிக்கை செய்யவேண்டும்; மேலும், டிஸ்ட்ரிக்ட் போர்ட் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிரயோகப்படும் இந்த ஆக்டின் அல்லது அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளின் சகல நிபந்தனைகளும் - அவசியமான மாறுதல்களுடன், ஷை நிதியின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கும் பிரயோகப்படும்.

(9) பிரதேச கவர்ன்மெண்டார் இது விஷயமாய் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டு, கம்மிட்டியார் - தங்களுடைய வேலையை நடத்துவதற்காகவும், தாங்கள் எந்த காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டார்களோ அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காகவும் சகாயச் சட்டங்கள் செய்யலாம்.

குறிப்பு.

செ. 114-A.—லோகல் பண்ட் திரவ்விய விஷயத்தை உறுதிப்படுத்தி அதை கிராம அபிவிர்த்திக்கு உபயோகப்படும் பொருட்டும், அக்கம் பக்கம் ஜில்லாக்களிலும் ஒரேவிதமான வரி விதிக்கப்பட்டிருக்கும் பொருட்டும் இஷ்டமிருந்தால் விதித்துக்கொள்ளலாம் என்றிருந்த ஸெஸ் (Cess)யை இப்போது கட்டாய ஸெஸ் ஆக ஆக்கப்பட்டது. நில ஸெஸ்யை 0—1—6-க்கு மேல் அதிகப்படுத்துவது அநீதி யென்றும் அதை ஜில்லா போர்ட்கு 0—0—6-யும், தாலூகா போர்டுக்கு 0—0—6-யும் பஞ்சாயத்துக்கு 0—0—3 மிகுதியிருக்கும் 0—0—3 யை கிராம அபிவிர்த்தி நிதியாக; தற்காலம் ஜில்லா போர்ட் பிரஸிடெண்ட் அதற்கு சேர்மனாகவும், ஜில்லாவிலுள்ள தாலூகா போர்ட் பிரஸிடெண்டுகள் மெம்பர்களாகவுமிருந்து பரிபாலிக்கவேண்டுமென்று செலக்ட் கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். [இ. பு. ப. 401]

வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த லோக்கல் பண்டுகளின் வரவுகளும் செலவுகளும்.

115. முறையே கிராம, தாலூகா, டிஸ்ட்ரிக்ட் பண்டுகளிலிருந்து செலவாக எழுதவேண்டிய செலவு தொகைகளையும், அவைகளுக்கு வரவாக வைத்துக் கொள்ளவேண்டிய வரவுத் தொகைகளையும் குறித்து அந்த பண்டுகளின் பரிபாலனத்தைக் குறித்தும் 5-வது ஷெட்யூலில் அடங்கியுள்ள விதிகளை இந்த அத்தியாயத்தின் பாகமாயிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

பட்ஜெட்டுகளைத் தயார் செய்வதும் ஜாரி செய்வதும்.

116. (1) ஒவ்வொரு லோக்கல் போர்டின் ப்ரெஸிடெண்டும்-ஒவ்வொரு வருஷத்திலும் அடுத்த வருஷத்தில் வெகுசாய்க் கிடைக்கக்கூடிய வரவுகள் இவ்வளவென்றும் பிடிக்கக்கூடிய செலவு இவ்வளவென்றும் கண்டு பட்ஜெட் (வரவு செலவு திட்டக்கணக்கு) ஒன்றைத் தயார் செய்து ஷெடி லோகல் போர்டாருக்குமுன் வைக்கவேண்டும்.

(2) ஒவ்வொரு லோகல் போர்டாரும் ஷெடி பட்ஜெட்டை தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் எவையேனும் திருத்தங்களுடன் ஜாரி செய்யவேண்டும்.

(3) தாலூகா போர்ட் பட்ஜெட்டு பஞ்சாயத்து பட்ஜெட்டு மேற்சொன்னபடி ஜாரிசெய்யப்பட்ட பிறகு முறையே டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் தாலூகா போர்டுக்கும் அனுப்பப்படவேண்டும். ஷெடி பட்ஜெட்டிலே கடன்கள் விஷயமாக ஏற்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் கிரமப்படி தீர்ப்பதற்காகவாவது வேலை நடத்திக்கொண்டு போவதற்கு வேண்டிய இருப்பு நிற்பதற்காகவாவது ஏற்பாடு செய்யத்தவறிப்போயிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும் தாலூகா போர்டாராகிலும் - அந்தப்படி நிச்சயமாய் ஏற்பாடு செய்யப்படும் பொருட்டு அந்த பட்ஜெட்டின் எந்த பாகத்தையாவது திருத்த வேண்டுமென்று கட்டளையிடலாம்.

குறிப்பு.

சே. **116 (3)**. பட்ஜெட்டுகளை அந்தந்த போர்டுகளில் ஜாரி செய்யும் விதம்.—லோகல் போர்டுகள் பட்ஜெட்டிலிருக்கும் தொகைகளை திருத்தலாம். பிரஸிடெண்டுகள் பட்ஜெட் விஷயத்தில் மெம்பர்களின் ஆலோசனைக்கு போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும். எல்லா போர்டுகளுக்கும் அடிப்படையாயிருக்கும் பஞ்சாயத்துகள் ஜில்லா போர்டார் குறிப்பிடும் காலத்திற்குள் பட்ஜெட் தாயார் செய்யவேண்டும். அந்த பட்ஜெட்களை வரப்பெற்ற தாலூகா போர்டார்கள் தங்கள் பட்ஜெட்டுகளையும், யூனியன்களின் பட்ஜெட்டுகளையும் பரிசீலனை செய்து தயார் செய்யவேண்டும். இவைகளை வரப்பெற்ற ஜில்லாபோர்டுகள், தங்களுடையவும், தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துகளின் பட்ஜெட்டுகளை பரிசீலனை செய்து பெப்ரவரி மாதம் 15 தேதிக்குள் மதராஸ் கவர்ன்மெண்டுக்கு அனுப்பவேண்டும். [இ. பு. ப. 402]

ஒன்றாய்ச்சேர்க்கப்பட்ட பட்ஜெட்டை கவர்னமெண்டாருக்கு அனுப்புவதும் அவர்களுடைய மேல்விசாரணை அதிகாரமும்.

117. (1) ஒவ்வொரு வருஷத்திலும் இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய தேதிக்கு மேற்படாமல் டிஸ்ட்ரிக்ட் போர்டார் தமக்காகவும் டிஸ்டரிக்டிலுள்ள சகல தாலூகா போர்டுகளுக்காகவும், பஞ்சாயத்துகளுக்காகவும் அடுத்த வருஷத்திற்காக ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட் ஒன்றைப் பிரதேச கவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்.

(2) அந்தப்படி ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட்டிலே, யாதொரு லோக்கல் போர்டார் வாங்கியிருக்கும் கடன்கள் விஷயமாக ஏற்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் கிரமப்படி தீர்ப்பதற்காகவாவது வேலை நடத்திக்கொண்டு போவதற்கு வேண்டிய இருப்பு நிற்பதற்காகவாவது ஏற்பாடு செய்யத் தவறிப்போயிருந்தால், பிரதேச கவர்ன்மென்டார்-அந்தப்படி நிச்சயமாய் ஏற்பாடு செய்யப்படும் பொருட்டு மேற்படி பட்ஜெட்டின் எந்த பாகத்தையாவது திருத்த வேண்டுமென்று கட்டளையிடலாம்.

பட்ஜெட்டுகளுக்கு தேதிகளை நிஷ்கரிஷை செய்வது.

118. டிஷ்ட்ரிக்டிலுள்ள சகல தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் பட்ஜெட்டுகளையும் தயார் செய்வதற்கும், ஜாரி செய்வதற்கும் அனுப்பவதற்கும் தேதிகளை டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

119. தங்களுடைய வரவுகள் சம்பந்தமாகவாவது தாங்கள் செய்ய ஏற்றுக்கொள்ளுகிற பற்பல காரியங்களுக்காக செலவிட வேண்டியிருக்கும் தொகைகளைப் பங்கிடு செய்வது சம்பந்தமாகவாவது பட்ஜெட்டில் கண்டுள்ள இலக்கங்களைத் திருத்துவது அவசியமென்று யாதொரு வருஷத்தில் லோக்கல் போர்டாருக்குத் தோற்றுமாகில் 116-வது 117-வது பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடி உடன் சேர்க்கையான அல்லது திருத்தப்பட்ட பட்ஜெட் தயார்செய்து ஜாரி செய்யப்பட்டு, அனுப்பப்படலாம்; ஆனால், கடன் மூலியமாய் உபயோகிப்பதற்காக ஜாரிசெய்யப்பட்டிருக்கும் தொகையிலாவது வேலை நடத்திக்கொண்டுபோவதற்கு வேண்டியிருக்கும் கையிருப்பிலாவது ஏதேனும் மாறுதல் செய்வதானால், அதைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் சம்மதத்தைப் பெற்றே செய்யவேண்டும்.

திருத்தப்பட்ட அல்லது உடன் சேர்க்கையான பட்ஜெட்.

120. பிரதேச கவர்ன்மெண்டார் ஒவ்வொரு லோகல் பண்டின் வரவு செலவைப்பற்றிய கணக்குகளையும் தணிக்கை செய்வதற்காக ஆடிட்டர்களை நியமிக்கவேண்டும். அந்த ஆடிட்டர்கள்-இந்தியன் பினல் கோட் 21-வது பிரிவின் தாற்பரியப்படி "ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாக" எண்ணப்படுவார்கள்.

கணக்குகளுக்காக ஆடிட்டர்களை (தணிக்கை உத்தியோகஸ்தர்களை) நியமிப்பது.

121. (1) பிரதேச கவர்ன்மெண்டாராலாவது, இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற வேறே யாதொரு லோகல் போர்டாராலாவது, சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாராலாவது 5-வது ஷெட்யூலாலாகிலும் அதன்படியாகிலும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு காரியத்துக்காகச் செய்யப்பட்ட சபையினால் யாதொரு லோகல் போர்ட் விஸ்தீர்ணத்திலுள்ள குடிகளுக்குப் பிரயோசனம் உண்டாகக்கூடியதாயிருந்தால், அந்த லோகல் போர்டார்-பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியுடன், அப்படிப்பட்ட செலவுக்காக ஒரு தொகை கொடுக்கலாம்.

இதர பிரதேச அதிகார சபையார் செய்யும் செலவுக்காக தொகைகள் செலுத்துவது.

(2) பிரதேச கவர்ன்மெண்டார்-உத்தரவு பிறப்பித்து, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் யாதொரு தொகையை ஏன் கொடுக்கவேண்டியதில்லையோ அதற்குக் காரணத்தை அப்படிப்பட்ட உத்தரவு வந்துசேர்ந்த பின்பு ஒரு மாதத்துக்குள் தெரிவிக்கவேண்டுமென்று ஷை லோகல் போர்டாருக்குக் கட்டளையிடலாம்.

(3) பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் திருப்தியாகும் விதமாக மேற்படி கால அளவுக்குள் அந்த லோகல் போர்டார் காரணம் தெரிவிக்காவிட்டால், தாங்கள் குறிப்பிடும் தொகையைச் செலுத்தும்படி பிரதேச கவர்ன்மெண்டார் மேற்படி லோக்கல் போர்டாருக்கு உத்தரவு செய்யலாம்; அந்தத் தொகை அப்பிரகாரமே செலுத்தப்படவேண்டும்.

121-A. 1914-ம் வருஷத்திய பிரதேச அதிகார சபைகளுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிய ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார்—இந்த ஆக்டின்படி யாதொரு லோகல் போர்டின் நிதி உபயோகிக்கப்படக்கூடிய எந்தக் காரியத்துக்காகவாவது ஷை போர்டாருக்குக் கொடுக்கப்பட்ட யாதொரு கடன் அல்லது முன்பணத்தை இந்த ஆக்ட் 41-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கும் மாதிரியாகவாகிலும் வியாஜ்ஜிய மூலமாகவாகிலும் வசூலிக்க பாத்தியதை உடையவர்களாவர்கள்.

பிரதேச கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் வசூலிப்பது.

4-ம் பாகம்.—பொதுஜன தேகாரோக்கியமும் க்ஷேமமும் வசதியும்.

8-ம் அத்தியாயம்.

பொதுஜன தேகாரோக்கியம்.

ஒருவருக்கே சொந்தமானதும் பொதுவானதுமான குளங்கள் அல்லது கிணறுகள்.

கிணறு முதலியவற்றை மூடிவிடுவதும் சுத்திபண்ணுவதும்.

122. யாதொரு பஞ்சாயத்து பிரசிடெண்டானவர் - ஒருவருக்கே சொந்தமாய், குடிப்பதற்காக எதிலிருந்து தண்ணீர் உபயோகித்துக்கொள்ளப் படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு ஓடை-வாய்க்கால்-குளம்-கிணறு அல்லது வேறே இடைத்தைச் சுத்திபண்ணி சீரான ஸ்திதியில் வைத்திருப்பதோடு அவைகளுக்குக் கைப்பிடிச் சுவர்களைக்கட்டி அப்படிப்பட்ட யாதொரு கிணற்று ஜலமானது பூமியின் மேற்புறத்திலிருந்து விழுகிற ஜலத்தினால் கெட்டுப்போகாதபடி அதை எவ்விதத்தில் காப்பாற்றுவது தமக்கு யுக்தமாகத் தோற்றுமோ அவ்விதத்தில் காப்பாற்றும்படியாகவாவது, அந்தத் தண்ணீர் குடிக்கத் தகுதியற்றதென்று அந்தப்ரெஸிடெண்டுக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அப்போது, அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்காக உபயோகப்படுத்தக்கூடாதென்றாவது, மற்றவர்களை அப்படி அந்த உபயோகப்படுத்தவொட்டக் கூடாதென்றாவது அதன் சொந்தக்காரருக்காகிலும் அதைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற நபருக்காகிலும், உத்தரவு பண்ணலாம்; அப்படி நோடீஸ் கொடுத்த பின்பு அந்தக் கிணறு-குளம் அல்லது நீர் நிலையிலிருக்கிற ஜலத்தை எவராவது குடிப்பதற்காக உபயோகப்படுத்தினால், ப்ரெஸிடெண்டானவர்-அதிலுள்ள ஜலம் குடிப்பதற்காக உபயோகிக்கப் படாமலிருக்கும்பொருட்டு, தாம் கட்டளையிடும் விதமாய் அப்படிப்பட்ட கிணறு-குளம் அல்லது நீர்நிலையைக் கொஞ்சகாலத்திற்காவது எப்போதைக்குமாவது மூடிவிடும்படியாகிலும் அந்தக் கிணறு-குளம் அல்லது நீர்நிலைக்கு அடைப்பாவது வேலியாவது போடும்படியாகிலும், அதன் சொந்தக்காரருக்காவது அதைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற நபருக்காவது உத்தரவு பண்ணலாம்-

ஆனால், இந்தப் பிரிவிற்கண்ட (ப்ரைவேட்) சொந்த ஓடைகள், வாய்க்கால்கள், குளங்கள், கிணறுகள் அல்லது வேறே இடங்களின் ஜலத்தைப் பொதுஜனங்களாவது பொது ஜனங்களைச்சேர்ந்த யாதொரு வகுப்பாராவது சுதந்தரமாகக் குடிப்பதற்கு உபயோகப்படுத்திக்கொண்டு வருவார்களாகில், அப்படிப்பட்ட கிணறு, குளம் அல்லது நீர்நிலையை மூடிவிடுவதற்காவது அதற்கு அடைப்பு அடைப்பதற்காவது பிடிக்கும் செலவைப் பஞ்சாயத்து கிராம பண்டியிலிருந்து செலுத்தவேண்டும்.

குறிப்பு.

செ. **122.** பொதுஜன தேகாரோக்கியம்.—குடிக்க தகுதியற்றதென்று அந்த பிரஸிடெண்டுக்கு திருப்திகரமாய் ருஜுவானால்—ஓடை, குளம், கிணறு, வாய்க்கால் இவைகளின் ஜலம் குடி தண்ணீருக்கு மட்டும் உபயோகப்படுவதாயின் பஞ்சாயத்து பிரஸிடெண்ட் அவைகளை சுத்தமாய் வைத்திருக்கும்படி உத்திரவிடலாம். அந்த தண்ணீர் குடிப்பதற்கு தகுதியற்றதென்று பிரஸிடெண்டுக்கு தோன்றும் வரையில் அந்த தண்ணீரை குடிக்கக்கூடாதென்று தடுக்கக் கூடாது. அதற்கு வைத்திய இலாகாவைச் சேர்ந்தவருடைய அத்தாக்ஷி பத்திரமிருப்பது உசிதம். ஒரு குட்டையை சீர்திருத்தி சுத்தம் செய்வதோ, அல்லது அதை தூற்றுவிடுவதோ அதற்கு பிரஸிடெண்ட்தான் தக்க அதிகாரி. அவர் கொடுக்கும் வேண்டுகளுக்கு

மாருக அதன் சொந்தக்காரர் நடந்துகொண்டால் பிரஸிடெண்ட் அந்த காரியத்தை செய்து அதற்கு பிடித்த செலவை அவரிடமிருந்து வசூல் செய்யலாம். பிரதிவாதிகள் அந்த குளம் சுகாதார குறைவற்ற நல்ல வென்று ருசுபடுத்த எத்தனிப்பது கூடாது. (தாலூகா போர்ட், பந்தார், எ. மல்லிகர்ஜுனபிரசாத நாயுடு, 44 M. 156=61 I.C. 497.) [இ. பு. ப. 407]

அபராதம்.—சாதாரணமாய் இக்குற்றத்திற்கு அபராதம் ரூபாய் 50-க்கு மேற்படாமல் விதிக்கலாம், வேண்டுகோளை மீறி நடக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபாய் 10-க்கு மேற்படாமல் விதிக்கலாம். 8-வது, 9-வது ஷெட்யூல்களை பார்க்கவும். சாக்ஷியங்களும்— ருசுவும்—(1) தண்ணீர் குடிதண்ணீராக உபயோகப்படுத்தப்படும். (2) அது சுத்தம் செய்யப்படவேண்டும் அல்லது பார்த்துக்கொள்ளப்படவேண்டியதாயிருந்தது. (3) எதிரி கட்டளைப்படி சுத்தம் முதலானது செய்யவில்லை. தண்ணீரை குடிக்காமல் தடுக்கவேண்டுமானல்—(1) அது குடிக்க லாயக்கானதல்லவென்று எழுத்து மூலமாய் காரணங்கள் காட்டியிருக்கவேண்டும். (2) அம்மாதிரி தடுத்த பிறகுகுடிதண்ணீராக உபயோகப்படுத்தப்பட்டது என்று ருசு செய்ய வேண்டும். [இ. பு. ப. 408]

அசங்கியம் அல்லது சங்கடத்தை யாவதுபொதுஜன சுகத்துக்கு அபாயத்தையாவது உண்டாக்கத்தக்கிற குட்டைகள் முதலியவைகளைத் தூர்த்துவிடுவது.

123. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர்

(a) யாதொரு குளம், கிணறு, குட்டை, சிறுகுட்டை, வடிகால், சகதி, சதுப்பு நிலம், கல்வெட்டும்குழி, ஜலதாரை, சாக்கடைகுழி, குழி, நீர்க்கால் அல்லது யாதொரு நீர்நிலையாவது,

(b) எதன்மேல் தண்ணீர் தங்கியிருக்கக்கூடுமோ அந்த நிலமாவது

அபாயகரமாயிருக்கிறதென்ருகிலும் வெகுசாய் இருக்கக்கூடு மென்ருகிலும், கொசுக்கள் உண்டாகி விருத்தியாவதற்கான இடமாக ஏற்பட்டோ வேறே எவ்விதமாகவோ தேக ஆரோக்கியத்துக்கு உண்டாக்குகிறதென்ருகிலும், வெகுசாய் கெடுதி உண்டாக்கக்கூடியதாகு மென்ருகிலும் அல்லது அக்கம் பக்கத்திலிருக்கிற ஜனங்களுக்கு அருவருப்பு உண்டாக்குகிறதென்ருகிலும், வெகுசாய் அருவருப்பு உண்டாக்கக்கூடியதாகு மென்ருகிலும், அபிப்பிராயப் பட்டால், அவர்-அதன் சொந்தக்காரருக்கு அல்லது அதன்மேல் விசாரணை வகிக்கும் வேறு நபருக்கு நோடீஸ் கொடுத்து, அந்த நோடீஸில் சொல்லப்படக்கூடிய மாதிரிபாகவும் சாமான்களைக்கொண்டும் அதற்கு அடைப்படைக்கும்படியோ, மரமத்து செய்யும்படியோ, அதைத் தூர்த்துவிடும்படியோ, மேலே மூடிவிடும் படியோ, சுத்தி செய்யும்படியோ, அதில் நிற்கும் ஜலத்தைச் சிறிதுமட்டிலாகிலும் முழுவதுமாகிலும் வடித்துவிடும்படியோ, அல்லது நோடீஸில் கட்டளையிடக் கூடியபடி அது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும்படியோ உத்தரவு செய்யலாம்.

(2) எவருக்கு அப்படிப்பட்ட நோடீஸ் சேர்ப்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர் அதன்படி நடப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த உத்தரவின்படி நடப்பதற்குள்ள ஆட்சேபனைகளை எழுதி ப்ரெஸிடெண்டினிடம் ஒப்புவித்தால், ப்ரெஸிடெண்டானவர்-அப்படிப்பட்ட ஆட்சேபனைகளைப் பற்றி பஞ்சாயத்துக்கு தெரிவிக்கவேண்டியதோடுகூட, சம்பந்தப்பட்ட போர்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றன்றி மற்றப்படி ஷை உத்தரவில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடக்கத் தவறினதற்காக எவ்வித பிராதும் தொடரக்கூடாது ஆனபோதிலும், ஷை ப்ரெஸிடெண்டானவர் பஞ்சாயத்தின் தீர்மானத்தைப் பெறுகிற வரையில், பொது ஜனங்களுக்கு உடனே அபாயம் நேருவதையாவது பொது

ஜன சுகத்துக்கு உடனே தீங்கு நேருவதையாவது தடுப்பதற்கு அவசரமானதென்றும் முக்கியமானதென்றும் தாம் அபிப்பிராயப்படக்கூடிய வேலைகளைச் செய்து முடிக்கலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் பஞ்சாயத்தானது செய்து முடிக்கப்பட்ட வேலைக்குப் பிடித்த செலவைச் சொந்தக்காரர் செலுத்தவேண்டுமா அல்லது பஞ்சாயத்து செலுத்தவேண்டுமா அல்லது இருவரும் பங்கிட்டுக் கொள்ளவேண்டுமா, அப்படியானால் என்ன சங்கியா பரிமாணப்படி பங்கிட்டுக்கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டும்.

குறிப்பு.

செ. **123**. பொது.—பஞ்சாயத்து பிரசிடெண்ட், சொந்தக்காரரை அடைப்பு அடைக்கும்படியோ, வேலிபோடும்படியோ, அல்லது சுத்தம் செய்யும்படியோ நோடீஸ் கொடுக்கலாம். இது திருந்துமுன் பஞ்சாயத்தின் அங்கீகாரம் பெற்றபிறகு கொடுக்கவேண்டியிருந்தது; இப்போதோ அங்கீகாரத்திற்கு முன்னேயே நோடீஸ் கொடுக்கலாம் என்று மாறியிருக்கிறது. சொந்தக்காரர் அதற்கு ஆக்ஷேபனைகளை எழுத்து மூலமாய் குறிப்பிட்ட காலத்திற்குள் பிரசிடெண்டினிடம் கொடுத்தால் அவரை தாவா செய்ய முடியாது. ஆக்ஷேபனை செய்யாமல் போனால் அவர்மேல் தாவா தொடரலாம். அப்படி ஆக்ஷேபனை செய்யப்பட்டதை பஞ்சாயத்தின் முன்னிலைக்கு வைத்து பிறகு தாவா தொடரலாம். லோகல் போர்டாரின் தீர்மானத்தை பெறுகிறவரையில் பொது ஜனங்களுக்கு உடனே அபாயம் நேருவதையாவது பொதுஜன சுகத்திற்கு தீங்கு நேருவதையாவது தடுப்பதற்கு அவசரமானதென்றும், முக்கியமானதென்றும், தாம் அபிப்பிராயப்படக்கூடிய வேலைகளை செய்து முடிக்கலாம். ஆனால் இது விஷயத்தில் ஜாக்கிறதையாயிருக்கவேண்டும். [இ. பு. ப. 409]

செ. **123** (**1**) (**a**). கிணறுகள்.— ஒருவர் தன்னுடைய கிணற்றில் பொது ஜனங்களை தண்ணீர் தூக்கிக் கொள்ள அனுமதி கொடுப்பதால் அந்த கிணறு பொது ஜனங்களுடையதாக மாட்டாது. அது முனிசிபாலிடியாருக்கு சொந்தமாகாது. ஆனால் அது தேக ஆரோக்கியத்திற்கு கெடுதலானதாகவாவது அல்லது அக்கம் பக்கத்திற்கு கெடுதியை விளைவிக்கக் கூடியதாகவாவது இருந்தால் முனிசிபாலிடியார் சொந்தக்காரரை அதை சுத்தம் செய்யவோ, ரிபேர் செய்யவோ உத்தரவிடலாம். (நூர் ஆமத் கான் எ. அமிர்தசரஸ் முனிசிபாலிடி, A.I.R. 1924 Lah. 511 = 75 I.C. 896.) [இ. பு. ப. 410]

செ. **123** (**1**) (**b**). அபாயகரமாயிருக்கிறதென்றாகிலும், அக்கம் பக்கம் ஜனங்களின் சுகத்திற்கு கேடுதி உண்டாகிறதென்றாகிலும் தோன்றினால்.—குளம், கிணறு முதலியவைகள் கிலமாயிருப்பதாய் தோன்றினாலும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு சுகாதார குறைவு ஏற்படுமென்று தோன்றினாலும், பிரசிடெண்டானவர் நடவடிக்கை நடத்தலாம். வைத்திய இலாகாதாரருடைய அத்தாக்ஷி பத்திரம் இருப்பது பிரசிடெண்டிற்கு மிகவும் நல்லது. [இ. பு. ப. 410]

அபராதம்.—சாதாரணமாய் ரூபாய் 50 க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம். உத்திரவுமீறி நடக்கும் பிரதிதினத்திற்கும் ரூபாய் 10-க்கு மேற்படாமல் விதிக்கலாம். 8-வது, 9.வது ஷெட்யூல்களை பார்க்கவும்.

சாட்க்ஷியம், ருசு.—(1) உபசெக்ஷன் 1-ன்படி சில காரியங்கள் செய்யும்படி நோடீஸ் கொடுக்கப்பட்டிருந்தது, (2) எதிரி அவைகளை நிறைவேற்றாமலிருந்தார், (3) எதிரிக்கு கொடுத்த நோடீஸின்பேரில் அவர் கொடுத்த ஆக்ஷேபனைகளை ஆலோசித்து போர்டார் பிரியாது நடவடிக்கைகளை சாங்க்ஷன் செய்தார்கள். [இ. பு. ப. 411]

செ. **123** (**2**).—லோகல் போர்டார் செய்துமுடிக்கப்பட்ட வேலைக்கு பிடித்த செலவை சொந்தக்காரர் செலுத்தவேண்டுமா அல்லது போர்டார் செலுத்தவேண்டுமா அல்லது இருவரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டுமா அப்படியானால் என்ன சங்கியா பரிமாணப்படி பங்கிட்டுக்கொள்ளவேண்டும் என்பதை தீர்மானம் செய்யவேண்டும். [இ. பு. ப. 411]

124. (1) (a) பஞ்சாயத்தானது-பொதுஜன தேகாரோக்கியத்தை உத்தேசித்து, யாதொரு பொதுவான ஊற்று, குளம் அல்லது கிணற்றிலாவது யாதொரு பொதுவான நீரோட்டத்திலாவது அதன் யாதொரு பாகத்திலாவது பிராணிகளைக் கழுவுவதைப் பற்றியாகிலும் துணிகளைத் தோய்ப்பதைப்பற்றியாகிலும் வேறே வஸ்துக்களைச் சுத்தம் செய்வதைப்பற்றியாகிலும் மீன் பிடிப்பதைப்பற்றியாகிலும் ஒழுங்கேற்படுத்தலாம், அல்லது அந்தப்படி கழுவுவதோ தோய்ப்போ சுத்தம் செய்வதோ மீன் பிடிப்பதோ கூடாதென்று தடுக்கலாம்; மேலும், அது-அப்படிப்பட்ட யாதொரு இடத்தை குடிப்பதற்காயினும் ஸ்நானம் செய்வதற்காயினும் பிராணிகளைக் கழுவுவதற்காயினும் துணிகளைத் தோய்ப்பதற்காயினும் குறிப்பிடப்பட்ட வேறே யாதொரு காரியத்துக்காயினும் பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கலாம்.

லோகல் போர்டார் பொதுவான குளங்கள் முதலியவைகளைச் சில காரியங்களுக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைக்கலா மென்பது

(b) யாதொரு சொந்த ஊற்று, குளம், கிணறு அல்லது நீரோட்டத்தின் விஷயத்திலே, பஞ்சாயத்தானது அப்படிப்பட்ட இடத்தின் சொந்தக்காரருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு (a) குறிப்பிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைத் செலுத்தலாம்.

(c) பஞ்சாயத்தானது - பொது ஜன தேகாரோக்கியத்தை உத்தேசித்து, எதிலிருந்து குடிக்கும் காரியங்களுக்காக தண்ணீர் எடுத்துக்கொள்ள பொது ஜனங்களுக்கு உரிமை இருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த ஊற்று, குளம், கிணறு அல்லது நீரோட்டத்தில் பிராணிகளைக் கழுவுவதைப்பற்றியாவது துணிகளைத் தோய்ப்பதைப்பற்றியாவது வேறே வஸ்துக்களைச் சுத்தம் செய்வதைப்பற்றியாவது ஒழுங்கேற்படுத்தலாம் அல்லது அந்தப்படி கழுவுவதோ தோய்ப்பதோ சுத்தம் செய்வதோ கூடாதென்று தடுக்கலாம்; மேலும், .

(2) லோகல் போர்டாருடைய ஊழியத்திலாவது கவர்ன்மெண்டாருடைய ஊழியத்திலாவது இருக்கிற யாதொரு வைத்திய உத்தியோகஸ்தர் கிராமத்துக்குள் இருப்பதாய் பொது ஜனங்கள் போகக்கூடிய யாதொரு கிணறு, குளம் அல்லது வேறே ஜலாதாரத்திலுள்ள தண்ணீர் யாதொரு அபாயகரமான வியாதியை வெகுசாய் உண்டாக்குமென்றாவது பரவச் செய்யுமென்றாவது கண்டு அனுப்புகிற ஸெர்டிபிகேட்டை வரப்பெற்றுக் கொள்வதன்மேல் பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர்-அந்தத் தண்ணீரை உபயோகிக்கக் கூடாதென்று பஹிரங்கமான நோடீஸ் மூலமாய் தடுக்கலாம். இத்தனை தினம் வரையில் அந்தப்படி தடுக்கப்படுமென்று கண்டு அந்த நோடீஸை ஷை ஜலாதாரத்திற்குச் சமீபத்தில் விளம்பரம் ஒட்டியாவது தண்டோரா போட்டாவது பிரசித்தப் படுத்தவேண்டும். ஷை ப்ரெஸிடெண்டானவர் பின்னும் ஒரு ஸர்டிபிகேட் ஆஜர்ப்படுத்தப்படாமலே அந்த நோடீஸை இன்னும் அதிக காலத்துக்கு வியாபிக்கச் செய்யலாம் அல்லது திருத்தலாம்.

குறிப்பு.

செ. **124** (1) (**a**). ஜனங்களுடைய தேக ஆரோக்யத்தை உத்தேசித்து.—இவ் விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் மிக்க அக்கரை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்காக பஞ்சாயத்து (1) பிராணிகளை கழுவதற்காவது, துணிகளை தோய்ப்பதற்காவது, ஸ்நானம் செய்வதற்காவது நிபந்தனைகளை ஏற்படுத்தலாம் அல்லது அவைகளை தடுக்கலாம். (2) மீன் பிடித்தலை கட்டுப்படுத்தலாம் அல்லது தடுக்கலாம். இம்மாதிரி செய்வது ஜனங்களுடைய தேகாரோக்யத்தை உத்தேசித்து செய்யப்படாமற் போனால் ஸிவில் கோர்டில் பஞ்சாயத்தின்மேல் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். [இ. பு. ப. 412]

குடிக்கும் காரியத்திற்கு உபயோகம்.—குடிக்க உதவாத ஜலத்துடன் அதிக குடி தண்ணீர் சேர்த்து அதையும் குடிதண்ணீராகமாற்றுவதென்பது சுகாதார முறைக்கு விரோதமானது. கவர்ன்மெண்ட் உத்திரவு நெ. 677, ரெவின்யூ 8-4-1922 ல் கூறியபடி குளங்களை லோகல்-போர்டார் வசம் ஒப்புவித்ததற்கு காரணம் அவர்கள் அந்த ஜலத்தின் உற்பத்தி ஸ்தானத்தை ஜாக்கிறதையாக பாதுகாக்கும்பொருட்டுதான். குளம் குட்டைகளுக்கு அருகாமையிலுள்ள நிலங்களை மேய்க்கால்களாக்கினால் குடி தண்ணீரை மாடு, மனிதர்கள் கெடுத்துவிடுவார்களென்பதால் அவைகளை மேய்கால்களாக மாற்றுவது கூடாது என்பது கவர்ன்மெண்டின் அபிப்பிராயம். அந்தக்-குளங்கள் குடிதண்ணீருக்கு உபயோகமற்றவைகளாயின் அவைகள் மறுபடியும் கவர்ன்மெண்டாரை சேர்ந்துவிடும். தாலூகா போர்டுகள் கவர்ன்மெண்டின் நோக்கத்திற்கு விரோதமாக குளங்களின் கரைகளை சாலைமரங்கள் பயிர் செய்வதற்காக விட்டால் அது செல்லாது (கஜெட் 31 பக்கம் dated 20-1-25, G. O. Mis. 62 L & M 7th Jan. 1925). [இ. பு. ப. 413]

அந்தப்படி பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கிற இடங்களை பிரத்தஞ் செய்யப்பட்ட காரியங்களல்லாத வேறே காரியங்களுக்கு உபயோகிக்கக்கூடாது தென்று தடுப்பது.

125. எந்த நபரும்—

(a) பஞ்சாயத்தாலாவது, சொந்த (ப்ரைவேட்) சொத்தின் விஷயத்தில் அதன் சொந்தக்காரராலாவது குடிக்கும் அல்லது சமையல் செய்யும் காரியத்திற்காகப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்திலே ஜலத்தில் ஸ்நானம் செய்யவாகிலும் அதை அசுத்தப்படுத்தவாகிலும் கூடாது; அல்லது

(b) குடிக்கும் காரியத்திற்காக மேற்கண்டபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தின் உலர்ந்த அடித்தரையில் அருவருக்கத்தக்க அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க யாதொரு வஸ்துவைப் போட்டு வைக்கக்கூடாது; அல்லது

(c) குடிப்பதற்காகவோ அல்லது ஸ்நானம் செய்வதற்காகவோ மேலே கண்டபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தில் வஸ்திரத்தைத் தோய்க்கக்கூடாது; அல்லது

(d) குடிக்கும் காரியத்திற்கோ அல்லது ஸ்நானம் செய்வதற்கோ அல்லது வஸ்திரம் தோய்ப்பதற்கோ, மேலே கண்டபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தில் யாதொரு பிராணியையாவது யாதொரு சமையல் பாத்திரத்தையாவது ஆட்டு மயிரையாவது தோலையாவது வேறே அசுத்தமான அல்லது அருவருக்கத்தக்க வஸ்துவையாவது கழுவவாகிலும், அருவருக்கத்தக்க அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க வஸ்துவைப் போட்டு வைக்கவாகிலும் கூடாது; அல்லது

(e) சாக்கடைக்குழி, சாக்கடைக்கால், ஜலதாரை, என்ஜின் அல்லது கொப்பரையிலிருந்து வருகிற ஜலத்தையாவது, அவருக்குச் சொந்தமானதாகவோ அவருடைய அல்லது அவரால் அனுபவிக்கப்பட்ட யாதொரு கட்டிடம் அல்லது நிலத்திலிருந்து வருகிறதாகவோவுள்ள வேறே யாதொரு அருவருக்குத்தக்க வஸ்துவையாவது, குடிக்கும் காரியத்திற்காயினும் ஸ்நானம் செய்வதற்காயினும் வஸ்திரம் தோய்ப்பதற்காயினும் மேலே கண்டபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்திவைக்கப்பட்ட யாதொரு இடத்தில் செலவிடக் கூடாது.

குறிப்பு.

செ. 125. பொது.—124 (1)-வது செக்ஷன்படி ஒதுக்கிவைக்கப்பட்ட ஜலத்தை 125 (a) முதல் (ம) வரையிலுள்ள நிபந்தனைகளுக்கு மாறுதலாக உபயோகித்தால் குற்ற மாகும். 'குற்றம்' என்னும் தலைப்பின்கீழ் பார்க்கவும்.

செ. 125 (a). ஸ்நானம் செய்தல்.—குடி தண்ணீர் குளத்தில் ஸ்நானம் செய்வது குற்றம் (முத்தய்யன் (1897) 1 Weir 229.)

அசுத்தப்படுத்தல்.—"அசுத்தப்படுத்தல்" என்பது ஒருவர் ஜலத்தில் இறங்கி அதை கலக்கி அல்லது நாற்றம் உண்டாகும்படி செய்தல் என்பது பொருள். கிணற்றில் எச்சில் உமிவது அசுத்தப்படுத்தலாகும் (ராமகரன்லால், (1916) 13 N.L R. 68). கீழ் ஜாதியான் கிணற்றிலிருந்து ஜலம் எடுப்பது அசுத்தப்படுத்துவதாகாது (பாண்டிய மஹார், (1900)13 C.P.L. 92.)
[இ. பு. ப. 414]

அபராதம்.—சாதாரணமாய் ரூபாய் 50 க்கு மேற்படாமலும், தவறி நடக்கும் பிரதி தினத்திற்கு ரூபாய் 10க்கு மேற்படாமலும் விதிக்கலாம்.

சாக்ஷியம், நசு.—(1) ஜலம் குடிதண்ணீருக்கு அருகதையல்ல என்று வைத்திய இலாகாவைச் சேர்ந்தவருடைய அத்தாக்ஷி பத்திரம் பெற்றது, (2) பிரஸிடெண்ட் தண்டோரா மூலமாயும், விளம்பர பிரசுரமூலமாயும் தண்ணீர் குடிக்க உபயோகப்படுத்தக்கூடாதென்று பிரசுரிக்கப்பட்டது, (3) எதிரி அந்த உத்திரவுக்கு விரோதமாக உபயோகப்படுத்தினது.
[இ. பு. ப. 414]

மீன்பிடித்தல்.—மீன்பிடித்தல் குற்றமாகாது. ஆனல் தூண்டுமுள்ளில் நாற்றமான வஸ்து இருப்பதாக காணப்பட்டால் குற்றமாகும் (ஸ்ரீனிவாஸ நாயக், (1905) 1 Weir 231). மாடு மனிதர்கள் குடிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த குளத்தில் ஒருவன் கூடை வலை கட்டி மீன்பிடித்ததில் தண்ணீர் கலங்கி குடிப்பதற்கு தகுதியற்றதாயிற்று. அம்மாதிரி செய்தது குற்றமானது (புன்னிபிஸோயி, (1905) 1 Weir 231). மீன்பிடித்தலினுலுண்டாகும் கெடுதலினுல் குற்றம் ஏற்படும். அதை தடுக்கவும், வரையருக்கவும், அதிகாரமுண்டு. இந்த செக்ஷன்படி சிற் சில சமயங்களில் குற்றமாகும்.
[இ. பு. ப. 415]

செ. 125 (b). அனுரோக்கியமுள்ளது.—பிராணனுக்கு ஆபத்து உண்டாகக்கூடியதாகவும், விஷசம்பந்த முள்ளதாகவும் உள்ளவைகளை அனுரோக்கிய முள்ளவைகள் எனப்படும். குடி தண்ணீருக்காக ஏற்படுத்தப்பட்ட குளக்கரையில் ஒருவன் பயிர் செய்தால் அது தண்ணீரை கெடுத்ததாகும். (ராமாத்ரிபதி, 1 weir (1915) 229.)

ஒப்பமான சட்டம்.—இந்தியன் பினல்கோட் 277-வது செக்ஷன் இந்த செக்ஷனுக்கு ஒப்பானது.

யார் ஒருவர் வேண்டுமென்று ஊற்று அல்லது குளத்திலிருக்கும் குடி தண்ணீரை அசுத்தம் செய்து, அது சாதாரணமாய் உபயோகப்படக்கூடிய காரியத்திற்கு அருகதை யில்லாமல் செய்பவர் மூன்று மாதத்திற்கு மேற்படாத இருவித தண்டனைகளில் ஒன்றையும், ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும் அல்லது இரண்டையும் அடையக்கடவர்.
[இ. பு. ப. 415]

ஒரு ஸ்திரி ஜலத்தை அசுத்தம்செய்ததாக குற்றம் சாட்டப்பட்டாள். அவள் அசௌக்கியமாயிருந்தமையால் அவளுடைய மாமனுர் கோர்டில் ஆஜராயிருந்தார். மாஜிஸ்டிரேட் அவரை வைத்துக்கொண்டு கேஸ் நடத்தப்பட்டு தண்டனை விதித்தார். அவளுடைய மாமனுர் கிரிமினல் ப்ரொஸிஜர் கோர்ட் 4-வது செக்ஷன்படி அவளுக்காக ஆஜராகக்கூடிய நபர் என்கிற ஹோதாவில் மாஜிஸ்டிரேட் பாவித்து தண்டனைவிதித்திருக்கிறுர் என்று தீர்ப்பு கூறப்பட்டது. (மஹாராணியார் எ. சந்திரபாகாரத், U. N. R. C. 206=Cr. Rg. 26-3.1884).

குற்றம்.—உப செக்ஷன் (a) முதல் (e) வரையில் கூறியிருப்பவைகளை மீறி நடந்திருக்கவேண்டும்.

தண்டனை.—125 (a) முதல் (e) செக்ஷன்வரையிலுள்ளவைகளை மீறி நடந்தால் ரூபாய் 50 க்கு மேற்படாத அபராதமும், (e) ல் குறிப்பிட்டதை மீறி நடக்கும் பிரதி தினத்திற்கும் ரூபாய் 10 க்கு மேற்படாத அபராதமும் விதிக்கலாம்.

சாக்ஷியம், நசு.—பிரத்தியேகமாய் வைக்கப்பட்ட ஊற்று முதலியவைகள் 124-வது செக்ஷனில் பார்க்கவும். (1) குடி தண்ணீர் (c) ல் சொல்லியபடி குடிக்கவும், ஸ்நானம் செய்யவும், (d) (e) படி குடிக்கவும், ஸ்நானம் செய்யவும், துணிகள் தோய்க்கவும் ஏற்படுத்தப் பட்டவைகளில் நிபந்தனைகளுக்கு மீறி நடந்தார். [இ. பு. ப. 415]

கிணறுகள் குளங்கள் முதலியவைகளைப்பஞ்சாயத்துகள் பராமரித்து வருவது.

126. ஒவ்வொரு பஞ்சாயத்தும்—

(i) கிராமத்துக்குள் ஒருவருக்கேயுரிய சொத்தாயிராத சகல கிணறுகள், குளங்கள், நீர்நிலைகள் ஆகிய இவற்றைச் சுசியான ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும்; மேலும், அவைகளைத் தூர்த்துவிடுவதாவது நீர்வடியச் செய்வதாவது அவசியமாகத் தோற்றும்போது அந்தப்படியே செய்யலாம்; மேலும்,

(ii) கிராமத்தில் உள்ளவைகளாய், நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளாகவோ அவைகளுடன் சம்பந்தப்பட்டவைகளாகவோ இராமலும் ஒருவருக்கேயுரிய சொத்தாயிராமலும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் யாதொரு உத்தரவு மூலமாகப் பிரத்தியேகமாய் விலக்கப்பட்டிராமலுமுள்ள சகல நீர்க்கால்களின் விஷயமாயும் மேல்விசாரணை செய்யவேண்டும்; மேலும், ஷை நீரோட்டங்களைப் பராமரிப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமான சகல காரியங்களையும் செய்யலாம்.

குறிப்பு.

செ. 126.—நபர்களுக்கு சொந்தமான குளம், குட்டை, கிணறுகளை பஞ்சாயத்துகள் பராமரிக்கக்கூடாது. அவைகளை சுத்தம் செய்யவும், நன்றாயிருக்கும்படி பார்த்துகொள்ளவும் பிரசிடெண்டுக்கு நிர்வாக அதிகாரத்தின்கீழ் அதிகாரமிருந்தபோதிலும், அவைகளை தூர்க்க அல்லது ரிபேர் செய்ய பஞ்சாயத்தின் சம்மதத்தைப் பெறவேண்டும். [இ. பு. ப. 416]

குப்பைகூள முதலியவை வாருவது

சொந்த மலஜல பாதை மறைவிடங்கள் முதலியவைகளை சுத்தி செய்வது.

127. இன்ன வேளைகளில் இவ்வளவு காலத்துக்கொருதரம் யாதொரு வளவிலிருந்தாகிலும் அதைச் சேர்ந்த யாதொரு இடத்திலிருந்தாகிலும் குப்பையையாவது அசுத்தங்களையாவது குறித்த யாதொரு வகையைச் சேர்ந்த குப்பை அல்லது அசுத்தங்களையாவது அப்புறப்படுத்துவதென்பதைப்பற்றியும் இதர விஷயங்களைப்பற்றியும் யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்குத் தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளின்படிக்கும், ஷை ஊழியத்துக்குப் பிடிக்கும் செலவுகள் அடங்கும்படி கணக்கிட்டு பஞ்சாயத்து விதித்திருக்கக்கூடிய வீதப்படி கட்டணம் செலுத்தப்படுவதன்மேலும் அப்படிப்பட்ட வளவிலிருந்தாகிலும் இடத்திலிருந்தாகிலும் ஷை குப்பை முதலியவைகளை அப்புறப்படுத்துவதற்காக அந்த வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரோடு ஷை ப்ரெசிடெண்டானவர் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

யாத்திரை ஸ்தலங்கள் முதலியவைகளின் மேல்விசாரணை வகிக்கும் நபர்கள் திரவியசகாயம் செய்வது.

128. யாதொரு மசூதியாவது கோயிலாவது மடமாவது மத ஆராதனை அல்லது போதனை செய்யும் யாதொரு இடமாவது, சந்தைகள் கூட்டுவதற்காகிலும் உற்சவங்கள் நடத்துவதற்காகிலும் அதைப்போன்ற இதர காரியங்களுக்காகிலும் உபயோகிக்கப்படுகிற யாதொரு இடமாவது யாதொரு தாலூகா அல்லது கிராமத்தின் எல்லைகளுக்குள்ளாயினும் அதற்குச் சமீபத்திலாயினும் இருந்து, வருஷமுழுவதுமோ குறித்த சில சந்தர்ப்பங்களிலோ ஜனங்கள் விசேஷமாய் ஷை மசூதி முதலியவைகளுக்குப் போவதாயிருந்தால், பொது ஜனங்களின் தேகா

ரோக்கியம் - பந்தோபஸ்து அல்லது சௌகரியத்துக்காக அவசியமான விசேஷ ஏற்பாடுகள் எவையேனும் நிரந்தரமாய்ச் செய்யவேண்டியவைகளாயிருந்தாலுஞ்சரி சிறிது காலத்துக்குச் செய்யவேண்டியவைகளாயிருந்தாலுஞ்சரி அவைகளைச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி தாலூகா போர்டார் அல்லது பஞ்சாயத்து செய்ய வேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மருாதி முதலியவைகளின் மேல்விசாரணை வகிக்கும் ட்ரஸ்டி அல்லது இதர நபர் தாலூகா போர்டின் அல்லது பஞ்சாயத்தின் நிதிக்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிச்சயிக்கப்படக்கூடியபடி மீண்டும் மீண்டும் கொடுக்கத்தக்க அல்லது அந்தப்படி கொடுக்கவேண்டியிராத திரவிய சகாயம் செய்யும்படி ஷெ போர்டாரோ அல்லது பஞ்சாயத்தோ அவரை கேட்க லாம்.

குறிப்பு

செ. **128**. **குப்பை எடுத்தல்.**—மலகுப்பைகளை எடுத்தல் என்பது மட்டுமல்ல. எல்லா வித குப்பைகளை எடுத்தலும் பொருந்தும். சுகாதாரவிதிகளின்படி எல்லாக்குப்பைகளையும் அப்புறப் படுத்தவேண்டும். ஜனங்கள் ஏராளமாய் கூடும் காலத்தில் பிரசிடெண்டுகள் எந்த மதத்தை சேர்ந்தவர்களாயினும், அல்லது எந்த ராஜீய கொள்கைகளை கொண்டவர்களாயினும் சரி அவைகளை பொருட்படுத்தாது பொது ஜன சௌகரியங்களை கவனித்து சுகாதார குறை வேற்படாமல் செய்யவேண்டியவைகளை செய்வதுதான் பெருந்தன்மை. லோகல் பண்ட் பணத்தில் அதிகம் செலவு செய்யாமலும் ஜனங்களுக்கு சௌகரியத்தைக் கொடுக்கக்கூடிய முறைகளை தாலூகா, பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் அனுசரிக்கவேண்டும். யாத்திரை ஸ்தலமாயில்லாமல் போனபோதிலும் ஜனங்கள் உச்சவத்திற்காக வந்து சேர்ந்தால் அந்த இடங்களில் லோகல் போர்ட் பிரசிடெண்ட்டுகள் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஜனங்கள் அன்றும், அல்லது அடிக்கடி வரும் படியான யாத்திரை ஸ்தலங்களாயிருந் தால் அந்த லோகல் போர்டார் மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதியின்பேரில்யாத்திரைஸ்த லத்து தர்மகர்த்தாக்களிடமிருந்து செலவிற்கு ஒரு பகுதி வசூல் செய்து கொள்ளலாம். யாத் திரைஸ்தல தர்மகர்த்தாவினிடம் பணம் இல்லாமலிருந்தாலும்அல்லதுவருமானமில்லாமலிருந் தாலும், யாத்திரை வாசிகள் வரி வசூல் செய்துக்கொள்ளலாம். [இ. பு. ப. 417]

அசுத்தங்கள் வெளியில் வந்து விழவொட்டாமல் தடுப்பது.

129. யாதொரு வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும்-யாதொரு அசுத்தங்கள் தேங்கும் குழி - சாக்கடைக் கால் - மலஜலபாதை மறைவிடம் அல்லது லாயத்திலிருந்து வருகிற தண்ணீரையாவது வேறே எவையேனும் அசுத்தங் களையாவது அப்படிப்பட்ட வளவிலிருந்து சாக்கடைகால் அல் லது சாக்கடைகுழி தவிர பொதுவான யாதொரு பாட்டையின் எந்த பாகத்திலா வது வந்து விழும்படியாகிலும், பொதுவான யாதொரு பாட்டையின் ஒரு பாக மாயிருக்கிற சாக்கடைக்காலின் பக்கத்திலுள்ள சுவர்கள் அல்லது தரைக்குள் ஷெ தண்ணீராவது அசுத்தங்களாவது ஊறுவதினாலே அசங்கியம் அல்லது சங் கடத்தை உண்டாகும் விதமாக ஷெ வளவிலிருந்து வெளியே வந்து விழும்படியா கிலும் விடக்கூடாது.

சொந்தமான ஜலத்தாரை ஏற்பாடு.

சொந்த சாக்கடைக்கால்களைக் கட்டும்படியோ அவைகளை எடுத்துவிடும்படியோ உத்தரவு செய்ய அதிகாரம்.

129-A. யாதொரு பஞ்சாயத்தானது - யாதொரு கட்டிடத்துக்குசொந்த சாக்கடைக்கால்களைக்கட்டும்படியாகவா வது அதன் சொந்த சாக்கடைக்கால்களை மாற்றியமைக்கும் படியாகவாவது அல்லது எடுத்துவிடும்படியாகவாவது ஷெ கட்டிடத்தின் சொந்தக்காரருக்கோ அனுபோகதாரருக்கோ நோடிஸ் கொடுத்து அதன் மூலமாய் உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. **129**. தண்டனை.—அபராதம் ரூபாய் 20 விதிக்கலாம். தவறி நடக்கும் பிரதி தினத்திற்கும் ரூபாய் 10 விதிக்கலாம் - 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர் தன் வீட்டின் சாக்கடை ஜலத்தை ரோட்டில் பாயும்படி விட்டார்.

ஒப்பான சட்டம்.—1889-வது டௌன் நியூசன்ஸ் சட்டம் 4-வது செக்ஷன்—யார் ஒருவர் தனது கிணறு, குளம் அல்லது அபாயகரமான இடம் இவைகளை வேலி அல்லது சுவர் அல்லது அடைப்பு முதலியவை போட்டு பத்திரப் படுத்தாமற் போனாலும் வீட்டிலிருந்தாவது, தொழிற்சாலையிலிருந்தாவது, சாணிக்குழியிலிருந்தாவது அசுத்தமான ஜலம் வெளியில் பெருக விட்டால், அவர் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதமும், ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறை தண்டனையும், அல்லது இரண்டையும் அடையக் கூடியவர். [இ. பு. ப. 418]

அபாயகரமான வியாதிகள்.

"அபாயகரமான வியாதி" என்பதன் அர்த்தம்.

130. "அபாயகரமான வியாதி" என்பது-6-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் வியாதி என்று அர்த்தமாகும்.

சந்தேகத்துக்கிடமான இடங்களில் பிரவேசிக்க அதிகாரமும், கட்டிடங்களினின்றும் வஸ்துக்களினின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதும்.

131. (1) யாதொரு இடத்தில் அபாயகரமான எந்த வியாதியாகிலும் கண்டிருப்பதாகப் பிரசித்தியாய்த் தெரிந்திருந்தாலும் சந்தேகிக்கப்பட்டாலும், பஞ்சாயத்து ப்ரெசிடெண்டானவர் பகற்காலத்திலாவது இராக்காலத்திலாவது எப்போதேனும் நோட்டீஸ் கொடாமலாகிலும் தமக்கு நியாயமாகத் தோற்றும் நோட்டீஸ் கொடுத்த பிறகாகிலும் அந்த இடத்தைப் போய்ப் பார்வையிடலாம்; மேலும் வியாதி அந்த இடத்துக்கப்பால் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு தமக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாடுகளை அனுசரிக்கலாம்.

(2) தொத்து வியாதியின் சம்பந்தத்தை வெகுசாய்ப் பற்றிக் கொண்டிருக்கத்தக்க யாதொரு வளவையாவது அதன் பாகத்தையாவது அதிலுள்ள எந்த வஸ்துவையாவது சுத்தி செய்வதினுலாகிலும் அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதனுலாகிலும் அபாயகரமான யாதொரு வியாதியைப் பரவவொட்டாமலாயினும் பின்னும் பரவவொட்டாமலாயினும் தடுப்பதற்கு அவசியமிருக்குமென்று ப்ரெசிடெண்ட் அபிப்பிராயபடுவாராகில், அவர் - அனுபோகதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து, அதில் குறிப்பிட்ட விதமாகவும் காலத்துக்குள்ளும் அதைச் சுத்திசெய்யவேண்டுமென்ருவது அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்ருவது உத்தரவு செய்யலாம்.

(3) ப்ரெசிடெண்டானவர் உடனே பிரவர்த்திக்கவேண்டியது அவசியமென்ருகிலும் வறுமை காரணமாகவாவது மற்றப்படியாவது தாம் கட்டளை யிடுகிறபடி சரியாய் நடந்துகொள்ள அனுபோகதாரருக்கு சாத்தியப்படவில்லையென்ருகிலும் நினைத்தால், ப்ரெசிடெண்டானவர்-நோட்டீஸ் கொடுக்காமலே அந்த வளவு அல்லது வஸ்துவைத் தாமே சுத்தி செய்விக்கலாம், அல்லது அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவிக்கலாம்; இது காரியத்துக்காக அப்படிப்பட்ட வஸ்துவை அந்த வளவிலிருந்து அப்புறப்படுத்துவிக்கலாம்; மேலேகண்ட பிரகாரம் கட்டளையிட்டபடி சரியாய் நடந்துகொள்ள ஷை அனுபோகதாரர் வறுமை காரணமாக சக்தியற்றிருக்கவில்லையென்று ப்ரெசிடெண்ட் அபிப்பிராயப்படுவாராகில் ப்ரெசிடெண்டுக்குப் பிடித்த செலவுகள் ஷை அனுபோகதாரரிடத்திலிருந்து வசூல் செய்யப்படத்தக்கவைகளாகும்.

(4) (1) முதல் (3) வரையிலுள்ள உட்பிரிவுகளின்படி பிரஸிடெண்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸராவது அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் வேறே யாதொரு உத்தியோகஸ்தராவது செலுத்தலாம்.

குறிப்பு.

செ. **131** (1).—இந்த செக்ஷன்படி பிரசிடெண்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் அவசரகாலங்களில் உபயோகப்படுத்தும் பொருட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் 217-வது செக்ஷன்படி நடக்கவேண்டியதில்லை. இந்த அதிகாரத்தை 23-வது செக்ஷன்படி பிரித்து கொடுக்கப்பட்ட நபர் நிறைவேற்றலாம். பிரசிடெண்டையாவது அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றவரையாவது யாராவது தடுத்தல் அவர் இந்தியன் பினல் கோட் 341-வது செக்ஷன்படியும், 210-வது செக்ஷன்படியும் குற்றம் செய்தவராக கருதப்படுவார்.
[இ பு. ப. 419]

செ. **131** (2).—சுத்தம் செய்வதற்காக நோடீஸ் கொடுத்தும் அதை நிறைவேற்ற சக்தியற்றவர்களுக்கும், சுத்தம் செய்வதால் பிடிக்கும் செலவை ஏழ்மைத்தனத்தால் வசூலிக்க முடியாதவருக்கும் நோடீஸ் கொடுக்க வேண்டியதில்லை. இம்மாதிரி சந்தர்பங்களில் அதிசீக்கிரமாக சுத்தம் செய்யவேண்டும். சுத்தம் செய்வதற்காக பணம் கொடுக்கக்கூடியவர்களுக்கு இன்ன காலத்திற்குள் சுத்தம் செய்யவேண்டுமென்று நோடீஸ் பிரப்பிக்க வேண்டும். நோடீஸ் பிரகாரம் அவர் அதன் நிபந்தனைகளை நிறைவேற்ற தவறிவிட்டால் பிரஸிடெண்ட் சுத்தம் செய்யலாம். ஏழைமக்களிடமிருந்து சுத்தம் செய்ய பணம் வசூல் செய்யவேண்டியதில்லை. நோடீஸ் நிபந்தனைகள்படி நடக்காவிட்டால் குற்றமாகும். [இ. பு. ப. 419]

தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50-ம் தவறின தினம் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) தொத்துவியாதி சம்பந்தத்திருப்பதாக பிரஸிடெண்ட் சந்தேகபடவேண்டும். (2) அதை குறிப்பிட்ட காலத்திற்குள் சுத்தம் செய்ய வேண்டுமென்று நோடீஸ் பிரப்பித்திருக்கவேண்டும். (3) குற்றவாளி அதன் நிபந்தனைகளை நிராகரித்திருக்க வேண்டும்.
[இ. பு. ப. 419]

செ. **131** (3).—பிரசிடெண்ட் சுத்தம் செய்யுமுன் குறிப்பிட்ட காலத்திற்குள் சுத்தம் செய்யவேண்டுமென்று நோடிஸ் பிரப்பித்ததால் அந்த நபருக்கு ஸிவில் கோர்டில் யாதொரு பரிகாரம் கிடையாது.
[இ. பு. ப. 419]

இன்ன இடங்களில் சுத்தி செய்ய வேண்டுமென்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்க வேண்டுமென்றும் ப்ரெசிடெண்ட் விளம்பரம் பிரசுரிக்க வேண்டுமென்பது.

132. (1) பஞ்சாயத்து ப்ரெசிடெண்டானவர் யாதொரு அபாயகரமான வியாதிகாரணமாக தொத்து வியாதி சம்பந்தத்துக்குட்பட்ட வண்டி முதலியவைகளையாவது வஸ்திரங்களையாவது படுக்கைகளையாவது இதர வஸ்துக்களையாவது இன்ன இடங்களுக்கு அப்புறப்படுத்த வேண்டுமென்றும் இன்ன இடங்களில் சுத்தி செய்யவேண்டும் அல்லது அவைகளிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவிக்கவேண்டும் அல்லது மற்றப்படி அவைகளை ஒருவகை செய்யவேண்டுமென்றும் விளம்பரம் பிரசுரிக்கலாம்.

(2) ப்ரெசிடெண்டானவர்-அந்தப்படி தொத்துவியாதி சம்பந்தத்தை வெகுசாய்ப் பற்றிக்கொண்டிருக்கத்தக்க படுக்கைகளையாவது வஸ்திரங்களையாவது இதர வஸ்துக்களையாவது அழித்துவிடும்படி கட்டளையிடலாம்; மேலும், கேட்கப்படும்பட்சத்தில், அழிக்கப்பட்ட வஸ்துக்களுக்காக அவர் நஷ்ட ஈடு செய்துகொடுக்கவேண்டும்.

குறிப்பு.

செ. **132** (1) தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 10 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—இன்ன இடங்களுக்கு வண்டி முதலியவைகள் அப்புறப்படுத்த வேண்டுமென்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கவேண்டும். (2) எதிரி மீறி நடந்திருக்கவேண்டும்.

செ. **132 (2)**.—சுத்தம் செய்யப்பட்டபோதிலும் தொத்துவியாதிகள் பரவுவதற்கு ஏதுவாயிருக்கும் பண்டங்களை மட்டும் அழித்துவிடலாம். அழிக்கப்படும் வஸ்துக்குத்தக்க நஷ்ட ஈடு கொடுக்கலாம். இவ்விஷயத்தில் ஸிவில் கோர்ட் தலையிடலாம். [இ. பு. ப. 420]

தொத்துவியாதி சம்பந்தத்துக் குட்பட்ட நபர் தொழில் நடத்தக்கூடாதென்று தடுப்பது.

133. ஒரு அபாயகரமான வியாதி தமக்குக் கண்டிருக்கிறதாக யாதொரு நபருக்குத் தெரிந்தாலும் அந்தப்படி கண்டிருக்கிறதென்று நம்புவதற்குக் காரணம் இருந்தாலும் அவர் - அந்த வியாதி பரவக்கூடிய அபாயம் நேரிடாமல் யாதொரு தொழிலில் பிரவர்த்திக்க அல்லது யாதொரு வர்த்தகம் அல்லது வியாபாரம் நடத்தக் கூடுமானாலன்றி மற்றப்படி யாதொரு தொழிலில் பிரவர்த்திக்கவாவது யாதொரு வர்த்தகம் அல்லது வியாபாரம் நடத்தவாவது கூடாது.

குறிப்பு.

செ. **133**. தண்டனை.—இந்த செக்ஷனை மீறி நடப்பதற்கு ரூபாய் 50-ம், தவறும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபராத தண்டனை விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—(1) 6-வது ஷெட்யூலில் கண்டிருக்கிற வியாதிகளில் யாதாவதொன்று எதிரிக்கு கண்டிருக்க வேண்டும். (2) அவர் வியாபாரம் செய்வதால் அந்த வியாதி பரவுவதற்கு ஏதுவாயிருக்கவேண்டும். [இ. பு. ப. 420]

அபாயகரமான வியாதிகள் கண்டிருக்கிறவர்களும் பொதுவான வண்டி முதலியவைகளும்.

134. (1) அபாயகரமான யாதொரு வியாதி கண்டிருக்கிற எந்த நபரும் - அந்த வியாதி பரவாதபடி தகுந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யாமல், பொதுவான வண்டி முதலியவைகளில் தம்மை ஏற்றிக் கொண்டு போகும்படி செய்யவாவது அதில் தம்மை ஏற்றிக்கொண்டு போவதற்கு சம்மதிக்கவாவது கூடாது.

(2) அபாயகரமான யாதொரு வியாதி கண்டிருக்கிற எந்த நபரும் - தமக்கு அவ்வியாதி கண்டிருக்கிறதென்று யாதொரு பொதுவான வண்டி முதலிய தன் சொந்தக்காரருக்காவது அதை ஓட்டுகிறவருக்காவது அதைத் தம் வசத்தில் வைத்திருக்கிறவருக்காவது முன்னதாகத் தெரிவிக்காமலே அந்த வண்டி முதலியதில் பிரவேசிக்கக்கூடாது.

(3) பொதுவான யாதொரு வண்டி முதலியதற்குச் சொந்தக்காரராவது அதை ஓட்டுகிறவராவது அதைத் தம்வசத்தில் வைத்திருக்கிறவராவது - (1) குறிப்பிட்ட உட்பிரிவை மீறி, மேலே கண்டபடி வியாதி கண்டிருக்கிற யாதொரு நபரை அப்படிப்பட்ட வண்டி முதலியதில் தெரிந்து ஏற்றிக்கொண்டு போகவாகிலும் ஏற்றிக்கொண்டு போகவிடவாகிலும் கூடாது.

(4) பொதுவான வண்டி முதலியவைப்பற்றி அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற யாதொரு ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பொதுவான யாதொரு வண்டி முதலியதற்குச் சொந்தக்காரராவது அதை ஓட்டுகிறவராவது அதைத் தம்வசத்தில் வைத்திருக்கிறவராவது-அப்படிப்பட்ட வண்டி முதலியதனின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதில் நேரக்கூடிய யாதொரு நஷ்டத்தையும் அதற்கு பிடிக்கக்கூடிய எவையேனும் செலவுகளையும் ஈடு கட்டிக்கொள்வதற்குப் போது

மான ஒரு தொகையை மேலே கண்டபடி வியாதி கண்டிருக்கும் யாதொரு நபர் செலுத்தினாலும் அல்லது செலுத்துவதாகக் காட்டினாலுமன்றி மற்றப்படியும் அப்படி செலுத்தும் அல்லது செலுத்துவதாகக் காட்டும் வரையிலும், அந்த நபரை ஏற்றிக்கொண்டுபோகக் கடமைப்பட்டவராகமாட்டார்.

(5) (1) குறிப்பிட்ட உட்பிரிவையாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவை யாவது மீறி நடந்ததாக யாதொரு நபரைக் குற்றவாளியென்று தீர்மானிக்கும் கோர்ட்டார்-அந்த குற்றத்துக்காக இந்த ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனையுடன்கூட, வண்டி முதலியதனின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கும்பொருட்டு சொந்தக்காரருக்கு அல்லது அதை ஓட்டுகிறவருக்கு நேரிடும் நஷ்டத்தையும் பிடிக்கும் செலவுகளையும் ஈடுகட்டிக்கொள்வதற்குப் போதுமான தென்று கோர்ட்டார் கருதுகிற ஒரு தொகைக்குச் சமமாய் அதிகப்படியான ஒரு அபராதத்தையும் விதிக்கலாம். அந்தப்படி விதிக்கப்பட்ட அதிகப்படியான யாதொரு அபராதத் தொகையைக் கோர்ட்டார் அந்த வண்டி முதலியதன் சொந்தக்காரருக்கு அல்லது அதை ஓட்டுகிறவருக்குக் கொடுக்கும்படி தீர்மானிக்க வேண்டும்.

ஆனால், அப்பீலுக்குட்பட்ட ஒரு விஷயத்தில் அப்படிப்பட்ட அதிகப் படியான அபராதம் விதிக்கப்பட்டால், அப்பீலைக் கொடுத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தியிருக்கும் கால அளவு கழிந்துபோவதற்கு முன்னாகிலும், அப்பீல் கொடுத்துக்கொள்ளப்பட்டால், அந்த அப்பீல் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னாகி லும், அந்த தொகையைச் சொந்தக்காரருக்காவது (வண்டியை) ஓட்டுகிறவருக் காவது கொடுக்கக்கூடாது.

(6) அதே விஷயத்துக்குச் சம்பந்தமாய்ப் பின்னிட்டு நடக்கும் யாதொரு ஸிவில் வியாஜ்ஜியத்தில் பிரதிபலன் தீர்மானிக்கும்போது, கோர்ட் டார் இந்தப் பிரிவின்படி வாதி பெற்றுக்கொண்டிருக்கும் யாதொரு தொகையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு.

செ. 134 (1). தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அவர் அபாயகரமான வியாதியினால் வருத்தப்படுவதாக இருக்கவேண்டும். (2) வண்டியில் ஏறுமுன் அந்த வியாதி பரவச் செய்யாதிருக்கும் முயற்சியைத் தேடாமலிருக்கவேண்டும். [இ. பு. ப. 421]

செ. 134 (2). தண்டனை—சாதாரணமாய் ரூ. 50 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அவர் அபாயகரமான வியாதியினால் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கவேண்டும். (2) வண்டிக்கு சொந்தக்காரனுக்கு தான் அப்படிப்பட்ட வியாதியால் கஷ்டப்படுவதாக அறிவிக்கப்படாமலிருக்கவேண்டும். [இ. பு. ப. 421]

செ. 134 (3). தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) வண்டிக்கு சொந்தக்காரன் அல்லது ஓட்டுபவனுக்கு வண்டியி லிருப்பவன் தொத்து வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாய் தெரிந்திருக்கவேண்டும். (2) தக்க முன் ஜாக்கிறதையில்லாமல் அம்மனிதரை வண்டியில் ஏற அனுமதி கொடுத்திருக்க வேண்டும். [இ பு. ப. 422]

135. ஒரு கிராமத்திற்குள் யாதொரு அபாயகரமான வியாதி கண்டிருக்கிற பட்சத்திலே, பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர் பொதுஜனங்கள் வேடிக்கையாய்க்கூடும் காரியத்துக்காக உபயோகிக்கப்படும் யாதொரு கட்டிடம், கொட்டகை அல்லது கூடாரத்தின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நோட்டீஸ் கொடுத்து, தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கால அளவுக்கு அதை மூடி வைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

பொது ஜனங்கள் வேடிக்கைகாகக் கூடும் இடங்களை மூடிவிடும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

குறிப்பு.

செ. 135. தண்டனை.—பொது ஜனங்கள் வேடிக்கைக்காக கூடும் இடங்களை மூடாமலிருந்தால் ரூபாய் 200-ம் அம்மாதிரி தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 100-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அபாயகரமான வியாதி பரவி இருக்கவேண்டும். (2) கட்டடத்தை மூடி வைக்கும்படி நோட்டீஸ் கொடுக்கவேண்டும். (3) அந்த வேடிக்கைக் கட்டடம் எதிரியின் மேற்பார்வையில் இருந்திருக்கவேண்டும். (4) அது பொது ஜனங்கள் வேடிக்கைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டும். (5) எதிரி நோட்டீஸில் கண்ட நிபந்தனைகளை மீறியிருக்க வேண்டும். [இ. பு. ப. 422]

136. அபாயகரமான யாதொரு வியாதி கண்ட அல்லது கண்டிருக்கிற, அல்லது அந்த வியாதியின் தொத்து சம்பந்தத்துக்கு உட்பட்டிருக்கிற ஒரு மைனரின் (வயது வராதவரின்) பெற்றோராகவாவது அவரைக் காப்பாற்றுபவர் அல்லது தம்வசத்தில் வைத்திருப்பவராகவாவது உள்ள எந்த நபரும்—அந்த மைனரைப் பாடசாலைக்காகிலும் கலாசாலைக்காகிலும் அனுப்பக்கூடாதென்று பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டினிடமிருந்து அல்லது இது விஷயமாய் அவரால் கிரமமாய் நியமிக்கப்பட்ட யாதொரு நபரிடமிருந்து நோட்டீஸ் பெற்ற பிறகு, அப்படிப்பட்ட மைனர் ஷை வியாதி இதரர்களுக்குத் தொத்தும்படியான அபாயம் இல்லாமலே பாடசாலை அல்லது கலாசாலைக்கு போகலாமென்று தாம் அபிப்பிராயப்படுவதாகக்கண்டு ஒரு ஸெர்டிபிகேட்டை அந்த ப்ரெஸிடெண்டினிடமிருந்தோ ஷை நபரிடமிருந்தோ ரெஜிஸ்டராயிருக்கும் ஒரு வைத்தியாப்பியாசியிடமிருந்தோ பெற்றிராமல், ஷை மைனர் பாடசாலை அல்லது கலாசாலைக்குப்போக அனுமதி கொடுக்கக்கூடாது.

அபாயகரமான வியாதி கண்டிருக்கும் மைனர் (வயது வராதவர்) பாடசாலைக்குப் போகக்கூடாதென்பது.

குறிப்பு.

செ. 136. தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50-ம் தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) மைனர் அபாயகரமான வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்க வேண்டும். (2) அவருடைய தகப்பனார் அல்லது போஷகர் அறிந்திருந்தும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருக்கவேண்டும். (3) வியாதி பரவக்கூடியதல்ல என்பதற்கு அத்தாக்ஷி பத்திரம் கொண்டு வராமலிருக்கவேண்டும். [இ. பு. ப. 423]

வைசூரி.

137. (1) இந்த ஆக்ட் பிரயோகப்படும் யாதொரு விஸ்தீர்ணத்தில் நிர்ணயிக்கப்படக்கூடிய நபர்கள் விஷயமாகவும் நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கும் அம்மை குத்திக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்திக்கவேண்டும்.

அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது.

(2) தாலூகா போர்டும் அதன் ப்ரெஸிடெண்டும் நிர்ணயிக்கப்படக் கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, அம்மை குத்திக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்க உத்தரவாதிகளாவார்கள்.

138. யாதொரு குடியிருப்பு இடத்தில் வசிப்பவருக்கு வைசூரி கண்டால், அப்படி வசிப்பவர் எதைச் சேர்ந்தவரோ அந்த குடும்பத்தின் தலைவரும் அவர் தவறினால் அப்படிப்பட்ட இடத்தின் அனுபோகதாரர் அல்லது விசாரணை வகிக்கும் நபரும்-அதைக் குறித்து தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டுக்காவது சம்பந்தப்பட்ட கிராம பெரியதனக்காரருக்காவது சிறிதும் காலதாமதமில்லாமல் சங்கதி தெரிவிக்கவேண்டும்.

வைசூரியைக் குறித்து சங்கதி தெரிவிக்க கடமைப்பட்டிருப்பது

குறிப்பு.

செ 138. தண்டனை.—வைசூரியைக் குறித்து சங்கதி தெறிவிக்காதவருக்கு ரூபாய் 50 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—(1) வசிக்குமிடத்தில் வைசூரியிருக்கவேண்டும். (2) அச்சமையத்தில் வீட்டிற்கு பெரியவர்கள் யாராவது இருந்திருக்கவேண்டும். (3) தாலூகா போர்ட் பிரசிடெண்டிற்காவது அல்லது கிராம பெரியதனக்காரருக்காவது அதைப்பற்றி தெரிவிக்காமலிருந்திருக்கவேண்டும். [இ. பு. ப. 424]

வைசூரிக்காக மருந்து குத்திக் கொள்ளக் கூடாதென்று தடுப்பது.

139. (1) வைசூரிக்காக மருந்து குத்திக்கொள்ளக் கூடாதென்று இதனால் தடுக்கப்படுகிறது.

(2) மருந்து குத்திக்கொள்ளும் சிகிச்சை செய்யப்பெற்றிருக்கும் எந்த நபரும் - அப்படிப்பட்ட நபர் தொடுவதனாலாவது அருகில் வருவதனாலாவது வைசூரி இனி வெகுசாய்க் காணாதென்று கண்டு ஒரு ஸெர்டிபிகேட்டை அப்படிப்பட்ட ஸெர்டிபிகேட்டுகள் கொடுப்பதற்கு தாலூகா போர்டாரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வகுப்பைச்சேர்ந்த வைத்தியாப்பியாசியினிடமிருந்து பெறாமல், மருந்து குத்திக்கொண்ட தேதியிலிருந்து நாற்பது தினங்கள் கழிவதற்குமுன் அவர் இருக்கும் கிராமம் அல்லது பட்டணத்தைவிட்டு போகக் கூடாது.

குறிப்பு.

செ. 139. தண்டனை.—ரூபா 100 அபராதம் விதிக்கலாம், 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—(1) வைசூரியினால் வருத்தப்படும் மனிதருடைய உடம்பிலிருந்து எடுத்த மருந்து குத்திக் கொண்டிருக்கவேண்டும். கிராமத்தை விட்டு வைத்திய இலாகாதாரரிடமிருந்து சர்டிபிகேட் இல்லாமல் 40 நாட்களுக்குள் வெளியில் வந்திருக்கவேண்டும். [இ. பு. ப. 424]

பிரேதங்களை ஒருவகை செய்வது.

140. (1) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதியிலே, பிரேதங்களைப் புதைப்பதற்காவது தகனஞ்செய்வதற்காவது வேறே விதமாய் ஒருவகை செய்வதற்காவது உபயோகிக்கப்பட்ட யாதொரு இடத்தின் சொந்தக்காரர் அல்லது அதன் விசாரணை வகிக்கும் நபர் ஒவ்வொருவரும் - அதை முன்னதாகவே ரெஜிஸ்டர் செய்யப்படாதிருக்கும் பட்சத்தில் இந்த இடத்தை ரெஜிஸ்டர் செய்வித்துக்கொள்ள பஞ்சாயத்துக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

புதைப்பதற்கும் தகனஞ் செய்வதற்குமான இடங்களை ரெஜிஸ்டர் செய்வது.

(2) அப்படிப்பட்ட இடத்திற்குச் சொந்தக்காரராவது விசாரணை வகிக்கும் நபராவது இல்லையென்று மேற்படி பஞ்சாயத்துக்குத் தோற்றினால் அந்த பஞ்சாயத்து அந்த இடத்து விசாரணையைத் தானே வகித்துக்கொண்டு அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டும்; அல்லது, டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியின் மேல் அதை மூடிவிடலாம்.

குறிப்பு.

செ. **140**. தண்டனை.—பிரேதங்களை புதைப்பதற்கும் தகனம் செய்வதற்கும் இடங்களை ரிஜிஸ்டர் செய்யாமல்போனால் ரூபாய் 100 அபராதம் விதிக்கலாம். 8.வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அவர் பிரேதங்களை தகனம் செய்யவோ அல்லது புதைக்கவோ இடம் வைத்திருக்கவேண்டும். (2) தாலூகா போர்டிலோ அல்லது பஞ்சாயத்திலோ அதை ரிஜிஸ்தர் செய்ய தவறி யிருக்கவேண்டும். [இ. பு. ப. 425]

பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது.

141. (1) விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, பொதுவானதாயிருந்தாலுஞ்சரி ஒருவருக்கே உரித்தானதாயிருந்தாலுஞ்சரி, பிரேதங்களை ஒருவகை செய்வதற்காக நூதனமாய் எந்த இடத்தையும் ஏற்படுத்தவோ தயார் செய்யவோ கட்டவோ அல்லது உபயோகிக்கவோ கூடாது.

(2) லைஸென்ஸுக்காகச் செய்துகொள்ளப்படும் மேற்படி விண்ணப்பத்தோடு, ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டிய இடம் இருக்கிற பிரதேசத்தையும், அதன் எல்லைகளையும், விஸ்தீர்ணத்தையும் சொந்தக்காரர் அல்லது அதில் பாத்தியதையுள்ள நபர் அல்லது வகுப்பாரின் பெயரையும், அதை நிர்வகிப்பதற்கான ஏற்பாட்டையும் பஞ்சாயத்து கேட்கக்கூடிய இதர விவரங்களையும் கண்டு அந்த இடத்தின் ஒரு நக்ஷாவை அனுப்பவேண்டும்.

(3) யாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த பஞ்சாயத்து

(a) லைஸென்ஸ் கொடுக்கலாம் அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிக்கலாம்; அல்லது

(b) அந்த நிவேசனத்துக்குள் ஆட்சேபனைகள் நிவர்த்தியாகும் வரையிலாவது தான் கேட்கும் எவையேனும் விவரங்கள் சவதரிக்கப்படும் வரையிலாவது லைஸென்ஸ் கொடுப்பதை நிறுத்தி வைக்கலாம்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பஞ்சாயத்துதாரரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவைப் பிரதேச கவர்ன்மெண்டார் ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

குறிப்பு.

செ. **141**. தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 100-ம், லைசென்ஸ் இல்லாமல் வைத்திருக்கும் பிரதிதினத்திற்கு அபராதம் 20-ம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) லைசென்ஸ் இல்லாமல் பிரேதங்களை புதைக்க அல்லது தகனம் செய்ய புதிதாய் இடம் ஏற்படுத்திருக்கவேண்டும் [இ. பு. ப. 425]

புதைப்பதற்கும் தகனஞ் செய்வதற்குமான இடங்களையும் பிரேதங்களைத் தகிப்பதற்கான உலைக்கூடங்களையும் ஏற்படுத்துவது.

142. பஞ்சாயத்தானது - புதைக்குமிடங்களாகவோ தகனஞ்செய்யுமிடங்களாகவோ பிரேதங்களை தகிப்பதற்கான உலைக்கூடங்களாகவோ உபயோகமாகும்படியான இடங்களை கிராம பண்டின் செலவில் ஏற்படுத்தலாம்; மேலும், அவர்கள் மேலே கண்ட விஷயங்களுக்குப் போதுமான ஏற்பாடு இராவிட்டால் அந்தப்படியே செய்யவேண்டும்; அல்லாமலும், அவைகளை உபயோகிப்பதற்காக வாடகைகளும் கட்டணங்களும் விதித்தது வாங்கலாம்.

குறிப்பு.

செ. 142. பிரேதங்களை புதைப்பதற்கும் தகனம் செய்வதற்கும் ஏற்கனவே இடம் இல்லாமலிருந்தால் லோகல்போர்டார் பிரத்தியேகமாய் இடம் ஏற்பாடு செய்யலாம். புதைக்கும் அல்லது தகனம் செய்யும் பாத்தியதை ஜனசமூக பாத்தியதை யாதலால் அப்போது யாராவது செய்யும் மந்திரஜபங்களை தடுக்க யாருக்கும் அதிகாரமில்லை. (கூனிமீரா எ. மகமத்மீரா, 30 Mad. 15). அவரவர்கள் ஆசார வழக்கப்படி தகனம் அல்லது புதைப்புக்காக ஏற்பட்டிருக்கும் பிரத்தியேக இடத்தில் அவர்களுடைய சடங்குபடி நடத்துவதினால் பிறர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டாலும் அதற்கு அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்கு அதனால் கஷ்டம் நஷ்டம் ஏற்படுமானாலும் இந்தியன் பினல் கோட் 290-வது செக்ஷன்படி குற்றம் சாட்டமுடியாது. கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 143-வது பிரிவுபடி ஏற்கனவே நடந்து வரும் வழக்கத்தை மாஜிஸ்டிரேட் தடுக்கக் கூடாது. அப்படி உத்திரவு பிறப்பித்திருந்தாலும் அதைமீறி நடந்ததாக குற்றம் கூறக்கூடாது. சென்னை முனிசிபல் கமிஷனர் தகனத்திற்கும் புதைப்பதற்கும் நிலம் பெற்றார். அது பக்கத்து நிலக்காரருக்கு கெடுதலாயிருக்கிறதென்று தாவா தொடர்ந்தார். மதராஸ் முனிசிபல் சட்டப்படி கமிஷனருக்கு பாது காப்பு இருக்கிறதென்றும், தகனத்திற்கு பிரத்தியேக இடம் பெறும் அதிகாரம் அதன் பக்கத்திலிருக்கும் நிலக்காரருக்கு கஷ்டம் ஏற்பட்டபோதிலும் சட்ட பூர்வகமாய் கமிஷனருக்கு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கு நிலம் யாரிடம் பெறுகிறார்களோ அவருக்கு ஈடு கொடுக்க அனுமதி இருப்பதாகவும்; பக்கத்து நிலக்காரர் தனக்கு சேதம் விளையுமென்று கூறுவதினால் கமிஷனர் தனக்கு இருக்கும் அதிகாரத்தை இழக்க முடியாதென்றும் தீர்ப்பு கூறினார்கள். (மகமத் மொஹதீன் சேட் எ. மதராஸ் முனிசிபல் கமிஷனர், 25 Mad. 118). [இ பு. ப. 426]

அந்தப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவது இருக்கிற இடங்களைக் குறித்து ஒரு புஸ்தகம் வைக்க வேண்டுமென்பது.

143. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீஸிலும் ஒரு புஸ்தகம் வைத்து, அதில் 140 முதல் 142 வரையிலுள்ள பிரிவுகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற இடங்களையும் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்னே ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற அப்படிப்பட்ட சகல இடங்களையும் தாக்கல் பண்ணவேண்டும்.

(2) அப்படிப்பட்ட இடம் மேலே சொன்னபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்றாவது லைசென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கிறதென்றாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றாவது கண்டுள்ள நோட்டீஸ் ஒன்றை, இங்கிலீஷ் பாஷையிலும் குறைந்தது ஒரு சுதேச பாஷையிலும், புதைக்கும் அல்லது தகனம் செய்யும் ஷை இடத்தின் அல்லது மேலே சொல்லப்பட்ட வேறே யாதொரு இடத்தின் நுழைவாயிலிலாவது அதற்குச் சமீபமாகவாவது நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் ஒட்டவேண்டும்.

அனுமதி கொடுக்கப்பட்டிராத இடங்களில் (பிரேதத்தைப்) புதைக்கக்கூடாதென்றுவது தகனஞ்செய்யக்கூடாதென்றுவது தடுப்பது.

144. யாதொரு குடியிருப்பு வீடு அல்லது குடிக்கும் தண்ணீரிருக்கும் இடத்திலிருந்து 100 கெஜ தூரத்துக்குள்ளே, மேலே கண்டபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற யாதொரு இடமல்லாத வேறே எந்த இடத்திலாயினும் எவரும் யாதொரு பிரேதத்தைப் புதைக்கவுங்கூடாது, தகனஞ் செய்யவுங்கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங்கூடாது ; அல்லது, புதைக்கும்படியோ தகனம் பண்ணும்படியோ அல்லது மற்றப்படி ஒருவகை பண்ணும்படியோ செய்யவுங்கூடாது ; அல்லது புதைக்கவாகிலும் தகனஞ்செய்யவாகிலும் மற்றப்படி ஒருவகை செய்யவாகிலும் பார்த்துக்கொண்டிருக்கவுங்கூடாது :

ஆனால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் அனுமதியை எழுத்து மூலமாகப் பெறாமல், இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி நடப்பதற்காக எவர் மேலும் பிராது தொடரக்கூடாது.

குறிப்பு.

செ. **144.** தண்டனை.—ரூபாய் 100-க்கு அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) குடியிருப்பு வீடுகளுக்கு அல்லது குடிதண்ணீருக்கு 100 கஜத்திற்குள் பிரேதத்தை எதிரி புதைத்து அல்லது தகனம் செய்திருக்கவேண்டும். (2) அந்த இடம் லைசன்ஸ் பெறாததாயிருக்கவேண்டும். [இ. பு. ப. 427]

பிரேதங்களைப் புதைப்பது முதலியவைகளைப் பற்றி லோகல் போர்டாருக்கு நோடீஸ் கொடுக்கவேண்டுமென்பது.

145. பிரேதங்களை ஒருவகை செய்வதற்காக ஏற்பட்ட இடத்தின் விசாரணை வகித்துகொண்டிருக்கிற நபர் - அந்த இடத்தில் பிரேதத்தைப் புதைக்கிற அல்லது தகனஞ்செய்கிற அல்லது மற்றப்படி ஒருவகை செய்கிற சகல விஷயங்களைக் குறித்தும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் யாதொரு நபருக்குத் தெரிவிக்கவேண்டும்.

குறிப்பு.

செ. **145.** தண்டனை.—தகவல் கொடுக்கத் தவறினவருக்கு ரூபாய் 20 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அந்த நபர் பிரேதத்தை தகனம் அல்லது புதைப்பதற்காக இடம் வைத்திருக்கவேண்டும். (2) தகவல் கொடுக்காமல் பிரேதத்தை ஒருவகை செய்திருக்கவேண்டும். [இ. பு. ப. 428]

தேகாரோக்கியத்திற்கு அபயாகரமான அல்லது அமிதமாய்ப் பிரேதக்குழிகள் நிறைந்துள்ள புதைக்கும் இடங்களையும் தகனஞ்செய்யும் இடங்களையும் உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பது.

146. (1) (a) பிரேதங்களை ஒருவகை செய்வதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட அல்லது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு இடமானது அதன் சமீபத்தில் வசிப்பவர்களுடைய தேகாரோக்கியத்திற்கு அபாயத்தை உண்டாக்கும் அல்லது வெகுசாய் உண்டாக்கக்கூடிய ஸ்திதியில் அல்லது பிரதேசத்தில் இருக்கிறதென்றாகிலும்,

(b) யாதொரு புதைக்குமிடத்தில் அமிதமாய் பிரேதக் குழிகள் நிறைந்திருக்கிறதென்றாகிலும்,

யாதொரு பஞ்சாயத்துக்குத் திருப்திகரமாய்த் தெரிந்திருந்து,

பொதுவான புதைக்குமிடம் அல்லது தகனஞ்செய்யும் இடத்தின் விஷயத்திலாவது மேற்கண்ட வேறே இடத்தின் விஷயத்திலாவது பிரேதங்களை ஒருவகை செய்ய கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வசதியான வெறொரு பூமி ஷை இடத்தைச் சாதாரணமாய் உபயோகிப்பவர்களுக்காக ஏற்கனவே இருந்தாலும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அது டிஸ்ட்ரிக்ட் போர்டாருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு, இரண்டு மாதத்துக்குக் குறையாமல் நோடீஸிற்கண்ட ஒரு கால அளவுக்குப் பிறகு ஷை இடத்தில் யாதொரு பிரேதத்தைப் புதைப்பதோ அல்லது தகனஞ்செய்வதோ அல்லது வேறே விதமாக ஒருவகை செய்வதோ சட்டசம்மதமாகாதென்று நோடீஸ் கொடுக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு நோடீஸையும், டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டிலும் சம்பந்தப்பட்ட கிராமத்தில் தண்டோரா மூலமாயும் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு நோடீஸுக்கு விரோதமாகவும் அந்த நோடீஸில் குறிப்பிடப்பட்ட கால அளவு கழிந்த பிறகும் எந்த நபரும் அந்த இடத்தில் யாதொரு பிரேதத்தைப் புதைக்கவுங்கூடாது, தகனஞ் செய்யவுங்கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங்கூடாது; அல்லது, அந்தப் பிரகாரம் புதைக்கும்படியோ தகனம் பண்ணும்படியோ அல்லது மற்றப்படி ஒருவகை பண்ணும்படியோ செய்யவுங்கூடாது, அல்லது அதற்கு அனுமதி கொடுக்கவுங்கூடாது.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பஞ்சாயத்தால் கொடுக்கப்பட்ட எந்த நோடீஸையாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

குறிப்பு.

செ. **146.** தண்டனை.—ரூபாய் 100-அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) இடம் புதைப்பதற்கோ அல்லது தகனம் செய்வதற்கோ தகுதியற்றதென தடுத்திருக்கவேண்டும். (2) வேறு இடத்திற்கு அநுமதி கொடுத்திருக்கவேண்டும். (3) தண்டோரா மூலமாயும், ஜில்லா கஜெட்டின் பிரசுர மூலமாயும் சரியான விளம்பரம் செய்யப்பட்டிருக்கவேண்டும். (4) பிரேதத்தை தகனம் அல்லது புதைத்திருக்கவேண்டு .

[இ. பு. ப. 428]

9-ம் அத்தியாயம்.

அபாயகரமான கட்டுக்கோப்புகளும் மரங்களும் இடங்களும்.

அபாயகரமான கட்டுக்கோப்புகளின் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

147. (1) ஒரு பொதுவான பாட்டைக்குப் பக்கத்திலிருக்கிற யாதொரு கட்டுக்கோப்பானது பாழடைந்த நிலைமையிலிருப்பதாகவும் அதன் பக்கமாகப் போகிறவர்களுக்கு அபாயகரமாயிருப்பதாகவும், அந்த பாட்டை எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டுக்குத் தோற்றினால், அந்த ப்ரெஸிடெண்டானவர் - அப்படிப்பட்ட கட்டுக்கோப்பினால் அபாயம் எதுவும் நேரிடாமல் தடுக்கும்பொருட்டு அதற்கு அடைப்படைக்கும்படியாவது அதை அழித்து

விடும்படியாவது பத்திரமாய் வைக்கும்படியாவது மரமத்து செய்யும்படியாவது நோடீஸ் மூலமாக அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால், ப்ரெஸிடெண்டானவர் - மேலே கண்டபடி நோடீஸ் கொடுப்பதற்கு முன்னாகிலும் அந்த நோடீஸில் கண்ட காலம் கழிவதற்கு முன்னாகிலும் தாமே ஷை கட்டுக்கோப்புக்கு அடைப்படைக்கவாவது, அதை அழித்துவிடவாவது, பத்திரமாய் வைக்கவாவது, மரமத்துசெய்யவாவது வேண்டும், அல்லது யாதொரு பாட்டையின் ஒரு பாகத்துக்கு அடைப்படைக்கவேண்டும், அல்லது அபாயத்தைத் தடுப்பதற்காகத் தமக்குத் தகுதியாகத் தோற்றும் சிறிது காலத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது - இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்கதாகும்.

குறிப்பு.

செ. **147**. போதுவானபாட்டைக்கு பக்கத்தில்.—கட்டடத்திற்கும் ரோட்டிற்கும் நடுவில் சுவர் இருந்தால் கட்டடம் பொதுவான பாட்டைக்கு பக்கத்திலிருப்பதாக கருதப்படக் கூடாது. அருகில் என்பது சேர்ந்தார்போலிருப்பதைக் குறிக்கும். முடிவு பெற்றிருக்க வேண்டும் அல்லது பிதங்கி இருக்கவேண்டும். (பான்டேப் எ. அரசர், A.I.R. 1928 All. 696=112 I.C. 588.) [இ. பு. ப. 430]

தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 500-ம் தவறி நடக்கும் நாள் ஒன்றிற்கு ரூபாய் 50-ம் அபராதம் விதிக்கலாம். 8,9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம் ருசு.—(1) கட்டடம் பொதுபாட்டைக்கு அருகாமையிலிருக்கவேண்டும். (2) அது கிலமாய் பொதுஜனங்களுக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். (3) செக்ஷனில் சொல்லியபடி எதிரிக்கு நோடிஸ் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். (4) நோடீஸ் நிபந்தனைகளை எதிரி மீறி இருக்கவேண்டும். [இ. பு. ப. 431]

148. அபாயகரமான மரங்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

ஒரு பொதுவான பாட்டைக்குப் பக்கத்திலிருக்கிற நிலத்திலுள்ள யாதொரு மரமாவது, மரத்தின் யாதொரு கிளையாவது விழும்போலிருக்கிறதென்றும் அதனால் அந்த பாட்டையை உபயோகிக்கிற யாதொரு நபருக்காவது அந்த பாட்டையின்மேலுள்ள யாதொரு கட்டுக் கோப்புக்காவது அபாயம் நேரிடும் போலிருக்கிறதென்றும் அந்த பாட்டை எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டுக்குத் தோற்றினால், அந்த ப்ரெஸிடெண்டானவர் - ஷை மரத்தினால் எவ்வித அபாயமும் நேரிடாமல் தடுக்கும்பொருட்டு அதை பத்திரமாய் வைக்கும்படியாயினும் அதன் கிளைகளைக் கழிக்கும்படியாயினும் அதை வெட்டிவிடும்படியாயினும் நோடீஸ் மூலமாக அந்த மரத்தின் சொந்தக்காரருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால், ப்ரெஸிடெண்டானவர் - மேலேகண்டபடி நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னாவது ஷை நோடீஸில் கண்ட காலம் கழிவதற்கு முன்னாவது தாமே ஷை மரத்தைப் பத்திரமாய் வைக்கவாகிலும் அதன் கிளைகளைக் கழிக்கவாகிலும் அதை வெட்டிவிடவாகிலும் வேண்டும், அல்லது ஷை பொதுவான பாட்டையில் ஒரு பாகத்துக்கு அடைப்படைக்க வேண்டும், அல்லது அபாயத்தைத் தடுப்பதற்காகத் தமக்கு தகுதியாகத்தோற்றுகிற சிறிதுகாலத்துக்கான இதர ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் ஷை மரத்தின் சொந்தக்காரரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்கதாகும்.

குறிப்பு.

செ. 148. தண்டனை.—நோட்டீஸில் கண்டபடி மரம் அல்லது அதன் கிளைகளை பத்திரமாய் வைக்கத்தவறினாலும், கழிக்கத்தவறினாலும், ரூபாய் 50-ம் தவறிய ஒவ்வொரு தினத்திற்கும் ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9 வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) பொதுவான பாட்டைக்கு அருகில் மரம் அல்லது கிளை இருக்கவேண்டும். (2) அது அந்த பாட்டையை உபயோகிக்கும் நபர்களின்பேரிலாவது, அண்டையிலிருக்கும் கட்டுக் கோப்பின் பேரிலாவது விழுந்து அபாயம் விளைவிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். (3) எதிரிக்கு நோடிஸ் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். (4) மரம் எடுக்க தவறியிருக்கவேண்டும். (5) எதிரி மரத்திற்கு சொந்தக்காராயிருக்கவேண்டும்.

[இ. பு. ப. 432]

கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு அடைப்படைத்து வைப்பதும், வேலிகளையும் மரங்களையும் தறிப்பதும்.

149. எந்த லோகல் போர்டாரிடத்தில் யாதொரு பொதுவான பாட்டை சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - அந்த பாட்டைக்கு அருகிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாய் அவரை—

(a) ப்ரெஸிடெண்டுக்குத் திருப்திகரமாய் அந்த கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப்படைக்கும்படியாவது,

(b) ஷை பாட்டையின் ஓரமாயிருக்கிற எந்த வேலிகளாகிலும் அடுத்துள்ள ரஸ்தாவின் மட்டத்துக்குமேல் ப்ரெஸிடெண்ட் நிச்சயிக்கக்கூடிய உயரத்துக்கு மிஞ்சியிராதபடி அவைகளைத் தறிக்கும்படியாவது கழிக்கும்படியாவது,

(c) ஷை பாட்டையில் சாய்ந்து தொங்கிக்கொண்டு அதற்காவது போக்குவரத்தைப் பார்ப்பதற்காவது இடைஞ்சல் உண்டுபண்ணுவதாகவாகிலும் அதற்குச் சேதமுண்டுபண்ணுவதாகவாகிலுமிருக்கிற எவையேனும் வேலிகள் அல்லது மரங்களை வெட்டிச் சீர்ப்படுத்தும்படியாவது,

(d) அதைச் சுற்றியிருக்கும் சுவராவது அடைப்பாவது அதன் உயரம் காரணமாகவும் நிலைமை காரணமாகவும் அபாயம் விளைவிக்கும் விதமாக போக்குவரத்தைப் பார்க்கக்கூடாதபடி இடைஞ்சல் உண்டுபண்ணினால், அந்த சுவர் அல்லது அடைப்பைத் தாழ்த்தும்படியாவது

உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. 149. தண்டனை.— சாதாரணமாய் ரூபாய் 50-அபராதமும், தவறி நடக்கும் பிரதி தினத்திற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9 வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(a) to (d) ல். சொல்லப்பட்டவைகளை செய்யும்படி பிரசிடெண்ட் நோடீஸ் கொடுத்தார் (2) எதிரி அம்மாதிரி செய்ய தவறி விட்டார். [இ. பு. ப. 433]

அபாயகரமான குளங்கள், கிணறுகள், குழிகள் முதலியவை விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

150. (1) யாதொரு குளம், குட்டை, கிணறு, குழி, ஓடை, அணை, கரை அல்லது இதர இடமானது போதுமான மரமத்து செய்யப்படாமலாவது போதுமானபடி பாதுகாக்கப்படாமலாவது அடைப்படைக்கப்படாமலாவது இருப்பதனால் அது பொதுஜன ஆரோக்கியத்துக்காகிலும் பத்திரத்துக்காகிலும் அபாயகரமாயிருப்பதாக யாதொரு பஞ்சாயத்து பிரஸிடெண்டிற்கும் தோற்றினால், அவர் - அந்த பஞ்சாயத்தின் அங்கீகாரத்தை பெற்று-அதனால் அபாயம் நேரிடாமல் தடுக்கும்பொருட்டு அதைத் தூர்க்கும்படி

யாயினும், அப்புறப்படுத்தும்படியாயினும், மராமத்து செய்யும்படியாயினும், பாதுகாக்கும்படியாயினும், அதற்கு அடைப்படைக்கும்படியாயினும் நோட்டீஸ் மூலமாக அதன் சொந்தக்காரருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால், அவர் - ஷை நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னாவது நோட்டீஸில் கண்ட கால அளவு கழிவதற்கு முன்னாவது அபாயத்தைத் தடுப்பதற்காகத் தமக்கு அவசியமாய்த் தோற்றும் சிறிது காலத்துக்கான ஏற்பாடுகளைத் தாமே செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய்ச் சொந்தக்காரரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்கதாகும்.

குறிப்பு.

செ. **150 (1)**. 123-வது செக்ஷனுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம் யாதெனில் இதில் சுகாதாரம், பத்திரம் இரண்டையும் குறிக்கிறது. நோடீஸ் கொடுக்குமுன் லோகல் போர்ட்டின் அங்கீகாரம் பெறவேண்டும். [இ. பு. ப. 433]

தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50-ம், தவறி நடக்கும் தினம் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ரு௬.—(1) குளம் முதலியவைகள் போதுமான மராமத்து செய்யப்படாமலாவது, பாதுகாக்கப் படாமலாவது அபாயகரமாகவும், ஆரோக்கியத்திற்கு கெடுதலானதாகவுமிருந்தது. (2) லோகல் போர்டார் சிலவைகளை செய்யும்படி நோடீஸ் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். (3) அதன்படி எதிரிக்கு நோடீஸும் கொடுக்கப்பட்டது. (4) அவர் அதில் சொல்லியபடி செய்யதவறி விட்டார். (5) அந்த குளம் எதிரியின் வசத்திலிருந்தது. [இ. பு. ப. 434]

செ. **150. (2)**.—அவசரமான விஷயங்களில் தாற்காலிகமான ரிபேர்கள் முதலிய செய்யலாமே தவிர குளங்களை மூடக்கூடாது. 155, 156-வது செக்ஷனில் சொல்லியபடி பிரசிடெண்ட் அதற்கு பிடித்த செலவை வசூல் செய்யலாம். [இ. பு. ப. 434]

151. (1) (a) யாதொரு பொதுவான பாட்டைக்காவது லோக்கல் போர்டாருக்குச் சொந்தமான வேறே அசையாப் பொருளுக்காவது இருபது கெஜதூரத்துக்குள்ளாக இருக்கும் யாதொரு இடத்திலிருந்து கல் வெட்டியெடுப்பதற்கோ கல்லையாகிலும் மண்ணையாகிலும் வேறே வஸ்துவையாகிலும் அப்புறப்படுத்துவதற்கோ தமக்கு அனுமதிகொடுத்து லோகல் போர்டாரிடமிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொள்ளாமல் ஷை இடத்தில் கல் வெட்டி யெடுக்கவும் கூடாது, கல் முதலியவைகளை அப்புறப்படுத்தவுங்கூடாது.

பொதுவான பாட்டைக்குச் சமீபமாய்க் கல்வெட்டியெடுப்பது முதலியவைகளுக்காக லைசென்ஸ் பெற வேண்டுமென்பது.

(b) லோகல் போர்டார் லைசென்ஸ் கொடுக்கலாம் அல்லது லைசென்ஸ் கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம்.

(2) யாதொரு கல்வெட்டியெடுக்கும் இடத்தில் வேலை செய்வதாவது யாதொரு இடத்திலிருந்து கல்லையாகிலும் மண்ணையாகிலும் இதர வஸ்துவையாகிலும் அப்புறப்படுத்துவதாவது அதன் அக்கம் பக்கத்தில் வசிக்கிற அல்லது அங்கு போகக்கூடியவர்களாயிருக்கிற நபர்களுக்கு அபாயகரமாயிருக்கிறதென்றாயினும், யாதொரு அசங்கியம் அல்லது சங்கடத்தை உண்டுபண்ணுகிறது அல்லது வெகுசாய் உண்டுபண்ணக்கூடுமென்றாயினும் லோக்கல் போர்டார் அபிப்பிராயப்பட்டால், அந்த போர்டார் - ஷை கல்வெட்டியெடுக்கும் இடத்தில் வேலை செய்வதை நிறுத்திவிடவேண்டுமென்றாவது, ஷை இடத்திலிருந்து கல்லையாகிலும் மண்ணையாகிலும் இதர வஸ்துவையாகிலும் அப்புறப்படுத்துவதை நிறுத்திவிடவேண்டுமென்றாவது, அந்த இடத்திலிருந்து உண்டாகும் அல்லது வெகுசாய் உண்டாகக்கூடிய அபாயத்தைத் தடுப்பதற்காயினும் அசங்கியம் அல்லது சங்

கடத்தைக் குறைப்பதற்காயினும் தங்களுக்கு அவசியமாய்த் தோற்றுகிறபடி அந்தக் கல்வெட்டியெடுக்குமிடம் அல்லது வேறே இடத்தின் விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்தவேண்டுமென்றுவது அதன் சொந்தக்காரருக்காகிலும் அதன் மேல் விசாரணை வகிக்கும் நபருக்குக்காகிலும் உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. 151 (1). தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50-ம், தவறிநடக்கும் நாள் ஒன்றிற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—லோகல் போர்டாருக்கு சொந்தமான அசையாப்பொருளுக்காவது அல்லது பொதுவான பாட்டைக்காவது 20 கஜதூரத்திற்குள் லைசென்ஸ் இல்லாமல் கல் வெட்டி எடுத்தார்

செ. 151 (2). தண்டனை.—சதாரணமாய் ரூபாய் 50-ம் தவறி நடக்கும் நாள் ஒன்றிற்கு ரூபாய் 10 அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) கல்வெட்டு அக்கம்பக்கம் வசிக்கிற அல்லது அங்கு போகக் கூடியவர்களாயிருக்கிற நபர்களுக்கு அபாயகரமாயாவது அல்லது அசங்கியம் அல்லது சங்கடம் உண்டுபண்ணக் கூடியதாயிருந்தது. (2) அதன் சொந்தக்காரருக்கு அதை மூடிவிடும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. (3) சொந்தக்காரர் பிறகு வெட்டி எடுத்தார். [இ. பு. ப. 435]

152. [1930-ஆம் வருஷத்திய மதராசு லோக்கல் போர்ட் ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

பஞ்சாயத்து விஸ்தீர்ணங்களிலுள்ள நிலங்களிலிருந்தும் கட்டிடங்களிலிருந்தும் அசுத்தங்களை அல்லது தீங்குண்டாக்கத்தக்க புல் பூண்டுகளை அப்புறப்படுத்துவது.

153. (1) யாதொரு கட்டிடம் அல்லது நிலம் அசுசியான அல்லது அனாரோக்கியமான நிலைமையிலிருப்பதாகவாகிலும் தேகாரோக்கியத்துக்குக் கெடுதியாகவாவது, பொது ஜனங்களுக்கு அபாயகரமாகவாவது அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்கு அருவருப்பு உண்டாக்கத்தக்கதாகவாவது வேறே விதமாய் உபத்திரவம் கொடுக்கத்தக்கதாகவாவதுள்ள அடர்ந்த அல்லது தீங்குண்டாக்கத்தக்க எவையேனும் சிறு செடிகளாயினும் மரங்களாயினும் கீழிருக்கும் புல் பூண்டுகளாயினும் அதில் அமிதமாய் முளைத்திருப்பதாகவாகிலும் யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்குத் தோற்றினால், அவர்-அதன் சொந்தக்காரர் அல்லது அநுபோகதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து, நோட்டீஸில் கண்ட காலத்திற்குள்ளும் விதமாகவும் அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தைப் பரிஷ்கரிக்கவேண்டுமென்றாகிலும் சுத்திசெய்யவேண்டுமென்றாகிலும் வேறே விதமாய் நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டுமென்றாகிலும் அப்படிப்பட்ட சிறு செடிகள் மரங்கள் அல்லது புல் பூண்டுகளைப் பரிஷ்கரித்து அப்புறப்படுத்திவிடவேண்டுமென்றாகிலும் அப்படிப்பட்ட உபத்திரவத்தை அப்புறப்படுத்துவதற்கு அவசியமானதென்று தாம் கருதக்கூடிய வேறே யாதொரு நடவடிக்கையை நடத்த வேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) சுகாதார சம்பந்தமான காரியங்களுக்காக இப்படி செய்வது அவசியமென்று யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்குத் தோற்றும் பட்சத்தில், அவர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்காகிலும் அல்லது அநுபோகதாரருக்காகிலும் நோட்டீஸ் கொடுத்து, அதன் உட்புறத்திலும் வெளிபுறத்திலும் அந்த நோட்டீஸில் கண்ட விதமாகவும் அதில் குறிப்பிடப்படும் காலத்துக்குள்ளாகவும் அதை சுத்திபண்ணும்படியாவது அதற்குச் சுண்ணாம்பு அடிக்கும்படியாகவாவது அதை வேறே விதமாய்ச் சுத்திபண்ணும்படியாகவாவது உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. **153**. போது.—இது பஞ்சாயத்து பிரசிடெண்ட் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சம். "அசுத்தம்" என்பது சாக்கடைமண், மலம், சாணம், மண்தூள், கெட்டுப்போன வஸ்துக்கள், தேகாரோக்கியத்திற்கு கெடுதலான வஸ்துக்கள் இவைகளை குறிக்கும். செடிகளும், புல், பூண்டுகளும் தழைந்திருப்பதினால் நிலத்தில் அதிக ஒதத்தை உண்டாக்கி மலேரியா முதலிய ஜுரங்கள் உண்டாவதற்கு ஆஸ்பதமாயிருக்கிறது. சில சமயங்களில் பாம்பு முதலிய விஷப்பூச்சிகள் தங்குவதற்கு ஆஸ்பதமாயிருப்பதால் அது அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு பத்திரகுறைவு உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. இம்மாதிரியான விஷயங்களில் அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு குறித்த காலத்திற்குள் சுத்தம் செய்யும்படி பிரஸிடெண்ட் நோட்டீஸ் கொடுக்க அதிகாரமுண்டு. கேஸிற்கு தக்க வைத்திய இலாகா சாக்ஷிகளும் இதர சாக்ஷிகளும் இருக்கவேண்டும். சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் அகப்படாவிட்டால் 155-வது செக்ஷனை அனுசரிக்கலாம். [இ. பு. ப. 436]

மரங்கள்.—சேர்மன் எடுத்துவிடவேண்டு மென்று உத்திரவிட்ட மரம் அபாயகரமானதா அல்லவா என்பதைப்பற்றி மாஜிஸ்டிரேட் கவனிக்கக்கூடாது. அம்மாதிரியான அபிப்பிராயம் சரியானது என்பதைப்பற்றி முடிவு கூறவேண்டியதில்லை (சேர்மன் முனிசிபல் கௌன்சில், சிகாகோல் எ. காஜீரெட்டி சீதாரமய்யநாயுடு, A.I.R. 1925 Mad. 584=90 I.C. 152)

பரிஷ்கரிக்கவேண்டுமென்றும், சுத்தம் செய்யவேண்டுமென்றும்.—சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருடைய சௌக்கரியத்திற்காக நிலத்தை பரிஷ்கரிக்க வேண்டுமென்றும் சுத்தம் செய்யவேண்டுமென்றும் உத்திரவிடவேண்டியதில்லை. பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகவும் அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் சுகத்திற்காகவும் பஞ்சாயத்து பிரசிடெண்டுக்கு சட்ட பூர்வமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது (முனிசிபல் கௌன்சில் மசுலிப்பட்டணம் எ. வெங்கட லக்ஷமண்ணு, A.I.R. 1927 Mad. 1125=100 I.C. 645.) [இ. பு. ப. 436]

தண்டனை.—நோட்டீஸில் கண்ட நிபந்தனைகளை தவறி நடந்ததற்கு சாதாரணமாய் ரூபாய் 50-ம்; பிரதி தினத்திற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) கட்டடங்களிலும் அல்லது நிலங்களிலும் அசுத்தங்கள் அல்லது தீங்குண்டாக்கக் கூடியவைகளாகிய புல், பூண்டுகள் நிறைந்திருந்தது. (2) அவைகளை அப்புறப்படுத்தும்படி சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டது. (3) நோட்டிஸில் கண்ட நிபந்தனைகளை நிராகரித்துவிட்டார். [இ. பு. ப. 436]

செ. **153** (2). தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50-ம் தவறி நடந்த தினம் ஒன்றிற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) சுகாதார விஷயத்திற்காக பஞ்சாயத்து பிரசிடெண்டிற்கு சுண்ணாம்படித்து சுத்தம் செய்வதவசியமென ஏற்பட்டது. (2) குறிப்பிட்ட காலத்திற்குள் அம்மாதிரி செய்யும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. (3) எதிரி செய்ய வில்லை. [இ பு. ப. 437]

154. (1) யாதொரு பஞ்சாயத்தானது லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத பன்றிகள் அல்லது நாய்கள் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் திரிந்துக்கொண்டிருந்தால் கொன்றுவிடப்படுமென்று பஹிரங்கமாய் நோட்டீஸ் கொடுக்கலாம்; டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் அவ்விதமாய்ச் செய்யவேண்டுமென்று தெரிவிக்கிற பட்சத்திலே அப்பிரகாரம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

திரிந்துக்கொண்டிருக்கும் பன்றிகளையும் நாய்களையும் கொன்றுவிடுவதற்கு அதிகாரம்.

(2) அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பிறகு, எந்த நபரும்—சந்தர்ப்பத்துக்கேற்றபடி லைஸென்ஸ் கொடுக்கப்பெறுததாயிருக்கும் யாதொரு பன்றியாவது நாயாவது ஷை எல்லைகளுக்குள் திரிந்துகொண்டிருக்கக் கண்டால் அதை அந்த நோட்டீஸில் கண்ட ஷரத்துகளுடன் முரண்படாத யாதொரு விதமாய்க் கொன்றுவிடலாம்.

குறிப்பு.

செ 154 (1).—லைசென்ஸ் பெறாமல் திரியும் நாய் அல்லது பன்றிகளை அழித்து விடுவது பஞ்சாயத்து பிரஸிடெண்டின் அபிப்பிராயத்தை பொறுத்தது. ஜில்லா மாஜிஸ்டிரேட் அவைகளை அழிக்க எண்ணினால் நோட்டீஸ் பிரசுரம் செய்யவேண்டும். நாய்களுக்கும் பன்றிகளுக்கும் லைசென்ஸ் இருக்கவேண்டுமென்று வியக்தமாய் இந்த ஆக்ட் கூறாமற்போனாலும், போர்ட் லைசென்ஸ் கொடுக்கலாமென தோற்றுகிறது. லைசென்ஸ் பெறாத நாய் பன்றிகளாயிருந்தபோதிலும் அவைகள் திரிந்துகொண்டிராமலிருந்தால் கொல்லக்கூடாது. [இ. பு. 437]

செ. 154 (2).—நோட்டீஸ் கொடுக்கப்பட்டபின் லைசென்ஸ இல்லாமலும், திரிந்து கொண்டிருக்கும் நாய், பன்றிகளை யாராவது கொன்றுவிடலாம். அதற்கு நஷ்டமாவது ஈடாவது அதன் சொந்தக்காரர் கேழ்க்க அருகரல்லர். செ 156 - படி இந்த செய்கை சட்டத்தால் கொடுக்கப்பட்டதாகும். [இ. பு. ப. 437]

பொதுவான பாட்டைகள்.—ஒருவர் அஜாக்ரதையால் தனது பன்றியை வெளியில் விட அது பொதுவான பாட்டையை சேதம் செய்தது "கால் நடை அத்து மீறிய சட்டம்" 18-வது செக்ஷன்படி குற்றமாகும். [இ பு. ப 439]

"நகர நியூஸன்ஸ் சட்டம்."—செக் 3 (a) போதுமான காரணமில்லாமல் அசுத்தம், மலக்குப்பை, கல்பொடி அல்லது கட்டடத்தை இடித்த தூள் முதலியவைகளை பொதுவான பாட்டையில் ஒருவர் எறிந்து வைத்தால் அது குற்றமாகும். (இ. பு. ப. 439)

அழித்து விடப்பட்ட அபாயகரமான கட்டுக்கோப்பு முதலியவைகளின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க ப்ரெசிடென்டுக்குள்ள அதிகாரம்.

155. (1) யாதொரு லோகல் போர்ட் ப்ரெசிடெண்டானவர் - இந்த அத்தியாயத்தின்படி தமக்குள்ள அதிகாரங்களைக்கொண்டு யாதொரு கட்டுக்கோப்பையாகிலும் அதன் யாதொரு பாகத்தையாகிலும் அழித்துவிட்டாலும், யாதொரு மரம், வேலி அல்லது புதரையாகிலும் அதன் யாதொரு பாகத்தையாகிலும் வெட்டிவிட்டாலும் ஷை ப்ரெசிடெண்டானவர்-அழித்துவிடப்பட்ட, வெட்டிவிடப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட சாமான்களை அல்லது வஸ்துக்களை விற்கலாம்; மேலும், அந்த விற்றுமுதலை, பிடித்த செலவுக்காக முழுவதுமாகிலும் சிறிது மட்டிலாகிலும் செலுத்தும்பொருட்டு உபயோகிக்கலாம்.

(2) நியாயமான விசாரணை செய்த பிறகு இந்த அத்தியாயத்திலுள்ள எந்தப்பிரிவின் படியாவது நோட்டீஸ் கொடுக்கப்படக்கூடிய சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும் இல்லையென்று ப்ரெசிடென்டுக்குத் தோற்றினால், அவர் ஷை பிரிவில் சொல்லப்பட்ட சொத்தின் விஷயமாய் தமக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய விதமாகத் தாமே ஏற்பாடு செய்யலாம்; மேலும், அவர் - இதற்காகப் பிடித்த செலவை (அசையாப்பொருளல்லாத) அந்த சொத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது விற்று வசூல் செய்யலாம்.

பிரதிபலன் விஷயமான வரையறை.

156. யாதொரு லோகல் போர்ட் அதிகாரிகளால் இந்த அத்தியாயத்தின்படி தங்களுக்குள்ள அதிகாரங்களைக்கொண்டு நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கை காரணமாய் நேரிட்டிருக்கும் எவையேனும் சேதங்களுக்காக எந்த நபரும் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி பிரதிபலன் பெற பாத்தியதையுடையவராகமாட்டார்.

10-ம். அத்தியாயம்.

பொதுவான பாட்டைகள்.

பொதுவான பாட்டைகளிலாவது பாட்டைகளின் மேலாகவாவது தடங்கல்கள் உண்டாகக் கூடாதென்று தடுப்பது.

157. இதில் பின்னால் நிபந்தனைகண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு பொதுவான பாட்டையிலாவது பாட்டையின் மேலாகவாவது எவரும் யாதொரு சுவர் கட்டவுங்கூடாது, யாதொரு அடைப்பாகிலும் வேறே தடங்கலாகிலும் பிதுக்கமாகிலும் ஏற்படுத்தவுங்கூடாது, யாதொரு ஆக்கிரமிப்பு ஏற்படும்படி செய்யவும் கூடாது.

குறிப்பு.

செ. **157**. பொது.—"கட்டவும் கூடாது" என்பது முதல் முதல் கட்டடம் கட்டுதலைக் குறிக்குமேயொழிய பழைய கட்டடத்தை இடித்து புதுப்பிப்பதைக் குறிக்காது. (காலா கோவிந்து எ. தானு முனிசிபாலிடி, 23 B. 248). குற்றம் செய்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பிராது கொடுக்கவேண்டும். 223-வது செக்ஷன் பார்க்கவும். கட்டடம் கட்டியபின் மூன்று மாதங்களுக்குள் பிராது கொடுக்கப்படாமல் போனால் இந்த செக்ஷன்படி குற்றவாளியை மாஜிஸ்டிரேட் அல்லது போலீஸ் அல்லது பிரசிடெண்ட் ஒன்றும் செய்யமுடியாது. பொதுவான பாட்டையில் ஆக்கிரமிப்பவர்களை தண்டனைக்குள்ளாக்க இந்த செக்ஷன்படி முடியாதென்பது அசம்பாவிதம். ஆகையால் 159-வது செக்ஷனில் அப்படி ஆக்கிரமிப்பவர்களை நோடீஸ் கொடுத்த பிறகு பிராது செய்யலாம் என்று கூறுகிறது. [இ. பு. ப. 440]

தண்டனை.—பொதுவான பாட்டையின் பேரில் ஆக்ரமிப்பவருக்கு சாதாரணமாக ரூபாய் 100-ம், தவறி நடக்கும் பிரதி தினத்திற்கும் ரூபாய் 20-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—பொதுவான பாட்டையிலாவது, பாட்டைகளின்மேலாவது தடங்கல் உண்டாகக்கூடியதாய் கட்டடம் கட்டடப்பட்டிருந்தது. [இ. பு. ப. 440]

பொதுவான பாட்டை யாவருக்கும் உறியது.

157-A. லோகல் போர்டுகளிடத்தில் சங்கிரமித்திருந்திருக்கும், அல்லது அவர்களால் பராமரிக்கப்பட்டிருக்கும் எல்லா பொதுவான பாட்டைகள், ஜாதி மத வித்தியாசமில்லாமல் எல்லாருக்கும் பொதுவானதாகும்.

குறிப்பு.

செ. **157-A**.—பாட்டைகள் பொதுவானதாய் அல்லது பிறருக்கு சொந்தமானதாயிருந்தாலும் வித்தியாசமில்லை. அவைகள் லோகல் போர்டினிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வரும் பக்ஷத்தில் எல்லா ஜாதி மத முள்ளவர்கள் போக்கு வரத்துக்கு பொதுவானதாகும். பொதுவான பாட்டைகள் எல்லாம் லோகல் போர்டிடம் ஒப்படைக்கப்பட்டவைகள். 60-வது செக்ஷன் பார்க்கவும். இதர ரோட்டுகளும் சில சமயங்களில் லோகல் போர்டாரால் பரிபாலிக்கப்பட்டு வரப்படுகின்றன. பொது பாட்டைகளில் நடமாடும் பாத்தியத்தை அந்த பாட்டையில் குடியிருப்பவர்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்தல்ல. பொது ஜனத்தில் ஒரு பகுதியாருக்குமட்டும் பொதுபாட்டையில் நடமாடும் பாத்தியமிருக்கிறதென்பது கிடையாது. [இ. பு. ப. 441]

தண்டனை.—பொது பாட்டையில் போகிறவர்களை தடுத்தால் ரூபாய் 100 அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) எதிரி பொது பாட்டையில் சென்றவரை தடுத்தார். (2) அந்த பாட்டை லோகல் போர்டார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் பரிபாலிக்கப்பட்டது. [இ. பு. ப. 443]

கதவுகள், அடித்தரை ஜன்னல்கள், கிராதிக் கதவுகள் முதலியவைகள் வெளிப்புறமாய் திறக்கக்கூடாதென்று தடுப்பதும் அவைகளைப் பற்றி ஒழுங்கேற்படுத்துவதும்.

158. (1) எந்த லோகல் போர்டாரிடத்தில் யாதொரு பொதுவான பாட்டை சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டினிடமிருந்து லைஸென்ஸ் பெறுமல், யாதொரு கதவு, கேட்கதவு, கிராதிக்கதவு அல்லது அடித்தரை ஜன்னல் கதவையும், வெளிப்புறமாய் ஷை பாட்டையில் திறக்கும்படி தொங்கவிடவுங்கூடாது அமைக்கவுங்கூடாது.

(2) ஷை ப்ரெஸிடெண்டானவர்-நோடீஸ் பிறப்பித்து, அப்படிப்பட்ட கதவு-கேட்கதவு-கிராதிக்கதவு அல்லது ஜன்னல் கதவின் சொந்தக்காரருக்கு, அது திறந்திருக்கும்பொழுது அதன் எந்த பாகமும் தெருவில் பிதுங்கிவராமலிருக்கும்படி அதை மாற்றவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. **158 (1)**.—யாதொரு கதவும் வெளிப்புறமாய் பாட்டையில் திறக்கும்படி அமைக்கக்கூடாது. அது வேறு எங்கு திறக்கும் படியாய் அமைத்தாலும் குற்றமாகாது.

தண்டனை.—லைசென்ஸ் பெருமல் வெளிப்புறமாய் பாட்டையில் திறக்கும்படி கதவு அமைக்கப்பட்டால் அபராதம் ரூபாய் 20-ம், தவறி நடக்கும் பிரதி தினத்திற்கும் அபராதம் ரூபாய் 10-ம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களை பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—(1) கதவு லைசென்ஸ் இல்லாமல் வெளிப்பக்கத்தில் திறக்கும்படி அமைக்கப்பட்டது. (2) அது திறக்கும்போது பொதுபாட்டையில் திறக்கக்கூடியது.

[இ. பு. ப. 444]

செ. **158 (2)**. தண்டனை.—158 (1)-ல் சொல்லிய அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், நசு.—(1) பொதுபாட்டையில் கதவுதிறக்கப்பட்டது. (2) அதை மாற்றும்படி பிரஸிடெண்ட் நோடீஸ் கொடுத்தார். (3) அதில் கண்டபடி செய்யப்படவில்லை.

[இ. பு. ப. 444]

ஆக்கிரமிப்புகளை எடுத்து விடுவது.

159. (1) யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டானவர் யாதொரு வளவின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோடீஸ் கொடுத்து, அந்த வளவுக்கு நேராக அல்லது எதிரிலும் அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாட்டையில் அல்லது அதற்கு மேலாகவும் அமைக்கப்பட்டுள்ள (கதவு, கேட் கதவு, கிராதிக்கதவு, அல்லது அடித்தரை ஜன்னல் கதவல்லாத வேறே) யாதொரு பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கலை எடுத்துவிடும்படியோ மாற்றும்படியோ உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு பிதுக்கமாவது ஆக்கிரமிப்பாவது தடங்கலாவது கால நிர்ணயத்தைப்பற்றிய சட்டத்தின்படி யாதொரு நபருக்கு நீண்டகால அனுபோக பாத்தியதையைக் கொடுக்கப் போதுமான ஒரு கால அளவுக்கு இருந்திருக்கிறதென்றாகிலும், இது விஷயமாகக் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிற யாதொரு பிரதேச அதிகார சபையின் அனுமதியின் மேல் அல்லது லைஸென்சின்மேல் அது அமைக்கப்பட்டது அல்லது ஏற்படுத்தப் பட்டதென்றும் அப்படிப்பட்ட அனுமதி அல்லது லைஸென்ஸ் சட்டப்படி செலாவணியாகத்தக்க ஏதேனும் காலமானது கழிந்துபோகவில்லை யென்றுமாகிலும் அந்த வளவின் சொந்தக்காரர் அலலது அனுபோகதாரர் ருஜுப்படுத்துவாராகில், லோகல் போர்டார்-அதை எடுத்துவிடுவதனாலாவது மாற்றுவதனாலாவது நஷ்டமடைகிற ஒவ்வொரு நபருக்கும் நியாயமான பிரதிபலன் கொடுக்கவேண்டும்.

குறிப்பு.

செ. **159 (1)**. போது.—திருத்தப்படுமுன்னும் திருத்தப்பட்ட பின்னும் இந்த செக்ஷன் வரையில் என்ன வித்தியாசம் என்றால் முன் போர்டாரின் அங்கீகாரம் பெற்று நோடீஸ் கொடுக்கவேண்டுமென்றிருந்தது. இப்போது அப்படியில்லை. 157-வது செக்ஷன்படி ஆக்கிரமணம் செய்த மூன்று மாதத்திற்குள் பிராது தொடரக்கூடாத அம்சங்களுக்கு இந்த செக்ஷன் பிரயோஜனப்படக்கூடியது. நோடீஸ் கொடுப்பது பிராது தொடரப்படுமுன் எச்சரிக்கைக்காகவே. கட்டடம் கட்டி 3 மாதத்திற்குமேலானதால் திடீரென பிராது தொடரக்கூடாதென்பதை குறிக்கிறது. ஆனல் சட்டப்படி நோடீஸ் கொடுக்கப்பட்டும் அதற்கு மாறாக ஆக்கிரமத்திருப்பவர் அந்த ஆக்ரமணத்தை எடுக்கவில்லை என்றும் ஏற்படுத்தும் பொருட்டு நோடீஸ் கொடுக்கப்படுகிறது.

[இ. பு. ப. 445]

பொதுவான பாட்டையை காலிசெய்யவேண்டுமென்று ஒருவரை கேட்குமுன் அந்த பாட்டை பொதுபாட்டை என்றும் அது லோகல் போர்டினிடம் சங்கிரமித்திருக்கிறதென்றும் ருசு செய்யவேண்டும். (ராதாகிருசன் எ. அரசர், A.I.R. 1927 P. 52=97 I.C. 423). இந்த செக்ஷன்படி நோடீஸிற்கு கீழ்படியாமல் நடந்ததற்கு தண்டனையே ஒழிய ஆக்கிரமணத்

திற்காக தண்டனையில்லை. (ராதாகிருஷ்ண எ. அமராவதி முனிசிபாலிடி, 19 Cr. L.J. 39=44 I.C. 744). சில சமயங்களில் பிராது தொடரப்படுவதைவிட ஆக்கிரமணத்தை எடுத்து விடுவதே மேலானது. (அரசர் எ. ஆத்மாராம், 24 B.L.R. 384=66 I.C. 817). ஆக்கிரமணத்தை எடுக்கும் சாக்கில் முனிசிபாலிடிக்கு சொந்தமில்லாமல் சொந்தக்காரர்கள் அனுபவத்திலிருக்கும் கடைகளை முனிசிபாலிடி இடித்துவிட முடியாது. (ஜீவா எ. அரசர், 17 I.C. 713). [இ. பு. ப. 446]

157, 159-வது செக்ஷன்களுக்குள் வித்தியாசம்.—அடைப்பு, பிதுங்கல் அல்லது ஆக்கிரமணம் செய்யப்பட்டது 3 மாதங்களுக்குள்ளிருந்தால் நோடீஸ் இல்லாமலே 157-வது செக்ஷன்படி பிராது தொடரலாம். மூன்று மாதத்திற்கு மேற்பட்டிருந்தால் 157-வது செக்ஷன்படி பிராது தொடரக்கூடாது. சொந்தக்காரருக்கு லிமிடேஷன் சட்டப்படி உரிமை கொடுக்கக்கூடியதா யிருந்தபோதிலும் யாதொரு அடைப்பு, பிதுங்கல் அல்லது ஆக்கரமணம் பொது பாட்டைக்கு இடைஞ்சல் செய்யக்கூடியதாயிருந்தால் அதை எடுத்துவிடும்படி நோடீஸ் கொடுத்தபிறகு பிராது தொடர வேண்டும். [இ. பு. ப. 446]

இந்த செக்ஷன்படி பிராது தொடரல்.—இந்த செக்ஷன்படி பிராது தொடர வேண்டியதற்கு முக்கிய அம்சம் யாதெனில் ஆக்கிரமணம் பொதுபாட்டையிலிருக்கிறதா இல்லையா என்பது. (சந்தரமௌளய்யா, 9 I.C. 329=(1911) 7. M.W.N. 78). [இ. பு. ப. 447]

இரண்டாவது நோடீஸ் கொடுக்கப்பட்ட பிறகுப் பிராது தொடரலாம்.—ஒரு முனிசிபல் சேர்மன் முதலில் கொடுத்த நோடீஸின் அம்சங்களை அமுலுக்குக் கொண்டுவரத்தக்க முயற்சிகள் செய்யாமற்போனபோதிலும், இரண்டாவது நோடீஸ் ஒன்று கொடுத்து அதன்படி நடக்கத்தவறினல் அப்போது பிராது தொடரலாம். இரண்டாவது நோடீஸ் கொடுத்த மூன்று மாதத்திற்குள்ளும், முதல் நோடீஸ் காலாவதி ஆனபிறகும் பிராது தொடருவது சட்ட விரோதமாகாது. (ராமச்சந்தர செட்டி, A.I.R. 1926 M. 763). [இ. பு. ப. 450]

நோடீஸும் 220-வது செக்ஷனும்.—220-வது செக்ஷன்படி கொடுக்கப்பட்ட நோடீஸில் கண்ட அம்சங்கள்படி நடக்கத்தவறினல் எம்மாதிரியாக திருத்தவேண்டுமென்று நோடீஸில் கண்டிருக்கிறதோ அம்மாதிரியாக முன்சிபல் சிப்பந்திகளை கொண்டு ஆக்கரமணத்தை மாற்றலாம். மாற்றும் அதிகார மிருப்பது அதை அடியோடி இடித்துவிடும் அதிகார மிருப்பதாக கருதக்கூடாது. கட்டடத்தை அடியோடு இடிக்காமல் ஆக்ரமணத்தை மட்டும் மாற்றக்கூடியதாயிருந்தால் கட்டடத்தை அடியோடி இடித்துவிட அதிகாரமில்லை (தங்கர்சிதாஸ் எ. பசில்கா முனிசிபாலிடி, 116 I. C. 908= A. I. R. 1929 Lah. 566).

செ. 159 (2). லிமிடேஷன் (காலநிர்ணயத்தைப்பற்றிய சட்டம்).—யாதொரு ஆக்கிரமிப்பாவது தடங்கலாவது லிமிடேஷன் சட்டப்படி யாதொரு நபருக்கு நீண்டகால அனுபோக பாத்தியதை கொடுக்கப்போதுமானதாயிருப்பதாய் ருசு படுத்தினல் அதை எடுத்துவிடுவதினுலாவது மாற்றுவதனுலாவது, நஷ்டமடைகிற ஒவ்வொரு நபருக்கும் நியாயமான பிரதிபலன் கொடுக்கவேண்டும். இந்த செக்ஷன்படி பிதுங்கல், ஆக்கரமணம், அடைப்பு இவைகளை எடுத்துவிட லிமிடேஷன் இல்லை. அந்த தடங்கல் 60-வது வருஷங்களுக்குமேல் இருந்ததாக இருந்தபோதிலும் நோடீஸ் கொடுக்கப்படுமுன் அந்த தடங்கல் பொது பாட்டையின் மேல் இருக்கிறதா என்பதை மட்டும் கவனிக்கவேண்டும். பொது பாட்டையில் தடங்கலிருப்பதாக ஸ்பஷ்டமாய் ஏற்பட்டுவிட்டால், ஆக்கிரமித்திருப்பவருக்கு எவ்விதமான பாத்தியதை இருப்பதாக கொண்டாடினுலும் அது செல்லாது. நோடீஸ் கொடுக்கப்பட்டால் அதன்படி அவர் அதை எடுத்தே தீரவேண்டும். சட்டத்திற்கு குறிபிட்ட காலத்தின்மேல் ஒருவர் அநுபோகத்திலிருந்ததென்று ருசு செய்யப்பட்ட தெருவில் ஆக்கிரமித்திருந்த சுவரைக் கூட எடுத்துவிடவேண்டுமென்று நோடீஸ் கொடுக்க முனிசிபாலிடிக்கு அதிகாரமுண்டு. [இ. பு. ப. 459]

தண்டனை.—தடங்கலை எடுத்துவிடாமலோ அல்லது மாற்றுமலோ இருக்கும் குற்றத்திற்கு ரூபாய் 200-ம், தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களை பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) நோடீஸ் கொடுக்க போர்டாரின் அனுமதி பெறப்பட்டது. (2) தடங்கலை எடுத்துவிட அல்லது மாற்றவேண்டுமென்று நோடீஸ் கொடுக்கப்பட்டது. (3) அந்த தடங்கல் பொது பாட்டையின்மேலிருந்தது. (4) நோடீஸில் கண்ட நிபந்தனைகள்படி எதிரி ஆக்கரமிப்பை எடுக்கவில்லை. [இ. பு. ப. 461]

சில பிதுக்கங்களுக்கும், கட்டுக் கோப்புகளுக் கு ம் உத்தரவு கொடுக்க அதிகாரம்.

160. (1) யாதொரு லோகல் போர்ட் ப்ரெசிடெண்டானவர்-அந்த போர்டாரின் அங்கீகாரத்தின்பேரில், யாதொரு வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு, அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாட்டையின் மேலாக பிதுக்கமாயிருக்கும்படி தாழ்வாரம்-மெத்தை வீட்டின் முகப்பு-வெயிலுக்கு நிழல் காற்றுக்கும் மழைக்கும் அடைப்பு முதலியவைகளைப் போட்டுக்கொள்ளவோ அந்த வளவுக்குப் போவதற்கு அவசியமாயுள்ள யாதொரு படிக்கட்டையாவது சாக்கடைக்கால் மேல்மூடியையாவது கட்டிக்கொள்ளவோ தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தி ஒரு லைஸென்ஸ் கொடுக்கலாம்.

(2) யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டானவர்-அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாட்டையிலாவது, வேறே எந்த பொதுவான இடத்தின் மேல்விசாரணை அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கிறதோ அப்படிப்பட்ட இடத்திலாவது பந்தல்களையும் இதர கட்டுக்கோப்புகளையும் சிறிது காலத்துக்கு அமைத்துக்கொள்வதற்காகத் தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தி ஒரு லைஸென்ஸ் கொடுக்கலாம்.

(3) யாதொரு லோகல் போர்ட் ப்ரெசிடெண்டாவர்-அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் பாட்டையின் பக்கங்களை லோகல் போர்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய ஷரத்துகளின்படியும் திட்டங்களின்படியும் கால அளவுக்கும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்கு அந்த போர்டாருடைய அங்கீகாரத்தின்பேரில் குத்தகைக்கு விட அதிகாரம் உடையவராவார்.

(4) ஆனால், சந்தர்ப்பத்துக் கேற்றபடி ஷை பிதுக்கத்தினலாகிலும் மேலே கண்டபடி (பந்தல் முதலியவைகளை) அமைத்துக்கொள்ளுவதனலாயினும் அனுபோகத்தில் வைத்துக்கொள்ளுவதனலாயினும் வெகுசாய் தேகாரோக்கியத்துக்குக் கெடுதி உண்டாகும் போலிருந்தாலும் பொதுஜனங்களுக்கு அசௌகரியம் உண்டாகும் போலிருந்தாலும், அந்த பாட்டையை அப்படியே உபயோகிப்பதற்கு வேறேவிதமாய் முக்கியாம்சத்தில் இடைஞ்சல் உண்டாகும் போலிருந்தாலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு லைஸென்ஸ் கொடுக்கவுங்கூடாது, (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு குத்தகைக்கு விடவுங்கூடாது.

(5) பிரதேச கவர்ன்மெண்டார்-யாதொரு லோகல் போர்டாராவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த லோகல் போர்டுகளாவது (1), (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவதை விளம்பர மூலமாக மட்டுப்படுத்தி தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி மேல்விசாரணையின் கீழ் வைக்கலாம்.

(6) இந்தப் பிரிவின்படி எவ்வளவு காலத்துக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காலம் கழிந்துபோவதன்மேல், ப்ரெசிடெண்டானவர் - நோடீஸ் கொடுக்காமலே, (1) குறிப்பிட்ட உட்பிரிவு அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட யாதொரு பிதுக்கம் அல்லது கட்டுக்கோப்பை எடுத்துவிடும்படி செய்யலாம்; மேலும், அப்படி செய்வதற்குப் பிடிக்கும் செலவான து-லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற நபரிடமிருந்து இதில் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் வசூலிக்கத்தக்கதாகும்.

குறிப்பு.

செ. **160 (1)**.—லைசென்ஸ் கொடுக்கப்படுமுன் போர்டின் அனுமதியை பிரஸி டெண்ட் பெறவேண்டும்.

செ. **160 (2)**.—சிறிது காலத்திற்கு அமைத்துக்கொள்ளக்கூடிய பந்தல்களுக்கு பிரஸிடெண்ட் லைசென்ஸ் கொடுக்கலாம். உற்சவ காலங்களிலும், கலியாண காலங்களிலும் பெரியோர்கள் விஜயம் செய்யும் காலங்களிலும் பந்தல்கள் போட்டுக்கொள்ள அனுமதிக்க லாம். லைசென்ஸ் கட்டணம் ஏற்படுத்தப்படவில்லை. [இ. பு. ப. 462]

செ. **160 (3)**.—4, 5-வது உப-செக்ஷன்களில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளுக்கு உள்பட்டிருக்கிறது. நெருக்கமாயிருக்கும் ரோட்டுபக்கங்களை வாடகைக்கு விடுவது பிசகு அந்த இடங்களில் லைசென்ஸ் இல்லாமல் கடைகள் வைப்பது குற்றமாகும். (அரசர் எ. கன்னு, 18 M.L.J. 329).

செ. **160 (6)**.—159 (2)-வது செக்ஷன் பார்க்கவும். இந்த செக்ஷன்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்ட தடங்கலை போர்டின் அனுமதி யில்லாமல் எடுத்துவிட பிரசிடெண்டிற்கு பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எடுப்பதால் உண்டாகும் செலவை லைசென்ஸ் பெற்றவரிட மிருந்து வசூல் செய்யலாம். [இ. பு. ப. 465]

ஜலதாரை சாக் கடைக்கால் முத லியவைகளின் மேல் அனுமதியில் லாமல் கட்டிடம் கட்டக்கூடாதென் றுதடுப்பது.

161. (1) பஞ்சாயத்து ப்ரெசிடெண்டின் அல்லது அந்தப் ப்ரெசிடெண் டால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபரின் எழுத்துமூலமான அனுமதியில்லாமலே, யாதொரு ஜலதாரை அல்லது சாக்கடைக்காலின்மேலாவது, ஜலதாரை அல்லது சாக்கடைக்காலின் யாதொரு பாகத்தின்மேலாவது, பாட்டை யைப் பெருக்குவதனால் சேரும் குப்பையைக் கொண்டாகிலும் இதிர குப்பைகளைக்கொண்டாகிலும் முழுவதுமோ அல்லது சிறிது மட்டிலோ மூடப்பட்டாயினும் உயர்த்தப் பட்டாயினும் சமப்படுத்தப்பட்டாயினும் இருக்கும் யாதொரு நிலத்தின்மேலா வது எந்தக் கட்டிடத்தையும் கட்டக்கூடாது.

(2) ஷை ப்ரெசிடெண்டாவது நபராவது-அப்படிப்பட்ட அனுமதி யில்லாமலாகிலும் அப்படிப்பட்ட அனுமதியின் ஷரத்துகளுக்கு விரோதமாகவா கிலும் அவைகளுடன் முரண்படும்படியாகவாகிலும் கட்டிடத்தைக் கட்டிருக்கும் யாதொரு நபருக்கு நோடீஸ் கொடுத்து அந்தக் கட்டிடத்தை இடித்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. **161 (1)** ஜலதாரை அல்லது சாக்கடைக்கால்களின் மேல்.—ஒருவர் தன் வீட்டிற்கு முன்னிருந்த சாக்கடைக்காலின் மேலிருந்த பழைய சுண்ணம்பு கட்டடத்தின்மேல் பாகத்தை முனிசிபாலிடி யாருடைய அனுமதியில்லாமல் ரிபேர் செய்தது ஜில்லா முனிசிபா லிடி ஆக்ட் 211-வது செக்ஷன்படி சாக்கடையின்மேல் கட்டியது குற்றமாகாது (தஞ்சாவூர் முனிசிபல் கௌன்சல் எ. விஸ்வநாதராவ், 21 Mad. 4). [இ. பு. ப. 465]

தண்டனை.—ஜலதாரை, சாக்கடையின்மேல் அனுமதியில்லாமல் கட்டடம் கட்டினு லும், குப்பைகளைக்கொண்டு பூமியை சமப்படுத்தினாலும் 200 ரூபாயும், தவறி நடக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 50-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) ஜலதாரை அல்லது சாக்கடையின்மேல் அல்லது குப்பை களில் நிரவப்பட்ட நிலத்தின்மேல் கட்டடம் கட்டப்பட்டது. (2) பிரஸிடெண்டிடமிருந்தா வது அல்லது அவரது அனுமதிபெற்றவரிடமிருந்தாவது எழுத்து மூலமான அதிகாரம் பெறவில்லை. [இ. பு. ப. 467]

செ. **161 (2)**. தண்டனை.—அனுமதியில்லாமலாவது அல்லது அனுமதிக்கு மீறியா வது கட்டடத்தை எடுத்துவிட வேண்டுமென்று கொடுத்த நோடீஸை மீறி நடந்ததற்கு ரூபாய் 200-ம், தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 50-ம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நகு.—(1) கட்டடம் சாக்கடை ஜலதாரை அல்லது போர்டாரால் குப்பைகளை கொண்டு நிறவப்பட்ட நிலத்தின்மேல் கட்டப்பட்டது. (2) அதை எடுத்துவிடும்படி நோடீஸ் கொடுக்கப்பட்டது. (3) எதிரி எடுக்கவில்லை. [இ. பு. ப. 467]

162. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர்-லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் பொதுவான பாட்டைடைக்காகிலும் வேறே நிலம் அல்லது நீர்நிலைக்காகிலும் அடுத்திருக்கும் யாதொரு நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு போர்டாருடைய அங்கீகாரத்தின்பேரில் நோடீஸ் கொடுத்து அந்த சொத்தின்மேல் வளர்ந்திருக்கும் இடங்களிலும், அந்த நிலத்திலிருந்து ஷை சொத்தின்மேல் பரவியிருக்கிற அளவுக்கும் சப்பாத்துக்கள்ளி, மிலாறு, லான்டானு அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க வேறே பூண்டுகளை எடுத்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

தீங்கு உண்டாக்கத்தக்க புல் பூண்டு முதலியவைகளை அப்புறப்படுத்துவது சம்பந்தமாய் நோடீஸ் கொடுப்பது.

குறிப்பு.

செ. 162. போது.—சப்பாத்தி, கள்ளி, மிலாறு, லான்டானு இவைகள் தீங்குண்டாக்கக் கூடியவைகள். இதர தாவர வஸ்துக்கள் தீங்குண்டாக்கக் கூடியவைகளா இல்லையா என்பது அந்தந்த வஸ்துவைப் பொறுத்தது. தீங்குண்டாக்கக்கூடிய புல், பூண்டுகள் சொந்தக்காரருடைய நிலத்திலிருந்து பரவி லோகல் போர்டாரிடம் சங்கரமித்திருக்கும் பொதுவான பாட்டை அல்லது நிலம் அல்லது நீர் நிலைக்காகிலும் பரவி இருந்தால்தான் குற்றம் செய்ததாக கருதப்படும். பாட்டையில் வைத்திருக்கும் செடிகளின் பாதுகாப்புக்காக போடப்பட்ட சப்பாத்தி நாளடைவில் படர்ந்து சொந்தக்காரருடைய நிலத்தில் படர்ந்துவிட்டால் அதை எடுக்கும்படி பிராது தொடரக்கூடாது. நோடீஸ் கொடுக்குமுன் போர்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அப்படியில்லாவிடில் நோடீஸ்வில் கண்டபடி நடக்கவில்லை என்று சொல்ல முடியாது. "போர்டின் அங்கீகாரம் பெற்று" என்னும் பதங்கள் புது ஆக்டில் விடப்படவில்லையாதலால் அங்கீகாரம் பெற்ற நோடீஸ்தான் சரியானது. [இ. பு. ப. 467]

தண்டனை.—சப்பாத்தி முதலியவைகளை எடுக்கத் தவறினதற்கு ரூபாய் 50-ம் தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், நகு.—(1) சொந்தக்காரர் அல்லது ஸ்வாதீனத்திலிருந்தவருடைய நிலத்தில் சப்பாத்தி, கள்ளி மலாறு, முதலிய முளைத்து படர்ந்திருந்தது. (2) பொதுவான பாட்டையின் பக்கத்திலாவது, நிலத்திலாவது லோகல் போர்டாரின் நீர் நிலைக்கருமையிலாவது படர்ந்திருந்தது. (3) அதை எடுக்கும்படி நோடீஸ் கொடுக்க போர்டின் அனுமதி பெறப்பட்டது. (4) நோடீஸ் கொடுக்கப்பட்டது. (5) நோடீஸில் கண்ட ஷரத்துகள்படி எதிரி நடக்கவில்லை. [இ. பு. ப. 468]

163. (1) யாதொரு நபர் எந்த லோகல் போர்டாரிடத்தில் யாதொரு பொதுவான பாட்டை சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டு ப்ரெஸிடெண்டின் அனுமதியை முன்னதாகப் பெற்று அந்த ப்ரெஸிடெண்ட் ஏற்படுத்தக்கூடிய திட்டங்களின்படி நடந்தாலன்றி மற்றப்படி, அவர் ஷை பாட்டையில் குழி தோண்டவுங்கூடாது எவ்வித தடங்கல் ஏற்படுத்தவுங் கூடாது.

பொதுவான பாட்டைகளில் குழி தோண்டுவதும் தடங்கல் ஏற்படுத்துவதும் கூடாதென்று தடுப்பது.

(2) அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கப்படும்போது, அந்த நபர் மேலேகண்ட குழியைத் தூர்த்துவிடுகிறவரையிலாவது தடங்கலை அப்புறப்படுத்துகிறவரையிலாவது அந்தக் குழி அல்லது தடங்கலுக்குத் தமமுடைய சொந்த செலவிலே போதுமான அளவுக்கு அடைப்படைத்து மூடிவைக்கும்படி செய்யவேண்டியதோடுங்கூட, அந்தக் குழி அல்லது தடங்கலுக்கு இராக்காலத்தில் போதுமான வெளிச்சம் தெரியும்படி விளக்கு போடுவிக்கவும் வேண்டும்.

(3) எவராகிலும் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக நடந்தால், ப்ரெஸிடெண்டானவர்-சந்தர்ப்பத்திற்கேற்றபடி அந்தக் குழியைத் தூர்த்துவிட வேண்டும், அல்லது தடங்கலை அப்புறப்படுத்தவேண்டும், அல்லது அந்தக்குழி அல்லது தடங்கலுக்கு வெளிச்சம் தெரியும்படி விளக்கு போடுவிக்க வேண்டும்; மேலும், ஷை ப்ரெஸிடெண்டானவர்-அந்தப்படி செய்வதற்குப் பிடிக்கும் செலவை மேலேகண்ட நபரிடத்திலிருந்து வசூல் செய்யலாம்.

குறிப்பு.

செ. **163**(1).—ஒரு நெருக்கமான பொதுபாட்டையிலுள்ள வீடுகள் ரோட்டில் யாதொரு துளையும் நோண்டாமல் சுமார் 20 அடி உயரத்துக்குமேல் எதிர் வீட்டுக்காரர்கள் பந்தல் போட்டுக்கொண்டால் அது 21 அடி உயரமுள்ள வஸ்துவை போகவொட்டாமல் தடங்கல் செய்யக்கூடியதாகிறது. நாற்புறத்திலும் 19 அடிகள் உயரத்தில் தந்திகம்பிகள்போக 20 அடி உயரத்தில் போடப்பட்ட பந்தல் தடங்கல் செய்யப்படுவதாகாது. [இ. பு. ப. 468]

தண்டனை.—அக்கிரமமாய் ரோட்டில் துளை செய்தாலும் அல்லது ரோட்டின்மேல் தடங்கல் ஏதாவது ஏற்படுத்தினுலும் ரூபாய் 50-ம், தவறி நடக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், நசு.—(1) பாட்டையானது பொதுஜன பாட்டை, (2) எதிரி பாட்டையில் குழிதோண்டினுர் அல்லது தடங்கல் வைத்தார். [இ. பு. ப் 470]

அனுமதியில்லாமால் பொதுவான பாட்டைகள் முதலியவைகளின் மேல் மரங்கள் நடக்கூடாதென்றும் அவைகளின்மேலுள்ள மரங்களை வெட்டக்கூடாதென்றும் தடுப்பது.

163-A. (1) எந்த நபரும் - யாதொரு லோகல் போர்டாரித்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அவர்களுக்குச் சொந்தமாயிருக்கும் யாதொரு பொதுவான பாட்டை அல்லது வேறே சொத்தின்மேல், அந்த லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டின் அனுமதியை முன்னதாகப் பெற்றன்றி மற்றப்படியும் அந்த ப்ரெஸிடெண்ட் ஏற்படுத்தக்கூடிய திட்டங்களின்படிக்கன்றி மற்றப்படியும், எந்த மரத்தையும் நடக்கூடாது.

(2) எந்த நபரும் - யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருந்து அல்லது அவர்களுக்குச் சொந்தமாயிருந்து அப்படிப்பட்ட யாதொரு பொதுவான பாட்டையின்மேலாவது சொத்தின்மேலாவது வளர்ந்து கொண்டிருக்கும் எந்த மரத்தையாகிலும், அந்த லோகல் போர்ட் ப்ரெஸிடெண்டின், அனுமதியை முன்னதாகப் பெற்றன்றி மற்றப்படியும் அந்த ப்ரெஸிடெண்ட் ஏற்படுத்தக்கூடிய திட்டங்களின்படிக்கன்றி மற்றப்படியும், வெட்டவுங்கூடாது, அப்புறப்படுத்தவுங்கூடாது, அழிக்கவுங்கூடாது, தறிக்கவுங்கூடாது, அதிலிருந்து பட்டை அல்லது இலைகள் உரிக்கவுங்கூடாது அல்லது அதை வேறே விதமாய்ச் சேதப்படுத்தவுங்கூடாது.

குறிப்பு.

செ. **163-A** (1). தண்டனை.—பொதுவான பாட்டையில் அனுமதியில்லாமல் செடிகள் வைத்தால் சாதாரணமாய் ரூபாய் 200 அபராதம் போடலாம். 8-வது ஷெட்யூல் பாக்கவும்.

சாக்ஷியம், நசு.—பிரசிடெண்டின் அநுமதியில்லாமல் பொதுவான பாட்டையில் செடி நட்டார்.

செ. **163-A** (2). தண்டனை.—அனுமதியில்லாமல் பொதுவான பாட்டையிலிருந்த மரத்தை வெட்டினுல் ரூபாய் 200 அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், நசு.—(1) மரம் பொதுவான பாட்டையின்மேலிருந்தது. (2) பிரசிடெண்டின் அனுமதியில்லாமல் வெட்டப்பட்டது. [இ. பு. ப. 471]

நிலத்தை அனுமதியில்லாமல் அனுபவித்தவரும் விஷயத்திலே தண்டத் தொகை விதிப்பதும் நஷ்ட ஈடு வசூலிப்பதும்.

164. (1) யாதொரு பொதுக்காரியத்துக்காக பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டதாய், யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்து அல்லது அவர்களுக்குச் சொந்தமாக இருக்கும் யாதொரு நிலத்தை எவராகிலும் அந்த லோகல் போர்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் அனுபவித்துக்கொண்டிருந்தால், அவர்-அந்தப்படி அனுபவித்து வருவது விஷயமாக, தண்டத்தொகையாய் லோகல் போர்டாரால் கேட்கப்படக்கூடிய தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவார்; இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் அந்தத் தொகையை வசூல் செய்யலாம்.

(2) ப்ரெஸிடெண்டானவர் -(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாருக்கு தண்டத்தொகை விதிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது விதிக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு நபருக்கு நோடீஸ் கொடுத்து, அந்த நிலத்தை காலி செய்யும்படியும் அதன்மேலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது வேறே கட்டுக் கோப்பையாவது அதன்மேல் போட்டு வைத்திருக்கும் எதையாவது அப்புறப் படுத்தும்படியும் உத்தரவு செய்யலாம்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தண்டத்தொகை செலுத்த உட்பட்டிருக்கிற எந்த நிலத்தையாகிலும் அனுபவித்துக்கொண்டிருக்கும் யாதொரு நபரால் லோகல் போர்டாரின் சொத்துக்கு சேதம் ஏதாவது உண்டாயிருக்கும் பட்சத்தில், அவருக்கு விதிக்கப்படக்கூடிய அல்லது அவரிடத்திலிருந்து வசூலிக்கப்படகூடிய யாதொரு தண்டத்தொகையுடன்கூடவும் அது விதிக்கப்பட்டிருந்தும் பாதகமில்லாமலும், மேலேகண்ட சேதத்துக்காக அவர் லோகல் போர்டாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு உள்ளாவார்; மேலும் விவாதம் ஏற்படும் விஷயத்தில் அப்படிப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையானது இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் நிர்ணயித்து வசூலிக்கப்படும்.

குறிப்பு.

செ. **164 (1)**.—லோகல் போர்டிற்கு சொந்தமான நிலத்தை பொதுக் காரியத்திற்காக பிரத்தியேகப்படுத்தி யிருந்தால்தான் இந்த செக்ஷனை உபயோகிக்கலாம். அப்படி பிரத்தியேகப் படுத்தப்பட்டது பொது பாட்டைக்காக இருந்தபோதிலும் லோகல் போர்டார் அப்படி உபயோகப்படுத்தியதற்கு தண்ட தீர்வை விதிக்கலாம்.

செ. **164 (2)**.—நோடீஸ் கொடுக்க பிரஸிடெண்ட், முன்னதாக போர்டின் அனுமதி பெற வேண்டியதில்லை.

தண்டனை.—லோகல் போர்டாரிடம் சங்கரமித்திருக்கும் நிலத்தில் கட்டியிருக்கும் கட்டடத்தை எடுக்க தவறினால் ரூபாய் 200-ம், தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 50-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களை பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) லோகல் போர்டாரின் நிலத்தில் கட்டடம் கட்டப்பட்டது. (2) அந்த நிலம் பொதுவான காரியத்திற்கு பிரத்தியேகப் படுத்தப்பட்டது. (3) அந்த கட்டடத்தை எடுத்து விடும்படி பிரசிடெண்ட் நோடீஸ் கொடுத்தார். (4) எதிரி அதன்படி நடக்கவில்லை.

[இ. பு. ப. 473]

விசேஷ போக்குவரத்தினால் விளையும் செலவுகளை வசூலிக்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்.

165. யாதொரு பொதுவான பாட்டை நெடுகமிதமிஞ்சிய பாரம் ஏற்றிக் கொண்டு போனதனாலாவது அதன்மேல் விசேஷ போக்குவரத்து ஏற்பட்டதனாலாவது உண்டான சேதம் காரணமாக அந்த பாட்டையை மரமத்து செய்கையில், அக்கம்பக்கத்திலுள்ள பாட்டைகளை மரமத்து செய்வதற்காகப் பிடிக்கும் சராசரி செலவை கவனிக்கும்போது லோகல் போர்டாருக்கு விசேஷ செலவு பிடித்திருப்பதாக, கவர்ன்மெண்ட் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவில் எக்ஸிக்யுடிவ் என்ஜினீரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தருடைய ஸெர்டிபிகேட்டினால்,

சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டுக்குத் தோற்றும்பொழுது, லோகல் போர்டார் - எவரால் அல்லது எவருடைய உத்தரவின் பலனுக மேலே கண்டபடி பாரம் ஏற்றிக்கொண்டு போகப்பட்டதோ அல்லது போக்குவரத்து ஏற்பட்டதோ அப்படிப்பட்ட யாதொரு நபரிடமிருந்து, மேலே கண்டபடிக் கான பாரம் அல்லது போக்குவரத்தினுல் ஏற்பட்ட சேதம் காரணமாக அந்த லோகல் போர்டு எவ்வளவு செலவழித்திருக்கிறதென்று விசாரணை அதிகாரமுள்ள ஸிவில்கோர்டாருக்குத் திருப்திகரமாய் எண்பிக்கக்கூடுமோ அவ்வளவு தொகை யை அந்தக் கோர்ட்டில் வசூல் செய்யலாம்.

ஆனல், எவரிடத்திலிருந்து இந்தப் பிரிவின்படி செலவு வசூலிக்கப் படத்தக்கதாகிறதோ அல்லது வசூலிக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு நபர் - ஷை பாரம் அல்லது போக்குவரத்து விஷயமாய் லோகல் போர்டாருக்கு ஒரு தொகையைச் செலுத்துவதாக அவர்களுடன் ராஜியேற்பாட்டு உடன் படிக்கை செய்துகொள்ளலாம்; அப்படி செய்துகொள்வதன்மேல், அந்தப்படி தொகைசெலுத்தும் நபர்-இந்தப் பிரிவின்படி எவ்வித நடவடிக்கைகளுக்கும் உட்பட்டவராகமாட்டார்.

வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கும் மோடார் வண்டிகளுக்கும் மோடார் லாரிகளுக்கும் லைஸென்ஸ் கொடுப்பது.

166. (1) டிஸட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டினிடமிருந்து லைஸென்ஸ் பெற்றன்றி மற்றப்படி, எந்த நபரும் - யாதொரு டிஸட்ரிக்டிலுள்ள யாதொரு பொதுவான பாட்டையில்—

(a) வாடகைக்கு எந்த மோடார் வண்டியையும், அல்லது

(b) எந்த மோடார் லாரியையும்.

உபயோகிக்கக்கூடாது.

(2) இந்த ஆக்டிலாவது 1920-ம்வருஷத்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டானவர் - யாதொரு மோடார் வண்டியைச் சிறிதுமட்டில் டிஸ்ட்ரிக்ட் எல்லைகளுக்குள்ளும் சிறிதுமட்டில் இது காரியத்துக்காகபிரதேச கவர்ன்மெண்டார்“போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில்” விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஷை டிஸ்ட்ரிக்டுடன் சேர்த்திருக்கும் யாதொரு மியுனிஸிபாலிடியின் எல்லைகளுக்குள்ளும் வாடகைக்கு ஓட்ட உபயோகிப்பதற்காக அந்த வண்டிக்கு லைஸென்ஸ் கொடுக்கலாம். அப்படிப் பட்ட லைஸென்ஸ் கொடுக்கப்படும் போது, டிஸ்ட்ரிக்ட் போர்டார்-ஷை லைஸென்ஸ் கொடுப்பதற்காக வாங்கப்படும் கட்டணத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் பொது வான உத்தரவு மூலமாகவோ விசேஷ உத்தரவு மூலமாகவோ நிச்சயிக்கக்கூடிய வீதாசாரத்தை சம்பந்தப்பட்ட மியுனிஸிபல் கௌன்ஸிலாருக்குக் கொடுக்க வேண்டும்.

(3) டிஸ்ட்ரிக்ட் போர்டார் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்று, அப்படிப்பட்ட வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போகும் பிராயணிகளுக்காக வாங்கப்படும் சத்தங்களின் வீதங்களேயும் சரக்குகளுக்காக வாங்கப்படும் கட்டண வீதங்களையும் நிச்சயித்தும், வேறே எந்த திட்டங்களின்மெல் (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி லைஸென்ஸுகள் கொடுக்கப்படலாமோ அந்த திட்டங்களேக் குறிப்பிட்டும் ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்.

(4) (1) அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு லைசென்ஸும் அது எந்த வருஷத்தில் கொடுக்கப்படுகிறதோ அந்த வருஷமுடிவில் காலம் கடந்துபோகும்.

(5) (a) (1) அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவினால் பாதகமடைந்த எந்த நபராவது அந்த உத்தரவுக்கு விரோதமாய் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(b) அப்படிப்பட்ட அப்பீலுக்கு அடியிற்கண்டபடி கால நிர்ணயம் உண்டு—

(i) லைசென்ஸ் கொடுக்க நிராகரிக்கும் உத்தரவின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்பட்டால்,

அந்த உத்தரவு விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களும்,

(ii) லைசென்ஸ் கொடுக்கும் உத்தரவின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்பட்டால்,

அந்த உத்தரவு டிஸ்ட்ரிக்ட் போர்டின் நோடிஸ் போர்டில் பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களும்.

(6) பிரதேச கவர்ன்மெண்டார் - (2) குறிப்பிட்ட உட்பிரிவு பிரயோகப்படும் லைசென்ஸுகள் விஷயமாய், பொதுவாகவாவது குறித்த யாதொரு விஷயத்திலாவது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய உத்தரவு செய்யலாம் அல்லது கட்டளைகள் கொடுக்கலாம்.

11-ம் அத்தியாயம்.

மார்க்கெட்டுகளும் ஆடு மாடு அடிக்கும் தொட்டிகள் முதலியவைகளும்.

பொது மார்க்கெட்டுகள்.

பொது மார்க்கெட்டுகள்.

167. லோகல்பண்டிலிருந்து அடையப்பட்ட, கட்டப்பட்ட, மராமத்து செய்யப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்ட சகல மார்க்கெட்டுகளும் பொது மார்க்கெட்டுகளாக எண்ணப்படும்.

பொது மார்க்கெட்டுகள் விஷயமாய் உள்ள அதிகாரங்கள்.

168. (1) பஞ்சாயத்து - பொது மார்க்கெட்டுகளாக உபயோகமாகும்பொருட்டு இடங்களை ஏற்படுத்தலாம்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு பஞ்சாயத்து - யாதொரு பொது மார்க்கெட்டில், தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய வீதங்களின்படி அடியிற்கண்ட கட்டணங்களில் யாதொன்றையாகிலும் பலவற்றையாகிலும் விதித்து வாங்கலாம், அல்லது தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ஷரத்துகளின்படியும் திட்டங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட கட்டணங்களை இஜாராவிடலாம் :—

(a) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை உபயோகிப்பதற்காக அல்லது அவைகளில் விற்பனையின் பொருட்டு வஸ்துக்களை காட்டிவைப்பதற்கான சுதந்தரத்துக்காக கட்டணங்கள்;

(b) அந்த மார்க்கெட்டுகளிலுள்ள கடைகளை அல்லது கொட்டில்களை அல்லது பட்டிகளை அல்லது நிலங்களை உபயோகிப்பதற்காக கட்டணங்கள்;

(c) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளில் விற்பனைக்காக சரக்குகளைக் கொண்டுவருகிற வண்டிகளுக்கு அல்லது பொது ஜனங்களுக்கு அல்லது ஷை சரக்குகளைத் தூக்கிக்கொண்டுவருகிற நபர்களுக்குக் கட்டணங்கள்;

(d) அந்த மார்க்கெட்டுகளுக்குள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிற அல்லது அந்த மார்க்கெட்டுகளில் விற்கப்படுகிற பிராணிகளுக்குக் கட்டணங்கள்;

(e) அந்த மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திக்கொண்டுவருகிற ப்ரோக்கர்களுக்கும், கமிஷன் ஏஜென்டுகளுக்கும், எடைபோடுகிறவர்களுக்கும், அளப்பவர்களுக்கும் லைஸென்ஸ் கட்டணங்கள்.

(3) பஞ்சாயத்து டிஸ்ட்ரிக்ட் போர்டாருடைய அனுமதியைப்பெற்றுக் கொண்டு யாதொரு பொது மார்க்கெட்டையாவது அதன் யாதொரு பாகத்தை யாவது மூடிவிடலாம்.

பொது மார்க்கெட்டுகளின் மேல் ப்ரெஸிடெண்டுக்குள்ள விசாரணை அதிகாரம்.

169. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டின் அனுமதியில்லாமலாவது, வாடகைகளும் கட்டணங்களும் இஜாராவுக்கு விடப்பட்டிருந்தால் இஜாராதாரரின் அனுமதியில்லாமலாவது, எந்த நபரும்-யாதொரு பொது மார்க்கெட்டுக்குள் யாதொரு பிராணியை யாவது வஸ்துவையாவது விற்பனை செய்யவுங்கூடாது, விற்பனைக்காக காட்டிவைத்திருக்கவுங்கூடாது.

(2) யாதொரு பொதுவான மார்க்கெட்டில் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் எந்த சகாயச் சட்டங்களையாகிலும் மீறியதனாலே யாதொரு நபராவது அவருடைய வேலைக்காரராவது குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருப்பராகில், அந்த நபரை ப்ரெஸிடெண்டானவர் அப்படிப்பட்ட மார்க்கெட்டிலிருந்து நீக்கிவிட்டு, அந்த நபரேயாவது அவருடைய வேலைக்காரர்கள் அல்லது ஏஜென்டுகளாவது அந்த மார்க்கெட்டில் யாதொரு வர்த்தகம் அல்லது தொழிலை இனி நடத்தக்கூடாதென்றாகிலும், அதில் யாதொரு கடை-கொட்டில் அல்லது வேறே இடத்தைத் தம் அனுபோகத்தில் இனி வைத்திருக்கக்கூடாதென்றாகிலும் தடுத்துவிடலாம்; மேலும் அப்படிப்பட்ட யாதொரு கடை-கொட்டில் அல்லது வேறே இடத்திற்காக அந்த நபருக்கு கிடைத்திருக்கும் யாதொரு குத்தகை அல்லது பாத்தியதையை அறுதி செய்துவிடலாம்.

சொந்த மார்க்கெட்டுகள்.

170. [மதராசு 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் ரத்து செய்யப்பட்டது.]

சொந்த மார்க்கெட்டுக்கு லைஸென்ஸ்.

171. (1) எந்த நபரும்-யாதொரு சொந்த மார்க்கெட்டைப் புதிதாய் ஏற்படுத்துவதற்காகிலும் திறந்து வைத்துக்கொண்டிருப்பதற்காகிலும் பஞ்சாயத்தினிடமிருந்து லைஸென்ஸ் பெற்றாலன்றி மற்றப்படி, ஷை மார்க்கெட்டை அந்தப்படி ஏற்படுத்தவுங் கூடாது திறந்து வைத்துக்கொண்டிருக்கவுங்கூடாது.

(2) அப்படிப்பட்ட லைஸென்ஸ் வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தை, எந்த இடத்தின் விஷயமாய் லைஸென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த இடத்தின் சொந்தக்காரரானவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அப்படிப்பட்ட இடத்தை மார்க்கெட்டாய் ஏற்படுத்துவதற்காவது, எந்த வருஷத்துக்கு லைஸென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த வருஷ ஆரம்பத்துக்காவது ஆறு வாரத்துக்குக் குறையாமல் முன்னதாகச் செய்துகொள்ளவேண்டும்.

(3) பஞ்சாயத்தானது-ஏற்கனவே சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சொந்த மார்க்கெட்டுகளின் விஷயத்திலே, அந்த மார்க்கெட்டில் மேல் விசாரணை செய்வது விஷயமாகவும் பார்வையிடுவது விஷயமாகவும் தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ரெகுலேஷன்களுக்கும், சுகாதாரம், ஜலதாரை ஏற்பாடு, ஜல சர்ப்பரா, பாதைகள்-வழிகள் ஆகிய இவைகளின் அகலம், உபயோகிக்கப்போகும் எடுத்தலளவைகள் முகத்தலளவைகள், வாங்கப்போகும் வாடகைகள், கட்டணங்கள் ஆகிய இவைகள் விஷயமாய்த் தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் உட்பட்டு, மேலே கண்டபடி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட லைஸென்ஸ் கொடுக்கவேண்டும்; மேலும், புதிதாய் எற்படுத்தப்படும் சொந்த மார்க்கெட்டுகளின் விஷயத்திலே, தனக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்தப் படியே லைஸென்ஸ் கொடுக்கலாம்; அல்லது பஞ்சாயத்தானது-புதிதாய் ஏற்படுத்தப்பட்ட எந்த சொந்த மார்க்கெட்டுக்காகிலும் அப்படிப்பட்ட லைஸென்ஸ் கொடுக்க மறுக்கலாம். ஆயினும், பஞ்சாயத்து இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு லைஸென்ஸில் கண்ட திட்டங்களை எவராகிலும் மீறி நடந்தால், அந்த லைஸென்ஸை எப்போதாகிலும் செலாவணியாக வொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். மேலும், பஞ்சாயத்து - லைஸென்ஸில் கண்ட திட்டங்களைத் திருத்தி, அவை குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து சொலவணியாகும்படிச் செய்யலாம்.

(4) இந்த பிரிவின்படி யாதொரு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாலும் மறுக்கப்பட்டாலும் செலாவணியாக வொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டாலும் ரத்துசெய்யப்பட்டாலும் திருத்தப்பட்டாலும், பஞ்சாயத்தானது-அந்தப்படி லைஸென்ஸ் கொடுத்ததைக் குறித்தாவது அதை மறுத்ததைக் குறித்தாவது செலாவணியாக வொட்டாமல் நிறுத்தி வைத்ததைக் குறித்தாவது ரத்துசெய்ததைக் குறித்தாவது திருத்தியதைக் குறித்தாவது ஒரு நோடிஸை பிரஸ்தாப பிரதேசத்தில் வழங்கும் பிரதான சுதேச பாஷையில் தயாரித்து, அதை எதற்காக லைஸென்ஸ் கேட்கப்பட்டதோ அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த இடத்தின் பிரவேச வாயிலிலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் எல்லாருக்கும் தெரியும்படியான யாதொரு இடத்திலே ஒட்டிவைக்கும்படி செய்யவேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு லைஸென்ஸும் வருஷக் கடைசியில் முடிவாய்ப்போகும்.

குறிப்பு.

செ. 171 (1). சொந்த மார்க்கெட்—சொந்தமார்கட் என்பது ஒருவருடைய சொந்த சொத்தாகையால் அதை லோகல் போர்டாரிடம் சங்கரமிக்கும்படி செய்யும் சட்டம் அதை பரிமுதல் செய்யக்கூடியதென்று ஏற்படாது. ஆனால் பொதுஜன தேகாரோக்கியத்திற்கு இடைஞ்சலில்லாமல் சொந்தக்காரர்களைக் கொண்டே மார்கெட்டுகளை நடத்த போர்ட் அருகதையுடையது. (எல்லம்மாள் எ அரசர், 106 I.C. 187=A.I.R. 1928 M. 164).

தண்டனை.—லைசென்ஸ் இல்லாமல் அல்லது லைசென்ஸின் நிபந்தனையை மீறி சொந்தமார்கெட் வைத்திருக்குப்பதற்கு ரூபாய் 500, தவறி வைத்திருக்கும் பிரதிதினத்திற்கு ரூபாய் 100-ம் அபாரதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) மார்கெட் சொந்தக்காருடையது அது 1921 ஆம் ஏப்ரல் மாதத்திற்கு முன் திறக்கப்பட்டது. (2) அதைதிறக்கவும் திறந்துவைக்கவும் வருஷ வாரி லைசென்ஸ் வாங்கப்பட வில்லை.
[இ. பு. ப. 484]

செ. 171 (2).—வருஷம் என்பது நிர்வாக வருஷத்தை குறிக்கும். 3 (24)-வது செக்ஷன்படி ஏப்ரல் மாதம் 1 தேதி முதல் மார்ச்சு மாதம் 31-உ வரையில் முடிவடைகிற ஒரு வருஷத்தைக்குறிக்கும். லைசென்ஸ்விற்கு மனுபோடவேண்டுமானால் மார்ச்சு மாதம் 31உக்கு முன் 6 வாரத்திற்கு முன் மனுபோடவேண்டும். ஞாபகமறதியினலோ அல்லது

வேறு காரணத்தினாலோ மேற்கூறிய காலத்திற்குள் மனுபோட தவறிவிட்டு பிறகு போர்ட்டால் அதை மன்னிக்க போர்டுக்கு அதிகார மிருக்கிறதா என்பது சந்தேகமானது. அந்த மனு 6 வாரத்திற்கு முன் ஆபீஸை சேர்ந்திருக்கவேண்டுமா அல்லது தேதி போடப்பட்டிருந்தால் போதுமானதா என்பதுவும் சந்தேகமாயிருக்கிறது. [இ. பு. ப. 484]

செ. **171 (3)**.—லைசென்ஸ் கொடுக்கப்பட்ட மார்க்கட்டுகளின் விஷயத்தில் லைசன்சில் கண்ட நிபந்தனைகளை, மாற்ற, சேர்க்க, அல்லது ரத்துசெய்ய அந்த வருஷத்திற்குள் பஞ்சாயத்து பிரசிடெண்டுக்கு பூரண அதிகாரமுண்டு. லோகல் போர்டை கலந்து அலோசிக்காமல் பிரசிடெண்ட் தனிமையாக செய்வதற்கில்லை. பிரசிடெண்ட் சொந்த பொறுப்பில் கூறிய திருத்தங்களை நிறைவேற்றாமல்போனால் குற்றமாகாது. [இ. பு. ப. 484]

லைசேன்ஸ் கட்டணம் எவ்வளவு வரையில் விதிக்கப்படலாம்.—சொந்த மார்கெட்டுகளை பார்வையிடுவதினாலும், அவைகளை சீர்படுத்துவதினாலும் உண்டாகும் செலவுகளை லோகல் போர்டார் தங்கள் கையிலிருந்து செலவு செய்யாமலிருக்கத்தக்க கட்டணம் விதிக்க வேண்டுமென்பது சட்ட சபையின் அபிப்பிராயம். (ரங்கூன் முனிசிபல் கார்போரேஷன் எ. ஸோராட்டிபாரா பஜார் கம்பனி, A.I.R. 1927 Ran. 163). மார்கட் சொந்தக்காரர்கள் லோகல் போர்டார் சுகாதார விஷயமாய் விதிக்கும் நிபந்தனைகள் படிக்கும் 171 (3)-வது செக்ஷன்படி விதிக்கும் நிபந்தனைகட்கு உள்பட்டும் லைசென்ஸ் பெற அருகதையுடையவர்கள். (எல்லம்மாள் எ. அரசர் 53 M.L.J. 810=A.I.R. 1928 Mad. 164). [இ. பு. ப. 488]

1884-ம் வருஷத்துக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட சொந்த மார்க்கெட்டுகளில் கட்டணங்கள் விதித்து வாங்க சுதந்தரம் கொண்டாடும் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.

172. (1) 1884-ம் வருஷத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டில் 168-வது பிரிவை சேர்ந்த (2) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தன்மையுள்ள கட்டணங்களை விதித்து வசூல்செய்ய சுதந்தரம் கொண்டாடுகிற யாதொரு நபர்-இது விஷயமாய்த் தமக்குள்ள சுதந்தரத்தை அங்கீகரிப்பதற்கான ஸெர்டிபிகேட் கொடுக்கும்படி டிஸ்ட்ரிக்ட் போர்டு அதன் ப்ரெஸிடெண்ட் மூலமாக முதலில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

(2) ஷை ப்ரெஸிடெண்டானவர் - அந்த விண்ணப்பத்தைக் குறித்து ஒரு நோட்டீஸைப் பஞ்சாயத்துக்குச் சேர்ப்பிக்க வேண்டும்; மேலும், ஷை விண்ணப்பதாரர் அப்படிப்பட்ட கட்டணங்களை விதித்து வசூல்செய்ய பாத்தியதையுள்ளவரா என்னும் விஷயத்தைத் தீர்மானிக்கும்போது, டிஸ்ட்ரிக்ட் போர்டார் - இது விஷயமாய்த் பஞ்சாயத்து தெரிவித்துக்கொள்ளும் சங்கதிகளைப்பற்றி ஆலோசித்து, அதன் பிறகு அந்த ஸெர்டிபிகேட் கொடுக்கவேண்டும், அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்க வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி ஸெர்டிபிகேட் பெற்றிருக்கும் நபர் அதைப் பஞ்சாயத்துக்கு ஹாஜர்ப்படுத்தவேண்டும்; அதன்மேல், பஞ்சாயத்து 171-வது பிரிவின்படி அவருக்கு லைஸென்ஸ் கொடுக்கும்போது, அந்த ஸெர்டிபிகேட்டில் கண்ட கட்டணங்களை விதித்து வசூல் செய்ய அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

கட்டணங்கள் விதித்து வசூல் செய்வதற்கான சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்வதற்காக வியாஜ்ஜியங் கொண்டுவர பாத்தியதை.

173. யாதொரு ஸெர்டிபிகேட் கொடுப்பதில்லையென்று நிராகரித்து டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் செய்யப்பட்ட உத்தரவினால், துன்பமடைந்திருக்கும் யாதொரு நபர்-தாம் கொண்டாடும் சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்காக, மேலேகண்ட உத்தரவின் தேதிமுதல் ஆறு மாதத்துக்குள் வியாஜ்ஜியம் தொடரலாம்; அதன்மேல், அந்த வியாஜ்ஜியத்தின் தீர்மானத்துக்கு உட்பட்டு ஷை உத்தரவு முடிவானதாகும்.

174. 171-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு லைஸென்ஸினால் எந்தக் கட்டணங்களும் விதித்து வாங்குவதற்கு அனுமதி ஏற்படாதிருக்கும்போது, அந்த லைஸென்ஸுக்காக கட்டணம் எதுவும் வாங்காமலே அதைக் கொடுக்க வேண்டும்; ஆனால், அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கப்படுகிற விஷயத்திலே, முந்திய வருஷத்தில் ஷை மார்க்கெட்டிலிருந்து சொந்தக்காரருக்குக் கிடைத்திருக்கும் மொத்த வரும்படியில் நூற்றுக்கு பதினைந்து வீதத்துக்கு மேற்படாத ஒரு கட்டணத்தை அப்படிப்பட்ட லைஸென்ஸுக்காக பஞ்சாயத்து வாங்க வேண்டும்.

லைஸென்ஸுக்குக் கட்டணம்.

லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கட்டுகளில் விற்பனை செய்யக்கூடாதென்று தடுப்பது.

175. லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத யாதொரு சொந்த மார்க்கெட்டில் யாதொரு பிராணியையோ அல்லது வஸ்துவையோ எவரேனும் விற்பதாகிலும் விற்பனைக்காக காட்டிவைப்பதாகிலும் சட்டசம்மதமாகாது.

குறிப்பு.

செ. 175. தண்டனை.—லைசென்ஸ் பெறாத சொந்த மார்கட்டில் மாமிசம் அல்லது இதர வஸ்துக்கள் விற்கப்பட்டால் ரூபாய் 20-ம், தவறிய நாள் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப், பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) எதிரி லைசென்ஸ் இல்லாத மார்கெட்டில் வஸ்துக்களை விற்றார். (2) விற்ற இடம் மார்கெட்டைப்போலிருந்தது. [இ. பு. ப. 487]

சொந்த மார்க்கெட்டுகளைப்பற்றி பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்கள்.

176. பஞ்சாயத்து யாதொரு சொந்த மார்க்கெட்டின் சொந்தக்காரர், அனுபோகதாரர் அல்லது குத்தகைதாரருக்கு நோடீஸ் கொடுத்து—

(a) அந்த மார்க்கெட்டுக்கு வழிகளையும் நுழைவாயில்களையும் பாதைகளையும் கேட்டுகளையும் சாக்கடைக்கால்களையும் சாக்கடைக்குழிகளையும் ஏற்படுத்தி, அதில் பஞ்சாயத்து தகுதி யென்று எண்ணக்கூடிய அத்தனை மலஜல பாதை மறைவிடங்களை அவர்கள் தகுதியென்று எண்ணக்கூடிய விதமாயும் இடத்திலும் அமைத்துவைக்கும்படிக்கும்,

(b) அதற்கு முழுமையுமாவது அதன் யாதொரு பாகத்துக்காவது மேற்கூரைப்போட்டுத் தளவரிசையிட்டுவைக்கும்படிக்கும், அல்லது தண்ணீர் உள்ளே செல்லக்கூடாததாகவும் சடுதியில் சுத்தப்படுத்தக்கூடியதாகவும் பஞ்சாயத்துக்குத் தோற்றும் சாமானைக்கொண்டு தரையின் யாதொரு பாகத்துக்கு தளவரிசை யிட்டுவைக்கும்படிக்கும்,

(c) அதற்கு நன்ருய்க் காற்றுவருவாய் ஏற்படுத்துவதோடு ஜலசர்ப்பாரா சவதரித்து வைக்கும்படிக்கும்,

(d) கொட்டில்களுக்கு மத்தியில் போதுமான அகலமுள்ள வழிகள் அமைத்து, மேற்படி மார்க்கெட்டிலுள்ள கொட்டில்களிலாவது வழிகளிலாவது கடைகளிலாவது கதவுகளிலாவது மற்ற பாகங்களிலாவது பஞ்சாயத்து உத்தரவு செய்யக்கூடிய மாறுதல்களைச் செய்யும்படிக்கும்,

(e) அதை சுத்தமான ஸ்திதியிலும் சரியான ஸ்திதியிலும் வைத்திருந்து அதிலிருந்து சகல அசுத்தங்களையும் கழிகடை வஸ்துக்களையும் அப்புறப்படுத்துவதோடுகூட, அவைகளைப் பஞ்சாயத்து கட்டளையிடக்கூடிய இடத்திலும் விதமாகவும் ஒரு வகை செய்யும்படிக்கும்,

(f) சுகாதார சம்மந்தமாய் பஞ்சாயத்து அவசியமென்று தோற்றக் கூடிய வேறே ஏற்பாடுகள் செய்யும் படிக்கும் உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.

செ. **176**. தண்டனை.—மார்கெட்டுக்கு நுழைவாசல், வழி பாதைகளை கட்டும்படி உத்திரவிட்டு கட்டாமல்போனால் சாதாரணமாய் ரூபாய் 100-ம், தவறிய நாள் ஒன்றுக்கு ரூபாய் 10-ம் அபாரதம் விதிக்கலாம். 8, 9.வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—(1). இந்த செக்ஷன்படி மார்கெட் சொந்தக்காரருக்கு சிற்சில ரிபேர்கள் செய்யும்படி நோடீஸ் கொடுக்கப்பட்டது. (2) எதிரி அவைகளை நிறைவேற்ற வில்லை. [இ பு. ப. 488]

176-வது பிரிவின் படி கொடுக்கப்பட்ட நோடிஸின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவரினல்லை ஸென்ஸைச்சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பது அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிப்பது.

177. (1) யாதொரு நபர் தமக்கு இதுவிஷயத்தில் பஞ்சாயத்து நோடிஸ் கொடுத்த பிறகு ஷை நோடிஸிற்கண்ட காலத்துக்குள் அதில் குறிக்கப்பட்ட விதமாக 176-வது பிரிவிற் கண்ட வேலைகளில் எதையாவது செய்து முடிக்கதவறினல், பஞ்சாயத்து - ஷை நபருடைய லைஸென்ஸைச் சிறிது காலத்திற்கு நிறுத்திவைக்கலாம், அல்லது பிரஸ்தாப வேலைகளைச் செய்துமுடித்தாகிற வரையில் அவருக்கு லைஸென்ஸ் கொடுப்பதில்லை யென்று நிராகரிக்கலாம்.

(2) அந்தப்படி லைஸென்ஸை நிறுத்திவைத்திருக்கிற காலத்திலாவது அது புதுப்பிக்கப்படுகிறவரையிலாவது யாதொரு நபர் யாதொரு சொந்த மார்கெட்டைத் திறந்து வைத்திருப்பது சட்ட சம்மதமாகாது.

சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்கக் கூடாதென்று தடுப்பது.

178. யாதொரு சொந்த மார்க்கெட் அல்லது அதிலுள்ள யாதொரு கடை, கொட்டில், கொட்டகை அல்லது வேறே இடத்தின் எந்த சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரராவது அதன் விசாரணை வகிக்கும் எந்த ஏஜென்ட் அல்லது மானேஜராவது அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகும்படி அதை வைத்துக்கொண்டிருக்கவாகிலும், அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குகிற யாதொன்றை பஞ்சாயத்து அறிக்கை செய்கிற இடத்துக்கு உடனே அப்புறப்படுத்தும்படி செய்யத்தவறவாகிலும் கூடாது.

குறிப்பு.

செ. **178**. தண்டனை.—சொந்த மார்கெட்டில் அசங்கியம் செய்தால் ரூபாய் 20-ம் அம்மாதிரி செய்யப்படும் பிரதி தினத்திற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம் 8, 9.வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நசு.—சொந்தமார்கெட்டில் சிலவஸ்துக்களை வைத்துக்கொண்டிருந்ததாலோ அல்லது அசுத்தமான வஸ்துவை அப்புறப்படுத்த மறுத்ததாலோ அசங்கியம் ஏற்பட்டது. [இ. பு. ப. 490]

சொந்த மார்க்கெட்டுகளை மூடிவிட அதிகாரம்.

179. பஞ்சாயத்தாகிலும் இது சம்மந்தமாக அதால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராகிலும்—

(a) எது விஷயமாய் லைஸென்ஸுக்காக விண்ணப்பும் செய்துகொள்ளப்படவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது,

(b) எதற்காக லைஸென்ஸ் நிராகரிக்கப்பட்டிருக்கிறதோ கொடுப்பதில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அல்லது சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்கெட்டையாவது,

(c) எது இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அல்லது திறந்துவைக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது மூடிவிடலாம்.

குறிப்பு.

செ. 179—இந்த செக்ஷன்படி ஒரு சொந்த மார்கெட்டை அடைத்து விடும்படி பஞ்சாயத்து கட்டாயப்படுத்தலாம். அம்மாதரி செய்வது சட்ட சம்மதமானது. அதை பலாத்காரமாய் மூட போலீஸாரின் அனுமதியை கோருவதும் போலீஸார் உதவி செய்வதும் நியாய பூர்வமானது. தண்டனைக்குள்ளாக்க மார்கெட்டிலிருந்த இடமானது மூடப்படவேண்டும். பொதுஜன திரேகாரோக்கியத்திற்கு கெடுதலாயிருப்பதாக தோன்றினால் அந்த மார்கெட்டை மூடிவிடுவது லோகல் போர்டின் சட்ட பூர்வமான காரியம். (எல்லம்மாள் எ. அரசர், A.I.R. 1928 Mad. 164=106 I.C. 718).

[இ. பு. ப. 490]

சொந்த மார்க்கெட்டுகள் வைத்துக்கொள்ள ஸர்க்காரைச் சேராத தனி நபர்களுக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக் கொள்வது.

180. (1) யாதொரு பஞ்சாயத்து-எந்த இடத்திலாகிலும் சொந்த மார்க்கெட் வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் யாதொரு நபருக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக்கொள்ளலாம். 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டின்படி மேல்கண்ட பாத்தியதைகள் எடுத்துக்துக்கொள்ளப்படுவதுமல்லாமல், அந்த பாத்தியதைகள் ஷை ஆக்டின் காரியங்களுக்காக நிலமாருப்பதாகவும் எண்ணப்படும்.

(2) அந்த சொத்தின் விஷயமாய் ஷை ஆக்டின்படி தீர்மானிக்கப்படும் பிரதிபலன் தொகையையும் அதை எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் பிடித்த வேறே யாதொரு செலவுத்தொகையையும் பஞ்சாயத்து செலுத்துவதன்மேல், சொந்தமார்கெட் வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் ஷை நபருக்குள்ள பாத்தியதைகள் பஞ்சாயத்தாரிடத்தில் சங்கிரமிக்கும்.

171-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்திரவுகளின்மேல் அப்பீல்.

181. 171-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பஞ்சாயத்து செய்த உத்தரவினால் துன்பமடைந்த யாதொரு நபர் அந்த உத்தரவின்மேல் டிஸ்ட்ரிக்ட்போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அந்த அப்பீல் பைசலாகிறவரையிலே, டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டானவர்-தமக்கு யுக்தமாகத் தோற்றினால், எந்த உத்தரவின்மேல் அப்பீல் செய்யப்பட்டுகிறதோ அந்த உத்தரவு நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கலாம்.

குஷ்டரோகிகள் முதலியவர்களை மார்க்கெட்டுகளிலிருந்து தூரத்திவிட கடமைப்பட்டிருப்பதும், சச்சரவு உண்டாக்குகிறவர்களை துறத்திவிட அதிகாரமும்.

182. யாதொரு மார்க்கெட்டின் விசாரணை வகிக்கும் நபர் குஷ்டரோகமாவது யாதொரு தொத்து அல்லது ஒட்டுவியாதியாவது கண்டிக்கிற எந்த நபரையும் அந்த மார்க்கெட்டுக்குள் வராதபடி தடுக்கவேண்டும், அல்லது அங்கிருந்து தூரத்தவேண்டும்; மேலும், அவர் மார்க்கெட்டில் சச்சரவு உண்டாக்கிக்கொண்டிருக்கிற யாதொரு நபரை அதிலிருந்து தூரத்திவிடலாம்.

பொதுவான பாட்டைகளில் வஸ்துக்களை விற்கக்கூடாதென்று தடுப்பது.

183. யாதொரு பஞ்சாயத்தினுடைய அனுமதியின்பேரில் அந்த பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டானவர் - யாதொரு பொதுவான பாட்டையிலாவது அந்த பாட்டையில் யாதொரு இடத்திலாவது பாகத்திலாவது அதன் மேலாவது எந்த பிராணிகளையேனும் வஸ்துக்களையேனும் விற்பனை செய்யக்கூடாதென்றாகிலும் விற்பனைக்காக காட்டிவைத்திருக்கக்கூடாதென்றாகிலும் பஹிரங்கமான நோடீஸ் மூலமாய்த் தடுக்கலாம்; அல்லது, அந்தப்படி விற்பனை செய்வதற்கோ விற்பனைக்காக காட்டிவைத்திருப்பதற்கோ லைஸென்ஸ் கொடுக்கலாம், அல்லது அதை குறித்து ஒழுங்கேற்படுத்தலாம்.

குறிப்பு.

செ. 183. தண்டனை.—லைசென்ஸ் யில்லாமல் அல்லது தடுக்கப்பட்டபின் பொது பாட்டையில் வஸ்துக்களை விற்றால் ரூபாய் 10 அபராதம் விதிக்கலாம். 8-வது ஷெட்யூலை பார்க்கவும். [இ. பு. ப. 491]

சாக்ஷியம், நக.—(1) பஞ்சாயத்து அல்லது தாலூகா போர்டாரால் வஸ்துக்கள் விற்கப்பட்ட இடம் தடுக்கப்பட்ட இடம். (2) இதை மீறி எதிரி வஸ்துக்களை விற்றார். [இ. பு. ப. 491]

தாலூகா மார்க்கெட்டுகள் விஷயமாயுள்ள அதிகாரங்களைச் செலுத்துவது.

183-A. 168 முதல் 183 வரையிலுள்ள பிரிவுகளின்படி யாதொரு பஞ்சாயத்தும் அதன் ப்ரஸிடெண்டும் செலுத்தக்கூடிய அதிகாரங்களை, 5-வது ஷெட்யூலைச் சேர்ந்த 3-வது விதியின்படி தாலூகா மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்ட மார்க்கெட்டுகளின் விஷயத்தில், முறையே தாலூகா போர்டும் அதன் ப்ரெஸிடெண்டும் செலுத்தவேண்டும்.

இடங்கள் மார்க்கெட்டுகளாகுமா என்னும் விஷயமாய் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பது.

183-B. ஆகார வஸ்துக்கள் அல்லது துணிகளையோ ஆடுமாடு முதலிய பிராணிகளையோ, கோழி முதலிய பறவைகளையோ, பருத்தி, வேர்க்கடலை அல்லது தொழில் சம்பந்தமான இதர மாசூல்களையோ வேலை செய்யப்படாத அல்லது வேலை செய்யப்பட்ட வேறே எவையேனும் உற்பத்திப் பொருள்களையோ விற்பதற்காவது வாங்குவதற்காவது ஜனங்கள் கூடும் யாதொரு இடம் மார்க்கெட்டா அல்லவா என்பது விஷயமாய்க் கேள்வி ஏதாகிலும் பிறந்தால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தாகிலும் தாலூகா போர்டாராகிலும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கேட்கவேண்டும்; பிரதேச கவர்ன்மெண்டார் அந்தக் கேள்வி விஷயமாய்ச் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

பார வண்டி நிற்கும் இடங்கள்.

பொதுவான பார வண்டி நிற்கும் இடங்களை ஏற்படுத்துவது.

184. (1) பஞ்சாயத்தானது பொதுவான இறங்கும் இடங்களையும், தங்குமிடங்களையும், பார வண்டி நிற்கும் இடங்களையும் கட்டி அல்லது ஏற்படுத்தி பராமரிக்கலாம்; மேலும் அது அவைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்களை விதித்து வாங்கலாம்.

(2) அப்படிப்பட்ட இடத்தை உபயோகிப்பதற்காக பஞ்சாயத்தால் நிர்ணயிக்கப்படும் எவையேனும் கட்டணங்களைக் குறித்த ஒரு ஸ்டேட்மென்டை அந்தந்த பிரதேசத்தில் வழங்கும் பிரதான சுதேச பாஷையில் ஷை இடத்திலே ஷை கட்டணங்கள் விதித்து வசூலிக்கக் கூடியதாயிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் எல்லாருக்கும் தெரியும்படியான பாகத்தில் காட்டிவைக்கவேண்டும்.

விவரணம்:—இந்த ஆக்டின் காரியங்களுக்காக பார வண்டி நிற்கும் இடமென்பதில் வண்டிகளும், பிரயாணிகளும் நிற்பதற்கான இடமென்பதும் அடங்கும்.

குறிப்பு.

செ. **184 (1)**. பாரவண்டி நிற்கும் இடம்.—ஒரு தாகரி தன் வீட்டண்டை பிரதி தினம் விளைபொருள்களை ஏற்றிக்கொண்டுவரும் பாரவண்டிகளை நிறுத்தி அவைகளை பொது ஜனங்களுக்கு விலையாக்கிய பிறகு வண்டிகள் போய்கொண்டிருந்தன. அம்மாதிரி தாகரி செய்வது தவறென்றும் அது பாரவண்டி நிற்கும் இடமல்லவென்றும்; அம்மாதிரி லைசென்ஸ் இல்லாமல் இடத்தை உபயோகப்படுத்துவது குற்றமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது (மஹாராணியார் எ. ஐயாக்கண்ணு முதலி, 22 Mad. 455). பிரதி தினம் எத்தனை வண்டிகள் வந்து நிற்கின்றன, அந்த வண்டிகள் ஒருவருடையதா அல்லது அனேகருடையதா; கட்டணம் ஏதாவது விதிக்கப்படுகிறதா? எவ்வளவு காலம் வண்டிகள் அங்கிருக்கின்றன; வண்டிகளிலிருக்கும் சாமான்கள் நிற்குமிடக்காரருக்கு விற்கப்படுகிறதா? அல்லது பொதுவாக விற்கப்படுகிறதா, அல்லது வாடகை வண்டிகள் அவ்விடம் கிடைக்கின்றனவா என்பவைகளை எல்லாம் செவ்வனே ஆராய்ந்து பார்க்கவேண்டும் (மஹாராணியார் எ. ஐயாக்கண்ணு முதலியார், 21 M. 293). [இ. பு. ப. 492]

பொதுவான இடத்தையாவது பொதுவான பாட்டையின் பக்கங்களையாவது பார வண்டி நிற்கும் இடம் முதலியவைகளாக உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பது.

185. யாதொரு பொதுவான இறங்கும் இடத்தையாவது தங்கும் இடத்தையாவது பார வண்டி நிற்கும் இடத்தையாவது பஞ்சாயத்து ஏற்படுத்தியிருந்தால், ப்ரெஸிடெண்டானவர் அதிலிருந்து நிர்ணயிக்கப்படக்கூடிய தூரத்துக்குள்ளாகவுள்ள யாதொரு பொதுவான இடத்தையாகிலும் யாதொரு பொதுவான பாட்டையின் பக்கங்களையாகிலும் எவரும் அதே காரியத்துக்காக உபயோகிக்கக்கூடாதென்று பஞ்சாயத்தினுடைய அங்கீகாரத்தின்பேரில் தடுக்கலாம்.

பார வண்டி நிற்கும் இடம் முதலியவைகளுக்காக கட்டணம் வசூலிப்பது.

186. (1) 184-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வண்டி அல்லது பிராணியின்மேல் விதித்து வாங்கத்தக்க கட்டணம் கேட்கும்போது செலுத்தப் படாவிட்டால் வசூலிக்க அனுமதிக்கப்பட்டவர், வண்டி அல்லது பிராணி அல்லது சுமையின் ஒரு பாகத்தை கைப்பற்றி தன் வசம் வைத்திருக்கலாம்.

(2) யாதொரு கட்டணமானது அப்படி கைப்பற்றி மறியல் செய்வதனால் நேரிடும் செலவுடன் கூட பன்னிரண்டு மணிநேரம் வரையில் செலுத்தப்படாதிருந்தால், மேற்சொல்லியபடி கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற நபர்-ஜப்தி செய்யப்பட்ட சொத்தை குத்தகைத் தொகை சம்பந்தமாகவும் தீர்வை சம்பந்தமாகவும் நடத்தப்படும் ஏல விற்பனைகளைக் குறித்த 1839-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படி விற்க அதிகாரமுடையவராய், அதிசமீபத்திலுள்ள ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடத்திற்கு மேற்சொல்லிய விதமாய்க் கைப்பற்றப்பட்ட சவாரி வண்டி - பாரவண்டி அல்லது வேறே சொத்தை உடனே அனுப்ப வேண்டும்.

(3) ஆதிவாரம் தவிர நோடிஸைச் சேர்ப்பித்த தேதியிலிருந்தாவது நோடிஸைப் பிரசுரித்தப் பிறகாவது இரண்டு நாள் கழிந்த பின்பு நோடீஸில் கண்டிருக்கிற இன்ன இடத்திலே தாம் அந்தப் பொருளை ஏலத்தில் விற்றுவிடுவதாக அந்த உத்தியோகஸ்தர் கைப்பற்றப்பட்ட சொத்தின் சொந்தக்காரருக்காவது, அந்த சொந்தக்காரர் தெரியாவிட்டாலும் சமீபத்தில் குடியிராவிட்டாலும் அந்த சொத்து கைப்பற்றப்பட்டபோது யார் வசத்திலிருந்ததோ அந்த நபருக்காவது, உடனே நோடீஸ் கொடுக்கவேண்டும்; அந்த நபர் அகப்படாவிட்டால் தண்டோரா மூலமாய் விளம்பரம் பண்ணவேண்டும்.

(4) ஏல விற்பனைக்கு முன்னே எப்போதாகிலும், யாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபராவது கைப்பற்றப்பட்ட சொத்தின் சொந்தக்காரராவது கட்டணத்தின்பொருட்டும், அதைச் செலுத்தத் தவறியதனாலும் அந்த சொத்தைக் கைப்பற்றி மறியல் செய்ததனாலும் நேரிட்ட சகல செலவுகளின் பொருட்டும் சேரவேண்டிய தொகையை மேற்சொல்லிய உத்தியோகஸ்தரிடத்தில் செலுத்துவதாகக் காட்டினால், கைப்பற்றப்பட்ட சொத்தை உடனே விடுதலை செய்யவேண்டும்.

(5) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரிடத்தில் பணம் செலுத்துவதாகக் காட்டாவிட்டால், அவர் - ஷை சொத்தையாவது அதில் போதுமான பாகத்தையாவது ஏலத்தில் விற்று விற்றுவந்த பணத்தை, கட்டணத்துக்காக பாக்கியாயிருக்கிற தொகையையும் கைப்பற்றி மறியல் செய்து வைப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் பிடித்த செலவுகளையும் செலுத்துவதற்காக உபயோகித்துக் கொண்டு, மேலே சொல்லியபடி விற்பனை செய்து அதிலிருந்து கிடைத்த தொகையை உபயோகித்துக்கொண்ட பிறகு மிகுதியாயிருக்கக்கூடிய யாதொரு சொத்தையாகிலும் தொகையையாகிலும் கைப்பற்றப்பட்டபொழுது சொத்து யார் வசத்திலிருந்ததோ அந்த நபருக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

பாரவண்டி நிற்கும் சொந்த இடத்துக்கு லைசென்ஸ்.

187. (1) எந்த நபரும் - பாரவண்டி நிற்கும் இடத்தைச் சொந்தத்தில் புதிதாய் ஏற்படுத்தவாவது பாரவண்டி நிற்கும் யாதொரு சொந்த இடத்தைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கவாவது பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, அப்பிரகாரம் ஏற்படுத்தவுங்கூடாது திறந்து வைத்துக்கொண்டிருக்கவுங்கூடாது.

(2) அப்படிப்பட்ட லைசென்ஸ் வேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பத்தை, எந்த இடத்தின் விஷயமாய் லைசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த இடத்தின் சொந்தக்காரரானவர்-சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்த இடத்தை பாரவண்டி நிற்கும் இடமாக ஏற்படுத்துவதற்காவது எந்த வருஷத்துக்கு லைசென்ஸ் கேட்டப்படுகிறதோ அந்த வருஷ ஆரம்பத்துக்காவது ஆறு வாரத்துக்குக் குறையாமல் முன்னதாகச் செய்துகொள்ளவேண்டும்.

(3) பஞ்சாயத்தானது-ஏற்கனவே சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாரவண்டி நிற்கும் சொந்த இடங்களின் விஷயத்திலே, மேல்விசாரணை செய்வது விஷயமாகவும் பார்வையிடுவது விஷயமாகவும் தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ரெகுலேஷன்களுக்கும், குப்பை முதலியவை இல்லாமல் சுத்தமாய் வைத்திருப்பது விஷயமாகத் தனக்குத் தகுதியாய்த் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் உட்பட்டு மேலேகண்டபடி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட லைசென்ஸ் கொடுக்கவேண்டும்; மேலும் புதிதாய் ஏற்படுத்தப்படும் பாரவண்டி நிற்கும் சொந்த இடங்களின் விஷயத்திலே, தனக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்தப்படியே லைசென்ஸ் கொடுக்கலாம்; அல்லது பஞ்சாயத்து-புதிதாய் ஏற்படுத்தப்பட்ட பாரவண்டி நிற்கும் எந்த சொந்த இடத்துக்காகிலும் அப்படிப்பட்ட லைசென்ஸ் கொடுக்க மறுக்கலாம். ஆயினும், பஞ்சாயத்தானது-இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு லைசென்ஸில் கண்ட திட்டங்களை எவராகிலும் மீறி நடந்தால் அந்த லைசென்ஸை எப்போதாகிலும் செலாவணியாக வொட்டாமல் சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். மேலும், பஞ்சாயத்து - லைசென்ஸில் கண்ட திட்டங்களைத் திருத்தி, அவை குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து செலாவணியாகும்படிச் செய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி யாதொரு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாலும் மறுக்கப்பட்டாலும் செலாவணியாகவொட்டாமல் சிறிதுகாலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டாலும் ரத்து செய்யப்பட்டாலும் திருத்தப்பட்டாலும், பஞ்சாயத்தானது - அந்தப்படி லைஸென்ஸ் கொடுத்ததைக் குறித்தாவது அதை மறுத்ததைக் குறித்தாவது நிறுத்திவைத்ததைக் குறித்தாவது ரத்து செய்ததைக் குறித்தாவது திருத்தியதைக் குறித்தாவது ஒரு நோடிஸை பிரஸ்தாப பிரதேசத்தில் வழங்கும் பிரதான சுதேச பாஷையில் தயாரித்து, அதை எதற்காக லைஸென்ஸ் கேட்கப்பட்டதோ அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த இடத்தின் பிரவேச வாயிலிலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் எல்லாருக்கும் தெரியும்படியான ஒரு இடத்திலே ஒட்டிவைக்கும்படிச் செய்யவேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸுக்காகவும் பஞ்சாயத்தானது வருஷம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் கட்டணம் விதித்து வாங்கலாம்.

(6) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸும் வருஷக் கடைசியில் முடிவாய்ப்போகும்.

குறிப்பு.

செ. 187—லைஸென்ஸ் பெறாத பாரவண்டிகள் நிற்குமிடம் தூர்நாற்றம் அல்லது தேகாரோக்கியத்திற்கு கெடுதல் உண்டாக்கக்கூடிய தென்றாவது அல்லது அங்கு கட்டணம் வசூல் செய்யப்படுகிற தென்றாவது ருசு செய்யவேண்டியதில்லை. [இ. பு. ப. 493]

ஒரு இடத்தின் சொந்தக்காரர் வண்டி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று பெற்று வண்டியை அங்கு அவிழ்த்து மாட்டை கட்டி வைத்திருக்க அநுமதி கொடுத்தால் அது இந்த செக்ஷனை மீறியதாகும் (கஜெட் 19.2.1925. G. O. No. 602, L & M.) [இ. பு. ப. 494]

188. [மதராசு 1930-ஆம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் ரத்து செய்யப்பட்டது.]

ஆடு மாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள்.

ஆடு மாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை ஏற்படுத்துவது.

189. (1) ஒவ்வொரு பஞ்சாயத்தும்—ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளாக உபயோகமாகும்படி போதுமான வரையில் இடங்களை ஏற்படுத்தி வைக்கவேண்டும்.

(2) பஞ்சாயத்தானது-ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளை உபயோகிப்பதற்காக வாடகைகளையும் கட்டணங்களையும் விதித்து வாங்கலாம்.

ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளல்லாத வேறே இடங்களில் கால் நடைகளைக் கொல்வது முதலியது கூடாதென்று லோகல் போர்டார் தடுக்கலாமென்பது

190. தாலூகா போர்டாரின் அனுமதியின்பேரில் பஞ்சாயத்தானது—

(a) யாதொரு கிராமத்தில் அல்லது அதிலுள்ள குறிப்பிடப்பட்ட யாதொரு விஸ்தீரணத்தில் பஞ்சாயத்தால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டியல்லாத வேறே எந்த இடத்திலாவது யாதொரு நபர் ப்ரெஸிடெண்டின் அநுமதியை எழுத்து மூலமாகப் பெற்றுக்கொள்ளாமலோ அப்படி பெற்றுக்கொண்ட அநுமதியின்படிக்கன்றி மற்றப்படியோ யாதொரு மாட்டையாகிலும் குதிரையாகிலும் செம்மறியாட்டையாகிலும், வெள்ளாட்டையாகிலும், பன்றியையாகிலும் கொல்லக்கூடாதென்றாயினும் கொல்லுவதற்கு அநுமதி கொடுக்கக்கூடாதென்றாயினும் துண்டுபோடக்கூடாதென்றாயினும் தோலை உரிக்கக்கூடாதென்றாயினும் துண்டுபோடுவதற்கோ தோலை உரிப்பதற்கோ அநுமதி கொடுக்கக்கூடாதென்றாயினும் பிரசித்தஞ் செய்யலாம்:

ஆனால், மதசம்பந்தமான சடங்குகளை வழக்கமாய்ச் செய்கிற இடங்களில் அப்படிப்பட்ட சடங்குகளைச் செய்யும்போதாவது, விற்பனைக்கல்லாமல் சொந்த உபயோகத்திற்காகவாவது பிராணிகளைக் கொல்வதற்கு இந்தப் பிரிவிலுள்ளதேதனாலும் தடை உண்டாவதாக எண்ணக்கூடாது,

மேலும் அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் அது பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாள் வரையில் செலாவணியாகமாட்டாது.

(b) ப்ஸிரெடெண்டினிடமிருந்து லைஸென்ஸ் பெற்றுக்கொள்ளாமலாவது அப்படி பெற்றுக்கொண்ட லைஸென்ஸின்படிக்கன்றி மற்றப்படியாவது, மற்றப்படி பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யுங் காரியங்களுக்காக யாதொரு மாட்டையாலும் குதிரையாகிலும் செம்மறியாட்டையாகிலும் வெள்ளாட்டையாகிலும் பன்றியையாகிலும் யாதொரு நபர் கொல்லக்கூடாதென்றாயினும் கொல்வதற்கு அநுமதி கொடுக்கக்கூடாதென்றாயினும் பிரசித்தஞ் செய்யலாம்.

குறிப்பு.

செ. **190 (a)**.—ஒருவருடைய சொந்த உபயோகத்திற்காக தன்னுடைய இடத்தில் ஆடு அடிப்பது ஆட்டு தொட்டி ஏற்படுத்துவது ஆகாது. (மஹாராணி எ. லக்ஷ்மணன், Cr. Rg. 57 of 1888). பொது ஜனங்களின் விற்பனைக்காக ஆடு மாடு லைசென்ஸ் பெற்ற இடத்தில் அடிக்கவேண்டும். இல்லையேல் குற்றமாகும். ஆடு தொட்டி கட்டடத்திற்கு வெளியில் ஆடு அடிப்பது குற்றமாகுமென்று முனிசிபாலிடியார் சட்டம் செய்யக்கூடாது.

[இ. பு. ப. 495]

உற்சவகாலங்களிலும் பண்டிகை காலங்களிலும்பிராணிகளைக் கொல்வது.

191. பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர் உற்சவகாலங்களிலும் பண்டிகை காலங்களிலுமாவது விசேஷ ஏற்பாடாகவாவது, ஷை கிராமத்துக்குள் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற இடங்களில் யாதொரு பிராணியைக் கொல்லவொட்டலாம்.

குறிப்பு.

செ. **191**—உற்சவ காலங்களில் பிராணிகளை கொல்லுவதற்கென, பொது ஜனதேகாரோக்கியத்தை உத்தேசித்து, தமக்கு தகுதியான இடத்தில் பிராணிகளை கொல்ல தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து அநுமதிக்கலாம். அப்படி செய்யாமற் போனால் கண்ட இடத்தில் அடிப்பதால் சுகாதார குறைவும் அதனால் வியாதியும் உண்டாகும். பிரசிடெண்டுகள் ஜனங்களின் மதக்கொள்கைகளுக்கு மாறுபாடாயில்லாமல் வெகு ஜாக்கிறதையாய் ஏற்படுத்தவேண்டும்.

[இ. பு. ப. 496]

கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படும் இடங்கள் நிவாரணையாவது.

192. 189-வது, 190-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் ஷை பிரிவுகளில் கண்ட காரியங்களுக்காக கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படும் இடங்களுக்குப் பிரயோகப்படமாட்டா.

தொழில்களும் தொழிற்சாலைகளும்.

இன்ன காரியங்களுக்கு லைசன்ஸ் இல்லாமல் இடங்களை உபயோகிக்கலாகாதென்பது.

193. (1) பஞ்சாயத்தானது கிராமத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் எந்த இடத்தையும் பஞ்சாயத்து பிரஸிடெண்டினால் கொடுக்கப்படும் லைசன்ஸ் இல்லாமலும் அந்த லைசென்ஸில் குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டங்களின்படிக்கன்றி மற்றப்படியும், 7-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களிலே யாதொன்றுக்காகவாகிலும் பலவற்றிக்காகவாகிலும் உபயோகிக்கக்கூடாதென்று விளம்பரம் பிரசுரிக்கலாம்.

ஆனால், அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் பிரசுரிக்கப்பட்ட தேதிமுதல் 60 தினம் வரையில் செலாவணியாகத் தொடங்காது.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு இடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரும் ஷை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து 30 தினத்திற்குள்ளாக, அப்படிப்பட்ட காரியத்துக்காக அந்த இடத்தை உபயோகிக்கும்பொருட்டு லைஸென்ஸ் வேண்டுமென்று பஞ்சாயத்து பிரசிடெண்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

(3) ப்ரெசிடெண்டானவர்-ஒரு உத்தரவு மூலமாகவும் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற நிர்ப்பந்தங்களுக்கும் ரெகுலேஷன்களுக்கும் உட்பட்டும், அப்படிப்பட்ட லைஸென்ஸ் கொடுக்கலாம் அல்லது கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

(4) ஷை லைஸென்ஸ் ஒவ்வொன்றும்-விசேஷ காரணங்களினால் அது ஒரு வருஷம் முடிவதற்கு முன்னமே காலம் கடந்துபோக வேண்டுமென்று ப்ரெசிடெண்ட் நினைத்தாலன்றி மற்றப்படி அந்த வருஷ முடிவில் காலம் கடந்துபோகும்; மேலேகண்டபடி ப்ரெசிடெண்ட் நினைக்கும் பட்சத்தில் அந்த லைஸென்ஸில் குறிப்பிடப்படக்கூடிய முந்திய தேதியில் அது காலம் கடந்துபோகும்.

(5) அப்படிப்பட்ட லைஸென்ஸுகளைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு வருஷமும் முடிவதற்கு 30 தினங்களுக்கு குறையாமல் முன்னதாக செய்துகொள்ளப்படவேண்டும்; மேலும், நூதனமாய் ஏற்படுத்தப்போகும் இடங்களுக்காக லைஸென்ஸுகளுக்கான விண்ணப்பங்கள்-அவைகளை ஏற்படுத்துவதற்கு 30 தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக செய்துகொள்ளப்படவேண்டும்.

குறிப்பு.

செ. **193**. போது.—194-வது செக்ஷன் தொழிற்சாலையில் யந்திரங்களின் உபயோகங்களைப்பற்றிக் கூறப்படவில்லை என்றும் யந்திர உபகாரணங்களை ஏற்படுத்துவதைப்பற்றி மட்டும் கூறுகிறதென்றும் "முத்து செட்டி எ. மதுரை முனிசிபாலிடி வியாஜ்ஜியத்தில் பிரத்திபேக பெஞ்சில் தீர்புகூறப்பட்டது. (A.I.R. 1927 M. 961=105 I.C. 686)." யந்திரங்களின் சொந்தக்காரர் யந்திரத்தை உபயோகப்படுத்தி 7-வது ஷெட்யூ (எண்)-வில் கண்டிருக்கிற அம்சத்தின் கீழ்வரும் தொழிலை செய்தால் 193-வது செக்ஷன்படி சொந்தக்காரர் வருஷவாரி லைசன்ஸ் பெறவேண்டும்.

[இ. பு. ப. 497]

செ. **193 (1)**. **விளம்பர பிரசுரம்.**—உபவிதியினால் அல்லது உத்திரவினால் அல்லது நோட்டீசினால், புதிய குற்றத்தை சேர்க்கவேண்டுமென்றால், சட்டப்படி அம்மாதிரி செய்ய அருகதையுடையவர், இம்மாதிரி செய்தால் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார் என்று ஒரு அறிக்கை பொதுஜனங்கள் அறியுமாறு, முதல் முதல் வெளியிடவேண்டும். ஒரு முனிசிபாலிடியின் கமிஷனர்கள் கூடி, முனிசிபல் ஸரத்திற்குள் லைசன்ஸ் இல்லாமல் குறிப்பிட்ட வியாபாரத்தை நடத்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள். இந்த தீர்மானத்தை விளம்பர பிரசுரம் செய்யவில்லை. தீர்மானத்தை மீறி நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பிட்ட

வியாபாரம் செய்ய அநுமதி வேண்டுமென்று பொது ஜனங்களுக்கு முன் எச்சரிக்கையாக விளம்பரப் பிரசுரம் செய்திருக்கவேண்டியது அவசிமாகையால், தண்டனை செல்லாது என தீர்மானிக்கப்பட்டது. (சேஷப்பிரபு எ. அரசர், 66 I. C. 429=23 Cr.L.J. 285., [இ. பு. ப. 498]

இடத்தை காரியங்களிலே யாதோன்றுக்காகவாகிலும்.................உபயோகப்படுத்தக்கூடாது.—இடத்திற்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டுமேயொழிய குறிப்பிட்டிருக்கும் ஒன்று அல்லது பல காரியங்களுக்கல்ல. "மனிதனுடைய பிராணனுக்காவது திரேகாரோக்கியத்திற்காவது கெடுதி அல்லது அபாயம் உண்டாக்கக்கூடிய தொழில்" என்னும் பதங்கள் தொழில் முறைகளைப்பற்றி அறிந்து கொள்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டனவேயொழிய இடத்தை உபயோகப்படுத்துகிற விஷயத்தில் உபயோகப்படுத்தக்கூடாது. (அரசர் எ. மாயாண்டி கோனன், 30 Mad. 220,). [இ. பு. ப. 498]

அதன் எல்லைக்குள்.—7-வது ஷெட்யூல்படி ஒரு பஞ்சாயத்தின் எல்லைக்குள் உற்பத்தி செய்தால் லைசென்ஸ் பெறவேண்டிய சாமானை அந்த பஞ்சாயத்து எல்லைக்கு வெளியில் தயார் செய்து லைசென்ஸ் பெறவேண்டாத நிலைமையில் பஞ்சாயத்திற்குள் அந்த சாமானை கொண்டுவந்தால், அந்த சாமானின்பேரில் பஞ்சாயத்து லைசென்ஸ் வரி போட முடியாது. லைசென்ஸ் பெறாததற்கு பிராதும் செய்யமுடியாது. (பானர்ஜி எ. வங்காள வர்ண கம்பனி, A.I.R. 1928 C. 531=111 I.C. 114). [இ. பு. ப. 499]

லைசன்ஸ்.—மாஜிஸ்டிரேட் எதிரியை தண்டிக்கும் முன், எதிரி லைசன்ஸ் வாங்க வேண்டுமா என்பதை கவனிக்கவேண்டும். (கூமேஷ்சந்திர் எ. கல்கத்தா கார்பொரேஷன், A.I.R. 1926 C. 614=93 I C. 1045). இந்த செக்ஷனை கடுமையாக உபயோகப்படுத்தக் கூடாது. ஒருவர் போர்ட் மெம்பர்களின் ராஜீய கொள்கைக்கு விரோதியாயிருக்கிறாரென்றோ அல்லது இந்த செக்ஷனுக்கு அநுசரணையில்லா வேறு சொந்த காரணங்களை வைத்துக்கொண்டோ லைசன்ஸ் கொடுக்காமல் மறுக்கக்கூடாது. [இ. பு. ப. 499]

தண்டனை.—லைசன்ஸ் பெறாமல் ஒரு இடத்தை 7-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் காரியத்துக்கு உபயோகப்படுத்தினால் ரூபாய் 100-ம், தவறி நடக்கும் பிரதிதினத்திற்கும் ரூபாய் 20-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், நக.—(1) 7 வது ஷெட்யூலில் கண்டிருக்கும் அம்சங்களுக்கு லைசன்ஸ் பெறவேண்டுமென்று பஞ்சாயத்து ஜில்லா கஜெட்டில் விளம்பரப்பிரசுரம் செய்தது. (2) 60 நாட்கள் கழிந்தன. (3) எதிரி 7.வது ஷெட்யூலில் கண்ட இடத்தில் ஒன்றை அல்லது பலவற்றை வைத்திருந்தார். (4) அந்த இடத்திற்கு லைசென்ஸ் பெறவில்லை. [இ. பு. ப. 500]

நீராவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கப் போகிற தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்தைக் கட்டுவதற்காவது ஸ்தாபிப்பதற்காவது அதில் யந்திர உபகரணங்களை ஏற்படுத்துவதற்காவது செய்து கொள்ளப்பட வேண்டிய விண்ணப்பம்.

194. (1) (a) நீராவிசக்தி, ஜலசக்தி அல்லது இதர யந்திர சக்தியையாவது மின்சார சக்தியையாவது உபயோகிக்க உத்தேசித்திருக்கும் யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்தைக் கட்டவாவது ஸ்தாபிக்கவாவது,

(b) யாதொரு வளவில் மேலே செல்லப்பட்டபடி நீராவி, ஜலசக்தி அல்லது இதர சக்தியைக்கொண்டு இயக்கப்படும் யந்திரங்கள், அல்லது வஸ்துக்களைச் செய்வதற்கான தளவாடங்களை ஏற்படுத்தவாவது உத்தேசிக்கும் ஒவ்

வொரு நபரும் - அந்தப்படி கட்டவாகிலும், ஸ்தாபிக்கவாகிலும் ஏற்படுத்தவாகிலும் ஆரம்பிப்பதற்கு முன், உத்தேசித்த வேலையைச் செய்வதற்கு அனுமதிக்காக பஞ்சாயத்துக்கு எழுத்துமூலமான விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

(2) ஷை விண்ணப்பத்துடன்—

(i) பிரதேச கவர்ன்மெண்டாரால் இது விஷயமாய்ச் செய்யப்படும் விதிகளில் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகத் தயார் செய்யப்பட்டுள்ளதாய் அந்த தொழிற்சாலை, வேலைச்சாலை, வேலை செய்யும் இடம் அல்லது வளவின் நக்ஷா ஒன்றும்,

(ii) டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் இது விஷயமாய்ச் செய்யப்பட்ட சகாயச் சட்டங்களை அனுசரித்து பஞ்சாயத்து ஷை சக்தி, யந்திரங்கள், தளவாடங்கள் அல்லது வளவைக் குறித்து கேட்கக்கூடிய விவரங்களும் அனுப்பப்படவேண்டும்.

(3) பஞ்சாயத்தானது - ஷை விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட பிறகு கூடிய சீக்கிரத்தில்,—

(a) விண்ணப்பத்தில் கேட்டிருக்கும் அனுமதியை அறுதியாகவோ அல்லது அது யுக்கமென்று நினைத்து விதிக்கும் திட்டங்களுக்குட்பட்டோ கொடுக்கலாம், அல்லது,

(b) அந்தப்படி கட்டுவது, ஸ்தாபிப்பது அல்லது ஏற்படுத்துவதானது அக்கம்பக்கத்தில் ஜனம் நெருக்கமாயிருப்பது காரணமாக ஆட்சேபகரமாயிருக்கிறதென்றாகிலும், அதனால் அசங்கியம் அல்லது சங்கடம் வெகுசாய் உண்டாகுமென்றாகிலும் அது அபிப்பிராயப்பட்டால், அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கலாம்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுமதி கொடுப்பதற்குமுன், பஞ்சாயத்தானது—

(a) (i) காற்றுக்காகவும் வெளிச்சத்துக்காகவும் செய்யப்பட்ட ஏற்பாடு போதுமானதா என்பதைக்குறித்தும்,

(ii) அறைகள், கதவுகள் ஆகிய இவைகளின் உயரமும், அளவுகளும் போதுமானவையா என்பதைக்குறித்தும்,

(iii) தீ பிடிக்கும் விஷயத்தில் உபயோகப்படுத்தவேண்டிய வெளியே போகும் வழிகள் தகுதியானவையா என்பதைக்குறித்தும்,

(iv) பிரதேச கவர்ண்மெண்டாரால் செய்யப்படும் விதிகளில் நிர்ணயிக்கப்படக்கூடிய மற்ற விஷயங்களைக்குறித்தும்.

அந்தத் தொழிற்சாலை, வேலைச்சாலை, வேலைசெய்யும் இடம் அல்லது வளவின் நக்ஷா சம்பந்தமாய், 1911-ம்வருடத்திய இந்துதேசத்து தொழிற்சாலைகளாக்டின்படி நியமிக்கப்பட்டு கிராமத்தில் விசாரணை அதிகாரம் செலுத்தும் தொழிற்சாலை இன்ஸ்பெக்டரின், அல்லது அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு மேற்பட்டிருந்தால், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் குறிப்பிடப்படும் இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்; மேலும்,

(b) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியத்துக்கு ஷை தொழிற்சாலை, வேலைச்சாலை, வேலைசெய்யும் இடம் அல்லது வளவின் மனை தகுதியானதா என்பதைப்பற்றி, டிஸ்ட்ரிக்ட் போர்டார் யாதொரு டிஸ்ட்ரிக்ட்

ஹெல்த் ஆபிஸரை வேலைக்கு அமர்த்திக்கொண்டிருக்கும்பட்சத்தில் அந்த ஆபிஸரையும் மற்ற விஷயங்களில் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபிஸரையும் கலந்து ஆலோசித்து, அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயத்தைத் தக்கபடி மதித்து நடக்க வேண்டும்.

குறிப்பு.

செ. **194 (3) (b)**. **அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகுமென்று அபிப்பிராயப் பட்டால் அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கலாம்.**—யந்திரம் அக்கம்பக்கத்திற்கு ஆட்சேபகரமாயாகிலும் அசங்கியம் அல்லது சங்கடம் வெகுசாய் உண்டாகுமென்றாகிலும் தீர்மானிக்கக்கூடியவர்கள் அந்த லோகல் போர்ட். அது அம் மாதிரி அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கலாம். உண்மையில் அசங்கியமா என்பது அனுவசியம். எப்படியாயினும் அனுமதி பெற்றுதான் ஆகவேண்டும். (நடேச முதலியார், 50 Mad. 733=A.I.R. 1927 Mad. 156). [இ. பு. ப. 502]

தண்டனை.—சட்ட விரோதமாய் தொழிற்சாலை, வேலைச்சாலை முதலியவைகள் லைசன்ஸ் இல்லாமல் அமைத்தால் ரூபாய் 1,000-ம், தவறி நடக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 100-ம் அபராதம் விதிக்கலாம். [இ. பு. ப. 502]

சாக்ஷியம், நசு.—(1) எதிரி இந்த செக்ஷன் (a) (b)-ல் சொல்லியிருக்கும் தொழிற்சாலை வேலைசாலை வைத்திருக்கிறார். (2) அவர் அனுமதி பெறவில்லை அல்லது கொடுக்கப்படவில்லை.

நீராவி அல்லது இதர சக்தியினால் ஏற்படும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறைக்கும்படி லோகல்போர்டார் உத்தரவு பிறப்பிக்கலாமென்பது.

195. (1) நீராவிசக்தி, ஜலசக்தி அல்லது இதர யந்திர சக்தியாவது மின்சார சக்தியாவது உபயோகிக்கப்படும் யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்தில், அங்கே உபயோகிக்கப்படும் குறித்த வகையைச் சேர்ந்த எரிகரும்பு காரணமாகவோ உண்டாகும் சப்தம் அல்லது அதிர்ச்சி காரணமாகவோ அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள் ஏற்படுகிறபட்சத்திலே, பஞ்சாயத்தானது - இது விஷயமாய்க் குறிப்பிடப்படும் நியாயமான ஒரு காலத்துக்குள் ஷை அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறைக்கும்படியாக தனக்குத் தகுதியாகத் தோற்றுகிற கட்டளைகள் இடலாம்.

(2) வேண்டுமென்று ஷை கட்டளையின்படி நடந்துகொள்ளத்தவறினும், (மேற்படி அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக்) குறைப்பது சாத்தியமாயிராததென்று தெரியவந்தாலும், பஞ்சாயத்தானது—

(a) (அங்கே) உபயோகிக்கப்படும் குறித்த வகையைச் சேர்ந்த எரிகரும்பை உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம், அல்லது

(b) இரவு 9½ மணி முதல் காலை 5½ மணிவரையில் ஷை தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்தில் வேலை செய்யக்கூடாதென்று தடுத்து சப்தம் அல்லது அதிர்ச்சியை மட்டுப்படுத்தலாம்.

குறிப்பு.

செ. **195 (1)**.—யந்திரம், அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்கு அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகக் கூடிய அவ்வளவு சத்தம் அல்லது அதிர்ச்சி செய்கிறதென்று ருசு செய்ய வேண்டிய பாரம் முனிசிபாலிடியின் மேலுள்ளது. (A. E. ஸிமித், 81 I.C. 72=A.I.R. 1924 Mad. 389).

தொழிற்சாலை சாதாரணமாய் வேலை செய்யும்போது அக்கம் பக்கத்துக்கு அசங்கியம் அல்லது சங்கடமுண்டாகக் கூடிய வாசனை வீசினால் அதை தடுக்க முனிசிபாலிடியார் நோடிஸ் கொடுக்கலாம். [இ. பு. ப. 503]

தண்டனை.—அசங்கியம் அல்லது சங்கடத்தை குறைக்கும்படி செய்த உத்திரவை மீறி நடந்தால் ரூபாய் 100-ம், தவறி நடக்கும் தினம் ஒன்றுக்கு ரூபாய் 50-ம் அபராதம் விதிக்கலாம். 8, 9-வது ஷெட்யூல்களைபார்க்கவும்.

சகஷீரயம், நசு.—(1) உபயோகிக்கப்படும் எரிகரும்பு அசங்கியம் அல்லது சங்கட மான நாற்ற முண்டாக்கக் கூடியது. (2) அதை மாற்றும்படி உத்திரவிடப்பட்டது. (3) அம்மாதிரி எதிரி செய்யத் தவறிவிட்டார். [இ. பு. ப. 504]

லோகல் போர்டாருக்கு உத்தரவு பிறப்பிக்கவோ கட்டளையிடவோ பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

196. பிரதேச கவர்ன்மெண்டார் - 194-வது பிரிவின் படியாகிலும் 195-வது பிரிவின்படியாகிலும் நடத்திய அல்லது நடத்தாமல் விட்டு விட்ட யாதொரு நடவடிக்கை சம்பந்தமாய் பொதுவாகவாவது குறித்த யாதொரு விஷயத்திலாது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவு பிறப்பிக்கலாம் அல்லது கட்டளையிடலாம்.

யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்துக்குள்ளே ப்ரெஸிடெண்ட் பிரவேசிக்கலாமென்பது.

197. (1) யாதொரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டாவது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்ற யாதொரு நபராவது—

(a) சூரியோதய முதல் சூரியாஸ்தமனத்துக்கு இடையில் எந்த வேளையிலும்,

(b) யாதொரு தொழில் நடந்துகொண்டிருக்கும்போது எந்த வேளையிலும்,

(c) 194-வது அல்லது 195-வது பிரிவுக்கு விரோதமாக யாதொரு குற்றம் செய்யப்பட்டு வருகிறதென்று அவர் நம்புவதற்குக் காரணம் இருந்தால் பகலிலாயினும் இரவிலாயினும் எந்த வேளையிலும்,

யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்துக்குள்ளே பிரவேசிக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவதனலாவது இந்தப் பிரிவின்படி யாதொரு இடத்தில் பிரவேசிக்கும்பொருட்டு அவசியமான யாதொரு பலவந்தத்தை உபயோகிப்பதனலாவது அவசியமாய் நேரிடும் யாதொரு சேதம் அல்லது அசௌகரியத்துக்காக எவர்பேரிலும் எந்த தாவாவும் நிற்காது.

குறிப்பு.

செ. 197 (2).—பிரசிடெண்டையாவது அவரது அதிகாரம் பெற்றவரையாவது தொழிற்சாலை அல்லது வேலைச்சாலைக்குள் பிரவேசிக்கக் கூடாதென்பது அவர்களை 210-வது செக்ஷன்படி அக்கிரமமாய் தடுப்பதாகும். 194, 195-வது செக்ஷன்கள்படி குற்றம் செய்யஹேது இருக்கும் அம்சங்களுக்கு மட்டும் இந்த உபசெக்ஷன் உபயோகப்படும்.

[இ. பு. ப. 505]

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக்குறித்து ஆக்ட் பிரயோகப்படுவது.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக்குறித்த 1888-ம் ஷூத்து ஆக்டை பஞ்சாயத்து விஸ்தீர்ணங்களுக்கு பிரயோகப் படும்படி செய்வது.

198. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் ஷூத்து ஆக்டை யாதொரு லோகல் போர்ட் விஸ்தீர்ணத்துக்குப் பிரயோகப்படும்படி செய்யும்பட்சத்தில் அந்த ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன நிபந்தனைகள் கண்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே,—

(a) லைஸென்ஸ் வேண்டுமென்று யாருக்கு விண்ணப்பம் செய்துக் கொள்ளவேண்டுமோ, யார் அந்த ஆக்டின்படி லைஸென்ஸ் கொடுக்கலாமோ அல்லது கொடுப்பதில்லை யென்று மறுக்கலாமோ அந்த அதிகாரியானவர் - பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டாவர்.

(b) அந்த ஆக்டின்படி யாதொரு லைஸென்ஸ் கொடுப்பதாகவோ அல்லது கொடுப்பதில்லை யென்று மறுத்தோ அல்லது அதை ரத்துசெய்தோ அல்லது செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்தோ ப்ரெஸிடெண்ட் செய்திருக்கும் உத்தரவின்மேல் பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம்; மேலும்,

(c) அந்த ஆக்டின்படி கொடுக்கப்படும் லைஸென்ஸுகளுக்கு இன்ன கட்டணம் விதித்து வாங்கவேண்டுமென்றும், லைஸென்ஸுகளில் இன்ன திட்டங்களைக் காணவேண்டுமென்றும் பஞ்சாயத்து நிர்ணயிக்கவேண்டும்.

MADRAS ACT No. II OF 1888.

சென்னப்பட்டணம் 1888ஷூத்து 2-வது ஆக்ட்டு.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங்கழிக்கும் இடங்களையும் மேற்பார்வை யிடுவதற்கும் அவைகளுக்கு லைசென்சு கொடுப்பதற்குமான ஆக்ட்டு.

பீடிகை.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங்கழிக்கும் இடங்களையும் மேற்பார்வையிடுவதற்கும் தகுந்த அதிகாரியைக்கொண்டு அவைகளுக்கு லைசென்சு கொடுப்பிக்கவேண்டியதற்கும் நிபந்தனைகள் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. (1) இந்த ஆக்ட்டை ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைக் குறித்த 1888-ஷூத்திய ஆக்ட்டென்று சொல்லலாம்.

வழங்கத்தொடங்குவது.

(2) இது சட்டமாக ஜாரி செய்யப்படுவது முதற்கொண்டு வழங்கத்தொடங்கவேண்டியது.

வியாபிக்குமிடம்.

(3) சென்னபட்டணம் 1884-வருஷத்து 4 - வது ஆக்ட்டின்படிக்காவது அந்தந்தகாலத்தில் செலாவணியாகிற அதேமாதிரியான வேறு ஆக்ட்டின்படிக்காவது சென்னபட்டணம் பிரஸிடென்ஸியில் முனிஸிபாலிட்டிகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அல்லது இனிமேல் நிர்ணயிக்கப்படுகிற எல்லாப்பட்டணங்களிலும் இது வியாபிக்கின்றது; மேலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது போர்ட்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் விளம்பரமூலமாய், அந்த விளம்பரத்தில் கண்ட தேதிமுதற்கொண்டு எப்பொழுதும் நிலையாகவாவது கொஞ்சகாலத்திற்காவது குறித்த சந்தர்ப்பங்களில் மாத்திரமாவது சென்னபட்டணம் முனிஸிபாலிட்டி எல்லைக்கப்பாலுள்ள போர்ட்டு செயிண்டு ஜார்ஜு பிரஸிடென்ஸியைச் சேர்ந்த வேறு எந்த பிரதேச விஸ்தீர்ணத்திலாகிலும் இந்த ஆக்ட்டை வியாபிக்கச் செய்யலாம், மேலும் அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

நிவாரணை.

(4) இந்த ஆக்ட்டிலுள்ள தெதுவும் யாதொரு (கிரிஸ்தவ) கோவிலுக்காவது - (ஹிந்து) ஆலயத்திற்காவது - பள்ளிவாசலுக்காவது - ஜனங்கள் ஆராதனை நடத்தும் வேறு எந்த இடத்திற்காவது சம்பந்தப்படமாட்டாது.

அர்த்தம்.

2. இந்த ஆக்ட்டில் சங்கதியினாலாவது முன்பின்தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்.—

முனிஸிபல் சங்கத்தின் அக்கிரசனாதிபதி என்பது—சென்னப்பட்டணம் 1884-வருஷத்து 4 - வது ஆக்டடின்படிக்காவது போர்ட்டு செயிண்டு ஜார்ஜு பிரஸிடென்ஸியிலுள்ள டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளைக்குறித்து அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற வேறு ஆக்ட்டின்படிக்காவது நேமிக்கப்பட்ட யாதொரு முனிஸிபல் சங்கத்தின் அக்கிராசனாதிபதி யென்று அர்த்தமாகும்.

மாஜிஸ்திரேட்டு என்பது—கிரிமினல் புரொசீடர் கோடின்படி நேமிக்கப்பட்ட மாஜிஸ்திரேட்டென்று அர்த்தமாகும்.

கட்டடமென்பது—யாதொரு வீடு - குடிசை - பந்தல் அல்லது மேற்கூரையிட்ட அடைப்பிடம் என்று அர்த்தமாகும்.

500 சதுர அடி கொண்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டடத்தையாவது லைசென்சில்லாமல் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாதென்பது.

3. இந்த ஆக்ட்டு வழங்கி வருகிற எந்த விஸ்தீர்ணத்திலும் 500 அல்லது அதற்குமேற்பட்ட சதுர அடிகொண்ட நிலையான அல்லது கொஞ்சகாலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டடத்தையாவது இதில் பின்னால் சொல்லியிருக்கிறவிதமாய் முன்னதாகவே ஒரு லைசென்சு பெற்றுக்கொண்டிருந்தாலன்றி, ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடாது.

லைசென்சுக்காக செய்துகொள்ள வேண்டிய மனு: அதில் என்ன அடங்கியிருக்க வேண்டியதென்பது.

4. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும் இடமாகவாவது யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை உபயோகிக்கவாகிலும் யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை அப்படிப்பட்ட காரியத்திற்காக கட்டவாகிலும் லைசென்சு பெற்றுக்கொள்ள எவனுக்காவது விருப்பமிருக்கிறபட்சத்தில், அந்த இடம் அல்லது கட்டடத்திற்கு சொந்தக்காரன் இன்னானென்பதையும் அது இன்ன இடத்திலிருக்கிறதென்பதையும் இன்ன பரிமாணமுள்ளதென்பதையும் இன்னமாதிரியான

தென்பதையும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் இன்ன வஸ்துவைக் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது அல்லது செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிற தென்பதையும் அது நிலையாய் எப்போதும் இருப்பதற்காவது கொஞ்சகாலம் வரையில் இருப்பதற்காவது போடப்படுகிறதா அல்லது போடும்படி உத்தேசிக்கப்படுகிறதா வென்பதையும் அது எதற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அதையுங்கண்டு 5-வது பிரிவில் கண்டிருக்கிற அதிகாரிக்கு ஒரு மனு செய்து கொள்ளவேண்டியது.

இன்ன அதிகாரிக்கு மனுசெய்து கொள்ள வேண்டியதென்பது.

5. அப்படிப்பட்ட மனுவை - அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் யாதொரு முனிஸிபல் பட்டணத்திலிருக்கும்பட்சத்தில் அந்த முனிஸிபல் சங்கத்தின் அக்கிராசனாதிபதிக்கும், மற்றப்படி ஒவ்வொருவிஷயத்திலும் அந்த இடம் அல்லது கட்டடம் கட்டப்பட்டிருக்கிற பிரதேச விஸ்தீரணத்தில் அதிகாரமுடைய யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கும் செய்துகொள்ளவேண்டியது.

இடம் அல்லது கட்டடத்தை அதிகாரி பார்வையிட வேண்டும், முன்னிருந்ததோடு சேர்த்துக் கட்ட வேண்டியதென்றாவது அதில் மாறுதல் செய்ய வேண்டியதென்றாவது உத்தரவும் செய்யலாம்.

6. அப்படிப்பட்ட யாதொரு மனுவை வரப்பெற்றுக்கொள்வதின்பேரில், அந்த மனு எந்த அதிகாரிக்கு செய்துகொள்ளப்பட்டதோ அந்த அதிகாரி எதற்காக லைசென்சு வேண்டியதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட இடம் அல்லது கட்டடத்தை பார்வையிட வேண்டியது, மேலும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் எந்த வஸ்துவைக்கொண்டு கட்டப்பட்டிருக்கிறதோ அதிலாவது, எந்த ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ அதிலாவது, அதில் கூடும்படியான ஜனங்களுடைய பந்தோபஸ்துக்காக என்னென்ன முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதோ அவைகளிலாவது, யாதொரு மாறுதலையாகிலும் பின்னும் சேர்க்கையாக யாதொன்றையாகிலும் செய்யும்படி அந்த மனுதாரனுக்கு எழுத்துமூலமாய் அறிக்கைசெய்து உத்தரவுபண்ணலாம், மேலும் அப்படிப்பட்ட மாறுதலையாவது சேர்க்கையான யாதொன்றையாவது செய்து முடிக்கிறவரையில் லைசென்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

இன்னபடிக் கானால் அதிகாரி லைசென்சு கொடுக்கலாமென்பது.

7. (a) அடைப்பிடம் அல்லது கட்டடம் எப்படி உத்தேசமோ அப்படி ஜனங்கள் வழக்கமாய்க்கூடவாவது விநோதமாய்க் காலங்கழிக்கவாவது அதை யாருக்குங் கெடுதி நேரிடாமல் உபயோகப்படுத்தலாமென்றும்,

(b) அது அமைந்திருக்கும் இடத்தின் விஷயமாகவாவது அதின் உரிமைச்சுதந்தரத்தின் விஷயமாகவாவது உத்தேசிக்கப்பட்ட காரியத்தின் விஷயமாகவாவது யாதொரு ஆட்சேபனையுமில்லை யென்றும்,

அந்த அதிகாரிக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிறபட்சத்தில் அவர் லைசென்சு எழுதித் தன் கையெழுத்துபோட்டு மனுதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. அந்த லைசென்சில் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்தையும் அது எந்த காரியத்திற்கு உபயோகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ அந்த காரியத்தையும் காணவேண்டியது. அப்படிப்பட்ட லைசென்சானது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது விதி ஏற்படுத்தி உத்தரவுபண்ணுகிற நமூனாப்படிக்கும் கட்டணத்திற்கும் திட்டங்களுக்கு முட்பட்டுமிருக்கவேண்டியது.

அந்த அதிகாரிக்கு மேற்கண்டபடி திருப்திகரமாய்த் தோற்றுதபட்சத்தில், தான் எந்த ஏதுக்களைக்கொண்டு நிராகரிக்கவேண்டியிருக்கிறதோ அந்த ஏதுக்களைக் கண்டெழுதி லைசென்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

லைசென்சு இத்தனைநாள் செலாமணியாக வேண்டியதென்று அதில் காணவேண்டியது.

8. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படுகிற ஒவ்வொரு லைசென்சிலும் அது இத்தனைநாள் செலாமணியாகிக்கொண்டு வருமென்று காணவேண்டியது, அந்தகாலம் முடித்தபிறகு அது செலவாமணியாகாமல் ரத்தாய்போகும்.

லைசென்சை ரத்து செய்வது அல்லது கொஞ்சகாலம் செலாமணியாக வொட்டாமல் பண்ணுவது.

9. இந்த ஆக்ட்டின்படி லைசென்சு கொடுக்கிற எந்த அதிகாரியாவது—

(a) லைசென்சு மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும்,

(b) அடைப்பிடம் அல்லது கட்டடம் - ஜனங்கள் வழக்கமாய்க் கூடுகிற அல்லது விநோதமாய்க் காலங்கழிக்கிற காரியங்களில் எந்த் காரியத்திற்காக லைசென்சு கொடுக்கப்பட்டதோ அது தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்டதென்றும்,

(c) எந்த காரியத்திற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டதோ அந்த காரியத்திற்கு அந்த இடம் அல்லது கட்டடத்தை பயமில்லாமல் இனி உபயோகப் படுத்தக் கூடாதென்றும்,

நம்புவதற்கு தனக்கு ஏதுவிருந்தால், அந்த ஏதுக்களை எழுதி அந்த லைசென்சை ரத்து செய்யலாம், அல்லது கொஞ்சகாலம் செலாமணியாகவொட்டாமல் பண்ணலாம்.

6-வது, 7-வது அல்லது 9-வது பிரிவின்படி செய்யப்படுகிற உத்தரவின் பேரில் அப்பீல்.

10. (1) இந்த ஆக்ட்டின்படி லைசென்சு கொடுக்கவேணுமென்று மனுசெய்துகொள்ளுகிறவன் - இதின் 6-வது பிரிவின் படிக்காவது 7-வது பிரிவின்படிக்காவது 9-வது பிரிவின் படிக்காவது செய்யப்படும் எந்த உத்தரவும் டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டினால் செய்யப்பட்டதாக யிருந்தாலொழிய மற்றப்படி அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்து கொள்ளலாம்.

(2) எந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவை மனுதாரன் பெற்றுக்கொண்ட தேதிமுதல் 30 நாளைக்குள் அப்பீல் செய்யவேண்டியது.

(3) யாதொரு முனிஸிபல் பட்டணத்தில் அந்த முனிஸிபல் சங்கத்திற்கு, மற்ற ஒவ்வொரு பிரதேச விஸ்தீர்ணத்திலும் சப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டுக்கு அல்லது பிரதம உத்தரவு ஒரு சப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டினால் செய்யப்பட்டிருந்தால் டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்கும் அப்பீல் செய்து கொள்ள வேண்டியதாகும்.

(4) 5-வது பிரிவின்படி எந்த அதிகாரிக்கு மனுசெய்து கொள்ளப் பட்டதோ அந்த அதிகாரியைப்போலவே அப்பீல் அதிகாரிக்கும் அடைப்பிடம் அல்லது கட்டடத்தை பார்வையிடவும் அதில் மாறுதல் செய்யவேண்டியதென்ரு வது முன்னிருந்ததோடு சேர்த்து கட்டவேண்டியதென்ருவது உத்தரவுசெய்யவும்

அதிகாரமுண்டு, மேலும் அவர் லைசென்சு கொடுக்கலாம், கொடுக்காமல் நிறுத்திப் போடலாம், அல்லது அவருக்கு யுக்தமாக தோற்றுகிறபடி வேறு உத்தரவு செய்யலாம்.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லைசென்சைப் பார்வையிடவும் இனி உபயோகிக்கவொட்டாமல் தடுக்கவும் அதிகாரம்.

11. எந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற்கு இந்த ஆக்ட்டின் படி லைசென்சு வேண்டியிருக்கிறதோ அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற்குள் எப்போதாகிலும் பிரவேசிப்பதற்கும், லைசென்சு கொடுக்கப்பட்டிருந்தால் அதைப் பார்வையிடுவதற்கும், லைசென்சு இல்லாத பட்சத்திலாவது லைசென்சில் கண்ட திட்டங்கள் அனுசரிக்கப் படாதபட்சத்திலாவது, உடனே ஜனங்களுக்கு பெருத்த அபாயம் நேரிடுமென்று பயப்பட தனக்கு முகாந்தரமிருக்குமாகில், அப்படிப்பட்ட அடைப்பிடம் அல்லது கடடத்தை ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடமாகவாவது விநோதமாய்க் காலங்கழிக்கும் இடமாகவாவது இனி உபயோகிக்காதபடி தடுப்பதற்கு யாதொரு மாஜிஸ்திரேட்டுக்காவது ஸ்டேஷன் விசாரணையுள்ள அல்லது ஹெட் கான்ஸ்டேபில் அந்தஸ்துக்கு மேற்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு.

இந்த ஆக்டின்படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும்பற்றி டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு புனராலோசனை செய்யலாம்.

12. டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு - இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கையைச் சேர்ந்த ரெகார்டையும் வரவழைத்துப் பரிசோதிக்கலாம், அதற்குச் சம்பந்தமான எவ்வித ரிபோர்ட்டையும் வரவழைக்கலாம். பின்னும் எவ்வித விசாரணையையும் செய்யலாம் அல்லது செய்விக்கலாம், மேலும் அந்த நடவடிக்கை நடத்திய அதிகாரி என்ன உத்தரவு செய்திருக்கலாமோ அவ்விதமான உத்தரவும் செய்யலாம்.

தெண்டனைகள்.

13. யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை தன்னுடைய நேர் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற எவனாவது லைசென்சு பெறாமல் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் கலங்கழிப்பதற்கு உபயோகிக்கவொட்டினாலும், இந்த ஆக்ட்டின்படி லைசென்சு பெற்றுக்கொண்டு அப்படிப்பட்ட லைசென்சில் கண்ட நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாய் அப்படி உபயோகிக்கவொட்டினாலும் அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் ஐந்நூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவான்.

விதிகள் செய்ய அதிகாரம்.

14. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - இந்த ஆக்ட்டு ஜாரியானபிறகு எந்த காலத்திலாவது அப்போதைக்கப்போதாவது இந்த ஆக்ட்டில் காரியங்களை நிறைவேற்றுவதற்குஇந்த ஆட்டுக்கு ஒற்றுமையான விதிகளைச் செய்யலாம், மேலும் அந்த விதிகளைத் திருத்தலாம் அல்லது ரத்துசெய்யலாம். அப்படிப்பட்ட எல்லா விதிகளும் போர்ட்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் பிரசுரமாகி அந்தப்படிப் பிரசுரஞ் செய்யப்படுகிற தேதியிலாவது அவைகளை பிரசுரஞ்செய்கிற விளம்பரத்தில் குறிக்கப்படுகிற பிந்திய தேதியிலாவது வழங்கத்தொடங்குவதாகும்.

5-ம் பாகம்.—சகாயகரமான சட்ட நிபந்தனைகளும் தண்டனைகளும்.

12-ம் அத்தியாயம்.

சகாயகரமான சட்டநிபந்தனைகள்.

விதிகளும் ஷெட்யூல்களும்.

விதிகள் செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

199. (1) பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த ஆக்டுக்கு முரண்படாமலிருக்கும்படி அதிற்கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக விதிகள் செய்வது மல்லாமல், எந்த நடவடிக்கைக் குறிப்புக்காக நமூனு ஏற்படுத்த வேண்டுமென்று தாங்கள் அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த நடவடிக்கை குறிப்புக்காக நமூனுக்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு பாதகம் இல்லாமலும் அவர்கள்—

(a) இந்த ஆக்டின்படி வெளிப்படையாய் நிர்ணயிக்கப்படவேண்டியிருக்கிற அல்லது நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற சகல விஷயங்களைக் குறித்தும்.

(b) இந்த ஆக்டில் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிராமல், லோகல் போர்டுகளின் ப்ரெஸிடெண்டுகள், வைஸ் ப்ரெஸிடெண்டுகள் அல்லது மெம்பர்களின் எலெக்ஷன்களுக்குச் சம்பந்தப்பட்டுள்ள சகல விஷயங்களைக் குறித்தும்; இதில், மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு நிற்கும் அபேட்சகர்கள் கட்டவேண்டிய டிபாஸிட் (டேவணித்) தொகைகளும், இன்ன திட்டங்களின்படி அந்த டிபாஸிட் தொகைகள் பறிமுதல் செய்யப்படலாமென்பதும் அடங்கும் :

ஆனல், யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டுக்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்காக நிற்கும் அபேட்சகர்களின் விஷயத்தில், கட்டவேண்டியிருக்கும் டிபாஸிட் தொகையானது நூறு ரூபாய்க்கு மேற்படக்கூடாது :

மேலும், யாதொரு லோகல் போர்டுக்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்காக நிற்கும் யாதொரு ஆதிதிராவிட அபேட்சகரையாவது யாதொரு பஞ்சாயத்துக்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்காக நிற்கும் எந்த அபேட்சகரையுமாவது டிபாஸிட் கட்டும்படி கேட்கக்கூடாது.

(c) எலெக்ஷன் சம்பந்தமாய் விசாரணைகள் நடத்துவதைக் குறித்தும் விவாதங்களைத் தீர்மானிப்பதைக் குறித்தும்,

(d) இன்ன திட்டங்களின்மேல் லோகல் போர்டார் சொத்தை எடுத்துக்கொள்ளலாம் அல்லது அப்படிப்பட்ட போர்டுகளுக்குச் சங்கிரமித்தாவது சொந்தமாகவாவது இருக்கிற சொத்தை இன்ன திட்டங்களின்மேல் விற்பனை மூலமாகவாகிலும் கொதுவை மூலமாகவாகிலும் குத்தகைக்கு விடுவது மூலமாகவாகிலும் பரிவர்த்தனை மூலமாகவாகிலும் மற்றப்படியாகிலும் ட்ரான்ஸ்பர் செய்யலாமென்பதைக் குறித்தும்,

(e) ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாயநிதி ஸ்தாபனங்களை நடத்துவதைக் குறித்தும்,

(f) வைத்திய சிகிச்சை சம்பந்தமான காரியங்களுக்காக இன்ன திட்டங்களின்மேல் லோகல் பண்டிலிருந்து க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயம் செய்யவேண்டுமென்பதைக் குறித்தும், கோவாபரேடிவ் பில்டிங் சொஸைடீஸ் என்னும் கட்டிட சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களுக்கு க்ரான்டுகளும் (சகாயத் தொகைகளும்) கடன்களும் இன்ன திட்டங்களின்மேல் கொடுக்கலாமென்பதைக் குறித்தும்,

(g) லோகல் போர்டுகளுக்கும் பிரதேச கவர்ன்மெண்டார் அல்லது அவர்களுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்து இடையிலுள்ள எவையேனும் ஆபீஸுகள் மூலமாய் நடக்கவேண்டி யிருந்தால் அவைகளைக் குறித்தும்,

(h) சிறிதுமட்டிலாவது முழுமையுமாவது லோகல் போர்டுகளின் செலவிலே கட்டப்போகிற கட்டிட முதலிய வேலைகளுக்கு நக்ஷாக்களையும் எஸ்டிமேட்டுகளையும் தயார் செய்வதைக்குறித்தும், எஸ்டிமேட்டுகளுக்கு தொழில் முறையான அல்லது பரிபாலன சம்பந்தமான அனுமதி கொடுக்க லோகல் போர்டுகள் அல்லது கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குள்ள அதிகாரத்தைக் குறித்தும்,

(i) லோகல் போர்டுகள் வைக்கவேண்டிய கணக்குகள், அந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்து பிரசுரஞ் செய்வது ஆகிய இவைகளைக் குறித்து இன்ன திட்டங்களின்மேல் வரி செலுத்துகிறவர்கள் ஆடிட்டர்களுக்குமுன் ஹாஜராகி, புஸ்தகங்களையும் வௌச்சர்களையும் (ஆதரவுச் சீட்டுகளையும்) பார்வையிட்டு, அவைகளில் பதியப்பட்டுள்ள அல்லது விட்டுப்போயுள்ள பாபத்துக்களுக்கு ஆடசேபிக்கலா மென்பதைக் குறித்தும்,

(j) லோகல் போர்டுகள் அனுப்பவேண்டிய வரவு செலவு சம்பந்தமான எஸ்டிமேட்டுகளைக் குறித்தும் ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளைக் குறித்தும் ஸ்டேட்மெண்டுகளைக் குறித்தும் ரிப்போர்ட்டுகளைக் குறித்தும்,

(k) இந்த ஆக்டிலுள்ள காரியங்களை நிறைவேற்றுவதில் கவர்ன்மெண்ட்டு உத்தியோகஸ்தர்கள் லோகல் போர்டுகளுக்கு இன்னவிதமாய் யோசனை சொல்லி உதவிசெய்யவேண்டுமென்பதைக் குறித்தும்,

(l) லோகல் போர்டின் மெம்பர்கள் ப்ரெஸிடெண்டைக் கேள்வி கேட்பதைக் குறித்தும்,

(m) லோகல் போர்டின் சபைகளில் தீர்மானங்களைப் பிரேரேபனை செய்வதைக் குறித்தும்,

(n) லோகல் போர்டுகளாலாவது லோகல் போர்டுகளின் சார்பிலாவது இன்ன திட்டங்களின்மேலும் இன்னவிதமாகவும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படலாமென்பதைக் குறித்தும்,

(o) பாபத்துகளை தீப்புக்கொள்ளாமல் தள்ளிவிடவும், அவைகளுக்காக பொறுப்பு ஏற்கும்படி செய்யவும் ஆடிட்டர்களுக்குள்ள அதிகாரங்களைக் குறித்தும், அந்தப்படி தள்ளிவிடப்பட்ட அல்லது பொறுப்பு ஏற்படும்படி செய்யப்பட்ட தொகைகளை வசூல் செய்வதைக்குறித்தும்,

(p) யாதொரு லோகல் போர்டுக்கு ஜாரியாயிருக்கும் பட்ஜெட்டில் இனவாரியாய்ப் பிரித்து ஏற்படுத்தியுள்ள தொகைகளை ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்புக்கு மாற்றுவதைக் குறித்தும்,

25

(q) ஆடிட்டர்கள் பரிசோதனை செய்வதற்கும் மேல்விசாரணை செய்வதற்குமான உத்தியோகஸ்தர்கள் விசாரணைகள் நடத்தவும் சாட்சிகளை ஸம்மன் அனுப்பி வரவழைத்து விசாரிக்கவும் தஸ்தவேஜுகளை ஹாஜர்படுத்தும்படி கட்டாயப்படுத்தவும் அதிகாரம் கொடுக்கப்பெற்றுள்ள உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களை குறித்தும், (கணக்குகளை) தணிக்கை செய்வது சம்பந்தமாகவும் பரிசோதனை செய்வது சம்பந்தமாகவும் மேல்விசாரணை செய்வது சம்பந்தமாகவுமுள்ள மற்ற விஷயங்களைக்குறித்தும்,

(r) இந்த ஆக்டின்படியாவது வேறே எந்த ஆக்டின்படியாவது விதிக்கப்படும் அல்லது வாங்கப்படும் தொழில் வரியிலிருந்தும், வேறே வரிகள் அல்லது வருமானத்திலிருந்தும் கிடைக்கும் வரும்படியைச் சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள பிரதேச அதிகார சபைகள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(s) இந்த ஆக்டின்படி ஏற்படும் குற்றங்களை விசாரிக்கவேண்டிய மாஜிஸ்ட்ரேட்டுகளின் வகுப்பைக்குறித்தும்

விதிகள் செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்.

(3) யாதொரு விதியைச் செய்கையில், பிரதேச கவர்ன்மெண்டார் அதை மீறி நடந்தால் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப் படுமென்று நிபந்தனை காணலாம்.

குறிப்பு.

செ. **199 (1)**. இந்த ஆக்டுக்கு முரண்படாமலிருக்கும் விஷயங்கள்.—இந்த ஆக்டுக்கு முரண்படாமல் சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக விதிகள் மதராஸ் கவர்ன்மெண்டார் செய்யலாம். 202-வது செக்ஷனில் "இந்த ஆக்டுக்காவது அல்லது வேறே யாதொரு சட்டத்திற்காவது முரண்படாதபடி" என்றிருப்பதால் சகாய சட்டங்கள் இதர சட்டங்களுக்கு முரண்படும்படியிருக்கலாமா என்னும் எண்ணம் உதிக்கலாம். விதிகள் சட்டங்களின் கீழ்செய்யப்பட்டவைகளாகையால் அவைகள் சட்டங்களை அனுசரித்தவைகளாக இருக்கவேண்டும். (பால சுப்பிரமணிய அய்யா எ. சுவர்ணம்மாள், 38 M. 199=21 I.C. 32). சட்ட கொள்கைகளுக்கு விரோதமா யிருந்தாலொழிய சட்டப்படி. செய்யப்பட்ட மற்றைய விதிகளில் மேல் கோர்ட் தலையிடாது (நாகேந்தரலால் தாஸ் எ. சிட்டகாங் முனிசிபல் கமிஷனர், 47 Cal. 426=59 I.C. 340).

சபையுடன்கூடிய கவர்னர் தனக்கு பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் மட்டும் விதிகள் செய்யலாம். (1) செக். 9 (3) படி ஆதிதிராவிடர்களுக்கு ஸ்தானங்கள் ஒதிக்கிவைக்கப்படும் விஷயமாய் விதிகள் செய்யலாம். (2) 11 (2) (4) செக்ஷன் படி தேர்தல்கள் நடத்த அதிகாரம்பெறும் விஷயமாய் செய்யலாம். (3) செக். 11-A படி லோகல் போர்டுக்கு யோக்கியதையுடைய ஒரு மெம்பரை தேர்தல் செய்யாமல் போனால் (4) செக். 19 படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரஸிடெண்ட், வைஸ்பிரஸிடெண்ட் அல்லது மெம்பரின் பெயரை பிரசுரம் செய்யும் விஷயமாய். (5) செக். 31 (a) முதல் (h) வரையில் கூறியிருக்கும் விஷயமாய், (6) செக் 37; 37-A படி கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது சிப்பந்திகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும் விஷயமாய். (7) 47-வது செக்ஷன்படி குறிப்பிட்ட அதிகாரி நியமிக்கும் விஷயமாய். (8) செக். 47 (a) முதல் (i) வரையில் லோகல் போர்டுகள் உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள்-விஷயமாய். (9) செக். 74-A படி அவர்களை சேகரிக்கும் விஷயமாய். (10) 77-வது செக்ஷன்படி டிஸ்டிரிக்ட் போர்ட் புதிய வரி அல்லது சுங்கம் விதிக்கும் விஷயமாய். (11) செக். 110 (5) படி யாத்திரை வாசிகள் வரி வசூலிக்கும் விஷயமாய். (12) செக். 112 படி 5-வது ஷெட்யூலில் கூறியுள்ள செலவுகளைத் தவிர மற்ற செலவுகள் விஷயமாய். (13) செக். 201 கீழ் 2 முதல் 7-வது விதிகள் வரையிலுள்ள விதிகளை மாற்ற, சேர்க்க, எடுத்துவிடும் விஷயமாய். (14) பஞ்சாயத்துகளும், தாலுகா போர்டுகளும் உபசட்டங்கள் செய்யும் விஷயமாய். (15) செக். 226 படி குற்றங்களை ராஜி செய்யும் விஷயமாய். (16) செக். 112 (2) படி இதர விஷயங்களுக்காக விதிகள் செய்யலாம். இவைகள் தவிர இந்த செக்ஷன் (2)-வது உபசெக்ஷனின் கீழிருக்கும் விஷயங்களுக்காகவும் விதிகள் செய்யலாம்.

[இ. பு. ப. 516]

தண்டனை.—8, 9-வது ஷெட்யூல்களில் முதல்காலத்தில் கண்டிருக்கிறவைகளுக்கும், 219, 220-வது செக்ஷனில் கண்டிருக்கிற விஷயங்களுக்கும் அநுசரணையாயில்லாத விதிகள் யிருந்தபோதிலும் அவைகளை மீறி நடப்பவர்களுக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) மதராஸ் கவர்ன்மெண்ட் விதிகள் செய்ய அதிகாரம் பெற்றவர்கள். (2) சட்டத்துக்கு விதிகள் முரண்பாடுபட்டவைகளல்ல. (3) செக். 200-ல் சொல்லியபடி விதிகள் செய்யப்பட்டன. (4) எதிரி விதிகளை மீறி நடந்தார். (5) மீறி நடப்பதற்கு தண்டனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. [இ. பு. ப. 517]

விதிகளைச் செய்வதற்கான நடவடிக்கை முறைகள்.

200. 199-வது பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது - அடியிற் கண்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகும் :—

(a) விதிகளின் மசோதாவை போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரிக்கவேண்டும்.

(b) அப்படிப்பட்ட மசோதாவை மேலேகண்டபடி பிரசுரித்த பிறகு ஆறுவாரம் வரையிலாவது அதற்கப்பால் பிரதேச கவர்ன்மெண்டார் ஏற்படுத்தக்கூடிய யாதொரு தேதிவரையிலாவது அந்த மசோதாவைப்பற்றிப் பின்னும் நடவடிக்கை நடத்தக்கூடாது.

(c) 199-வது பிரிவின்படி செய்யப்பட்ட சகல விதிகளையும் போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரிக்கவேண்டும் ; அந்தப்படி பிரசுரிக்கப்படுவதன்மேல், அவை - இந்த ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

குறிப்பு.

சேக். **200**. சேக். **200 ; 201**-ன்படி விதிகள் பிரசுரம் செய்வதிலுள்ள வித்தியாசம்.—செக்ஷன்கள் 200 ; 201 படி செய்யப்பட்ட விதிகளின் மசோத முதன் முதலில் பிரசுரிக்கப்படவேண்டும். செக். 200 படி மசோதா பிரசுரிக்கப்பட்டு குறிப்பிட்டகாலம் ஆன பின் போர்ட் செயிண்ட் ஜார்ஜ கெஜெட்டியில் முடிவான விதிகள் பிரசுரித்தால் போதும். ஆனால் செக். 201-வது படி செய்யப்படும் விதிகள் சட்ட சபையின் மெம்பர்களின் அங்கீகாரத்திற்காக சட்டசபையின் விவாதத்திற்கு வந்து அது திருத்தப்பட்டு அல்லது திருத்தப்படாமல் சபையின் அங்கீகாரத்தை பெறவேண்டும். [இ. பு. ப. 519]

ஷெட்யூல்களைத் திருத்தவும் அவைகளுடன்யாதொன்றைச் சேர்க்கவும் அவைகளை ரத்து செய்யவும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமும் அதற்கு நடவடிக்கை முறையும்.

201. (1) பிரதேச கவர்ன்மெண்டார்-1-வது, 8-வது, 9-வது ஷெட்யூல்களைத் தவிர இந்த ஆக்டின் ஷெட்யூல்களில் எதையாகிலும் மாற்றியாவது, அதனுடன் யாதொன்றைச் சேர்த்தாவது, அதை ரத்து செய்தாவது விதிகள் செய்யலாம்.

(2) மேலேகண்ட ஷெட்யூல்களில் எதுவாவது இந்த ஆக்டில் உதகரிக்கப்பட்டிருக்கும் இடங்களில் அவ்வித காரணங்களையெல்லாம் (1) குறிப்பிட்ட உட்பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்கொண்டு அந்தந்த காலத்தில் திருத்தப்பட்டபடியுள்ள ஷெட்யூல்களை உதகரிப்பதாக அர்த்தம் பண்ண வேண்டும்.

201-A. 74-A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாவது 201-வது பிரிவின்படியாவது செய்ய உத்தேசிக்கும் விதிகளின் மசோதாவைச் சட்ட நிரூபண சபையாருக்குமுன் வைக்கவேண்டும்; மேலும், அந்த மசோதாவில் எதையாகிலும் திருத்தியோ அல்லது சேர்த்தோ அல்லது எதையும் திருத்தாமலோ அல்லது சேர்க்காமலோ அதைச் சட்டநிருபண சபையார் அங்கீகரித்தாலன்றி மற்றப்படி, ஷை விதிகளைச் செய்யக் கூடாது; ஆனால், அப்படிப்பட்ட அங்கீகாரம் கொடுக்கப்படுவதன்மேல், எந்த உருவத்தில் அந்த விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த உருவத்திலேயே அவைகளைச் செய்யலாம்; அன்றியும் ஷை விதிகள் அந்தப்படி செய்யப்படுவதன்மேல், அவைகளைப் பிரசித்தம் செய்யவேண்டும்; அதன்பிறகு அவை பூர்த்தியாய் அமுலில் இருப்பதுமல்லாமல் செலாவணியுமாகும்.

74-A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும், 201-வது பிரிவின்படியும் விதிகள் செய்வதற்கான நடவடிக்கை முறை.

சகாயச் சட்டங்கள்.

202. டிஸ்ட்ரிக்ட் போர்டார் - இந்த ஆக்டுக்காவது வேறே யாதொரு சட்டத்துக்காவது முரண்படாதபடி அடியிற்கண்ட விஷயங்களுக்காக நிபந்தனை ஏற்படுத்தும் பொருட்டு சகாயச் சட்டங்கள் செய்யலாம்:—

சகாயச் சட்டங்கள் செய்ய டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு அதிகாரம்.

(1) எவைகளுக்காக சகாயச்சட்டத்தைக்கொண்டு நிபந்தனை ஏற்படுத்தவேண்டுமென்று இந்த ஆக்டில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறதோ அல்லது அப்படி ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறதோ அப்படிப்பட்ட சகல விஷயங்களுக்காகவும்;

(1-A) லோகல் போர்டுகளின் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் தங்களுக்கு ஏற்பட்ட அலுவல்களைக் கிரமமாய் நிறைவேற்றுவதற்காக;

(2) இந்த ஆக்டின்படி வரிகளையும் தீர்வைகளையும் வசூலிக்கும் காலத்தைக்குறித்தும் விதத்தைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(3) (a) ஜலசர்ப்பராவுக்காக பொதுவான குளங்களையும் கிணறுகளையும் நீர்க்கால்களையும் இதர இடங்கள் அல்லது கட்டுவேலைகளையும் உபயோகிப்பதற்காக;

(b) பொதுஜனங்கள் ஸ்நானம் செய்வது துணி தோய்ப்பது முதலியவை விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(4) மலஜலபாதை மறைவிடங்கள், மண்ணைத் தூவுவதனால் நாற்றம் போக்கப்படும் கக்கூஸ்கள், (ஆஷ்பிட்) சாம்பற்குழிகள், சாக்கடைக்குழிகள் ஆகிய இவைகளை சுத்தஞ் செய்வதற்காக;

(5) (a) பொதுவான பாட்டைகளை உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அவைகளையாவது அவைகளின் பாகங்களையாவது மூடிவிடுவதற்காகவும்;

(b) பொதுவான பாட்டைகளில் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக அல்லது அவைகளில் குறித்த வகைகளைச் சேர்ந்த போக்குவரத்து மாத்திரமே செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்வதற்காக;

(c) லோகல் போர்டுகளால் வைக்கப்பட்டாவது அவைகளுக்குச் சொந்தமாகவாவதுள்ளவையாய், பொதுவான பாட்டைகளிலுள்ள சாலை மரங்களையும் மரங்களையும் புல்லையும் அந்த பாட்டைகளைச் சேர்ந்த இதர வஸ்துக்களையும் காப்பாற்றுவதற்காக;

(6) (பார்க்குகளையும்) நந்தவனங்களையும் தோட்டங்களையும் இதர பொதுவான அல்லது லோகல் போர்டாரிடித்தில் சங்கிரமித்திருக்கிற இடங்களையும் உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(7) ஹோட்டல்களையும் தங்குவதற்கான இடங்களையும், போர்டிங் ஹௌஸ் என்னும் போஜன விடுதிகளையும், சத்திரங்களையும், இளைப்பாறும் இடங்களையும், எமிக்ரேஷன் டெப்போக்களையும், சிற்றுண்டிச்சாலைகளையும், சாப்பாட்டு வீடுகளையும், கேவ் என்னும் சிற்றுண்டிச்சாலைகளையும், சிற்றுண்டியும் போஜனமும் வழங்கப்படும் இடங்களையும், காபி ஹோட்டல்களையும், தங்கியிருப்பதற்காவது, யாதொரு ஆகாரம் அல்லது பானத்தை உட்கொள்வதற்காவது பொது ஜனங்களுக்கு இடம் கொடுக்கப்படுகிற யாதொரு வளவையும் ஒழுங்குபடுத்துவதற்காக;

(8) 7-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்ட காரியங்களில் எதற்காவது உபயோகிக்கப்படும் இடங்களையும் அவைகளில் நடத்தப்படும் யாதொரு வர்த்தகம் அல்லது வஸ்துக்கள் தயார்செய்யும் வேலையையும் சுகாதார சம்பந்தமாய் மேல்விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும்;

(9) (a) ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும் பிரேதங்களைத் தோலையுரிப்பதற்காகவும் துண்டுபோடுவதற்காகவும் உபயோகிக்கப்படும் இடங்களையும் மேல்விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும்;

(b) (பிராணிகளைக்) கொல்லும் முறைகளைக்குறித்து மேல்விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும்;

(c) லோகல் போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு ஆடு மாடு முதலியவை அடிக்கும் தொட்டியில் தொழில் நடத்திக்கொண்டுவரும் கசாப்புக்காரர்களை மேல்விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும்;

(10) (a) பொதுவான மார்க்கெட்டுகள் சொந்த மார்க்கெட்டுகள், அவைகளிலுள்ள கடைகள், இதர இடங்கள் ஆகிய இவைகளைப் பார்வையிடுவதற்காக;

(b) அவைகளை உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அவைகளின் சுகாதார ஸ்திதியைப்பற்றி மேல்விசாரணை செய்வதற்காகவும்;

(c) முகத்தலளவையினலாவது எடுத்தலளவையினலாவது ஒவ்வொன்றாக எண்ணியாவது துண்டுதுண்டாகவாவது வஸ்துக்களை விற்கும் விதத்தை நிர்ணயிப்பதற்காக;

(d) நிஷ்கரிஷையான எடுத்தலளவைக் கருவிகளையும் தராசுகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் நிர்ணயிப்பதற்காகவும் ஏற்படுத்துவதற்காகவும், வேறே எவையேனும் கருவிகளை உபயோகிப்பதைத் தடுப்பதற்காகவும்;

(e) மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திக்கொண்டுவருகிற ப்ரோக்கர்களுக்கும் (தரகர்களுக்கும்) கம்மிஷன் ஏஜென்டுகளுக்கும் எடைபோடுகிறவர்களுக்கும் அளப்பவர்களுக்கும் லைஸென்ஸ் கொடுப்பதற்காகவும் அவர்களை மேல்விசாரணை செய்வதற்காகவும்;

(f) அனுரோக்கியமான மாமிசம், மீன் அல்லது ஆகாரவஸ்துக்களை விற்கவொட்டாதபடியாவது விற்பனைக்குக் காட்டிவைக்க வொட்டாதபடியாவது தடுப்பதற்காகவும், மனிதர்களின் ஆகாரத்துக்காக உத்தேசிக்கப்பட்ட வஸ்துக்கள் வைக்கப்படும் அல்லது விற்கப்படும் கடைகளை நன்ருய் மேற்பார்வையிடுவிப்பதற்காவும் அவைகளில் சுகாதார ஒழுங்கு ஏற்படுத்துவிப்பதற்காகவும்;

(11) புதைக்குமிடங்களைக்குறித்தும் தகனஞ்செய்யுமிடங்களைக்குறித்தும் பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இதர இடங்களைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(12) மனிதர்களுக்காவது பிராணிகளுக்காவது அபாயகரமான வியாதிகள் காணுவதைத் தடுப்பதற்காக;

(13) கட்டாயமாய் அம்மைகுத்தும்படி நிர்ப்பந்திப்பதற்காக;

(14) தீ பிடிப்பதை தடுப்பதற்காக;

(15) பொதுவான பாட்டைகளிலாவது நந்தவனங்களிலாவது விளம்பரங்கள் ஒட்டக்கூடாதென்று தடுப்பதற்காகவும் அவைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்;

(16) பொதுவாக சுத்தமாயும் பத்திரமாயும் ஒழுங்காயும் இருக்கும்படி பார்ப்பதற்காகவும் இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு விஸ்தீரணத்தின் பரிபாலனம் நன்ருயிருக்கும்படி பார்ப்பதற்காகவும் அது க்ஷேமமாயிருக்கும்படி செய்வதற்காகவும், இந்த ஆக்டின் சகல காரியங்களையும் நிறைவேற்றுவதற்காகவும்.

சகாயச்சட்டங்களை மீறினுல் தண்டனை.

203. யாதொரு சகாயச்சட்டத்தை ஏற்படுத்துகையிலே, அதை மீறி நடந்தால்—

(a) ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும், அப்படி மீறி நடந்துக்கொண்டேபோகும் விஷயத்தில் முதல் தடவை மீறி நடந்ததற்காகக் குற்றஸ்தாபனையான பிறகு அப்படி நடந்துக்கொண்டே போகிற நாள் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமுமாவது,

(b) அப்படி மீறி நடப்பதை நிறுத்தவேண்டுமென்று யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டிடத்திலிருந்து நோடீஸ் வந்த பிறகு அது நடந்துக்கொண்டேயிருக்குமானுல், அப்படி அது நடக்கும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாவது

விதிக்கப்படத்தக்கதாகுமென்று டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

சகாயச்சட்டங்கள் செய்ய தாலுகா போர்ட் அல்லது பஞ்சாயத்துக்குள்ள அதிகாரம்.

203-A (1) இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் செய்யக் கூடிய விதிகளுக்குட்பட்டு, யாதொரு தாலுகா போர்ட் அல்லது பஞ்சாயத்தானது - அது எந்த காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதோ அவைகளில் எதையேனும் நிறைவேற்றும் பொருட்டு சகாயச்சட்டங்கள் செய்யலாம்.

(2) அந்த சகாயச்சட்டங்கள் - இந்த ஆக்டுக்காவது வேறே யாதொரு சட்டத்துக்காவது 202-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் போர்டார் செய்யும் யாதொரு சகாயச்சட்டத்துக்காவது முரண்படாமல் இருக்கவேண்டும்.

(3) யாதொரு சகாயச்சட்டத்தைச் செய்யும்போது, அதை மீறி நடக்கும் யாதொரு நபரானவர் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அல்லது அப்படி மீறி நடந்துகொண்டேபோகும் விஷயத்தில் முதல் தடவை மீறி நடந்ததற்காகத் தண்டனை விதிக்கப்பட்ட பிறகு அப்படி மீறி நடந்துகொண்டேபோகிற நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து நிஷ்கரிஷை செய்யக்கூடிய தொகையை தண்டனையாகச் செலுத்த உட்பட்டவராவாரென்று தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து நிபந்தனை ஏற்படுத்தலாம்.

குறிப்பு.

செக். 203-A (1). எந்த காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த காரியத்தை நிறைவேற்ற.—பஞ்சாயத்துகளும், தாலூகா போர்டுகளும் தாங்கள் நிறைவேற்றக் கூடிய காரியங்கள் விஷயமாய் உபசட்டங்கள் செய்துகொள்ளலாம். மதராஸ் கவர்ன்மெண்டார் இது விஷயமாய் செய்திருக்கும் விதிகளை அனுசரித்து பஞ்சாயத்துகளும், தாலூகா போர்டுகளும் உபசட்டங்கள் செய்யவேண்டும்.

செக். 203-A (2).—ஜில்லா போர்டுகளினால் செய்யும் உபசட்டங்கள் இந்த ஆக்டு அல்லது இதர ஆக்டுகளுக்கு முரண்பட்டவைகளாக இருக்கக்கூடாது. தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள் செய்யும் உபசெக்ஷன்கள் இந்த ஆக்டு, இதர சட்டம், 202-வது செக்ஷன்படி ஜில்லா போர்டு செய்யும் உபசட்டங்கள் இவைகளுக்கு முரண்பட்டவைகளாக இருக்கக்கூடாது. "ஜில்லா போர்டினால் செய்யப்பட்ட உபசட்டம்" என்றால் மதராஸ் மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லா போர்டுகளினால் செய்யப்பட்ட உபசட்ட மென்பதல்ல; பஞ்சாயத்து அல்லது தாலூகா போர்ட் எந்த ஜில்லா போர்டுக்கு கீழ் இருக்கிறதோ அந்த ஜில்லா போர்டைக் குறிக்கும்.

தண்டனை.—தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்தின் உபசட்டத்தை மீறி நடந்தால் ரூபாய் 15-ம், தவறி நடக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 5-ம் அபராதம் விதிக்கலாம்.

சாக்ஷியம், ருசு.—(1) பஞ்சாயத்து அல்லது தாலூகா போர்டால் உபசட்டம் செய்யப்பட்டது. (2) இந்த செக்ஷனை அனுசரித்தது. (3) எதிரி அதை மீறிநடந்தார்.

[இ. பு. ப. 525]

204. சகாயச்சட்டங்களைச் செய்வதற்காவது மாற்றுவதற்காவது முன்னே டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும், தாலூகா போர்டாராகிலும், பஞ்சாயத்தாகிலும் செய்ய உத்தேசித்திருக்கும் சகாயச் சட்டங்களுக்கும் மாறுதல்களுக்கும் ஒரு மசோதாவை, இன்னதேதியிலாவது அதற்குப் பிறகாவது அந்த மசோதாவைப் பற்றி ஆலோசனை செய்யப்படுமென்று குறிப்பிட்டு ஒரு நோடீஸ் சகிதமாய் பிரசித்தம் செய்யவேண்டும்; மேலும், அவர்கள் அந்த சகாயச்சட்டங்களையாவது மாறுதல்களையாவது செய்வதற்குமுன்னே, அப்படிப் பட்ட மசோதா விஷயமாய் அதில் அக்கறையுள்ள யாதொரு நபர் மேலேகண்டபடி குறிப்பிடப்பட்ட தேதிக்குமுன் செய்யக்கூடிய யாதொரு ஆட்சேபனை அல்லது சொல்லக்கூடிய யாதொரு ஆலோசனையை வரப்பெற்றுக்கொண்டு அதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

சகாயச்சட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கை.

குறிப்பு.

செ. 204.—இதில் கால அளவைக் குறிப்பிடாமல்போனபோதிலும், ஆக்ஷேபனை அல்லது ஆலோசனை சொல்ல போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும். செ. 200-ல் சொல்லியபடி 6 வார அவகாசம் கொடுக்கலாம். உபசட்டங்களில் திருத்தங்கள் செய்ய வேண்டுமாயினும், முதல் முதல் உபசட்டங்கள் செய்யப்படும்போது எம்மாதிரி அநுஷ்டிக்கப் பட்டதோ அம்மாதிரியான முறைகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று இந்த செக்ஷன் கூறுகிறது. அக்கறையுள்ள நபர்கள் ஆலோசனை அல்லது ஆக்ஷேபனைகளை சொல்ல போதுமான அவகாசம் கொடுக்கப்படவேண்டும்.

[இ பு. ப. 526]

சகாயச்சட்டங்கள் பிரதேச கவர்ன்மெண்டார் ஊர்ஜ்ஜிதப்படுத்துவது.

205. டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது தாலூகா போர்டாராவது பஞ்சாயத்தாவது செய்யும் எந்த சகாயச்சட்டமும் அல்லது அவர்கள் எந்த சகாயச்சட்டத்தை ரத்து செய்வது அல்லது மாற்றுவதும் பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு ஊர்ஜ்ஜிதப்படுகிறவரையில் செலாவணியாகமாட்டாது.

சகாயச்சட்டங்கள் செய்வதற்கும் அவைகளைப் பிரசித்தஞ் செய்வதற்குமான நடவடிக்கை முறை.

205-A. (1) டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டார் செய்யும் யாதொரு சகாயச்சட்டமாவது அவர்கள் யாதொரு சகாயச்சட்டத்தை ரத்து செய்வது அல்லது மாற்றுவதாவது கிரமமாய் ஊர்ஜ்ஜிதப்படுத்தபட்ட பிறகு இங்கிலிஷில் ஜில்லா கெஜெட்டில் பிரசுரிக்கப்படவேண்டும்.

(2) யாதொரு பஞ்சாயத்தால் அல்லது யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் செய்யப்பட்டு யாதொரு கிராமத்துக்குச் சம்பந்தபட்டதாயுள்ள யாதொரு சகாயச்சட்டமாவது அவர்கள் யாதொரு சகாயச்சட்டத்தை ரத்து செய்வது அல்லது மாற்றுவதாவது கிரமமாய் ஊர்ஜ்ஜிதப்படுத்தப்பட்ட பிறகு, இந்த ஆக்டின்படி வேறே யாதொரு முறை நிர்ணயிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, பிரஸ்தாப பிரதேசத்திலே வழங்கும் பிரதான சுதேச பாஷையில் எழுதி அல்லது மொழிபெயர்த்து பஞ்சாயத்து ஆபிஸில் வைக்கப்படவேண்டும்; மேலும், அதன் நகல் ஒன்றை ஷை ஆபிஸிலும் பஞ்சாயத்து கட்டளையிடக்கூடிய இதர இடங்களிலும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும்படியான ஓர் இடத்தில் ஒட்டிவைக்கவேண்டும். அன்றியும், ஷை நகல் அந்தப்படி ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறதென்றும் பஞ்சாயத்து ஆபிஸில் அசலைப் பார்வையிடக்கூடுமென்றும் தண்டோரா மூலமாகவாவது மற்றப்படியாவது கிராமம் முழுவதும் பஹிரங்கமாய்ப் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

(3) டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும் தாலூகா போர்டாராகிலும் பஞ்சாயத்தாகிலும் செய்யும் யாதொரு சகாயச்சட்டமாவது அவர்கள் யாதொரு சகாயச்சட்டத்தை ரத்து செய்வது அல்லது மாற்றுவதாவது சந்தர்ப்பதுக்கேற்றபடி (1) அல்லது (2) குறிப்பட்ட உட்பிரிவின்படி அந்த பிரகாரம் பிரசுரிக்பட்டு மூன்று மாதமான பிறகு செலாவணியாகத் தொடங்கும்.

டிஸ்ட்ரிக்ட் முயுனிஸிபாலிடிகளாக்டைப் பிரயோகப்படும்படி செய்வது.

டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டையும் அந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளையும் பஞ்சாயத்துகளுக்காவது லோகல் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட இதர விஸ்திரணங்களுக்காவது பிரயோகப்படும்படி செய்வது.

206. பிரதேச கவர்ன்மெண்டார் - பஞ்சாயத்தும் டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் கேட்டுக்கொள்வதன்மேல் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபலிடிகளாக்டின் எந்த நிபந்தனைகளையாவது அதன்படி செய்யப்பட்ட எந்த விதிகளையாவது கிராமத்துக்காகிலும் அதிலுள்ள யாதொரு குறிப்பிட்ட விஸ்தீர்ணத்துக்காகிலும் பிரயோகப்படும்படி செய்வதுடன், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற எவையேனும் நிர்ப்பந்தங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்பட்டு அதைப் பிரயோகப்படுத்தவேண்டுமென்று பிரசித்தஞ் செய்யலாம்.

13-ம் அத்தியாயம்.

தண்டனைகள்.

ஷெட்யூல்களில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளைக் குறித்த பொதுவான நிபந்தனைகள்.

207. (1) எவராவது—

(a) 8-வது ஷெட்யூலின் முதல் கலத்தில் குறிப்பிட்டுள்ள எவையேனும் பிரிவுகளிற்கண்ட யாதொரு நிபந்தனையை மீறினாலும்,

(b) குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினாலும்,

(c) ஷை பிரிவுகளில் எதன்படியாவது அதை அனுசரித்தாவது சட்டப் பிரகாரம் தமக்குக் கொடுக்கப்படும் யாதொரு கட்டளையின்படியாவது செய்யப்படும் யாதொரு உத்தரவின்படியாவது நடக்கத் தவறினாலும்

அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், ஷை ஷெட்யூலின் நான்காவது கலத்தில் இது விஷயமாகக் கண்ட தொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

(2) எவராவது—

(a) 9-வது ஷெட்யூலின் முதல் கலத்தில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளிற்கண்ட யாதொரு நிபந்தனையை மீறினதற்காகவாகிலும்,

(b) குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினதற்காகவாகிலும்,

(c) ஷை பிரிவுகளில் எதன்படியாவது அதை அனுசரித்தாவது சட்டப் பிரகாரம் தமக்குக் கொடுக்கப்படும் யாதொரு கட்டளையின்படியாயினும் செய்யப்படும் யாதொரு உத்தரவின்படியாயினும் நடக்கத் தவறினதற்காகவாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு, சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை நிபந்தனையை மீறிக்கொண்டே வந்தாலும் ஷை கட்டளை அல்லது உத்தரவின்படி நடக்காமல் அசட்டைசெய்துக்கொண்டேவந்தாலும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், இதற்குமுன் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அந்தப்படி அவர் நடந்துக்கொண்டுவரும் ஒவ்வொரு தினத்திற்கும் ஷை ஷெட்யூலின் நான்காவது கலத்தில் அது விஷயமாகக் கண்டிருக்கும் தொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

விவரணம்.—8-வது ஷெட்யூலிலும் 9-வது ஷெட்யூலிலும் "விஷயம்" என்னும் தலைப்புள்ள மூன்றுவது கலத்திலிருக்கும் பதிவுகள்-முதலாவது இரண்டாவது கலங்களிற்கண்ட பிரிவுகள், உட்பிரிவுகள் அல்லது பகுதிகளில் விவரித்திருக்கும் குற்றங்களின் அர்த்தமாகவாவது, ஷை பிரிவுகள், உட்பிரிவுகள் அல்லது பகுதிகளின் பொழிப்பாகவாவது கூட இருக்கவேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை; ஆனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த பிரிவுகள் உட்பிரிவுகள் அல்லது பகுதிகளின் விஷயத்தை உதகறிப்பதற்காக மாத்திரம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு.

செ. 207. தண்டனைகள்.—8, 9-வது ஷெட்யூல்களில் சொல்லியுள்ள குற்றங்களுக்கு தண்டனைகள் இந்த செக்ஷனில் அடங்கியிருக்கிறது. மேற்கூறிய ஷெட்யூல்களில் சொல்லியிருக்கும் தண்டனைப்பற்றி மட்டுமல்லாமல், இந்த சட்டம், இதன் உபசட்டம், விதி, உபவிதி இவைகளை மீறி நடப்பதாகிய குற்றத்திற்கும் தண்டனை விதிக்கப்படுவதையும் இந்த செக்ஷன் கூறுகிறது. (1) 58-வது செக்ஷனில் கூறியுள்ளபடி எலெக்ஷன் சம்பந்தமான இரகசியங்களை வெளியிடுதல். (2) 164-வது செக்ஷன்படி லோகல் போர்டின் நிலங்களை போர்டின் அநுமதியில்லாமல் அநுபவித்து வருவது. (3) 199 (3) செக்ஷன்படி செய்யப்பட்டுள்ள விதிகளை மீறுவது. (4) 203 (5) செக்ஷன்படி செய்யப்பட்ட உபவிதிகளை மீறுவது. (5) 219 (6) செக்ஷன்படி லைசன்ஸ் பெறாமலிருப்பது. (6) 220 (3) செக்ஷன்கீழ் நியாயப்படி சாதாரா செய்யப்பட்ட நோடீசை மீறி நடப்பது முதலிய குற்றங்களுக்குள்ள தண்டனையும் இந்த செக்ஷன் குறிக்கிறது. [இ. பு. ப. 530]

பிராது தொடர காலவரை.—223-வது செக்ஷனை பார்க்கவும். "மூன்று மாதத்திற்குள்" என்னும் தலைப்பின் கீழ் பார்க்கவும். [இ. பு. ப. 530]

தண்டனை விதிக்கும் சட்டமும், பின்னோக்கு பயனும்.—தண்டனை விதிக்கும் சட்டத்திலுள்ள தண்டனை விதி ஏற்கனவே நடந்துபோன காரியத்திற்கு குறிக்காது. (நகாபீ. நாக். வி. எ. அரசர், A.I.R. 1929 R. 278).

நியாயஸ்தலங்கள் (கோர்டுகள்).—கிரிமினல் வழக்க சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கோர்டுகளே இந்த வியாஜ்ஜியங்களை விசாரிக்கலாமே தவிற, 1895ஞு மதராஸ் பொது கிளாஸ் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கிராம கோர்டுகள் விசாரிக்கக்கூடாது இந்த சட்டத்தில் கிரிமனல் பிராதுகளை யார் விசாரிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் கூறப்படாததினால் சாதாரணமாய் மாஜிஸ்டிரேட்டுகள்தான் விசாரிக்கவேண்டும். கடினமான விஷயங்களையும் சட்ட கலப்புமுள்ள வியாஜ்ஜியங்களை கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் விசாரிக்கவிடுவது சரியானதல்ல. இந்த சட்டம் 159-வது செக்ஷனில் கூறியுள்ள பிரச்சனை விவாதங்களைப் போலுள்ள சிக்கலான விஷயங்களை திருப்திகரமாக முடிவு கூற அவர்களை எதிர்பார்ப்பது பிசகு (பப்ளிக் ப்ராசிக்யூட்டர் எ. வரதராஜுலு நாயுடு, A.I.R. 1925 Mad. 64=81 I.C. 894). ஜாதி, மதம், ராஜீய கொள்கை இவைகளை விட்டு நியாயத்தை அனுசரித்து போகவேண்டிய ஜட்ஜ்ஜிற்கு ராஜீயகக்ஷி யோசனையுண்டாயின் இதை விட கேவலமானது கிடையாது. (அரசர் எ. வில்ஸன், A.I.R. 1926 Cal. 895). [இ. பு. ப. 531]

செ. 207 (1). குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.—இந்த ஆக்டில் குற்றத்தைப்பற்றி யார் விசாரிக்கவேண்டுமென்று வியக்தமாய் சொல்லப்படவில்லையாதலால் சாதாரண மாஜிஸ்டிரேட்டுகள்தான் குற்றங்களை விசாரிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

குற்றவாளிகளின் உரிமை.—"குற்றம் சாட்டப்பட்ட விஷயம்" எழுத்தளவே சரியானதாயினும், சட்டத்தின் பொருளுக்கும் நடை முறைக்கும் பொருத்தமானதல்ல என்று எதிர்வாதாடலாம். (ராமசந்தரர் எ. கௌரிநாத், 53 Cal. 492=A.I.R. 1926 Cal. 927). [இ. பு. ப. 533]

பொது ஜன திரேகாரோக்கியம் அல்லது சௌகரியங்களை ஆலோசித்து செய்யப்பட்ட சட்டங்கள், விதிகள், உபவிதிகள் இவைகளை மீறி நடப்பது குற்றமாகும். லோகல் போர்ட் ஆக்டின் கீழ் தோற்றத்திற்கு மட்டும், பொது ஜன சௌகரியத்தை உத்தேசித்து செய்யப்பட்டவைகளை மீறுவது, குற்றமாகுமே யன்றி உண்மையில் கெட்ட நடவடிக்கையான குற்றமாக மாட்டாது (ரௌதகன்னி, 9 M. 431 (437)). [இ. பு. ப. 533]

208. (1) எவராகிலும் இந்த ஆக்டின்படியாவது அதை அனுசரித்துக் செய்யப்படும் விதிகளின்படியாவது யாதொரு லோகல் போர்டின் மெம்பராக உத்தியோகம் வகிப்பதற்குத் தமக்குத் பாத்தியதை இல்லையென்றாகிலும், அந்த உத்தியோகம் வகிப்பதற்குத் தமக்குள்ள பாத்தியதை அற்றுப்போய்விட்டதென்றாகிலும் தெரிந்திருந்து அப்படிப்பட்ட மெம்பராகப் பிரவர்த்தித்தால், அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன் மேல், அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்காகவும் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

யோக்கியதையற்றிருக்கும்போது யாதொரு லோகல் போர்டின் மெம்பராகவோ ப்ரெஸிடெண்டாகவோ வைஸ்ப்ரெஸிடெண்டாகவோ பிரவர்த்தித்தால் தண்டனை.

(2) எவராகிலும் இந்த ஆக்டின்படியாவது அதை அனுசரித்துச் செய்யப்படும் விதிகளின்படியாவது யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்ட் அல்லது அங்காமியான ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ்ப்ரெஸிடெண்டின் உத்தியோகத்தை வகிப்பதற்கோ அல்லது அந்த உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்வதற்கோ தமக்குப் பாத்தியதை இல்லையென்றாகிலும், அந்த உத்தியோகம் வகிப்பதற்கோ அந்த அலுவல்களைச் செய்வதற்கோ தமக்குள்ள பாத்தியதை அற்றுப்போய்விட்டதென்றாகிலும் தெரிந்திருந்து ஷை ப்ரெஸிடெண்டாகவாவது அங்காமியான ப்ரெஸிடெண்டாகவாவது வைஸ்ப்ரெஸிடெண்டாகவாவது பிரவர்த்தித்தாலும் அப்படிப்பட்ட உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்தாலும், அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்காகவும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

(3) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்ட் அல்லது அங்காமியான ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடெண்டானவர் அப்படி ப்ரெஸிடெண்டாகவோ அங்காமியான ப்ரெஸிடெண்டாகவோ வைஸ் ப்ரெஸிடெண்டாகவோ தம்முடைய உத்தியோக காலம்முடிவாகிறஒவ்வொரு விஷயத்திலும் அப்படி முடிவானவுடனும், வைஸ் ப்ரெஸிடெண்டின் விஷயத்தில் ப்ரெஸிடெண்ட் கேட்பதன்மேலும், தம்முடைய சுவாதீனத்தில் அல்லது மேல்விசாரணையில் இருக்கிற அல்லது வந்திருக்கிற அந்த லோகல் போர்டைச் சேர்ந்த எந்த தஸ்தவேஜுகளையாவது அதனிடம் சங்கிரமித்திருக்கும் அல்லது அதற்குச் சொந்தமாயிருக்கும் எந்த பணத்தையாவது வேறே சொத்துக்களையாவது உத்தியோகத்தில் தமக்குப்பின் வருபவரிடத்திலாகிலும் நிர்ணயிக்கப்பட்ட வேறே அதிகாரியினிடத்திலாகிலும் ஒப்புவிக்கத் தவறிப்போனால், அப்படிப்பட்ட ப்ரெஸிடெண்ட் அல்லது அங்காமியான ப்ரெஸிடெண்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடெண்டானவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்காகவும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

குறிப்பு.

செ. 208. பொது.—ஒருவர் மெம்பராயில்லாதபோதும், மெம்பராயிருக்க அருகதையற்றவரானபோதும், அல்லது பிரசிடெண்டாக நடந்துகொண்டபோதும் அல்லது பிரசிடெண்டின் கடமைகளை நிறைவேற்றும்போதும், பிரசிடெண்டானவர் தான் பிரசிடெண்டாயிருக்க அருகதையற்றவராயிருந்து பிரசிடெண்டாக நடித்தபோதும், அல்லது மாஜி பிரசிடெண்ட் தனக்கு அடுத்தபடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடெண்டிடம் தஸ்தவேஜுகளை ஒப்புவிக்க மறுத்தபோதும் இந்த செக்ஷன் அமுலுக்கு வரும். மெம்பராகவோ, பிரசிடெண்டாகவோ இருக்க அருகதையில்லாதவர் அம்மாதிரி நடந்ததாக ஏற்படவேண்டும். அம்மாதிரி நடப்பவர்களின்மேல் பிரியாது தொடர கிரிமினல் நடவடிக்கை சட்டம் 197-வது செக்ஷன்படி அனுமதி வேண்டியதில்லை. இந்த செக்ஷன்கீழ் பிராது கொடுக்க கால அளவு மூன்று மாதம். [இ. பு. ப. 538]

209. லோகல் போர்டின் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது தாமாகவேயாகிலும் கூட்டு பாகஸ்தர் மூலமாகவாகிலும் வேலைக்கு வைத்திக்கொண்டிருப்பவர் அல்லது ஊழியக்காரர் மூலமாகவாகிலும் நேராகவேனும் மற்றப்படியேனும் லோகல் போர்டாரோடாவது அவர்களாலாவது அவர்கள் சார்பிலாவது செய்துக்கொள்ளப்பட்ட யாதொரு ஒப்பந்தத்திலோ அல்லது ஏற்படுத்தப்பட்ட யாதொரு உத்தியோகத்திலோ யாதொரு சுயப்பிரயோசனத்தையேனும் சுயப்பிரயோசன சம்பந்தமான பங்கையேனும் தெரிந்திருந்து அடைவராகில், அவர் இந்தியன் பினல் கோட் 168-வது பிரிவின்படிக்கான குற்றம் செய்தவராக எண்ணப்படுவார்.

ஒப்பந்தம் அல்லது வேலையில் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது சுயப்ரயோசனம் அடைந்தால் தண்டனை.

ஆனல், யாதொரு கம்பெனியில் பங்குக்காரராகவாவது மெம்பராகவாவது இருக்கும் காரணத்தினல், எந்த நபரும்-அவர் அந்த கம்பெனியின் டைரெக்டாராயிருந்தாலொழிய, அப்படிப்பட்ட கம்பெனிக்கும் லோகல் போர்டாருக்கும் ஏற்பட்டிருக்கும் யாதொரு ஒப்பந்தத்தில் பற்றுள்ளவராக எண்ணப்படமாட்டார்.

மேலும், யாதொரு லோகல் போர்டாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் எந்த உபாத்தியாயராவது தமக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது தமக்குப் பங்கு அல்லது பற்றுள்ள யாதொரு நிலம் அல்லது கட்டிடத்தை யாதொரு கல்விச்சாலையின் காரியத்துக்காக உபயோகித்துக் கொள்வது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியைப் பெற்று லோகல் போர்டாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டால், அவருக்கு இந்தப் பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

குறிப்பு.

செ. 209.—ரிஜிஸ்டர் செய்யப்படாத ஒரு கம்பெனியின் அங்கத்தினர் அதன் பாகஸ்தாராவர். இந்த ஆக்ட் 6 (3)-வது செக்ஷனில் கம்பெனி என்பது விளக்கப்பட்டிருக்கிறது. உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தி அந்த கம்பெனியின் டைரெக்டாராகமாட்டார். ஏனெனில் டைரெக்டர் கம்பெனியின் மேற்பார்வை பார்த்து அங்கத்தினர்களுக்கு ஜவாப் சொல்ல வேண்டியவர், மெம்பர்களோ கம்பெனியின் லாபத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியவர்களேயொழிய அதன் நிர்வாகத்தில் ஒரு பொறுப்புமில்லை, ஆகையால் உத்தியோகஸ்தர் மெம்பராயிருக்கலாம். லோகல் போர்டின் உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தி என்பது 67-வது செக்ஷனில் சொல்லியுள்ள உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தியைக் குறிக்கும்.

[இ. பு. ப. 540]

ப்ரெஸிடெண்டையாவது அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்றவரையாவது அக்கிரமமாய்த் தடுப்பது.

210. லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டையாவது எவருக்கு ப்ரெஸிடெண்ட் யாதொரு நிலம் அல்லது கட்டிடத்துக்குள்ளாகிலும் அதன்மேலாகிலும் பிரவேசிப்பதற்கு தமக்குள்ள அதிகாரத்தைச் சட்டப்படி கொடுத்திருக்கிறரோ அப்படிப்பட்ட யாதொரு நபரையாவது அதற்குள்ளாயினும் அதன்மேலாயினும் பிரவேசிப்பதற்கு அவருக்கு சட்டப்படிக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தவொட்டாமல் தடுக்கும் ஒவ்வொரு நபரும்-இந்தியன் பினல்கோட் 341-வது பிரிவின்படி குற்றம் செய்தவராக எண்ணப்படுவார்.

குறிப்பு.

செ. 210.—சட்டத்தில் கூறியுள்ள சட்டரீதியான அதிகாரத்தை செலுத்துவதற்காக பிரஸிடெண்ட் சொந்தக்காரரின் கட்டிடத்திற்குள் பிரவேசிக்கலாம். அப்படி யில்லையாயின் பிரஸிடெண்டை போகவிடாமல் தடுத்துவிடலாம்.

தடுத்தலானது பலாத்காரத்துடன் கூடியதாயிருக்கவேண்டும். வாயால் தடுத்தல் அல்லது எதிர்த்தல் சட்டப்படி தடுக்கலாகாது. (கஸ்தூரி நாகம்மா, 1 Weir. 339).

சங்கதி தெரிவிக்காவிட்டாலும் பொய்யான சங்கதி தெரிவித்தாலும் அதற்கு தண்டனை.

211. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின் படிக்காவது இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடீஸ் அல்லது வேறே கட்டளையின்படிக்காவது யாதொரு சங்கதி சவதரிக்கவேண்டிய எந்த நபராகிலும்—

(a) அதை சவதரிக்காவிட்டாலும்,

(b) தெரிந்திருந்து பொய்யான சங்கதி சவதரித்தாலும் அப்படிப்பட்ட நபர் 100 ரூபாய்க்கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவார்.

குறிப்பு.

செ. **211**. போது.—இது மிகவும் முக்கியமான செக்ஷன். இந்த ஆக்ட்படி சங்கதி சவதரித்து தெரிவிக்கவேண்டிய பொறுப்பு பிரசிடெண்ட், அல்லது வைஸ்-பிரசிடெண்ட் அல்லது அந்த போர்டின் உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தி இவர்களிடமுடையது. இந்த சட்டத்தின் கீழ் விஷயங்களை அறிந்துகொள்ளும்பொருட்டு நோடீஸ் கொடுத்தால் அது இதார்களை காட்டும். 21-வது செக்ஷன்படி ஷெட்யூல் 2 ரூல் 3-னின் கீழ் மீடிங் நோடீஸ் கொடுக்கவேண்டியவர் பிரசிடெண்ட் அவர் வேண்டுமென்று சில மெம்பர்களுக்கு நோடீஸ் அனுப்பி சிலருக்கு நோடீஸ் அனுப்பாவிட்டால் அந்த மெம்பர்களுக்கு சங்கதி தெரிவிக்காத குற்றம் செய்தவராவார். இந்த ஆக்ட் 227-A படியும் கிரிமினல் நடவடிக்கை சட்டம் 197-படியும் சாக்ஷன் பெருமல் பிராது, பிரசிடெண்ட், மெம்பர்கள் பேரில், தொடரலாமா என்பது 12, 26-வது செக்ஷன்களின் வியாக்யானத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த செக்ஷன் ஓட்டர் ஜாப்தா தயாரிப்பவர்களையும் எலக்ஷன் நடத்துபவர்களையும் பாதிக்கும். 138-வது செக்ஷன் படி வீட்டின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் தாலூகா போர்ட் பிரஸிடெண்ட் அல்லது கிராம பெரியதனக்காரருக்கு சங்கதி தெறிவிக்கவேண்டும். 4-வது ஷெட்யூல் 20-வது விதிப்படி ஜில்லா கலெக்டருடைய அனுமதியின்மேல் ஒரு கிராமாதிகாரியை அந்த கிராமத்திலுள்ள வீடுகளின் லிஸ்ட் தயார் செய்துகொடுக்கும்படி லோகல் போர்ட் பிரஸிடெண்ட் கேழ்க்கலாம். 231-வது செக்ஷன்படி ஒரு லோகல் போர்ட் பிரஸிடெண்ட் கர்ணங்களையும், பெரியதனக்காரர்களையும் ஸ்டேட்மெண்டுகள் அல்லது விவரக்கணக்குகள் சவதரித்து கொடுக்கும்படி கேட்கலாம். நியாயப்படி கேட்கப்பட்டவைகளை சவதரித்து கர்ணம் கொடுக்க கட்டாயப்பட்டவர். (வெங்கட்டநரசப்பா, (1894) 1 Weir 111.) லோகல் போர்டுக்கு ஏற்கனவே இந்த விவரங்கள் கிடைத்திருந்தால் இந்த செக்ஷன் பொருந்ாது. (பாண்டிய நாயக், (1884) 7 Mad. 436). [இ. பு. ப. 542 & 543]

6-ம் பாகம்.

14-ம் அத்தியாயம்.

நடவடிக்கை முறையும் பலவகைப்பட்டவைகளும்.

லைஸென்ஸுகளும் அனுமதிகளும்.

212. (1) இந்த ஆக்டின்படியாவது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட பிரதி லைஸென்ஸிலும் அனுமதியிலும் அது ஏதேனும் கால அளவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை யும் எந்த நிர்ப்பந்தங்களுக்கும் வறையறைகளுக்கும் திட்டங் களுக்குமுட்பட்டு அது கொடுக்கப்படுகிறதோ அவைகளையும் காணவேண்டும்; மெலும், அதில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெசிடெண்டாவது இது விஷயமாய் அவரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது கையெழுத்து போடவேண்டும்.

லைஸென்ஸுகளையும் அனுமதிகளையும் குறித்த பொதுவான நிபந்தனைகள்.

(2) இந்த ஆக்டில் வெளிப்படையாய் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலும் அல்லது இந்த ஆக்டின் பிரகாரம் நிர்ணயிக்கப்படக் கூடியபடியு மன்றி மற்றப்படி அப்படிப்பட்ட பிரதி லைசென்ஸ் அல்லது அனுமதிக்காகவும் லோகல் போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய பரிமாணங்களை அனுசரித்தும், வீதங்களின்படியும் கட்டணங்கள் விதித்து வாங்கலாம்.

(3) லோகல் போர்டார்-ஏககாலத்தில் மூன்று வருஷத்துக்கு மேற் படாத யாதொரு கால அளவுக்கு அப்படிப்பட்ட கட்டணங்களை வசூல் செய்வ தைத் தங்களுக்கு தகுதியாகத் தோற்றுகிற திட்டங்களின்மேல் இஜரா விடலாம்.

(4) யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்காமல் நிரா கரித்தோ அல்லது அதைச்சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்தோ அல்லது ரத்து செய்தோ அல்லது திருத்தியோ உத்தரவு பிறப்பிக்க அதிகாரமுள்ள அதிகாரி

இந்த ஆக்டின்படியாவது, அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாய சட்டத்தின்படியாவது செய்யும் ஒவ்வொரு உத்தரவும் எழுத்துமூலமாயிருக்க வேண்டியதுமல்லாமல், அதில் எந்த ஆதாரங்களின்மேல் அது செய்யப்படு கிறதோ அவைகளையும் காணவேண்டும்.

(5) இந்த ஆக்டின்படியோ அல்லது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின்படியோ லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக் கப்பெற்றிருப்பவர் அந்த லைசென்ஸ் அல்லது அனுமதியில் கண்ட நிர்ப்பந்தங் கள், வரையறைகள் அல்லது திட்டங்களில் எதன்படியாவது நடக்காமல் தப்பித் துக்கொண்டாலும், எதையாவது மீறி நடந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு நபர் ஷை லைசென்ஸ் அல்லது அனுமதிக்குச் சம்பந்தப்பட்டுள்ள யாதொரு விஷ யத்திலே இந்த ஆக்டின் நிபந்தனைகளில் எதற்காவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷனிலுள்ள நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாக நடந்ததன்மேல் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட் டாலும், அப்படிப்பட்ட யாதொரு நபர் அந்த லைசென்ஸ் அல்லது அனுமதியை தப்பான சமாசாரம் தெரிவித்தாவது மோசஞ் செய்தாவது பெற்றிருந்தாலும், 11-ம் அத்தியாயத்தில் சொந்த மார்க்கெட்டுகளைக் குறித்து உள்ள விசேஷ நிபந்தனைகளுக்குட்பட்டு ஷை லைசென்ஸ் அல்லது அனுமதியை சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடெண்ட் எப்போதாவது சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கலாம். அல்லது ரத்து செய்யலாம். யாதொரு லைசென்ஸைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்தோ அல்லது ரத்து செய்தோ இந்தப் பிரிவின்படி ப்ரெசிடெண்ட் செய்யும் யாதொரு உத்தரவின்மேல் சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்.

(6) எவைகளின் விஷயமாய் இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது லைசென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அந்த இடங்களைப் பார்வை யிடுவது ப்ரெசிடெண்டின் கடமையாகும்; மேலும், அவர்-அப்படிப்பட்ட யாதொரு இடத்தில் சூரியோதயத்துக்கும் சூரியாஸ்தமானத்துக்கும் இடையிலும் சூரியாஸ்தமானத்துக்கும் சூரியோதயத்துக்கும் இடையில் அது பொது ஜனங் களுக்குத் திறந்திருந்தாலும் அந்த காலத்திலே அதில் யாதொரு தொழில் நடந்து கொண்டிருந்தாலும் அப்பொழுதுங்கூட பிரவேசிக்கலாம்: அல்லாமலும், இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது லைசென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிற யாதொரு இடத்தில் அப்படிப்பட்ட லைசென்ஸ் அல்லது அனுமதியில்லாமலாகி லும் அதை அனுசரித்தன்றி மற்றப்படியாகிலும் யாதொரு காரியம் செய்யப்படு கிறதென்று அவர் நம்புவதற்கு முகாந்தரம் இருந்தால், அவர்-சட்டத்தைச் சேர்ந்த யாதொரு நிபந்தனையையாயினும் எவையேனும் விதிகளையாயினும் சகாயச் சட்டங்களையாயினும் ரெகுலேஷன்களையாயினும் லைசென்ஸ் அல்லது அனுமதி யின் யாதொரு திட்டத்தையாயினும் சட்டப்படிக்கான யாதொரு உத்தரவை யாயினும் தடையையாயினும் மீறி ஏதேனும் செய்யப்படுகிறதா என்று தாம் தெரிந்து திருப்தியடையும்பொருட்டு அப்படிப்பட்ட இடத்தில் நோட்டீசில்லாமலே பகலிலா வது இரவிலாவது எப்போதாகிலும் பிரவேசிக்கலாம்; மேலும், ப்ரெசிடெண்டா வது எவருக்கு அவர் தம்முடைய அதிகாரங்களைச் சட்டப்படி கொடுத்திருக் கிறாரோ அந்த நபராவது இந்த உட்பிரிவின்படி அதிகாரங்களைச் செலுத்துவத னாலாகிலும் இந்த உட்பிரிவின்படி பிரவேசிப்பதற்கு அவசியமான யாதொரு பல வந்தத்தை உபயோகிப்பதனாலாகிலும் அவசியமாய் உண்டாகிற யாதொரு சேதம் அல்லது அசௌகரியத்துக்காக எந்த நபரின்மேலும் தாவா எதுவும் நிற்காது.

(7) யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதி சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டாலும் ரத்து செய்யப்பட்டாலும், அது எந்தக் கால அளவுக் காக கொடுக்கப்பட்டதோ அந்தக் கால அளவாவது எதற்குள் புதுப்பிப்பதற்

கான விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமோ அந்தக்கால அளவாவது, இதில் எது பின்னிட்டு கழிகிறதோ அது கழிந்துபோய்விட்டாலும், சந்தர்ப்பத்துக் கேற்றபடி, அந்த லைசென்ஸ் அல்லது அனுமதியைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்தோ ரத்து செய்தோ செய்யப்பட்டிருக்கும் உத்தரவு ரத்து செய்யப்படுகிற வரையிலாவது, (11) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு உட்பட்டு அந்த லைசென்ஸ் அல்லது அனுமதி புதுப்பிக்கப்படுகிறவரையிலாவது, அதைக் கொடுக்கப்பெற் றிருப்பவர்-இந்த ஆக்டின் அல்லது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்திற்கண்ட சகல காரியங்களுக்காகவும் அடி லைசென்ஸ் அல்லது அனுமதி பெற்றிராதவராகவே பாவிக்கப்படுவார்.

(8) யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் அது செலாவணியாய்க் கொண்டிருக்கையிலே ப்ரெசிடெண்ட் கேட்டால் நியாயமான சகல காலங்களிலும் அதைக் கொண்டுவந்து காட்ட வேண்டும்.

(9) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளினாலாவது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தினாலாவது வேண்டியிருக் கிற லைசென்ஸ் அல்லது அனுமதியைப்பெற்றுக்கொள்ளத் தவறுகிற விஷயத் தில் குற்றஞ்செய்தவராக யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப் படும்போதெல்லாம், மாஜிஸ்ட்ரேட்டானவர்-விதிக்கத்தக்க யாதொரு அபராதத் தோடுகூட, லைசென்ஸுக்காகவாகிலும் அனுமதிக்காகவாகிலும் விதித்து வாங்கத் தக்க கட்டணம் எவ்வளவோ அதையும் சுருக்கவகையாய் வசூல் செய்து லோகல் போர்டாருக்குச் செலுத்தவேண்டும். மேலும் அவர் தமக்கு யுக்தமாக தோற்று கிற பட்சத்திலே, பிராதுக்கு பிடித்த செலவு தொகையாக தாம் தொகை ஏதா கிலும் நிஷ்கரிஷை செய்தால் அப்படிப்பட்ட தொகையையும் சுருக்க வகையால் வசூல் செய்து லோகல் போர்டாருக்கு செலுத்தலாம்.

(10) அந்தப்படி (9) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் கட்டணத்தை வசூலிப்பதினாலே குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட நபருக்கு மேற்சொன்ன படி லைசென்ஸ் அல்லது அனுமதியைப்பெற பாத்தியதை உண்டாகமாட்டாது.

(11) லைசென்ஸ் அல்லது அநுமதிக்காக கட்டணத்தை முன்னதாகவே செலுத்துவதை லோகல் போர்டாராவது அல்லது அவர்கள் சார்பாகவாவது ஒப் புக்கொள்வதனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த லைசென்ஸ் அல்லது அனுமதி யைப் பெறுவதற்கு அப்படி கட்டணத்தை முன்னதாகச் செலுத்தும் நபருக்கு பாத்தியதை உண்டாகாது; ஆனால், லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கப்படும் விஷயத்தில் அந்த கட்டணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு மாத்திரமே பாத்தியதை உண்டாகும்; ஆயினும், லைசென்ஸ் அல்லது அனுமதியை புதுப்பிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளுகிறவர்-தம்முடைய விண்ணப்பத்தின்மேல் உத்தரவு வரப்பெறுகிறவரையில், லைசென்ஸ் அல்லது அனுமதி புதுப்பிக்கப்பட்டிருந்தாற்போலவே ப்ரவர்த்திக்க பாத்தியதை உடைய வராவார்; மேலும், இந்த ஆக்டில் வேறே விதமாகப் பிரத்தியேகமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, லைசென்ஸ் அல்லது அனுமதிக்காக செய்துக் கொள்ளப்படும் விண்ணப்பத்தின்மேல் உத்தரவுகள் அந்த விண்ணப்பம் ப்ரெசி டெண்டால் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு முப்பது தினங்களுக்குள் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், அந்த வருஷத்துக்காவது விண்ணப்பத்தில் சொல்லப்பட்டிருக்கிற அதற்குக் குறைந்த காலத்துக்காவது சட்டத்துக்கும், விதிகளுக்கும், சகாயச்சட்டங்களுக்கும், ரெகுலேஷன்களுக்கும், சாதாரணமாய் விதிக்கப்படும் சகல திட்டங்களுக்கும் உட்பட்டு அந்த விண்ணம் பம் ஜாரி செய்யப்பட்டதாக எண்ணப்படும்.

குறிப்பு.

செ. 212. லைஸென்ஸும், வரியும்.—வியாபாரத்தின் மேல் விதிக்கப்படும் வரியானது லைஸென்ஸ் கட்டண மூலமாய் வசூலிக்கப்படுகின்றது, ஆகையால் சிலர் வரி யென்பதற்கும் லைஸென்ஸ் கட்டணத்திற்கும் வித்தியாச மிருப்பதாக எண்ணுவதில்லை. ஆனால் வரிக்கும் லைஸென்ஸ் கட்டணத்திற்கும் யாதொரு சம்பந்தமிருப்பதாக தோன்றவில்லை. ஒரு வியாபாரத்திற்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கலாம், ஆனால் வரி விதிக்கப்படாமலிருக்கலாம், அல்லது வரி விதிக்கப்பட்டு லைஸென்ஸ் கொடுக்கப்படாமலுமிருக்கலாம். [இ. பு. ப. 547]

லைஸென்ஸும், இடமும்.—193-வது செக்ஷன்படி கொடுக்கப்பட்ட லைஸென்ஸானது இடத்திற்கே யொழிய ஒரு நபர் தனக்கிஷ்டமானபோது வியாபாரம் நடத்துவதற்கல்ல. உதாரணமாக சுண்ணாம்பு சுடுவதற்கு ஒருவருக்கு ஒரு இடத்தில் லைஸென்ஸ் கொடுத்திருந்தால் அவர் மற்றோரிடத்தில் லைஸென்ஸில்லாமல் சுண்ணாம்பு சுடக்கூடாது. (நெல்லூர் முனிசிபல் சேர்மன் எ. சுப்பய்யா, 1 Weir. 737) [இ. பு. ப. 548]

லைசென்ஸ் பெறவேண்டியது அவசியம் தண்டதீர்வை அல்லது பிராது தொடரல்.—லைசென்ஸ் இல்லாமல் ஒரு காரியத்தை செய்ததற்கு இந்த ஆக்டின்படி தண்ட தீர்வை (பினால்டி) விதிக்க அதிகாரம் கிடையாது; இந்த ஆக்ட் 164-வது செக்ஷன்படி அனுமதியில்லாமல் ஆக்ரமித்திருக்கும் விஷயத்தில் அபராதம் விதிக்க சட்டம் இடம் தருகிறது. லைசென்ஸ் கொடுக்காமல் லைசென்ஸ் கட்டணம் பெற லோகல் போர்டுக்கு அதிகாரம் கிடையாது. (மாரிடு கோபய்யா, 51 Mad. 866=A.I.R. 1928 Mad. 682). [இ. பு. ப. 549]

செ. 212 (2). கட்டணம் விதிக்கலாம்.—"விதிக்கலாம்" என்றிருப்பதால் லோகல் போர்ட் கட்டணம் விதித்து லைசென்ஸ் கொடுத்தாலும் கொடுக்கலாம் இல்லையேல் கட்டணமில்லாமலும் லைசென்ஸ் கொடுக்கலாம். கட்டண விகிதம் லோகல் போர்டால் நிர்ணயிக்கப்படவேண்டும். சட்டம் அனுமதி கொடுத்தால் மேற்கூறிய கட்டணத்தை வசூல் செய்ய 3 வருஷத்திற்கு குத்தகை விடலாம். [இ. பு. ப. 552]

லைஸென்ஸ் கட்டணமும், விதிக்கவேண்டிய முறையும்.—லைஸென்ஸ் கட்டணமானது லைஸென்ஸ் கொடுப்பதினால் உண்டாகும் செலவு, வியாபாரத்தின் நடைமுறையை கவனித்தலால் உண்டாகும் செலவு இவைகளை அனுசரித்து சற்றேறக்குறைய ஒரு பாகுபாடுக்குள்ளடங்கினதாயிருக்க வேண்டுமென்று கனம் ஜட்ஜ் பீஸ்லீ கூறியுள்ளார். [இ. பு. ப. 553]

லைஸென்ஸ் கட்டணத்தை குறைப்பது அல்லது எடுத்துவிடுவது.—லைஸென்ஸ் கட்டணத்தை குறைக்கவோ அல்லது எடுத்துவிடவோ அந்த லோகல் போர்டுக்கு அதிகாரமுண்டு, அப்படி குறைப்பதினால் அல்லது எடுத்துவிடுவதினால் அந்த போர்டிற்கு இருக்கும் கடன் தீர்க்கப்பட்ட ஜட்டில் குறையேற்படுமென்றாகிலும், போர்டின் செலவிற்கு குறைவுபடுமென்றாகிலும் ஏற்பட்டால் மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதி பெறவேண்டும். (கெஜெட் நெ. 137, பக்கம் 65, தேதி 3—2—1925.) [இ. பு. ப. 554]

செக். 212 (3). மூன்று வருஷத்திற்கு மேற்படாமல்.—மூன்று வருஷத்திற்கு லைஸென்ஸ் கட்டணத்தை வசூலிக்க லோகல் போர்டிற்கு இந்த சட்டத்தின் கீழ் அனுமதி கொடுத்திருப்பது சரியானதல்ல.

செக். 212 (4). அனுமதிக்க மறுக்கும் உத்திரவு எழுத்து மூலமாய் காரணங்களுடனிருக்கவேண்டும்.—ஸ்பஷ்டமாயின காரணங்களில்லாமல் லைஸென்ஸ் கொடுக்க லோகல் போர்டுகள் மறுக்கக்கூடாது. (சோமு பிள்ளை எ. முனிசிபல் கௌன்சல், மாயவரம், 28 Mad. 520; நாகலிங்க தேவன் எ. கும்பகோணம் முனிசிபல் கௌன்ஸல், 23 I.C. 709=2 L.W. 368.) [இ. பு. ப. 555]

செக். 212 (11). கட்டணத்தை திருப்பிபெற அருகதையுடையவர்.—ஒரு முனிசிபாலிடி ரத்தான ஒரு அக்கிரிமெண்டிற்காக கட்டணம் பெற்றுக்கொண்டால் அந்த அக்கிரிமெண்ட் ரத்து செய்யப்பட்டவுடன் அந்த கட்டணத்தை திருப்பி கொடுத்துவிடவேண்டும்; கட்டணத்தை திருப்பிப் பெறும் விஷயத்தில் 225-வது செக்ஷன்படி காலாவதி ஆகாது. [இ. பு. ப. 558]

30 நாட்களுக்குள் உத்திரவு தெரியப்படுத்த வேண்டும்.—லைஸென்ஸிற்காக விண்ணப்பம் செய்து கொண்ட 30 நாட்களுக்கு பிறகு லைஸென்ஸ் கொடுக்க மறுத்ததாக உத்திரவு வர, அதை மீறி விண்ணப்பதாரர் நெல் புழுக்கிக்கொண்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். உத்திரவு 30 நாட்களுக்கு மேற்பட்டு வந்ததால் விண்ணப்பதார் தான் விண்ணப்பித்துக் கொண்ட இடத்திற்கு லைஸென்ஸ் பெற பாத்தியதை யுடையரென்றும் தண்டனை செல்லா

தென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. (வெங்கடசுப்பய்யா, 40 Mad. 589=41 I.C. 655.) போர்ட் லைஸென்ஸ் கொடுக்க கடமைப்பட்டுள்ளது; கிரமத்தில் கிடைத்த விண்ணப்பத்தின் மேல் காரணம் காட்டாமல் லைஸென்ஸ் கொடுக்கப்படமாட்டாதென்று மட்டும் எழுதினுல் அது உத்திரவு பிறப்பித்ததாக எண்ணப்படமாட்டாது. சட்டப்படி நடக்க மறுப்பது உத்திரவாகாது. உத்திரவு நியாயமானதாயிருக்கவேண்டும், இல்லாவிடில் உத்திரவில் சேர்ந்ததல்ல. (எல்லம்மாள் எ. அரசர், A.I.R. 1928 Mad. 164=106 I.C. 718). [இ. பு. ப. 559]

அப்பீலுக்கு கால நிர்ணயம்.

213. வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலும் அல்லது வேறே விதமாய் நிர்ணயிக்கப்படக்கூடியபடியுமன்றி மற்றப்படி, இந்த ஆக்டின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு அப்பீலையும்—

(a) அது லைஸென்ஸாவது அனுமதியாவது கொடுக்கும் யாதொரு உத்தரவின்மேல் செய்துகொள்ளப்படும் விஷயத்தில், அந்த உத்தரவு லோகல் போர்டின் விளம்பரப் பலகையில் ஒட்டிப் பிரசித்தப்படுத்தப்பட்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக்குள்ளும்,

(b) இதர விஷயங்களில், எதன்மேல் அப்பீல் செய்துக்கொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவை அல்லது நடவடிக்கையை வரப்பெற்றுக்கொண்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக்குள்ளும்,

1908-ம்வருஷத்திய இந்து தேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தின் 5-வது பிரிவில் கண்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டுச் செய்துகொள்ளவேண்டும்.

லைஸென்ஸுகள் நோடீஸுகள், அனுமதிகள் ஆகிய இவைகளின் நமூனு.

214. (1) சந்தர்ப்பத்துக்கேற்றபடி இந்த ஆக்டின் நிபந்தனைகளின் பிரகாரம் கொடுக்கப்படுகிற அல்லது பிறப்பிக்கப்படுகிற சகல லைஸென்ஸுகளும் நோடீஸுகளும் அல்லது கொடுக்கப்படுகிற சகல அனுமதிகளும் எழுத்து மூலமாக இருக்கவேண்டும்.

(2) இந்த ஆக்டின்படியாவது இதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது லோகல் போர்டின் ப்ரெஸிடெண்ட் அல்லது அதன் யாதொரு உத்தியோகஸ்தருடைய கையெழுத்து வேண்டியதாயிருக்கிற பிரதி லைஸென்ஸ், அனுமதி, நோடீஸ், பில், ஸம்மன் அல்லது வேறே தஸ்தவேஜானது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி ப்ரெஸிடெண்ட் அல்லது அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய கையெழுத்தைப்போன்ற பிரதிரூபம் அதில் அழுத்தப்பட்டிருந்தால் சரியாய்க் கையெழுத்து செய்யப்பட்டதாக எண்ணப்படும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும், லோகல் பண்டிலிருந்து பணம் வாங்கவேண்டியதற்காக எழுதப்படும் செக்குக்காவது, லோகல் போர்டார் எழுதும் யாதொரு பத்திரத்துக்காவது, செய்துகொள்ளும் யாதொரு ஒப்பந்தத்துக்காவது பிரயோகப்படுவதாக எண்ணக்கூடாது.

இந்த ஆக்டின் படிக்கான விளம்பரங்களைப் பிரசித்தம் செய்வது.

215. வேறே விதமாக நிபந்தனைகண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, பிரதேசகவர்ன்மெண்டாரால் வெளியிடப்படுகிற விளம்பரமல்லாத மற்ற ஒவ்வொரு விளம்பரத்தையும் அது சம்பந்தப்படுகிற டிஸ்ட்ரிக்டிலுள்ள ஸர்க்கார் கெஜெட்டிலே இங்கிலீஷிலும் அந்த டிஸ்ட்ரிக்ட்டில் வழங்கும் சுதேசபாஷையிலும் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

குறிப்பு.

செ. **215**. சுதேசபாஷை.—சுதேசபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டவைகள் சட்ட சபையின் சம்மதத்தைப் பெற்றவைகளல்ல. அவைகளின்மேல் பூரண ஆதாரம் வைக்கக் கூடாது. (ஜாதபர்க்க எ. ராமசந்திர விடோபா, **16.B** 689.) [இ. பு. ப. 562]

215-A. லோகல் போர்டார் யாதொரு காரியத்துக்காக எந்த இடத்தையாவது பிரத்தியேகமாய் விட்டுவைக்கும்போதெல்லாம், அல்லது யாதொரு இடத்தில் எந்தக் காரியத்தையாவது செய்யக்கூடாதென்று தடுக்கும்போதெல்லாம், ப்ரெசிடென்டானவர் - அந்த பிரதேசத்தின் முக்கியமான சுதேச பாஷையில் நோடீஸ் ஒன்றை உடனே மாட்டிவைக்கும்படி செய்யவேண்டும்; அந்த இடம் இன்ன காரியத்துக்காகப் பிரத்தியேகமாய் விட்டுவைக்கப்பட்டிருக்கிறதென்றாவது இன்ன காரியம் அந்த இடத்தில் செய்யக்கூடாதென்றாவது அந்த நோடீசில் குறிப்பிடவேண்டும்.

தடைகள் ஏற்படுத்துவதைக்குறித்து அல்லது இடங்களைப் பிரத்தியேகமாய் விட்டுவைப்பதைத் குறித்து நோடீஸ்.

குறிப்பு.

செ. **215-A**.—இந்த ஆக்ட் 124, 125-வது செக்ஷன்களைச் சேர்ந்தது. அந்த செக்ஷன்களின் கீழ் விளம்பரம் செய்ய, ஜில்லா கெஜெட்டில் விளம்பர பிரசுரம் செய்யவேண்டியதில்லை. முக்கியமான சுதேசபாஷையில் ஒரு நோடீஸ் பிரசுரம் செய்தால் அதுவே போதுமானது. [இ. பு. ப. 562]

216. (1) இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவின்படியாவது யாதொரு நோடீஸ் அல்லது வேறே தஸ்தவேஜை யாதொரு நபருக்குச் சேர்ப்பிக்கவேண்டியதாகவோ - அல்லது அனுப்பவேண்டியதாகவோ இருந்தால் அதைச் சேர்ப்பிப்பது அல்லது அனுப்புவது எப்படியென்றால்—

தஸ்தவேஜுகளைச் சேர்ப்பிக்கும் விதம்.

(a) அப்படிப்பட்ட தஸ்தவேஜை ஷை நபரிடத்தில் கொடுக்கலாம் அல்லது கொடுப்பதாகக் காட்டலாம்; அல்லது,

(b) அந்த நபர் அகப்படாவிட்டால், கடைசியாக அவர் வாசஞ்செய்ததாகவோ அல்லது தொழில் நடத்தியதாகவோ தெரியவரும் இடத்தில் அந்த தஸ்தவேஜைக் கொடுத்துவைக்கலாம்; அல்லது, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்த எவரிடத்திலாவது வேலைக்காரரிடத்திலாவது அதைக் கொடுக்கலாம் அல்லது கொடுப்பதாகக் காட்டலாம்; அல்லது,

(c) அந்த நபர் பிரதேச விஸ்தீர்ணத்தில் வாசஞ்செய்யாமலிருந்து வேறே இடத்தில் அவருடைய விலாசம் ப்ரெசிடெண்டுக்குத் தெரிந்திருக்கிற பட்சத்திலே அதை அவருக்குத் தபாலில் ரெஜிஸ்டர் செய்து அனுப்பலாம்; அல்லது,

(d) மேலே சொன்ன முகாந்தரங்களில் எதுவும் உதவாவிட்டால், ஷை வாசஸ்தலத்திலாவது தொழில் நடத்திய இடத்திலாவது நன்றாய்த் தெரியும்படியான ஒரு பாகத்திலே அதை ஒட்டி வைக்கலாம்.

(2) அந்த நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரா யிருக்கும்பொழுது அந்த சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரின் பெயரை அந்த தஸ்தவேஜில் எழுதுவது அவசியமில்லை; மேலும், கூட்டுச் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களின் விஷயத்தில்,

அப்படிப்பட்ட சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களில் ஒருவரிடத்தில் அதைச் சேர்ப்பிப்பதோ அல்லது ஒருவருக்கு அதை அனுப்புவதோ போதுமானதாகும்.

(3) இந்த ஆக்டின்படி சேர்ப்பிக்கப்படும் அல்லது அனுப்பப்படும் யாதொரு பில், நோடீஸ், நமூனு அல்லது வேறே தஸ்தாவேஜில் இன்ன கால அளவுக்குள் யாதொரு வரி அல்லது இதர தொகையைச் செலுத்த வேண்டுமென்றுவது யாதொரு வேலையை செய்து முடிக்க வேண்டுமென்றுவது எதாவது ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்றுவது நிஷ்கரிஷை செய்திருக்கும்போதெல்லாம், அந்தக் கால அளவானது—இந்த ஆக்டில் அதற்கு விரோதமாய் ஸ்பஷ்டமான யாதொரு நிபந்தனை கண்டிராத வரையில், அந்தப்படி சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

குறிப்பு.

செ. **216**. போது.—இந்த செக்ஷனின்கீழ்குறிப்பிட்டிருக்கும், ஒரு நபருக்கு நோடீஸ் சேர்பிக்கப்படும் விதத்தைக் குறிக்கிறதே ஒழிய, எப்படி சேர்பிக்கக் கூடுமென்பதைக் கூறவில்லை. உத்தியோக மற்ற கௌரவக்காரர்கள் அதிகாரங்களை வகிப்பதாலும், அவர்களுக்கு ஊழிய கால அநுகூலங்களாவது அல்லது தவறி நடப்பதற்கு தண்டனையாவது அடையக்கூடியவர்களல்லவாதலாலும், தங்கள் கொள்கைகளுக்கு விரோதமான கொள்கையுடையவரிடமிருந்து கடிதங்கள், மனுக்கள் பெரும் விஷயத்தில் மிகவும் அலக்ஷயமாயிருக்கிறார்கள். தலைமை ஸ்தானத்தில் இல்லாதவர்களை பிரஸிடெண்டுகளாய் நியமிப்பதால் அவர்கள் ஆபீஸிலிருப்பதில்லை. குமஸ்தாமார்கள், மெம்பர்கள் நியாயமாய் கொடுக்கும் தீர்மானங்களின் நக்கல்களையும், இதர கடிதங்களையும் வாங்க மறுத்து மெம்பர்களின் கோறிக்கையை தோர்கடித்து விடுகிறார்கள். சில பிரஸிடெண்டுகள் நோடீசை நேரில் சேர்பித்தால் வாங்க மறுத்து விடுகிறார்கள். இம்மாதிரியாய் செய்பவர்களுக்கு கடிதங்களை ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்புவது நலம். இந்த செக்ஷன் மிகவும் விசாலமானது. கக்ஷிகள் நிறம்பிஇருக்கும் இக்காலத்தில் செக்ஷன் 1 (a)முதல் (d) வரையிலுள்ளவைகளை தாராளமாய் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஆகையால் இது விஷயத்தில் தக்க பாதுகாப்புகள் செய்யவேண்டும். நோடீஸ்படி நடக்கத் தவறிய குற்றம் சாட்டப்பட்டவர் 220-வது செக்ஷனில் சொல்லியுள்ளபடி நடவாததற்காகபிராது தொடர்ந்தால் நோடீஸ் சேர்பிக்கப்பட்ட விதத்தைப்பற்றி சரியாய் ஆராயவேண்டும். மெம்பர்கள் மீடிங்கிக்கு வந்து அவர்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு போர்டிற்கு பயனளிக்கக்கூடிய விதத்திற்கு மீடிங் நோடீஸ் சரியாய் மெம்பர்களுக்கு சேர்பிக்கவேண்டும். ஒவ்வொரு மெம்பருக்கும் தனித்தனி நோடீஸ் சேர்பிக்கப்பட்டால் போதுமானது. [இ. பு. ப. 563]

பிரவேசிக்கவும் பார்வையிடவும் ப்ரேஸிடெண்டுக்குள்ள அதிகாரம்.

வேலையைப் பார்வை யிடவோ ஸர்வே செய்யவோ அல்லது செய்து முடிக்கவோ. பிரவேசிக்க அதிகாரம்.

217. யாதொரு விசாரணை செய்யும்பொருட்டாவது பார்வையிடும்பொருட்டாவது பரீட்சிக்கும் பொருட்டாவது பரிசிலனை செய்யும் பொருட்டாவது ஸர்வே செய்யும்பொருட்டாவது அளக்கும் பொருட்டாவது மதிப்பிடும்பொருட்டாவது இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படியாயினும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவின் நிபந்தனைகளின்படியாயினும் அனுமதி கொடுக்கப்பெற்றதாகவாகிலும், இந்த ஆக்டின் காரியங்களில் எதற்காகவாயினும் ஷை நிபந்தனைகளில் எதன்படியாயினும் செய்யவேண்டியதாகவோ அல்லது செய்து முடிக்க வேண்டியதாகவோ அவசியமாயிருக்கிறதாகவாகிலுமுள்ள வேறே யாதொரு வேலையைச் செய்துமுடிக்கும்பொருட்டாவது, உதவியாட்கள் அல்லது வேலையாட்களோடாகிலும் அவர்களில்லாமலாகிலும் லோகல் போர்ட் ப்ரெஸிடெண்ட் அல்லது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்குள்ளாயினும் அதன் மேலாயினும் பிரவேசிக்கலாம் :

ஆனால்,—,

(a) வேறே விதமாய் வெளிப்படையாக இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, சூரியாஸ்தமனத்திற்கும் சூரியோதயத்திற்கும் மத்தியில் மேலேகண்டபடி பிரவேசிப்பது கூடாது;

(b) வேறே விதமாய் வெளிப்படையாக இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, குடியிருப்பு வீட்டிலும் குடியிருப்பு இடமாக உபயோகமாகும் பொதுவான கட்டிடத்தின் யாதொரு பாகத்திலும் பிரவேசிக்க உத்தேசிப்பதைக்குறித்து அதமம் ஆறு மணி நேரத்துக்கு முன்னதாக அதன் அனுபோகதாரர் நோடீஸ் பெற்றிருந்தாலொழிய, ஷை அனுபோகதாரருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதில் பிரவேசிப்பது கூடாது;

(c) நோடீஸ் கொடாமலே யாதொரு வளவுக்குள் மற்றப்படி பிரவேசிக்கக்கூடியதாயிருந்தபோதிலும், ஸ்திரீகளுக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கும் யாதொரு அறையிலுள்ளவர்கள் தங்களுடைய அந்தரங்க வாழ்க்கைக்குக் கெடுதி நேரிடாதபடி அந்த வளவின் வேறேரிடத்திற்குப் போய்விடக்கூடியவர்களாயிருக்கும்படி ஒவ்வொரு விஷயத்திலும் போதுமான நோடீஸ் கொடுக்கவேண்டும்;

(d) எதற்காகப் பிரவேசிக்கவேண்டியதாயிருக்கிறதோ அந்தக் காரியத்தின் அவசியத்திற்கு ஏற்றபடி, அந்த வளவிலுள்ளவர்களுடைய ஜனசாரங்களையும் மதாசாரங்களையும் தகுந்தபடி கவனித்துப் பிரவர்த்திக்கவேண்டும்.

குறிப்பு.

செ. 217· பிரவேசிக்கவும், பார்வையிடவும், பிரஸிடெண்டிற்கு அதிகாரம்.—இந்த செக்ஷனை மீறி நடப்பவர்கள் இந்த ஆக்ட் 210-வது செக்ஷனில்கூறியுள்ளபடி இந்தியன்பினல் கோட் 341-வது செக்ஷன்படி தண்டனை அடையக்கூடியவர்கள். இந்த ஆக்ட் 229-வது செக்ஷன் லோகல் போர்டுகள் பிரஸிடெண்டுகள், மெம்பர்களிடம் இதரர்கள் என்ன செய்யக் கூடாதென்பதைக் குறிக்கிறது; 217-வது செக்ஷன் பிரஸிடெண்ட் ஒரு வேலையை பார்வையிடவோ, ஸர்வே செய்யவோ, அல்லது செய்து முடிக்கவோ, அல்லது பிரவேசிக்கவோ உள்ள அதிகாரத்தைக் குறிக்கிறது. அதுமாதிரியே 197-வது செக்ஷன் பிரஸிடெண்ட் உள் பிரவேசிக்கும் அதிகாரத்தைக் குறிக்கிறது. மேற்கூறிய செக்ஷன்கள் ஒரு கட்டடத்தினுள் பிரவேசிக்க பிரஸிடெண்டிற்கு போதுமான அதிகாரத்தைக் கொடுத்து கார்க்கிறது. (அரசர் எ· மாமு, A.I.R. 1927 R. 60).
[இ. பு. ப. 565]

218. *எடுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் பார்வையிடுவதும் அவைகளுக்கு முத்திரை போடுவதும்.* யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டாவது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது இந்தியன் பினல் கோட் 13-ம் அத்தியாயத்தின்படி எடுத்தலளவைக் கருவிகளுக்கும் முகத்தலளவைக் கருவிகளுக்கும் சம்பந்தமான குற்றங்களைத் தடுப்பதற்காகவும் அவைகளுக்காக தண்டனை விதிப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட லோகல் போர்ட் விஸ்தீர்ணத்திலுள்ள மார்க்கெட்டுகளிலும் கடைகளிலும், உபயோகிக்கும் எடுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் பார்வையிட்டு பரீக்ஷிக்கலாம்.

லைஸென்ஸ் கொடுப்பதற்கான நிபந்தனைகள், உத்தரவு முதலியவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரம்.

219. *லைஸென்ஸ் முதலானவைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறினாலும் அவைகளுக்கு விரோதமாக நடந்தாலும் இன்னது விளையுமென்பது.* இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது யாதொரு காரியத்தைச் செய்வதற்குலோகல்போர்டின் அல்லது அதன் ப்ரெஸிடெண்டின் லைஸென்ஸாகிலும் அனுமதியாகிலும் அவசியமாயிருந்து, அப்படிப்பட்ட காரியம் ஷை லைஸென்ஸ் அல்லது அனுமதி இல்லாமலாவது அப்படிப்பட்ட யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதியின் ஷரத்துகளுக்கு விரோதமான விதமாகவாவது செய்யப்பட்டால், அப்போது—

(a) ப்ரெஸிடெண்டானவர்—அப்படிப்பட்ட காரியத்தை அந்தப்படி செய்யும் நபருக்கு நோடீஸ் கொடுத்து அதன்மூலமாக அந்த நோடீஸில் குறிப்பிட்ட காலத்துக்குள், ஷை காரியத்தினுல் பாதிக்கப்படும் யாதொரு சொத்து அசையாப்பொருளாயிருந்தாலுஞ்சரி, அசையும்பொருளாயிருந்தாலுஞ்சரி, பொதுவானதாயிருந்தாலுஞ்சரி ஒருவருக்கேயுரியதாயிருந்தாலுஞ்சரி, அது முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது மாற்றவாகிலும் அப்புறப்படுத்தவாகிலும் சாத்தியமான வரையில் அதன் முந்திய ஸ்திதியிலிருக்கும்படி செய்யவாகிலும் வேண்டுமென்று உத்தரவு செய்யலாம், இதுவுமல்லாமல்,

(b) அப்படிப்பட்ட காரியத்தை அந்தப்படி செய்வதற்கு யாதொரு தண்டனையும் இந்த ஆக்டில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படாமலிருந்தால், அதை அந்தப்படி செய்கிற நபர் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

குறிப்பு.

செ. **219**. பொது.—(1) ஏதாவது ஒரு காரியத்தை செய்வதற்கு லைசன்ஸ் தேவையாயிருந்தாலும், (2) அல்லது கொடுக்கப்பட்ட லைசன்ஸிலிருக்கும் நிபந்தனைக்கு மாறுபாடாக நடந்தாலும், குற்றம் செய்தவரை நோடீஸ் மூலமாய் திருத்தவோ மாற்றவோ குறிப்பிட்டகாலத்திற்குள் முடிக்கவோ நோடீஸ் சேர்ப்பிக்கலாம். குற்றம் செய்தவர் நோடீஸில் கண்ட காலத்திற்குள் அதில் கண்டபடி நடக்காமல் போனுல் அவர் 220 (3) -வது செக்ஷன்படி தண்டனைக்குள்ளாவார். லைசன்ஸ் இல்லாமல் செய்யும் காரியத்திற்கு தண்டத்தீர்வை ஏற்பட்டிருந்தால் அவைகளுக்கு (b) உபசெக்ஷன்பொருந்தாது. தண்ட தீர்வை விதிக்கப்படாத வகையில் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூபாய் 50-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படலாம்.

[இ. பு. ப. 568]

நோடீஸ் உத்தரவு முதலியவைகளின்படி நடப்பதற்கு வாய்தாவும் அந்தப்படி நடந்துக்கொள்ளாவிட்டால் அவைகளை அமுலுக்குக்கொண்டுவர அதிகாரமும்.

220. (1) இந்த ஆக்டின்படியாவது இதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது பிறப்பிக்கப்படும் யாதொரு நோடீஸ், கட்டளை அல்லது உத்தரவின்பிரகாரம் யாதொரு வேலையைச் செய்து முடிக்கும்படியாகிலும் எவ்வித ஏற்பாடுகளையேனும் அனுசரிக்கும்படியாகிலும் யாதொரு காரியத்தைச் செய்யும்படியாகிலும் யாதொரு நபருக்குத் திட்டஞ் செய்யப்படுமாகில், இன்ன காலத்திற்குள்ளாக ஷை வேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்றாவது ஏற்பாடுகளை அனுசரிக்கவேண்டுமென்றாவது காரியத்தைச் செய்யவேண்டுமென்றாவது ஷை நோடீஸ், கட்டளை அல்லது உத்தரவில் நியாயமான காலத்தைக் காணவேண்டும்.

(2) மேற்கண்ட காலத்துக்குள் ஷை நோடீஸ் கட்டளை அல்லது உத்தரவின் பிரகாரம் நடந்துக்கொள்ளாவிட்டால், சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - அந்த வேலையை முடிப்பிக்கலாம்; அல்லது மேலே கண்டபடி நோடீஸ், கட்டளை அல்லது உத்தரவைச் சரியாய் அமுலுக்கு கொண்டுவருவதற்கு அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற எவ்வித ஏற்பாடுகளையும் அனுசரிக்கலாம் அல்லது யாதொரு காரியத்தைச் செய்யலாம்: இதுவுமல்லாமல்,

(3) அப்படிப்பட்ட நோடீஸின்படி செய்யத்தவறினுல் அதற்குயாதொரு தண்டனையும் இந்த ஆக்டில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படாமலிருக்கும் பட்சத்தில், ஷை நபர் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

குறிப்பு.

செ. **220 (1)**. போது.—இந்த ஆக்ட், சட்டம், உபசட்டம், விதி, உபவிதி இவைகளை அனுசரித்து கொடுக்கப்பட்ட நோடீஸே சரியானது. அதில் நியாயமான காலம் கொடுக்கப்படவேண்டும். இவைகளில்லாமல் கொடுக்கப்பட்ட நோடீஸ் சட்ட ரீதியானதல்ல. [இ. பு. ப. 571]

சேரவேண்டிய தொகைகளை வரிகளைப்போல் வசூல் செய்வது.

221. இந்த ஆக்ட் அல்லது வேறே யாதொரு சட்டத்தின்படியாவது, அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியாவது சகாயச் சட்டங்களின்படியாவது லோகல் போர்டாருக்கு யாதொருநபர் பாக்கியாயிருக்கும் சகல செலவுகள், நஷ்ட ஈட்டுத்தொகைகள், பிரதிபலன், தண்டத் தொகைகள், பட்டுபடி, (பள்ளிக்கூட சம்பளங்கள் அல்லாத வேறே) கட்டணங்கள், செலவுத் தொகைகள், (லோகல் போர்டாரால் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களுக்கும் கட்டிடங்களுக்கும் வாடகைகளாயிராத) வாடகைகள், சகாயத்தொகைகள், இதர தொகைகள் ஆகிய இவைகளை வசூலிப்பதற்கு பிரத்தியேகமான நிபந்தனை எதுவும் இந்த ஆக்டில் கண்டிராவிட்டால் 4-வது ஷெட்யூலிலுள்ள விதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடி பில் மூலமாய் அவை கேட்கப்பட்டு அவைகளில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் வசூலிக்கப்படலாம்.

குறிப்பு.

செ. **221**. போது.—கன்டிராக்ட் சம்பந்தமான பணம் தவிர மற்றைய பணங்களை புது செக்ஷன்படி வரி வசூல் செய்யும்மாதிரி வசூல் செய்யலாம். 4-வது ஷெட்யூல் 32-வது விதிப்படி, லோகல் போர்டுக்கு சேர வேண்டிய பாக்கிக்கு ஒரு நோடீஸ் கொடுத்த பிறகும், குறிப்பிட்ட காலத்தில் அவர் பாக்கியை கட்டதவறினால் 4-வது ஷெட்யூல் 33-வது விதிப்படி ஜப்திவாரண்டு பிறப்பித்து அவருடைய அசையும் பொருளை ஜப்தி செய்து வசூல் செய்யலாம். விதிக்கப்பட்டவரியின் யுக்தாயுக்தத்தைப்பற்றி முறையிட 225-வது செக்ஷன்படி லோகல் போர்டிற்கு நோடீஸ் கொடுத்து ஸிவில் கோர்டில் தாவா தொடரவேண்டும். [இ. பு. ப. 574]

சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதற்குக் கால நிர்ணயம்.

222. இந்த ஆக்டின்படி லோகல் போர்டுக்குச் சேரவேண்டியதாயிருக்கிற யாதொரு தொகை விஷயமாக, சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஜப்தி முதலில் எப்போது செய்யப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற்கொண்டாவது, வியாஜ்ஜியம் முதலில் எப்போது கொண்டுவரப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற்கொண்டாவது, பிராது முதலில் எந்தத் தேதியிலே தொடரப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதிமுதற்கொண்டாவது மூன்றுவருஷகாலமான பிறகு அந்தத் தொகைக்காக யாதொரு ஜப்தி செய்யவுங்கூடாது, வியாஜ்ஜியம் கொண்டுவரவுங்கூடாது, பிராது தொடரவுங்கூடாது.

குறிப்பு.

செ. **222**. போது.—இந்த ஆக்டின்கீழ் ஒரு லோகல் போர்டுக்குச் சேரவேண்டிய தகையை வசூல் செய்வதற்கு கால நிர்ணயம் 3 வருஷம் என்று கூறுகிறது. பணத்தை வசூல் செய்வதில் குறிப்பிட்டுள்ள அம்சங்களை வரிசைக்கிரமமாய் கையாளவேண்டும். (1) பிரசிடென்டால் எடுக்கப்பட்ட ஜப்தி வாரண்டு. (2) ஸிவில் கோர்டில் வியாஜ்ஜியம் தொடரல். (3) அல்லது 4-வது ஷெட்யூல் 38-வது 39 (2)-வது விதிப்படி கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளல் இவைகளை அனுஷ்டிக்க வேண்டும். தொழில் வரி கட்டவேண்டிய ஒருவர் தனக்கு தொழில் வரி விதித்தால் கொடுத்திருக்கும் நோடீஸ் போதுமான அவகாசம் கொடுக்காததால் கட்டத் தவறியதாகச் சொல்லும் சாக்கு சரியானதல்ல. (மங்களூர் முனிசிபாலிடி எ. டேவிஸ், 7 Mad. 65). இந்த செக்ஷன் லோகல் போர்டார் இதரர்கள் பேரில் வியாஜ்ஜியம் தொடருவதைக் குறிக்கிறது; 225-வது செக்ஷன் போர்டின்மேல் இதரர்கள் வியாஜ்ஜியம் தொடருவதைக் குறிக்கிறது. அஜாக்கிரதையால் லோகல் போர்டுக்குச் சேரவேண்டிய தொகைகள் காலாவதியாகிவிட்டால் 227-வது செக்ஷன்படி மெம்பர்கள் உத்திரவாதிகளாகையால் அதை அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும். [இ. பு. ப. 576]

223. இந்த ஆக்டில் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிற படிக்கன்றி மற்றப்படி, போலீஸாராவது லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டாவது லோகல் போர்டாரால் அல்லது அதன் ப்ரெஸிடெண்டால் இது விஷயத்தில் வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது குற்றம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக பிராது கொடுத்தாலொழிய, இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளுக்காகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்காகிலும் விரோதமாய்ச் செய்யப்பட்ட யாதொரு குற்றத்திற்காக எந்த நபரையும் பரிசீலனை செய்யக்கூடாது. ஆனால், வரப்பெற்றுக்கொண்ட சங்கதியினாலாவது தங்களுக்கே தெரியவந்த சங்கதியினாலாவது அனுமானத்தினாலாவது குற்றங்களைப் பிடித்துப் பரிசீலனை செய்யச் சில மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குள்ள அதிகாரத்தைப் பற்றி 1898-ஷுத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின் நிபந்தனைகளுக்கு இதிலுள்ள தெதனுலும் பாதகமுண்டாகமாட்டாது :

பிராது தொடர அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் நபர்கள்.

ஆனால், இந்த ஆக்டின்படி லைஸென்ஸ் வாங்கிக்கொள்ளவோ அனுமதி பெறவோ தவறுவது-எந்த கால அளவுக்கு லைஸென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட கால அளவு எதுவாகிலும் இருந்தால் அது கடந்துபோகிறவரையிலே, இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, நடந்துகொண்டேயிருக்கும் குற்றமாயிருப்பதாக எண்ணப்படும்; மேலும், எந்தக்கால அளவும் குறிப்பிடப்பட்டிராவிட்டால், குற்றம் நடக்க ஆரம்பமானதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் எப்போதாகிலும் பிராது கொடுத்துக் கொள்ளலாம்.

குறிப்பு.

செ. **223**. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளுக்காகிலும்.........நபரையும் பரிசீலனை செய்யக்கூடாது.—தண்டனைக்குள்ளாகக்கூடிய விஷயங்களில்மனுதாரருக்கு யாதொரு பாதகமும் நேரக்கூடியதில்லை என்று வாதிப்பது சரியாகாது. சட்டத்தை அப்படியே வியாக்யானம் செய்யவேண்டும். (சேஷப்பிரபு, 42 L J. 3149=66 I.C. 429.) சேர்மன் அநுமதியின்மேல் பொதுவான பாட்டையில் வெட்டித்தள்ளிய மரத்தை அக்கிரமாக உபயோகப்படுத்தியதற்கு இந்த செக்ஷன் பொருந்தாது. (அரசர்-எ-ஆதம்கான், 9 M. L. T. 458=10 I.C. 577.) [இ. பு. ப. 578]

லோகல் போர்ட் பிரஸிடெண்டினுல் பிராது கொடுக்கப்படலாம்.—யாதொரு பிராதை லோகல் போர்ட் பிரஸிடெண்டாவது அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபராவது நேரில் கொடுக்கவேண்டிய தில்லை. மாஜிஸ்டிரேட்டுக்கு அநுப்பப்பட்டால் போதுமானது இந்தியன் பினல் கோட் 21 (10)-வது செக்ஷன்படி பொதுஜன ஊழியராதலால் அவர் பிரமாணத்தின்மேல் உறுதிமொழி கொடுக்கவேண்டியதில்லை.

பிராதி வராமலிருந்தால்.—மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி 52-வது செக்ஷன்படி பிராது தொடரப்பட்டது. சம்மன்கள் பிறப்பிக்கப்பட்டன. பிராதி இல்லாததால் பிராதிக்கு வாய்தா தேதி நோடீஸ் கொடுக்கவில்லை யாதலால் அவர் அந்த தேதியில் ஆஜராயில்லை. ஆகையால் பிராது கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் 247-வது செக்ஷன்படி தள்ளுபடி செய்யப்பட்டது. செக்ஷன்படி பிராதி ஆஜராயில்லை என்று பொருள்படாது. எதிரியை விடுதலை செய்யவில்லை. பிராது தள்ளியதற்கு ஹைகோர்டில் அபீல் செய்யலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது. (நியூன் பனகாலு எ. சுப்பாராவ், A.I.R. 1928 Mad. 1158.)

பிராதை வாபீஸ் வாங்கிக்கொள்ளல்.—பிராதை வாங்கிக்கொள்ள வேண்டுமானல் கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 248-வது செக்ஷன்படி வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். (விசுர் குமார் மித்தர் எ. கல்கத்தா கார்பொரேஷன், A.I.R. 1926 Cal. 786).

புனர் விசாரணை.—கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 350-வது செக்ஷன்படி ஒரு மாஜிஸ்டிரேட்டினின்றும், மறு மாஜிஸ்டிரேட்டுக்கு மாற்றப்பட்டால் புனர் விசாரணை முனிசிபல் ஆக்ட் குற்றங்கள் நடைபெறவேண்டும். [இ. பு. ப. 582]

வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர்.—அதிகாரம் வெளிப்படையாய் கொடுக்கப்படவேண்டும். இல்லையேல் பிராது செல்லாது. லைசென்ஸுடன் சேர்பிக்கப்பட்ட ப்ளான்படி யில்லாமல் மாறி செய்ததற்காக பிராது தொடரும்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட ஸானிடெரி இன்ஸ்பெக்டர், அத்துடன் லைஸென்ஸின் கால அளவை கடந்து செய்ததற்காக மற்றொரு பிராதையும் தாக்கல் செய்தார். சானிடெரி இன்ஸ்பெகடருக்கு கால அளவை கடந்து செய்ததற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி அதிகாரம் கொடுக்காததால் அதற்காக தண்டிக்கப்பட்ட தண்டனை நியாயமானதல்ல என்று தீர்ப்பு கூறப்பட்டது. (கள்ளப்பெருமாள் நாயுடு 11, L.W. 120=55 I.C. 599.) இதர காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட அதிகாரம் பிராது தொடரப்பட கொடுக்கப்பட்ட அதிகாரமாகாது. (பப்ளிக் ப்ராசிகியூடர் எ. சங்கரலிங்க மூப்பன், 42 Mad. 787=50 I.C. 1003). [இ. பு. ப. 583]

அன்னியரால் பிராது தொடரல்.—லோகல் போர்ட் அல்லது அதன் பிரசிடெண்ட் ஒருவரது செல்வாக்குக்குப் பயந்து அவர் பேரில் பிராது தொடராவிட்டால் கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 190 (1) (c) படி ஒரு அன்னியர் வியாஜ்ஜியம் தொடரலாம். [இ. பு. ப. 586]

224. *அபராதங்கள், செலவுகள் முதலியவைகளை வசூலிப்பது.* இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின்படியாவது மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட யாதொரு அபராதம், செலவு, வரி அல்லது இதர தொகையானது - அது அபராதமாயிருந்தால் எப்படியோ அப்படியே 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரோஸீஜர் கோடின்படி ஷை மாஜிஸ்ட்ரேட்டால் வசூலிக்கப் படத்தக்கதாகும்; மேலும் அது - வசூலிக்கப் படுவதன்மேல், இந்த ஆக்டின் காரியங்களுக்காக உபயோகிக்கப்படும்படி சம்பந்தப்பட்ட லோகல் போர்டாருக்குச் செலுத்தப்படவேண்டும்.

225. *லோகல் போர்டார்மேல் வியாஜ்ஜியம் கொண்டு வருவதற்கு நோடிஸ்.* (1) இந்த ஆக்டையாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது நிறைவேற்றவாயினும் நிறைவேற்ற உத்தேசித்தாயினும் செய்யப்பட்டதாகவோ செய்யப்பட்டதாகப் பொருள் படுகிறதாகவோவுள்ள யாதொரு செய்கையைப்பற்றியாகிலும், இந்த ஆக்டையாவது அப்படிப்பட்ட யாதொரு விதி, சகாயசட்டம் ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது நிறைவேற்றுகையில் யாதொரு அசட்டை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்பட்டால் அது விஷயமாயாகிலும் யாதொரு லோகல் போர்டார் மேலாவது லோகல் ப்ரெஸிடென்ட்மேலாவது அந்த போர்டைச் சேர்ந்த யாதொரு மெம்பர் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர்மேலாவது, ஷை போர்ட்டார் ப்ரெஸிடெண்ட், மெம்பர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின் கட்டளையின்படி பிரவர்த்திக்கிற யாதொரு நபர் மேலாவது எதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுகிறதோ அல்லது சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அந்த காரணத்தையும் கோரப்படும் பரிகாரத்தின் தன்மையையும் சுதந்தரித்துக் கேட்கிற பிரதிபலன் தொகையையும் வியாஜ்ஜியம் கொண்டுவர அல்லது சட்டபடிக்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கும் வாதியின் பெயரையும் இருப்பிடத்தையும் கண்டெழுதி எழுத்து மூலமான ஒரு நோடீஸை லோகல் போர்டாருடைய ஆபிஸில் சேர்ப்பித்தபின்பு அடுத்து இரண்டு மாதம் கழிகிறவரையில் அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் எதையும் கொண்டுவரக்கூடாது அல்லது சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளக்கூடாது; மேலும், அப்படிப்பட்ட யாதொரு ப்ரெஸிடெண்ட் மேலாவது மெம்பர்மேலாவது உத்தியோகஸ்தர்மேலாவது ஊழியக்காரர்மேலாவது நபர்மேலாவது ஷை நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிற

பட்சத்திலே, ஷை நோடிஸை அவரிடம் ஒப்புவிக்கவும் வேண்டும் அல்லது அவருடைய வாசஸ்தலத்தில் சேர்ப்பிக்கவும் வேண்டும். அப்படி நோடிஸ் ஒப்புவிக்கப்பட்டதென்றாவது சேர்ப்பிக்கப்பட்டதென்றாவது ருஜுவானாலொழிய கோர்டார் பிரதிவாதி பட்சம் தீர்ப்பு செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும், அது அசையாப் பொருளை வரப்பெற்றுக்கொள்வதற்காவது அதற்குள்ள பாத்தியதையை நிர்ணயித்துக்கொள்வதற்காவது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையாயிருந்தாலன்றி மற்றபடி, வியாஜ்ஜியமூலம் உண்டான தேதிக்குப் பிறகு ஆறு மாதத்துக்குள்ளாகிலும், தீங்கு அல்லது சேதம் நேரிட்டிக்கொண்டே யிருக்கும் விஷயத்தில் அப்படி நேரிட்டுக்கொண்டேயிருக்கும்போதாகிலும், அது நின்றுபோன பிறகு ஆறுமாதத்துக்குள்ளாகவாகிலும் ஆரம்பிக்கவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாருக்கு நோடிஸ் கொடுக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு லோகல் போர்டாராவது நபராவது நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே அங்கீகரிக்கும்படி வாதிக்கு ஈடுகாட்டியிருந்து, அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கையில் அந்தப்படி ஈடுகாட்டப்பட்ட தொகைக்கு அதிகமாக வாதிக்குக் கிடைக்காதிருக்கும் பட்சத்தில், அவர் ஷை போர்டாராவது நபராவது அந்தப்படி செலுத்தக்காட்டின பிறகு, தாம் செய்திருக்கும் எவையேனும் செலவுகளை வசூல் செய்யக்கூடாது. அல்லாமலும், அப்படி செலுத்தக்காட்டின பின்பு பிரதிவாதிக்கு நேரிட்ட சகல செலவையும் வாதி செலுத்தவும் வேண்டும்.

(4) இந்த ஆக்டையாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது நிறைவேற்றவாயினும் நிறைவேற்ற உத்தேசித்தாயினும் செய்யப்பட்ட யாதொரு செய்கையாகிலும், இந்த ஆக்டையாவது அப்படிப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது தாம் நிரைவேற்றுகையில் யாதொரு அசட்டை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்பட்டால் அப்படிப்பட்ட அசட்டையாகிலும் தவறுதலாகிலும் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதாக இருக்குமானால்; அப்படிப்பட்ட செய்கை விஷயமாகவோ அசட்டை அல்லது தவறுதல் விஷயமாகவோ, யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடென்ட் மேலாவது அந்த போர்டைச் சேர்ந்த யாதொரு மெம்பர் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் மேலாவது ஷை போர்டார், ப்ரெஸிடென்ட், மெம்பர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காருடைய கட்டளையின்படி பிரவர்த்திக்கிற யாதொரு நபர்மேலாவது வியாஜ்ஜியம் எதையும் கொண்டுவரவுங் கூடாது சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளவுங்கூடாது; ஆனால், 227-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜிய விஷயங்களில் தவிர அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கை கோர்ட்டில் ஸ்தாபிக்கத்தக்கதாயிருக்கிறமட்டிலே, அதை லோகல் போர்டார்மேல் கொண்டுவரவேண்டும்.

குறிப்பு.

செ. **225**. இந்த செக்ஷனின் நோக்கம்.—பொது அதிகாரிகளின்பேரில் வியாஜ்ஜியம் தொடரவேண்டுமானால் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டுமென்பது நஷ்டதாவாவைக் குறிக்கும். (கோவிந்த பிள்ளை எ. கும்பகோணம் முனிசிபாலிடி, 4 I. C. 32=32 Mad 371). இந்த செக்ஷனில் வியாஜ்ஜியம் என்பது நஷ்ட ஈடு நஷ்ட கிரயம் முதலியவைகளை குறிக்கும், பொது ஸ்தாபனங்கள் வீண் வியாஜ்ஜியத்தை யொழித்து தக்க சமாதானமோ, பரிகாரமோ கொடுக்கக்கூடிய போதுமான அவகாசம் அவைகளுக்குக் கொடுக்கவேண்டி இந்த செக்ஷன் இயற்றப்பட்டது. சட்டப்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தை செலுத்துவதால் இதரர்களுக்கு உண்டாகும் நஷ்டத்தை ஈடு செய்யவேண்டுமென்பது.) சேர்மன், முனிசிபல் கார்பொரேஷன், ஹரித்பூர் எ. கௌவர் கோபால், A. I. R. 1927 Cal, 592). போதுமான அவகாசம் கொடுத்து

நோடீஸ் கொடுக்கப்படவேண்டு மென்பது இந்த செக்ஷனின் முக்கியமான தாத்பர்யம். இந்த ஆக்ட் 228-வது செக்ஷன்படி ஒழுங்கீனத்தினுல் ஏற்படும் பிரத்தியேக நஷ்ட ஈட்டிற்கு வியாஜ்ஜியம் தொடரலாம். [இ. பு. ப. 589, 590]

1-வது உப-செக்ஷனுக்கும், 4-வது உப-செக்ஷனுக்குமுள்ள வித்தியாசம்.—பிரசிடென்ட் முதலியவர்களால் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட காரியங்கள் விஷயமாய் தொடரப்படும் வியாஜ்ஜியங்கள் லோகல் போர்டாரின் மேல் தொடரப்படவேண்டுமே யொழிய, 4-வது உப-செக்ஷன்படி பிரசிடென்டின்மேல் தொடரப்படக்கூடாது. மேற்கூறிய விலக்குதல் தவிர மற்றைய வியாஜ்ஜியங்கள், லோகல் போர்டின் பேரிலும் அதன் பிரசிடென்டின் பேரிலும் தொடரலாம். [இ. பு. ப. 590]

ஒரு லோகல் போர்டாவது அல்லது அதன் பேரிலாவது தொடரப்படும் வியாஜ்ஜியம்.—லோகல் போர்ட் விஷயத்தில், மொத்த தொகுதியாயுள்ள லோகல் போர்ட்டின் பெயரால் வியாஜ்ஜியம் தொடரவேண்டும். பிரசிடென்ட் பெயரால் தொடரப்படும் வியாஜ்ஜியம் நிராகரிக்கப்பட வேண்டும். (சையத் அமீர் எ. வெங்கடராம, 16 Mad. 296).
[இ. பு. ப. 592]

லோகல்போர்டுகளின்பேரிலேயே தவிர பிரசிடென்டுகளின்பேரில் வியாஜ்ஜியம் தொடரப்படக்கூடாது.—வாதியின் நிலத்தில் பிரவேசித்ததாக ஒரு தாலூகா போர்ட் பிரஸிடென்டையும் மெம்பர்களையும் அப்புறப்படுத்தும்பொருட்டு வியாஜ்ஜியம் தொடரப்பட்டது. தாலூகா போர்ட் மொத்ததொகுதியின்பேரில் வியாஜஜியம் தொடரப்படவேண்டுமே யொழிய, பிரசிடென்டின்மேல் தொடரப்பட்ட வியாஜ்ஜியம் 1884-ஆைத்திய லோகல்போர்ட் ஆக்ட் 27-வது செக்ஷன்படி செல்லாதென எதிர் வியாஜ்ஜியம் ஆடப்பட்டது. இந்த தவறுதல் முதல் வாயிதாவன்றே வாதிக்கு எடுத்துக் காட்டப்பட்டும், வாதி பிராதை திருத்தாமல், தாம் செய்தது சரி என்று அபீல் கோர்டிலும் வாதாடியது நல்ல எண்ணத்துடன் செய்த தவறுதல் அல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. முனிசிபாலிடியின்மேல் தொடரப்படும் வியாஜ்ஜியம், மொத்த தொகுதியின்மேல் தொடரப்படவேண்டுமே தவிர சேர்மனின்மேல் தொடரக்கூடாது. (சாண்டன் எ. முனிசிபல் போர்ட், அலகாபாத், All. W.N. 1908—185).

ஒரு வியாஜ்ஜியத்தில் வாதி வேருக மாறும்போதுதான் லிமிடேஷன் சட்டம் 22-வது செக்ஷன் பாதிக்குமேயொழிய, வாதியின் விலாசம் முதலியது திருத்தப்பட்டால் பாதிக்காது. ஜில்லா போர்ட் பிரசிடென்டின்மேல் தவறுதலாக தொடரப்பட்ட வியாஜ்ஜியம் அபீல் கோர்டில், பிரசிடென்டின்மேல் வியாஜ்ஜியம் தொடரக்கூடாதென்றும், போர்டின் பேரில் தொடரப்படவேண்டுமென்றும் உத்திரவாகியது. அம்மாதிரி மாற்றுவது வாதியை மாற்றுவதாகாதாகையால் லிமிடேஷன் ஆக்ட் 22-வது செக்ஷன் பொருந்தாது. (அனுகுல் சந்தர சக்கரவர்த்தி எ. டெக்கா ஜில்லா போர்ட் சேர்மன், A.I.R. 1928 Cal. 485).
[இ. பு. ப. 593]

பிரசிடென்ட் அல்லது வேறு மெம்பர்.—இந்த ஆக்டின்படி அல்லது லோகல் போர்டார் அனுமதியின்படி செய்யப்படும் காரியம் இந்த ஆக்டின்கீழ் செய்யும் காரியம் ஆகும். பிரசிடென்ட் அல்லது மெம்பரின்மேல் வியாஜ்ஜியம் தொடருபவர் இரண்டு மாத தவணை கொடுத்து நோடீஸ் கொடுக்காமல் செய்யும் வியாஜ்ஜியம் செல்லாது. (சன்தரசேகர் பானர்ஜி எ. சோதங்சு மோஹன் கங்குலி, 48 Cal. 45.)

இந்த ஆக்டை அனுசரித்தாகிலும்..............வியாஜ்ஜியம் கொண்டுவருவதாயிருந்தால்.—"செய்கை" என்பது "ஒப்பந்தம்" அல்லது ஒப்பந்தசம்பந்தமான செய்கைகளை குறிக்காது நல்ல எண்ணத்துடன், ஒரு மெம்பர் அல்லது பிரசிடென்ட் இந்த ஆக்டை அனுசரித்து செய்யும் காரியங்களுக்கு நோடீஸ் கொடுத்த பிறகு வியாஜ்ஜியம் தொடரவேண்டும். இந்த ஆக்டை அநுசரித்து நடக்கும் பிரசிடென்ட் அல்லது மெம்பர் கெட்ட எண்ணத்தைக் கொண்டு செய்தாலும் நோடீஸ் கொடுக்கவேண்டும், இந்த ஆக்டை மீறி பிரசிடென்டாவது, அல்லது மெம்பராவது ஒருவரை திட்டினுலும், ஒருவருடைய பொருளை அபகரித்தாலும் இந்தியன் பினல் கோட் சட்டத்திற்கு குள்ளாக்கக்கூடிய காரியங்கள் செய்தாலும் நோடீஸ் வேண்டியதில்லை. உத்தியோகத்தி லிருக்கப்பட்டவரால் செய்யப்பட்ட காரியமாயினும் ஆக்டை மீறியதாயிருக்கக்கூடாது. ஆக்டை அனுசரித்து செய்யப்பட்டதா யிருக்கவேண்டும். எந்தெந்த செய்கைக்கு நோடீஸ் வேண்டுமென்பது அந்த செய்கையை பொருந்தியது ஒரு செய்கை பிரசிடென்ட் அல்லது மெம்பராய் அல்லாதவரால் செய்யக்கூடிய செய்கையாயிருந்தால் அந்த செய்கை இந்த ஆக்டை அனுசரித்து செய்யக்கூடிய செய்கையாக கருதப்படமாட்டாது. ஒரு யூனியன் பஞ்சாயத்து சேர்மன் நம்பிக்கை துரோகம் செய்தது இந்த

ஆக்டை அனுசரித்து செய்யும் காரியமாகாது. (அப்துல் காதர் சாகிப், 1916 M.W.N. 384). ஒரு ஆக்ரமணத்தை எடுக்கும்போது ஒரு யூனியன் பஞ்சாயத்து சேர்மன் ஆக்ரமணம் செய்தவரை திட்டியது இந்த ஆக்டின்படி செய்த காரியமாகாது. (அப்துல் ரஹ்மான் கான் சாகிப், 1916, 4 M.L.W. 556=36 I.C. 142). பிரசிடென்ட் என்கிற தோரணையில் ஒருவர் சட்ட விரோதமான காரியம் செய்தால் அதற்கு இந்த செக்‌ஷன் பொருந்தாது. (சங்கரலிங்க தேவன் எ. ஆவுடை அம்மாள், 35 I.C. 826). ஒரு ஜட்ஜி கக்ஷிகாரை அவதூறாக பேசியது அவரது நியாயமான காரியங்களில் ஒன்றாகாது. (நந்தலால் பாசக் எ. மித்தர், 26 Cal. 852=3 C.W.N. 539). சென்னை துப்பாக்கி வண்டி தொழிற்சாலை சூப்ரின்டெண்ட் லைசென்ஸ் இல்லாமல் மரம் வாங்கியது, அவரது உத்தியோக முறையில் செய்யக்கூடிய காரியமல்லவென்றும், அம்மாதிரி இதரர்களும் செய்யக்கூடுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (மதராஸ் முனிசிபல் கமிஷனர் எ. மேஜர் பெல், (1903) 2 Weir 223=25 Mad. 5).

ஒரு லோகல் போர்ட் பிரஸிடென்ட் தனது சிப்பந்தியை வேலையினின்றும் நீக்கியது அவரது அதிகாரமுறையில் செய்த காரியமாகும். ஒரு பிரசிடென்ட் தன்னுடைய ஆளுக்கு ஓட்டுகொடுக்காமல் போனால் கெடுதல் செய்வதாக ஒரு ஓட்டரை பயமுறுத்தலானது அவரது அதிகாரமுறையை பொறுத்ததாகாது. (ராஜாராவ் எ. ராமஸ்வாமி 50 Mad 754=A.I.R. 1927 Mad 566). குடிகளின் ஸ்வதந்தரங்களை குறைக்கக்கூடிய செய்கைகள் எவையாகிலும் பிரசிடென்ட் செய்தால், நோடீஸ் இல்லாமல் வியாஜ்ஜியம் தொடரலாம். (சர்வோத்தம ராவ் எ. சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மன், 47 Mad 585= A.I.R. 1923 Mad 475). இந்த ஆக்ட் 6, 11-வது செக்‌ஷன்களுடன் படிக்கவேண்டும். ஒரு பிரசிடென்ட் தனது இஷ்டப்படி ஓட்டு கொடுக்காவிட்டால் அந்த ஓட்டரை கெடுத்துவிடுவதாகவும் அவருக்கு அதிக வரி விதித்து விடுவதாகவும், அவருடைய ஆக்ரமணத்திற்காக தாவா தொடருவதாகவும் பயமுறித்தி தனக்கு வேண்டியவருக்கு ஓட்டு கொடுக்ாதவரை தடுத்தால், அந்த பிரசிடென்டின்மேல் நோடீஸ் இல்லாமலும், சாங்‌ஷன் இல்லாமலும் வியாஜ்ஜியம் தொடரலாம். (நூனிபனகாளு எ. சுப்பராவ், A.I.R. 1928 M. 1158=113 I.C. 625.) "இந்த ஆக்டை அனுசரித்து நிறைவேற்றவாயினும், நிறைவேற்ற உத்தேசித்தாயினும்...... ......என்பது செய்யும் அல்லது செய்யப்போகும் செய்கையை குறிக்குமே தவிர செய்யப்போவதாய் அச்சப்படும் செய்கையைக் குறிக்கவாவது அச்சப்படும் செய்கைக்காக பரிகாரம் தேட போடப்படும் வியாஜ்ஜியத்திற்கு நோடீஸ் வேண்டியதில்லை." (விர்ஜி எ. கராச்சி முனிசிபாலிடி, 56 I.C. 527.) [இ. பு. ப. 596 & 597]

இரண்டு மாதங்கள்:—சரியான நோடீஸ் இல்லாத காரணத்தால் தள்ளுகடையாகாம லிருக்கவேண்டுமானால், பூரணமாய் 2 மாதகாலம் கொடுத்து நோடீஸ் கொடுக்கவேண்டும். பூரா இரண்டு மாத மென்பது 60 நாட்கள் அல்லது அதற்கு அதிகமோ குறைவோ யிருக்கலாம். 225 (2)-வது செக்‌ஷனில் குறிப்பிட்டிருக்கும் 6-மாதத்துடன் இந்த இரண்டு மாதத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதற்கு மேல்பட்ட வியாஜ்ஜியம் காலாவதியானதாகும். நோடீஸ் காலத்தையும் சேர்த்துக்கொண்டால் பரிகாரம் தேடவேண்டியவர் 8 மாதத்திற்குள் வியாஜ்ஜியம் தொடரவேண்டும். [இ. பு. ப. 602]

செ. **225 (2)**.—ஸ்தாவர சொத்துக்கள் விஷயமாய் செய்யும் வியாஜ்ஜியங்களுக்கு நோடீஸ் கொடுக்கவேண்டியதில்லை. நிலத்தை ஸ்வாதீனம் செய்துக்கொள்ளுவதற்காக செய்யும் வியாஜ்ஜியத்திற்கு இந்த செக்‌ஷன் பொருந்தாது. பிரசிடென்ட் அல்லது மெம்பர் அல்லது அவர்களின் அநுமதிபெற்றவர் நல்ல எண்ணத்தோடு சட்ட வரம்பிற்குள் செய்யும் காரியத்தால் நேரிடும் நஷ்டம், பொருள் சேதம் இவைகளுக்காக தொடரப்படும் வியாஜ்ஜியத்திற்கு மட்டும் இந்த செக்‌ஷன் பொருந்தும். முற்பகுதியில் நோடீஸ் கொடுக்கவேண்டுமென்று கூறியதின் காரணம், வாதிக்கு உண்டாகும் நஷ்டத்திற்கு தக்க திரவ்விய சகாயம் செய்து அனாவசியமாய் வியாஜ்ஜியத்தில் பணவிரயம் செய்யாமலிருப்பதற்காக கூறப்பட்டது. பிரசிடெண்ட் அறிந்தோ, அறியாமலோ இதரர்களுடைய நிலங்களை கைப்பற்றிக்கொண்டு, அவர்களுக்கு ஈடு செய்யாமல் வைத்துக்கொண்டு அவர்கள் கண் விழித்துக்கொண்டு 6 மாத காலத்திற்குள் வியாஜ்ஜியம் தொடரவேண்டுமென்றும் இல்லாவிடில் இழந்துவிடவேண்டுமென்று சட்டசபை நிர்மாணர்களின் அபிப்பிராயமில்லை. (சாந்தர் சிக்கூர் புந்தோபாத்யோ எ. ஒபி சிம் பாக்கி, 6 Cal. 8 (F.B.); ராம்சந்தரா எ. சாடே சந்தரர், 55 I.C. 1351=A.I.R. 1929 Cal. 190.) [இ. பு. ப. 605]

நல்ல எண்ணத்துடன்.—உத்தியோகத்தை வகிக்கும் பிரசிடென்ட் அல்லது மெம்பர் செய்யும் காரியம் உத்தியோக முறையில் செய்ததாக இருக்கவேண்டும். உத்தியோகத்திலிருக்கிறபோது செய்தகாரியம் என்று சிலர் தப்பு அர்த்தம் செய்கிறார்கள். பிரசிடென்ட்

முதலியவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுகையில் உத்தியோகமுறையில் செய்யும் காரியங்களுக்குமட்டும் இந்த பாத்தியதை கொண்டாடலாம். எந்த செய்கைக்கு நோடீஸ் வேண்டுமென்பது அந்த செய்கையை பொறுத்தது. சாதாரண சட்டத்தை மீறி ஒரு அதிகாரி நடக்கலாமென்பது சர்காரின் எண்ணம் அல்ல. [இ. பு. ப. 612]

குற்றங்களின் விஷயமாய் ராஜி செய்துகொள்வது.

226. இந்த ஆட்டின்படிக்கான யாதொரு குற்றத்தின் விஷயமாய் ராஜிசெய்துகொள்ளலாமென்று பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்படக்கூடுமானால், அப்படிப்பட்ட குற்றத்தின் விஷயமாய் லோகல் போர்டு ப்ரெஸிடன்ட் ராஜி செய்துகொள்ளலாம்.

குறிப்பு.

செ. **226**. **குற்றங்கள் விஷயமாக ராஜி செய்துக்கொள்ளுவது**.—ராஜி செய்துக் கொள்ளும் குற்றங்களில் இரண்டுவிதமுண்டு. கக்ஷிக்காரர்கள் தங்களுக்குள்ளேயே ராஜி செய்துக்கொள்ளக்கூடியது, கிரிமினல் ப்ரோஸீஜர் கோர்ட் 345 வது செக்ஷன்படி கோர்டாரின் அனுமதியின்மேல் ராஜி செய்துக்கொள்ளக் கூடியது என இருவகையுண்டு. செக்ஷனில் “கோர்டாரின் அனுமதியின்பேரில்” என்கிற வார்த்தைகள் காணப்படாமற்போன போதிலும், விதிகளில் காணப்படுவதால், ராஜிசெய்துக்கொள்ளும் அதிகாரத்தை நிர்ணயிக்கிறது. கோர்டின் அனுமதியோடு ராஜி செய்துக்கொள்ளக்கூடிய கேஸை வாபீஸ் வாங்கிக் கொள்ள கிரிமினல் ப்ரோசிஜர் கோட் 248-வது செக்ஷன்படி கோர்டின் அனுமதிபெற்று வாபீஸ் வாங்கவேண்டும். விதிகள்படி ராஜியாகமட்டும்போகவேண்டுமானால் கோர்டின் அனுமதி வேண்டியதில்லை. ராஜி ஆகக்கூடாத கேஸ்களில், கோர்டின் அனுமதியின்மேல் கேஸை வாபீஸ் வாங்கிக்கொண்டு எதிரியை விடுதலை செய்ய விடுவதே உச்சிதம். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாவா தொடர்ந்தபின் கேஸிற்கும் லோகல் போர்டின் பிரசிடெண்டுகளுக்கும் சம்பந்தமில்லை. கோர்டின் அனுமதியின்மேல் ராஜியாகப் போகக்கூடிய கேசிலும் கோர்டின் அநுமதியின்மேல் வாபீஸ் வாங்கக்கூடிய கேஸ்களிலும் பிரசிடென்டுகள் பிரவர்த்திக்கமுடியாது. கேஸை வாபீஸ் வாங்கிக்கொள்ள கோறும் பிராதி, மாஜிஸ்டிரேட்டுக்கு தக்க முகாந்தரம் காட்டினாலொழிய மாஜிஸ்டிரேட் அநுமதிக்காமலிருக்கலாம். (சிஷிர் எ. கல்கத்தா கார்பொரேஷன், A.I.R. 1926 Cal. 786=53 Cal. 631). [இ. பு. ப. 613]

மெம்பர்கள் சொத்தை இழந்துவிட்டாலும் பாழ்பண்ணினாலும் துர்வினியோகஞ்செய்தாலும் அவர்கள் உத்தரவாதிகளாவது.

227. (1) லோகல் போர்டாருக்குச் சொந்தமான அல்லது அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் ஏதேனும் பணமாவது வேறே சொத்தாவது இழந்துவிடப்பட்டாலும் பாழ்பண்ணப்பட்டாலும் துர்வினியோகஞ் செய்யப்பட்டாலும், அது லோகல் போர்ட் மெம்பருடைய அஜாக்கிரதையினாலாவது துர் நடத்தையினாலாவது நேராய்ச் சம்பவித்ததாயிருக்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட ஒவ்வொரு லோகல் போர்டு மெம்பரும் அதற்கு உத்தரவாதியாவார்; அதற்குச் ஈடுபண்ணும் பொருட்டு பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப்பெற்று லோகல் போர்டாராவது ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரியவர்களாவது தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்.

(2) அப்படிபட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்தையும், வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட தேதிக்குப் பிறகு மூன்று வருஷத்துக்குள் தொடங்கவேண்டும்.

குறிப்பு.

செ. **227**. **பொது**.—சொத்தை இழந்துவிடுதல், பாழ்செய்தல், துர்விநியோகம் செய்தல் முதலியவை கிரிமினல் செய்கையாகாது; சிவில் பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம். லோகல் போர்டு தாவா தொடரவேண்டுமானால் லோகல் கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெறவேண்டும். இந்தியா மந்திரியின் பெயரால் லோகல் கவர்ன்மெண்ட் தாவா தொடரலாம். நஷ்டம், பாழ், துர்வினியோகம் முதலியவைகளுக்காக தாவா தொடர காலாவதி மூன்று

வருஷம். தாவா தொடரும்போது ஒரு மெம்பர் ஸ்தானம் வகித்துள்ளாரா அல்லது அந்த ஸ்தானம் காலியாகி விட்டதா என்கிறதில்லை. காலாவதியாகுமுன் தாவா எப்பொழுதாவது தொடரலாம். இந்த செக்ஷன்படி டிக்கிரி பெறுவதால் அந்த மெம்பர் தன் ஸ்தானத்தை 56-வது செக்ஷன்படி இழக்கமாட்டார். சர் சார்ஜஜும் செய்யப்படலாம்.

[இ. பு. ப. 613 & 614]

யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடென்டின் மேலாவது மெம்பர் மேலாவது பிராது தொடருவதற்காக அனுமதி பெறுவது.

227-A. யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடென்டாவது அதன் யாதொரு மெம்பராவது தம்முடைய உத்தியோக சம்பந்தமான அலுவலை நடத்தும்போதாகிலும் அப்படி நடத்துவதாகப் பொருள்படும்போதாகிலும் செய்திருப்பதாகச் சொல்லப்படும் யாதொரு குற்றம் அவர்மேல் சாட்டப்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருந்தாலன்றி மற்றபடி, எந்த கோர்டாரும அப்படிப்பட்ட குற்றத்தைப் பிடித்துப் பரிசீலனை செய்யக்கூடாது.

குறிப்பு.

செ. **227 A**. அதிகார முறையில் செய்யப்பட்ட அல்லது எத்தனித்த செய்கை.— ஒரு யூனியன் சேர்மன் ஒரு ஆக்ரமணத்தை அப்புறப்படுத்தும்போது பிராதியை திட்டியது அந்த சேர்மன் தன் அதிகாரமுறையில் செய்த காரியமாகாது (அப்துல் ரஹ்மான்கான் சாகிப், (1916) 1 M.W.N. 384=33 I.C. 648.)

[இ. பு. ப. 614]

வரி விதிப்பு முதலானவைகளைக் குறித்து தோஷம் சொல்லக்கூடாது.

228. (1) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், (a) யாதொரு நபருடைய பெயர் - வாசஸ்தலம்-வியாபாரஸ்தலம் அல்லது தொழில் விஷயமாகவாவது, (b) யாதொரு சொத்து அல்லது வஸ்துவின் விவர விஷயமாகவாவது, (c) போடப்பட்டோ அல்லது கேட்கப்பட்டோ அல்லது விதிக்கப்பட்டோ இருக்கிற தொகை விஷயமாகவாவது நேரிட்ட யாதொரு எழுத்துப்பிழை காரணமாகவாகிலும் யாதொரு பிசகு காரணமாகவாகிலும், இந்த ஆக்டினால் ஏற்படும் அதிகாரத்தைக்கொண்டு போடப்பட்ட வரியைக் குறித்தோ அல்லது செய்யப்பட்ட டிமாண்டைக்குறித்தோ விதிக்கப்பட்ட கட்டணத்தைக்குறித்தோ தோஷம் சொல்லவுங்கூடாது. அப்படிப்பட்டதற்கு பாதகமுண்டாகவுமாட்டாது. மேலும், இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கைகளும் முறைமை விஷயத்தில் யாதொரு குறைவு காரணமாக மாத்திரமே நீதிசெலுத்தும் யாதொரு கோர்ட்டாரால் ரத்துசெய்யப்படவுமாட்டாது தள்ளிவிடப்படவுமாட்டாது.

(2) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், இந்த ஆக்டினால் ஏற்படும் அதிகாரத்தைகொண்டு வசூல் செய்யப்படும் யாதொரு தொகையை வரப்பற்றுவதற்காகவாகிலும், மேற்படி அதிகாரத்தைக்கொண்டு செய்யப்பட்ட யாதொரு வரி விதிப்பு அல்லது தொகை வசூலின் காரணமாக நேரிடும் நஷ்டத்திற்காகப் பிரதிபலன் வரப்பற்றுவதற்காகவாகிலும் யாதொரு கோர்ட்டிலே வியாஜ்ஜியம் எதுவும் நடத்தக்கூடாது.

(3) இந்த ஆக்டிலும் விதிகளிலும் சகாயச்சட்டங்களிலும் உள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாகவும் அனுசரிக்கப்பட்டிருந்தால், பில்லிலாவது நோட்டீஸிலாவது ஷெட்யூலிலாவது நமூனாவிலாவது ஸம்மனிலாவது டிமாண்ட் நோட்டீஸிலாவது ஜப்தி வாரண்டிலாவது சாமான் ஜாபிதாவிலாவது இதற்குச் சம்பந்தப்பட்ட வேறே நடவடிக்கையிலாவது யாதொரு பிழையாகிலும் ஒழுங்குக்குறைவு அல்லது கிரமப்பிசகாகிலும் இருப்பது காரணமாக, இந்த ஆக்டின்படி

செய்யப்பட்ட ஜப்தியாவது விற்பனையாவது சட்ட விரோதமாயிருப்பதாக எண்ணப்படவுமாட்டாது, ஜப்தி அல்லது விற்பனை செய்கிற யாதொரு நபர் அதிக்கிரமமாய் நடந்தவராக எண்ணப்படவுமாட்டார். ஆனால், யாதொரு ஒழுங்கீனத்தினாலே அநியாயமடைந்த பிரதி நபரும்-தாம் அடைந்திருக்கிற குறித்த யாதொரு சேதத்திற்காகப் பரிகாரம் பெறலாம்.

குறிப்பு.

செ. **228** பொது.—தலையங்கம் " வரி விதிப்பு முதலானவைகளைக் குறித்து தோஷம் சொல்லக்கூடாது" என்று இருந்தபோதிலும் செக்ஷன் "வரியைக் குறித்தோ அல்லது டிமான்டை குறித்தோ" என்பதால் இந்த ஆக்டின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முறைமை விஷயத்திலுள்ள குறைவால் ரத்து செய்யப்படமாட்டாது என்று விரிந்தபொருள் படுகிறது. இந்த சட்டத்தின்படி, உபசட்டம்,விதிகளின்படியுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்படாத பக்ஷத்தில் அது சட்ட விரோதமானது; அதை ரத்து செய்ய தாவா தொடரலாம். நஷ்டப்பட்டவர் நஷ்ட தாவா தொடரலாம். (கடலூர் முனிசிபல் கௌன்சல் எ. கிருஷ்ண நம்பியார், 50 Mad. 987=A.I.R. 1927 Mad. 968). விதிக்கப்பட்டு அக்கிரமமாய் வசூலிக்கப்பட்ட வரியைப்பற்றி ஸ்மால் காஸ் கோர்டில் (Small Cause Court) தாவா தொடரலாம், ஆனால் தன்னிடமிருந்து வசூலித்த பணத்திற்கு வட்டியை நஷ்டயீடாக கேட்க்கும் பக்ஷத்தில் ஸ்மால் காஸ் கோர்ட் ஆக்ட் 35 (j) செக்ஷன்படி அந்த கோர்டின் அதிகாரத்தை எடுத்துவிடும். (கல்யாண் முனிசிபாலிடி எ. கோவிந்த கார்சான் ராம்ஜி, A.I.R. 1925 B. 419.) [இ. பு. ப. 615]

இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும், வாஸ்தவமாயும் அனுசரிக்தும் பக்ஷத்தில்.—இந்த செக்ஷனில் மூன்று உபசெக்ஷன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு உபசெக்ஷனிலும் இந்த பதங்கள் காணப்படுகின்றன. 3-வது உபசெக்ஷனில் "செய்கை" என்னும் பதத்திற்கு பின் 'விதிகள், உப-விதிகள்' என்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1-வது சப்-செக்ஷனில் " எழுத்துப்பிழை காரணமாகவாகிலும், யாதொரு பிசகு காரணமாகவாகிலும் விதிக்கப்பட்ட வரியைக் குறித்தோ அல்லது கொடுக்கப்பட்ட டிமாண்டை குறித்தோ தோஷம் கூறக்கூடாது." (2) வரி வசூல் தொகையை யாகிலும் அல்லது அம்மாதிரி வசூலித்தால் நேரிடும் நஷ்டத்திற்காக பிரதி பலன் வரப்பற்றுவதற்காகிலும் யாதொரு கோர்டிலும் வியாஜ்ஜியம் எதுவும் நடத்தக்கூடாது. (3) ஜப்தியாவது, விற்பனையாவது சட்ட விரோதமாயிருப்பதாக எண்ணப்படமாட்டாது, ஜப்தி அல்லது விற்பனை செய்கிற யாதொரு நபர் அதிக் கிரமமாக நடந்தவராக எண்ணப்படமாட்டார். மேற்கூறிய வாக்கியத்தால் அவர்கள் செய்யும் பிசகுக்கு பரிகாரம் இல்லை என்று பொருளல்ல " அநியாயமடைந்த பிரதி நபரும் தாம் அடைந்திருக்கிற...........சேதத்திற்காக பரிகாரம் பெறலாம்." ஒரு வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுமுன் அது இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் அனுசரிக்கப்பட்டதா என்று பார்க்கவேண்டும். நியாயப்படி விதிக்கப்படாத வரிக்கும் வரி கட்ட அருகரல்லாதவரிடமிருந்து வசூலிக்கும் வரிக்கும் வித்தியாசமில்லை. இரண்டு விஷயங்களிலும் முக்கிய அம்சங்கள் கவனிக்கப்படுவதில்லை. (காகினாட முனிசிபல் கௌன்சல் எ. ஸ்டாண்டர்ட் லைப் அஷ்யூரனஸ் கம்பனி, 24 Mad. 205 (213)). ஒரு வரி விதிக்கப்பட்டிருப்பதாக விளம்பர பிரசுரம் செய்யப்படாமலிருந்தால் அந்த வரி விதிக்கப்படவேண்டிய, இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் அனுசரிக்கப்பட்டதாக கருதப்படமாட்டாது. லோகல் போர்டுகள் தங்கள் அதிகாரங்களை சரிவர செலுத்தி சட்டத்தில் கூறியுள்ள நிபந்தனைகளின் முக்கிய அம்சங்களை செவ்வனே அனுசரித்து, நீதி வழுவாமல் நடப்பார்களென எதிர் பார்த்து ஏராளமான அதிகாரம் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் அனுசரிக்காத பக்ஷத்தில் கோர்டார் பிரவர்த்திக்க அதிகாரமுண்டு. (கிருஷ்ண சணல், பருத்தி கம்பனி எ. விஜயநகரம் முனிசிபல் கௌன்சல், A.I.R. 1926 Mad. 152=91 I.C. 297). நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டதா இல்லையா என்பது அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. (காகினாடா முனிசிபல் கௌன்சல் எ. ஸ்டாண்டர்ட் லைப் அஷ்யூரன்ஸ் கம்பனி, 24 Mad. 205 (213); முனிசிபல் கௌன்சல், தஞ்சாவூர் எ. அம்பாபாய் சாகிப் 23 Mad. 523). வரிகட்ட அருகரல்லாதவர் மேல் வரி விதிப்பது இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் அனுசரித்ததாகஎண்ணப்படமாட்டாது. (பம்பாய் கம்பனி லிமிட்டெட் எ. திண்டுகல் முனிசிபல் கௌன்சல், A.I.R. 1929 Mad. 146 (2)=108 I.C. 216). ஒரு தாலூகா போர்டாரால் நல்ல எண்ணத்துடன் விதிக்கப்பட்ட வரியை குறித்து எந்த கோர்ட்டிலும் வியாஜ்ஜியம் தொடரக்கூடாது. (51 M.L.J. Notes on Recent Cases). [இ. பு. ப. 616 & 617]

லோகல் போர்டுகளின் ஊழியக்காரர்களையும் ஒப்பந்தகாரர்களையும் தடுப்பது கூடாதென்பது.

229. லோகல் போர்டாரையாவது அதன் ப்ரெஸிடென்டையாவது அதன் மெம்பரையாவது லோகல் போர்டாரால் வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்ட யாதொரு நபரையாவது லோகல் போர்டுக்காக ப்ரெஸிடென்ட் யாரோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறாரோ அந்த நபரையாவது அவர்கள் தங்களுடைய வேலையைச் செய்யும்போதாகிலும், இந்த ஆக்டை அனுசரித்தாயினும் இதன்படி செய்யப்பட்ட யாதொரு சகாயச்சட்டம், விதி, ரெகுலேஷன் அல்லது உத்தரவை அனுசரித்தாயினும் இவைகள் காரணமாகவாயினும் அவர்கள் செய்ய அதிகாரம் கொடுக்கப்பெற்ற அல்லது செய்யவேண்டியவர்களாயிருக்கிற யாதொரு காரியத்தைச் செய்யும்போதாகிலும் எவரும் தடுக்கவுங்கூடாது, தொந்தரவு செய்யவுங்கூடாது.

நோடீஸை எடுத்து விடுவது அல்லது கலைத்துவிடுவதைத் தடுப்பது.

230. லோகல் போர்டின் அல்லது அதன் ப்ரெஸிடென்டாலாவது அவர்களுடைய உத்தரவின்படியாவது, காட்டிவைக்கப்படும் யாதொரு நோடீஸையாகிலும், ஏற்படுத்தப்படும் யாதொரு அடையாளம் அல்லது குறியையாகிலும் எவரும் அது விஷயமாய் அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் எடுத்துவிடவுங்கூடாது, அழித்துவிடவுங்கூடாது, கெடுத்துவிடவுங்கூடாது, மற்றப்படி கலைத்துவிடவுங்கூடாது.

ஸ்டேட்மென்டுகள் அல்லது விவரக்கணக்குகள் சவதரிக்க வேண்டுமென்று கர்ணங்களையும் பெரியதனக்காரர்களையும் கேட்க ப்ரெசிடென்டுக்குள்ள அதிகாரம்.

231. (1) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் அந்த லோகல் போர்டைச் சேர்ந்த விஸ்தீர்ணத்துக்குள் அடங்கியிருக்கும் யாதொரு ரெவின்யூ கிராமத்தின் கர்ணத்தையாவது பெரியதனக்காரரையாவது அவர்கள் இருவரையுமாவது அந்த ரெவின்யூ கிராமத்தின் விஷயமாய் இந்த ஆக்டின் காரியங்களுக்காக வேண்டியிருக்கும் யாதொரு ஸ்டேட்மென்ட், கணக்கு அல்லது ரிடர்னை (விவரக்கணக்கை) நியாயமான ஒரு காலத்துக்குள் சவதரிக்கவேண்டுமென்று கலெக்டரின் அனுமதியுடனும் எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டும் கேட்கலாம்.

(2) எந்த கிராம உத்தியோகஸ்தரும்-குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவின் பிரகாரம் நியாயமான காரணமில்லாமல் நடக்காமலிருக்கக்கூடாது.

குறிப்பு.

செ. **231**.—கிராம கர்ணம், அல்லது பெரியதனக்காரர் அல்லது இருவரையும் ஸ்டேட்மெண்ட், அல்லது கணக்கு அல்லது ரிடர்ன் முதலியவைகளை பிரசிடென்ட் சவதரிக்கும்படி கேட்குமுன் ஜில்லா கலெக்டரின் அனுமதிபெறவேண்டும். கலெக்டரின் அனுமதி கோருமல் இடும் உத்தரவை மீறி நடந்தால் அவர்களை 8-வது ஷெட்யூலில் கூறியுள்ள தண்டனைக்குள்ளாக்க முடியாது கலெக்டரின் உத்தரவை பெற்ற பிறகும் கர்ணம் அல்லது பெரியதனக்காரர் 74-வது செக்ஷன்படி லோகல் போர்ட் சிப்பந்தியாகமாட்டார். 73-வது செக்ஷன்படி பிரசிடென்ட் அவரை சிப்பந்தியாக தண்டிக்க முடியாது. [இ. பு. ப. 623]

கட்சிக்காரர்களுக்கு ஸம்மன் அனுப்ப அதிகாரம்.

232. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி வரி விதிப்பதற்காவது யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பதற்காவது சம்பந்தப்படுகிற யாதொரு கேள்வி விஷயமாய் தமக்கு முன் ஹாஜராகி சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாட்சியம் சொல்லும்படியோ அல்லது தஸ்தவேஜுகளைக் காட்டும்படியோ யாதொரு நபருக்கு ஸம்மன் அனுப்பலாம்.

குறிப்பு.

செ. 232. கக்ஷிக்காரர்களுக்கு சம்மன் அனுப்ப அதிகாரம்.—வரி விதிப்பதாவது 75, 76-வது செக்ஷன்களில் சொல்லிய வரிகளைக் குறிக்கும். தனிப்பட்ட நபர்கள் தவிர, வீட்டுவரி கட்டவேண்டிய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், வீட்டுவரி, பிரயாணிகள் வரி கட்டவேண்டிய ரயில் உத்தியோகஸ்தர்களையும் இந்த செக்ஷன்படி சம்மன் செய்து வரவழைக்கலாம். யூனியன் எல்லைக்கு அப்புறமிருக்கும் வீடுகளுக்கு வீட்டுவரி விதிக்க அதிகாரமில்லை யாதலால், அம்மாதிரி வீட்டுவரி விதிக்க சம்மன் அனுப்பியதை நிராகரித்ததற்காக அவர்மேல் வியாஜ்ஜியம் தொடர முடியாது (யூனியன் போர்ட் பிரசிடெண்ட், திருக்குருங்குடி எ. நாராயண நாடார், A.I.R. 1926 Mad. 1261=113 I.C. 276). [இ. பு. ப. 623]

தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்குக் கொடுக்கவும் மத்தியஸ்தம் செய்யவும் பிரதேச கவர்ன்மேண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்கு கொடுப்பது.

233. பிரதேச கவர்ன்மெண்டார் - விதிகளைச் செய்யவாவது ஷெட்யூல்களை மாற்ற அல்லது ரத்துபண்ணவாவதுள்ள அதிகாரத்தையும் 128-வது பிரிவின்படி செலுத்தத்தக்கதாகும் திரவ்விய சகாயதொகையை நிச்சயிப்பதற்கான அதிகாரத்தையும் 227-A பிரிவின்படி பிராது தொடருவதற்கு அனுமதி கொடுப்பதற்கான அதிகாரத்தையும் தவிர இந்த ஆக்டின்படி தங்களிடத்தில் சங்கிரமித்திருக்கிற அதிகாரங்களில் யாதொன்றையாவது பலவற்றையாவது யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில், அந்த விஸ்தீர்ணத்திலுள்ள யாதொரு லோகல் போர்டின் விஷயமாகவாயினும் யாதொரு வகையை சேர்ந்த லோகல் போர்டின் விஷயமாகவாயினும் சகல லோகல் போர்டுகளின் விஷயமாகவாயினும் செலுத்த விளம்பரமூலமாய் எந்த நபருக்காகிலும் அதிகாரம் கொடுக்கலாம்; மேலும், அப்படிப்பட்ட அதிகாரத்தை அப்பிரகாரமே எடுத்துவிடலாம்.

பிரதேச அதிகாரசபை களுக்குள் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பது.

234. (1) யாதொரு லோகல் போர்டுக்கும் வேறே ஒரு பிரதேச அதிகார சபை அல்லது பல பிரதேச அதிகார சபைகளுக்கும் இந்த ஆக்டில் அல்லது வேறே யாதொரு ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி எந்த விஷயங்கள் சம்பந்தமாகவாகிலும் விவாதம் ஏற்பட்டிருந்து, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் அதைத் தங்களுக்குள்ளே சமாதானமாய்ப் பைசல் செய்து கொள்ள முடியாதென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் அந்த விவாதத்தைப்பற்றி விசாரித்து—

(a) அதைத் தாங்களே தீர்மானிக்கலாம் ; அல்லது,

(b) அதைப்பற்றி விசாரணை பண்ணி ரிபோர்ட் செய்வதற்காக அதை யாதொரு மத்தியஸ்தருக்காவது மத்தியஸ்தர்கள் அடங்கிய ஒரு சபைக்காவது இது காரியத்துக்காக 30-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுக் கம்மிட்டிகாவது அனுப்பலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்ட ரிபோர்டைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்ப வேண்டும்; அவர்கள் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி அந்த விவாதத்தைத் தீர்மானிக்கவேண்டும்.

(3) சந்தர்பத்துக்கேற்றபடி, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (a) அடையாளமிட்ட பகுதியின்படியாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது பிரதேச கவர்ன்மெண்டார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்; மேலும், அது விவாதம் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு பிரதேச அதிகார சபையையும் கட்டுப்படுத்துவதாகும்.

பலவகைப்பட்டவை.

புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுக்கு சொத்தும் உரிமைகளும் மாறுவது.

235. (1) 1884-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டாருக்குச் சொந்தமாயிருக்கும் அல்லது அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அவர்களாலாவது அவர்களுக்காகவாவது ட்ரஸ்டில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் சகல சொத்தும், உபயோகிக்கப்படும் அல்லது அனுபவிக்கப்படும் அல்லது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உரிமைகள் எவ்வகையைச் சேர்ந்தவையாயினும் சரி அப்படிப்பட்ட சகல உரிமைகளும் சகல பாத்தியதைகளும், ஷை போர்டாரின்மேல் சட்டப்படி ஏற்பட்டிருக்கும் சகல பொறுப்புகளும் இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்படும் அதே லோகல் போர்டாருக்கு மாறவேண்டும்.

(2) இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது யாதொரு லோகல் போர்டாருக்குச் சேரவேண்டியதாயிருக்கும் சகல வரி பாக்கிகளையும் அல்லது ஒரு வரிக்காக ராஜி ஏற்பாட்டின்படி செலுத்தவேண்டிய இதிர தொகைகளையும் அல்லது செலவுகளுக்காகவாகிலும் பிரதிபலனுக்காகவாகிலும் மற்றப்படியாகிலும் செலுத்தவேண்டியிருக்கும் இதிர தொகைகளையும், அவை இந்த ஆக்டின்படி பாக்கியாய் ஏற்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே வசூல் செய்யலாம்.

குறிப்பு.

செ. **235 (2).** சகல வரி பாக்கிகள்.—1920௵ ஜில்லா முனிசிபாலிடி ஆக்ட் அமுலுக்கு வருமுன் சேரவேண்டிய வீட்டுவரி பாக்கிக்காக, புது ஆக்ட் அமுலுக்குவந்த உடன் 85, 367-வது செக்ஷன்கள்படி வசூலிக்க வியாஜ்ஜியம் தொடர்ந்தது. 367-வது செக்ஷன்படி வரி வசூலிக்கும் விதத்தைக் குறிக்கிறதென்றும் புது ஆக்ட் அமுலுக்கு வந்த பிறகு தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களுக்குத்தான் மேற்கூறிய விதம் பொருந்துமென்றும், இந்த ஆக்ட் அமுலுக்குவருமுன் கக்ஷிக்காரர்களுக்குள்ள பாத்தியதையை பாதிக்காதென்றும் 367-வது செக்ஷன் 85-வது செக்ஷனுக்குமுன் நடந்தவைகளுக்கு அதிகாரம் கொடுக்காதென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. (51 M.L. J. Notes on Recent Cases, Page 34.)
[இ. பு. ப. 626]

ரெயில்வே ஸெஸ் என்னும் வரியிலிருந்து சேரும் தொகைகளை உபயோகப்படுத்திக் கொள்வது.

236. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போது 1884-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 57-வது பிரிவைச் சேர்ந்த (ii) குறிப்பிட்ட பகுதியின் படி விதிக்கப்பட்ட யாதொரு வரியிலிருந்து கிடைத்த பணம் அல்லது அந்த பணத்தை எவ்விதமாகவாவது வட்டிக்கு போட்டு வைத்த தனுல் கிடைத்த பணம் சேர்ந்து ஏற்பட்டுள்ள எவையேனும் தொகைகளை 113-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் திட்டங்களுக்குட்பட்டு—

(a) இந்தியா கவர்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, 113-வது பிரிவைச் சேர்ந்த (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கும் காரியங்கள் எல்லாவற்றிற்குமாகிலும் அவைகளில் எதற்காகவாகிலும்,

(b) பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு,—

(i) 113-வது பிரிவைச் சேர்ந்த (2) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கும் காரியங்கள் எல்லாவற்றிற்குமாகிலும் அவைகளில் எதற்காகவாகிலும்,

(ii) புதிய பாட்டைகளையும் வாராவதிகளையும் செய்கரைகளையும் கல்வெர்ட் என்னும் சிறு பாலங்களையும் இதர வகைகளைச் சேர்ந்த கட்டுவேலைகளுக்கு முன்னதாக ஏற்படுத்தவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, உபயோககரமாகவும் நிலையாகவுமுள்ள வேறே கட்டுவேலைகளின் மூலதன செலவுக்காகவாகிலும் உபயோகிக்கலாம்.

இந்த ஆக்ட் வியாபகமும் அது வழங்கத்தொடங்குவதும்.

237. (1) இந்த-ஆக்டானது சென்னை ராஜதானிப் பட்டணத்தையும் 1920-வருஷத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் பிரயோகப்படுகிற மியுனிஸிபாலிடிகளையும் தவிர சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கிறது,

(2) இது-பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய் ஏற்படுத்தக்கூடிய தேதி அல்லது தேதிகளில் செலாவணியாகத் தொடங்கவேண்டும்; மேலும், இந்த ஆக்டின் வெவ்வேறு நிபந்தனைகளுக்காகவும் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த லோகல் போர்டுகளுக்காகவும் ப்ரெஸிடென்ஸியின் வெவ்வேறு பாகங்களுக்காகவும் வெவ்வேறு-தேதிகள் நியமிக்கப்படலாம்:

ஆனல், விதிகளையும் சகாயச் சட்டங்களையும் ரெகுலேஷன்களையும் செய்யவாவது அங்கீகரிக்கவாவதுள்ள அதிகாரத்தை-இந்தியா கவர்ன்மெண்டாருக்குச் சம்பந்தப்பட்ட 1915-ம்வருஷத்து ஆக்ட் 81-வது பிரிவின்படி, கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியைப் பிரசித்தஞ்செய்த பிறகு எப்போதாகிலும் செலுத்தலாம்:

மேலும், பிரதேச கவர்ன்மெண்டார்-விளம்பர மூலமாய் இந்த ஆக்டின் யாதொரு பிரிவையாவது அப்படிபட்ட பிரிவின் யாதொரு பாகத்தையாவது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி செய்யப்பட்ட யாதொரு விதியையாவது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நிர்ப்பந்தங்கள் அல்லது திருத்தங்களுடன் 1874-ம்வருஷத்திய ஷெட்யூலில்கண்ட டிஸ்ட்ரிக்டுகளாக்டில் அர்த்தம் சொல்லப்பட்டப்படிக்குள்ள யாதொரு ஷெட்யூலில்கண்ட டிஸ்ட்ரிக்டுக்குப் பிரயோகப்படுத்தலாம் அல்லது பொருத்திக்கொள்ளலாம்.

238. [மதராசு 1930-வருஷத்து 11-வது ஆக்டால் ரத்து செய்யப்பட்டது.]

239. [மதராசு 1930-வருஷத்து 11-வது ஆக்டால் ரத்து செய்யப்பட்டது.]

புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுகளின் விஷயத்திலும் மீண்டும் அமைக்கப்பட்ட லோகல் போர்டுகளின் விஷயத்திலும் பிரத்தியேகமான நிபந்தனை.

240. (1) இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, முதல் தடவையாக யாதொரு லோகல் போர்ட் அமைக்கப்படும்போது, பிரதேச கவர்ன்மெண்டார் - லோகல் போர்ட், அதன் ப்ரஸிடென்ட் ஆகிய இவர்களின் அதிகாரங்களைச் செலுத்தும்படியும் கடமைகளை நிறைவேற்றும்படியும் அலுவல்களைச் செய்யும்படியும் ஒரு (ஸ்பெஷல்) விசேஷ உத்தியோகஸ்தரை நியமிக்கலாம்.

(2) ஷை விசேஷ உத்தியோகஸ்தரானவர் - புதியாய்த் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ரெவினியு டிஸ்ட்ரிக்ட் அல்லது ரெவினியு தாலூகா ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்தாவது 4-வது அல்லது 5-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்தாவது ஆறுமாத காலத்துக்குள் ஒரு தினத்திலே உத்தியோகத்துக்கு வரும்படியாக எலெக்ஷன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்விக்கவேண்டும்.

(3) ஷை விசேஷ உத்தியோகஸ்தரானவர் - லோகல் போர்ட் ஏற்படுத்தப்பட்டாகிற வரையில் அந்த போர்டின் அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளை நிறைவேற்றி அலுவல்களைச் செய்யவேண்டியதுமல்லாமல், போர்டால் ப்ரெஸிடென்டை தெரிந்தெடுக்கப்படுகிறவரையில் ப்ரெஸிடென்டின் அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளை நிறைவேற்றி அலுவல்களைச் செய்யவும் வேண்டும்.

(4) ஷை போர்ட் அமைக்கப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்திலே, விசேஷ உத்தியோகஸ்தரால் நிஷ்கரிஷை செய்யப்படும் தினத்திலும் காலத்திலும் போர்டின் ப்ரெஸிடெண்டை தெரிந்தெடுப்பதற்காக அதன் சபையொன்று கூட்டப்படும். அந்த சபையில் ப்ரெஸிடென்ட் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், விசேஷ உத்தியோகஸ்தரால் நிஷ்கரிஷை செய்யப்படும் தினத்திலும் காலத்திலும் புதிதாய் எலெக்ஷன் நடத்தப்படும்.

(5) மெம்பர்களின் அல்லது தற்செயலாய் நேரிட்ட காலி ஸ்தானங்களில் அவர்களுக்குப் பர்த்தியாக தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உத்தியோக காலமானது (2) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தினமானது நவம்பர் மாதம் முதல் தேதியானல் மூன்று வருஷ முடிவிலும் மற்ற விஷயங்களில் ஷை தினத்துக்கு அடுத்த முந்தியுள்ள நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று வருஷ முடிவிலும் முடிவாகும்.

(6) (1) குறிப்பிட்ட உட்பிரிவு முதல் (5) குறிப்பிட்ட உட்பிரிவு வரையிலுள்ள உட்பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிற படிக்கன்றி மற்றப்படியும் சாத்தியமான வரையிலும் லோகல் போர்டுகள் மீண்டும் அமைக்கப்படும் சகல விஷயங்களுக்கும் பிரயோகப்படும்.

(7) யாதொரு லோகல் போர்டில் இருக்கும் ஸ்தானங்களின் சங்கியை 10-வது பிரிவின்படி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் படியாவது அதன் காரணமாகவாவது அதிகப்படுத்தப்பட்டால், அதிகப்படியான ஸ்தானங்களுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாகிலும் தற்செயலாய் நேரிடும் காலி ஸ்தானங்களில் அவர்களுக்குப் பர்த்தியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாகிலும் ஏற்கனவேயுள்ள ஸ்தானங்களுக்கு அடுத்து முந்தி நடந்த சாதாரண எலெக்ஷன்களில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் உத்தியோகத்தை காலிசெய்யும் தேதி வரையில் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(8) (a) இராமற்போய்விட்டிருக்கும் யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்துள்ள சொத்தை ஒருவகை செய்வது விஷயமாயும், யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருந்து அந்த போர்டார் விசாரணை அதிகாரம் செலுத்துவது நின்றுபோயிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் இருக்கும் சொத்தை ஒருவகை செய்வது விஷயமாயும், பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய உத்தரவு செய்யலாம்.

(b) 4-வது பிரிவின்படியாவது 5-வது பிரிவின்படியாவது யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை தாலூகா அல்லது கிராமமாக நிர்ணயிக்கும் யாதொரு விளம்பரம் ரத்துசெய்யப்படும் பட்சத்தில், சந்தர்ப்பத்துக்கேற்றபடி தாலூகா போர்டார் அல்லது பஞ்சாயத்தினிடத்தில் சங்கிரமித்துள்ள சொத்தை ஒருவகை செய்வது விஷயமாய், பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய உத்தரவு செய்யலாம்.

1-வது ஷெட்யூல்.

ரத்து செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

(2-வது பிரிவைப் பார்க்கவும்.)

வருஷம்.	நம்பர்.	சுருக்கமான பெயர்.	இவ்வளவுமட்டில் ரத்து.
1884	5	1884-ம்வருஷத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட்.	முழுவதும்.
1890	3	சென்னபட்டணத்து லோகல் போர்டுகளையும் குத்தகைத் தொகையை வசூல் செய்வதையும் குறித்த (திருத்துவதற்கான) 1890-ம்வருஷத்து ஆக்ட்	அதில் ஏற்கனவே எவ்வளவு ரத்தாகாமலிருக்கிறதோ அவ்வளவு.
1900	6	சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டைத் (திருத்துவதற்கான) 1900-ம்வருஷத்து ஆக்ட்.	முழுவதும்.
1901	11	ரத்து செய்வதற்கும் திருத்துவதற்குமான 1901-ம்வருஷத்து (இந்தியா) ஆக்ட்.	இரண்டாவது ஷெட்யூலில் 1884-ம்வருஷத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டுக்கு எவ்வளவு மட்டில் சம்மந்தப்படுகிறதோ அவ்வளவு.
1913	3	1913-ம்வருஷத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளையும் லோகல் போர்டுகளையும் குறித்த (திருத்துவதற்கான ஆக்ட்).	அதில் ஏற்கனவே எவ்வளவு ரத்தாகாமலிருக்கிறதோ அவ்வளவு.
1914	8	1914-ம்வருஷத்திய சென்னபட்டணத்து அதிகாரப் பிரிவினை ஆக்ட்.	ஷெட்யூலில் 1884-ம்வருஷத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டுக்கு எவ்வளவுமட்டில் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு.

வருஷம்.	நம்பர்.	சுருக்கமான பெயர்.	இவ்வளவுமட்டில் ரத்து.
*1920	14	மதராஸ் லோகல் போர்ட்கள் ஆக்ட்.	1884-ஹூத்திய முழு ஆக்ட்டும்.
*1922	2	மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகள்,லோகல் போர்ட்டுகள் திருத்தசட்டம்.	மேற்கூறிய ஆக்ட் திருத்தப் பட்டது.
*1925	5	மதராஸ் லோகல் போர்ட்களின் திருத்த ஆக்ட்.	236-வது செக்ஷன் திருத்தப்பட்டது.
*1927	1	,,	157-A செக்ஷன் சேர்க்கப்பட்டு 167-செக்ஷன் திருத்தப்பட்டது.
*1930	1	மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகள், லோகல் போர்டுகள் திருத்த சட்டம்.	1922ஹூத்திய 2-வது ஆக்ட் திருத்தப் பட்டது.
*1930	11	மதராஸ் லோகல் போர்டுகளின் திருத்த ஆக்ட்.	பெரும்பாலும் திருத்தப் பட்டு, சிலபாகம் ரத்து செய்யப்பட்டது.

*இவைகள் ஆசிரியரால் சேர்க்கப்பட்டது.

2-வது ஷெட்யூல்.

லோகல் போர்டுகளின் நடவடிக்கை சம்பந்தமான விதிகள்.

(31-வது பிரிவைப் பார்க்கவும்.)

லோகல் போர்ட் ஆபீஸ்.

1. ஒவ்வொரு லோகல் போர்டாரும் பிரதேச கவர்ன்மெண்டார் நிஷ்கரிஷை செய்யக் கூடிய இடத்தில் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

லோகல் போர்ட் ஆபீஸ்—ஆபீஸ் என்பது சட்ட பூர்வமாய் குறிப்பிடபடவில்லை. இந்த விதிப்படி லோகல் கவர்ன்மெண்டால் குறிப்பிடப்பட்ட இடம் என்று பொருள்படும். (தினகரராவ் தார்ராவ் நாயக்ராஜுஒர்கார் எ. ஜனர்தன் பாலசந்தர் சான்ஸ் அகோல, தெற்கு, கோர் 1 Hammonds 2 I.E. Page 1). அந்த இடம் லோகல் போர்ட்டின் ரிகார்டுகள் வைக்கப்பட்டதானதும் லோகல்போர்டின்மேல் நோடீஸ் முதலியவைகள் சாதாரா செய்யப்படக்கூடிய இடமாகவுமிருக்கவேண்டும். [இ. பு. ப. 631]

மீடிங் கூட்ட வேண்டிய காலம்.

2. ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டாரும் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது, ஒவ்வொரு பஞ்சாயத்தும் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது வேலை நடத்துவதற்காக தாங்கள் ஏற்படுத்தக்கூடிய நாட்களிலும் காலங்களிலும், ப்ரெஸிடெண்டால் சபை கூட்டப்படும்பொழுதெல்லாம் இதர காலங்களிலுங்கூட கூடவேண்டும்.

குறிப்பு.

போது.—ஜில்லா அல்லது தாலூகா போர்ட் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது பஞ்சாயத்து மாதத்திற்கு ஒரு முறையாவது குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட தடவைகளில் தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக கூட்டப்படவேண்டும். பிரசிடென்ட்டுகள் மூலமாய் லோகல் போர்டுகள் மீட்டிங் கூட்டப்படாவிட்டால் அது அவைகளின் தவறுதல்களாகும். இதர காலங்களில் பிரசிடென்ட் தன்னிஷ்டப்படி மீட்டிங் கூட்டலாம்.

சபை கூட்டும்பொழுதெல்லாம்......கூடவேண்டும்.—பிரசிடெண்ட் தேர்தலுக்காக மீடிங்கு கூட்டப்பட்டது (நிர்வாக சங்கியை) க்வோரம் இல்லாததால் மீடிங் அடுத்த நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த நாள் கூட்டப்பட்ட கூட்டம் நியாயமானதல்லவென்றும், அந்த கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடெண்ட் சரியாய் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லவென்று அந்த தேர்தல் ரத்து செய்யப்பட்டது. துவாரகாச்சார்லு எ. கோத்தபல்லி ஸ்ரீ கிருஷ்ணன், A.I.R. 1925 Mad. 1152=37 I.C. 825). மெம்பர்கள் சங்கிரமித்து செய்யவேண்டிய காரியத்தை சுற்றுக் கடிதத்தினால் தீர்மானிப்பது பிசகு என்றும், நியாயப்படி செல்லாதென்றும், அந்த தவறுதல் திருத்திக்கொள்ளக் கூடியதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. (யாரோட்ராவ் எ. நாகபுரி முனிசிபல் கமிட்டி, A.I.R. 1926 N. 281=92 I.C. 796). "பொறுத்தலும், பொறுத்துக் கொள்ளுதலும்." "அமைதியுடன் விவாதித்தலும்" ஒவ்வொரு மெம்பரின் மூலவாக்கியமா யிருக்கவேண்டும்.

[இ. பு. ப. 631 & 63 2

மீடிங்குகளை கலைத்தல், ரத்து செய்தல், அல்லது ஒத்தி வைத்தல்.—நியாயமாய் கூட்டப்பட்ட மீடிங்கை பிரசிடென்ட் கலைக்கலாமா? அம்மாதிரி மீடிங்கை கலைக்க அவருக்கு அதிகாரமில்லை. (கோபால நாராயண கல்காணி எ. ஷன்முகப்ப நிங்கப்ப அங்காடி, A.I.R. 1927 B. 603=106 I.C. 265). மீடிங்கில் ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டும்; நடைமுறை சரிவர நடத்தவேண்டும்; மீடிங்கின் முன்னிருக்கும் விஷயத்தில் மெம்பர்களின் அபிப்பிராயத்தை சரிவர அறியவேண்டும்; ஆனால் வ்வாதத்தை நிறுத்தவோ, தன் இஷ்டப்படி மீடிங்கை ஒத்திவைக்கப்படவோ கூடாது. பிரசிடென்ட் ஒத்திவைத்தால், எந்தெந்த விஷயத்திற்காக மீடிங்கு கூட்டப்பட்டதோ அந்த விஷயத்திற்காக மற்றொரு சேர்மனை ஏற்படுத்திக்கொண்டு மீடிங்கை நடத்தலாம். (நாஷனல் ட்வல்லிங் ஸொஸைடி எ. ஸ்க்கைஸ்.) அடுத்த விதியில் மீடிங்கு நோடீஸைக்குறித்து விவாதிக்கப்பட்டிருக்கிறது. க்வோரத்தைப் பற்றி 2-வது ஷெட்யூல் 7-வது விதியில் கூறப்பட்டிருக்கிறது. க்வோரம் இல்லாமல் போனால் வந்திருக்கும் மெம்பர்கள் எல்லா மெம்பர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்டதைப்பற்றி தெரிவித்தாலொழிய ஒத்திவைக்கக்கூடாது. ஒத்திவைக்கப்பட்ட மீடிங்கின் நோடிஸ் இதர மெம்பர்களுக்கு கொடுக்கப்படாமல் கூட்டப்பட்ட மீடிங் சரியானதல்ல. சில முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்படுமென்று நோடிஸ் கொடுக்கப்பட்ட மீடிங்கில், வியாஜ்ஜியத்திலிருக்கும் கோவிலுக்கு டிரஸ்டி ஏற்படுத்தியது போதுமான நோடீசின்மேல் கூட்டப்பட்ட மீடிங்கில் ஏற்படுத்தப்பட்டதாக கருதப்படமாட்டாது. குறிப்பிட்ட காரியத்திற்காக பிரத்தியேகமாகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ஒவ்வொரு மெம்பருக்கும் போதுமான நோடீஸ் கொடுக்கப்படவேண்டும். (நீலகண்ட தேவராவ் எ. முராரி கோவிந்தமகேல், 1923 Bom. 272=73 I.C. 173). ராஜாபாதர் எ. விஸ்வநாத ரெட்டி 57 M.L.J, 431 கேசில் இதே கொள்கையையாண்டுள்ளார். மீடிங் கூட்டுவதற்கு அதிகாரமுடையவர் அதை ஒத்திப்போட அதிகாரமில்லாவிட்டாலும், அதை ரத்து செய்து புதிதாய் கூட்ட அதிகாரமுண்டு. சில விசேஷ காரணத்தால் செய்யப்பட்ட பிரத்தியேகமாய் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகஸ்தர் நடவடிக்கையில் மேற்கூறியவாறு தீர்மானிக்கப்பட்டது இந்த ஆக்டில் கூட்டப்பட்ட மீடிங்கை ரத்து செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. 21-வது செக்ஷன்படி நிர்வாகத்தை நடத்துவதற்கு 6 (2)-வது செக்ஷனுக்குட்பட்டு அதிகாரம் பெறுகிறார். நியாயமானதும் சட்டத்துக்குட்பட்டதுமாய் கூட்டப்பட்டக் கூட்டத்தை ரத்து செய்ய அதிகாரமுண்டா? பிரசிடென்ட் அல்லது தற்காலிக பிரசிடென்ட் இவர்கள் இல்லாத காலத்தில் மெம்பர்கள் கூடி ராஜ விஸுவாஸ பிரமாணங்கள் எடுத்துக்கொண்ட பிறகு மீடிங் கூடி காரியங்களை நடத்தினால் அவைகள் செல்லுமா? புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டிற்கு தற்காலீக பிரசிடென்ட் ஏற்படுத்தப்படாவிட்டால் யார் மீடிங் கூட்டவேண்டுமென்று குறிப்பிடவில்லை. அம்மாதிரி சந்தர்ப்பத்தில் பஞ்சாயத்து விஷயத்தில் தாலூகா போர்டும், ஜில்லா போர்டும், தாலூகா போர்டு விஷயத்தில் ஜில்லா போர்டும் மீடிங் கூட்டினால் நியாயமானவைகளாகுமா? எல்லா மெம்பர்களும் நியாயமாய் ஏற்படுத்தப்பட்டவர்களாயும் அந்த கூட்டத்திற்கு எல்லா மெம்பர்களும் வந்திருந்தால் அந்த கூட்டம் சரியான

தாகும். (பஸய்ய எ. நரும்தய்ய, தண்டாவதி எ. முருகய்ய சோமய்ய ஜங்கின், A.I.R. 1926 Bom. 576=98 I.C. 454). முதல் மீடிங் காலம் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டால் இரண்டாவது மீடிங் கூட்டுவதைப்பற்றி ஒன்றுமில்லை.

மீடிங்கில் அவதூறன வார்த்தைகள்.—வாதியும், பிரதிவாதியும் ஒரு எலெக்ஷனில் அபேக்ஷகர்களாய் நின்றார்கள். வாதி, பிரதிவாதியை "போக்கிரி, சந்தேக ஆஸ்பத முள்ள வன்" என்று கூறினர். அந்த கூட்டத்தில் பிரதிவாதி பஞ்சாயத்துதாராக தேர்ந்தெடுக்கப் பட்டார். எலெக்ஷன் முடிந்த பிறகு வெளியில் இருந்த சிலர் பிரதிவாதியை உள்ளே என்ன நடந்ததென்று கேட்டார்கள். அதற்கு அவர், வாதி குடிகாரனென்று சொன்னதாக அவர் களுக்கு சொன்னர். வாதி, பிரதிவாதியின் பேரில் அவர் உபயோகப்படுத்திய வார்த்தைகளுக் காக மான நஷ்டதாவா செய்தார். பிரதிவாதி மீடிங்கில் சச்சரவின் பயனுக ஆத்திரத்தினுல் உபயோகித்த வார்த்தைகள் குற்றமாகாதென்றும், மான நஷ்ட முண்டாக்க வேண்டுமென்று சொல்லவில்லை யென்றும், ஆனல் மீடிங்குக்கு வெளியில் சொல்லிய வார்த்தைகள் மட்டும் அவதூறானவைகளென்றும் அதற்கு மான நஷ்டம் கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பு கூறப் பட்டது. பிரதிவாதி மீடிங்கில் உபயோகப்படுத்தின வார்த்தைகளுக்கு மட்டும் பாத்தியதை கொண்டாடலாமே யொழிய மீடிங் முடிந்த பிறகு வெளியில் சொல்லிய வார்த்தைகளுக்கு பாத்தியத்தை கொண்டாட முடியாது (சுப்பராயடு எ. ஸ்ரீனிவாஸாசார்லு, A.I.R. 1927 Mad. 329=10 I.C. 90). லைசன்ஸ் கொடுக்கும்போது அல்லது மறுக்கும்போது அவதூறான மொழிகளை உபயோகிக்கக் கூடாது. கோர்ட்டு நடவடிக்கைகளில் அவதூறான வார்த்தைகளுக் குள்ள பாத்தியத்தை முனிசிபாலிடிகள் கோர்ட்டுகள் அல்லவாகையால் அந்தத் பாத்தியதை கிடையாது. (A. ஆட் ஊட் எ. சாப்மன், (1924) 3 K.B. 275.) [இ. பு. ப. 632.]

இடம்.—லோகல் போர்ட் எந்த எந்த இடத்தில் கூடவேண்டுமென்பதை வியக்த்தமாய் கூறப்படவில்லை. பஞ்சாயத்துகள் மிகவும் எழ்மை நிலமையிலுள்ளவைகள். ஆபீஸிற்காக ஓர் அரைமட்டும் எற்படுத்திக் கொண்டிருக்கலாம். அந்த ஆபீஸிற்குள்தான் மெம்பர்கள் கூட வேண்டுமென்பதில்லை. பஞ்சாயத்துஎல்லைக்குள் எல்லாமெம்பர்களுக்கு கும் போதுமான அறிவிப்பு கொடுக்கப்பட்ட எந்த இடத்திலும் கூடலாம். மெம்பர்கள் போது மானபடி அறிவிக்கப்பட்டு அவர்களின் வரவை தடுக்காமால், மீடிங்கு இடம் மாற்றப்பட்ட காரணத்தினுல் அந்த நடவடிக்கை செல்லாமல் போகாது. (துவாரகநாத் எ. சுந்தரமோஹன் ராவ், A.I.R. 1926 Cal. 665=91 I.C. 642)

குறைந்தது இரண்டுமாதத்திற்கொருமுறை.—தாலூகா போர்டுகள், ஜில்லா போர்டு கள் குறைந்தது இரண்டுமாதத்திற்கு ஒரு முறையும், பஞ்சாயத்து ஒரு மாதத்திற்கு ஒரு முறை யும் கூடவேண்டும். மீடிங்குகள் அந்த காலத்திற்குள் நடத்தப்படவேண்டும். மாதம் என்பது இங்கிலீஷ் பஞ்சாங்கத்து மாதம். பிப்ரவரி மாதம் 20 தேதி ஒரு தாலூகா, அல்லது ஜில்லா போர்டார் மீடிங் நடந்ததால் எப்ரல் 20 தேதிக்குள் அடுத்த மீடிங் நடைபெறவேண்டும்; பஞ்சாயத்து மீடிங் மார்ச் 30 தேதிக்குள் நடக்கவேண்டும். 21-வது செக்ஷன்படி மீடிங் கூட்டுவது முதலிய நிர்வாக அதிகாரம் பிரசிடென்டினிடம் இருக்கிறது. சாதாரண கூட்டம் நடைபெருமல்போனல், வேறுவிதமாய் கூட்டப்படும் கூட்டம் செல்லுப்படியாகாது. (அப்பாஜி சீதாராம் எ. டிராம்பக் முனிசிபாலிடி, 28 Bom. 66). எல்லா மெம்பர்களும் ஒன்று கூடி மீடிங்கை நடத்துவதாக தீர்மானித்தால், நோடீஸ் இல்லாமல் கூடினுலும் சரியானதாகும். மீடிங் கூட்டுவது பிரசிடெண்டின் கடமை. 21-வது செக்ஷன்படி லோகல்போர்ட்டு கூடும் காலத்தை தெரிவிக்காவிட்டால் 211-வது செக்ஷன்படி 100 ரூபாயிக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கத்தகுந்தவராவார். (மாரியா பிள்ளை எ. முத்துவேலு பண்டாரம், 49 Mad. 563=A.I.R. 1926 Mad. 877).

வேலைகளை நடத்துவதற்காக.—வேலைகளை நடத்துவதற்காக மீடிங் கூட்ட வேண்டும். பிரசிடென்ட், வைஸ் பிரசிடென்ட் தேர்தலுக்காக கூடப்பட்ட கூட்டங்களும் வேலையை நடத்துவதற்காக கூடப்பட்ட கூட்டமாகும் (கோபிநாத் எ. ராம்நாத், A.I.R. 1925 All. 356=86 I.C. 588). பிரசிடென்ட் தேர்தல் தீர்மானமாகையால் அது சாதாரண கூட்டத்தில் நடக்கவேண்டிய வேலைகளில் ஒன்றாகும். (இந்தியா மந்திரி எ. முருகேச முதலியார், 108 I.C. 780=A.I.R. 1929 Mad 443). மெம்பர்களுக்கு அனுப்பும் நோடீஸில் மீடிங்கில் நடக்கவேண்டிய விஷயங்களை குறிக்கவேண்டும். குறிப்பிட்ட விஷயத்தை ஆலோசிக்கக் கூட்டப்பட்ட கூட்டத்தில் வேறு விஷயங்களை ஆலோசிக்கக்கூடாது. எல்லா மெம்பர்களும் ஒப்புக்கொண்டால் வேறு விஷயங்களை ஆலோசிக்கலாம். எந்த விஷயத்திற்காக கூடப்போகிறதென்பதை குறிப்பாய் தெரியப்படுத்தலாம். சட்ட பூர்வமாய் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி கூட்டப்பட்ட கூட்டம் தவிர மற்றைய கூட்டங்களுக்கு குறிப்பாய் எழுதியனுப்பினுல் போதுமானது. (ஜி. எ. நடேசன், 40 Mad

125=38 I.C. 847). பிரசிடென்ட் விஷயங்களை சரிவர நடத்தாமல் போனால் கோர்டுகள் பிரவேசிக்கலாம். (தணிகாசல செட்டியார், 20 L.W. 589=A.I.R. 1924 Mad. 868). மெம்பர்களுக்கு அனுப்பிய நோடீஸில் விஷயத்தை குறிப்பிட்டிருந்தாலும் அது மெம்பர்களின் ஆலோசனைக்கு வந்து இந்த ஆக்ட்படியும், விதிகளின்படியும் முடிவுக்கு வராவிட்டால் நோடீஸில் கண்டது மட்டும் போதாது. (சிவசங்கரம் எ. அரசர், 52 Mad 446=113 I.C. 462) க்வோரம் இல்லாவிட்டால் வந்திருந்த மெம்பர்கள் மீடிங்கை ஒத்திவைக்ககூடாது. ஒத்திவைத்த தேதியை மற்றைய மெம்பர்களுக்கு போதுமான நோடிஸ் போனுலொழிய சரியான கூட்டமாகாது. நோடிஸ் கொடுக்காத ஒத்திவைக்கப்பட்ட மீடிங் சரியானதல்ல. வரையறுக்கப்பட்ட விதிகளில்லாமையால் பொதுவிதிகளை அனுசரிக்கவேண்டும்

[இ. பு. ப. 633]

ஏற்படுத்தக்கூடிய நாட்களிலும், காலங்களிலும்.—சாதாரண மீடிங் நடத்துவதற்காக ஒவ்வொரு லோகல் போர்டும் நாளும், காலமும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த மாதத்தில் இந்த நாளில் இந்த காலத்தில் மீடிங் கட்டாயம் நடக்கிறதென்று நிஷ்கரிஷை ஒவ்வொரு மெம்பருக்கும் ஏற்படவேண்டும். இதைவிட்டு மாறுவது உசிதமல்ல. இதர நாட்களில் மீடிங் கூட்டும் பிரசிடென்டுக்குள்ள பாத்தியத்தை இது எடுத்துவிடவில்லை. குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்டகாலத்தில் கூட்டப்படாத மீடிங் நடப்பது மெம்பர்களுக்கு தெரிந்திருந்தாலும் மெம்பர்களுக்கு நோடிஸ் இல்லாமற் போனல் அது செல்லாது. குறிப்பிட்ட நாட்களிலும், காலத்திலும் கூட்டப்படும் கூட்டத்திற்கு மெம்பர்களுக்கு நோட்டிஸ் கொடுக்க வேண்டியதில்லை 2.வது ஷெட்யூல் 3-வது ரூலில் நாளும், காலமும் என்பதைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்படுத்தக்கூடிய நாட்களிலும, காலங்களிலும் என்பது எல்லா மெம்பர்களுக்கும் போதுமான நோடீஸ் கொடுக்கப்பட்ட நாட்களும், கலாங்களும் என்று பொருள். பிரசிடென்ட் எலெக்ஷனுக்காக மீடிங் கூட்டப்பட்டது. க்வோரமில்லை. மறு நாளைக்கு மீடிங் ஒத்திவைக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட மீடிங் சரியானதல்லவென்றும் அந்த மீடிங்கில் எலெக்ஷன் நடந்த பிரசிடென்ட் எலெக்ஷன் செல்லாதென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. (துவாரகாச்சார்லு எ. கொத்தவல்லி ஸ்ரீ கிருஷ்ணன், A.I.R. 1925 Mad. 1152=87 I.C. 825).

[இ. பு. ப. 634]

3. (1) சபை கூடப்போகும் தினத்தையும் காலத்தையும் அதில் நடத்தப்போகும் வேலையையும் கண்டெழுதிய நோடிஸ் பஞ்சாயத்துகளின் விஷயத்தில் சபை கூடும் தினத்துக்கு குறைந்தது ஸ்பஷ்டமாய் மூன்று தினங்களுக்கு முன்னதாகவும் டிஸ்டரிக்ட் போர்டுகள் தாலூகா போர்டுகள் ஆகிய இவைகளின் விஷயத்தில் சபை கூடும் தினத்துக்குக் குறைந்தது ஸ்பஷ்டமாய் பத்து தினங்களுக்கு முன்னதாகவும் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, சபை எதையும் கூட்டக் கூடாது.

நோடீஸ் இல்லாமல் சபை கூட்டக் கூடாது.

(2) அவசரமான விஷயங்களில், பிரெஸிடென்டானவர் (1) அடையாளமிட்ட உபவிதியில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குக் குறைவான காலத்துக்கு முன்னதாக நோடீஸ் கொடுத்துச் சபை கூட்டலாம்.

குறிப்பு.

போது.—இந்த விதி மீடிங் கூட்டுவதைப் பற்றி தெளிவாகக் கூறுகிறது. நோடீஸில்லாமல் யாதொரு மீடிங்கும் கூட்டக்கூடாது. மீடிங் நோடீஸ் ஸ்பஷ்டமாய், மீடிங் கூட்டப்படவேண்டிய தேதி, காலம், மீடிங்கில் நிஷ்கரிக்கவேண்டிய விஷயங்கள் இவைகளை குறிப்பிட்டிருக்க வேண்டும். ஜில்லா போர்ட், தாலூகா போர்ட் விஷயங்களில் மீடிங் கூட்டப்படுவதற்கு முன் ஸ்பஷ்டமாய் 10 நாட்களும், பஞ்சாயத்து விஷயத்தில் 3 நாட்களும் தவணையிருக்கவேண்டும். அவசர சந்தர்ப்பங்களில் குறைந்த காலமுமிருக்கலாம். மெம்பர்களுக்கு அந்தச் சபையில் என்ன நடக்கப்போகின்றதென்பது முன்பாக தெரிந்திருக்க வேண்டும், இல்லையேல் அந்த சபையின் நடவடிக்கைகள் செலாவணியாக மாட்டாது. சாதாரணமாய் சபையில் நடக்கப்போகும் விஷயத்தின் குறிப்பு அறிவிக்கப்பட்டால் போதுமானது. (ஆ எ. நடேசன், 40 Mad. 125=38 I.C. 847).

[இ. பு. ப. 634]

விதி 3 (1). நோட்டீஸ்.—மீடிங்கு நடப்பதைப்பற்றி அந்த சபையில் நடக்கப்போகும் விஷயத்தைக் குறிப்பிட்டு சரியான நோடிஸ் கொடுக்கப்படவேண்டும். சரியான நோடிஸ் இல்லாமல் போனால் அச்சபையின் நடவடிக்கை செல்லமாட்டாது. சபையின் நோடிஸில் காண வேண்டிய அம்சங்கள் அவசியமானது. (ஜோவிகாளிதாஸ் எ. டாக்கர் முனிஸிபாலிடி, 7 B. 399). எல்லா மெம்பர்களுக்கும் நோடிஸ் கொடுக்கவேண்டியது அவசியமானதால், அப்படி நோடிஸ் கொடுக்கப்படாத சபையில் நிறைவேறிய தீர்மானங்கள் சட்ட விரோதமானதுடன் கவர்ன்மெண்டாரின் அங்கீகாரம் பெற்றபோதிலும் அதனிடமுள்ள குறைகள் நீங்காது. குறைந்த காலதவணையில் நோடிஸ் கொடுக்கப்பட்டாலும், அந்த சபைக்கு எல்லா மெம்பர்களும் வந்திருந்து, சபையை நடத்த அங்கீகரித்தால் அது சரியான சபையாக கருதப்படும். ஒவ்வொரு மெம்பருக்கும் தனித்தனி நோடிஸ் அனுப்பப்படலாம். ஒரு காரியம் நடத்தப்பட வேண்டுமானால் அந்த காரியத்தை நடத்துவதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மெம்பருக்கும் அவர் அருகாமையிலிருக்கும் பக்ஷத்தில் நோடிஸ் அனுப்பப்படவேண்டும். அப்படி அனுப்பப் படாவிட்டால் அது சரியான சபையாகாது. அந்த மெம்பர் வெகு தூரத்திலிருந்தாலும், சபைக்கு வரக்கூடாமல் வியாதியால் படுத்தப்படுக்கையாயிருந்தாலும் நோடிஸ் அனுப்ப வேண்டியதில்லை. ஒரு மெம்பர் தான் சபைக்கு வரப்போவதில்லை என்று தெரிந்தபோதிலும் அவருக்கு நோடிஸ் சாதாரா செய்யவேண்டும். ஒரு மெம்பரின் ஸ்திரமான விலாசத்திற்கு நோடிஸ் அனுப்பப்பட்டால் போதுமானது. தான் அந்த இடத்தினின்றும் மாறிவிட்டதால் தனக்கு நோடிஸ் சேரவில்லை என்பது செல்லாது. பிரத்தியேகமாய் குறிப்பிட்டிருக்கும் சந்தர்பங்கள் தவிற மற்றைய காலங்களில், சாதாரா செய்யப்படும் நாளும், மீடிங் நடக்கும் நாளும் தள்ளி குறிப்பிடப்பட்ட நாட்கள் மத்தியிலிருக்கவேண்டும். [இ. பு. ப. 635]

நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டியதைப்பற்றி அனுமானம்.—நோடிஸ் கொடுக் கப்பட்டதைப்பற்றி அல்லது அனுப்பப்பட்டதைப்பற்றி சந்தேகமுண்டானால், முனிசிபல் கமிட்டியின் சார்பாகவே அனுமானிக்கவேண்டும். (காந்துவா முனிசிபல் கமிட்டி எ. ராதா கிருஷ்ணன், A.I.R. 1930 N.157). ஒவ்வொரு மெம்பருக்கும் நோடிஸ் நேராக கொடுக்கப்பட வேண்டியதில்லை. தபால் மூலமாய் அனுப்பப்பட்டால் போதுமானது. (கோபால நாராயண கல்கரனி எ. ஷண்முகப்பா நங்கப்பா அங்காடி, A.I.R. 1927 Bom. 603 = 106 I.C. 265). [இ. பு. ப. 636]

தினத்தையும் காலத்தையும்.—"தினம்" என்பது குறிப்பிட்ட வருஷத்தில் குறிப் பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட தேதியில் உள்ள தினத்தை காட்டும். தவறான காலம் குறிப் பிடப்பட்டதால் சபைக்கு ஒரு மெம்பர் வரமுடியாமல் போய்விட்டால் அந்த நோடீஸ் சரியானதாகமாட்டாது, அந்த சபையில் நடந்த நடவடிக்கையும் சரியானதாகமாட்டாது.

தினங்கள்.—"தினம்" என்பது சூரிய உதயமுதல் மறுநாள் சூரிய உதயம்வரையி லுள்ள 24 மணி நேரத்தைக் குறிக்குமேயொழிய சூரிய உதயமுதல் சூரிய அஸ்தமனம்வரையி லுள்ள 12 மணியைக் குறிக்காது. (கடலூர் முனிசிபல் கௌன்சில் எ. சுப்பிரமணிய அய்யர், 29 Mad. 329 = 16 M.L.J. 101.) இந்த விதியானது தினங்களைப் பற்றி வியக்தமாய் கூறு கின்றபடியால் அதன்படி கட்டாயமிருக்கவேண்டும். இல்லையேல் மொத்த நடவடிக்கையும் செல்லுப்படியாகமாட்டாது. (ஷியாம் சாண்டி பசாக் எ. டாகா முனிசிபல் சேர்மன், 55 I.C. 741 = 24 C.W.N. 189). [இ. பு. ப. 636]

ஸ்பஷ்டமான தினங்கள்.—விதியில் 15 நாட்கள் நோடீஸிருக்கவேண்டுமென்றால் நவம்பர் மாதம் 14-ந் தேதி மீடிங்குக்கு நவம்பர் மாதம் 1-ந் தேதி கொடுக்கப்பட்ட நோடிஸ் சரியானதல்ல என்று தீர்ப்பு கூறப்பட்டது. தனியாய் குறிப்பிடப்படாத அம்சங்களில் "தினம்" என்றால் ஸ்பஷ்டமாய் இருக்கவேண்டும். நோடிஸ் கொடுக்கப்படும் தினம் மீடிங் தினமும் தள்ளி மத்தியில் ஸ்பஷ்டமாய் குறிப்பிட்ட தினங்களிருக்கவேண்டும். நான்கு தினங் கள் நோடிஸ் என்றால் 20-ம் தேதி கொடுக்கப்பட்ட நோடிஸிக்கு 25-ந் தேதிதான் மீடிங்கு நடத்தவேண்டும். இந்த ஆக்ட் நாட்களைக் குறித்து வியக்தமாய் சொல்லுவதால் இதை தவறாமல் அனுஷ்டிக்க வேண்டும். நாட்கள் குறிப்பிடுவது அவசியமாவதால் ஆக்டுக்கு விரோதமாக நோடிஸ் பிரசுரிப்பது பிசகானது, அதன்படி நடக்கும் எலெக்ஷன் விஷயங்களும் செல்லுபடியாகாது. (ஏகாம்பர நாயகர் எ. மதராஸ் கார்பொரேஷன், 99 I.C. 18 = A.I.R. 1927 Mad. 22.) [இ. பு. ப. 636]

அவசரம்.—பஞ்சாயத்து விஷயங்களில் 3 ஸ்பஷ்டமான நாட்களும், தாலுகா போர்ட், ஜில்லா போர்ட் விஷயங்களில் 10 தினங்களில்லாமல் நோட்டிஸ் கொடுக்கவேண்டுமானால் அவர்கள் எதிர்பார்க்காத அவசர காரியத்தைக் கருதியதாயிருக்கவேண்டும். அவசர மீடிங்கைக் கூட்டும் பிரசிடென்ட் மேற்படி அவசரத்தின் காரணத்தைக் காட்டவேண்டும். இந்த அவசரக் கூட்டங்கள் 56 (1) (h) செக்ஷன்படி மெம்பர்களை அருகதை யற்றவராக்காது.

பிரத்தியேக சபை. (ஸ்பெஷல் மீடிங்).

4. (1) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர்—அப்போது அந்த போர்டிலிருக்கிற மெம்பர்களில் மூன்றில் ஒரு பங்குக் குறையாதவர்கள் எழுதிக் கேட்டுக்கொள்வதன்மேல் போர்டின் சபையைக் கூட்டவேண்டும்; ஆனால் அந்தப்படி கேட்டுக்கொள்ளும் கடிதத்திலே இன்ன தினத்தில் இன்ன காரியத்துக்காக சபை கூட்டவேண்டுமென்று கண்டிருக்கவேண்டும். ஷெடி கடிதத்தை—

பஞ்சாயத்துகளின் விஷயத்தில், அந்த சபை கூடும் தினத்துக்குக் குறைந்தது ஸ்பஷ்டமாய்ப் பத்து தினங்களுக்கு முன்னதாகவும்,

டிஸ்ட்ரிகட் போர்டுகள் தாலுகா போர்டுகள் ஆகிய இவைகளின் விஷயத்தில், அந்த சபை கூடும் தினத்துக்குக் குறைந்தது ஸ்பஷ்டமாய்ப் பதினைந்து தினங்களுக்கு முன்னதாகவும்,

லோகல் போர்ட் ஆபிஸில் ப்ரெஸிடென்டிடத்திலாகிலும் காரியதரிசியிடத்திலாகிலும் மானேஜரிடத்திலாகிலும் அப்போது ஆபிஸில் விசாரணை வகிக்கும் வேறே யாதொரு நபரிடத்திலாகிலும் ஆபிஸ் வேலை நடக்கும் மணிநேரங்களில் ஒப்புவிக்க வேண்டும்.

(2) ப்ரெஸிடென்டானவர் ஷெடி கடிதம் ஒப்புவிக்கப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணிநேரத்துக்குள் அதில் குறிப்பிட்டுள்ள தினத்திலாவது அதற்குப் பிறகு மூன்று தினங்களுக்குள்ளாவது சபை கூட்டத் தவறினால், ஷெடி கடிதத்தில் கையொப்பமிட்டிருக்கும் மெம்பர்கள் 3-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில் நிபந்தனை கண்டிருக்கிற நோடிஸை போர்டின் இதர மெம்பர்களுக்குக் கொடுத்து சபை கூட்டலாம்.

(3) (1) குறிப்பிட்ட உபவிதியின்படியாவது (2) குறிப்பிட்ட உபவிதியின்படியாவது கூட்டப்படும் எந்த சபையையும் போர்டின் ஆபிஸ் இருக்கும் இடத்தில் அல்லாமல் மற்ற எந்த இடத்திலும் கூட்டக்கூடாது.

குறிப்பு.

போது.—சபை கூட்டவேண்டுமென்று மெம்பர்கள் அபிப்பிராயப்படுவார்களேயானால் எம்மாதிரி செய்யவேண்டுமென்பதை இந்தவிதி கூறுகிறது. சபை கூட்டும்படி அனுப்பும் விண்ணப்பத்தில் அக்காலத்தில் போர்டிலுள்ள மெம்பர்களின் சங்கையில் $\frac{1}{3}$ பேர்கள் கையொப்பமிட்டிருக்கவேண்டும். அது பஞ்சாயத்திற்கானால் மீடிங்கு கூட்டப்படவேண்டிய தினத்திற்கு முன் 10 தினங்கள் முன்னதாகவும், தாலுகா போர்ட் ஜில்லா போர்டாயின் 15 தினங்களுக்கு முன்னதாகவும் விண்ணப்பம் கொடுக்கப்படவேண்டும். பிரஸிடென்ட் கூட்டத்தை நடத்த தவறிவிட்டால் உபவிதி (2) (3) படி மெம்பர்கள் விசேஷக் கூட்டத்தை நடத்தலாம். அந்த விசேஷக்கூட்டத்தின் நடவடிக்கைகள் செல்லத்தக்கனதா என்று யோசிக்க, எல்லா மெம்பர்களும் தாங்களாகவே சபைக்கு வந்திருந்தார்களா என்பதையும், அல்லது அந்த தினத்தில் அந்த காலத்தில் குறிப்பிட்ட காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மெம்பர்கள் வந்திருந்தார்களா என்பதை கவனிக்கவேண்டும். (சையத் ஹஸான் எ. மிர் ஹஸான், 40 Mad. 941=38 I.C. 528).

[இ. பு. ப. 637]

விதி 4 (1). பிரஸிடென்ட் சபை கூட்டவேண்டும்.—விசேஷ கூட்டமொன்று சபைகூட்டப்படவேண்டுமென்று சரியான நோடீஸ் அனுப்பப்பட்டால் பிரஸிடென்ட் அல்லது வைஸ்பிரஸிடென்ட் மேற்படி சபை கூட்டவேண்டும். இந்த விதிப்படி விண்ணப்பத்தில் கண்ட தேதியில் விசேஷசபை கூட்டுவதைக்குறித்து, குறிப்பிட்ட தேதியன்றுவது அல்லது மூன்று தினத்திற்குள்ளாவது மெம்பர்களுக்கு விஷயத்தை அறிவிக்காமற்போனால் 211-வது செக்ஷன்படி பிரசிடென்ட் 100 ரூபாயுக்கு மேற்படாத அபராதத்திற்கு உள்ளாவார். [இ. பு. ப. 637 & 638]

எழுத்து மூலமாய் விண்ணப்பிக்கவேண்டும்.—விண்ணப்பம் எழுத்து மூலமாயிருப்பதுடன் கையெழுத்திட்டிருக்கவேண்டும். கையெழுத்திடப்படாமலிருந்தால் கையொப்பம் போடாதவர்கள்கூட சபையைக் கூட்டவேண்டுமென்னும் அபிப்பிராயத்தையுடையவர்களா, இல்லையா என்று அறியமுடியாது. [இ. பு. ப. 638]

அக்காலத்து போர்ட் சங்கையில் 1/3 பெயர்களுக்கு குறையாமல்.—ஒரு போர்டிற்கு அனுமதிக்கப்பட்ட சங்கியை 24 மெம்பர்கள், அதில் 3 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை, அக்காலத்தில் போர்டிலிருப்பவர்கள் 21 மெம்பர்கள், அவர்களில் 1/3 சங்கியை 7 மெம்பர்கள். அவ்வேழு பெயர்கள் கையொப்பமிட்டு கொடுத்தால் விசேஷ சபை கூட்டலாம். [இ. பு. ப. 638]

விண்ணப்பம் சபை கூட்டப்பட வேண்டிய தினம், விஷயம் இரண்டையும் குறிக்க வேண்டும்.—சபை நடத்தவேண்டிய தேதியை விண்ணப்பம் குறிப்பிட வேண்டும். தினம் குறிப்பிடப்படாமல் போனால், அந்த விஷயங்களை அடுத்தச் சாதாரணச் சபையில் பிரசிடென்ட் கொண்டு வரலாம். சபை கூட்டவேண்டிய காரணத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடாமல் போனால் சபை கூட்டவேண்டிய அவசியமில்லை. ஆகையால் தினத்தையும், விஷயத்தையும் குறிப்பிட வேண்டும், இல்லாவிட்டால் விண்ணப்பத்தை அமுலுக்கு கொண்டு வர முடியாது. [இ. பு. ப. 638]

ஆபீஸ் நேரங்களில் ஆபீஸில் சேர்பிக்க வேண்டும்.—விண்ணப்பம் நேரில் சேர்பிக்கப்பட வேண்டியதில்லை. தபால் மூலமாய் அனுப்பப்பட்ட விண்ணப்பம் ஆபீஸ் நேரமில்லாத வேளையில் பிரசிடென்ட், அல்லது காரியதரிசி அல்லது மானேஜரிடம் சேர்ந்தால் ஆபீஸ் நேரமில்லாத காலத்தில் கிடைத்த காரணத்தைக் கொண்டு விசேஷ சபையைக் கூட்ட மறுக்கலாமா? ஆபீஸ் நேரங்களில் என்னும் வார்த்தைகள் அனாவசியமானவை. ஆபீஸ் நேரம் தவிர மற்றைய நேரங்களில் கொடுக்கக் கூடாதென்றுவது அல்லது வாங்கிக்கொள்ளக் கூடாதென்றுவது விதியில்லை யாதலால் இக்காரணத்தைக் கொண்டு பிரசிடென்ட் சபை கூட்டுவதை நிறுத்தக்கூடாது. [இ. பு. ப. 638]

விதி 4 (2). 48 மணி நேரங்களுக்குள் சபைகூட்ட தவறினால்.—விண்ணப்பம் சேர்ந்த 48 மணி நேரத்திற்குள், சபை கூட்டபட அறிக்கை அனுப்பவேண்டும். 48 மணி நேரத்திற்குள் சபை கூட்டப்படும் விஷயமாய் நோடீஸ் பிறந்ததா இல்லையா என்பது மெம்பர்களுக்கு எப்படி தெரியும்? செ. 26 (3)-படி ஆபீஸ் நேரங்களில் ஒவ்வொரு மெம்பருக்கும் ஆபீஸ் ரிகார்டுகளை பார்வையிட அதிகாரமுண்டு. அதன்படி விண்ணப்பத்தில் கையொப்பமிட்ட மெம்பர்களில் ஒருவர் ஆபீஸிற்கு போய் தெரிந்து கொள்ளலாம். சபை கூட்டவேண்டுமென்று வேண்டிக்கொண்ட மெம்பர்களுக்கு பிரஸிடென்ட் அல்லது வைஸ்பிரஸிடென்ட்தான் கூட்டப்போகிறாரா இல்லையா என்னும் விஷயத்தை தெரிவிக்கலாம். 48 மணி நேரத்திற்குள் பிரஸிடென்ட் சபை கூட்ட தவறிவிட்டால் சபை கூட்டவேண்டுமென்று கையொப்பமிட்டவர்கள் 3 (1) விதிப்படி தாங்கள் சபை நோடீஸ் அனுப்பலாம். 48 மணி நேரத்திற்குள் அறிக்கையை வெளியிட்டு, குறிப்பிட்ட தேதியில் அல்லது 3 தினத்திற்குள் சபை கூடும் தினமில்லாமல் 4, 5 தினம் தள்ளி வைத்துக் கொண்டால் குறிப்பிட்ட தினத்தில் சபை கூட்டவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டவர்களின் கோரிக்கை கொடாமலிருந்தால் தள்ளிகூட்டப்படும் சபை தவறுதலாகாது. அவர்களுடைய கோரிக்கை கெட்டுப்போய் விடுவதாயிருந்தால் மெம்பர்கள் தாங்கள் குறிப்பிட்ட தேதியில் சபை கூட்டலாம். [இ. பு. ப. 639]

விதி 4 (3). ஆபீஸிருக்கும் இடம் தவிற மற்றைய இடத்தில்—அநேக பஞ்சாயத்து ஆபீஸிற்கு இடமிருந்த போதிலும், சபைக்கு போதுமான இடமிருப்பதில்லை. எப்படியிருந்தபோதிலும், பிரசிடென்ட் அல்லாத மெம்பர்களால் கூட்டப்படும் சபை

ஆபீசிலோ அல்லது ஆபீசிற்கு வெகு அருகாமையிலோ வைத்துக்கொள்ள வேண்டும். பிரசிடெண்ட், ஆபீசில் இடம்தர மறுத்ததால் வேறு இடத்தில் சபை கூட்டப்பட்டதால் சபையின் நடவடிக்கை செல்லாது என்று பிரசிடெண்ட் சொல்லமுடியாது.

[இ. பு. ப. 639]

5. லோகல் போர்டாரின் சபைகள் எல்லாவற்றிலும் பொது ஜனங்கள் வந்திருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்; ஆனால், அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் - குறித்த யாதொரு விஷயத்தில், சாதாரணமாய் பொது ஜனங்களாவது குறித்த யாதொரு நபராவது வெளியே போகவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

சபைகள் பொதுவானது.

குறிப்பு.

போது.—சில போர்டுகள் பொதுஜனங்கள் சபை கூடும்போது வந்திருக்க போதுமான வசதிகள் அளிப்பதில்லை. இனியாவது அம்மாதிரி செய்யாமல் பொதுஜனங்களையும் தங்கள் நம்பிக்கையில் எடுத்துக்கொண்டு போதுமான வசதிகள் அவர்களுக்கு அளிக்கவேண்டும். குறிப்பிட்ட விஷயத்திற்கு மட்டும் பொதுஜனங்களையோ அல்லது குறிப்பிட்ட நபரையோ வெளியே போயிருக்கும்படி பிரெசிடெண்ட் உத்திரவிடலாம். பொதுவாக உத்திரவிட்டால் அந்த உத்திரவை பொதுஜனங்கள் நிர்பயமாய் மீறி நடக்கலாம்.

[இ. பு. ப. 639]

6. யாதொரு சபையில் லோகல் போர்டாருக்குமுன் வரக்கூடிய விஷயங்களெல்லாம் சபைக்கு வந்திருந்து வோட் கொடுக்கும் மெம்பர்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்படவேண்டும்; மேலும், வோட்டுகள் சமமாக வேறுபடுகிற விஷயத்தில் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் இரண்டாவது அல்லது (காஸ்டிங்) முடிக்கும் வோட்டைக் கொடுக்கத்தக்கவராவது மல்லாமல் அப்படிப்பட்ட வோட்டை கொடுக்கவும் வேண்டும்.

பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

குறிப்பு.

போது.—சபைமுன் ஆலோசனைக்கு வரும் விஷயங்களை எவ்விதம் முடிவு கட்ட வேண்டுமென்று இந்த விதி கூறுகிறது.

விஷயங்கள்.—தீர்மானங்கள், சபையின் முடிவுக்காக வரும் இதர அம்சங்கள் இவைகளெல்லாம் பொதுப்படையாக விஷயங்கள் என்று அழைக்கப்படும்.

யாதொரு சபையின் முன்வரக்கூடிய விஷயம்.—லோகல் போர்டுகள் இணைக்கப்பட்ட சபைகளாகையால் அவைகளின் விஷயங்கள் சபையின்முன் ஆலோசிக்கப்படவேண்டுமே யொழிய வேறு வழிகளில் ஆலோசிக்கப்படக்கூடாது. பிரசிடெண்டிற்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் லோகல் போர்டுகள் தலையிடக்கூடாது. போர்ட் ஒருமித்து செய்யக்கூடிய வேலைகளை பிரசிடெண்ட் கையாளக்கூடாது. லோகல் போர்ட் ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாய் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். மீடிங்கின் நடவடிக்கையும், தீர்மானங்கள் நிறைவேறியதும், அந்தந்த விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டிருப்பதைக் காட்டும். (தாலூகா போர்ட், பந்தர் எ. மல்லிகார்ஜுன பிரசாத் நாயடு, 45 M. 156=61 I.C. 97). பிரசிடெண்டின் தவரான அபிப்பிராயத்திற்கு மெம்பர்கள் ஒப்புக்கொண்டு தீர்மானிக்கப்பட்டதினால் அவர்களுடைய பொறுப்பு நீங்கவில்லை. (மாரியப்பிள்ளை எ. முத்துவேலு பண்டாரம். 49 Mad. 563=A.I.R. 1926 Mad, 877). ஒரு விஷயத்தில் சீக்கிரம் முடிவுக்குவர சுற்றுக் கடிதத்தின் மூலமாய் முடிவு செய்வது தவறானது, சட்ட சம்மதமாகாது. அதன் குறை நீக்கக் கூடியதல்ல. (மரோட்ராவ் எ. நாகபுரி முனிசிபல் கமிட்டி, 92 I.C. 796=A.I.R. 1926 N. 281).

சபைக்கு வந்திருந்த பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்படும்.—'தீர்மானிப்படுமென்பது' முடிவுக்கு வருதல் என்று பொருள்படும். சபைக்கு வந்திருக்கும் பெரும்பான்மை மெம்பர்களால் கூறப்படுவதே முடிவாகும். ஒரு மீடிங் சரியானதாயிருக்க எல்லா மெம்பர்களும் வரவேண்டியதில்லை. அக்காலத்தில் போர்டின் சங்கையிலிருக்கும் மெம்பர்களில் மூன்றில் ஒரு பங்கு மெம்பர்கள் வந்திருந்தால் போதுமானது. ஒரு போர்டின் மொத்த சங்கியை 24, அதில் அக்காலத்தில் போர்டிலிருப்பவர்கள் 12 மெம்பர்கள், இவர்களில் மூன்றில் ஒரு பாகமாகிய 4 மெம்பர்கள் வந்திருந்தால் அது சரியான மீடிங். அதில் 3 மெம்பர்கள் அபிப்பிராயப்படுவதுதான் முடிவான தீர்மானம். (ஹாஸன் ராஸா எ. ஹாஸன் ஆலி, 1917 M.W.N. 389 = 38 I. C. 528). [இ. பு. ப. 640]

தீர்மானிக்கப்பட்டது.—மெம்பர்களுக்கு, சபையில் ஆலோசிக்கப்படும் விஷயங்களைப்பற்றி அனுப்பப்படும் நோடீஸில் காணப்படும் விஷயங்கள் அன்றைய சபையில் தீர்மானிக்கப்பட்டதாக கருத ஏதுவில்லை. எவ்வளவு சாமான்ய விஷயமாயினும் போர்டின் முன் ஆலோசனைக்கு வந்து தீர்மானிக்கப்படவேண்டும். (சிவசங்கரன் எ. அரசர், 52 Mad. 446 = 113 = I.C. 462). [இ. பு. ப. 640 & 641]

சபை எப்படி ஆரம்பிக்கப்படுவது.—சபை கூடிய உடன், மெம்பர்களால் அனுப்பப்பட்டு பிரசிடென்டால் அங்கீகரிக்கப்பட்டு அன்றைய விஷய அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு அன்று அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் பதில் சொல்லிய பிறகு இதர விஷயங்களை ஆலோசனைக்கு எடுக்கவேண்டும். கேழ்கப்பட்ட கேள்வியையும், கொடுத்த பதிலும் குறிப்பு புத்தகத்தில் எழுதவேண்டும். [இ பு. ப. 641]

பொது விஷயங்கள்.—காரிய குறிப்பில் கண்டிருக்கும் வரிசைக் கிரமத்தில் விஷயங்களை ஆலோசிக்க எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில் விவாதமில்லாத விஷயங்கள் முதலில் ஆலோசிக்கப்பட்டு முடிவுக்கு வரப்படலாம். பிறகு விவாதிக்கக்கூடிய விஷயங்களை ஆலோசிக்கலாம். [இ. பு. ப. 641]

பிரேரணை.—விவாதிக்கக்கூடிய பிரேரணையானது சங்கரகமாயிருக்கவேண்டும்.

சபையின் முன் பிரேரணை.—ஒருவர் கொண்டுவந்த பிரேரணையை அக்கிராசனம் வகிப்பவர் ஒழுங்கீனமானதென்று கூறிவிட்டால் அதை பொருள் படுத்தாமல் அந்த மெம்பரே பிரேரணையை பிரேரேபித்து மெஜாரடியார் அங்கீகரித்து தீர்மானிக்கப்பட்டாலும் அது ஒழுங்கீன மானது. [இ. பு. ப. 641]

நின்றுகொண்டு பேசவேண்டும்.—ஒரு பிரேரணையைப்பற்றி பேச விரும்புவோர் தங்கள் ஸ்தானத்தைவிட்டு எழுந்து நின்று பேசவேண்டும். அக்கிராசனம் வகிக்கும் மெம்பரை "மிஸ்டர் பிரசிடெண்ட்" என்று அழைக்கவேண்டுமே ஒழிய வேறு பெயர்களால் அழைக்கக்கூடாது. [இ. பு. ப. 641]

ப்ரச்னை.—ஆலோசனைக்கு வரும் யாதொரு ப்ரச்னையும் தீர்மான ரூபமாய் ஒருவரால் பிரேரேபிக்கப்படவேண்டும். அதற்கு அடுத்தபடி பேசுபவர் அதை ஆமோதிக்க வேண்டும். அந்த ப்ரச்னையைப்பற்றி மட்டும் பேசலாமே யொழிய வேறு விஷயங்களை பேச விடாமல் பிரசிடென்ட் பார்த்துகொள்ளவேண்டும். ஆமோதிப்பவரில்லாவிட்டால் ப்ரச்னை நிற்காது. ஆமோதிக்கப்பட்டஉடன் குறிப்பு புத்தகத்தில் பதியப்படவேண்டும். பிறகு போர்டின் ஆலோசனைக்கு வரும். [இ. பு. ப. 641]

திருத்தம்.—ஆலோசனையிலிருக்கும் ப்ரச்னையில் எடுக்கவேண்டிய அல்லது சேர்க்க வேண்டிய அம்சமிருந்தால் அதை அம்மாதிரி திருத்த ஒரு பிரேரணை கொண்டுவரலாம். அதுவும் அமோதிக்கப்படவேண்டும் ஆமோதிப்பவரில்லாவிட்டால் திருத்தம் நிற்காது. முதல் ப்ரச்னையைப்பற்றி பேசியவர்கள் மறுபடியும் திருத்தத்தின் மேலும் பேசலாம். ஆனால் ஒருவர் ஒரு முறைதான் பேசவேண்டும். திருத்தம் ஒழுங்கானதா அல்லது ஒழுங்கீனமானதா என்பதை அக்கிராசனம்வகிப்பவர் முடிவு கூற வேண்டும்.

ஒழுங்கானதா.—ஒரு ப்ரச்னை ஆலோசனையிலிருக்கும்போது ஒருவர் அந்த ப்ரச்னையோ அல்லது திருத்தமோ ஒழுங்கானதா அல்லவா என்பதைப்பற்றி கேட்கலாம். உடனே அக்கிராசனம் வகிப்பவர் ப்ரச்னையைப்பற்றிய விவாதத்தை நிறுத்தி, ஒழுங்கீனத்தைப் பற்றி தன் முடிவை கூறவேண்டும். அவருடைய தீர்மானமே முடிவானது. [இ. பு. ப. 642]

ஒத்தி வைக்கப் பிரேரணை.—ப்ரச்னையோ, திருத்தமோ விவாதத்திலிருக்கும் போது அதை ஒத்தி வைக்க ஒரு தீர்மானம் ஒரு மெம்பர் கொண்டுவரலாம். இது ஆமோதிக்கப்பட்டால் மற்றைய விவாதங்களை நிறுத்தி ஒத்திவைக்கும் பிரேரணையை முடிவு செய்ய வேண்டும். இது பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட்டால் அந்த ப்ரச்னை ஒத்தி வைக்கப்படும். சபையை ஒத்திவைக்க வேண்டுமானால் அதற்கு தனி பிரேரணை கொண்டு வந்து நிறைவேறினல் சபையை ஒத்திவைக்கலாம். [இ. பு. ப. 643]

முடிவு.—ஒரு ப்ரச்னையின்மேல் விவாதம் நீண்ட காலமாய் நடந்து வந்தால் அந்த ப்ரச்னையை முடிவுக்கு கொண்டுவர ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேறினல் அந்த விவாதம் ஒரு முடிவுக்கு வரும். பிறகு அந்த ப்ரச்னையின்மேல் 'வோட்' எடுக்க வேண்டும்.

வாபீஸ் வாங்கிக்கொள்ளல்.—ஒரு ப்ரச்னையை வோட்டுக்கு விடுமுன் அந்த ப்ரச்னையை பிரேரேபித்தவர் அதை வாபீஸ் வாங்கிக்கொள்ளலாம். பெரும்பான்மையோர் அனுமதி கொடுத்தால் வாபீஸ் வாங்கலாம். [இ. பு. ப. 643]

ப்ரச்னையின்மேல் "வோட்', எடுப்பது.—முடிவாக ப்ரச்னைக்கு சாதகமாக இருப்பவர்களின் சங்கியையை முதலில் கேட்கவேண்டும்; அவர்களை கணக்கிட்ட பிறகு பாதகமாயிருப்பவரின் எண்ணிக்கையையும் எடுத்துக்கொண்டு, சாதகமாயிருப்பவரின் எண்ணிக்கை அதிகமாயின் ப்ரச்னை நிறைவேறியதாகவும், பாதகமாயிருப்பவரின் சங்கை அதிகமாயிருப்பின் தோற்றுப்போனதாகவும் பிரசிடெண்ட் முடிவு கூறுவார். [இ. பு. ப. 643]

"போல்" அல்லது பெயர் எண்ணிக்கை.—பிரசிடென்டின் முடிவில் சந்தேகமுள்ள ஒரு மெம்பர் "போல்" கேட்கலாம். உடனே பிரசிடெண்ட் யார் ப்ரச்னைக்கு அனுகூலமாயிருக்கிறார்களோ அவர்கள் தனக்கு வலதுபுறமும், விரோதமாயிருப்பவர் இடது புறமும், மத்தியஸ்தமாயிருப்பவர் நடுவிலும் போகவேண்டுமென்று கூறலாம். உடனே பிரசிடெண்ட் தனது வலதுபுறமிருப்பவர்களின் பெயரையும், இடதுபுறமிருப்பவர்களின் பெயரையும் குறிப்பு புத்தகத்தில் எழுதிக்கொண்டு அதன்படி முடிவுகூறலாம். [இ. பு. ப. 643]

இரண்டாவது அல்லது காஸ்டிங் வோட்.—சாதகமானவர்களுடைய வோட்டும் பாதகமானவர்களுடைய வோட்டும் சமமாயிருந்தால், பிரசிடென்டின் ஓட்டு முடிவு கூறும். அதை கொடுத்த பிறகும் சமமானல் தனது இரண்டாவது அல்லது காஸ்டிங் வோட்டை கொடுத்து முடிவுகூறலாம். [இ. பு. ப. 643]

தீர்மானம்.—ஒரு ப்ரச்னை யாதொரு ஆக்ஷேபனையின்றியோ, பெரும்பாலோராலோ முடிவு செய்யப்பட்டால் அது தீர்மானமாகிறது.

அபிப்பிராயபேதக் குறிப்பு—ஒரு ப்ரச்னையைப்பற்றியோ, அல்லது திருத்தத்தைப்பற்றியோ அபிப்பராயபேதம் ஏற்பட்டால் அதை குறிக்கும்படி ஒரு மெம்பர் கேட்டுக்கொண்டால் அதை பிரசிடென்ட் குறிப்பு புத்தகத்தில் குறிக்கலாம்.

யார் ஓட்டு கொடுக்கக்கூடியவர்.—கொடுக்கப்பட்ட வோட் செல்லுபடியாகக் கூடியதா இல்லையா என்பது சட்ட பூர்வமானதாதலால் அதை நிர்ணயிக்க சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. மெம்பர்களாயிருப்பவர்கள் மட்டும் 'வோட்' செய்யலாம். மெம்பராயில்லாதவர்கள் மெம்பராக பாவித்துக்கொண்டு 'வோட்' செய்யக்கூடாது. 'உள்ளபடி' அல்லது "நீதிபடி" ஏற்பட்ட மெம்பர்கள் என்பது கிடையாது. (தெய்வசிகாமணி எ. சேதுராத்தன அய்யர், A.I.R. 1925 M. 1034=87 I.C. 363). [இ. பு. ப. 644]

7. யாதொரு லோகல் போர்டின் சபைக்கு அப்போது லோகல் போர்டிலிருக்கும் மெம்பர்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு பேர்களாவது வந்திருந்தாலன்றி மற்றப்படி ஷை சபையில் எந்த வேலையும் நடத்தக்கூடாது.

சபை எப்போது செல்லத்தக்கியது.

குறிப்பு.

விதி 7. "க்வோரம்" அல்லது "நிர்வாக சங்கியை".—இந்த விதியில் "அப்போது" என்னும் பதம் முக்கியமானது. ஒரு போர்டில் 21 மெம்பர்களில் 3 ஸ்தானங்கள் பூர்த்திசெய்யப்படாமல் அப்போது 18 மெம்பர்கள் அந்த போர்டிலிருந்தால் மூன்றில் ஒரு பாகமாகிய 6 பேர்கள் வந்திருந்தால் "க்வோரம்" அல்லது "நிர்வாகத்திற்கு வேண்டிய சங்கியை" வந்திருப்பதாக எண்ணவேண்டும். க்வோரமில்லாவிட்டால் மீடிங் ஆரம்பிக்கக்கூடாது. மீடிங் நடந்துகொண்டிருக்கையில் க்வோரம் இல்லாமல்போனால் மீடிங் நடந்துகொண்டே போகலாம். ஆனால் யாராவது ஒரு மெம்பர் பிரசிடென்டிற்கு க்வோரமில்லை என்று அறிவித்தால் உடனே ப்ரெசிடென்ட் கூட்டத்தை கலைக்கவேண்டும். சபை கலையுமுன் வெளியேபோன மெம்பர்கள் மறுபடிவந்தால் சபையை நடத்தலாம். "வோட்" எடுக்கும்போது "க்வோரத்தைக்" கட்டாயம் கவனிக்கவேண்டும். சபைக்கு வந்திருந்து நடவடிக்கையில் கலந்து கொள்ளாமலும் வோட் கொடுக்காமலுமிருந்தால் அதை ஒத்தி வைக்கக்கூடாது ஆகையால் அடுத்த சபை புதிதாய் கூட்டுவது உசிதம்.

க்வோரம் எதற்குள் சேர வேண்டும்.

8. யாதொரு சபை கூடுவதற்கு நியமிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரைமணி நேரத்துக்குள் க்வோரம் ஏற்படாவிட்டால், வந்திருக்கும் மெம்பர்களெல்லாம் அதற்கப்புறம் காத்திருக்கச் சம்மதித்தாலன்றி மற்றப்படி அந்த சபையை தள்ளிவைத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானத்தை எப்போது திருத்தலாமென்பது.

9. யாதொரு லோகல்போர்டின் தீர்மானம் எதையும், அது விஷயமாகப் பிரத்தியேகமாய் கூட்டப்பட்ட யாதொரு சபையிலும், மெம்பர்களின் ஜாரி செய்யப்பட்ட சங்கியையில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்டதாயுள்ள அந்த போர்டின் யாதொரு தீர்மானத்தினாலுமன்றி மற்றப்படி, அது செய்யப்பட்ட பிறகு மூன்று மாதங்களுக்குள் திருத்தவுங்கூடாது ரத்து செய்யவுங்கூடாது.

குறிப்பு.

போது.—நிறைவேறிய தீர்மானத்தை அது நிறைவேறிய மூன்று மாதத்திற்கு பிறகு சாதாரண சபையில் திருத்தமோ, ரத்தோ செய்யலாம். அதற்குள் செய்ய வேண்டுமானால் விசேஷ சபையொன்று கூட்டவேண்டும். அதை திருத்த அல்லது ரத்து செய்ய அந்த போர்டின் ஏற்பட்ட சங்கியையில் பாதி மெம்பர்களுக்குமேல் ஓட்டு கொடுக்க வேண்டும். ஒரு போர்டிற்கு ஏற்பட்ட சங்கியை 20; ஆனால் அதில் அப்போது இருப்பவர்கள் 18; அதில் 10 பேர் வோட் செய்யவேண்டும்.

ஒப்பந்தத்தைப்பற்றி தீர்மானம்.—ஒப்பந்தத்தைப்பற்றி ஓர் தீர்மானம் நிறைவேறியபின் அதன்படி கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் நியாய சம்மதமாகும். (முத்து ராமலிங்க சேதுபதி எ. இந்தியா மந்திரி, A.I.R. 1926 Mad. 341=92 I.C. 311). ஒப்பந்தம் கொடுக்கப்பட்டபின் அந்த தீர்மானத்தை ரத்து செய்யலாமா அல்லது திருத்தலாமா?

தேர்தல் தீர்மானங்கள்.—சபையில் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல்கள் எல்லாம் தீர்மானங்களே யாகும். பிரசிடென்ட் தேர்தல்கள் சபையில் நடத்தப்படுகிறது. ஒருவரால் பிரேரேபிக்கப்பட்டு, மற்றொருவரால் ஆமோதிக்கப்பட்டு, யாருக்கு அதிக வோட்டுகள் கிடைக்கின்றதோ, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படுவார். (இந்தியா மந்திரி எ. முருகேச முதலியார், A.I.R. 1929 Mad. 443=108 I.C. 780). மேற்கூறிய தீர்ப்புபடி பிரசிடென்ட் அல்லது வைஸ்-பிரசிடென்ட் தேர்தலானது சபையின் தீர்மானமாகையால், புதிய திருத்தப்படி மதராஸ் கவர்ன்மெண்டார் ரத்துசெய்ய முடியாவிட்டாலும் 9-வது விதிப்படி லோகல் போர்டே, மூன்று மாதத்திற்குள் விசேஷக் கூட்டத்திலோ அல்லது 4.வது மாதத்தில் சாதாரணக் கூட்டத்திலோ அந்த தீர்மானத்தை ரத்து அல்லது திருத்தலாமா?

[இ. பு. ப. 645 & 646]

குறிப்பு புத்தகங்கள் பொதுவானது.

10. லோகல் போர்டின் ஒவ்வொரு சபையிலும் நடத்தப்படும் நடவடிக்கைக் குறிப்புகளை எழுதி, அது காரியத்துக்காக வைத்துவரப்படும் புஸ்தகத்தில் பதிவு செய்யவேண்டியது மல்லாமல், அக்கிராசனம் வகித்த மெம்பராவது அவரில்லாவிட்டால் அந்த சபைக்கு வந்திருந்த மெம்பர்களில் எவரேனும் ஒருவராவது அதில் கையெழுத்து பண்ணவும் வேண்டும்; மேலும், இந்த ஆக்டின்படி யாதொரு வரி செலுத்தும் எந்த நபராகிலும் நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணம் இல்லாமலும் ஷெ குறிப்புகளை லோகல் போர்டின் ஆபிஸிலே பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

குறிப்பு.

விதி **10**. **நடவடிக்கை குறிப்புகள்.**—சபையில் நடக்கும் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும், அப்போதைக்கப்போது, லக்கமிட்டுள்ள தனித்தனி காகிதங்கள் சேர்த்து தைத்த ஒரு குறிப்பு புத்தகத்தில் எழுதிவைப்பது நலம். சபை நடக்கையில் எவ்வளவோ திருத்தங்கள் ஏற்படக்கூடும். குறிப்பை எழுதும்போது ஒரு மெம்பர் பிரசிடென்ட் என்ன எழுதிவருகிறார் என்று கேட்டால் அவர் உடனேயாவது அல்லது எழுதி முடித்தபிறகாவது படித்துக்காட்டுவது உத்தமம். குறிப்பு புத்தகத்தை பொதுஜனங்கள் பார்க்க அருகதை உடையவரென்று ஏற்படுகையில், போர்டின் மெம்பராகிய ஒருவருக்கு அதைப் பார்க்க பூரண ஸ்வதந்திரமுண்டு. சபை முடிந்த உடன் நன்றாய் தைத்த புத்தகத்தில் சபை நிகழ்ச்சியை எழுதிவைக்கவேண்டும். புத்தகத்தில் அடித்தல், திருத்தல்களுக்கு பிரசிடென்ட் கையெழுத்து இடவேண்டும். சபையின் நடவடிக்கைகள் சரியானவைகளல்லவென்று நிரூபிக்கும் வரையில் அது நியாயமானவையானதும், சொல்லத்தக்கினதுமாகும். (புருஷோத்தம் எ. டாடா இன்டஸ்ட்ரியல் பாங்க் A.I.R. 1925 Bom. 49=90 I.C. 530). சபையின் நடவடிக்கைகளை ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டும். 11-வது விதி பார்க்கவும்.

[இ. பு. ப. 646]

பிரசிடென்ட் கையொப்பமிடவேண்டும்.—பிரசிடென்ட் அல்லது சபையில் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் வேறே அவசரமான அலுவலிருந்தால், சபை முடியும் வரையில் இருந்தாகவேண்டு மென்பதில்லை கடைசிவரையிலிருக்கும் மெம்பர் மட்டும் கையொப்பமிட்டால் போதுமானது.

எந்த நபரும் பார்வையிடுவது சாத்தியமாகவேண்டும்.—பிரசிடென்டும், ஆபீஸ் சிப்பந்திகளும், ஒன்று சேர்ந்து பொது ஜனங்களின்பார்வைக்கு குறிப்புப்புத்தகத்தை காட்டாமல் மறுத்து வருகிறார்கள். தனது பொறுப்பை அறியாது வேலை செய்யும் பிரசிடென்டுகள் இம்மாதிரி செய்தால் அவர்களை தண்டிக்க சட்டத்தில் ஒன்று மில்லை. குறிப்பு புத்தகத்தை ஓட்டு கொடுக்கும் பாத்தியதையுடைய ஓட்டருக்கு காட்டும்படி உத்திரவிட சிவில்கோர்ட்டுகளுக்கு அதிகாரமுண்டு. (தணிகாசலம் செட்டியார்; 20 L. W. 589=A.I.R. 1928 M 868).

[இ. பு. ப. 646]

குறிப்பு பிரசுரிக்கப்படவேண்டும்.

11. (1) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டின் ஒவ்வொரு சபையிலும் நடந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்றை, டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் சந்தர்ப்பத்திற்கு கேற்றபடி டிஸ்டிரிக்ட் அல்லது தாலூகா பண்டின் செலவிலே பிரசுரிப்பதற்காக நிர்ணயிக்கப்படக்கூடிய நபருக்கும் காலத்துக்குள்ளும் அனுப்பவேண்டும்.

(2) யாதொரு பஞ்சாயத்தின் ஒவ்வொரு சபையிலும் நடந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்றை அந்த சபை கூடின தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் தாலூகா போர்ட் ப்ரெஸிடென்டுக்கு அனுப்பவேண்டும்.

(3) (2) அடையாளமிட்ட உபவிதியில் கண்ட நடவடிக்கைகள் விஷயமாய் அந்த சபைக்கு வந்திருந்த யாதொரு மெம்பரிடத்திலிருந்து சபை கூடின பிறகு நாற்பத்தெட்டு மணிநேரத்துக்குள் வரப்பெற்றுக்கொள்ளப்படும் யாதொரு அபிப்பிராயப்பேதக் குறிப்பைக்கூட அதில் கண்ட நடவடிக்கைக் குறிப்புகளின் நகல்களுடன் அனுப்பவேண்டும்.

(4) (2), (3) அடையாளமிட்ட உபவிதிகளில் கண்ட குறிப்புகளின் நகல் ஒன்றை நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கும் காலத்துக்குள்ளும் விதமாகவும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குங்கூட அனுப்பவேண்டும்.

குறிப்பு.

விதி 11 (1). பிரசுரிக்கவேண்டும்.—ஒரு முனிஸிபாலிடியின் தீர்மானம் சட்டப்படி சாங்க்ஷன் செய்யப்படாமல் போனாலும், பிரசுரிக்காமலிருந்தாலும், தீர்மானத்திற்கு விரோதமாக நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டால் அது செல்லாது. (ஹரிசரன்தாஸ் எ. எம்பரர், 14 Cr. L.J. 576=21 I.C. 176 (All.)).

விதி 11 (3).—அக்கிராசனம் வகிக்கும் மெம்பரிடத்தில் நம்பிக்கைக் குறைவு, அல்லது சபையில் நடப்பவைகளை சரியாக குறிப்பிடவில்லை என்ற சந்தேகம், இவைகளை ஒழிக்க ஒவ்வொரு மெம்பருக்கும் இந்த உபசெக்ஷன் கொடுத்திருக்கும் ஸ்வதந்தரமாகும். இதை பொதுஜனங்களின் நன்மையைக் கோரும் மெம்பர் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்திற்கு வேறுயிருந்தபோதிலும் பொருட்படுத்தாது தைரியமாய் எடுத்து பேசி அதை எழுதி அனுப்புவது அவரது கடமை.

ஜில்லா கலெக்டர்.—முனிசிபாலிடியின் நடவடிக்கை குறிப்பை பெறும் பாத்தியதையை மட்டும் பெற்றிருக்கும் ஜில்லாக் கலெக்டர் ஒரு முனிசிபாலிடியின் உத்தியோகஸ்தரை அந்த முனிசிபாலிடியார் நிறுத்திவிட்டதாக செய்த தீர்மானத்தின்மேல் செய்த அபீல் விசாரிக்க அந்த கலெக்டருக்கு அதிகாரமுண்டு. (டெஜ் நாராயண் சிங் எ. எம்பரர், 61 I.C. 515 (Pat.)). இந்த விதிகளின்கீழ் நடவடிக்கை நடத்தும் ஒரு ஜில்லா கலெக்டர் கோர்டாக பாவிக்கபடமாட்டார். (சிங்காரவேலு முதலியார் எ. வரதராஜ முதலியார், 10 Cr.L.J. 9).

[இ. பு ப. 647]

குறிப்புகளும் ரிகார்டுகளும் பிரஸிடெண்டிடமிருக்க வேண்டும்.

12. லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர்-போர்ட், அதை சேர்ந்த கம்மிட்டிகள் ஆகிய இவைகளின் நடவடிக்கைக் குறிப்புகளையும் ரெக்கார்டுகளையும் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது மல்லாமல், டிஸ்டிரிக்ட் போர்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் நிச்சயிக்கக்கூடிய கட்டணங்களைச் செலுத்துவதன்மேல் அப்படிப்பட்ட எவையேனும் நடவடிக்கைக்குறிப்புகள் அல்லது ரெகார்டுகளுக்கு நகல்களைக் கொடுக்கலாம். ஷை நகல்களை 1872-ம் ஹூ இந்து தேசத்துச் சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி ப்ரெஸிடென்ட் ஸெர்டிபை செய்யவேண்டும்; மேலும், அந்தபடி ஸெர்டிபை செய்யப்பட்ட நகல்களை, ஷை ஆக்ட் 78-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் யாதொரு மியுனிஸிபல் சபையாருடைய நடவடிக்கைகளை ருஜுப்படுத்த அந்த சபையாரின் நடவடிக்கைக் குறிப்புகளை எவ்விதமாய் உபயோகிக்கலாமோ அவ்விதமாகவே ஷை போர்ட் அல்லது கமிட்டியின் நடவடிக்கைகளையும் ரெகார்டுகளையும் ருஜுப்படுத்த உபயோகிக்கலாம்.

குறிப்பு.

விதி 12. கட்டணம் செலுத்துவதின்மேல்.—குறிப்புகளின் நகல்கள் கோர்டுகளில் உபயோகிக்கும் ஸ்டாம்பு கடிதங்களில் எழுதிகொடுப்பதில்லை. ஜில்லா போர்டார் நிர்ணயிக்கும் கட்டணத்தை பெற்றுக்கொண்டு குறிப்புகளின் நகல்கள் கொடுக்கலாம்.

போர்டின் ரெகார்டுகள்.—ஒரு முனிசிபல் சபையின் நடவடிக்கைகள் பொது தஸ்தாவேஜ் ஆகும். அதற்கு நகல் கொடுக்கும் அதிகாரமுடையவர் பொது உத்தியோகஸ்தராவார். (19 A. 293 (F.B.)=17 A.W.N. 61). ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்குள் நடக்கும் கடிதப் போக்குவரத்துகள் பொது தஸ்தாவேஜுகளாகும். (பிரதி சிங் எ. கோர்ட் ஆப் வார்ட்ஸ், 23 W.R. 22). குறிப்பு புத்தகத்தை ஆஜர்படுத்த அதில் பிரஸ்தாபத்திலிருக்கும் தீர்மானம் எழுதப்படாமலிருந்தால் அவ்விஷயம் சபையின் பிரஸ்தாபத்திற்கு வரவில்லை

என்பது தாத்பர்யம். (அக்ஷே குமார் சந்த் எ. பொக்ரா முனிசிபாலிடி, 37 C.L.J. 589=75 I.C. 506=A.I R. 1923 Cal. 675). முனிசிபாலிடியின் ரிஜிஸ்டர்களும் சர்வே ப்ளான்களும் அப்போதைய முனிசிபாலிடியின் நிலமையை காட்டுமே யொழிய, சொத்துக்களுக்குள்ள பாத்தியதையாவது சொந்தத்தையாவது காட்டாது. (51 M.L.J. Notes on Recent Cases, p. 7).
[இ. பு. ப. 640]

கமிட்டியின் நடவடிக்கைகள் எழுதி போர்டுக்கு அனுப்பவேண்டும்.

13. லோகல் போர்டாரால் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு கமிட்டியின் நடவடிக்கைகளையும் எழுத்துமூலமாய் ரெகார்ட் செய்து போர்டாருக்கு அனுப்பவேண்டும்.

குறிப்பு.

போது.—கமிட்டியின் நடவடிக்கைகள் சபையின் நடவடிக்கை போலாகும். 6-வது விதியின் குறிப்பை பார்க்கவும். கமிட்டின் நடவடிக்கையின் போது கமிட்டி மெம்பர்கள் நின்று பேசவேண்டு மென்பதில்லை.
[இ. பு. ப. 649]

3-வது ஷெட்யூல்.

தேரிந்தேடுப்பவர்களுக்குரிய யோக்கியதாம்சங்கள்.

(52 (c) பிரிவைப் பார்க்கவும்.)

லோகல் போர்ட் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பவர்கள்.

வோட்டர்களின் யோக்கியதாம்சம்.

1. யாதொரு நபர்—

(a) முந்திய வருஷத்திலே இந்தியா கவர்ன்மெண்டாருக்காவது பிரதேச கவர்ன்மெண்டாருக்காவது சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள யாதொரு பிரதேச அதிகார சபையாருக்காவது செலுத்தத்தக்க யாதொரு வரி விதிக்கப்பெற்றிருந்தாலும்,

(b) சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்டிரிக்டிலாகிலும் தாலூகாவிலாகிலும் கிராமத்திலாகிலும் நிலத்தின் ரயத்துவாரி பட்டாதாரராகவாவது இனும்தாரராகவாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும்,

(c) நிலத்தை ரயத்துவாரி பட்டாதாரருக்குக் கீழ்பட்டாவது இனும்தாரருக்குக் கீழ்ப்பட்டாவது அப்படிப்பட்ட பட்டாதாரர் அல்லது இனும்தாரரின் கீழுள்ள யாதொரு பாயக்காரிக்குக் கீழ்ப்பட்டாவது எழுத்துமூலமான குத்தகை அல்லது ட்ரான்ஸ்பர் பத்திரத்தின்பேரில் டிஸ்ட்டிரிக்டிலாகிலும் தாலூகாவிலாகிலும் கிராமத்திலாகிலும் கைப்பற்றில் வைத்திருந்தாலும்,

(d) டிஸ்ட்ரிக்டிலாகிலும் தாலூகாவிலாகிலும் கிராமத்திலாகிலும் நிலத்தின் அனுபோகதாரராக மலையாளத்தில் நிலத்தை ரெஜிஸ்டர் செய்வதைக் குறித்த 1895-ம் வருஷத்து ஆக்ட் 14-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவருடன் கூட்டாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும்,

(e) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி நிலத்துக்குடையவராக யாதொரு பூஸ்திதியை டிஸ்ட்ரிக்டிலாகிலும் தாலூகாவிலாகிலும் கிராமத்திலாகிலும் கைப்பற்றில் வைத்திருந்தாலும்,

(f) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி ரயத்தாகவாகிலும் நிலத்துக்குடையவரின்கீழ் பாயக்காரியாகவாகிலும் நிலத்தை டிஸ்ட்ரிக்டிலாயினும் தாலூகாவிலாயினும் கிராமத்திலாயினும் கைப்பற்றில் வைத்திருந்தாலும்,

(g) மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களின் ரெகுலர் சேனையைச் சேர்ந்தவராயிருந்து வேலையிலிருந்து விலகின அல்லது பென்ஷன் கொடுத்து அனுப்பப்பட்ட அல்லது வேலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட உத்தியோகஸ்தராகவோ நன்கம்மிஷண்ட் ஆபிஸராகவோ படைவீரராகவோ இருந்தாலும்,

அவர் - அந்த டிஸ்டிரிக்ட் போர்ட் மெம்பர்களையாவது தாலூகா போர்ட் மெம்பர்களையாவது பஞ்சாயத்து மெம்பர்களையாவது தெரிந்தெடுப்பதற்குரிய யோக்கியதை யுள்ளவராவார்.

குறிப்பு.

போது.—பஞ்சாயத்து, தாலூகா, ஜில்லா போர்டுகளின் தேர்ந்தெடுப்பவர்கள் அனைவருக்கும் இந்த விதி பொருத்தமானது. சென்ற வருஷத்தில், ஒருவருக்கு கவர்ன்மெண்டுக்கோ வேறு லோகல் போர்டுகளுக்கோ எந்தவிதமான வரி விதிக்கப்பட்டிருந்தாலும் அவருக்கு ஓட்டுரிமையுண்டு. வருஷவாரி 10 ரூபாயிக்கு குறையாமல் வரி கட்டுபவருக்கு ஓட்டுரிமை என்றிருந்தது எடுபட்டுபோய்விட்டது. ஓட்டுரிமையை விர்த்தி செய்ய ஏற்பாடு செய்ய எத்தனிக்கும் அரசாங்கம், கல்வியை ஒரு யோக்கியதாம்சமாக ஏற்படுத்தாதது விசனிக்கத் தக்கது. லோகல் போர்டுக்குமட்டுமல்லாமல் எந்த லோகல் போர்டுக்காகிலும், முனிசிபாலிடிக்காகிலும், கன்டோன்மெண்டுக்காகிலும், இந்தியா கவர்ன்மெண்டுக்காகிலும், பிரதேச கவர்ன்மெண்டுக்காகிலும், ஏதாவது வரி கட்டினால் போதுமானதென்று விசாலப்படுத்தியதிலிருந்து கவர்ன்மெண்டார் ஓட்டுரிமையை தாராளமாக்கி யிருக்கிறார்கள். இந்த விதிப்படி ஸ்வாதீன அடமானமுடையவருக்கு ஓட்டுரிமை கிடையாது.

விதி 1 (a). வரி.—74-B செக்ஷனைப் பார்க்கவும். வரி என்பது நேர்முகமாய் செலுத்தப்படும் வருமான வரி, தொழில் வரி, வீட்டு வரி, நில வரி முதலியவைகள் ஆகும், லைசென்ஸ் கட்டணம், ஸ்டாம்பு கட்டணம் முதலியது ஆகாது. முந்திய வருஷத்தில் வரி விதிக்கப்பட்டதை ஆலோசிக்கவேண்டுமே யொழிய ஒருவர் அபேக்ஷகராய் நிற்கும்போதாகிலும், ஓட்டு எடுக்கும் போதாகிலும், மெம்பராயிருக்கும்போதாகிலும் அவர் வரி கட்டுகிறாரா என்று கவனிக்க வேண்டியதில்லை. தெரிந்தெடுப்பவராகவோ தெரிந்தெடுக்கப்பட்டவராகவோ இருக்க விதிக்கப்பட்ட வரியை கட்டியிருக்க வேண்டுமென்பதில்லை, முன்பிருந்த விதி திருத்தப்பட்டு வரி விதிக்கப்பட்டிருந்தால் போதுமானதாக மாற்றப்பட்டது.

விதி 1 (b) to (f).—வோட்டுக்காக மட்டும் ஒருவருக்கு சாசனம் மற்றொருவர் எழுதிக்கொடுக்க அதன்படி வோட்டு கொடுக்கக்கூடாது.

விதி 1 (c) போது.—ஓட்டுரிமை விஷயத்தில் இந்த விதி முக்கியமானது நில சொந்தக்காரருக்கு மட்டுமல்லாமல், கீழ் குத்தகையுடையவருக்கும், எழுத்துமூலமாய் பட்டாதாரிடம், அல்லது இனாம்தாரரிடம் கீழ் குத்தகை முச்சலிக்கை எழுதி கொடுத்திருப்பவருக்கும் ஓட்டுரிமையுண்டு. 1908-ம் வருஷத்திய மதராஸ் எஸ்டேட் லாண்ட் ஆக்ட்படி ரயத்துயின்கீழ் அல்லது பாயக்காரியின்கீழ் நிலத்தை குத்தகைக்கு வைத்துக்கொண்டவருக்கு ஓட்டுரிமை கிடையாது.

எழுத்து மூலமான குத்தகை.—இந்த ஆக்டிற்கு முன் குத்தகை வைத்துக்கொண்டவராயிருந்தால் அது ரிஜிஸ்தர் செய்த குத்தகை முச்சலிக்கையா யிருக்கவேண்டும். இப்போது ரிஜிஸ்டராக வேண்டியதில்லை. எழுத்து மூலமாயிருந்தால் போதும்.

2. [மதராசு 1930-வருஷத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

3. ஒரு கம்பெனி அல்லது சங்கத்தாலாவது கூட்டாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நபர்களாலாவது கூட்டுப் பட்டாதாரர்களாலாவது சொத்து கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு யாதொரு வரி விதிக்கப்பட்டு வந்தாலும், ஷை கம்பெனியார், சங்கத்தார், குடும்பத்தார் அல்லது கூட்டுப் பட்டாதாரர்கள் ஷை யோக்கியதாம்சம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள்; மேலும், அந்தக் கம்பெனியின் அல்லது சங்கத்தின் காரியதரிசியாகிலும், அது விஷயமாகக் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபராகிலும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிலாயினும் கூட்டுப் பட்டாதாரர்களிலாயினும் பெரும்பாலோரின் அதிகாரம்பெற்ற நபராகிலும், அவிபக்த ஹிந்து குடும்பத்தின் விஷயத்தில் அப்படி அதிகாரம் கொடுக்கப்பெற்று அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபராகிலும் அப்படி அதிகாரம் எதுவும் கொடுக்கப்படாவிட்டால் அதன் மானேஜராகிலும் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் தம்முடைய பெயரைப் பதிவு செய்துகொள்ள உரிமை யுடைய நபராவார்.

கூட்டு பட்டாதாரர்கள் எப்படி வோட் செய்வது.

குறிப்பு.

யோக்கியதாம்சம் உடையவர்களாக கருதப்படுவார்கள்.—கம்பனிகள் தொழில் வரி கட்டுகின்றன. கூட்டுபட்டாதார்கள் நிலவரி கட்டுகிறார்கள். அம்மாதிரி அவிபக்த குடும்பங்கள் வரி கட்டுகின்றன. அவைகளுக்கு யோக்கியதாம்சமிருப்பதால், ஒரு வோட்டு கொடுக்க அர்கராவார். அனைவரும் சேர்ந்து ஒரு வோட் கொடுப்பது அசாத்தியமாகையால் இந்த விதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் யார் வோட்டு கொடுப்பது என்பது விளக்கப்பட்டிருக்கிறது. பொதுவிதிகளுக்கு இது விலக்காக இருக்கிறது.

பெரும்பான்மையோரால் அதிகாரம் கொடுக்கப்பெற்று.—ஒரு கிருஸ்தவ, மகமத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சேர்ந்து வரி கட்டுவார்களானால் அவரில் பெரும்பான்மையோரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர் வோட்டு கொடுக்கலாம்.

கூட்டு பட்டாதார்.—கூட்டு பட்டாதார்கள் சேர்ந்து ஒருவருக்கு அதிகாரம் கொடுக்காமல் போனால் அப்பட்டாதாரர்களில் முதலில் யார் பெயர் வருகின்றதோ அவருடைய பெயரை வோட்டர் ஜாப்தாவில் சேர்க்கப்படும்.

ஹிந்து அவிபக்த குடும்பத்தின்............................மானேஜராகிலும்.—சாதாரணமாய் வரி யார் செலுத்துகிறாரோ அவருடைய பெயர் ஓட்டர் ஜாபிதாவில் குறிப்பிடப்படும். அவர் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவராயிருப்பதால் அவருக்கு யோக்கியதாம்ச குறைவு ஏற்படாது. 52-வது செக்ஷன்படியும் III ஷெட்யூல் 1-வது விதிப்படியும், ஓட்டு கொடுக்கும் யோக்கியதாம்சத்தை குறைக்க யாவராலு முடியாது. (செக்ரிடெரியும், பிரசிடெண்டும், நாகபுரி முனிசிபல் கமிட்டி எ. தேவிதாஸ், 21 N.L.R. 182=88 I.C. 480=A.I.R. 1926 N. 66).

4. யாதொரு நபர் - தம்முடைய சொந்த ஹோதாவிலாவது ஒரு கம்பெனி, சங்கம் அவிபக்த குடும்பம் அல்லது கூட்டுப் பட்டதார்களின் பிரதிநிதியென்னும் ஹோதாவிலாவது (தெரிந்தெடுப்பதற்கு) யோக்கியதையுள்ளவராயிருக்ககூடுமேயொழிய, இவ்விரண்டு ஹோதாக்களிலும் அந்தப்படி யோக்கியதையுள்ளவராகமாட்டார்.

வோட்டில் பிரதிநிதித்துவம்.

5. 3-வது விதியில் நிபந்தனை கண்டபடிக்கன்றி, மற்றப்படி யாதொரு நபர் தம்முடைய சொந்த ஹோதாவிலேயே நிர்ணயிக்கப்பட்ட யோக்கியதாம்சங்கள் உடையவராயிருந்தாலன்றி மற்றப்படி, அவர் - தெரிந்தெடுப்பவருக்குரிய யோக்கியதையுள்ளவராக மாட்டார்.

சொந்த யோக்கியதாம்சம்.

குறிப்பு.

போது.—பஞ்சாயத்து, தாலூகா, ஜில்லா போர்டுகளுக்கு ஒருவருக்கு ஒரு வோட்டு உண்டு. மேலே குறிப்பிட்ட 1-வது விதியில் கூறியிருக்கும் யோக்கியதாம்சம் தன் சொந்த ஹோதாவிலிருக்கவேண்டும். 3-வது விதியில் சொல்லப்பட்டபடி வோட்டு கொடுக்பவர், தன் சொந்த ஹோதாவில் மறுபடியும் வோட்டு கொடுக்க முடியாது. ஒரு வோட்டருக்கு பதில் மற்றொரு வோட்டர் கொடுக்கக்கூடாது. வோட்டுரிமையை மற்றொருவருக்கு மாற்ற முடியாது. வோட்டுரிமையை தானே செலுத்தவேண்டும். [இ. பு. ப. 652]

4-வது ஷெட்யூல்.

வரி விதிப்பைக்குறித்த விதிகள்.

(92, 93, 95, 98, 104-வது விதிகளைப் பார்க்கவும்.)

1-ம் பாகம்.—லாண்ட் ஸெஸ் என்னும் வரி.

ஸெஸ்ஸை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் வசூலிக்கவேண்டும்.

1. லாண்ட் ஸெஸ் என்னும் வரியை விதிப்பதற்கும் வசூல் செய்வதற்கும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் உத்திரவதியாவார்.

2. [மதராசு 1930-ஹூத்திய 11-வது ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]

லாண்ட் ஸெஸ் லோகல் பண்டுக்கு சேரும்.

3. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - இந்த ஆக்ட்டின்படி தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு வசூலிக்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியிலிருந்தும் கிடைக்கும் நிகர வருமானத்தை சம்பந்தப்பட்ட லோகல் பண்டுக்கு கொடுத்துவிடச் செய்யவேண்டும்.

வரவும் அதை வசூலிக்க செலவும்.

4. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர்-இந்த ஆக்டின்படி தம்மால் வசூலிக்கப்படப்போகும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியிலிருந்து வெகுசாய் கிடைக்கக்கூடிய மொத்த வரவையும் அதை வசூலிப்பதற்கு பிடிக்கக்கூடிய செலவுகளையும் கண்டு ஒரு மதிப்புக் கணக்கை பிரதி வருஷமும் பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக கட்டளையிடக்கூடிய காலங்களில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டாரிடத்தில் கொடுக்கவேண்டும்.

2-ம் பாகம்.—இதர வரிகள்.

சதாரணமாய் இதிர வரிகளுக்குப் பொதுவான நிபந்தனைகள்.

வரி புத்தகங்களை பார்வையிடுவதும், திருத்துவதும்.

5. (1) பஞ்சாயத்து பிரஸிடென்டானவர், தொழில் வரி, வீட்டு வரி ஆகிய இவைகள் விதிக்கப்படுவதற்குள்ளான கம்பெனிகளையும் நபர்களையும் காட்டும் பிரத்தியேகமான வரி விதிப்பு புஸ்தகங்களைத் தயார் செய்து வைத்திருக்கவேண்டும்.

(2) வரிதிப்பு புஸ்தகங்களையும் யாதொரு வரிவிதிப்புக்குச் சம்பந்தப்பட்ட விவரமான தகவல்கள் பிரத்யேகமான ரிகார்டுகளில் வைக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட தகவல்கள் அடங்கிய ஷை ரெகார்டுகளின் பாகத்தையும் அந்த

பஞ்சாயத்துக்கு யாதொருவரி செலுத்தும் எந்த நபராகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாகிலும் நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணமில்லாமலும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும். மேலும் ஷை புத்தகங்களிலிருந்தும் ரெகார்டுகளிலிருந்தும் கட்டணம் எதுவும் செலுத்தாமல் எகஸ்டராக்டுகள் எடுத்து எழுதிக்கொள்ள மேலே கண்ட நபர் அல்லது ஏஜென்டுக்கு உரிமையுண்டு.

(3) லோகல் போர்டாருடைய கணக்கு புஸ்தகங்களை அந்த லோகல் போர்டுக்கு யாதொரு வரி செலுத்தும் எந்த நபராகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாகிலும் பார்வையிடவேண்டுமானல், ஒவ்வொரு மாதத்திலும் லோகல் போர்டார் நிஷ்கரிஷை செய்யும் தினத்திலாவது தினங்களிலாவது கட்டணமில்லாமலே பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(4) (a) யாதொரு கம்பெனி அல்லது நபருக்காவது யாதொரு சொத்துக்காவது குறைவாக வரி விதிக்கப்பட்டிருக்கிறதென்ருகிலும், அந்த கம்பெனி அல்லது நபருடைய பெயர் அல்லது அந்த சொத்து அஜாக்கிரதையினலாவது அக்கிரமமாயாவது யாதொரு வரிக்குச் சம்பந்தப்பட்ட வரிவிதிப்புப் புஸ்தகங்களிலிருந்து விட்டுவிடப்பட்டிருக்கிறதென்ருகிலும், ஷை புஸ்தகங்களில் ஏதேனும் எழுத்துப்பிழை அல்லது கணக்குப்பிழை இருக்கிறதென்ருகிலும் எப்போதேனும் பஞ்சாயத்துக்குத் தோற்றுமானல், அதற்கு நியாயமாகவோ அவசியமாகவோ தோற்றுகிற விதமாய் ஷை புஸ்தகங்களைத் திருத்தும்படி அது ப்ரெஸிடென்டுக்கு கட்டளையிடலாம் :

ஆனல், ஷை கட்டளையினல் வரிவிதிப்பு அதிகரிக்கிறதாக யிருக்கும் பட்சத்தில் வரிவிதிப்புப் புஸ்தகங்களை உத்தேசிக்கப்பட்ட பிரகாரம் ஏன் திருத்தக்கூடாதென்பதற்குக் காரணம் காட்ட சம்பந்தப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு நியாயமான அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஷை கட்டளை எதுவும் பிறப்பிக்கக்கூடாது.

(b) அந்தப்படி செய்யும் திருத்தமானது - அதைச் செய்வது நியாயமாகுமென்று சொல்வதற்குள்ள சந்தர்ப்பங்கள் நடைமுதல் அரை வருஷத்திலாகிலும் அதற்கடுத்த முந்திய இரண்டு அரை வருஷங்களிலாகிலும் மிகவும் முற்பட்ட எந்தத் தேதியில் ஏற்பட்டனவோ அந்தத் தேதியிலிருந்து செலாவணியாயிருப்பதாகக் கருதப்படும்.

குறிப்பு.

விதி 5 (2). **நியாயமான எல்லா காலங்களிலும்.**—*நியாயமான காலம் என்பது அந்தந்த பிரசிடென்டின் சௌகரியத்தைப் பொறுத்தது. புத்தகங்களை காட்டுவதில் பிரசிடென்ட் யாதொரு வித்தியாசம் காட்டக்கூடாது. லோகல் போர்டுகளின் நீதி பரிபாலன ரிபோர்டில் கவர்ன்மென்டார் சில பிரசிடென்டுகள் கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்பட்ட கணக்கு பரிசோதகர்களுக்குக்கூட கணக்கு புத்தகங்களை காட்ட மறுப்பது விசனிக்கத்தக்கதென கூறி இருக்கிருர்கள்.* இம்மாதிரியான செய்கையை **கண்டிப்பதுடன்,** *பொது ஜனங்களிடத்தி தங்களுடைய பொறுப்பைக் காட்டாதது வெறுக்கத்தக்கது.*

விதி 5 (3).—*வரி செலுத்துவோர் ஒவ்வொருவரும் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியின் உண்மையை உணர பிரசிடென்டிற்கு கடிதம் எழுதி புத்தகங்களைக் காட்டும்படி வற்புறுத்தலாம். பிரசிடென்டிற்கு போதுமான காலம் கொடுத்து புத்தகத்தை பார்வையிடலாம். போதுமான அவகாசம் கொடுத்தும் அல்லது பிரசிடென்ட் குறிப்பிட்ட காலத்தும் அவர் புத்தகத்தை காட்டாமல் போனல் பிரசிடென்டின் பேரில்* 211 *செக்ஷன்படி தாவா தொடரலாம்.*

விதி 5 (4). நியாயமான அவகாசம் கொடுக்கப்பட்டாலன்றி.—தற்போதிருக்கும் வரியை குறைத்தோ அல்லது அதிகரித்தோ அம்மாதிரி புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டுமானால் அந்த நபருக்கு போதுமான அவகாசம் கொடுத்து அவருடைய ஆக்ஷேபனையை கேட்கவேண்டும். அம்மாதிரி நோடீஸ் கொடுக்காமல் போனால் அவர் பிரத்தியேக நஷ்ட ஈட்டிற்கு அருகராவார். ஆக்டில் சொல்லி இருக்கும் வண்ணம் நடக்காமல் அதிக வரி விதித்து வசூல் செய்யப்பட்டால் அந்த அதிக வரியை திருப்பி அடைய ஸிவில் கோர்டில் தாவா தொடரலாம். (மகமத் ஷம்சுதீன் ஆலிம் சாகிப் எ. திருவாரூர் முனிசிபல் கௌன்சில், A.I.R. 1928 Mad. 348=106 I.C. 529.)

விதி 5 (4) (b).—வரி புத்தகத்திலிருக்கும் வரியை மாற்றவெண்டுமென்று பஞ்சாயத்து போர்ட் அதன் பிரசிடென்டை கேட்டுக்கொள்ளும் சந்தர்பத்திற்கு இந்த விதி பொருந்தும். அந்த சந்தர்பத்தில் மூன்று அரைவருஷத்திய வரி பாக்கியை வசூல் செய்யலாம். பிரசிடெண்ட் தானாக வரியை மாற்றினால் அந்த அரை வருஷம் அல்லது அதற்கு அடுத்த அரை வருஷத்திற்குதான் வசூல் செய்யலாம். எல்லாவற்றிற்கும் அந்த நபருக்கு நோடிஸ் கொடுக்க வேண்டும். இல்லையேல் அந்த அரை வருஷத்திற்கு அல்லது அடுத்த அரை வருஷத்திற்கு அந்த வரி வசூல் செய்யமுடியாது. விதி 32 (3) பார்க்கவும். விதி 5 (4)-படி நோடீஸ் கொடுத்த பிறகு 1931-ஞ ஜனவரி மாதத்தில் வரி உயர்த்தப்பட்டதாக வைத்துக்கொள்ளுவோம். அது 1930-ஞ அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கும் அரை வருஷம் முதல் 1931-ஞ மார்ச்சு 31௳ வரையில் அமுலுக்கு வந்ததாக கருதப்படும். அந்த வரி விதிப்பு இரண்டு உப-செக்ஷன்களையும் தழுவியதாயிருந்தால் 1929-ஞ அக்டோபர் முதல் 1930-ஞ மார்ச்சு கடைசிவரையிலும், 1930-ஞ ஏப்ரல் முதல் 1930 ஞ செப்டம்பர் கடைசிவரையிலும் வசூலிக்க யோக்கியதை கொடுக்கும். அதிக வரி சேர்ந்தாப்போலுள்ள முன் இரண்டு அரை வருஷத்திற்கும் வசூலிக்கப்படத்தக்கதாகும். இந்த அதிக வரி விதிப்பு தொழில் வரி, வீட்டு வரி இரண்டிற்கும் பொருந்தும். (முனிசிபல் கௌன்சில், கும்பகோணம் எ. தென் இந்தியா ரயில்வே, 52 M. 792=A.I.R. 1929 Mad. 849.)

காலவரை.—முதன் முதல் ஜப்தி செய்யப்படத்தக்க தேதி முதல் 3 வருஷத்திற்குள் வரி வசூல் செய்யலாம். செக்ஷன் 222 பார்க்கவும். கடந்த இரண்டு அரை வருஷத்திற்கும் சேர்ந்தாப்போல் ஜப்தி செய்து வசூலிக்க கூடுமாதலால் அதற்கு காலவரை தற்போது அரை வருஷத்திலிருந்து மூன்று வருஷமாகும்.

பிரசிடெண்ட் வரியை நிச்சயிக்க வேண்டும்.

6. இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, ப்ரெசிடென்டானவர் - ஒவ்வொரு கம்பெனி, நபர் அல்லது சொத்தும் இன்ன வரிக்கு உள்ளாக வேண்டுமென்பதை நிச்சயிக்கவேண்டும் :

ஆனல், ப்ரெசிடென்டால் செலுத்தப்படத்தக்க வரிகளின் விஷயத்தில், பஞ்சாயத்து வரி விதிக்கவேண்டும்.

குறிப்பு.

விதி 6.—நிர்வாக அதிகாரம் செக்ஷன் 21-படி பிரசிடென்டுடையது. இந்த புது விதியால் பிரசிடென்ட் ஒரு கம்பனி, அல்லது சொத்து அல்லது வீடுகளின்மேல் வரிவிதிக்க அருகரா இல்லையா என்னும் சந்தேகம் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. தன் விஷயத்தில் தானே தீர்ப்பு கூறுவது தகுதியுடையதல்ல. மதராசு லோகல் போர்டுகள் ஆக்ட்படி பிரசிடென்ட் குறிப்பிடலாமே ஒழிய வரி அக்கிரமமாய் விதிக்கக்கூடாது. (முனிசிபல் கௌன்சில், ராஜமஹேந்தரி எ. நரசிம்ம ராவ், 109 I.C. 92.) [இ. பு. ப. 656]

வரிசெலுத்துவோருக்கு ரசீது.

7. (1) ப்ரெஸிடென்டானவர் -யாதொரு வரியைச் செலுத்தும் பிரதி நபருக்கும் அதற்காக தாமாவது இது விஷயத்தில் தம்மால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஒரு நபராவது கையெழுத்து பண்ணி ரசீது ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

(2) ஷை ரசீதில்—

(a) அது கொடுக்கப்படும் தேதியையும்,

(b) அது யாருக்குக் கொடுப்படுகிறதோ அந்த நபரின் பெயரையும்,

(c) எந்த வரியின் விஷயமாய்த் தொகை செலுத்தப்பட்டதோ அந்த வரியையும்,

(d) எந்த கால அளவுக்கு தொகை செலுத்தப்பட்டதோ அந்தக் கால அளவையும்,

(e) செலுத்தப்பட்ட தொகையையும்,

கண்டெழுதவேண்டும்.

8. [மதராசு 1930-ஷூத்திய 11-வது ஆக்டினுல் ரத்து செய்யப்பட்டது.]

தொழில் வரி விதிப்பது

9. (1) தொழில் வரி விதிக்கும் காரியங்களுக்காக கம்பெனிகளும் நபர்களும் அடியிற்கண்ட வகுப்புகளாகப் பிரிக்கப்படுவார்கள்; மேலும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் அடியிற்கண்டபடி உச்ச அரை வருஷ வரி விதிக்கப்படத்தக்கதாகும் :—

தொழில் வரி விதிப்பது.

வகுப்பு.	அரை வருஷ வருமானம்.		உச்ச அரை வருஷ வரி.		
	ரூ.	ரூ.	ரூ.	அ.	பை.
I	21,000 க்கு மேற்பட்டு		275	0	0
II	18,000 க்கு மேற்பட்டு	21,000 க்கு மேற்படாமல்.	225	0	0
III	12,000 ,,	18,000 ,,	150	0	0
IV	9,000 ,,	12,000 ,,	85	0	0
V	6,000 ,,	9,000 ,,	55	0	0
VI	4,200 ,,	6,000 ,,	28	0	0
VII	3,000 ,,	4,200 ,,	20	0	0
VIII	1,800 ,,	3,000 ,,	10	0	0
IX	1,200 ,,	1,800 ,,	6	0	0
X	600 ,,	1,200 ,,	3	0	0
XI	300 ,,	600 ,,	1	8	0
XII	150 ,,	300 ,,	0	8	0

(2) (1) குறிப்பிடப்பட்ட உபவிதியில் குறிப்பிட்ட உச்ச தொகைக்கு உட்பட்டு ஒவ்வொரு வகுப்பாருக்கும் விதிக்கப்படதக்க வரியை டிஸ்ட்ரிக்ட் போர்டார் நிச்சயிக்கவேண்டும் :

ஆனுல், எந்த விஷயத்திலும் யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்பின் அதம வருமானத்துக்கும் உள்ள சங்கியாபரிமாணமானது-அதற்குக் கீழ்பட்ட யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்பின் அதம வருமானத்துக்கும் உள்ள சங்கியா பரிமாணத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(3) டிஸ்ட்ரிக்ட் போர்டார் (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்டிருக்கும் யாதொரு வகுப்பையாவது பல வகுப்புகளையாவது தொழில் வரி செலுத்த உட்பட்டிருப்பதனின்றும் நிவாரணே செய்யலாம்; ஆனுல், யாதொரு வகுப்பார் வரி செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும்போது, அவர்களுக்கு மேற்பட்ட எந்த வகுப்பாரையும் வரி செலுத்த உட்பட்டிருப்பதனின்றும் நிவாரணே செய்யக் கூடாது.

தொழில் அல்லது வியாபாரம் செய்வது.

10. யாதொரு கம்பெனி அல்லது நபர் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் ஆபிஸாவது தொழிலிடமாவது வைத்திருந்தால், அந்த பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் ஷை கம்பெனி அல்லது நபர் வியாபாரம் நடத்தியிருப்பதாகவாகிலும் ஒரு தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்திருப்பதாகவாகிலும் உத்தியோகம் வகித்திருப்பதாகவாகிலும் கருதப்படும்.

தொழில் வரி விதிக்க வருமானம் கண்டுபிடிப்பது.

11. (1) யாதொரு கம்பெனி அல்லது நபர் எந்த அரை வருஷத்திலாகிலும் ஒரே லோகல் போர்டின் விஸ்தீர்ணத்துக்குள்ளேயே வியாபாரம் நடத்தினால், அப்படிப்பட்ட வியாபாரத்திலிருந்து அந்தக் கம்பெனி அல்லது நபருக்குக் கிடைக்கும் வரும்படியானது - அந்த அரை வருஷத்தில் இந்த ஆக்டின்படி தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக—

(a) ஷை அரை வருஷம் அடங்கிய வருஷத்துக்காக 1922-ம் வருஷத்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்டின்படி அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு வருமான வரி விதிக்கப்படும் பட்சத்தில், 1922-ம் வருஷத்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்ட் 10-வது பிரிவின்படி வருமான வரி விதிக்கும் காரியத்துக்காக ஷை வியாபாரத்திலிருந்து கிடைக்கும் ஆதாயமும் லாபமும் எவ்வளவு தொகையாகக் கணக்கிடப்படுகிறதோ அந்தத் தொகையில் பாதியாகவும்,

(b) ஷை ஆதாயமும் லாபமும் மொத்தத்தில் இவ்வளவென்று கண்டறியக்கூடாத பட்சத்திலாவது அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு வருமான வரி விதிக்கப்படாமல் இருக்கும் பட்சத்திலாவது, அந்த அரை வருஷத்தில் லோகல் போர்டின் விஸ்தீர்ணத்திலே நடத்தப்பட்ட வியாபாரத்தின் மொத்த மதிப்பில் நூற்றுக்கு இவ்வளவென்று பிரதேச கவர்ன்மெண்டார் சட்ட சபையின் அங்கீகாரத்துக்குட்பட்டு நிர்ணயிக்கக்கூடிய பாகமாகவும், அல்லது இதுகூட கண்டறியக்கூடாமலிருந்தால், முந்திய வருஷத்தில் இதே அரை வருஷத்திலே நடந்த வியாபாரத்தின் மொத்த மதிப்பில் அவர்கள் நிர்ணயிக்கக்கூடிய பாகமாகவும் கருதப்படும்.

(2) யாதொரு கம்பெனி அல்லது நபர் சிறிதுமட்டில் ஒரு லோகல் போர்டின் விஸ்தீர்ணத்திலும் சிறிதுமட்டில் அந்த விஸ்தீர்ணத்துக்கு வெளியிலும் வியாபாரம் நடத்தினால், அந்த லோகல் போர்டின் விஸ்தீர்ணத்தில் நடத்தப்பட்ட வியாபாரத்திலிருந்து ஷை கம்பெனி அல்லது நபருக்குக் கிடைக்கும் வரும்படியானது- இந்த ஆக்டின்படி தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த அரை வருஷத்திலாவது முந்திய வருஷத்தில் அதே அரை வருஷத்திலாவது ஷை விஸ்தீர்ணத்தில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் மொத்த மதிப்பில் (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியில் கண்ட நூற்றுக்கு இவ்வளவென்னும் பாகமாகக் கருதப்படும்.

(3) (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதி, (2) குறிப்பிட்ட உபவிதி ஆகிய இவைகளின் காரியங்களுக்காக யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் மொத்த மதிப்பு என்பது- அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட, தயார் செய்யப்பட்ட, வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட சரக்குகளின் அல்லது அதில் நடத்தப்பட்ட வேறே யாதொரு வியாபாரத்தின் மொத்த ரொக்க மதிப்பு என்று அர்த்தமாகும்.

விவரணம்.—இந்த உபவிதியின்படி வியாபாரத்தின் மொத்த மதிப்பை நிச்சயிக்கையில்—

(a) யாதொரு கம்பெனி அல்லது நபரால் கிரயத்துக்கு வாங்கினது காரணமாக எவையேனும் சரக்குகள் ஒப்புவிக்கப்படுவதும், அதே கம்பெனி அல்லது நபர் அவைகளை விக்கிரயம் செய்தது காரணமாக அவை ஒப்புவிக்கப்படுவதும் ஆகிய இரண்டு காரியங்களும் சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியில் நடந்தால், பிந்தின விவகாரம் மாத்திரமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்;

(b) யாதொரு கம்பெனி அல்லது நபர் கிரயத்துக்கு வாங்கினது காரணமாக எவையேனும் சரக்குகள் ஷை ப்ரெஸிடென்ஸிக்கு வெளியே யாதொரு இடத்தில் ஒப்புவிக்கப்பட்டு, அதே கம்பெனி அல்லது நபர் அவைகளை விக்கிரயம் செய்தது காரணமாக அவை ஷை ப்ரெசிடென்ஸியிலே யாதொரு இடத்தில் ஒப்புவிக்கப்பட்டால், பிந்தின விவகாரம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்; மேலும்,

(c) யாதொரு கம்பெனி அல்லது நபர் கிரயத்துக் வாங்கினது காரணமாக எவையேனும் சரக்குகள் ஷை ப்ரெஸிடென்ஸியில் யாதொரு இடத்தில் ஒப்புவிக்கப்பட்டு, அதே கம்பெனி அல்லது நபர் அவைகளை விக்கிரயம் செய்தது காரணமாக அவை ஷை ப்ரெஸிடென்ஸிக்கு வெளியே யாதொரு இடத்தில் ஒப்புவிக்கப்பட்டால், முந்திய விவகாரம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பு.

விதி 11 (1).—வருமான வரி விதிக்கப்பட்டால், எவ்வளவு வருமானத்திற்கு வரி விதிக்கப்பட்டதோ, அதில் பாதி வருமானத்தின்மேல் தொழில் வரி போடவேண்டும். வருமான வரி விதிக்கப்படாமலும், லாப, நஷ்டத்தை கணக்கிட முடியாமலுமுள்ள அம்சத்தில் கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்பட்டு, சட்ட நிருபண சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட விதமாய் வியாபாரமொத்த மதிப்பை யோசித்து தொழில் வரி விதிக்கவேண்டும். வியாபார மொத்த மதிப்பை 3-வது உபசெக்ஷனில் கூறப்பட்டிருக்கிறது.

விதி 11 (2).—ஒரு கிராமத்தில் நடக்கும் வியாபாரத்தை மட்டும் தொழில் வரிக்காக எடுத்துக்கொள்ளவேண்டுமே யொழிய இதர இடங்களில் நடக்கும் வியாபாரத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது.

விதி 11 (3).—வியாபார மொத்த மதிப்பைப்பற்றி விவரமாய்க் கூறுகிறது.

11-A. ரிடர்ன் சவரித்து அனுப்பும் படி கேட்டுக் கொள்ளுவது.

(1) யாதொரு கம்பெனி அல்லது நபரிடமிருந்து எந்த அரை வருஷத்துக்காவது தொழில் வரி பாக்கியாயிருப்பதாக பஞ்சாயத்து ப்ரெஸிடெண்ட் அபிப்பிராயப்பட்டால், அவர் - ஒரு நோடீஸ் பிறப்பித்து, ஷை கம்பெனி அல்லது நபர் முப்பது தினங்களுக்குக் குறையாமல் அந்த நோடீஸில் குறிப்பிட்டிருக்கக்கூடிய காலத்துக்குள், நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படி ஒரு ரிடர்ன் சவரிக்க வேண்டுமென்றும், அதில் பிரஸ்தாப அரை வருஷத்துக்காக எந்த வரும்படியை ஆதாரமாகக்கொண்டு அது அல்லது அவர் தொழில் வரி விதிக்கப்படுவதற்கு உள்ளாகும் அல்லது உள்ளவரென்று அந்தக் கம்பெனி அல்லது நபருக்குத் தோற்றுகிறதோ அந்த வரும்படியைக் காணவேண்டுமென்றும் குறிப்பிட்டு, ஷை நோடீஸை அந்தக் கம்பெனி அல்லது நபருக்கு அந்த அரை வருஷத்திலாவது அடுத்த அரை வருஷத்திலாவது சேர்ப்பிக்கவேண்டும். அதன்மேல், ஷை கம்பெனி அல்லது நபர் - எதற்காக தொழில்வரி கேட்கப்படுகிறதோ அந்த அரை வருஷத்திலாகிலும், முந்திய வருஷத்தின் அதே அரை வருஷத்திலாகிலும் அதற்கு அல்லது அவருக்குக் கிடைத்த வரும்படியைக் கண்டு ஒரு ரிடர்ன் அனுப்பவும், அனுப்பப்பட்ட ரிடர்னுக்கு ஆதரவாய் அந்தக்

கம்பெனி அல்லது நபர் நம்பியிருக்கக்கூடிய யாதொரு சாட்சியத்தை ஹாஜர்ப்படுத்தவும் சுதந்தரமுடையதாகும் அல்லது சுதந்தரமுடையவராவார்.

(2) (1) குறிப்பிட்ட உபவிதியில் சொல்லியிருக்கிறபடி ஒரு ரிடர்ன் அனுப்பப்பட்டு, அது சரியாயும் பூர்த்தியாயும் இருக்கிறதென்று ப்ரெஸிடென்ட் தெரிந்து திருப்தியடைந்தால், அவர்-அந்த ரிடர்னை ஆதாரமாகக்கொண்டு ஷை கம்பெனி அல்லது நபரிடமிருந்து தொழில் வரி விதித்து வாங்கவேண்டும்.

விவரணம்.—11-வது விதியின் (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியின் கீழாவது (2) குறிப்பிட்ட உபவிதியின் கீழாவது வராத விஷயங்களிலே, ஷை கம்பெனி அல்லது நபர் பிரஸ்தாப அரை வருஷம் அடங்கிய வருஷத்துக்காக 1922-ம்-ஷ்த்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்ட் 29-வது பிரிவின்படி அதற்கு அல்லது அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட வருமான வரி டிமாண்ட் நோடிஸை ஹாஜர்ப்படுத்தினால், ப்ரெசிடென்டானவர்-இந்த ஆக்டின்படி எவைகளை ஆதாரமாகக்கொண்டு தொழில் வரி விதிக்கத்தக்கதாகிறதோ அந்த ஆதாரங்களிலிருந்து கிடைத்த வரும்படியாக ஷை டிமாண்ட் நோடிஸில் கண்ட வரும்படியில் பாதியைத் தொழில் வரி விதிக்கும் காரியங்களுக்காக ஷை ஆதாரங்களிலிருந்து கிடைத்த வரும்படியாகக்கொள்ள கடமைப்பட்டவராவார்.

(3) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி ரிடர்ன் எதுவும் அனுப்பப்படாவிட்டாலும், அப்படி அனுப்பப்பட்ட யாதொரு ரிடர்ன் பிசகாயிருப்பதாகவாவது பூர்த்தியாயிராமலிருப்பதாகவாவது ப்ரெசிடென்ட் தெரிந்து திருப்தியடைந்தாலும், ப்ரெசிடென்டானவர்-ஷை கம்பெனி அல்லது நபருக்கு அரை வருஷத்தில் என்ன வரும்படி கிடைக்கிறதென்று தாம் மதிப்பிடுகிறாரோ அந்த வரும்படிக்கு ஏற்றதாய் அந்தக் கம்பெனி அல்லது நபருக்கு வீதநிர்ணயப்பட்டியில் ஒரு வகுப்பு ஏற்படுத்தவேண்டும்.

(4) (3) குறிப்பிட்ட உபவிதியின்படி யாதொரு கம்பெனி அல்லது நபரை வகுப்புவாரியாய்ப் பிரிக்கும்போது, ப்ரெசிடென்டானவர் - நடத்தப்பட்ட வியாபாரத்தின் தன்மையையும் பிரசித்தியான மதிப்பையும் அனுசரித்தும், வாசஸ்தலம், தொழிலிடம் ஆகிய இவைகளின் பரிமாணத்தையும் வாடகையையும் அனுசரித்தும், வியாபாரம் நடத்தும் சாமான்களின் அளவையும் சங்கியையையும் அனுசரித்தும், வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் நபர்களின் சங்கியையையும் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தும் வருமான வரியையும் அனுசரித்தும் பொதுவாக ஆலோசனை செய்து வகுப்பு வாரியாய்ப் பிரிக்கலாம்.

(5) யாதொரு கம்பெனி அல்லது நபரின் கணக்குகளை அனுப்பும்படி கேட்க ப்ரெஸிடென்டுக்கு பாத்தியதை கிடையாது.

குறிப்பு.

விதி 11-A (1). நிர்ணயிக்கப்பட்ட நமூனுபடி............சமர்க்கவேண்டும்.— செக்ஷன் 96-படி கொடுக்கப்படும் நோடீஸானது தொழில் வரி செலுத்தவேண்டுமென்பதை குறிப்பதற்காகும். ஆனால், இந்த விதிப்படி கொடுக்கப்படும் நோடீஸ் ஒரு கம்பனி அல்லது நபருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று நிர்ணயித்து அதன்மேல் தொழில் வரி போடுவதற்காக கேட்பதாகும்.

விதி 11-A (3). வீத நிர்ணயப்பட்டியில் ஒரு வகுப்பு ஏற்படுத்தவேண்டும்.— வகுப்புகள் விதி 9 (1)-ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன. வகுப்பு நிர்ணயிப்பதில் பிரசிடென்ட் எதேச்சாதிகாரமாயிருக்கக் கூடாது. சாதாரணமாய் (1) வியாபாரத்தின்தோரணை, அளவு, மாதிரி, (2) வியாபார இடம், அதற்கு குடிக்கூலி, (3) வியாபாரம் செய்யும் சாமான்கள், (4) சிப்பந்தி (5) கவர்ன்மெண்டாருக்கு கட்டும் வருமான வரி இவைகளை கவனித்து தொழில் வரி விதிப்பது உத்தமம். [இ. பு. ப. 660]

வீட்டு வரி விதிப்பது.

வீட்டுவரி விதிப்பதெப்படி என்பது.

12. பஞ்சாயத்தானது - வீட்டு வரி விதிக்கும் காரியங்களுக்காக வீடுகளில் மூலதன மதிப்பின்மேலாவது அவைகளில் வருஷவாரி வாடகை மதிப்பின்மேலாவது அவைகளை மதிப்பிடத் தீர்மானிக்கலாம்; ஆனால், அது - வேறே எந்த கோட்பாட்டின் படிக்கும் வீடுகளை மதிப்பிடக்கூடாது.

குறிப்பு.

விதி 12. மூலதன மதிப்பின் மேலாவது அல்லது வாடகையின் மேலாவது.—மூலதன மதிப்பென்பது நிலத்தின் மதிப்பும் அதன்பேரில் கட்டியிருக்கும் கட்டடத்தின் செலவில், அழிவுக்காக 10% கழித்தது போக உள்ள மதிப்பும் சேர்ந்ததாகும். 18-வது விதியைப் பார்க்கவும். வருஷவாரி வாடகை மதிப்பென்பது, கட்டிடத்தை வாடகைக்கு விட்டால் வருஷத்தில் எவ்வளவு வருமென்பதில் 10% கழித்தது போக மிகுதி தொகையாகும். லோகல் போர்ட் மூலதன மதிப்பின் மேலாவது அல்லது வருஷவாரி வாடகையின் மேலாவது வீட்டு வரி விதிக்கவேண்டுமே யொழிய வேறுவிதமாய் விதிக்கக்கூடாது. அப்படியில்லாமல் சட்ட விரோதமாய் வரி விதித்தால் அதை ரத்து செய்ய சிவில் கோர்டில் தாவா தொடரலாம். (நந்துலால் போஸ் எ. கல்கத்தா கார்பொரேஷன், (1885) 11 C. 275). லோகல் போர்ட் மெம்பர்கள் சரிவர கவனித்து காரியத்தை நடத்துவார்களேயானால் சட்ட ரீதியாய் நடப்பதில் யாதொரு கஷ்டமும் வராது. (நாராயண சந்திர எ. சேர்மன், முனிசிபல் கௌன்ஸில், புனிஹட், 50 C.L.J. 537 = A.I.R. 1930 Cal. 38). [இ. பு. ப. 661]

பஞ்சாயத்து அனுசரிக்க வேண்டிய முறை.

13. 75-வது, 77-வது பிரிவுகளின்படி வரி வீதங்களை நிஷ்கரிஷைசெய்கையில், டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும் பிரதேச கவர்ன்மெண்டாராகிலும் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி மூலதன மதிப்பின் மேலாவது வருஷவாரி வாடகை மதிப்பின்மேலாவது அந்த வீதங்களை நிஷ்கரிஷை செய்யவேண்டும்; இந்தப்படி நிஷ்கரிஷை செய்வதானது - வெவ்வேறு கிராமங்களின் விஷயத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் அனுசரிக்கத் தீர்மானித்திருக்கிற தீர்வை மதிப்பிடும் முறையின் பிரகாரம் இருக்கவேண்டும்.

குறிப்பு.

விதி 13.—98-வது செக்ஷன்படி வரி விதிப்பை தீர்மானிக்க ஜில்லா போர்டிற்கு அதிகாரமிருந்தபோதிலும், மூலதனத்தின் மதிப்பின்மேல் வரி விதிப்பதா அல்லது வருஷவாரி வாடகையின்மேல் வரி விதிப்பதா என்பதை பஞ்சாயத்துதான் நிர்ணயிக்கவேண்டும். பிறகு ஜில்லா போர்டார் வீதத்தை நிஷ்கரிஷை செய்யவேண்டும். ஏராளமான பணத்தை செலவு செய்து சில கிராமங்களில் வீடுகளை கட்டிவிடுகிறார்கள். அவைகளை வாடகைக்கு விட்டால் மிகுந்த குறைந்த வாடகை வரும். அம்மாதிரி யிடங்களில் மூலதனத்தின்மேல் மதிப்பிட்டால் மிகவும் கஷ்டமாகும். ஆகையால் வாடகையின்மேல் வரி விதிப்பது உத்தமமானது. கவர்ன்மெண்ட் கட்டிடங்கள் ரயில் ஸ்டேஷன் கட்டிடங்கள் இவைகளின்மேல் வரி விதிப்பதைப்பற்றி 18-வது விதியைப் பார்க்கவும். வீட்டு வரி நிவாரணையைப்பற்றி 16-வது விதியைப் பார்க்கவும். [இ. பு. ப. 661]

வரி விதிக்கும் விதம்.

14. டிஸ்ட்ரிக்ட் போர்டாராலாவது பிரதேச கவர்ன்மெண்டாராலாவது நிஷ்கரிஷை செய்யப்படும் வீதங்கள் - ஒவ்வொரு வீட்டின் மதிப்புக்குத் தக்கபடி இருக்கலாம்; அல்லது, வீட்டின் மதிப்பு அதிகமாய்க்கொண்டேபோனால் ஷை வீதங்களும் அதிகமாய்க் கொண்டேபோகலாம்; ஆனால், அவை எந்த விஷயத்திலும் வீட்டின் மதிப்பு அதிகமாய்க்கொண்டே போகையில் ஒரு ஒழுங்காய்க் குறைந்துகொண்டே போகக்கூடாது.

சங்கியா பிரமாணத்தை அனுசரிக்கவேண்டும்.

15. சங்கியா பரிமாணப்படிக்கான ஒரு விதத்தை டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாராவது அனுசரித்திருக்கும்போது, பஞ்சாயத்தானது - வரியைக் கணக்கிடும் வேலையையும் அதை வசூல் செய்யும் வேலையையும் சுலபமாக்கும் பொருட்டு கிராமத்திலுள்ள வீடுகளை வகுப்புகளாகத் தொகுக்கலாம். அதிகரித்துக்கொண்டே போகும் ஒரு விதத்தை டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாராவது அனுசரித்திருக்கும்போது, அவர்கள் வகுப்புகளாகப் பிரிப்பதற்கான கோட்பாடுகளை நிர்ணயிக்கவேண்டும். (உதாரணமாக,—வரி செலுத்தவேண்டியிராத ஒரு தொகையை ஒவ்வொரு வீட்டின் மதிப்புத் தொகையிலிருந்து கழிக்கவேண்டுமென்பது ; அல்லது, மிகவும் தாழ்ந்த வகுப்பில் நூற்றுக்கு இவ்வளவென்னும் ஒரு விதத்திலிருந்து மிகவும் உயர்ந்த வகுப்பில் நூற்றுக்கு இவ்வளவென்னும் ஒரு விதம் வரையில் வரியை உயர்த்திக்கொண்டே போகவேண்டுமென்பது); ஆனால், அவர்கள் - சரியாய் ஒவ்வொரு வகுப்பின் சங்கியையையும் வரையறைகளையும் பஞ்சாயத்தே நிச்சயித்துக்கொள்ளும்படி விட்டுவிடவேண்டும். பஞ்சாயத்தானது - இந்த இரண்டு விஷயங்களில் எதிலும் டிஸ்ட்ரிக்ட் போர்டாராலாவது பிரதேச கவர்ன்மெண்டாராலாவது அனுசரிக்கப்பட்டிருக்கும் சங்கியாபரிமாணப் பிரகாரம் வரி விதிக்கும் கோட்பாட்டுக்காவது வரி விதித்து அதை உயர்த்திக்கொண்டேபோகும் கோட்பாட்டுக்காவது முக்கியாம்சத்தில் பாதகம் உண்டாகும்படியாக ஷெ வகுப்புகளைக் கிரமப்படுத்தக் கூடாது ; மேலும், எந்த விஷயத்திலும் ஷெ வகுப்புகளின் சங்கியையானது ஆறுக்குக் குறைவாய் இருக்கக்கூடாது.

வீட்டுவரியினின்றும் நிவாரணை.

16. பஞ்சாயத்தானது—

(i) ஒரு கிராமத்திலுள்ள யாதொரு வீட்டின் மதிப்பானது மூலதன மதிப்பின்மேல் வரி விதிக்கப்பட்டால் இருநூற்றுநாற்பது ரூபாய்க்கு மேற்படாமலும் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் வரி விதிக்கப்பட்டால் பன்னிரண்டு ரூபாயுக்கு மேற்படாமலும் ஷெ தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு தொகைக்கு அதிகமாயிராதபட்சத்திலும்,

(ii) (a) அந்த வீட்டின் சொந்தக்காரருக்கு அந்த கிராமத்தில் வேறே எந்த வீடும் சொந்தமாயிராத பட்சத்திலும், அல்லது,

(b) அந்த கிராமத்தில் அவருக்குச் சொந்தமாயிருக்கும் சகல வீடுகளின் மொத்த மூலதன மதிப்பாவது வருஷவாரி வாடகை மதிப்பாவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி இருநூற்றுநாற்பது ரூபாய்க்காகிலும் பன்னிரண்டு ரூபாய்க்காகிலும் மேற்படாமலிருக்கும்பட்சத்திலும்,

ஷெ வீட்டை வீட்டு வரியினின்றும் தீர்மானமூலமாக நிவாரணை செய்யலாம்.

குறிப்பு.

விதி 16.—வீட்டு வரியினின்றும் வீடுகளை நிவாரணை செய்ய இது பரியந்தம் ஜில்லா போர்டுக்கு அதிகாரமிருந்தது. திருத்தத்திற்கு பிறகு அந்த அதிகாரம் எடுபட்டுபோய்விட்டது. கீழ்கண்ட காரணங்களால் மட்டும் ஜில்லா போர்ட் வீட்டு வரியை நிவாரணை செய்யலாம். (1) வரி செலுத்துவோருக்கிருக்கும் வீடு, அல்லது வீடுகளை கணக்கெடுத்துக் கொள்ளவேண்டும். (2) வீடு அல்லது வீடுகளின் மூலதன மதிப்பு 240 ரூபாயுக்கு மேற்படாமலிருக்கவேண்டும். (3) வீடு அல்லது வீடுகளின் வருஷவாரி வாடகை மதிப்பு ரூபாய் 12-க்கு மேற்படாமலிருக்கவேண்டும். [இ. பு. ப. 663]

வாடகை மதிப் பிடுவது.

17. வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் வரி விதிக்கப்படும் பட்சத்தில், அந்த மதிப்புத் தொகையானது - வீட்டை மாதாமாதமாவது வருஷாவருஷமாவது குடிக்கூலிக்கு விட்டால் நியாயமாய் ஒரு வருஷத்திற்கு மொத்தத்தில் எவ்வளவு வாடகை வருமென்று எதிர் பார்க்கக்கூடுமோ அந்த வாடகைத் தொகையிலிருந்து அதில் நூற்றுக்கு பத்து வீதம் கழித்தபிறகு நிற்கும் தொகையாக கருதப்படும்; அந்தப்படி கழிக்கப்படும் தொகையானது - மராமத்துகளுக்காகவாகிலும் வேறே எவ்வித காரணத்துக்காகவாகிலும் தள்ளிக்கொடுப்பதற்கு பர்த்தியாகக் கழிக்கப்படுவதாகும்.

குறிப்பு.

விதி **17.** **கடைகளின்மேல் வீட்டு வரி.**—கடைகளின்மேல் வீட்டு வரி விதிக்கப்படவேண்டுமானால் அந்த கடையை வாடகைக்கு விட்டால் என்ன வாடகை வருமென்பதை கவனிக்கவேண்டும். அம்மாதிரியான வருமானத்தில் (a) காலியாயிருக்கும் கடைகளின் குடிக்கூலி, (b) வசூலிக்க முடியாத வாடகை, (c) கடைகளை சுத்திசெய்யப் பிடிக்கும் செலவு, (d) வரி, (e) வாடகை வசூலிக்க சம்பளம் இவைகளை கழித்து பார்க்கவேண்டும். ஒரு வஸ்துவின்மேல் வரிபோடவேண்டுமானால், லைசென்ஸ் கட்டணம், விளக்குபோடப் பிடிக்கும் செலவு, சிப்பந்தி செலவு, மூல தனத்திற்கு வட்டி இவைகளை கழித்து மிகுதியிருக்கும் தொகையின்மேல் வரிபோடவேண்டும். (சூராடி பாரா பஜார் கம்பனி எ. முனிசிபல் கார்பொரேஷன், ரங்கூன், 5 R. 715=107 I.C. 857=A.I.R. 1928 Ran. 98.) [இ. பு. ப. 664]

கவர்ன்மெண்ட் அல்லது ரயில்வே கட்டடங்களின் மேல் வீட்டு வரி விதிப்பது.

18. (1) (i) யாதொரு கவர்ன்மெண்ட் அல்லது ரெயில்வே கட்டிடத்தின் விஷயத்திலாவது,

(ii) சாதாரணமாய்க் குடிக்கூலிக்கு விடப்படாத ஒரு வகையைச் சேர்ந்த யாதொரு கட்டிடத்தின் மொத்த வருஷவாரி வாடகைத் தொகை இவ்வளவென மதிப்பிடமுடியாதென்று பஞ்சாயத்து ப்ரெசிடென்ட் அபிப்பிராயப்பட்டால் அந்த கட்டிடத்தின் விஷயத்திலாவது,

அந்த கட்டிடத்தின் மூலதன மதிப்பானது - அந்த நிலத்தின் உத்தேச மதிப்பும் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்காக தற்காலத்தில் பிடிக்கும் செலவாக உத்தேசிக்கப்பட்ட மதிப்பில் மதிப்புக் குறைவுக்காக நியாயமான ஒரு தொகையைக் கழித்த பிறகு நிற்கும் தொகையும் சேர்ந்த மொத்தமாயிருப்பதாகக் கருதவேண்டும்; இப்படி கழிக்கும் தொகையானது எந்த விஷயத்திலும் மேலேகண்ட செலவில் நூற்றுக்குப் பத்து வீதத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது; மேலும், அதன் வருஷவாரி வாடகை மதிப்பானது ஷை மொத்தத்தில் நூற்றுக்கு ஆறு யிருப்பதாகக் கருதவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி ஏற்படுத்தும் மதிப்புத் தொகைகளிலிருந்து யந்திரங்கள், மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் ஆகிய இவைகளின் மதிப்பை விலக்கிவிடவேண்டும்.

குறிப்பு.

போது.—வருஷவாரி வாடகை மதிப்பை நிஷ்கரிஷை செய்யமுடியாமல் போனபோதும், அவைகளை வாடகைக்கு விட முடியாதபோதும், நிலத்தின் மதிப்பும் அதன் மேலிருக்கும் கட்டடத்தின் மதிப்பும் எடுத்துக் கொள்ளவேண்டும். கவர்ன்மெண்ட் ரயில்வே கட்டடங்கள் சில சமயங்களில் கலந்திருக்கின்றன. சிப்பந்திகள் வசிக்கும் இடத்திற்கு வாட

கையின் மேலும், மற்றைய கட்டடங்களுக்கு மூலதனத்தின் மதிப்பின்பேரிலும் வரி விதிக்கலாம். போலீஸ் ஸ்டேஷன், போலீஸார் வசிக்கும் ஸ்தானம் இவைகளுக்கும் அம்மாதிரி செய்யலாம். [இ. பு. ப. 665]

ரயில்வே ஸ்டேஷன்களின்மேல் வரி விதிப்பும், பரிசீலனையும்.—ரயில்வே கட்டடங்களின்மேல் விதிக்கப்பட்ட வரியானது நியாய விரோதமென தோன்றினாலும், அதிகமென்று தோன்றினாலும், அதை பரிசீலனை செய்து முடிவு செய்ய கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கட்டடத்தின் மூலதன மதிப்பை அறிவதற்கு கலெக்டர்கள், பப்ளிக் ஒர்க்ஸ் என்ஜினீர்களை கலந்து செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கூறுகிறார்கள். [இ. பு. ப. 666]

ஜலசர்பார அல்லது ஜலதாரை வரி.

19. யாதொரு கிராம முழுவதுக்குமாகிலும் அதன் யாதொரு பாகத்துக்காகிலும் ஜல சர்ப்பார ஏற்பாடு அல்லது ஜலதாரை ஏற்பாடு செய்வதைப்போன்ற யாதொரு பொது சீர்திருத்தத்துக்காக ஒரு நிதி ஏற்படுத்தும்பொருட்டு உடன் சேர்க்கையான ஒரு வரி இந்த விதிகளின் பிரகாரம் விதிக்கலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு நிதியின் வரவுகளுக்கும் அதிலிருந்து செய்யும் செலவுகளுக்கும் பிரத்தியேகமான கணக்கு வைத்துவரவேண்டும்.

குறிப்பு.

விதி 19.—தண்ணீர் வரி, ஜலதாரை வரி என்பவை ஆக்டில் 98-வது செக்ஷனில் வியக்தமாய் குறிப்பிடப்படவில்லை. மேற்கூறிய வரிகள் விதிக்கப்பட்டால் அவைகளை வசூல் செய்து எதற்காக விதிக்கப்பட்டதோ அந்த காரியத்திற்கு மட்டும் செலவு செயயவேண்டும். ஒரு முறை வரி விதிப்பதென்பதை தீர்மானிக்கப்பட்டு அமுலுக்கு வந்துவிட்டால் அதை வரி செலுத்துவோர் மறுக்க முடியாது. (சென்னை நகர முனிசிபல் கமிஷனர் எ. F.C.R. ப்ரான்ஸன், 3 M. 101.) அவ்வரியினால் வரி செலுத்துவோருக்கு அனுகூலமுண்டா இல்லையா என்பது அவசியமில்லை. (G.E. ப்ரான்ஸன் எ. சென்னை முனிசிபல் கௌன்ஸில், 2 M. 362 (F.B.), புதிய சட்டத்தினால் புதிய வரி ஏற்பட்டால் ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் ஏற்பட்ட கான்டிராக்ட் எல்லாம் ரத்தாகி விட்டதாக கருதப்படும். (காஞ்சீபுரம் முனிசிபல் கௌன்ஸில் எ. குமார வெங்கடாசாரியார், 57 I.C. 718=11 L.W. 573.) [இ. பு. ப. 667]

கர்ணம் வீடுகளின் ஜாப்தா தயார் செய்யவேண்டும்.

20. கிராமத்தில் அடங்கிய யாதொரு விஸ்தீர்ணத்தின் விசாரணை அதிகாரமுடைய கர்ணமானவர் - பஞ்சாயத்து ப்ரெஸிடென்டால் கேட்டுக்கொள்ளப்படுவதன்மேல், அந்த விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் சகல வீடுகளையுங் குறித்த ஜாபிதா ஒன்றைத் தயார் செய்து ப்ரெஸிடென்டுக்குச் சவதரிக்கவேண்டும்; மேலும், அவர் - அந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் அனுபோகதாரர்கள் ஆகிய இவர்களின் பெயர்களை ஷை ஜாபிதாவில் பதியவும் வேண்டும்.

கர்ணம் பிரதி பலன் பெறகடவர்.

21. ஷை கர்ணமானவர் - அப்படிப்பட்ட ஜாபிதாவை தயார் செய்வதற்காக பஞ்சாயத்து பிரதேச கவர்ன்மெண்டார் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டு நிஷ்கரிஷை செய்யக் கூடிய (ஏதேனும்) பிரதிபலன்பெற அர்ஹராவார்.

வரி புத்தகங்களை ப்ரஸிடென்ட் தயார் செய்ய வேண்டும்.

22. அடுத்து முந்திய விதியில் கண்ட ஜாபிதாக்களை வரப்பெற்றுக் கொள்வதன்மேல், பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் - வரிப் புஸ்தகங்களைத் தயார் செய்விக்கவேண்டும். அந்த வரிப் புஸ்தகங்களில் தனித்தனியான கலங்களிலே, ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர், அனுபோகதாரர் ஆகிய இவர்களின் பெயர்களையும் யாதொரு வகுப்பின்கீழ் அந்த வீட்டுக்கு வரி விதிக்கப்படுகிறதோ அந்த வகுப்பையும், பாக்கியாயிருக்கும் வரித்தொகையையும், அந்த வரி செலுத்தத்தக்கதாகும் தேதியையும் கண்டிருக்கவேண்டும்.

வரி புத்தகங்களைப்பற்றி பகிரங்கப்படுத்தல்.

23. வரிப் புஸ்தகங்கள் தயார் செய்யப்பட்டவுடனே பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் - அதைக் குறித்தும் அந்தப் புஸ்தகங்களைப் பார்வையிடக்கூடிய இடம் அல்லது இடங்களைக் குறித்தும் கிராமத்தில் தண்டோரா மூலமாக பகிரங்கமாய் அறிக்கை செய்யவேண்டும்.

குறிப்பு.

விதி **23**.—வரி புத்தகங்கள் தயாரான உடன், பொது ஜனங்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக தண்டோரா மூலம் அனைவருக்கும் பகிரங்க பிரசூரம் செய்யவேண்டும். பகிரங்க பிரசூரம் செய்யப்படாமற் போனபோதிலும், தொழில் வரிக்கும் இதர பில்களுக்கும் 96-வது செக்ஷன்படி வரி செலுத்துவோருக்கு நோடீஸ் சதரா செய்யவேண்டும். செய்யப்பட்டவுடன் அதன் நியாய தத்துவத்தைப் பரிசீலனை செய்யும் பாத்தியதை உண்டாகிறது. முன் எச்சரிக்கைக்காக இவ்விதி செய்யப்பட்டிருக்கின்றது. [இ. பு. ப. 668]

வரி புத்தகத்தை திருத்துவது.

24. (1) ப்ரெஸிடென்டானவர் - எந்த காலத்திலாவது, வரிப் புஸ்தகங்களில் யாதொரு சொத்தைக் சேர்த்தோ, அவைகளிலிருந்து யாதொரு சொத்தை நீக்கியோ, அல்லது யாதொரு சொத்தைத் தரம் பிரித்திருப்பதையாவது யாதொரு சொத்தின் விஷயமாய்ச் செலுத்தத்தக்கதாகும் வரித்தொகையையாவது மாற்றியோ அவைகளைத் திருத்தலாம்; மேலும், அந்தப்படி செய்யப்படும் ஒவ்வொரு திருத்தத்தைக் குறித்தும் அதில் அக்கறையுள்ள நபர் அல்லது நபர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

(2) அந்தத் திருத்தமானது எந்த அரை வருஷத்தில் செய்யப்படுகிறதோ அந்த அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்து செலாவணியாயிருப்பதாகக் கருதப்படும் :

ஆனால், ஷெ திருத்தமானது யாதொரு அரை வருஷத்துக்காக டிமாண்ட் நோடீஸ் பிறப்பிக்கப்பட்ட பிறகு அந்த அரை வருஷத்தில் செய்யப்பட்டால், அது அடுத்துவரும் அரை வருஷத்திலிருந்துதான் செலாவணியாகும்.

குறிப்பு.

போது.—(1) வீட்டு வரி புத்தகத்தில் எழுதவோ. (2) குறிப்பிட்டிருக்கிற சொத்தின் விபரத்தை மாற்றவோ இந்த விதியின்படி பிரசிடென்டிற்கு அதிகாரம் உண்டு. வரியை அதிகப்படுத்தினால் நஷ்டமடையும் வரி செலுத்துவோர் 27-வது விதிப்படி அபீல் செய்துக்கொள்ளலாம். பிரசிடென்ட் தனது நண்பர்களின் வீட்டு வரியை காரணமில்லாமல் குறைக்கும் பக்ஷத்தில் பஞ்சாயத்து அதை திருத்தி அதிகப்படுத்த அதிகாரமுண்டு. மெம்பர்கள் வரி புத்தகங்களைப் பார்க்கவும் அவைகளின்மேல் கேள்வி கேட்கவும் அதிகாரமுடையவராவார்கள். லோகல் போர்ட் தனக்கு யுக்தமாய் தோன்றும்படி வரி புத்தகத்தை திருத்தும்படி பிரசிடென்டுக்கு உத்திரவிடலாம். 28-வது, 30-வது செக்ஷன்கள்படி கமிட்டிகளை இவ்விஷயத்திற்காக ஏற்படுத்தலாம். அவர்கள் உத்திரவின்மேல் 24-வது விதிப்படி அபீல் செய்துக்கொள்ளலாம்.

அப்படிச் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தத்தை குறித்தும்................தெரிவிக்கவேண்டும்.—இந்த விதிப்படி நோடீஸ் என்பது வரி அதிகப்படுத்தப்பட்டு அல்லது குறைக்கப்பட்டிருப்பதற்கு ஆக்ஷேபனைகள் ஏதாயினும் இருப்பதால் தெறிவிப்பதற்காக ஆகுமேயொழிய 32-வது விதிப்படி கொடுக்கப்படும் டிமாண்டு நோடீஸாகாது. அம்மாதிரி நோடீஸ் கொடுக்கப்படாவிட்டால் சட்டத்தில் சொல்லியுள்ளப்படியும், அதன் சாராம்சத்தை அனுசரித்தும் நடந்ததாக மாட்டாது. ஒரு முனிசிபல் சேர்மன் ஒருவருடைய பெயரை வரி புத்தகத்தில் சேர்த்து வீட்டு வரி, தண்ணீர் வரி விதித்துவிட்டார். இரண்டு வரியும் ஆக்ஷேபனையுடன் கட்டப்பட்டன. வரி செலுத்துவோர் தனக்கு வரி விதித்ததற்கு சட்ட பூர்வமாய் நோடீஸ் முதலிய தொன்றுமில்லை என்றும்

சட்டப்படி செல்லாதென்று தாவா தொடர, கோர்ட்டார் சேர்மன் கொடுத்த நோட்டீஸானது டிமாண்ட் நோட்டீஸ் யென்றும், வரி விதிதத்தைப்பற்றி யாதொரு நோட்டீஸ் யில்லாததால் அதன்மேல் அபீல் செய்துக்கொள்ள அவகாசமில்லை என்றும், அம்மாதிரி வரி வசூலித்தது பிசகென்றும் தீர்ப்பு கூறினர்கள். (முனிசிபல் கௌன்ஸில், தஞ்சாவூர் எ. உமாம்பா பாய் சாகிப், 23 M. 523=10 M.L.J. 138). வரி விதிப்போருக்கு நோட்டீஸ் கொடுக்காமல் வரி விதிப்பை மாற்றுவது சட்ட சம்மதமாகாது. (ஹால்கார் எ. ரங்கூன் கார்பொரேஷன், 5 R. 38=A.I.R. 1927 R. 123). சட்ட பூர்வமாயல்லாமல் விதித்து வாங்கப்பட்ட அதிக வரியை சிவில் கோர்டின் மூலம் வசூல் செய்துக்கொள்ளலாம். (மகமத் சம்ஷுதின் ஆலிம் சாகிப் எ. திருவாலூர் முனிசிபல் கௌன்சில், A.I.R. 1928 M. 348). புதிய வரி விதிக்கப்பட்டால் எப்படியோ அம்மாதிரியே அதிக வரி விதிக்கப்பட்டால் செய்யவேண்டும். (ஸ்ட்ரேசி எ. கான்பூர் முனிசிபல் போர்ட், 21 A. 349=A.W.N. 1899, 97). [இ. பு. ப. 670]

வரியை குறைப்பது.

24-A. யாதொரு அரை வருஷம் முடிவதற்கு முப்பது தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக எந்தக் காலத்திலாவது, யாதொரு நபர் - எதன் விஷயமாய் வரி விதிக்கப்படுகிறதோ அந்த வீட்டின் வருஷவாரி வாடகை மதிப்போ மூலதன மதிப்போ கடைசியாக வீட்டுக்கு வரி விதிக்கப்பட்டது முதற்கொண்டாவது வீட்டுக்கு வரி விதித்தது புனராலோசனை செய்து திருத்தப்பட்டது முதற்கொண்டாவது குறைந்துவிட்டிருக்கிறதென்னும் காரணத்தை முன்னிட்டு, வரப்போகிற அரை வருஷத்துக்குத் தாம் செலுத்தவேண்டியதாயிருக்கிற வரியைக் குறைக்கவேண்டுமென்று புனராலோசனை மனு மூலமாய்ப் ப்ரெஸிடென்டைக் கேட்டுக்கொள்ளலாம்.

அரை வருஷத்திற்கு விதிக்கப்படுவதும், பொதுவாய் விதிப்பதும்.

25. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் - ஒவ்வொரு அரை வருஷத்திலும் புதிய ஜாபிதாக்களையாவது வரி புஸ்தகங்களையாவது தயார் செய்விக்க கடமைப்பட்டவரல்ல; ஆனால், அவர் - தமக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய திருத்தங்களை முந்திய அரை வருஷத்து ஜாபிதாக்கள் அல்லது வரி புஸ்தகங்களில் செய்து அவைகளையே வைத்துக்கொள்ளலாம்; ஆயினும், ஐந்து வருஷத்துக்கு ஒரு முறைக்குக் குறையாமல் பொதுவாய் புதிதாக வரிவிதித்து வரவேண்டும். ஷை திருத்தங்களை குறித்து 23-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் பகிரங்கமாக அறிக்கையிடவேண்டும்.

26. [1931-ஆம் வருஷத்திய மதராஸ் மோடார் வண்டிகளின் மேல் வரிவிதிக்கும் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டது.]

வரிகளின்மேல் அபீல்.

27. அடியிற்கண்ட வரிகள் விதிக்கப்பட்டதைக் குறித்தும் ஏற்படுத்தப்பட்டதைக் குறித்தும் மாத்திரமே பஞ்சாயத்துக்கு அபீல் செய்துகொள்ளலாகும்; மற்ற எந்த வரிகளைக் குறித்தும் அபீல் செய்துகொள்ளலாகாது :—

அபீல்கள்.

(a) 11-A, 22, 24, 25-வது விதிகளின்படி ப்ரெஸிடென்டால் நடத்தப்பட்ட நடவடிக்கைகள்; மேலும்,

(b) யாதொரு புனராலோசனை மனுவின்மேல் 24-A விதியின்படி ப்ரெஸிடென்ட் செய்யும் உத்தரவு.

குறிப்பு.

விதி 27. அபீல்.—வீட்டு வரி, தொழில் வரி இவைகளின் மதிப்பின்மேல் அந்த பஞ்சாயத்திற்கு அபீல் செய்துக்கொள்ள வேண்டும். தாலூகா போர்டிற்கும் ஜில்லா போர்டிற்கும் யாதொரு சம்பந்தமில்லை. (a), (b) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கும் அபீல் உண்டு. 30

நாட்களுக்குள் அபீல் செய்யவேண்டும். முனிசிபாலிடியார் சட்ட பூர்வமாய் விதிக்கப்படும் வரிகளின்மேல் செய்யப்படும் அபீலைக் குறிக்கும். (கடலூர் முனிசிபாலிடி எ. கிருஷ்ண நம்பியார், 50 Mad. 987=A.I.R. 1927 Mad. 968). தொழில் வரி விதிக்கும் விஷயமாய் சட்டப்படி செய்யவேண்டியவைகளைச் செய்து வசூலிப்பவரின் சிறு பிழை ஏதேனுமிருந்தால் அதன்மேல் போர்டுக்கு அபீல் செய்துகொள்ளவேண்டும்; வியாஜ்ஜியம் தொடரமுடியாது. (பட்டராணி பூர்ணசந்தரமால ஜம்னுதேவி எ. பிரசிடென்ட், தாலூகா போர்ட், சிகாகோல், 113 I.C. 560). 75, 77, 93, 98-வது விதிகள்படி செய்யப்படும் தீர்மானங்களும், விளம்பர பிரசுரங்களும், வரி விதித்து வசூல் செய்பவையும் வெவ்வேறானது.

ருசு.—வரி அதிகமாய் விதிக்கப்பட்டதென அபீல் செய்யும் வரி செலுத்துவோர் ருசு செய்யவேண்டும்.

அபீல் செய்ய அருகதையுடையவர் யார்?—நஷ்டப்பட்டவர் அபீல் செய்யவேண்டும். நஷ்டமடைந்தவர் யார் என்று முடிவு செய்வது அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொறுத்தது.

அபீலின்மேல் உத்திரவு—அபீலின்மேல் என்ன உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அதை அபீல் செய்தவருக்குத் தெறிவிக்கவேண்டும். அதைப்பற்றி சட்டத்திலாகிலும், விதிகளிலாகிலும் ஒன்றும் கூறவில்லை. (லக்ஷ்மண செட்டி எ. திருச்சினாப்பள்ளி முனிசிபாலிடி, A.I.R. 1928 Mad. 208=106 I.C. 659.) [இ. பு. ப. 673]

அபீல் இந்தவிதமா யிருக்கவேண்டுமென்பது.

28. பஞ்சாயத்துக்குச் செய்துக்கொள்ளப்படும் எந்த அப்பீலைப்பற்றியும்—

(i) எந்த வரி விஷயமாய்க் குறை கூறப்படுகிறதோ அது கேட்கப்பட்ட பிறகு முப்பது தினங்களுக்குள் பஞ்சாயத்தின் ஆபீஸில் அந்த அபீல் வந்து சேர்ந்தாலன்றி மற்றப்படியும்,

(ii) (ஏழ்மை காரணமாக ப்ரெஸிடென்ட் வேறே விதமாய் உத்தரவு செய்யும்போது தவிர) எதன் விஷயமாக அபீல் கொடுத்துக் கொள்ளப்படுகிறதோ அந்த வரியானது (i) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிட்டிருக்கும் கால அளவுக்குள் பஞ்சாயத்து ஆபீஸில் செலுத்தப்பட்டாகிலும் கொடுத்து வைக்கப்பட்டாகிலும் இருந்தாலன்றி மற்றப்படியும் விசாரணை செய்யப்பட மாட்டாது.

குறிப்பு.

விதி 28 (i). **30 தினங்களுக்குள்.**—30 தினங்களுக்குள் அபீல் தாக்கல் செய்ய வேண்டும். 213-வது செக்ஷனைப் பார்க்கவும். 30 தினங்களுக்கு மேல்பட்ட அபீலை எடுத்துக்கொண்டு வரியை குறைக்கும் பக்ஷத்தில் அந்த மெம்பர்கள் நஷ்ட ஈட்டிற்கு அருகராவார்கள்.

அட்வகேட்-ஜனரலின் அபிப்பிராயம்.—**No 43—1923**ஞு ஏப்ரல்மீ **2**-ந் தேதி-மிமோராண்டம் நெ. 29233 1, எல் அண்டு எம் 19-ந் தேதி பிப்ரவரி, **1923**.—பிரஸ்தாப அபீல், நாட்கள் கழிந்ததைப்பற்றி மன்னிக்கப்படாமலும், ஏழ்மைத்தனத்தால் வரி கட்ட சக்தியற்றிருப்பதைக் குறித்து மன்னித்திருப்பதாக உத்திரவிடப்படாமலுமிருக்கிறது. 26-வது விதி மேற் கூறியவாறில்லாத அபீலை எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கிறது. அபீலை எடுத்துக் கொண்டது முதல் பிசகு. கட்டாயப்படுத்தும் விதிப்படி நடக்கத் தவறியது முனிசிபாலிடி ஆக்ட் 60-வது விதிப்படி தப்பாகும். விதி தெரியாமல் அபீலை அங்கிகரித்திருந்தால் போர்டின் அறியாமையாகும், தெறிந்தும் செய்திருந்தால் குற்றமாகும். கவர்ன்மெண்டாரின் உத்திரவில்லாமலே போர்டினிடமிருந்து நஷ்ட ஈடு வாங்க கணக்கு பரிசோதகருக்கு அதிகாரமுண்டு.

C. மாதவ நாயர், அட்வகேட் ஜனரல்.

(இது 1920-ஞுத்திய லோகல் போர்ட் ஆக்டுகளில் சொல்லப்பட்டவைகளுக்கும் பொருந்தும்). [இ. பு. ப. 675]

பஞ்சாயத்து வரியை வஜா அல்லது திருத்தம் செய்யலாம்.

29. வரியைக் குறைத்தோ அல்லது வஜா செய்தோ ப்ரெஸிடென்டால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை பஞ்சாயத்து தானுகவேயாவது மற்றப்படியாவது ரத்து பண்ணலாம் அல்லது திருத்தலாம்.

குறிப்பு.

விதி 29. தானுகவேயாவது மற்றப்படியாவது.—பஞ்சாயத்துக்குள்ள பூரண அதிகாரத்தை இந்த விதி குறிக்கிறது. சாதாரணமாய் அபீல் செய்யவேண்டுமென்ருவது அல்லது அதன் பரிசீலனைக்கு வேரொருவர் கொண்டுவர வேண்டுமென்ருவது நிபந்தனை இல்லை. பிரசிடென்ட் செய்த எந்த உத்திரவையும், லோகல் போர்ட் திருத்தலாம், மாற்றலாம். [இ. பு. ப. 675]

வரி புத்தகங்கள் திருத்தப்பட வேண்டும்.

30. அபீலின்மேல் பஞ்சாயத்தால் பிறப்பிக்கப்படும் எவையேனும் உத்தரவுகளின்படி, வரிவிதிப்பு புஸ்தகங்களைத் திருத்தவேண்டும்; யாதொரு வரித்தொகையானது பஞ்சாயத்தால் குறைக்கப்பட்டாலும் வஜா செய்யப்பட்டாலும், ப்ரெஸிடென்டானவர் அப்பிரகாரமே அதை வாப்ஸ் பண்ணவேண்டும்.

பஞ்சாயத்தின் தீர்மானம் முடிவானதாகும்.

31. இதில் முன்னமே நிபந்தனை கண்டிருக்கிறபடி அபீல் செய்துகொள்ளப்படாதிருந்தால், யாதொரு வரிவிதிப்பு அல்லது வரியைக் கேட்பதும் அப்படிப்பட்ட அபீல் செய்துகொள்ளப்பட்டால் அதன்மேல் பஞ்சாயத்து செய்கிற தீர்மானமும் முடிவானவையாகும்.

ஆனுல், யாதொரு வரிவிதிப்பாவது, வரியை கேட்பதாவது, வரி விதிப்பு புத்தகங்களின்படி இராவிட்டால், அவைகளின் பிரகாரம் புதிதாய் வரி விதிப்பதையோ அல்லது வரியை கேட்பதையோ இந்த விதியில் கண்ட தெதுவும் தடுப்பதாகக் கருதக்கூடாது.

வரி வசூல்.

பில் அல்லது நோடீஸ் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

32. (1) எது விஷயமாய் 96-வது பிரிவின்படி யாதொரு நோடீஸ் சேர்ப்பிக்கப்படவேண்டுமோ அந்த வரியாயிராத யாதொரு வரி எந்த நபரிடமிருந்தாவது பாக்கியாயிருக்கும் பட்சத்தில், லோகல் போர்ட் ப்ரெஸிடென்டானவர் - 33-வது விதியில் கண்ட நிபந்தனைகளைத் தாம் அமுலுக்குக் கொண்டுவரத் தொடங்குவதற்குமுன் பாக்கியாயிருக்கும் தொகைக்காக அப்படிப்பட்ட நபருக்கு ஒரு பில் (bill) சேர்ப்பிக்கவேண்டும்.

(2) 96-வது பிரிவின்படிக்கான நோடிஸிலும் 32-வது விதியைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படிக்கான பில்லிலும் ப்ரெஸிடென்டாவது இது விஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது கையெழுத்து செய்யவேண்டியதுமல்லாமல்—

(a) எதற்கு வரி போடப்பட்டிருக்கிறதோ அந்த தொழில்-சொத்து அல்லது வஸ்துவின் விவரமும் அந்த வரி எந்த கால அளவுக்குப் போடப்பட்டிருக்கிறதோ அந்த கால அளவும்,

(b) வரி செலுத்தத் தவறினுல் ஏற்படும் பொறுப்பைக் குறித்த அறிக்கையும்

அந்த நோடிஸிலும் பில்லிலும் கண்டிருக்கவும் வேண்டும்.

(3) ஷெ நோடிஸாவது பில்லாவது யாதொரு அரை வருஷத்துக்குள்ளாகிலும் அதற்கடுத்த அரை வருஷத்திலாகிலும் யாதொரு நபருக்குச் சேர்ப்பிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, முதலில் சொன்ன அரை வருஷத்துக்காக அந்த நபரால் வரி எதுவும் செலுத்தப்படத்தக்கதாகாது.

ஆனால், வரிவிதிப்புப் புஸ்தகங்கள் 5-வது விதியைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உபவிதியின்படி திருத்தப்பட்டிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்த நோடிஸ் அல்லது பில்லை, எதில் அந்தத் திருத்தம் செய்யப்பட்டதோ அந்த அரை வருஷத்திலாகிலும் அதற்கடுத்த அரை வருஷத்திலாகிலும் சேர்ப்பிக்கலாம்.

குறிப்பு.

விதி **32**. நோடீஸ்.—தொழில் வரி விஷயத்தில் 96-வது செக்ஷன்படி நோடீஸ் சாதரா செய்யவேண்டும். நோடீஸ் சேரும் வரையில் ஒருவர் பணம் கட்டவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை. நோடீஸில் கண்ட தவணைபடி பணம் கட்டாவிட்டால் 33 (1)-வதுபடி ஜப்தி செய்து அல்லது 33 (3)-படி தாவா தொடர்ந்து அல்லது 33 (2), 39-வது விதிப்படி கிரிமினல் தாவா தொடர்ந்து வரி வசூல் செய்யலாம்.

பிரசிடேன்டானவர் அடுத்த விதியின் நிபந்தனைகளை தாம் அமுலுக்கு கொண்டு வர.................ஒரு பில்லை அந்த நபருக்கு சேர்ப்பிக்கவேண்டும்.—96-வது, 100-வது செக்ஷன்படி பில் கொடுக்கவேண்டிய அவசியமில்லாமற் போனபோதிலும் பில் கொடுக்குமுன் செலுத்தவேண்டுமென்பதில்லை. ஜப்தி செய்யப்படுமுன் நோடீஸ் கொடுத்து ஜப்தி செய்ய வேண்டும். (சுப்ரமணியம் செட்டி எ. குடியாத்தம் முனிசிபாலிடி, 22 L.W. 719=A.I.R. 1926 Mad. 204). நோடீஸ் கொடுக்காமல் ஜப்தி அல்லது தாவா தொடர்ந்து வரி வசூல் செய்தால் அதை அந்தப் பிரசிடென்ட் திருப்பி கொடுப்பதற்கு கடமைப்பட்டிருப்பதுடன், நஷ்டத்திற்கும் அருகராவார்.

விதி 32 (3). பில்லாவது நோடீஸாவது சேர்பிக்கப்பட்டாலன்றி.—நோடீஸாவது, பில்லாவது சேர்பிக்கப்பட்டாலன்றி வரி கட்டவேண்டியதில்லை என்று இந்த விதி நிச்சயமாய் சொல்லுகிறது. நடக்கும் அரை வருஷத்திற்கு வரி வசூல் செய்யவேண்டுமானால் இந்த அரை வருஷத்திலாவது அதற்கு அடுத்த அரை வருஷத்திலாவது நோடீஸ் சேர்பிக்கவேண்டும்.

வரி வசூலிக்கப்படவேண்டிய விதம்.

33. (1) யாதொரு வரி விஷயமாக பாக்கியாயிருக்கிற தொகையானது நோடீஸ் அல்லது பில் சேர்ப்பிக்கப்பட்டது முதற்கொண்டு பதினைந்து தினங்களுக்குள் செலுத்தப்படாமலிருந்து, அந்த வரியைச் செலுத்தவேண்டிய நபர் அதை ஏன் செலுத்தக் கூடாதென்பதைக் குறித்து ப்ரெஸிடென்டுக்குத் திருப்திகரமாகக் காரணம் தெரிவித்திராதபட்சத்தில், ப்ரெஸிடென்டானவர் - தம்மால் பிறப்பிக்கப்படும் வாரண்டைக்கொண்டு (வரி செலுத்தத்) தவறினவருடைய அசையும் பொருளை ஜப்திபண்ணி விற்பனைசெய்து, அந்த வரிக்காக சேரவேண்டிய தொகையையும், வாரண்ட் கட்டணத்தையும் ஜப்தி கட்டணத்தையும், அந்தப்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தை மறியல்பண்ணி விற்பனை செய்வது சம்பந்தமாய் உத்தேசமாகப் பிடிக்கும் செலவுக்கு சரிக்கட்டிப்போகும் பின்னும் தொகையையும், வசூல் பண்ணலாம் :

ஆனால் எப்போதும், 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 60-வது பிரிவைச் சேர்ந்த விலக்கு நிபந்தனையில் விவரித்திருக்கும் அசையும்பொருள் ஜப்தி செய்யப்படுவதற்கு உள்ளாகாது.

(2) (வரி செலுத்தத்) தவறினவருடைய சொத்தை ஜப்தியாவது போதுமானவரையில் ஜப்தியாவது செய்வது யாதொரு காரணத்தினலே சாத்தியமாயிராவிட்டால், ப்ரெஸிடென்டானவர் - அப்படி தவறிப்போனவர்மேல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் பிராது தொடரலாம்.

(3) இந்த ஆக்டின்படி லோகல் போர்டாருக்குச் சேரவேண்டிய யாதொரு வரிக்காக ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடருவதற்கு இந்த விதியிற் கண்டதெதனுலும் அவர்களுக்குத் தடை ஏற்படமாட்டாது.

(4) (1) குறிப்பிட்ட உபவிதியின்படிக்கான வாரண்ட் இந்த விதிகளுடன் சேர்ந்திருக்கும் A அனுபந்தத்திலுள்ள நமூனப்படியாவது அதைப் போன்ற ஒரு நமூனப்படியாவதிருக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு வாரண்டுக்கும் இரண்டணு கட்டணம் விதித்து வாங்கப்படும்.

(5) ப்ரெஸிடென்டின் எழுத்துமூலமாயுள்ள பிரத்தியேகமான ஒரு உத்தரவின்படி, ஜப்தி வாரண்டை நிறைவேற்றும் பொறுப்பு ஏற்படுத்தப்பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர்-யாதொரு கட்டிடத்தில் கைப்பற்றப்படத்தக்க சொத்து இருக்கிறதென்று நம்ப தமக்கு நியாயமான காரணம் இருக்கிற பட்சத்திலும், தம்முடைய அதிகாரத்தையும் தம்முடைய காரியத்தையும் தெரிவித்து உள்ளே பிரவேசிக்க விடும்படி கிரமமாய்க் கேட்ட பிறகு தாம் வேறே விதமாய் உள்ளே பிரவேசிக்க முடியாதிருக்கிறபட்சத்திலும், ஜப்தி செய்யும் பொருட்டு அந்தக் கட்டிடத்தின் யாதொரு வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது சூரியோதயமுதல் சூரியாஸ்தமனத்துக்குள்ளாக உடைத்துத் திறக்கலாம்:

ஆனல், ஷை உத்தியோகஸ்தர் - ஸ்திரீகளுக்கேயுரிய யாதொரு அறையில் பிரவேசிக்க போவதாகவாவது அதன் கதவை உடைத்துத் திறக்கப்போவதாகவாவது தாம் உத்தேசித்திருப்பதாக மூன்றுமணிநேர நோடீஸ் கொடுத்து அந்த ஸ்திரீகள் ஷை அறையைவிட்டு நீங்கிப்போக அவர்களுக்கு அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்கிறவரையிலே ஷை அறைக்குள் அவர் பிரவேசிக்கவும் கூடாது, அதன் கதவை உடைத்துத் திறக்கவும் கூடாது.

குறிப்பு.

விதி 33 (1). 15 தினங்களுக்குள் செலுத்தப்படாவிட்டால்.—வரி வசூலிக்கப்படுமுன் நோடீஸ் சேர்ப்பிக்கப்படவேண்டும். தொகை செலுத்தப்படுகிறதா என்று 15 தினங்கள் பார்க்கவேண்டும். சேர்பிக்கப்பட்ட தினத்தை சேர்க்கக்கூடாது. தொழில் வரி விஷயத்தில் 15 தினங்களுக்கு மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். வீட்டு வரி விஷயத்தில் 33-வது விதிப்படி டிமாண்ட் நோடீஸ் சேர்பிக்கப்பட்ட பிறகு ஜப்தி செய்யலாம்.

ஜப்தி.—33-வது விதிப்படி ஜப்தி செய்யவேண்டும். தாவா தொடரப்படுமுன் ஜப்தி செய்யவேண்டும். கட்டத்தவறியவர் அதாவது நோடீஸ் சேர்பிக்கப்பட்டவரின் சொத்தை ஜப்தி செய்து ஏலம் போடலாம். (புருஷோத்தம்மா எ. பல்லாரி முனிசிபல் கௌன்ஸில், 14 M. 467). ஜப்தி செய்து ஏலம் போட்டு வரி வசூல் செய்ய முடியாதபோது தாவா தொடரவேண்டும். (மகாராணியார் எ. ஒஷாங்கினவி, 9 M. 429). ஜப்தி செய்வதற்கு உத்திரவுபெற்றவர், பிரசிடென்டினிடமிருந்து பிரத்தியேக உத்திரவு பெற்றுலொழிய வர்சக் கதவு அல்லது ஜன்னலை உடைத்து ஜப்தி செய்யக்கூடாது. லோகல் போர்ட் விஸ்தீரணத்திற்குள், வரி கட்டத் தவறியவருடைய சொத்து எங்கிருந்தாலும் ஜப்தி செய்யலாம். [இ. பு. ப. 679]

34. (1) யாதொரு வாண்டை நிறைவேற்றும்படி உத்தரவு கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர் - ஜப்தி செய்வதற்கு முன்னே, சேரவேண்டிய வரியையும் வாரண்ட் கட்டணத்தையும் செலுத்தும்படி கேட்கவேண்டும். ஷை வரியும் கட்டணமும் செலுத்தப்பட்டால் ஜப்தி செய்யக்கூடாது; ஆனல், அந்த வரி அல்லது கட்டணம் செலுத்தப்படாவிட்டால் ஷை உத்தியோகஸ்தர்—

ஜப்தி செய்ய வேண்டிய முறை.

(a) (வரி செலுத்தத்) தவறினவருடையதாய் தமக்கு அவசியமாகத் தோற்றும் அசையும் பொருளைக் கைப்பற்றவேண்டும்;

(b) கைப்பற்றின சொத்துக்கு ஜாபிதா ஒன்று எழுதிக்கொள்ள வேண்டும்; மேலும்,

(c) கைப்பற்றியகாலத்தில் கைப்பற்றின சொத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்த நபருக்கு, இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் B அநுபந்தத்திலுள்ள நமூனுப்படியாவது அதைப்போன்ற ஒரு நமூனுப்படியாவது (கைப்பற்றின சொத்தின்) ஜாபிதாவுக்கு ஒரு நகலையும் விற்பனை நோடீஸையும் கொடுக்கவேண்டும்.

ஆனால், பாக்கியுள்ள தொகைகளை செலுத்தி கைப்பற்றப்பட்ட சொத்தை மீட்டுக்கொள்ள எழுதினக் காலஅளவு ஏற்படுத்தி கொடுக்கவேண்டும்.

(2) ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது அளவுக்கு மிஞ்சியிருக்கக் கூடாது; எனவே, ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப்பானது (வரி செலுத்தத்) தவறினவர் கொடுக்கவேண்டிய வரியும், வாரண்ட் - ஜப்தி - மறியல் - விற்பனை ஆகிய இவைகளுக்குரிய சகல செலவுகளும் சேர்ந்து - எவ்வளவாகிறதோ அவ்வளவுக்குக் கூடியமட்டில் சமானமாய் இருக்கவேண்டும்.

குறிப்பு.

விதி 34 (1). ஜப்தி செய்யுமுன் வரியை கேட்கவேண்டும்.—ஜப்தி செய்யப்போகுமுன் கவனிக்கவேண்டிய முக்கியாம்சமாகும். வரி கேட்காமல் ஜப்தி செய்தால் அது நியாயமாக செய்த காரியமாகாது. சொந்தக்காரர் அல்லது கட்டத்தவறியவர் முன்னிலையில் ஜப்தி செய்யவேண்டும். வீட்டிற்கு சொந்தக்காரர் இல்லாமல் போனுல், அநுபோகதாரருக்கு முன் நோடீஸ் கொடுத்தாலொழிய அவருடைய சொத்தை ஜப்தி செய்யக்கூடாது.

விதி 34 (1) (a). அசையும் பொருள்களை ஜப்தி செய்யவேண்டும்.—அசையும் பொருள் என்பது பூமியில் புதைக்கப்படாத அல்லது நடப்படாத வஸ்துவாகும். இதனுல்தான் கதவு ஜப்தி கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. தெருக்கதவை எடுப்பது வீட்டிற்கு பத்திரக்குறைவை உண்டாக்கக்கூடியதாகையால் அதை தடுத்தால் குற்றமாகாது. (மகார்சாகிப், 58 M.L.J. 193.)

ஜப்தி செய்த சொத்தின்மேல் ஆக்ஷேபனையின் பரிசீலனையும், ஏலம் போடுவதும்.

35. (1) வரிக்காகவும் வாரண்ட் கட்டணத்திற்காகவும் ஜப்தி கட்டணத்திற்காகவும் சொத்தை மறியல் செய்தது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் (வரி செலுத்தத்) தவறினவர் செலுத்தவேண்டிய தொகையானது 33-வது விதியின்படி கொடுக்கப்பட்ட நோடீஸில் கண்ட ஏழு தினங்களுக்குள் செலுத்தப் படாமலிருந்து ஜப்தி வாரண்டை ப்ரெஸிடென்ட் நிறுத்தி வைக்காதிருக்கிற பக்ஷத்திலே, கைப்பற்றப்பட்ட சொத்தையாவது அதில் போதுமான பாகத்தையாவது ப்ரெஸிடென்டின் உத்தரவின்மேல் பகிரங்கமான ஏலத்தில் விற்கவேண்டும் விற்று வந்த பணத்தை, வரிக்காகவும் ஜப்தி கட்டணத்துக்காகவும் வாரன்டு கட்டணத்துக்காகவும் ஜப்தி கட்டணத்துக்காகவும் சொத்தை மறியல் செய்து விற்றது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் சேரவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு ப்ரெஸிடென்ட் உபயோகிக்க வேண்டும்; மேலும், சொத்தைக் கைப்பற்றிய காலத்தில் அது யாருடைய வசத்திலிருந்ததோ அவருக்கு விற்பனைக்குப் பிறகும் மேலே கண்டபடி விற்று முதலை உபயோகித்ததற்குப் பிறகும் மிகுந்திருக்கக்கூடிய யாதொரு சொத்தையாவது தொகையையாவது வாபஸ் செய்துவிடவேண்டும். வரிக்காகவும் வாரண்ட் கட்டணத்திற்காகவும் ஜப்தி கட்டணத்திற்காகவும் சொத்தை மறியல் செய்து விற்றது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் சேரவேண்டியத் தொகையைச் செலுத்துவதற்கு விற்று முதல் போதுமானதாயிராவிட்டால், செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கிற தொகைக்காக 32-வது விதியின்படி ப்ரெஸிடென்ட் மறுபடியும் நடவடிக்கை நடத்தலாம்.

(2) கைப்பற்றப்பட்ட சொத்து சீக்கிரத்திலும் இயற்கையாகவும் அழிந்துபோகக்கூடியதாயிருந்தால், ப்ரெஸிடென்டானவர் - பாக்கியாயிருக்கிற தொகை மேற்கண்ட ஏழு தின கால அளவு கடந்து போவதற்கு முன்னே செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அந்தப்படி கடந்துபோவதற்குமுன் எப்போதாவது ஷை சொத்தை விற்றுவிடலாம்.

(3) ப்ரெஸிடென்டானவர் யாதொரு சொத்தின் ஜப்தியைக் குறித்து ஷை எழுதின கால அளவுக்குள் செய்யப்படும் எவையேனும் ஆட்சேபனைகளைப் பற்றி யோசிக்கவேண்டும்; மேலும், அவர் - அது விஷயமாய்ப் பரிசீலனை முடிவாகிறவரையில் விற்பனையை நிறுத்திவைக்கலாம். ஜப்தி செய்யப்பட்ட சொத்து ஜப்திக்கு உள்ளாகத்தக்க தல்லவென்று ப்ரெஸிடென்ட் தீர்மானிப்பாராகில், அவர் - அதைப் பெற்றுக்கொள்ள அர்ஹரென்று தோற்றுகிற நபருக்கு அதையாவது, அது முன்னமே விற்பனை செய்யப்பட்டிருந்தால் அதன் விற்றுமுதலையாவது வாப்ஸ் செய்துவிடவேண்டியது மல்லாமல், 33-வது விதியின்படி மறுபடியும் நடவடிக்கையும் நடத்தலாம்; ஜப்திக்குள்ளாகத்தக்கதல்லவென்று தமக்குத் தெரிந்து சொத்தை (வரி செலுத்தத்) தவறினவர் வேண்டுமென்று ஜப்தி செய்ய விட்டாரென்பதாக ப்ரெஸிடென்டுக்குத் தோற்றுமாகில், முதல் ஜப்திக்கும் விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட சகல கட்டணங்களும் செலவுகளும் அப்படி தவறினவரிடத்திலிருந்து வசூல் செய்யப்படத்தக்கவைகளாகும்.

குறிப்பு.

விதி **35 (1)**.—ஏல உத்திரவு பிரசிடென்ட்டின் கைப்பட இருக்கவேண்டும். ஜப்தி செய்யப்பட்டதிற்கும் ஏலத்திற்கும் இடையில் 7 நாட்கள் இருக்கவேண்டும்.

விதி **35 (3)**.—ஏதாவது ஆக்ஷேபனைகள் வந்தால் அவைகள் ஏழு தினங்களுக்குள் செய்யப்பட்டனவா என்பதை முதன் முதல் கவனிக்கவேண்டும். ஏழு தினங்களுக்கு மேற்பட்டிருந்தால் அவைகளை நிராகரிக்கலாம். ஆக்ஷேபனையை நேராக கொடுக்கவேண்டுமென்பதில்லை. தபால் மூலமாயும் அனுப்பலாம். சொத்துக்கள் வேறு ஒருவருடையதென்று ஆக்ஷேபித்தால், சாக்ஷிகளை விசாரித்தும், தஸ்தாவேஜுகளை பார்வையிட்டும் தீர்ப்புகூற வேண்டும். [இ. பு. ப. 682]

36. (1) இந்த விதிகளுடன் சேர்ந்திருக்கும் C அனுபந்தத்தில் கண்டிருக்கிற விதங்களுக்கதிகப்படாமல் லோகல் போர்டாரால் நிச்சயிக்கப்படக்கூடிய வீதங்களின் பிரகாரம் ஜப்தி கட்டணங்கள் செலுத்தப்படத்தக்கவையாகும்.

ஜப்தி கட்டணம்.

(2) இந்த ஆக்டின்படி ஜப்தி செய்யப்பட்ட யாதொரு சொத்தை மறியல் செய்து வைப்பது சம்பந்தமாகப் பிடித்த செலவுகள் அப்படிப்பட்ட கட்டணங்களில் சேருவதாக எண்ணக்கூடாது.

37. 33-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி (வரி செலுத்தத்) தவறியிருக்கும் யாதொரு நபருடைய சொத்து லோகல் போர்ட் விஸ்தீர்ணத்துக்குள் எங்கே அகப்பட்டாலும் அதை ஜப்தி செய்யலாம்.

எங்கு ஜப்தி செய்ய வேண்டுமென்பது.

38. யாதொரு கட்டடத்திற்காகச் சேரவேண்டியதாயிருக்கும் வரியானது 33-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட கால அளவின் முதலில் முழுவதுமாது, சிறிது மட்டிலாவது செலுத்தப்படாமலிருந்தால், ப்ரெஸிடென்டானவர்-ஷை வரி பன்னிரண்டு மாதத்திற்கு மேற்பட்டு செலுத்தப்படாதிருந்திராதபட்சத்தில் பதினைந்து தினங்களுக்கு குறையாமல் குறித்த ஒரு கால அளவுக்குள் அந்த தொகையைச் செலுத்தவேண்டுமென்று

கட்டடத்தில் காணப்படும் அசையும் பொருள் ஜப்தி.

அப்படிப்பட்ட கட்டடத்தை அந்தந்த காலத்தில் அனுபவிக்கிறவருக்கு உத்தரவு செய்யலாம்; மேலும், அனுபோகதாரர் அப்படிப்பட்ட உத்திரவின்படி நடக்கத் தவறுவாராகில் ப்ரெஸிடென்டானவர் - ஷெ கட்டடத்திலே அகப்படுகிற யாதொரு அசையும் பொருளை ஜப்தி செய்து விற்கலாம்; மேலும், முந்திய விதிகளிலுள்ள நிபந்தனைகள் இந்த விதியின்படி செய்யப்பட்ட சகல ஜப்திகளுக்கும் விற்பனைகளுக்கும் அவசிமான மாறுதலுடன் பிரயோகப்படவேண்டும்; ஆனால், ஜப்தி அல்லது போதுமானவரையில் ஜப்தி செய்வதை அனுபோகதாரர் வேண்டுமென்று தடுத்திருந்தாலன்றி மற்றப்படி, இந்தப் பிரிவின் பிரகாரம் அவரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்க யாதொரு தொகைக்காக அந்த அனுபோகதாரர்-தம்மேல் பிராது தொடரப்படுவதற்காகிலும் ஸிவில் வியாஜ்ஜியம் செய்யப்படுவதற்காகிலும் உள்ளாகமாட்டார்.

வரி செலுத்தத் தவறியவர்மேல் பிராது தொடரல்.

39. (1) 33-வது விதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உபவிதின்படி எவர்மேல் பிராது தொடரப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் அவர் செலுத்தவேண்டிய தொகையை வேண்டுமென்று செலுத்தத் தவறினரென்றாகிலும், ஜப்தி அல்லது போதுமானவரையில் ஜப்தி செய்வதை வேண்டுமென்று தடை செய்தாரென்றாகிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாக ருஜுவாவதன் மேல்—

(a) வரிக்காகவும் வாரண்ட் கட்டணம் ஏதாவதிருந்தால் அதற்காகவும்,

(b) ஜப்தி செய்யப்பட்டிருந்தால் ஜப்தி கட்டணத்திற்காகவும், ஜப்தி செய்யப்பட்ட சொத்தை மறியல் செய்வதற்கும் விற்பனை செய்திருந்தால் அதற்கும் சம்பந்தப்பட்ட செலவுக்காகவும்,

அவர் செலுத்தவேண்டியதாயிருக்கும் தொகைக்கு இரண்டத்தனைக்கு அதிகப்படாமல் அபராதம் செலுத்துவதற்குள்ளாவார்.

(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படும்போதெல்லாம், மாஜிஸ்ட்ரேட்டானவர்-விதிக்கப்படக்கூடிய யாதொரு அபராதத்துடன்கூட, (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிட்டுள்ள தலைப்புகளின்கீழ் தொகைகள் எவையேனும் பாக்கியிருந்தால் அவைகளையும் சுருக்கவகையாய் வசூலித்து லோகல் போர்டாரிடத்தில் செலுத்திவிடவேண்டும்; மேலும், அவர் - நமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்திலே, பிராதுக்காகப் பிடித்த செலவாகத் தாம் தொகை ஏதாகிலும் நிஷ்கரிஷை செய்தால் அதையும் சுருக்க வகையாய் வசூலித்து லோகல் போர்டாரிடத்தில் செலுத்தி விடலாம்.

குறிப்பு.

விதி 39 (1). மாஜிஸ்டிரேட்டுக்கு திருப்திகாமாக ருசுவாவதின்மேல்.—இந்த உப-விதியின்படி அபராதம் விதிக்கப்படுவதானது குற்றம் சாட்டப்பட்டதாகும் மாஜிஸ்டிரேட்டின்முன் நடவடிக்கைகள், கிரிமினல் நடவடிக்கைகளாகும். குற்றம் சாட்டுமுன் மாஜிஸ்டிரேட், சட்டப்படி கட்டவேண்டிய வரியா என்பதை கவனிக்கவேண்டும். மாஜிஸ்டிரேட்டுகள் செய்யும் உத்திரவு கிரிமினல் சட்டப்படி செய்யப்பட்ட உத்திரவானதால் அதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. வசந்த எ. மதராஸ் அட்வகேட் ஜனரல், 43 M. 146.)

வேண்டுமென்று செலுத்த தவறினாலும்...............ஜப்தியைத் தடுத்தாலும்.—No 1183.—33 (1)-வது விதிப்படி, வரி கட்டத்தவறிய நபரின் சொத்துக்களை ஜப்தி செய்வது முடியாத காரியமாயிருந்தால் தாவா தொடரலாம். 33 (2)-வது விதிப்படி பிராது தொடர,

வரி கட்டவில்லை என்கிற காரணம் மட்டும் காட்டினால் போதாது, வேண்டுமென்றே கட்டத் தவறினதாக ருசு செய்யவேண்டும் அல்லது வேண்டுமென்றே ஜப்தி செய்வதைத் தடுக்க வேண்டும். 38-வது விதியைப் பார்க்கவும்.

ஒரு குயவன் வீட்டு வரி நோட்டீஸ் அவனுடைய வீட்டில் ஒட்டப்பட்ட பிறகு கட்டவில்லை. அந்த டிமாண்ட் நோட்டீஸில் ஒரு பதிவு, ரிஜிஸ்டர் நம்பர், பதிவு செய்யப்படவில்லை. வரி கட்டாததால் ஜப்தி வாரண்டு பிறப்பிக்கப்பட்டு, ஒரு பக்கட்டியும், ஒரு மண்வெட்டியும் ஜப்தி செய்ய அவன் ஜப்தி செய்யவொட்டாமல் தடுத்து அவைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அவன் பேரில் பிராது தொடர, அவனுக்கு கொடுத்த நோட்டீஸ் சரியானதென்றும், ஒரு பதிவு விடப்பட்டது பெரிய பிசகல்லவென்றும், உத்தியோக தோரணையில் செய்யும் காரியம் நல்ல எண்ணத்தைக்கொண்டு செய்யப்பட்டதென்றும், குயவன் செய்தது பிசகென்று குற்றம் சாட்டப்பட்டது. (மகாராணியார் எ. பூமலை உடையார், 21 M. 296.)

ப்ரஸிடென்ட் அல்லது வேறு உத்தியோகஸ்தர் ஏலத்தில் எடுக்கக் கூடாது.

39-A. ஜப்தி செய்யப்பட்ட சொத்தை முந்திய விதிகளின்படி எப்போதேனும் விற்பனை செய்தால் அதில் லோகல் போர்ட் ப்ரெஸிடென்டாவது லோகல் போர்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காராவது நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் எந்த சொத்தையும் வாங்கக்கூடாது.

கட்டணங்களை குத்தகைக்கு விடுதல்.

40. இந்த ஆக்டின்படி விதிக்கப்படத்தக்க கட்டணங்களை வசூலிப்பதைக் குத்தகைக்கு விட்டிருந்தால், குத்தகைதாரர் குத்தகைச்சீட்டில் குறிப்பிடப்பட்ட எவையேனும் ஷரத்துகளை மீறி நடக்கும்பட்சத்தில், குத்தகைக்கு விட்டிருப்பவர், அதாவது, சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - குத்தகைக்கு விட்டிருப்பதில் மறுபடியும் பிரவேசித்து குத்தகைதாரருடைய பொறுப்பின்மேல் அதை மறுபடியும் குத்தகைக்கு விடலாம் அல்லது மறுபடியும் விற்பனை செய்யலாம் என்று அந்த குத்தகைச்சீட்டில் நிபந்தனை கண்டிருக்கலாம; அந்தப்படி மறுபடியும் பிரவேசிப்பதன்மேல், பிரதம குத்தகைச்சீட்டின் கால அளவு முடிந்துபோனதாகும்.

A அனுபந்தம்.

ஜப்தி வாரெண்ட்.

(33 (4) விதியைப் பார்க்கவும்.)

வாரண்ட் ந.

(வாரண்டை நிறைவேற்றும்படி கட்டளையிடப்பட்ட உத்தியோகஸ்தரின் பெயர்.)

க்கு

(இன்ன வரி அல்லது வரிகள் பாக்கியாயிருக்கின்றனவென்றும் வளவு ஏதாகிலும் இருந்தால் இன்ன வளவின் விஷயத்தில் ஷெ வரி அல்லது வரிகள் பாக்கியாயிருக்கின்றவென்றும் எழுதுக.)

19 -ம் வருஷம் மீ உ யோடு முடிவாகிற க்கு மேலேகண்ட வரி அல்லது வரிகள் விஷயமாய்ச் செலுத்தவேண்டிய ரூ. அ. பை. உள்ள தொகையை ல் இருக்கும் இடமிருந்து கிரமமாய்க் கேட்டிருந்தும் அப்படி கேட்டபிறகு பதினைந்து தினங்கள் ஆயிருந்தும் ஷெ தொகையை ஷெ செலுத்தாதப்படியாலும் அதைச்

செலுத்தாமலிருந்ததற்குப் போதுமான காரணம் தெரிவிக்காதபடியாலும் இதனால் உமக்குக் கட்டளையிடுகிறது என்னவென்றால்,—வாரண்ட் கட்டணத்துக்காக இரண்டணா சகிதமாக ஷெ ரூ. அ. பை உள்ள தொகையைச் செலுத்தும்படி கேட்கவேண்டும்; அது செலுத்தப்படாதபட்சத்தில், ஷெ தொகை ரூ. அ. பை. ம், வாரண்ட் கட்டணத்துக்காகவும் ஜப்தி கட்டணத்துக்காகவும் ரூ. அ. பை. ம் சேர்ந்து மொத்தம் ரூ. அ. பை. க்கும் ஜப்தி சொத்துக்களை வைத்திருக்கவும் விற்கவும் பிடிக்கும் செலவுக்குப் போதுமானதாயிருக்கக்கூடிய இன்னும் தொகைக்கும் ஷெ டைய தட்டுமுட்டு சாமான்களை (அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பிரஸ்தாப வளவில் அகப்படும் எந்த தட்டுமுட்டு சாமான்களையும்) நீர் ஜப்தி செய்யவேண்டும்; அப்படி ஜப்தி செய்த பிறகு அடுத்த ஏழு தினங்களுக்குள் ஷெ வரி அல்லது வரிகளுக்காகவும் கட்டணத்துக்காகவும் செலுத்தவேண்டிய தொகையையும், மேற்கண்ட ஜப்தி சொத்துக்களை வைத்திருப்பதற்காகப் பிடிக்கும் செலவுக்குப் போதுமானதாயிருக்கக்கூடிய இன்னும் தொகையையும் செலுத்தாவிட்டால், இனிமேல் நான் பிறப்பிக்கும் உத்தரவுகளின்படி ஷெ தட்டுமுட்டு சாமான்களை விற்பனை செய்து, ஜப்தி சொத்தின் விற்றுமுதலை போர்ட் ஆபிஸுக்கு நீர் இரிசால் செய்யவேண்டும்; ஷெ வரி அல்லது வரிகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் சேரவேண்டியதாயிருக்கிற தொகையையும், அதாவது, ரூ. அ. பை. ம், ஷெ ஜப்தி சொத்துக்களை வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் பிடித்த செலவையும் விற்று முதலிலிருந்து கழித்து நிதிக்கு வரவாக வைக்கவேண்டும்; மிகுதி ஏதாவதிருந்தால் அதை ஜப்தி செய்யப்பட்ட தட்டுமுட்டு சாமான்களின் சொந்தக்காரரிடத்தில் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். ஷெ டைய தட்டுமுட்டு சாமான்களில் ஜப்திசெய்வதற்கோ போதுமான அளவு ஜப்தி செய்வதற்கோ அகப்படாவிட்டால், அது விஷயத்தைக் குறித்து இந்த வாரண்ட் சகிதமாக நீர் எனக்கு உறுதிமொழிகூறி அனுப்பவேண்டும்.

இடம்,

தேதி, 19 -ம்ஸ்ரீ மீ வ. (ப்ரெஸிடென்ட் அல்லது வேறே உத்தியோகஸ்தரின் கையெழுத்து.)

B அனுபந்தம்.

சாமான் ஜாபிதாவுக்கும் நோடிஸுக்கும் நமூனா.

(34 (1) (c) விதியைப் பார்க்கவும்.)

(கைப்பற்றப்பட்ட தட்டுமுட்டு சாமான்களின் விவரத்தை எழுதுக.)

ஓரத்தில் கண்டிருக்கும் வரி அல்லது வரிகளுக்காக 19 -ம்ஸ்ரீ மீ வ யோடு முடிவாகிற க்குச் சேரவேண்டிய ரூ. அ. பை உள்ள தொகைக்காக ஷெ சாமான் ஜாபிதாவில் கண்ட தட்டுமுட்டு சாமான்களை நான் இன்றையதினம் கைப்பற்றியிருக்கிறேனென்றும், சேரவேண்டிய தொகையையும் வாரண்ட் கட்டணத்தையும் ஜப்தி கட்டணத்தையும் தட்டுமுட்டு சாமான்களை வைத்திருந்ததற்காகப் பிடித்த செலவையும் இந்த நோடிஸ் தேதி முதல் ஏழு தினங்களுக்குள்ளாக போர்டின் ஆபிஸில் நீர் செலுத்தாவிட்டால், மேற்படி தட்டுமுட்டு சாமான்கள் போர்ட் ஆபிஸிலாவது ப்ரெஸிடெண்ட் உத்தரவு செய்யக்கூடிய வேறே இடத்திலாவது 19 -ம்ஸ்ரீ மீ வ விற்று

விடப்படுமென்றும், அந்த தட்டுமுட்டு சாமான்கள் சீக்கிரத்தில் இயற்கையாய்க் கெட்டுப்போகக்கூடியவைகளாயிருந்தால் அவை அதற்கு முன்னமே யாதொரு தேதியில் விற்பனை செய்யப்படலாமென்றும் அறியவும்.

இடம்,

தேதி, 19 -ம்வருடம் மீ உ.

(ஜப்திவாரண்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தரின் கையெழுத்து.)

C அனுபந்தம்.

ஜப்தி செய்யப்படுவதன்மேல் செலுத்தவேண்டிய உச்ச கட்டண ஜாபிதா.

(36 (1) விதியைப் பார்க்கவும்.)

இவ்வளவு தொகைக்காக ஜப்தி செய்யப்பட்டதென்பது.					கட்டணம் ரூ.	அ.	பை.
1 ரூபாய்க்கு உட்பட்ட தொகைக்கு				....	0	4	0
1 ரூபாயும் அதற்கு மேற்பட்டும்	5	ரூபாய்க்குட்பட்டுமுள்ளதொகைக்கு			0	8	0
5 ,,	10	,,	,,	... .	1	0	0
10 ,,	15	,,	,,	....	1	8	0
15 ,,	20	,,	,,	....	2	0	0
20 ,,	25	,,	,,	....	2	8	0
25 ,,	30	,,	,,	....	3	0	0
30 ,,	35	,,	,,	... ...	3	8	0
35 ,,	40	,,	,,	....	4	0	0
40 ,,	45	,,	,,	....	4	8	0
45 ,,	50	,,	,,	....	5	0	0
50 ,,	60	,,	,,	... .	6	0	0
60 ,,	80	,,	,,	....	7	8	0
80 ,,	100	,,	,,	....	9	0	0
100 ரூபாயும் அதற்கு மேற்பட்டுமுள்ள தொகைக்கு				....	10	0	0

மேற்படி கட்டணத்தில் எல்லாச் செலவுகளும் அடங்கும்; ஆனால் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்குச் சேகவர் காவல் வைக்கப்பட்டால், நாளொன்றுக்கு ஒவ்வொரு சேகவனுக்கும் மூன்று அணா கொடுக்கவேண்டும்.

5-வது ஷெட்யூல்.

திரவிய சம்பந்தமான விதிகள்.

(12, 115, 121 பிரிவுகளைப் பார்க்கவும்.)

லோகல் போர்டுகளின் செலவுகள்.

1. (அ) ஒவ்வொரு லோகல் போர்டாரும்—

(i) தம்மால் வாங்கப்பட்டிருக்கும் எவைபேனும் கடன்களின் விஷயமாக பாக்கியாய் ஏற்படும் எந்த தொகைகளையும்,

(ii) ஷை போர்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சம்பளங்களையும் வர்த்தனைகளையும்

கொடுப்பதற்காக ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டவர்களாவார்கள்,

(b) மேலும் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாரும்—அந்த டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் பென்ஷன்கள், பென்ஷன் சம்பந்தமான சகாயத்தொகைகள், ப்ராவிடெண்ட் பண்ட் விஷயமாய்க் கொடுக்கப்படும் சகாயத்தொகைகள் ஆகிய இவைகளையும், தம்முடைய அதிகார விசாரணைப் பிரதேசத்துக்குள் இருக்கும் ஒவ்வொரு தாலூகா போர்டையும் பஞ்சாயத்தையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் பென்ஷன்கள், பென்ஷன் சம்பந்தமான சகாயத் தொகைகள், ப்ராவிடென்ட் பண்ட் விஷயமாய்க் கொடுக்கப்படும் சகாயத் தொகைகள் ஆகிய இவைகளையும் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

பஞ்சாயத்துகளின் செலவுகள்.

1-A. (1) யாதொரு பஞ்சாயத்தானது அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாக கிராமத்தின் ஆவசியகங்களை நிறைவேற்றும் பொருட்டு தனக்குத் தகுதியாக தோற்றும் ஏற்பாடு செய்வதற்கு அதிகாரமுடையதாகும்; அவையாவன:

(a) கிராம எல்லைகளுக்குள் இருக்கும் டிஸ்டிரிக்ட் பாட்டைகள், தாலூகா பாட்டைகள் ஆகிய இவைகளின் பாகங்களாயிராத இதர சகல பொதுவான பாட்டைகளையும் அந்த எல்லைகளுக்குள் ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்; அப்படிப்பட்ட பாட்டைகளில் சகல வாராவதிகள், கல்வெர்ட்டுகள், சிறு பாலங்கள், பாட்டை அணைகள், மேட்டுப்பாதைகள் ஆகிய இவைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்;

(b) டிஸ்ட்ரிக்ட் சத்திரங்கள் அல்லது தாலூகா சத்திரங்களாகத் தரம் பிரிக்கப்பட்ட சத்திரங்களாயிராத இதர சத்திரங்களை கிராம எல்லைகளுக்குள் ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும்;

(c) கிராம எல்லைகளுக்குள் இருக்கும் சகல பொதுவான பாட்டைகளிலும் பொதுவான இடங்களிலும் விளக்குபோடுவது;

(d) தாலூகா புஸ்தகசாலைகளாகத் தரம் பிரிக்கப்பட்டவைகளாய் கிராமத்தைவிட விசாலமான யாதொரு விஸ்தீர்ணத்தில் உள்ளவர்களின் ஆவசியகங்களைப் பூர்த்தி செய்யும் புஸ்தகசாலைகளாயிராத இதர புஸ்தகசாலைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்;

(e) ஜலதாரைகளை ஏற்படுத்துவதும், வடிகால் நீரையும் சாக்கடைத் தண்ணீரையும் ஒருவகை செய்வதும்;

(f) தெருக்களைச் சுத்திசெய்வதும், குப்பைக்குவியல்களையும் தாமாகவே அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் செடி கொடிகளையும் சப்பாத்துக்கள்ளியையும் அப்புறப்படுத்துவதும், உபயோகப்படாத கிணறுகளையும் சுகாதாரக் கேடான குளங்கள், குட்டைகள், வடிகால்கள், குழிகள் அல்லது பள்ளங்களையும் தூர்த்துவிடுவதும், கிராமத்தின் சுகாதார நிலைமையை இதர வழிகளில் சீர்திருத்துவதும்;

(g) பொதுவான மலஜலபாதை மறைவிடங்கள் ஏற்படுத்துவதும், மலஜலபாதை மறைவிடங்கள் பொதுவானவைகளாயிருந்தாலுஞ்சரி சொந்தமானவைகளாயிருந்தாலுஞ்சரி அவைகளைச் சுத்திபண்ணுவதற்காக ஏற்பாடுகள் செய்வதும்;

(h) (பிரேதங்களைப்) புதைக்கும் இடங்களையும் தகனஞ் செய்யும் இடங்களையும் ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(i) கிணறுகள் எடுப்பதும் அவைகளுக்கு மராமத்துசெய்வதும், குடிக்கும் காரியங்களுக்காகவும் துணி தோய்க்கும் அல்லது சுத்தி செய்யும் காரியங்களுக்காகவும் ஸ்நானம் செய்யும் காரியங்களுக்காகவும் வேண்டிய தண்ணீருக்காக குட்டைகள் அல்லது குளங்கள் தோண்டுவதும், அவைகளுக்கு மராமத்து செய்வதும், அவைகளைப் பராமரித்து வருவதும், ஸ்நானம் செய்யும் துறைகளைக் கட்டுவதும் ;

(j) ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(k) தாலூகா மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்ட மார்க்கெட்டுகளாயிராத இதர பொதுவான மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும் ;

(l) தாலூகா சந்தைகளாகவும் தாலூகா உற்சவங்களாகவும் தரம் பிரிக்கப்பட்டவைகளாய், கிராமத்தைவிட விசாலமான யாதொரு விஸ்தீர்ணத்தில் உள்ளவர்களின் ஆவசியகங்களைப் பூர்த்தி செய்யும் சந்தைகளும் உற்சவங்களுமாயிராத இதர சந்தைகள் விஷயமாயும் உற்சவங்கள் விஷயமாயும் மேல் விசாரணை புரிவது ;

(m) தேகாப்பியாச சாலைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ; மேலும்,

(n) நந்தவனங்களை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டு, பஞ்சாயத்தானது அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் கிராமத்தின் ஆவசியகங்களை நிறைவேற்றும்பொருட்டு தனக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாட்டைச் செய்வதற்குங்கூட அதிகாரமுடையதாகும் ; அவையாவன :—

(a) டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா பாட்டைகளாயிராத கிராமத்திலுள்ள சகல பொதுவான பாட்டைகளின் ஓரங்களிலும் மரங்களை நடுவதும் அவைகளைப் பாதுகாத்துவருவதும் ;

(b) பொதுவான இறங்குமிடங்களையும், தங்குமிடங்களையும், பார வண்டி நிற்குமிடங்களையும் ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(c) கிராமத்தார்களாய் பொதுவாய் உபயோகிக்கப்படும் களத்துமேடுகள், தோப்புகள், இதர புறம்போக்குகள் ஆகிய இவைகள் விஷயமாய் மேல் விசாரணை புரிவது ;

(d) பொதுவாய் கிராமத்தார்களுக்குச் சொந்தமான கிராம கட்டிடங்கள் விஷயமாயும், இதர சொத்து விஷயமாயும் மேல் விசாரணை புரிவது ;

(e) கிராம நத்தங்களை விஸ்தரிப்பதும் கட்டிட விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்துவதும் ;

(f) ஜனன மரணங்களை ரெஜிஸ்டர் செய்வது ;

(g) பவுண்டுகள் (கால்நடைகளை அடைத்துவைக்கும் தொட்டிகள்) விஷயமாய் மேல்விசாரணை புரிவது ;

(h) கிராமப் பாதுகாப்பு ;

(i) விவசாயத்தையும் விவசாயத்துக்கு உதவிபுரியும் கால்நடைகளையும் அபிவிருத்திசெய்வது ;

(j) குடிசைக் கைத்தொழில்களை விருத்தி செய்வதும் அவைகள் விஷயமாய் உற்சாகம் ஏற்படுத்துவதும்;

(k) (எலிமென்டரி) மூலாதார பாடசாலைகளை ஏற்படுத்துவதும் நடத்திவருவதும்;

(l) கிராம டிஸ்பென்ஸரிகளை ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும்;

(m) அதன் உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் க்ராட்யூடி என்னும் நன்கொடைத் தொகைகள் கொடுப்பது; மேலும்,

(n) 1 B, 1 C விதிகளில் கண்ட பகுதிகளில் எதிலும் குறிப்பிட்டுச் சேர்க்கப்பட்டிராதவைகளாய், கிராமவாசிகளின் க்ஷேமத்தையாவது தேகாரோக்கியத்தையாவது சுகத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனுகுணமாயிருக்கும் பொதுஜன உபயோகத்துக்கடுத்த இதர சகல ஏற்பாடுகள்.

தாலூகா போர்டுகளின்செலவுகள்.

1-B. (1) யாதொரு தாலூகா போர்டார் அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் தாலூகாவின் ஆவசியகங்களை நிறைவேற்றும் பொருட்டு தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாட்டைச் செய்வதற்கு அதிகாரமுடையவர்களாவார்கள்; அவை யாவன:

(a) தாலூகா பாட்டைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்; அப்படிப்பட்ட பாட்டைகளில் சகல வாராவதிகள், கல்வர்ட்டுகள், பாட்டை அணைகள், மேட்டுப்பாதைகள் ஆகிய இவைகளை ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்;

(b) ஸர்க்கிலில், தாலூகா சத்திரங்களாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சத்திரங்களை ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும்;

(c) 5-A விதியைச் சேர்ந்த (11) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சகாயத்தொகை எந்த கிராமங்களில் தாலூகா போர்டாரால் கொடுக்கப்படுகிறதோ அந்த கிராமங்களைத் தவிர இதர இடங்களிலே மூலாதார பாடசாலைகளை ஏற்படுத்துவதும் நடத்தி வருவதும்;

(d) தாலூகா புஸ்தகசாலைகளாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் புஸ்தகசாலைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்;

(e) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளாகவோ டிஸ்ட்ரிக்ட் டிஸ்பென்ஸரிகளாகவோ கிராம டிஸ்பென்ஸரிகளாகவோ தரம் பிரிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்ஸரிகளுமாயிராத இதர ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்ஸரிகளையும் ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும்;

(f) 1-C விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட (f), (g) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிட்டிருக்கும் அளவின்படிக்கன்றி மற்றப்படி அம்மை குத்துவது;

(g) தாலூகா மார்க்கெட்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் பொதுவான மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும்;

(h) தாலூகா சந்தைகளாகவும் உற்சவங்களாகவும் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சந்தைகள் விஷயமாயும் உற்சவங்கள் விஷயமாயும் மேல்விசாரணை புரிவது; மேலும்,

(i) தாலூகாவிலுள்ள பஞ்சாயத்துகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவது.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டு, தாலூகா போர்டார் அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் தாலூகாவின் ஆவசியகங்களை நிறைவேற்றும்பொருட்டு தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாட்டைச் செய்வதற்குங்கூட அதிகாரமுடையவர்களாவார்கள் ; அவையாவன :—

(a) தாலூகா பாட்டைகளின் ஓரங்களில் மரங்களை நடுவதும் அவைகளைப் பாதுகாத்துவருவதும் ;

(b) தாலூகா போர்டைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் க்ராட்யூடி என்னும் நன்கொடைத்தொகைகள் கொடுப்பது ;

(c) 1-A, 1-C விதிகளில் கண்ட பகுதிகளில் எதிலும் குறிப்பிட்டுச் சேர்க்கப்பட்டிராதவைகளாய், தாலூகா வாசிகளின் க்ஷேமத்தையாவது தேகாரோக்கியத்தையாவது சுகத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனுகுணமாயிருக்கும் பொதுஜன உபயோகத்துக்கடுத்த இதர சகல ஏற்பாடுகள் ; மேலும்,

(d) (1) குறிப்பிட்ட உபவிதியிலும் இந்த உபவிதியைச் சேர்ந்த (a) முதல் (c) வரையிலுள்ள பகுதிகளிலும் சொல்லப்பட்டவைகளைப்போன்ற காரியங்களுக்காக உதவி செய்யும்பொருட்டு இதர லோகல் போர்டுகளுக்கும் மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் தனி நபர்கள் அல்லது சங்கங்களுக்கும் சகாயத் தொகைகள் கொடுப்பது.

ஜில்லா போர்டுகளின் செலவுகள்.

1-C. (1) யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டார் அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் டிஸ்ட்ரிக்டின் ஆவசியகங்களை நிறைவேற்றும் பொருட்டு தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாட்டைச் செய்வதற்கு அதிகாரமுடையவர்களாவார்கள் ; அவையாவன :—

(a) சகல டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ; அப்படிப்பட்ட பாட்டைகளில் சகல வாராவதிகளையும் கல்வர்ட்டுகளையும் பாட்டை அணைகளையும் மேட்டுப்பாதைகளையும் ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(b) டிஸட்ரிக்டில் உள்ள சகல பொதுவான பாட்டைகளிலும், பிரயாணிகள் தங்குவதற்கான சகல பங்களாக்களையும் பிரயாணிகள் தங்கும் சகல இடங்களையும் ஏற்படுத்துவதும் பராமரித்துவருதும் ;

(c) டிஸ்ட்ரிக்ட் சத்திரங்களாக தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சத்திரங்களை டிஸ்ட்ரிக்டில் ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும் ;

(d) மத்தியதர பாடசாலைகளையும் குறித்த காலங்களில் கூடும் பாடசாலைகளையும் தொழிற் கல்வி போதிக்கும் அல்லது கைத்தொழில் பாடசாலைகளையும் வித்தியார்த்திகளுக்காக ஹாஸ்டெல்களையும் ஏற்படுத்துவதும் நடத்திவருவதும் ;

(e) டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸரும் அவருடைய ஆபிஸ் சிப்பந்தியும் ;

(f) (ரிஸெர்வ் இருப்பு சிப்பந்தியாயுள்ள வைத்திய உத்தியோகஸ்தர்கள், (நர்ஸுகள்) தாதிகள், மருத்துவச்சிகள், அம்மை குத்துகிறவர்கள் ஆகிய இவர்கள் உட்பட, டிஸ்ட்ரிக்ட் மொத்தத்தின் தேவைகளுக்கு உபயோகமாயுள்ள பொதுஜன தேகாரோக்கிய சம்பந்தமான சகல பிரதான சிப்பந்திகள் ;

(g) நரஸுகளையும், மருத்துவச்சிகளையும், தாதிகளையும் அம்மை குத்துகிறவர்களையும் பழக்குவது ;

(h) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளாகவும் டிஸ்ட்ரிக்ட் டிஸ்பென்ஸரிகளாகவும் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்ஸரிகளையும் டிஸ்ட்ரிக்டில் ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும் ; தாலூகா போர்டார் செய்யாத சகலவிதமான வைத்திய சகாயம் ;

(i) பெருவாரி வியாதிகளைத் தடுப்பதற்கும் சொஸ்தப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் ;

(j) டிஸ்ட்ரிக்டில் மிருக வைத்திய ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்ஸரிகளையும் ஸ்தாபிப்பதும் பராமரித்து வருவதும் ; மேலும்,

(k) பாதுகாக்கப்பட்ட ஜல சர்ப்பரா.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டு, டிஸ்ட்ரிக்ட் போர்டார் - அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் டிஸ்ட்ரிக்டின் ஆவசியகங்களை நிறைவேற்றும்பொருட்டு தங்களுக்குத் தகுதியாக தோற்றும் ஏற்பாட்டைச் செய்வதற்குங்கூட அதிகாரமுடையவர்களாவார்கள் ; அவையாவன :—

(a) சகல டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளின் ஓரங்களிலும் மரங்களை நடுவதும் அவைகளைப் பாதுகாத்துவருவதும் ;

(b) இருப்புப் பாதைகள், டிராம்வேக்கள், ரோப்வே என்னும் வடத்தைக்கொண்டு அமைக்கப்பட்ட பாதைகள், பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகும் மோடார் ஆம்னிபஸ் என்னும் வண்டிகள், ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மனிதர்களையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு போவதற்கான இதர சாதனங்கள் ஆகிய இவைகளை ஏற்படுத்துவதும், அவைகள் விஷயமாய் வேலை செய்துவருவதும் ;

(c) டிஸ்ட்ரிக்ட் போர்ட்டை சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் க்ராட்யூடி என்னும் நன்கொடைத் தொகைகள் கொடுப்பது.

(d) 1-A, 1-B விதிகளில் கண்ட பகுதிகளில் எதிலும் குறிப்பிட்டுச் சேர்க்கப்பட்டிராதவைகளாய், டிஸ்ட்ரிக்டில் வசிப்பவர்களின் க்ஷேமத்தையாவது தேகாரோக்கியத்தையாவது சுகத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனுகுணமாயிருக்கும் பொதுஜன உபயோகத்துக்கடுத்த இதர சகல ஏற்பாடுகள் ; மேலும்,

(e) (1) குறிப்பிட்ட உபவிதியும் இந்த உபவிதியைச் சேர்ந்த (a) முதல் (d) வரையிலுள்ள பகுதிகளிலும் சொல்லப்பட்டவைகளைப்போன்ற காரியங்களுக்காக உதவி செய்யும்பொருட்டு இதர லோகல் போர்டுகளுக்கும் முனிசிபல் கௌன்சில்களுக்கும், தனி நபர்களுக்கும் சகாயத்தொகைகள் கொடுப்பது.

செலவுகளைப் பற்றி லோகல் கவர்ன் மெண்ட்.

1-D. (1) (a) பரிவார சிப்பந்திக்காகவும் இதர சிப்பந்திக்காகவும்,

(b) ப்ரெஸிடென்டும் வைஸ்-ப்ரெஸிடென்டும் தங்களுடைய உத்தியோக சம்பந்தமான அலுவல்களைச் செய்யும்போது செய்த பிரயாணங்களுக்காகவும்

லோகல் போர்டார் இன்ன தொகைக்கு மேல் செலவு செய்யக்கூடாதென்பது சம்பந்தமாய் விதிகள் செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் உண்டு.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிபின்படி செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு யாதொரு லோகல் போர்டார்-லோகல் போர்ட் பரிபாலனத்துக்கு அவசியமான அல்லது சம்பந்தப்பட்ட எந்த செலவையும் செய்யலாம்.

செலவு எழுதப் படுவது.

கிராம, தாலூகா வேண்டும்.

2. மேலே சொல்லப்பட்டவைகளல்லாத வேறே சகல செலவுகளும் பஞ்சாயத்துகள், தாலுகா போர்டுகள் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆகிய இவைகளில் எவற்றின் நன்மையை உத்தேசித்து செய்யப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்து அவை அல்லது டிஸ்ட்ரிக்ட் பண்டுகளின் செலவுகளாக எழுதப்பட

ரோட்டு முதலியவைகளை இனம் பிரிப்பது.

3. (1) பாட்டைகளை டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளாகவும், தாலூகா பாட்டைகளாகவும், சத்திரங்களை டிஸ்ட்ரிக்ட் சத்திரங்களாகவும் தாலூகா சத்திரங்களாகவும், ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்ஸரிகளையும் டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளாகவும் டிஸ்ட்ரிக்ட் டிஸ்பென்ஸரிகளாகவும் கிராம டிஸ்பென்ஸரிகளாகவும் தரம் பிரிப்பதற்கான பிரேரேபனைகளை, டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், தாலுகா போர்டுகள் ஆகிய இவ்விரண்டின் பிரதிநிதிகளும் நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியாபரி மாணப்படியும் மாதிரியாகவும் அடங்கியுள்ள ஒரு கம்மிட்டியார் தயார் செய்ய வேண்டும்; ஷை பிரேரேபனைகள் விஷயமாய் ஒவ்வொரு தாலூகா போர்டாரும் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு நியாயமான அவகாசம் பெற்ற பிறகு, அவைகள் டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் ஜாரி செய்யப்படவேண்டும்.

(2) புஸ்தகசாலைகளைத் தாலூகா புஸ்தகசாலைகளாகவும், மார்க்கெட்டுகளைத் தாலூகா மார்க்கெட்டுகளாகவும், சந்தைகளையும் உற்சவங்களையும் தாலூகா சந்தைகளாகவும், தாலூகா உற்சவங்களாகவும் தரம் பிரிப்பதற்கான பிரேரேபனைகளைத் தாலூகா போர்டார் தயார் செய்யவேண்டும்; ஷை பிரேரேபனைகள் விஷயமாய் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பஞ்சயத்தும் தன்னுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு நியாயமான அவகாசம் பெற்ற பிறகு, அவைகள் டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் ஜாரி செய்யப்படவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உபவிதியின்படியாவது (2) குறிப்பிட்ட உபவிதியின்படியாவது டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் ஜாரி செய்யப்பட்ட யாதொரு தரப் பிரிவினையைத் திருத்தியமைப்பதற்குப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் உண்டு.

கொண்டாட்டத்திற்கு பொருள் உதவி செய்வது.

4. பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியைப்பெற்று, யாதொரு லோகல் போர்டார்—

(1) தங்களுடைய விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேச விஸ்தீர்ணத்தில் நடக்கும் யாதொரு பொதுஜன காட்சிக்காவது சடங்குக்காவது கொண்டாட்டத்துக்காவது பொருளுதவி செய்யலாம்;

(2) யாதொரு தர்ம நிதிக்காகிலும், ஏழைகளுக்கு சகாயம் செய்வதற்காகவாவது வியாதியஸ்தர்கள் அல்லது பலஹீனர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காகவாவது வியாதியஸ்தர்களையோ பலஹீனர்களையோ வரவேற்று ஆதரிப்பதற்காகவாவது வியாதியின் காரணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் நிதிக்காகிலும் பொருளுதவி செய்யலாம்; மேலும்,

(3) வேறே எவையேனும் விசேஷமான செலவுகள் செய்யலாம்.

குறிப்பு.

விதி 4. கனம் மந்திரிகள்.—கனம் மந்திரிகளை வரவழைப்பதற்கும் அவர்களுக்காகவும் லோகல் போர்டின் பணத்தை செலவிடக்கூடாதென்று போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. [இ. பு. ப 691]

வரவுகள்.

லோகல் போர்டு களின் வருமானம்.

5. முறையே கிராம, தாலூகா, டிஸ்ட்ரிக்ட் பண்டுகளுக்கு இந்த ஆக்டின்படி வரவு வைக்கவேண்டிய வருமானங்கள் அடியிற்கண்டவைகளாகும் :—

A.—கிராம பண்டுகள்.

(1) 78-வது விதியின்படி கிராமத்தில் விதிக்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியில் ஆறில் ஒரு பாகம்.

(2) 93-வது பிரிவின்படி கிராமத்தில் விதிக்கப்படும் தொழில் வரி.

(3) 98-வது பிரிவின்படி கிராமத்தில் விதிக்கப்படும் வீட்டு வரி.

(4) 75-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கிராமத்தில் விதிக்கப்படும் வரி அல்லது வரிகள்.

(5) யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பமானது தாலூகா உற்சவமாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் யாதொரு உற்சவமாக இருந்தாலன்றி மற்றப்படி, 110-வது பிரிவின்படி கிராமத்தில் யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரி.

(6) இந்த ஆக்டின்படி பஞ்சாயத்தால் பிறப்பிக்கப்படும் லைஸென்ஸுகளுக்கும் கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(7) கிராமத்தில், தாலூகா மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்டிராத பொதுவான மார்க்கெட்டுகளில் விதிக்கப்படும் கட்டணங்கள்.

(8) தாலூகா மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் கிராமத்திலுள்ள மார்க்கெட்டுகள் விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் வீதப்படி தாலூகா போர்டார் கொடுக்கும் சகாயத்தொகைகள்.

(9) கிராம பண்டுகளிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது பராமரிக்கப்பட்டுவரும் பொதுவான இறங்குமிடங்கள், தங்குமிடங்கள், பாரவண்டி நிற்கும் இடங்கள், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள் ஆகிய இவைகளை உபயோகிப்பதற்காகக் கட்டணங்கள்; டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா சத்திரங்களாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சத்திரங்களாயிராத இதர சத்திரங்களை உபயோகிப்பதற்காகக் கட்டணங்களும், கிராமத்திலுள்ள கிராம நத்தங்கள், பாட்டைகள், (பிரேதங்களைப்) புதைப்பதற்கும் தகனஞ்செய்வதற்குமான இடங்கள் ஆகிய இவைகளையும் இவைகளைப்போன்ற இதர பொது இடங்கள் அல்லது அவைகளின் பாகங்களையும் சிறிதுகாலத்துக்கு அனுபவிப்பதற்கான கட்டணங்களும்.

(10) பஞ்சாயத்தால் நடத்தப்படும் பாடசாலைகளுக்குக் கொடுக்கப்படும் க்ரான்ட்-இன்-எய்ட் என்னும் சகாயத்தொகைகள் உட்பட அதன் பாடசாலைகளின் வரவுகள்.

(11) கிராமத்தில் மூலாதார பாடசாலைகளை ஏற்படுத்துவதற்காகவும் நடத்தி வருவதற்காகவும், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் வீதத்தின்படி தாலூகா போர்டாரால் கொடுக்கப்படும் சகாயத்தொகை ஏதேனும் இருந்தால், அது.

(12) பஞ்சாயத்தின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் இனும்களிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(13) கிராம பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டுவரும் அல்லது திரவிய சகாயம் செய்யப்படும் ஏவையேனும் ஸ்தாபனங்களுக்காவது ஊழியங்களுக்காவது உதவியாக கவர்ன்மெண்டார், இதர லோகல் போர்டுகள், மியுனிஸிபாலிடிகள்,

இதர பிரதேச அதிகார சபைகள், தனி நபர்கள் ஆகிய இவர்கள் கொடுக்கும் சகாயத்தொகைகள்.

(14) ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் வருஷத்திய ஆக்டுக்கு விரோதமாக கிராமத்தில் அசங்கியம் அல்லது சங்கடங்களும் குற்றங்களும் செய்யப்படும்பட்சத்தில், அவைகளுக்காக விதிக்கப்படும் அபராதங்கள்.

(15) இந்த ஆக்டின்படி பஞ்சாயத்தாலாவது அது சொல்லுவதன்மேலாவது அதற்காகவாவது விதிக்கப்படும் அபராதங்களும் தண்டத்தொகைகளும்.

(16) பெருக்கிச் சேர்க்கும் குப்பை, கருவிகளும், தளவாடங்களும், பழைய சாமான்களும், வஸ்துக்களும், மரங்கள், கிராமத்தில் டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா பாட்டைகளாயிராத இதர பாட்டைகளுக்குச் சம்பந்தப்பட்ட சாலை மரங்களின் உற்பத்தி ஆகிய இவைகளின் விற்றுமுதல்.

(17) கிராமத்தில் உள்ள ஓடத்துறைகளிலிருந்தும் மீன்பிடி துறைகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(18) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(19) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(20) பஞ்சாயத்தைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளின் விற்று முதலிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(21) சுதந்தரித்துக் கேட்கப்படாத டேவனித் தொகைகளும் இதர பறிமுதல் தொகைகளும்.

B.—தாலூகா பண்டுகள்.

(1) 78-வது பிரிவின்படி தாலூகாவில் விதிக்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியில் மூன்றில் ஒரு பாகம்.

(2) யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பமானது தாலூகா உற்சவமாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் யாதொரு உற்சவமாக இருக்கும் பட்சத்தில், தாலூகாவில் உள்ள யாதொரு கிராமத்தின் விஷயமாய் யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரி.

(3) இந்த ஆக்டின்படி தாலூகா போர்டாரால் பிறப்பிக்கப்படும் லைஸென்ஸுகளுக்கும் கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(4) தாலூகா மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் தாலூகாவிலுள்ள பொதுவான மார்க்கெட்டுகளில் விதிக்கப்படும் கட்டணங்களிலிருந்து 5-A விதியைச் சேர்ந்த (8) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சகாயத்தொகையைக் கழித்துவிட்ட பிறகு மீதியாயிருக்கும் கட்டணங்கள்.

(5) தாலூகாவில், தாலூகா சத்திரங்களாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சத்திரங்களை உபயோகிப்பதற்கான கட்டணங்கள்.

(6) தாலூகா போர்டாரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்குக் கொடுக்கப்படும் க்ரான்ட்-இன்-எய்ட் என்னும் சகாயத்தொகைகள் உட்பட அந்த பாடசாலையின் வரவுகள்.

(7) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளாகவும் டிஸ்ட்ரிக்ட் டிஸ்பென்ஸரிகளாகவும் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்ஸரிகளுமாயிராத

தாலூகாவிலுள்ள இதர ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள் ஆகிய இவைகளின் வரவுகள்.

(8) தாலூகா போர்டாரின் நிர்வாகத்தின்கீழிருக்கும் இனும்களிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(9) தாலூகா பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டுவரும் அல்லது திரவிய சகாயம் செய்யப்படும் எவையேனும் ஸ்தாபனங்களுக்காவது ஊழியங்களுக்காவது உதவியாக கவர்ன்மெண்டார், இதர லோகல் போர்டுகள், மியுனிஸிபாலிடிகள், இதர பிரதேச அதிகார சபைகள், தனி நபர்கள் ஆகிய இவர்கள் கொடுக்கும் சகாயத்தொகைகள்.

(10) இந்த ஆக்டின்படி தாலூகா போர்டாராலாவது அவர்கள் சொல்லுவதன்மேலாவது அவர்களுக்காகவாவது விதிக்கப்படும் அபராதங்களும், தண்டத்தொகைகளும்.

(11) பெருக்கிச் சேர்க்கும் குப்பை, கருவிகளும், தளவாடங்களும், பழைய சாமான்களும் வஸ்துக்களும், மரங்கள், சகல தாலூகா பாட்டைகளுக்கும் சம்பந்தப்பட்ட சாலைமரங்களின் உற்பத்தி ஆகிய இவைகளின் விற்றுமுதல்.

(12) தாலூகா போர்டைச் சேர்ந்த ஓடத்துறைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(13) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(14) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(15) தாலூகா போர்டைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளின் விற்றுமுதலிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(16) சுதந்தரித்துக் கேட்கப்படாத டேவனித் தொகைகளும் இதர பறிமுதல் தொகைகளும்.

C.—டிஸ்ட்ரிக்ட் பண்டுகள்.

(1) 78-வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்டில் விதிக்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியில் மூன்றில் ஒரு பாகம்.

(2) [1931-ஞு த்திய மதராசு மோட்டார்களின்மேல் வரிவிதிப்பு சட்டத்தால் ரத்து செய்யப்பட்டது.]

(3) இந்த ஆக்டின்படி டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் பிறப்பிக்கப்படும் லைஸென்ஸுகளுக்கும் கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(4) டிஸ்ட்ரிக்டில் உள்ள பிரயாணிகள் தங்குவதற்கான பங்களாக்களையும் பிரயாணிகள் தங்கும் இடங்களையும் உபயோகித்துக்கொள்வதற்காக கட்டணங்கள்.

(5) டிஸ்ட்ரிக்டில், டிஸ்ட்ரிக்ட் சத்திரங்களாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் சத்திரங்களை உபயோகித்துக்கொள்வதற்காக கட்டணங்கள்.

(6) டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்குக் கொடுக்கப்படும் க்ரான்ட்-இன்-எய்ட் என்னும் சகாயத்தொகைகள் உட்பட அந்த பாடசாலைகளின் வரவுகள்.

(7) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளாகவும் டிஸ்ட்ரிக்ட் டிஸ்பென்ஸரிகளாகவும் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள் ஆகிய இவைகளின் வரவுகள்.

(8) டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் நடத்தப்படும் மிருக வைத்திய ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள் ஆகிய இவைகளின் வரவுகள்.

(9) டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் நிர்வாகத்தின்கீழிருக்கும் இனும்களிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(10) டிஸ்ட்ரிக்ட் பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டுவரும் அல்லது திரவியசகாயம் செய்யப்படும் எவையேனும் ஸ்தாபனங்களுக்காவது ஊழியங்களுக்காவது உதவியாக கவர்ன்மெண்டார், இதர லோகல் போர்டுகள், மியுனிஸிபாலிடிகள், இதர பிரதேச அதிகார சபைகள், தனி நபர்கள் ஆகிய இவர்கள் கொடுக்கும் சகாயத்தொகைகள்.

(11) இந்த ஆக்டின்படி டிஸ்ட்ரிக்ட் போர்டாராலாவது அவர்கள் சொல்லுவதன்மேலாவது அவர்களுக்காகவது விதிக்கப்படும் அபராதங்களும் தண்டத்தொகைகளும்.

(12) பெருக்கிச் சேர்க்கும் குப்பை, கருவிகளும், தளவாடங்களும், பழைய சாமான்களும் வஸ்துக்களும், மரங்கள், சகல டிஸ்ட்ரிக்ட் பாட்டைகளுக்கும் சம்பந்தப்பட்ட சாலை மரங்களின் உற்பத்தி ஆகிய இவைகளின் விற்றுமுதல்.

(13) டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்த ஓடத்துறைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(14) டிஸ்ட்ரிக்ட் போர்டாரால் நடத்தப்படும் இருப்புப் பாதைகள், ட்ராம்வேக்கள், ரோப்வே என்னும் வடத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட பாதைகள், பிரயாணிகளை ஏற்றிக்கொண்டுபோகும் மோடார் ஆம்னிபஸ் என்னும் வண்டிகள், ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மனிதர்களையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டுபோவதற்கான இதர சாதனங்கள் ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(15) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(16) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(17) டிஸ்ட்ரிக்ட் போர்டைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளின் விற்று முதலிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(18) லோகல் பண்ட் பென்ஷன்களுக்காகக் கொடுக்கப்படும் சகாயத்தொகைகள்.

(19) சுதந்தரித்துக் கேட்கப்படாத டேவணித் தொகைகளும் இதர பறிமுதல் தொகைகளும்.

குறிப்பு.

விதி **5 A (1), B (1), C (1)**.—கிராம நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய திரவியத்திற்காக இதுபரியந்தம் சரியாய் நிர்ணயிக்கப்படாத லாண்ட் ஸெஸ் இப்போது கட்டாய ஸெஸ்ஸாக ஆக்கப்பட்டது; 18 பைகளுக்குமேல் லாண்ட் ஸெஸ் அதிகப்படுத்துவது கஷ்டமாயிருக்குமென்று அபிப்பிராயப்பட்டு அதை கீழ்கண்டவாறு பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஜில்லா போர்ட்	...	...	... 6 பை.
தாலூகா போர்ட்	...	...	... 6 ,,
பஞ்சாயத்து	...	...	... 3 ,,

மிகுதி மூன்று பையை கிராம நிர்மாண திட்டத்திற்காக ஜில்லா போர்ட் பிரசிடென்ட் அக்கிராசனராகவும், தாலூகா போர்டுகள் பிரசிடென்டுகள் மெம்பர்களாகவும் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

லோகல் போர்டுகளுக்கு வரவு வைக்கவேண்டும்.

6. மேலே சொல்லப்பட்டவைகளல்லாத வேறே சகல வரவுகளும், பஞ்சாயத்துகள், தாலூகா அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டார்கள் பார்த்துவரும் ஊழியங்களிலிருந்து கிடைத்திருந்தாலும் அவைகளுக்கு செலவு செய்வதற்காக வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் அதை அனுசரித்து அவைகளை கிராம, தாலூகா அல்லது டிஸ்ட்ரிக்ட் பண்டுகளுக்கு வரவுவைக்கவேண்டும்.

வருமானத்தைப் பற்றி பிரதேச கவர்ன்மெண்டார்.

7. பிரதேச கவர்ன்மெண்டார்—

(a) டிஸ்ட்ரிக்டுகளில் வசூலிக்கப்படும் கலால் வருமானத்தில் ஒரு பாகத்தை வருஷா வருஷம் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு ட்ரான்ஸ்பர் செய்யலாம்; மேலும்,

(b) சகல லோகல் போர்டுகளையுமாவது அவைகளில் எதையாவது சேர்ந்த நிதிகளுக்குச் சகாயமாக தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி குறித்த காலங்களுக்கு ஒரு முறையாகவாவது ஒரே தடவையாகவாவது இதிர சகாயத்தொகைகள் கொடுக்கலாம்.

குறிப்பு.

விதி 7.—மதுபானத்தினின்றும், லாகிரி வஸ்துக்களின் உபயோகத்தினின்றும் கிடைக்கும் வருமானத்தில் சிறு தொகை ஜில்லா போர்டுக்குக் கொடுக்கப்படுகின்றது. இது காரணம் பற்றி லோகல் போர்டுகள், மானிடரின் பொருளையும், உயிரையும் கொள்ளை கொள்ளும் மதுபானத்தை ஒழிக்க பிரயத்தினப்படாது வருமானத்தை உத்தேசித்து இந்த அநீதிக்கு ஆளாயிருக்கிறார்கள். இவர்கள் மனிதருடைய திரேக ஆரோக்கியத்தையும் ஆன்ம சத்தியையும் கவனியாது பணம் வந்தால் போதுமென இருப்பது உசிதமாகாது. தங்களது வருமானத்தை கவனியாது லோகல் போர்டுகள் மதுபானத்தை அறவேயொழிக்க முயற்சித்து ஒழிப்பார்களேயானால் அவர்கள் பொது ஜனங்களுக்கு பேருபகாரம் செய்தவர்களாவார்கள்.

பொது.

லோகல் பண்டை வைப்பது.

8. (1) டிஸ்ட்ரிக்ட் போர்டாராலாவது தாலூகா போர்டாராலாவது பெற்றுக்கொள்ளப்படும் சகல பணத்தையும் அதிசமீபத்திலுள்ள கவர்ன்மெண்ட் ட்ரெஷரியில் (கஜானாவில்) வைத்துவைக்கவேண்டும்; மேலும், பஞ்சாயத்தால் பெற்றுக்கொள்ளப்படும் சகல பணத்தையும் அதிசமீபத்திலுள்ள கவர்ன்மெண்ட் ட்ரெஷரியிலாவது அதிசமீபத்திலுள்ள தபாலாபிஸ் ஸேவிங்ஸ் பாங்கியிலாவது வைத்துவைக்க வேண்டும்.

(2) (a) டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டார் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியுடனும், பஞ்சாயத்து டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியுடனும்—

(i) தங்களுடைய பணத்தை பாங்கியிலாவது கூட்டுறவு சங்கத்திலாவது வைத்துவைக்கலாம்; மேலும்,

(ii) தக்ஷணமே உபயோகிக்கப்படுவதற்கு வேண்டியிராத எவையேனும் தொகைகளைப் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கக்கூடிய எந்த மாதிரியாகவாவது வட்டிக்குப் போட்டுவைக்கலாம்.

(b) யாதொரு பஞ்சாயத்தானது—டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியுடனும் பத்திரமாயிருப்பதைக்குறித்தாகிலும் மற்றப்படியாகிலும் டிஸ்ட்

ரிக்ட் போர்டார் ஏற்படுத்தக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும், தன்னுடைய பணத்தைப் பிரெஸிடென்டின் வசத்திலாவது கௌரவமுள்ள வேறே யாதொரு நபர் வசத்திலாவது வைத்துவைக்கலாம்.

லோகல் பண்டை வாங்குவது.

9. (1) லோகல் பண்டிலிருந்து பணம் வாங்குவதற்கான சகல உத்தரவுகளிலும் அல்லது செக்குகளிலும்—

(a) ப்ரெஸிடென்டாவது

(b) (i) டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், தாலூகா போர்டுகள் ஆகிய இவைகளின் விஷயத்தில், ப்ரெஸிடென்டினுல் இது விஷயத்தில் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது

(ii) பஞ்சாயத்துகளின் விஷயத்தில், மேலே சொன்னபடி அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு பஞ்சாயத்துதாரராவது

(2) லோகல் பண்ட் எதில் அல்லது யாரிடத்தில் வைத்துவைக்கப்பட்டிருக்கிறதோ அந்த கஜானுவாவது பாங்காவது கூட்டுறவு சங்கமாவது நபராவது—அந்த பண்டிலிருந்து பணம் வாங்குவதற்காக (1) குறிப்பிட்ட உபவிதியில் சொல்லியிருக்கிறபடி கையெழுத்து செய்திருக்கிற சகல உத்தரவுகள் அல்லது செக்குகளுக்கும் லோகல் போர்டுக்காக வரவு வைத்திருக்கிற நிதிகளிலிருந்து கொடுக்கக்கூடியமட்டில் பணம் கொடுக்கவேண்டும்.

(3) லோகல் போர்டார் எழுத்து மூலமாய் முன்னதாக அதிகாரம் கொடுத்திருந்தால், லோகல் போர்டாருக்காக பிரதேச கவர்ன்மெண்டார் செய்திருக்கும் யாதொரு செலவை ஷை கஜானுவாவது பாங்காவது கூட்டுறவு சங்கமாவது நபராவது அப்படிப்பட்ட உத்தரவாகிலும் செக்காகிலும் இல்லாமலே அந்த லோகல் போர்டின் நிதியிலிருந்து உடனே கொடுக்கலாம்.

6-வது ஷெட்யூல்.

அபாயகரமான வியாதிகளின் ஜாபிதா.

(130-வது பிரிவைப் பார்க்கவும்.)

அபாயகரமான இன்புளுவன்சல் நிமோனியா.
ஆன்த்ராக்ஸ் என்னும் அடைப்பான்.
சின்னம்மை.
வாந்திபேதி.
(டிப்தீரியா) கண்டக்காப்பான் என்னும் தொத்துவியாதி.
என்டெரிக் என்னும் குடல் சம்பந்தமான சுரம்.
தகிரகோளங்கள் சம்பந்தமாய்க் குதிரைகளுக்குக் காணும் வியாதி.
குஷ்டம்.
(ப்ளேக்) மஹாமாரி.
வைசூரி.
க்ஷயம்.

7-வது ஷெட்யூல்.

எந்தக் காரியங்களுக்காக வளவை லைஸென்ஸில்லாமல் உபயோகிக்கக்கூடாதோ அந்த காரியங்கள்.

(193-வது பிரிவைப் பார்க்கவும்.)

(a) கர்ப்பூரத்தை வேகவைப்பது ;

(b) மாட்டுக் கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக்குவது ;

(c) கழிகடை வஸ்துக்கள், இரத்தம், எலும்பு, மாடு முதலியவைகளின் தோல், மீன் அல்லது ஆடு முதலியவைகளின் தோல்களைச் சேர்த்து வைப்பது அல்லது அவைகள் விஷயமாய் வேறே விதமாகப் பிரவர்த்திப்பது ;

(d) மாடு முதலியவைகளின் தோலையும் ஆடு மாடு முதலியவைகளின் தோலையும் பதப்படுத்துவது ;

(e) கம்பளி நூல் அல்லது மயிரைச் சுத்தஞ் செய்வது அல்லது உலர்த்துவது ;

(f) மீன் எண்ணெய் செய்வது ;

(g) சவர்க்காரம் செய்வது ;

(h) சவ்வரிசையை உற்பத்தி செய்வது அல்லது காய்ச்சி வடிப்பது ; செயற்கை எரு தயார் செய்வது ; சர்க்கரை செய்வது அல்லது அதைச் சுத்தஞ் செய்வது ; கற்கண்டு செய்வது ;

(i) வெடிமருந்து அல்லது பாணவேடிக்கை வஸ்துக்கள் செய்வது ;

(j) செங்கல், ஓடு, மண்பாண்டம் அல்லது சுண்ணும்பு சுடுவது ;

(k) யாதொரு ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை, சிற்றுண்டியும், போஜனமும் வழங்கப்படும் இடம், காபி ஹோட்டல், போர்டிங் ஹௌஸ் என்னும் போஜனவிடுதி அல்லது (பொதுஜனங்களின் அல்லது அங்கீகாரமான மேல் விசாரணையின் கீழுள்ள மாணுக்கர்களுக்கான ஹாஸ்டலல்லாத வேறே) தங்குவதற்கான இடத்தை வைத்திருப்பது ;

(l) பனிக்கட்டியையாவது காற்றுபுகட்டிய பானவகைகளாவது செய்வது ;

(m) வெட்டுமரத்தை விற்பது அல்லது அதை விற்பனைக்காகச் சேர்த்துவைப்பது ;

(n) வெடிக்கத்தக்க அல்லது பற்றியெரியத்தக்க எவ்வித வஸ்துவையாவது சேர்த்துவைப்பது ;

(o) அருவருப்பான அல்லது சுகக்கேடான நாற்றம் உண்டாகிற எதையாவது தயார்செய்வது ;

(p) யாதொரு விறகு அல்லது யந்திரத்தை யாதொரு கைத்தொழிலின் காரியத்துக்காக உபயோகிப்பது ; மேலும்,

(q) பொதுவாய், யாதொரு கைத்தொழில் முறையை அனுசரிக்கையில் மனிதர்களுடைய பிராணனுக்காவது தேகாரோக்கியத்துக்காவது சொத்துக்காவது கெடுதி அல்லது அபாயம் உண்டாக்கக்கூடிய யாதொன்றைச் செய்வது :

ஆனால், வெட்டுமரம், விறகு, கூரைபோடும் சாமான்கள், உலர்ந்தபுல், பச்சைப்புல், வைக்கோல், நார் அல்லது நிலக்கரியைச் சேர்த்து வைப்பதாவது நெல்லை வேகவைப்பதாவது சொந்த உபயோகத்துக்கானால், அப்படி சேர்த்து வைப்பதற்காகிலும் வேகவைப்பதற்காகிலும் லைஸென்ஸ் எதுவும் வாங்க வேண்டியதில்லை.

குறிப்பு.

(c) **சேர்த்து வைப்பது**:—வியாபாரத்துக்கு அல்லது விற்பனைக்காக சேர்த்து வைப்பது போதுமானது. (சேஷாசலம் செட்டி எ. அரசர் 18 I.C. 663). ஒரு மொத்த வியாபாரி 5 அல்லது 6 மூட்டைகளை வைத்திருப்பது சேர்த்து வைப்பதாகும். (சேஷப் பிரபு எ. அரசர் 1922 M.W.N. 79) ஏற்றுமதி செய்வதற்காக வஸ்துக்கள் சேகரிக்கப்பட்டிருப்பது சரியான உதாரணமாகும் (பப்ளிக் ப்ராஸிக்கூடர் எ. சைடலிகுட்டி அண்ட் சன்ஸ் 50 M. 752 =A.I.R. 1927 M. 624). சேர்க்கப்பட்டது சில நாட்களின் உபயோகத்திற்காக மட்டுமாதலின் சேர்ப்பிக்கப்பட்டதாகாது (அரசர் எ. வாலஸ் மாவு மில், 29 Bom. 193).

[இ. பு. ப. 697]

(d).—தோல்பதனிடுவதில் சுண்ணும்பு சுடுவது ஓர் காரியமாயினும், தோல்பதனிடுவதற்காக லைஸென்ஸ் பெற்றிருந்தாலும், சுண்ணும்பு சுடுவதற்காக தனியாய் ஒரு லைஸென்ஸ் பெறவேண்டும். (பப்ளிக் ப்ராஸிக்கூடர் எ. பாசாமியான் சாகிப், 1 Weir. 737).

(i).—1884 ஹுத்து 4-வது ஆக்டாகிய இந்திய வெடி குண்டுகள் சட்டப்படி லைஸென்ஸ் பெற்றிருந்தபோதிலும், ஒரு முனிஸிபாலிடியின் எல்லைக்குள் வெடி குண்டுகள் வைத்து கொள்ள மேற்படி ஆக்ட் 188 (g) செக்ஷன்படி முனிசிபல் லைஸென்ஸ் பெற்றுகவேண்டும். (பப்ளிக் ப்ராஸிக்கூடர் எ. கோவிந்த பிள்ளை, 1 Weir 740).

(j) **போது**.—சூளையில் கல் சுடுவதென்று இருந்தது புது ஆக்டினால், கல், ஓடு, பானை, சுண்ணும்பு முதலியவை சுடுதல் என ஆகிவிட்டது. ஒரே இடத்தில் பல சூளை போடவேண்டுமானால் வேறு வேறு லைசென்ஸ் பெறவேண்டும். ஒவ்வொரு சூளைக்கும் பிரத்தியேக இடம் தேவையானதால் தனி லைசென்ஸ் வேண்டும். (நெல்லூர் முனிசிபல் கௌன்சில் எ. சுப்பையா 1 Weir 737). 1924 ம் வருஷம் முதல் ஒரு குயவன் சூளை போடுவதற்கு லைசென்ஸ் வாங்கவில்லை என்று 1926-ம் வருஷம் பிராது தொடரப்பட்டது. 223-வது செக்ஷன்படி வருஷம் முடிந்து மூன்று மாதம் வரையில் காலவரை யாதலால் 1924, 1925 வருஷத்திற்காக குற்றம் சாட்ட முடியாதெனவும், லைசென்ஸ் பெற தவறி விட்டதற்கு 223 - வது செக்ஷன்படி தாவா தொடரவேண்டுமே தவிற 222 - வது செக்ஷன் பொருந்தாது என தீர்ப்பு கூறப்பட்டது. (53 M.L.J. Notes on Recent Cases page 41.)

காப்பி ஹோட்டல்.—காப்பி தயார் செய்து விற்கும் கடைக்கு லைசென்ஸ் பெற வேண்டியதில்லை. மனிதர்கள் வந்து உட்கார்ந்து காப்பி சாப்பிடும் இடத்திற்கு மட்டும் லைசென்ஸ்பெற வேண்டும். ஒரு முனிசிபாலிடி கொடுத்த லைஸென்ஸை அதன் சேர்மன் லைஸென்ஸின் ஷரத்துபடி இல்லை என்று நிவாரணை செய்துவிட்டு அந்த ஹோட்டல் சொந்தக்காரர் லைஸென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்ததாக குற்றம் சாட்டினால், விசாரிக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கு லைஸென்ஸ் நிவாரணை செய்யப்பட்டது நியாயமானதா என்பதை அறிய அதிகாரமுண்டு. (சிதம்பரம் முனிசிபல் கௌன்சில் எ. திருநாராயண அய்யங்கார், 51 M. 876 =A.I.R. 1928 M. 847).

(p) **யந்திரம்**.—நீராவி அல்லது மின்சார சக்தியினாலல்லாது, கையினால் வேலை செய்யப்படும் கைத்தறி யந்திரமாகாது. சிறிய தறிகளும், கைத்தொழில் சாமான்களும் லைஸென்ஸ் பெறக்கூடிய யந்திரங்களென்று சட்ட நிரூபண சபையாரின் அபிப்பிராயமல்ல. (கண்ணனூர் முனிசிபல் கௌன்சில் எ.புத்தய்ய வாலாப்பில் குளியில் ஆனந்தரான், 51 Mad. 601).

விவரணம்.—இந்த ஷெட்யூலில் இரும்பு சேகரித்து வைப்பதைப்பற்றி கூறுததால் இரும்பு சேகரிப்பது குற்றமாகாது. (ஆறுமுகசெட்டி எ. கார்பொரேஷன், மதராஸ், 4 M.L.T. 321). நொய் சேகரித்து வைப்பதற்கு லைஸென்ஸ் தேவையில்லை (முனிஸிபல் கௌன்சில், தூத்துக்குடி எ. ஷண்முக மூப்பனர், A.I.R. 1926 M. 251).

[இ. பு. ப. 700]

8-வது ஷெட்யூல்.

சாதாரண அபராதங்கள்.

(207-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு.	உட்பிரிவு அல்லது பகுதி.	விஷயம்	விதிக்கத்தக்க அபராதம்
(1)	(2)	(3)	(4)
97	...	தொழில், கைவினை முதலியவை செய்பவரின் ஜாபிதா சவதரிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் சொந்தக்காரர் அல்லது அனுபோகதர்ர் நடக்கத்தவறுவது.	நூறு ரூபாய்.
102	(1)	கட்டிடம் கட்டுவது முதலியது முடிந்த பிறகு ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் அனுப்பத் தவறுவது.	ஐம்பது ரூபாய்.
122	...	யாதொரு நீரோடை முதலியதை சுத்திசெய்யும்படி யாவது கிணறு, குளம் அல்லது நீர் நிலைமை மூடி விடும்படியாவது அதற்கு அடைப்பு ஏற்படுத்தும்படி யாவது வேலி போடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	,,
123	(1)	குளம், கிணறு முதலியவைகளுக்கு வேலிபோடுவது மராமத்து செய்வது அவைகளைத் தூர்த்துவிடுவது முதலியவைகள் விஷயமாய்ச் செய்த உத்தரவின்படி நடக்கத் தவறுவது.	,,
124	(2)	பொது ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய ஜலத்தை உபயோகிக்கக்கூடாதென்று தடுத்து வெளிவிடப்பட்ட நோட்டீஸை மீறி நடப்பது.	,,
125	(a)	குடிக்கும் காரியங்களுக்காகப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும இடங்களில் ஸ்நானம் செய்வது முதலியது.	,,
125	(b)	குடிக்கும் காரியங்களுக்காகப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் அருவருப்பான யாதொரு வஸ்து முதலியதைப் போட்டுவைப்பது.	,,
125	(c)	குடிப்பதற்காவது ஸ்நானம் செய்வதற்காவது பிரத்தியேகப்படுத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்களில் வஸ்திரங்கள் தோய்ப்பது.	,,
125	(d)	இதர காரியங்களுக்காக பிரத்தியேகப்படுத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பிராணி முதலியதைக் கழுவுவது.	,,
125	(e)	யாதொரு குழி, ஜலதாரை முதலியவைகளிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதற்காவது, ஸ்நானம் செய்வதற்காவது வஸ்திரங்கள் தோய்ப்பதற்காவது பிரத்தியேகப்படுத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குள் பாயவிடுவது.	,,
129	...	அசுத்தங்களைப் பொதுவான பாட்டைகளில் போகும்படி செய்வது முதலியவை.	இருபது ரூபாய்.
129-A	...	ஜலதாரைகளை ஏற்படுத்த அல்லது மாற்றி அமைக்க அல்லது எடுத்துவிட தவறுவது.	ஐம்பது ரூபாய்.

சாதாரண அபராதங்கள்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கத்தக்க அபராதம். (4)
131	(2)	வளவுகளையாவது வஸ்துக்களையாவது சுத்திசெய்யும்படியாகிலும் அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும்படியாகிலும் செய்த உத்தாவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூபாய்.
132	(1)	வண்டி முதலியவைகளையும் வஸ்திரங்கள் முதலியவைகளையும் பிரசித்தஞ் செய்யப்பட்ட இடத்துக்குக் கொண்டுபோகத் தவறுவது.	,,
133	...	தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர் தொழில் நடத்துவது.	,,
134	(1)	வியாதி பரவுவதைத் தடுப்பதற்கு தகுந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யாமல் தொத்து வியாதி சம்பந்தத்துக்குட்பட்டவர் பொதுவான வண்டி முதலியவைகளில் பிரயாணம் செய்வது.	,,
134	(2)	தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர் தொத்து வியாதி சம்பந்தத்துக்குட்பட்டிருப்பதைத் தெரிவிக்காமலே பொதுவான வண்டி முதலியவைகளில் பிரவேசிப்பது.	,,
134	(3)	தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்டவரைப் பொதுவான வண்டி முதலியவைகளில் ஏற்றிக்கொண்டு போவது.	,,
135	...	பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக் கூடும் இடங்களை மூடிவிடத் தவறுவது.	இருநூறு ரூபாய்.
136	...	தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட குழந்தையைப் பாடசாலைக்கு அனுப்புவது.	ஐம்பது ரூபாய்.
138	...	வைசூரி கண்டிருக்கிறதென்று சங்கதி தெரிவிக்கத் தவறுவது.	,,
139	(2)	வைசூரிக்காக மருந்து குத்திக்கொண்டதிலிருந்து நாற்பது தினங்களுக்குள்ளாக ஸெர்டிபிகேட் இல்லாமல் பிரதேச விஸ்தீர்ணத்தை விட்டுப்போவது.	நூறு ரூபாய்.
140	(1)	பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான யாதொரு இடத்தை ரெஜிஸ்டர் செய்யத் தவறுவது.	,,
141	(1)	பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான யாதொரு இடத்தை லைஸென்ஸ் இல்லாமலே ஏற்படுத்துவது முதலியது அல்லது உபயோகப்படுத்துவது.	,,
144	...	குடியிருக்கும் இடத்துக்காவது குடிக்கும் ஜலம் சர்ப்பரா எந்த ஆதாரத்திலிருந்து செய்யப்படுகிறதோ அதற்காவது 100 கஜ தூரத்துக்குள் பிரேதங்களைப் புதைப்பது தகனஞ் செய்வது முதலியவை.	,,
145	....	புதைப்பதற்கான அல்லது தகனஞ் செய்வதற்கான இடத்தில் (பிரேதங்களைப்) புதைப்பதைப்பற்றியாவது தகனஞ் செய்வதைப்பற்றியாவது சங்கதி தெரிவிக்கத் தவறுவது.	இருபது ரூபாய்.

சாதாரண அபராதங்கள்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கத்தக்க அபராதம். (4)
146	(3)	யாதொரு இடத்தில் (பிரேதத்தைப்) புதைக்கவாவது, தகனஞ் செய்யவாவது மற்றப்படி ஒருவகை செய்யவாவது கூடாதென்று தடுத்திருந்தால் அங்கே பிரேதத்தைப் புதைப்பது, தகனஞ் செய்வது அல்லது மற்றப்படி ஒருவகை செய்வது.	நூறு ரூபாய்.
147	(1)	அபாயகரமான கட்டுக்கோப்புக்கு அடைப்படைக்கும்படியாகிலும் அதை எடுத்துவிடும்படியாகிலும் பத்திரப்படுத்தும்படியாகிலும் மாமத்து செய்யும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐந்நூறு ரூபாய்.
148	(1)	அபாயகரமான மரங்களை பத்திரப்படுத்தும்படியாவது அதன் கிளைகளைக் கழிக்கும்படியாவது அதை வெட்டிவிடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத தவறுவது.	ஐம்பது ரூபாய்.
149	...	கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப்படைத்து வைக்கும்படியாவது வேலிகளையும் மரங்களையும் தறிக்கும்படி அல்லது கழிக்கும்படி அல்லது வெட்டும்படியாவது சுற்றியிருக்கும் ஒரு சுவரை தாழ்த்தும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	”
150	(1)	பொதுஜன தேகாரோக்கியத்துக்காவது க்ஷேமத்துக்காவது அபாயகரமாயுள்ள குளம் அல்லது இதர இடத்தைத் தூர்த்துவிடுவது முதலியவை விஷயமாய்ச் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	”
151	(1)	லைசென்ஸ் இல்லாமல் பொதுவான பாட்டைக்குச் சமீபத்தில் கல்வெட்டி எடுப்பது முதலியவை	”
151	(2)	அபாயகரமாகக் கல்வெட்டி எடுப்பதை நிறுத்தத் தவறுவது.	நூறு ரூபாய்.
153	(1)	அசுசியான ஸ்திதியிலாவது அனாரோக்கியமான புல் பூண்டுகள் அமிதமாய் முளைத்தாவதிருக்கிற கட்டிடம் அல்லது நிலத்தை பரிஷ்கரிக்கும்படியாகிலும் சுத்தி முதலியது செய்யும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூபாய்.
153	(2)	யாதொரு கட்டிடத்துக்குச் சுண்ணாம்பு அடிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	”
157	...	யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் மேலாவது சட்டத்துக்கு விரோதமாய் சுவர்கட்டுவது அல்லது வேலி அமைப்பது முதலியது.	நூறு ரூபாய்.
158	...	கதவுகள், அடிதள ஜன்னல்கள் முதலியவைகளை லைசென்ஸில்லாமலாவது நோடீஸுக்கு விரோதமாகவாவது வெளிப்புறமாய் திறக்கும்படி விடுவது.	இருபது ரூபாய்.
159	(1)	ஆக்கிரமிப்பை எடுத்துவிடவாவது மாற்றவாவது தவறுவது.	இருநூறு ரூபாய்.

சாதாரண அபராதங்கள்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கத்தக்க அபராதம். (4)
161	(1)	சாக்கடைக்காலின்மேலாவது குப்பை கூள முதலியவைகளால் மட்டம் முதலியவை செய்யப்பட்ட நிலத்தின் மேலாவது சட்டத்துக்கு விரோதமாய்க் கட்டிடம் கட்டுவது.	இருநூறு ரூபாய்
161	(2)	அனுமதியில்லாமலாவது அனுமதியிற்கண்ட ஷரத்துக்களுக்கு விரோதமாகவாவது கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்துவிடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறு.	,,
162	...	பொதுவான பாட்டை முதலியவைகளுக்கு அடுத்திருக்கும் நிலத்திலிருந்து சப்பாத்துக்கள்ளி, மிலாறு, லான்டானு முதலியவைகளை எடுத்துவிடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூபாய்.
163	(1)	பொதுவான பாட்டையில் சட்டத்துக்கு விரோதமாய்க் குழி தோண்டுவது அல்லது தடையாயிருக்கிற வஸ்துவைப் போட்டுவைப்பது.	,,
163	(2)	குழி அல்லது தடையாயிருக்கும் வஸ்துவுக்கு வேலிபோடுவது அடைப்பு ஏற்படுத்துவது முதலியவை செய்யத் தவறுவது.	,,
163-A	(1)	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாட்டையிலாவது இதர சொத்திலாவது அனுமதியின்றி மரங்கள் நடுவது.	இருநூறு ரூபாய்.
163-B	(2)	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் பொதுவான பாட்டையிலாவது இதர சொத்திலாவது வளரும் மரங்களை அனுமதியின்றி வெட்டுவது.	,,
164	(2)	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் நிலத்தின் மீதுள்ள யாதொரு கட்டிடம் முதலியவற்றை அப்புறப்படுத்தத் தவறுவது.	,,
166	1)	லைசென்ஸ் இல்லாமலோ லைசென்ஸுக்கு விரோதமாகவோ, யாதொரு மோடார் வண்டியை வாடகைக்கு விடுவதற்காகவாவது யாதொரு லாரியையாவது உபயோகிப்பது.	,,
169	(1)	அனுமதியில்லாமல் பொதுவான மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்காக காட்டிவைப்பது.	இருபது ரூபாய்.
171	...	லைசென்ஸில்லாமலோ லைசென்ஸுக்கு விரோதமாகவோ யாதொரு புதிய மார்க்கெட்டை சொந்தத்தில் ஏற்படுத்துவது அல்லது யாதொரு மார்க்கெட்டை சொந்தத்தில் திறந்து வைத்துக்கொண்டிருப்பது	ஐந்நூறு ரூபாய்.
172	(1)	ஸெர்டிபிகேட் இல்லாமல் சொந்த மார்க்கெட்டில் கட்டணங்கள் விதிப்பது.	நூறு ரூபாய்.
175	...	லைசென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்குக் காட்டிவைப்பது.	இருபது ரூபாய்.

சாதாரண அபராதங்கள்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கத்தக்க அபராதம் (4)
176	...	யாதொரு சொந்த மார்க்கெட்டுக்கு வழிகள் முதலியவைகளை ஏற்படுத்தும்படியாகிலும் அதற்கு கூறை முதலியவை போடும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	நூறு ரூபாய்.
177	(2)	வேலைகளைச் செய்துமுடிக்கத் தவறினதற்காக லைசென்ஸைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்த பிறகாவது லைசென்ஸ் கொடுப்பதில்லையென்று நிராகரித்த பிறகாவது சொந்த மார்க்கெட்டை திறந்து வைத்திருப்பது.	ஐம்பது ரூபாய்.
178	...	சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள்.	இருபது ரூபாய்.
183	...	பொதுவான பாட்டை முதலியவைகள் பொருள்களை விற்பனை முதலியவை செய்யக்கூடாதென்று தடுத்த பிறகாவது லைசென்சில்லாமலாவது ரெகுலேஷன்களுக்கு விரோதமாகவாவது அந்தப்படியே செய்வது.	பத்து ரூபாய்.
185	...	தடுக்கப்பட்ட தூரத்துக்குள் யாதொரு பொதுவான இடத்தையாவது பாட்டையின் பக்கத்தையாவது இறக்கும் இடமாகவாகிலும் நிற்கும் இடமாகவாகிலும் மற்றப்படியாகிலும் உபயோகிப்பது.	ஐம்பது ரூபாய்.
187	(1)	லைசென்ஸ் இல்லாமலோ லைசென்சிற்கு விரோதமாகவோ பார வண்டிகள் நிற்குமிடத்தை சொந்தத்தில் புதிதாய் ஏற்படுத்துவது அல்லது பார வண்டிகள் நிற்குமிடத்தை சொந்தத்தில் திறந்துவைத்துக்கொண்டிருப்பது.	இருநூறு ரூபாய்.
190	(a)	ஆடு மாடு முதலியவை அடிக்கும்பொதுவான தொட்டிக்கு வெளியே ஆடு மாடு முதலியவைகளை அடிப்பது அல்லது அவைகளைத் துண்டு போடுவது அல்லது அவைகளின் தோலை உரிப்பது முதலியவை.	”
190	(b)	லைசென்சில்லாமல் எவையேனும் கால் நடை முதலியவைகளை அடிப்பது முதலியவை.	ஒவ்வொரு பிராணிக்கும் இருபது ரூபாய்.
193	...	லைசென்ஸில்லாமல் யாதொரு இடத்தை அருவருப்பான அல்லது அபாயகரமான வர்த்தகத்துக்கு உபயோகிப்பது.	நூறு ரூபாய்.
194	...	சட்டத்துக்கு விரோதமாய் தொழிற்சாலை வேலைச்சாலை முதலியவைகளை அமைப்பது.	ஆயிரம் ரூபாய்.
195	...	அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குவதைக் குறைப்பது முதலியவை சம்பந்தமான உத்தரவை மீறி நடப்பது.	நூறு ரூபாய்.
212	(8)	கேட்கும்போது லைசென்ஸைக் காட்டத் தவறுவது.	ஐந்து ரூபாய்.
229	...	லோகல் போர்டார் முதலியவர்களை தடுப்பது அல்லது தொந்தரவு செய்வது.	ஐம்பது ரூபாய்.

சாதாரண அபராதங்கள்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கத்தக்க அபராதம். (4)
230	...	லோகல் போர்டாராலாவது அவர்களுடைய உத்தரவின் படியாவது காட்டிவைக்கப்பட்ட நோட்டீஸை அப்புறப் படுத்துவது.	ஐம்பது ரூபாய்.
231	...	ஸ்டேட்மெண்ட் முதலியவைகளைச் சவதரிக்கும்படி செய்த உத்தாவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	”
232	...	ஸம்மன்படி நடக்கத் தவறுவது	”

9-வது ஷெட்யூல்.

தொடர்ச்சியாக குற்றம் நடந்துகொண்டே வந்தால் அபராதம்.

(207-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கப்படக் கூடிய அன்றாட அபராதம். (4)
122	...	யாதொரு நீரோடை முதலியதை சுத்திசெய்யும்படி யாவது, கிணறு, குளம் அல்லது நீர் நிலையை மூடி விடும்படியாவது அதற்கு அடைப்பு ஏற்படுத்தும்படி யாவது வேலி போடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	பத்து ரூபாய்.
123	(1)	குளம், கிணறு முதலியவைகளுக்கு வேலிபோடுவது, மராமத்து செய்வது அவைகளை தூர்த்துவிடுவது முதலிய வைகள் விஷயமாய்ச் செய்த உத்தாவின்படி நடக்கத் தவறுவது.	”
124	(2)	பொது ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய ஜலத்தை உப யோகிக்ககூடாதென்று தடுத்து வெளிவிடப்பட்ட நோட்டீஸை மீறி நடப்பது.	”
125	(e)	யாதொரு குழி, ஜலதாரைக் முதலியவைகளிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதற்காவது ஸ்நானம் செய் வதற்காவது வஸ்திரங்கள் தோய்ப்பதற்காவது பிரத்தி யேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பாய விடுவது.	”
129	...	அசுத்தங்களைப் பொதுவான பாட்டைகளில் போகும்படி செய்வது முதலியவை.	”
129-A.		ஜலதாரைகளை ஏற்படுத்த அல்லது மாற்றி அமைக்க அல்லது எடுத்துவிட தவறியது.	”

தொடர்ச்சியாக குற்றம் நடந்துகொண்டே வந்தால் அபராதம்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கப்படக்கூடிய அன்றாட அபராதம். (4)
131	(2)	வளவுகளையாவது வஸ்துக்களையாவது சுத்தி செய்யும்படியாகிலும் அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	பத்து ரூபாய்.
133	...	தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர் தொழில் நடத்துவது.	,,
135	...	பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக்கூடும் இடங்களை மூடிவிடத் தவறுவது.	நூறு ரூபாய்.
141	(1)	பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடத்தை லைசென்ஸ் இல்லாமலே உபயோகப்படுத்துவது.	ஒவ்வொரு தடவைக்கும் இருபது ரூபாய்.
147	(1)	அபாயகரமான கட்டுக்கோப்புக்கு அடைப்படைக்கும்படியாகிலும் அதை எடுத்துவிடும்படியாகிலும் பத்திரப்படுத்தும்படியாகிலும் மராமத்து செய்யும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூபாய்.
148	(1)	அபாயகரமான மரங்களைப் பத்திரப்படுத்தும்படியாவது அதன் கிளைகளை கழிக்கும்படியாவது அதை வெட்டிவிடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	பத்து ரூபாய்.
149	...	கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப்படைத்துவைக்கும்படியாவது வேலிகளையும் மரங்களையும் தறிக்கும்படி அல்லது கழிக்கும்படி அல்லது வெட்டும்படியாவது சுற்றியிருக்கும் ஒரு சுவரைத் தாழ்த்தும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	,,
150	(1)	பொதுஜன தேகாரோக்கியத்துக்காவது க்ஷேமத்துக்காவது அபாயகரமாயுள்ள குளம் அல்லது இதர இடத்தைத் தூர்த்திவிடுவது முதலியவை விஷயமாய் செய்த உத்திரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	,,
151	(1)	லைஸென்ஸ் இல்லாமல் பொதுவான பாட்டைக்கு சமீபத்தில் கல்வெட்டி யெடுப்பது.	,,
151	(2)	அபாயகரமாய் கல்வெட்டி எடுப்பதை நிறுத்தத் தவறுவது.	,,
153	(1)	அசுசியான ஸ்திதியிலாவது அனாரோக்கியமான புல் பூண்டுகள் அமிதமாய் முளைத்தாவதிருக்கிற கட்டிடம் அல்லது நிலத்தைப் பரிஷ்கரிக்கும்படியாகிலும் சுத்தி முதலியது செய்யும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	,,
153	(2)	யாதொரு கட்டிடத்துக்குச் சுண்ணாம்பு அடிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	,,
157	...	யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் மேலாவது சட்டத்துக்கு விரோதமாய் சுவர் கட்டுவது அல்லது வேலி அமைப்பது முதலியது.	இருபது ரூபாய்.
158	...	கதவுகள், அடிதள ஜன்னல்கள் முதலியவைகளை லைஸென்ஸில்லாமலாவது நோட்டீஸுக்கு விரோதமாகவாவது வெளிப்புறமாய்த் திறக்கும்படி விடுவது.	பத்து ரூபாய்.

தொடர்ச்சியாக குற்றம் நடந்துகொண்டே வந்தால் அபராதம்—(தொடர்ச்சி.)

பிரிவு.	உட்பிரிவு அல்லது பகுதி.	விஷயம்.	விதிக்கப்படக் கூடிய அன்றாட அபராதம்.
(1)	(3)	(3)	(4)
159	(1)	ஆக்கிரமிப்பை எடுத்துவிடவாவது மாற்றவாவது தவறுவது.	பத்து ரூபாய்.
161	(1)	சாக்கடைக்காலின் மேலாவது குப்பை கூள முதலியவைகளால் மட்டம் முதலியவை செய்யப்பட்ட நிலத்திலாவது சட்டத்துக்கு விரோதமாய்க் கட்டிடம் கட்டுவது.	ஐம்பது ரூபாய்.
161	(2)	அனுமதியில்லாமலாவது அனுமதியிற்கண்ட ஷரத்துகளுக்கு விரோதமாகவாவது கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்துவிடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	"
162	...	பொதுவான பாட்டை முதலியவைகளுக்கு அடுத்திருக்கும் நிலத்திலிருந்து சப்பாத்துக்கள்ளி, மிலாறு, லாண்டானு முதலியவைகளை எடுத்துவிடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	பத்து ரூபாய்.
163	(1)	பொதுவான பாட்டையில் சட்டத்துக்கு விரோதமாய்க் குழி தோண்டுவது அல்லது தடையாயிருக்கிற வஸ்துவைப் போட்டுவைப்பது.	"
164	(2)	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் நிலத்தின் மீதுள்ள யாதொரு கட்டிடம் முதலியவைகளை அப்புறப்படுத்தத் தவறுவது.	ஐம்பது ரூபாய்
166	(1)	லைஸென்ஸ் இல்லாமலோ லைஸென்ஸுக்கு விரோதமாகவோ யாதொரு மோடார் வண்டியை வாடகைக்கு விடுவதற்காகவாவது யாதொரு மோடார் லாரியையாவது உபயோகிப்பது.	"
169	(1)	அனுமதியில்லாமல் பொதுவான மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்கு காட்டிவைப்பது.	பத்து ரூபாய்.
171	...	லைஸென்ஸில்லாமலாவது லைஸென்ஸுக்கு விரோதமாகவாவது சொந்த மார்க்கெட்டை திறந்துவைத்திருப்பது.	நூறு ரூபாய்.
172	(1)	ஸெர்டிபிகேட்டில்லாமல் சொந்த மார்க்கெட்டில் கட்டணங்கள் விதிப்பது.	ஐம்பது ரூபாய்.
175	...	லைசென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்குக் காட்டி வைப்பது.	பத்து ரூபாய்.
176	...	யாதொரு சொந்த மார்க்கெட்டுக்கு வழிகள் முதலியவைகளை ஏற்படுத்தும்படியாகிலும் அதற்குக் கூரை முதலியவை போடும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	"
177	(2)	வேலைகளைச் செய்துமுடிக்கத் தவறினதற்காக லைஸென்ஸைச் சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைத்த பிறகாவது லைஸென்ஸ் கொடுப்பதில்லையென்று நிராகரித்த பிறகாவது சொந்த மார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பது	இருபது ரூபாய்.

தொடர்ச்சியாக குற்றம் நடந்துகொண்டே வந்தால் அபராதம்—(தொடர்ச்சி.)

பிரிவு. (1)	உட்பிரிவு அல்லது பகுதி. (2)	விஷயம். (3)	விதிக்கப்படக்கூடிய அன்றாட அபராதம். (4)
178	...	சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள்.	பத்து ரூபாய்.
187	(1)	பாரவண்டிகள் நிற்பதற்கான சொந்த இடத்தை லைஸென்ஸ் இல்லாமலோ லைஸென்ஸிற்கு விரோதமாகவோ திறந்துவைத்திருப்பது.	இருபது ரூபாய்.
193	...	லைஸென்ஸில்லாமல் யாதொரு இடத்தை அருவருப்பான அல்லது அபாயகரமானவர்த்தகத்துக்கு உபயோகிப்பது.	”
194	...	சட்டத்துக்கு விரோதமாய்த் தொழிற்சாலை, வேலைச்சாலை முதலியவைகளை அமைப்பது.	நூறு ரூபாய்.
195	...	அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குவதை குறைப்பது சம்பந்தமான உத்தரவை மீறி நடப்பது.	ஐம்பது ரூபாய்.

10-வது ஷெட்யூல்.

(ரத்தாகிவிட்டது).

——

ஷெட்யூல்.

மாறுதல் சம்பந்தமான நிபந்தனைகள்.

டிஸ்டிரிக்ட் போர்டுகள்.

1. ஷை ஆக்டின்படி ஏற்படுத்தபட்டிருக்கும் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் போர்டும்-இந்த ஆக்டினுல் திருத்தப்பட்ட படிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டாகக் கருதப்படும்.

தாலூகா போர்டுகள்.

2. ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு தாலூகா போர்டும் - இந்த ஆக்டினுல் திருத்தப்பட்ட படிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட தாலூகா போர்டாகக் கருதப்படும்.

கிராமம்.

3. (1) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போது ஷை ஆக்டின்படி யூனியனுக இருக்கிற அல்லது 1920-ம்வூத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி கிராமமாக இருக்கிற ஒவ்வொரு பிரதேச விஸ்தீர்ணமும் - இந்த ஆக்டினுல் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படிக்கான கிராமமாகக் கருதப்படும்.

பஞ்சாயத்து கள்.

(2) ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு யூனியன் போர்டும் 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்தும் - இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்தாகக் கருதப்படும்.

பஞ்சாயத்தின் சங்கியை.

4. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு லோகல் போர்ட் அல்லது பஞ்சாயத்திலுமுள்ள மொத்த மெம்பர்களின் சங்கியையானது - இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்ட் 10-வது பிரிவின்படி விளம்பர மூலமாக நிர்ணயிக்கப்பட்ட மெம்பர்களின் சங்கியையாகக் கருதப்படும்:

ஆனால், யாதொரு யூனியன் போர்ட் அல்லது பஞ்சாயத்தில் இருக்க வேண்டிய மெம்பர்களின் சங்கியை ஏழாக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற விஷயத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்ட் அமுலுக்கு வந்தவுடன் அதற்கு எட்டாவது மெம்பரை நியமிக்கவேண்டும்.

சொத்துக்கு பாத்தியதையும், வியாஜ்ஜியம் தொடாலும் தொடரப்படலும்.

5. (1) ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு டிஸ்ட்ரிக்ட், தாலூகா அல்லது யூனியன் போர்டாருக்காவது 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு பஞ்சாயத்துக்காவது சொந்தமாயிருக்கும் அல்லது அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அவர்களாலாவது அவர்களுக்காகவாவது ட்ரஸ்டில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் சகல சொத்தும், உபயோகிக்கப்படும் அல்லது அனுபவிக்கப்படும் அல்லது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் எவ்வகையையாகிலும் சேர்ந்த சகல உரிமைகளும், எவ்வகையையாகிலும் சேர்ந்த மேலே கண்டபடிக்கான சகல பாத்தியதைகளும், ஷை போர்டார் அல்லது பஞ்சாயத்தின்மேல் சட்டப்படி ஏற்பட்டிருக்கும் சகல பொறுப்புகளும், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியிலும் அந்தத் தேதியிலிருந்தும் இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்க் கொடுக்கக்கூடிய கட்டளைக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டார் தாலூகா, போர்டார் அல்லது பஞ்சாயத்துக்கு மாறவேண்டும்

(2) சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஷை ஆக்டின்படி அப்படிப்பட்ட யாதொரு டிஸ்ட்ரிக்ட், தாலூகா அல்லது யூனியன் போர்டாராவது 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி யாதொரு பஞ்சாயத்தாவது நடத்திக்கொண்டிருக்கும் சகல நடவடிக்கைகளும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கும் பொருத்தமற்றவையாய் இராமலிருக்கிறவரையில், அவைகளைச் சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டாராகிலும் தாலூகா போர்டாராகிலும் பஞ்சாயத்தாகிலும் அந்தப் பிரகாரம் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படி நடத்திக்கொண்டேபோகலாம்.

(3) இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடி விண்ணப்பம், வியாஜ்ஜியம் அல்லது அப்பீல் மூலமாகக் கிடைக்கும் யாதொரு பரிகாரமானது - எந்த நடவடிக்கைகள் விஷயமாய்ப் பரிகாரம் கோரப்படுகிறதோ அந்த நடவடிக்கைகள் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு நடத்தப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே, இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதியன்று பைசலாகாமல் இருக்கும் ஷை ஆக்டின்படிக்கான அல்லது 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படிக்கான நடவடிக்கைகளின் விஷயத்தில் கிடைக்கவேண்டும்.

(4) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி இன்ன லோகல் போர்டாருக்கு யாதொரு சொத்து, உரிமை, பாத்தியதை அல்லது பொறுப்பு மாறவேண்டுமென்பதைக் குறித்தாவது, (2) குறிப்பிட்ட உபவிதியின்படி யாதொரு நடவடிக்கையை இன்ன லோகல் போர்டார் நடத்திக்கொண்டே போகவேண்டுமென்பதைக் குறித்தாவது, (3) குறிப்பிட்ட உபவிதியின்படி யாதொரு பரிகாரம் இன்ன லோகல் போர்டாருக்கு அல்லது அவர்களுக்கு விரோதமாய்க் கிடைக்கவேண்டுமென்பதைக் குறித்தாவது விவாதம் ஏதாகிலும் ஏற்படும் பட்சத்தில், அந்த விஷயத்தைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டும். அதன் பேரில் அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

லோகல் போர்டு மெம்பர்களின் காலவரை.

6. (1) ஷை ஆக்டிலாவது இந்த ஆக்டிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே—

(a) (i) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகிக்கும் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டிலுமுள்ள மெம்பர்கள்- இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டின் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்; மேலும், அவர்களின் உத்தியோக காலமானது- இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின் 54-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலும் 56-வது, 57-வது, 59-வது பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, பிரதேசகவர்ன்மெண்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதிவரையில் நீடித்திருக்கும் அல்லது அந்தத் தேதியில் முடிவடையும்; அன்றியும், பிரதேசகவர்ன்மெண்டார் - பழைய மெம்பர்கள் உத்தியோகத்தினின்றும் நீங்குவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியில் டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூகா போர்டுக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கக்கூடியபடி எலெக்ஷன்கள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; மேலும்.

(ii) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகிக்கும் ஒவ்வொரு யூனியன் போர்ட் அல்லது பஞ்சாயத்திலுமுள்ள மெம்பர்கள் இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்தின் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்; மேலும், அவர்களின் உத்தியோக காலமானது - இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின் 54-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலும் 56-வது, 57-வது, 59-வது பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மெண்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதிவரையில் நீடித்திருக்கும் அல்லது அந்தத் தேதியில் முடிவடையும்; அன்றியும், பிரதேச கவர்ன்மெண்டார் - பழைய மெம்பர்கள் உத்தியோகத்தினின்றும் நீங்குவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியில் பஞ்சாயத்துக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கக்கூடியபடி எலெக்ஷன்கள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்;

(b) பிரதேச கவர்ன்மெண்டார் - (a) குறிப்பிட்ட பகுதியின்படி தங்களால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு தேதியை அப்போதைக்கப்போது தள்ளிபோட்டு, அதற்குப் பர்த்தியாக வேறொரு தேதியை நிஷ்கரிஷை செய்யலாம்;

(c) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகிக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் அல்லது தாலூகாபோர்டின் ப்ரெஸிடென்டும் எவஸ் ப்ரெஸிடென்டும் யூனியன் போர்ட் அல்லது பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டும் -

இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின் 15-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலும், 43-வது பிரிவிலும், 44-வது பிரிவிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிவரையில் சந்தர்ப்பத்துக்கேற்றபடி, டிஸ்ட்ரிக்ட் போர்ட், தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டாகவாவது வைஸ் ப்ரஸிடென்டாகவாவது உத்தியோகம் வகிக்கவேண்டும் அல்லது அந்தத் தேதியில் உத்தியோகத்தைக் காலிசெய்யவேண்டும்;

(d) லோகல் போர்டின் ப்ரெஸிடென்டையும் வைஸ் ப்ரெஸிடென்டையும் தெரிந்தெடுப்பதற்காக, ஷை தேதியிலாகிலும் அதற்குப்பிறகு கூடியசீக்கிரத்திலாகிலும் பிரதேச கவர்ன்மெண்டாராலாவது இது விஷயமாய் அவர்களால் அதிகாரம் கொடுக்கப்பெறக்கூடிய வேறே யாதொரு அதிகாரியாலாவது நிஷ்கரிஷை செய்யப்பட்ட தினத்திலும் மணி நேரத்திலும், டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்துக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் ஒரு சபையைக் கூட்டவேண்டும்;

(e) டிஸ்ட்ரிக்ட் போர்ட் தாலூகாபோர்ட் அல்லது பஞ்சாயத்துக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் அல்லது தற்செயலாய் நேரிடும் காலி ஸ்தானங்களுக்கு அவர்களுடைய ஸ்தானங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உத்தியோக காலமானது - (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதி நவம்பர் மாதம் முதல் தேதியானால் மூன்று வருஷக் கடைசியிலும், மற்ற விஷயங்களில் ஷை தேதிக்கு அடுத்து முன்வரும் நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று வருஷக் கடைசியிலும் முடிவடையும்; மேலும்,

(f) (a) அல்லது (b) குறிப்பிட்ட உட்பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு தேதியானது இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

(2) (a) யாதொரு லோகல் போர்ட் ப்ரெஸிடென்டின் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின் உத்தியோகத்தில் காலி ஏதாகிலும் ஏற்பட்டு, அது இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் ஏற்பட்டிருந்தாலும், (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்குமுன் அந்தக் காலி ஏற்பட்டாலும், அதை லோகல் போர்டார் எலெக்ஷன் மூலமாய்ப் பூர்த்தி செய்யவேண்டும்.

(b) யாதொரு லோகல் போர்டின் நியமிக்கப்பட்ட மெம்பர் உத்தியோகத்தில் அப்படிப்பட்ட காலி ஏதாகிலும் நேரிட்டால், அதைப் பிரதேச கவர்ன்மெண்டார் நியமன மூலமாகப் பூர்த்தி செய்யவேண்டும்; மேலும், யாதொரு லோகல் போர்டின் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர் உத்தியோகத்தில் காலி ஏதாகிலும் நேரிட்டால், அதைச் சந்தர்ப்பத்துக்கேற்றப்படி, இந்த ஆக்ட் 47, 48, 50, 51-வது பிரிவுகளினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டிலாவது 1920-ம்வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டிலாவது கண்ட நிபந்தனைகளின்படி எலெக்ஷன் மூலமாய்ப் பூர்த்தி செய்யவேண்டும்.

(c) இந்த உபவிதியைச் சேர்ந்த (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாகவோ வைஸ் ப்ரெஸிடென்டாகவோ மெம்பராகவோ தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எந்த நபரும் (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதி வரையில்தான் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

விவரணம்.—இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு பஞ்சாயத்து வைஸ் ப்ரெஸிடென்டின் உத்தியோகம் உட்பட யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பரின் உத்தியோகத்துக்கு இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் எந்தக் காலத்திலும் யாதொரு நபர் தெரிந்தெடுக்கப்படாமலோ அல்லது நியமிக்கப்படாமலோ இருந்திருந்தால், அந்த உத்தியோகம் இந்த உபவிதியின் தாற்பரியப்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று காலியாயிருப்பதாகக் கருதப்படும்.

அதிகாரிகளுக்கு பாதுகாப்பு.

7. எந்த நடவடிக்கையை நடத்துவதற்காக இந்த ஆக்டினால் திருத்தப் பட்டபடிக்குள்ள ஷை ஆக்டினாலாவது அதன்படியாவது புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கையை இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் எந்த அதிகாரிகளாகிலும் நடத்தினால், அந்த நடவடிக்கையானது - அதற்குப் பொருத்தமற்றவையாயிருந்தாலன்றி மற்றப்படியும் அப்படிப்பட்ட புதிய அதிகாரிகளால் நடத்தப்பட்ட நடவடிக்கையினால் ரத்து செய்யப்பட்டாலன்றி மற்றப்படியும் ரத்துசெய்யப்படுகிற வரையிலும், ஷை புதிய அதிகாரிகளால் நடத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

லோகல் போர்டின் சங்கியை நிர்ணயிக்க.

8. இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்ட் 7-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மெண்டார்-நிர்ணயிக்கப்பட்ட விதமாக விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின்படி ஏற்படுத்தப்படும் யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்ட், தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்தில் இருக்கவேண்டிய மெம்பர்களின் சங்கியையைத் தங்களுக்கு தகுதியாகத் தோற்றக்கூடியபடியும் 6-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில்கண்ட (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியிலிருந்து செலாவணியாகும்படியாகவும் நிஷ்கரிஷை செய்யலாம்.

லாண்ட்செஸ்ஸை ஜில்லா, தாலுக்கா பஞ்சாயத்துக்கு பங்கிடுதல்.

9. எந்த பசலி வருஷத்தில் இந்த ஆக்ட் அமுலுக்குக் கொண்டுவரப் படுகிறதோ அந்த பசலி வருஷத்தில் இந்த ஆக்டினால் திருத் தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்ட் 78-வது பிரிவின்படி விதிக்கப் படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியை, பிரதேச கவர்ன் மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்க் கட்டளையிடக்கூடிய விதமாக டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும் தாலூகா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக் குள்ள ஷை ஆக்ட் 114-A பிரிவின்படி ஏற்படுத்தப்படும் கம்மிட்டிகளுக்கும் பங்கிடுசெய்யவேண்டும்.

கிராம பஞ்சாயத்து ஆக்டுபடி வரி விதிப்பது.

10. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதியில் 1920-ம்வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்ட் 26-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியின்படி யாதொரு பஞ்சாயத்தினால் விதிக்கப்பட்டுவந்த யாதொரு வரியை, இந்த ஆக்ட் எந்த வருஷத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறதோ அந்த வருஷத்துக்காகவும் பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக அவசியமென்று நிர்ணயிக்கக்கூடிய பின்னும் ஒரு கால அளவு ஏதேனும் இருந்தால் அந்த கால அளவுக்காகவும் விதித்துக் கொண்டேபோக

வேண்டும்; மேலும், ஷை வரியை இந்த ஆக்டினல் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 4-வது ஷெட்யூலில் கண்ட விதிகளில் வரிகளை வசூலிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கிற விதமாக வசூலிக்கலாம்.

பாட்டைகள் சத்திரங்கள் முதலியவைகளை பிரிவினை செய்தல்.

11. (1) இந்த ஆக்டினல் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 5-வது ஷெட்யூலைச் சேர்ந்த 3-வது விதியில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில், பாட்டைகள், சத்திரங்கள், ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள், புஸ்தகசாலைகள், மார்க்கெட்டுகள், சந்தைகள், உற்சவங்கள் ஆகிய இவைகளை ஷை 3-வது விதியில் சொல்லியிருக்கும் விதமாகத் தரம் பிரிக்கலாம்; மேலும், அப்படிப்பட்ட தரப் பிரிவினை இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று அமுலுக்கு வரவேண்டும்.

(2) இந்த விதியின்படி செய்யப்படும் யாதொரு தரப் பிரிவினையை இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின பிறகு ஷை 3-வது விதியின்படி மாற்றலாம்.

அமுலுக்குவரும் போதுள்ள கஷ்டத்தை நிவர்திக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம்.

12. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு யாதொரு லோகல் போர்டை முதல் தடவையாய் ஏற்படுத்தும் விஷயத்திலாவது அதைத் திருத்தியமைக்கும் விஷயத்திலாவது, மற்றப்படி இந்த ஆக்டின் நிபந்தனைகளையாகிலும் இந்த ஆக்டினல் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்டின் நிபந்தனைகளையாகிலும் முதல் தடவை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்திலாவது யாதொரு கஷ்டம் ஏற்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் - சந்தர்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் காரியத்துக்காகத் தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் எதையாவது உத்தரவு மூலமாய்ச் செய்யலாம்.

BILL No. 8 OF 1931.

1931-ம் வருஷத்து 8-வது மசோதா ஆக்ட்.

A BILL TO AMEND THE MADRAS LOCAL BOARDS (AMENDMENT) ACT, 1930, FOR CERTAIN PURPOSES.

சில காரியங்களுக்காக சென்னபட்டணத்து லோகல் போர்டுகளைக் குறித்த 1930-ம் வருஷத்திய (திருத்துவதற்கான) ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

சென்னபட்டணத்து லோகல் போர்டுகளைக் குறித்த 1930-ம் வருஷத்திய (திருத்துவதற்நான) ஆக்டை இதில் பின்னல் கண்டிருக்கும் காரியங்களுக்காகத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனல் விதிக்கப்படுகிறது என்னவென்றால்:—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்து லோகல் போர்டுகளைக் குறித்த 1931-ம் வருஷத்திய (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

சென்ன பட்டணம் 1930-ம் ஞூத்து 11-வது ஆக்டுடன் சேர்க்கப் பட்டிருக்கும் ஷெட்யூலில் திருத்தம்.

2. சென்னபட்டணத்து லோகல் போர்டுகளைக் குறித்த 1930-ம் ஞூத்திய (திருத்துவதற்கான) ஆக்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஷெட்யூலைச் சேர்ந்த 6-வது விதியில்—

(i) (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(cc) இந்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்ட் 4-வது அல்லது 5-வது பிரிவின்படி யாதொரு விளம்பரம் பிறப்பிக்கப்பட்டது காரணமாக, யாதொரு புதிய தாலூகா அல்லது கிராமத்தை ஏற்படுத்தியதனாலாவது, இப்போதுள்ள யாதொரு தாலூகா அல்லது கிராமத்தில் எந்த விஸ்தீர்ணத்தையாகிலும் சேர்ப்பதனாலாவது, ஷை தாலூகா அல்லது கிராமத்திலிருந்து எந்த விஸ்தீரணத்தையாகிலும் விலக்குவதனாலாவது, (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியிலிருந்து யாதொரு புதிய தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ஏற்படுத்தப்படுகிறபட்சத்திலே, பிரதேச கவர்ன்மெண்டார் - அப்படிப்பட்ட புதிய தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மேலேகண்டபடி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியில் உத்தியோகம் வகிக்கக்கூடியபடி, அந்த தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்துக்கு எலெக்ஷன்கள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்;" மேலும்,

(ii) (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (f) அடையாளமிட்ட பகுதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(f) (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு தேதியானது 1932-ம் வருஷம் மார்ச் மாதம் முப்பத்தோராம் தேதிக்கு மேற்பட்டிருக்கக்கூடாது:

ஆனால், யாதொரு லோகல் போர்ட் விஷயத்திலாவது யாதொரு வகையைச்சேர்ந்த லோகல் போர்டுகளின் விஷயத்திலாவது, பிரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, இந்தப் பகுதியில் கண்டிருக்கும் தேதியை அப்போதைக்கப்போது தள்ளிப்போடலாம். அப்படிப்பட்ட விளம்பரத்தில் அது பிறப்பதற்குண்டான காரணங்களைக் காணவேண்டியது மல்லாமல், அதைச் சட்டநிரூபண சபையாருக்குமுன் வைக்கவும் வேண்டும்."

இந்த மசோதா ஆக்ட் பிறப்பிப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

சென்னபட்டணத்து லோகல் போர்டுகளைக் குறித்த 1930-ம் ஞூத்திய (திருத்துவதற்கான) ஆக்ட் அமுலுக்கு வரத்தொடங்கும் தேதியன்று உத்தியோகம் வகித்துக்கொண்டிருக்கும் லோகல் போர்டுகளின் மெம்பர்கள் உத்தியோகத்திலிருந்து நீங்குவதற்காகவும் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள் உத்தியோகம் வகிப்பதற்காகவும் அந்தத் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாமல் ஒரு தேதியை நிஷ்கரிஷை செய்ய, ஷை ஆக்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஷெட்யூலைச் சேர்ந்த 6-வது விதியில் கண்ட (1) குறிப்

பிட்ட உபவிதியின் (f) அடையாளமிட்ட பகுதியை அந்த உபவிதியைச் சேர்ந்த (a), (b) குறிப்பிட்ட பகுதிகளோடு சேர்த்து வாசிக்கும்போது, அந்தப் பகுதியின்படி கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் ஏற்படுகிறது. கவர்ன்மெண்டார்-ஒரு வருஷத்துக்குள் பிரதமத்தில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துமுடித்து எலெக்ஷன்கள் நடத்தமுடியுமென்று நம்பியிருந்தார்கள். அப்பிரகாரமே, அவர்கள் 1931-ம் ஆகஸ்ட் மீ 25உ யை, இப்போதுள்ள மெம்பர்கள் உத்தியோகத்திலிருந்து நீங்கி புதிதாய்த் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கவேண்டிய தேதியாக நிஷ்கரிஷை செய்தார்கள். ஷை ஆக்டில் உத்தேசிக்கப்பட்டபடி ஒவ்வொரு ரெவினியு தாலூகாவுக்கும் ஒரு தாலூகா போர்ட் ஏற்படுத்துவதற்கும், ஏறக்குறைய வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்கும் புதிய ஓட்டுரிமை முறைப்படி தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்கள் தயார் செய்வதற்கும், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விஸ்தீர்ணங்களை ஸர்க்கில்களாக முதல் தடவை பிரிப்பதற்கும், சகல லோகல் போர்டுகளிலும் குறித்த வகுப்புகளுக்காகவும் ஸ்திரீகளுக்காகவும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதற்கும் சம்பந்தப்பட்ட பிரசினைகளைப் பைசல் செய்வதற்கு எதிர்பார்த்த காலத்துக்குமேல் மிகவும் அதிக காலம் பிடித்துவருகிறது. மேலும், லோகல் போர்டுகளை ஷை ஆக்டில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ஒரு வருஷகாலத்துக்குள் மறுபடியும் அமைக்க முடியாதென்று இப்போது ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. ஆகையால், லோகல் போர்டுகளை மறுபடியும் அமைப்பதற்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட காலத்தைப் பின்னும் நீடிக்கச் செய்வது தவிர்க்கமுடியாததாய்விட்டது. ஷை காலத்தைச் சகல விஷயங்களிலும் 1932-ம் மார்ச்சு மீ 31உ வரையில் நீடிக்கச் செய்யவும், யாதொரு லோகல் போர்ட் அல்லது யாதொரு வகையைச் சேர்ந்த லோகல் போர்டுகளின் விஷயத்தில் அதைப் பின்னும் நீடிக்கச் செய்வது அவசியமென்று தெரியவந்தால், விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக அந்தப்படியே நீடிக்கச் செய்ய கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒவ்வொரு விளம்பரத்திலும் அந்தப்படி நீடிக்கச் செய்ய வேண்டியிருப்பதற்குள்ள காரணங்களைக் காணவேண்டுமென்றும், அதைச் சட்ட நிரூபண சபையாருக்குமுன் வைக்கவேண்டுமென்றும் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

யாதொரு புதிய தாலூகா அல்லது கிராமத்தை ஏற்படுத்துவதனாலாவது, இப்போதுள்ள யாதொரு தாலூகா அல்லது கிராமத்தின் ஹத்துக்களை மாற்றுவதனாலாவது யாதொரு புதிய தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து ஏற்படுத்தப்படும் பக்ஷத்தில், புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியில் உத்தியோகம் வகிக்கக்கூடியபடி ஷை புதிய தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்துக்கு எலெக்ஷன்கள் நடத்தவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்த இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்திருக்கிறது. இதனால், ஷை புதிய தாலூகா போர்ட் அல்லது பஞ்சாயத்து வாஸ்தவத்தில் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே அதன் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்களைத் தயார் செய்வதும் அதற்கு எலெக்ஷன்கள் நடத்துவதும் கவர்ன்மெண்டாருக்குச் சாத்தியமாயிருக்கும்.

MADRAS ACT II OF 1922 AMENDED BY ACTS IV OF 1925 AND I OF 1930.

1925-ம் வருஷத்து 4-வது ஆக்டினாலும், 1930-ம் வருஷத்து 1-வது ஆக்டினாலும் திருத்தப்பட்ட 1922-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

1920-ம் வருஷத்திய மதராசு லோகல் போர்டுகளாக்டை திருத்துவதற்கான ஆக்ட்.

மெம்பர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய ராஜவிஸ்வாஸ பிரமாண சட்டம்:

பீடிகை. 1920-ம் வருஷத்திய மதராசு லோகல் போர்டுகளாக்டை திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால் இதனால் ஏற்படுத்தப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர். **1.** இந்த ஆக்டை மதராசு லோகல் போர்டுகளை குறித்த 1921-ம் வருஷத்தும் 1924-ம் வருஷத்தும் திருத்துவதற்கான ஆக்ட் என்று சொல்லலாம்.

2. [முனிஸிபாலிடிகளைக் குறிக்கின்றது.]

3. [1925-ம் வருஷத்து 4-வது ஆக்டினால் ரத்தாகிவிட்டது.]

லோகல் போர்டுகளின் புதிய மெம்பர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய பிரமாணம். **4.** (1) யாதொரு லோகல் போர்டின் மெம்பராக தெரிந்தெடுக்கப்பட்டாவது, நியமிக்கப்பட்டாவது இருக்கிற அல்லது யாதொரு லோகல் போர்டில் உத்தியோக முறைமையில் மெம்பராயிருக்கிற ஒவ்வொரு நபரும் - தம்முடைய ஸ்தானத்தை வகிப்பதற்கு முன்னரே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக அந்த போர்டின் சபையில் அடிற்கண்ட கமூனாப்படி பிரமாணம் செய்யவேண்டும் அல்லது உறுதிமொழி கூற வேண்டும் ;

அதாவது :—

"..........நான் இந்த போர்டுக்கு மெம்பராக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறபடியால் இந்தியா சக்ரவர்த்தி மாக்ஷிமை தங்கிய மன்னர் அவர்களிடத்திலும், அவருடைய வாரிசுகளிடத்திலும், அவருக்குப்பின் பட்டத்திற்கு வருபவர்களிடத்திலும், விஸ்வாசமுள்ளவனாயிருப்பேனென்றும், உண்மையான ராஜபத்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் செய்ய ஏற்றுக்கொள்ளப்போகும் கடைமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும், பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதியாய் கூறுகிறேன்).

(2) யாதொரு நபர் ஒரு லோகல் போர்டில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டாவது, நியமிக்கப்பட்டாவதிருந்து அல்லது ஒரு லோகல் போர்டில் உத்தியோக முறைமையிலே மெம்பராயிருந்து; தம்முடைய உத்தியோக காலஅளவு ஆரம்

பிக்கும் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள்ளாகவாகிலும், அல்லது அந்த தேதிக்குப் பிறகு நடக்கும் முதல் மூன்று சபைகளில் ஒன்றிலாகிலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டபடி பிரமாணம் எடுத்துக்கொள்ளவோ அல்லது உறுதிமொழி கூறவோ தவறிப்போனால் அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதினின்றும் நீங்கினவராவார்; அவருடைய ஸ்தானம் காலியாகிவிட்டதாக எண்ணப்படும்.

குறிப்பு.

செ. 4 (1).—மெம்பர் தன்னுடைய ஸ்தானத்தை எற்றுக்கொள்ளுமுன் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். பிரமாணம் செய்யாமல் ஸ்தானத்தை வகிக்க முடியாது. ஸ்தானத்தைவகிக்காமல் சபையின் நடவடிக்கையில் கலந்துகொள்ளக்கூடாது. அப்படி செய்யும்பக்ஷத்தில் மெம்பரா யில்லாதபோது செய்ததாக கருதப்படும். (ராஜாபாதர் முதலியார் எ. விஸ்வநாதரெட்டி, A.I.R. 1924 M. 515=75 I.C. 620). மெம்பர்கள் பிரமாணம் எடுத்துக் கொள்ளாமல் ஒரு யூனியன் போர்டுக்கு பிரஸிடெண்டை தெரிந்தெடுத்தது செல்லாதென தீர்ப்பு கூறப்பட்டது. (துவாரகாச்சார்லு எ. ஸ்ரீ கிருஷ்ணன், A.I.R. 1925 M. 1152=87 I.C. 825).

ஒரு மெம்பரை மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்பட்டால் அவர் புதியதாய் தெரிந்தெடுக்கப்பட்டதாக கருதப்பட மெம்பராகையாலும்; அவருடைய உத்தியோக காலம் மிகுதியிருக்கக்கூடிய காலமாகையாலும், அவர் ஏற்கனவே அதாவது முதன்முதல் தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டபோதே பிரமாணம் எடுத்துக்கொண்டிருப்பதினாலும், மறுபடி பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. (கந்தசாமி செட்டி எ. பௌல்கீஸ், A.I.R. 1926 M. 396=92 I.C. 100). பிரமாணம் செய்யத் தவறிவிட்டதே ஒருவருடைய ஸ்தானத்தை இழக்க ஏதுவாகாது. (பூபெந்தரநாத் வாஸு எ. ரனகாட்சிங், 41 Cal. 384=20 I.C. 676).

செ. 4 (2). மூன்று மாதத்திற்குள்...........சபைகளில் ஒன்றில்.—2-வது ஷெட்யூல் 1-வது விதிப்படி தாலூகா, ஜில்லா போர்டுகள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையும், பஞ்சாயத்துகள் மாதத்திற் கொருமுறையும் சபைகளை கூட்டினால் போதுமானதென கூறுகிறது. ஆறு மாதத்திற்குள் மூன்று சபைகள் கூட்டப்படலாம். பிரசிடென்டின் அஜாக்கிறதையால் ஆறு மாதத்திற்குள் 3 சபைகள் கூடாமற்போனால் அதற்கு பிறகு கூடும் சபையிலும் பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம். ஒரு மெம்பருக்கு பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் அறிவிக்கப்படாமலும் அவர் எடுத்துக்கொள்ளாமலுமிருந்து சபையில் கலந்து வோட் கொடுத்தால் வோட் மட்டும் செல்லாமல் போகுமேயொழிய அவர் ஸ்தானத்தை இழந்தவராகமாட்டார். ஒரே மாதத்தில் மூன்று சபைகள் கூட்டப்பட்டால் அதில் பிரமாணம் எடுத்துக்கொள்ளாமல் மூன்று மாதத்திற்குள் கூடும் சபையில் பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம்.

பிரமாணம் எடுத்துக் கொள்ளுமுன் ஸ்தானம் வகிக்கக் கூடாதென்பது.

5. 1920-ம் வருஷத்திய மதராசு லோகல் போர்டுகள் ஆக்டிலாவது அல்லது தற்காலத்தில் அமுலிலிருக்கும் வேறே யாதொரு சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்கு நிமித்தமில்லாமல் லோகல் போர்டிற்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் யாதொரு மெம்பராவது அல்லது உத்தியோக முறைமையில் மெம்பராயிருக்கும் நபராவது இந்த ஆக்டில் சொல்லியிருக்கிறபடி பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொண்டாலொழிய ஸ்தானம் வகிக்கவாவது அல்லது மெம்பராக யாதொரு காரியத்தை செய்யவாவது கூடாது.

பிரஸிடென்டுக்கு விலக்கு நிபந்தனை.

5-A. 5-வது செக்ஷனில் என்ன சொல்லியிருந்தபோதிலும் ஒரு லோகல் போர்டு பிரஸிடென்ட் அந்த லோகல் போர்ட் மெம்பராய் பிரமாணம் உறுதிமொழி எடுத்துக்கொள்ளாமற் போனபோதிலும் பிரஸிடென்டாக உத்தியோகம் வகிக்கக் கடவார்.

ஆனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அவர் பிரஸிடெண்டாக தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அல்லது அலுவல்களை நடத்த உரிமை பெற்ற பிறகு, இரண்டு மாதத்திற்குள் நடக்கும் முதல் சபையில் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும்.

விவரணம்.—

(i) (முனிஸிபாலிடி ஆக்டுக்கு சம்பந்தமானது).

(ii) "பிரஸிடென்ட்" என்பது.

(a) 1920-ம் வருஷத்து மதராசு லோகல் போர்டுகள் ஆக்ட் 18 (1) செக்ஷன்கீழ் பிரஸிடென்டின் அலுவல்களை நடத்திவரும் ஒரு டிஸ்டிரிக்ட் அல்லது தாலூகா போர்டினுடைய வைஸ்-பிரஸிடென்டும்.

(b) அந்த செக்ஷனில் (2) குறிப்பிட்டிருக்கும் உபசெக்ஷன்கீழ் டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரஸிடென்டினுடைய அலுவல்களை நடத்திவரும் தலைமை ஸ்தலத்திலிருக்கும் (ஹெட்க்வார்டரஸ்) தாலூகா போர்ட் பிரஸிடென்டும்,

(c) அந்தசெக்ஷன் (3) (4) குறிப்பிட்டிருக்கும் உபசெக்ஷன்களின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்து அல்லது தாலூகா போர்டின் ... க பிரஸிடென்டும்
அடங்கும்.

இந்தியன் ஓத்ஸ் ஆக்டினின்றும் விலக்கு.

6. இந்தியன் ஓத்ஸ் ஆக்டி (பிரமாணங்களை ... ப இந்தியா ஆக்டி)ல் என்ன சொல்லப்பட்டிருந்தபோ... ம் அதற்கு நிமித்தமில்லாமல், இந்த ஆக்டின் நிபந்தனை... ன் செல்லத்தக்கினவைகளாகும்.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.